வெளியீடு—10—2—1975]
Issued —10—2—1975]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1974 டிசம்பர் 12
Thursday 12th December 1974

தொகுதி LX—எண் 1
Volume LX—No. 1

©
தமிழ் நாடு அரசு
1975
GOVERNMENT OF TAMIL NADU
1975

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

61679

# Tamil Nadu Legislative Assembly Debates

Twelfth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

12th, 13th, 14th, 16th, 17th and 18th December 1974
VOLUME LX—(Nos. 1 to 6)

TABLE OF CONTENTS.

*Thursday, 12th December* 1974.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i-v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu, Legislative Assembly with their constituencies ... ... | ix–xvi |
| 1. Obituary references— | |
| Demise of Thiru Jayachamaraja Wadiyar, former Governor of Tamil Nadu and Thiru P. T. Rajan, ex-M.L.A. ... ... ... | 1–17 |
| 2. Government Motions— | |
| (*a*) Suspension of Question hour ... ... | 17 |
| (*b*) Suspension of Rule 23 ... ... ... | 68 |
| 3. Announcement— | |
| Panel of Chairmen ... ... ... ... | 18 |
| 4. Adjournment Motion— | |
| Monsoon failure and its consequences ... | 18–68 |

*Thursday, 12th December 1974—cont.*


| | PAGES |
|---|---|
| 5. Government Bill— | |
| Madras City Police and Tamil Nadu Towns Nuisances (Amendment) Bill, 1974 ... ... | 68–81 |
| 6. Papers laid on the Table ... ... ... ... | 81–104 |


*Friday, 13th December 1974.*


| | |
|---|---|
| 1. Questions and Answers .. ... ... | 105–152 |
| 2. Point of order— | |
| Placing a file for the perusal of members which was not given to Estimates Committee ... | 152–180 |
| 3. Moving of No-Confidence Motion against the Ministry and the motion disapproving the policy of the Government, procedure, re. ... | 181–190 |
| 4. No-Confidence Motion against the Ministry and motion disapproving the policy of the Government ... ... ... ... ... | 191–237 |
| 5. Papers laid on the Table ... ... ... | 238–239 |


*Saturday, 14th December 1974*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 259–302 |
| 2. Point of order— | |
| Procedure to draw Speaker's attention ... ... | 303–304 |
| 3. Calling Attention— | |
| Sea-erosion in Midalam and other Coastal villages, Kanyakumari district ... ... | 304–306 |
| 4. Announcements— | |
| (a) Election to Annamalai University Senate ... | 306–307 |
| (b) Election to Agricultural University Management Board ... ... ... ... ... | 309 |
| (c) Election to Land Improvement Board ... | 310 |




*Saturday, 14th December 1974—cont.*


| | PAGES |
|---|---|
| 5. Government Bills— | |
| (a) Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1974 ... ... ... ... | 307 |
| (b) Madras City Tenants' Protection (Amendment) Bill, 1974 ... ... ... ... | 307–308 |
| (c) Tamil Nadu Prevention of Begging (Amendment) Bill, 1974 ... ... ... ... | 308 |
| 6. Government Motions— | |
| (a) Election to Agricultural University Management Board ... ... ... ... ... | 308 |
| (b) Election to Land Improvement Board ... | 309–310 |
| 7. No-Confidence Motion against the Ministry and motion disapproving the policy of the Government ... ... ... ... ... | 311–389 |
| 8. Papers laid on the Table ... .. ... | 389–390 |


*Monday, 16th December 1974*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... .. ... | 393–429 |
| 2. Government Bills— | |
| Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment) Bill, 1974 ... | 429 |
| 3. Demand for Supplementary Grants (Second), 1974-75—Presentation ... ... ... | 429–435 |
| 4. No-Confidence Motion against the Ministry and motion disapproving the policy of the Government—*cont* ... ... ... | 436–517<br>519–532 |
| 5. Announcement— | |
| Business of the House ... ... ... | 518 |
| 6. Papers laid on the Table ... ... ... | 532–533 |

PAGES

*Tuesday, 17th December 1974.*

1. Government Motion—
   Suspension of Question hour ... ... ... 535
2. No-Confidence Motion against the Ministry and motion disapproving the policy of the Government—*cont.* ... ... ... ... 535–651
3. Papers laid on the Table ... ... ... 651–652

*Wednesday, 18th December 1974.*

1. Questions and Answers ... ... ... ... 653–685
2. Announcement—
   Restoration of certain portion expunged from Dr. Hande's speech ... ... ... ... 685–697
3. Government Bills—
   (*a*) Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1974 ... ... ... 697–698
   (*b*) Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1974 ... 698
   (c) Tamil Nadu Local Authorities' Laws (Second Amendment) Bill, 1974 ... ... ... 698
4. No-Confidence Motion against the Ministry and motion disapproving the policy of the Government—*cont.* ... ... ... ... 698–809
5. Papers laid on the Table ... ... ... 810–811

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட பொதுப் பணிகள், சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் : (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு, கூட்டமைப்புக்கள் உள்ளிட்ட மாநில, மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.



12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்புப் பணிகள்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், இராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ் நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

16. மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அகதிகள், அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப் படச் சட்டம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes), in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Progamme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenues and Waqfs.

8. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Animal Husbandry, Agro-Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

16. THE HON. THIRU N. RAJANGAM (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்.

திரு. நா. கணபதி, பி.எஸ்ஸி. பி.எல்,

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. டாக்டர் க. நாகராஜன்
2. திரு. துரைமுருகன்
3. திரு. கு. காமாட்சி
4. திரு. கா. காளிமுத்து
5. திரு. என். டென்னிஸ்
6. திரு. கே. கந்தசாமி

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்.

திரு. ப. சுப்பராயன்

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. . | புவனகிரி |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்–மேற்கு |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம் |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம் |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. .. . | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். .. (அமைச்சர்). | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ., .. .. .. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. நா. .. (பேரவைத் துணைத் தலைவர்). | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. . | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா .. ... | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 61 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி |
| 75 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ ). |
| 76 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம் |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ. வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாப்புரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | இருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை—மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர்ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில் |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம், |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 191 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பெண்ணகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம்., |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. எ. எம். | பவானி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1974 டிசம்பர் 12.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) இரங்கல் தீர்மானங்கள்.

**முன்னாள் ஆளுநர் திரு. செயசாமராச உடையார், முன்னாள் உறுப்பினர் திரு. பி. டி. இராசன் ஆகியோர் மறைவு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"1964 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டுவரை தமிழ் நாட்டின் ஆளுநராகப் பணியாற்றிய திரு. செயசாமராச உடையார் அவர்கள் 23—9—1974 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும், 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டுவரை கம்பம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராகவும் இருந்த திரு. பி. டி. இராசன் அவர்கள் 25—9—1974 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்"

இப்பேரவைக்கு நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானங்களை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 டிசம்பர் 12

"1964 ஆம் ஆண்டிலிருந்து 1966 ஆம் ஆண்டுவரை தமிழ் நாட்டின் ஆளுநராகப் பணியாற்றிய திரு. செயசாமராச உடையார் அவர்கள் 23—9—1974-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது" என்ற தீர்மானத்தையும்,

"1921 ஆம் ஆண்டிலிருந்து 1937 ஆம் ஆண்டு வரையிலும், பின்பு 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையிலும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் உறுப்பினராகவும், கம்பம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராகவும் மற்றும் 1932 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தவரும், நீதிக் கட்சியின் தலைவராக விளங்கிய திரு. பி. டி. இராசன் அவர்கள் 25—9—1974 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானத்தையும் நான் முன்மொழிகின்றேன்.

திரு. செயசாமராச உடையார் அவர்கள் தமிழகத்தில் மூன்றாண்டுக் காலம் ஆளுநராகப் பணியாற்றி வந்தார்கள். அவர்கள் மைசூர் சமஸ்தானத்தினுடைய மன்னராக விளங்கிய நேரத்திலும் மக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்று மக்களுடைய இதயங்களில் நல்லதொரு இடத்தைப் பெற்றிருந்தார்கள். செயசாமராச உடையார் அவர்கள் சிறந்த கல்வி வல்லுநராகவும் விளங்கினார்கள். மேலை நாடுகளுக்கெல்லாம் சென்று அவ்வப்போது தத்துவங்களைப்பற்றிப் பல்வேறு சொற்பொழிவுகள் ஆற்றும் அளவுக்கு அவர்கள் திறம் பெற்று விளங்கினார்கள். சிறந்த கல்வி வல்லுநர்களில் ஒருவராகவும் அவர்கள் கருதப்பட்டு வந்தார்கள். சிறந்த பண்புகளுக்கு உறைவிடமாகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்களுடைய மறைவு மைசூர் மாநிலத்தைச் சார்ந்த மக்கள் அத்தனை பேரையும் அடங்கொணாத் துயரத்திலும் துக்கத்திலும் ஆழ்த்தியது என்பதை நாம் நன்றாக அறிவோம். தமிழகத்தில் மூன்றாண்டுக் காலம் அவர்கள் ஆளுநராக இருந்தார்கள் என்றாலும், அப்போதுகூட பல தடவைகள் அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம்



1974 டிசம்பர் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மேற்கொண்டு சொற்பொழிவு ஆற்றுவதில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், அவர்களுடைய பண்புகள் அவர்களுடைய நடைமுறைகள், மற்றவைகள் எல்லாம் நாட்டு மக்களால் வரவேற்கத்தக்க அளவுக்கு சிறந்த ஒருவராக விளங்கினார்கள். அவர்களுடைய மறைவு குறித்து இந்தப் பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் அவர்களுடைய குடும்பத்தினருக்குத் தெரிவிக்கிறது என்ற தீர்மானத்தை வழிமொழிந்து ஆதரிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, தமிழவேள் என்று தமிழ் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. பி. டி. இராசன் அவர்கள் 25—9—1974 ஆம் நாளன்று மறைந்தது குறித்தும் நாம் இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழக அரசியல் உலகில் மிக முக்கியமான ஒருவராகக் கருதப்படத்தக்க அளவுக்கு திரு. பி. டி. இராசன் அவர்கள் விளங்கி வந்தார்கள் என்பதை அனைவரும் நன்கு உணர்வார்கள். கருத்துக்களில் மாறுபாடு கொண்டவர்களும்கூட, மாற்றுக் கட்சியினரும் கூட, அவரை மதிக்கத்தக்க அளவுக்கு அவர் எல்லோருடனும் நெருங்கிப் பழகக்கூடிய இனிய பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கினார்கள்.

"பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு."

என்று வள்ளுவர் கூறியதற்கிணங்க, பகைவரிடமும் நட்பு கொள்ளத்தக்க சிறந்த பண்புகளுக்குச் சீரிய உறைவிடமாக திரு. பி. டி. இராசன் அவர்கள் விளங்கினார்கள். எண்பத்துமூன்று ஆண்டுக்காலம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் எல்லோராலும் பாராட்டத்தக்க அளவுக்கும் போற்றத்தக்க அளவுக்கும் எல்லோரும் அவரை மதித்து அணுகி அவரிடத்தில் அன்பு செலுத்துகிற அளவுக்கும் அவர்களுடைய பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன.

எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் தமிழகத்திலே படித்துவிட்டு, பிறகு மற்ற படிப்புகளை இங்கிலாந்து நாட்டில் படித்து, பார்-அட்-லா பட்டம் பெற்றுத் திரும்பிவந்து சிறந்ததொரு இடத்தைப் பெற்று வந்தார்கள். அப்பொழுது நீதிக் கட்சியில் முக்கியமான இடத்தைப் பெற்று, நீதிக் கட்சியினரால் மிகமிகப் பாராட்டத்தக்க அளவுக்கு, போற்றப்படத்தக்க அளவுக்கு, அவர்

தமிழகத்தினுடைய அமைச்சரவையில்—ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தினுடைய அமைச்சரவையில்—முக்கியமானதொரு இடத்தை, 1932 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டுவரை ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வந்தார். நீதிக் கட்சித் தலைவர்களால் மிகவும் மதிக்கத்தக்க ஒருவராகவும் அந்தத் தலைவர்கள் பலராலும் பாராட்டத்தக்க வகையிலும் அவர்களுடைய பணிகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. திரு. பி. டி. இராசன் அவர்கள் ஆங்கில மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் மிகச் சிறந்துவிளங்கினார்கள். அவர்கள் பள்ளியிலும் மற்ற இடங்களிலும் படித்தது சமஸ்க்ருத மொழியாகும். பிறகுதான் அவர்கள் தமிழைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார்கள். என்றாலும், தமிழில் மிகவும் பற்றும் ஆர்வமும் கொண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக விளங்கி, தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர்களுடைய நலனுக்கும் பாடுபட்டு, தமிழகத்தின் உரிமைகளைக் காப்பதில் எவ்வப்போது தம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமோ அவ்வப்பொழுது தெரிவித்துத், தம்மை ஈடுபாடு கொள்ளச் செய்த அளவுக்குச் சிறந்ததொரு தன்மையை நிலைநாட்டியவர்கள் ஆவார்கள்.

அதுமட்டுமின்றி, 1956 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக ஒரு வார காலம் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக அவர்கள் நடத்தினார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சிறந்த தமிழ் அறிஞர்கள் வரவழைக்கப்பட்டு, அந்த மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டை நடத்திய பெருமை தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களுக்கு உண்டு. அந்த நேரத்தில் 'தமிழவேள்' என்ற பட்டத்தைக் கொடுத்து எல்லோரும் மிகச் சிறப்பாக அவரைப் பாராட்டினார்கள்.

அவர்கள் எல்லோருடைய அன்பையும் பெற்று விளங்கினார்கள் என்பது மட்டுமல்லாமல், யார் அவரிடத்தில் எந்த உதவியை நாடிச் சென்றாலும், அவர் மனங்கோணாத அளவுக்குத் தம்மால் இயன்ற வரையில், நேர்மை வழி நின்று, உதவி செய்வதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட ஒருவர் தமிழகத்தினுடைய அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்கள் என்பது தமிழகத்திற்கே பெருமை தரத்தக்க ஒன்றாகும். 83 ஆண்டுக் காலம் வாழ்வாங்கு வாழ்ந்து, அனைவருடைய ஆதரவையும் பெற்றிருந்த அவர்கள் மறைந்தார்கள். அவருடைய





இழப்பு நம் அனைவராலும் நினைந்து பார்க்கத்தக்க அளவுக்கு துக்கத்தையும் துயரத்தையும் அளிக்கக்கூடிய வகையில் அமைந்த ஒன்றாகும். அந்த முறையில் அவர்களுடைய மறைவு குறித்து ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவருடைய மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு நாம் தெரிவித்துக்கொள்வதோடு, அவருடைய அருமை மகனுகவும், இந்தச் சட்டப் பேரவை உறுப்பினராகவும் விளங்குகின்ற திரு. பழனிவேல் இராசன் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தீர்மானங்களை வழிமொழிந்து நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இரங்கல் தீர்மானங்களை எனது கட்சியாகிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த மன்றத்தில் நான் ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மைசூர் மாநில மன்னர் குடும்பத்தைச் சார்ந்த திரு. செயசாமராச உடையார் அவர்கள் தமிழகத்தினுடைய ஆளுநராக மூன்றாண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறார்கள். அந்த மூன்றாண்டு பதவிக் காலத்தில், அவர் பிற மாநிலத்தைச் சார்ந்தவராக இருந்தாலுங்கூட, தமிழக மக்களுடைய அன்பையும் ஆதரவையும் நல்ல முறையில் பெற்றிருந்தார்கள். அவருடைய இழப்பு கர்நாடக மாநிலத்தைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரமல்லாமல் தமிழகத்தில் வாழ்கிற தமிழ் மக்களுக்குங்கூட ஒரு பெரிய அதிர்ச்சி தரத்தக்க செய்தியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தமிழ் மாநிலத்தில் இருக்கிற பல்வேறு அரசியல் தலைவர்களில் நீதிக் கட்சி தொடங்கிய காலம் முதல் அந்த இயக்கத்தில் இருந்து பணியாற்றிய, குறிப்பாக திராவிட இன மக்களுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு இந்த நாட்டு மக்களுடைய ஏகோபித்த ஆதரவைப் பெற்று தன்னுடைய அறிவையும் ஆற்றலையும் இந்த நாட்டின்

வளர்ச்சிக்காகவும் இந்த நாட்டு மக்களுடைய முன்னேற்றத்திற்காகவும் பயன்படுத்தி இன்று நம்மிடையேயிருந்து மறைந்திருக்கிற மதிப்பிற்குரிய திரு. பி. டி. இராசன் அவர்களுடைய மறைவு இந்த நாட்டு மக்களுக்குப் பெரும் அதிர்ச்சி தரத்தக்க செய்தியாகும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய மறைவால் வருந்தும் அவருடைய குடும்பத்திற்கும், குறிப்பாக அவருடைய மகன்—இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கிற நம்முடைய திரு. பழனிவேல் ராஜன் அவர்களுக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானங்களை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த இரங்கல் தீர்மானங்களை, எங்கள் கட்சியின் சார்பாக ஓரிரு கருத்துக்கள் கூறி, ஆதரிக்கிறேன்.

மறைந்த மேன்மைதங்கிய உயர்திரு. சாமராஜ உடையார் அவர்கள் தமிழகத்தின் ஆளுநராக இருந்த நேரத்திலே சட்டமன்ற அங்கத்தினராக இருந்த பேறு எனக்குக் கிடைத்தது. அன்னாரைப் போன்ற சிறந்த அறிவாளி இந்த நாட்டில் தோன்றுவது மிகக் கடினம். நல்ல பண்புடையவர்—நல்ல பழக்க வழக்கங்கள் உடையவர்—அந்த மாமேதை தமிழகத்தின் ஆளுநராக இருந்த நேரத்தில் நல்லமுன்மாதிரியாக நடந்து கொண்டார்கள். சாதாரணமாக மற்ற ஆளுநர்களைப் போல அல்லாமல், தாம் சம்பளம் வாங்குவதில்லை என்ற நியதியைக் கடைபிடித்து வந்தார்கள். அவர் ஆளுநராக இருந்த நேரத்தில்—கவர்னர் அளிக்கும் விருந்துகளில் நான் பங்கேற்றிருக்கிறேன். தாம் மன்னர் பரம்பரையில் வந்தவர் என்று எண்ணாமல்—ஒவ்வொருவர் இடத்திற்கும் வந்து தனித்தனியாகச் சந்தித்துப் பேசும் பண்பாட்டை அப்போதே கண்டுகொண்டேன். அவர் மேனாட்டு நாகரீகத்திலே நல்ல தேர்ச்சிபெற்றவராக இருந்தாலும், இந்திய கலாச்சாரத்திலும், பண்பாட்டிலும் அதுவும் குறிப்பாக இந்தியன் பிலாசபியிலும் தேர்ந்த வல்லுநராக இருந்தார்கள். அவருடைய இழப்பு பேரிழப்பாகும்—தமிழகத்திற்கோ, கர்நாடகத்திற்கோ மட்டுமின்றி இந்தியா முழுமைக்குமே அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும். அன்னாருடைய குடும்பத்தினர்களுக்கு நான் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்தபடியாக சர். பி. டி. இராசன் அவர்களுடைய மறைவு குறித்தும் எங்கள் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறந்த வழக்கறிஞராக இருந்து சிறந்த தொண்டாற்றிய அந்தப் பெரியார் நீதி கட்சியிலே அதிகமாகத் தொடர்பு கொண்டிருந்தாலும் மத நம்பிக்கையில் பாசமும், பற்றும் கொண்டவராக பல ஆலயங்களின் திருப்பணிக்கு அயராது தொண்டாற்றியவர்கள். அவரது பெரு முயற்சியின் காரணமாக இன்றைக்கு மதுரைமாநகர் ஆலயம் புதிய தோற்றப் பொலிவு கொண்டதாக விளங்குகிறது. அவரைப் போன்றவர்கள் இந்த நாட்டில் தோன்றுவது நல்லது. அவரது அருமைக் குமாரர் நமது சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். தந்தையாரைப் போலவே இவரும் ஆங்கிலத்தில் பேச்சுவன்மை படைத்தவராக, நல்ல வாதங்களைத் தொடுக்கக்கூடியவராக இருந்துகொண்டிருக்கிறார்கள். தந்தையின் பிரிவால் வருந்துகின்ற அவருக்கும், அன்னாரது குடும்பத்தினருக்கும் எங்கள் கட்சியின் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, அவை முன்னவர் கொண்டு வந்துள்ள தீர்மானங்களை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானங்களை என் கட்சியின் சார்பில் முழு மனதுடன் ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்,

நம்மை விட்டுப் பிரிந்த பெரியார் ஜெயசாமராஜ் உடையார் அவர்கள் தமிழகத்தின் ஆளுநராக இருந்து அரிய பெரிய காரியங்கள் மூலம் தமிழகத்து மக்களின் இதயத்தில் இடம் பெற்றுவிட்டார். அவரது பிரிவினால் வருந்தி வாடுகின்ற அவரது குடும்பத்தினர்களுக்கு எங்கள் கட்சியின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழவேள் என்று பட்டம் பெற்ற சர் பி. டி. ராஜன் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து சென்றது தமிழ்ச் சமுதாயத்திற்கே பெரிய நஷ்டமாகும். அது மாத்திரம் அல்ல. ஆன்மீகத் துறையில் தமக்கென்று மிகப் பெரிய தனியானதொரு இடத்தை ஏற்படுத்திக்கொண்டு அரிய, பெரிய ஆலயத் திருப்பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். மதுரை ஆலய கோபுரங்களை செப்பனிட்டுத் தருவதற்காக அவர் ஆற்றியிருக்கும் மிகப் பெரிய காரியம்—பாண்டிய மன்னர்கள் செய்துவிட்ட காரியத்தை அவர் தொடர்ந்து செய்து முடித்து இருக்கும் பாங்கு மிக மிகப் பாராட்டுவதற்குரிய

தாகும். அவரது இழப்பு அவரது குடும்பத்தார்களுக்கு மட்டு
மின்றி ஆன்மீகத் துறைக்கே ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.
அவரது குடும்பத்தினர்களுக்கு எங்கள் கட்சியின் சார்பாக ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே,
நமது முன்னாள் ஆளுநராக இருந்த திரு. ஜெயசாமராஜ உடையார்
சிறந்த கல்விமானாகை மட்டும் இல்லாமல் சிறந்த பண்பாளராகவும்
விளங்கினார்கள் என்று கூறினால் மிகையாகாது. அவர் அரச
குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் என்றாலும்கூட, எளிய வாழ்க்கை
யிலும், பிறருக்கு உதவி செய்வதிலும் ஈடுபட்டார்கள். அவர் கால
மாகும் சமயத்தில் தம்முடைய சொத்தில் பெரும் பகுதியை
இழந்து மிக சாதாரண மக்களில் ஒருவராக அவர்கள் காலமாகி
யிருக்கிறார்கள் என்கிற செய்தியைக் கேட்கிறபோது அந்தப் பண்பு
ஒரு சிலருக்கேதான் இருக்க முடியும் என்பதாக எல்லோருடைய
பாராட்டுதலையும் பெறுகிறார்கள். அவர் காலமானது நாட்டிற்கே
பெரிய நஷ்டமாகும். அவரது குடும்பத்தார்களுக்கு எங்கள்
கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்ப் பெருமகன் சர் பி. டி. ராஜன் அவர்கள் நீண்ட நாள்
அரசியல் வாதி என்பது மட்டுமல்லாமல் ஒரு சிறந்த வழக்கறிஞ
ராக விளங்கியதோடு மட்டுமல்ல—பொதுச் சேவையிலும் அதிக
மாக ஈடுபட்டு, சாதாரண மக்களுடைய அன்பையும் மதிப்பையும்
அதிக அளவுக்குப் பெற்றுவிட்டவர்கள் ஆவார்கள். ஏழை எளிய
மக்கள் அவரை எந்த நேரத்திலும் சாதாரணமாக அணுகி—
அவரது உதவியைக் கோரிப் பெறுவதற்கு—எந்த நேரத்திலும்
அவர் அவர்களைக் காணத் தயாராக இருந்தார்கள். பசியோடு
வருகிறவர்களுக்கு உணவு அளிக்க அவரது வீட்டுக் கதவு ஏழை
எளியவர்களுக்கு என்றுமே திறந்திருந்தது என்றெல்லாம்
சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். பசித்தவர்களுக்கு உணவ
ளிப்பதையே உயர் பண்பாகக் கொண்ட அந்தத் தமிழ்ப் பெருமகன்
நம்மை விட்டுப் பிரிந்தது நமக்கெல்லாம் பெரிய நஷ்டம்—அன்னா
ருடைய குடும்பத்தினர்களுக்கு எனது கட்சியின் சார்பில் ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** பேரவைத் தலைவர் அவர்
களே, நம் நாட்டில் மன்னர்களுடைய ஆட்சி இருந்த காலத்தில்—
மைசூர் மன்னர் மன்னர்களுடைய பாரம்பர்யத்தின் வழி நிற்காமல்
மக்களுடைய பாரம்பர்யத்தின் வழி நின்றார் என்பதை—மைசூர்





சரித்திரம் நமக்கு நன்கு காட்டும். இந்தியா சுதந்திரம் பெற்ற
தற்குப் பிறகு சமஸ்தானங்கள் இந்திய அரசோடு இணையவேண்டு
மென்று சொன்னபோது, மிகப் பெருந்தன்மையோடு அதற்கு
இடம் கொடுத்து, மன்னர் என்ற நிலையில் இருந்து, இந்த நாட்டுப்
பிரஜை என்ற நிலைக்கு அவர் வந்து, பிரஜையின் பிரதிநிதியாக
இந்த மாநில ஆளுநராக அவர் வீற்றிருந்தது எண்ணிப் பார்க்கப்
படவேண்டிய ஒன்றாகும். அவருடைய மனோ நிலையை உணர்ந்து
பாராட்டுகிறேன். அவரது மறைவால் துக்கப்படுகிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது தமிழ்ப் பெருமகன்
சர். பி. டி. ராஜன் அவர்களைப் பற்றி எனக்கு முன்பு பேசிய
பெருமக்கள் 'நான் கேள்விப் பட்டேன்' என்று சொன்னார்கள்—
நான் கேள்விப்பட்டது இல்லை. கிட்டத்தட்ட நாற்பது வருஷங்க
ளாக அவரோடு நெருங்கியிருந்து பழகினவன். ஜஸ்டிஸ் கட்சி
காலத்தில் அவர் அமைச்சராக இருந்த காலத்திலும், ஜஸ்டிஸ்
கட்சியை நிர்மாணிப்பதற்கு, அதை வளர்ப்பதற்கு அவர் செயல்
பட்ட சூழ்நிலைகளிலும் எனக்கு அவரோடு தொடர்பு இருந்தது.
எந்தச் சூழ்நிலையிலும் தன் கொள்கைப் பிடியில் இருந்து மாறாத
பெருமகன் அவர்.

ஒருவர் பேசும்போது குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்தவர் பேசும்போது—அவர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தாலும்
தெய்வ நம்பிக்கை உடையவராக இருந்தார் என்றார்கள். ஜஸ்டிஸ்
கட்சியில் இருந்தபோது தெய்வ நம்பிக்கை மாத்திரம் அல்ல—
அதற்காக அடிகோலி வந்தார். மிக அமைதியானவர்—அடக்கமே
உருவானவர்—மிகப் பெரும் குணம் உடையவர். எந்தெந்த
நேரத்தில் எந்தெந்த கொள்கையைப் பின்பற்ற வேண்டுமோ
அதைப் பின்பற்றி நாட்டுக்கு நலம் செய்தவர். அவரது மறைவு
நமக்கு ஈடு செய்ய முடியாத நட்டம். என்றாலும் அந்தப் பெரு
மகனார் தந்திருக்கிற அன்புமகன் நம்மோடு நமது சட்டமன்ற
உறுப்பினராக இருப்பதுதான் சற்று மகிழ்ச்சி அளிக்கிறது.
தந்தையைப் போலவே பேச்சும், பண்பும், அடக்கமும், தெய்வ
பக்தியும், கோயில் திருப்பணியில் ஈடுபாடும் கொண்டு தந்தையின்
உருவாகவே அவர் திகழ்கிறார். அவரை, அவருடைய உறவாக
அவர் தந்துவிட்டு போயிருக்கிறார் என்று நாம் அமைதி கொண்டு,
அவருக்கும் என்னுடைய அனுதாபத்தை, ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய குடும்பத்
தாருக்கும் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானங்களை முஸ்லீம்
லீக் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன்.

[1974 டிசம்பர் 12

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சபாநாயகர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் சபைமுன் வைத்திருக்கக்கூடிய இரங்கல் தீர்மானங்களை ஆதரித்து, எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மறைந்த சாமராஜ உடையார் அவர்கள் மைசூர் சமஸ்தானத்தினுடைய இராஜாவாக இருந்து, நமது மாநிலத்தின் கவர்னராகவும் நல்ல முறையிலே செயல்பட்டார்கள். அவரைப்பற்றி நினைக்கும் போது, 'மன்னுயிரெல்லாம் மண்ணுள வந்தான் தன்னுயிர் கொண்டு' என்று கருதக்கூடியவராக அவர் இருந்தார் என்று மைசூரிலே இருக்கக்கூடிய மக்களெல்லாம் சொல்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், இங்கு கவர்னராக இருந்தாலும்கூட, எளிய வாழ்க்கையையும் வாழ்ந்து, சேவா உணர்ச்சியோடும் இருந்தார் என்று அவரோடு பழகியவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். நமது இரு மாநிலங்களுக்கும் நல்லுறவு ஏற்படக்கூடிய விதத்தில் அவர் எப்படி பாடுபட்டாரோ, அதே நல்லுறவு தொடர்ந்து இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. பி. டி. இராஜன் அவர்களைப் பற்றி பேசுவதிலே என்னைப் போன்றவர்களுக்கெல்லாம் கொஞ்சம் கஷ்டம் இருக்கிறது. காரணம், எங்கள் குடும்பத்தோடு நீண்ட நெடுங்காலமாக தொடர்பு கொண்டிருக்கிற நெருங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். இன்று, அவருடைய அரசியல் நிலையைப் பற்றித்தான் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்ற முறையிலே எங்கள் கட்சிக்கும் அவருக்கும் எவ்வளவோ மாறுபாடுகள் இருந்தாலும் கூட ஒரு குறிப்பிட்ட இயக்கத்திலே ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றினார்கள். தட்சிணப் பிரதேச எதிர்ப்பு இயக்கம் நடந்த காலத்தில் அவர் தலைவராக இருந்தார். அந்த ஊர்வலத்தில், எங்கள் அருமைத் தலைவர் திரு. ஜீவானந்தம் அவர்கள் போலீசாரால் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட உடனே. திரு. பி. டி. ஆர். அவர்கள் எவ்வளவு துடித்தார் என்பது நமக்குத் தெரியும். உடனடியாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ஜீவானந்தத்தைக் கண்டு, இம்மாதிரியான அசம்பாவிதம் ஏற்பட்டதைக் கண்டு வருத்தப்பட்டார்கள். அது அவருடைய பண்புக்குரியது.

அவரைச் சரியாக விவரிக்க வேண்டுமென்றால், ஆங்கிலப் பதமான True Gentleman என்று அவரை நிச்சயமாகச் சொல்லலாம். அவர் குடும்பத்தோடு பழகி, அவர் இல்லத்திற்குச்



1974 டிசம்பர் 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சென்றவர்க்குத் தெரியும், விருந்தோம்பல் என்றால் என்ன என்பது. விருந்தோம்பலுக்கு ஒரு இலக்கணமாக அவரது குடும்பம் திகழ்ந்தது. இன்றைக்கு அவருக்கிருக்கிற இரு குமாரர்களிலே ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். இன்றைக்கும்கூட, விருந்தோம்பலிலிருந்து வழுவாமல் அவரது குடும்பம் இருந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, வருத்தத்தோடு இந்தத் தீர்மானங்களை ஆதரித்து அமர்கிறேன்.

***திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவரவர்களே, சபையின் முன்னவர் அவர்கள் பிரேரேபித்திருக்கக்கூடிய அனுதாபத் தீர்மானங்களை முழுமனதோடு ஆதரித்து, எனது கட்சியின் சார்பாகச் சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மறைந்த திரு. சாமராச உடையார் நமது தமிழகத்தினுடைய கவர்னராகப் பணியாற்றியவர். மிகச் சிறந்த அரசப் பரம்பரையில் வந்த அவர், இந்தியாவிலே Prince among Princes என்று சொல்லக்கூடிய, பண்பாட்டிற்கும் சிறந்த சீலத்திற்கும், ஒழுக்கத்திற்கும் ஒரு உறைவிடமாக விளங்கினார் என்பதை இந்த நாடு பூராவும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மன்னர் பரம்பரை ஒழிக்கப்பட்டபோதிலும், மன்னர் பரம்பரையிலிருந்த சில நல்ல பண்புகளைப் பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் அவர் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட ஒருவர் தமிழகத்தில் கொஞ்ச நாளைக்கு ஆளுநராக இருந்து, தமிழக மக்களோடு சகோதர பாவத்தோடு இருந்து வாழ்ந்தார் என்பதைத் தமிழக மக்கள் நிச்சயமாக மறக்கமாட்டார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

1952–57-ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், திரு. பி. டி. இராசன் அவர்கள் எங்களைப் போன்று இளைஞர்களாக இருந்தவர்களோடு மிகவும் சரளமாகப் பழகி, பார்லிமெண்டரி முறையைப் பின்பற்றுவதிலிருந்து கிஞ்சித்தும் வழுவாமல் நடந்து காட்டினார் என்பதை நான் நேரடியாகக் கண்டவன். அவருடைய குடும்பத்தினர் எந்தவிதமான வாதப்பிரதிவாதத்திற்கும் ஆளாகக் கூடிய விதத்திலே இல்லாமலிருந்தது மட்டுமல்ல, எல்லா தரப்பினரும் மதிக்கக்கூடிய விதத்திலே அவர் அரசியல் பாரம்பரியத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அவருடைய திருமகனார் இன்றையதினம் சட்டமன்றத்திலே அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்யக்கூடிய நிலையைப் பெற்றதற்கு நாம் எல்லாம் பெருமைப்பட வேண்டும். அவர் மறைந்தது நம்முடைய

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 டிசம்பர் 12

தமிழகத்தின் துர்ப்பாக்கியம் என்று சொல்லிக்கொண்டு, இருவர் குடும்பங்களுக்கும் என்னுடைய கட்சியின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

* **திருமதி சத்தியவாணிமுத்து**: சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரண்டு இரங்கல் தீர்மானங்களைப் பொறுத்து, நானும் எனது கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முன்னாள் ஆளுநர் மேதகு ஜெயசாமராஜ உடையார் அவர்கள் அரச பரம்பரையிலே பிறந்திருந்தாலும், ஏழை எளிய மக்கள் வாழக்கூடிய எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார் என்ற சிறப்பு அவருக்கு உரியதாக இருந்தது என்று இங்கே பேசினார்கள். அது ஒரு எடுத்துக்காட்டான வாழ்க்கை என்ற முறையிலே அவர் வாழ்ந்து காட்டிவிட்டுப் போயிருக்கிறார். அதுவும் நமது மாநிலத்திலே அவர் ஆளுநராக இருந்து அப்படிப்பட்ட எளிமையான வாழ்க்கையை அவர் வாழ்ந்து காட்டியது அந்த வாழ்க்கையை நாமும் பின்பற்றுவதற்காக அவர் நடத்திக் காட்டினார் என்றே நாம் நினைக்க வேண்டியுள்ளது. அதனை இப்பொழுது நாம் நினைக்கும்போது, அதனைத் தொடர்ந்து செயலாற்ற முன்வருவதே அவ்ருக்கு நாம் காட்டுகின்ற மரியாதையாகும்.

அடுத்து, தமிழவேள் பி. டி. ஆர். அவர்கள் நீதிக் கட்சியின் தலைவராக இருந்து செய்த பணிகள் ஏராளம். அவர் இப்பொழுது ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தாய்க் கழகமாக இருந்த நீதிக் கட்சிக்கு வகுத்த கொள்கைகள், 14 ஆண்டுக்காலம் அந்தக் கட்சி இந்தத் தமிழகத்தை ஆண்டபொழுது செய்துவந்த சில நன்மைகளைத் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமென்ற கருத்திலே இன்றைக்கு அரசுப் பீடத்திலே இருப்பவர்கள் இருக்கவேண்டும். மறைந்த தமிழவேள் கொண்டிருந்த நல்லெண்ணங்களை, இன்றைக்கு இவர்கள் கொண்டிருக்க வேண்டும். செய்து காட்ட வேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

1957-ம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது, முதுகுளத்தூர் கலவரத்தைப்பற்றி விவாதிக்க நேர்ந்தது. அன்றைக்கு நானும் அந்த விவாதத்திலே பங்கு கொண்டேன். நான் பேசிய அன்று, மதிப்பிற்குரிய மறைந்த



1974 டிசம்பர் 12] [திருமதி சத்தியவாணிமுத்து]

தமிழவேள், பேரறிஞர் அண்ணாவுக்கு ஒரு விருந்து அளித்தார்கள். அவருக்கு வைத்த விருந்துதான். அதிலே, அன்றைக்கு எதிர்க் கட்சியிலே இருந்த நாங்களெல்லாம் கலந்துகொண்டோம். ஆனால், அந்த விருந்துக்குச் சென்ற என்னைப் பெரியவர் அவர்கள் இன்றைக்கு நீங்கள்தான் 'சீஃப் கெஸ்ட்' என்று சொன்னார்கள். எனக்குப் புரியவில்லை. அதற்குப் பிறகு அவர்கள், நீங்கள் அந்தக் கலவரத்தைப் பற்றி சட்டமன்றத்திலே எடுத்து வைத்த அந்தத் தன்மை மிகச் சிறந்தது என்று என்னைப் பாராட்டி, அந்தப் பெருமையை எனக்கு அளித்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், எந்த அளவுக்குக் கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நல்ல முறையிலே படம் பிடித்துக் காட்டினீர்கள் என்று எடுத்துச் சொல்லி, அந்த வகையில் அவர் என்னை அன்றைக்குப் பாராட்டினார்கள்.

அதிலேயிருந்து அவர் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது எவ்வளவு நியாயமான அன்பும் பற்றும் வைத்திருந்தார் என்பதை அறிந்து அவரோடு பழகி, அவரைச் சந்தித்து, பல கருத்துக்களைப் பேசுகின்ற வாய்ப்பினை பெற்றேன். அப்படிப்பட்ட பெரியவர் மறைந்து விட்டார். அவரது நல்ல உள்ளத்தையும், கொள்கைகளையும் கொண்டிருக்கிற அவரது திருமகன் இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக்கிறார். அவரது இலட்சியங்கள் இன்றைக்கும் அவரது திருமகன் மூலமாக ஒலிபரப்பப்படுகின்றன. ஆனாலும், அவர் இல்லையே என்ற வருத்தத்தை இந்த மன்றத்தில் எனது கட்சியின் சார்பில் நானும் தெரிவித்துக்கொண்டு, இந்த இரு குடும்பங்களுக்கும் எனது கட்சியின் சார்பிலே வருத்தத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

(முற்பகல் 10-30)

* **திரு. கு. அ. பொம்மன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானங்களை என் கட்சியின் சார்பாக ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மறைந்த ஜெய சாமராஜ உடையார் அவர்கள் மைசூர் மகாராஜாவாக பழைய மைசூர் ராஜ்யத்தை ஆண்டு வந்து இருந்தாலும்கூட பிற்பாடு அந்த மாநிலத்தினுடைய ஆளுநராக இருந்தார்கள். பிறகு மூன்றாண்டுக் காலம் நம்முடைய மாநிலத்திலே ஆளுநராக சேவை செய்து வந்தார்கள். கர்நாடக மாநிலத்து

[திரு. கு. அ. பொம்மன்] [1974 டிசம்பர் 12

மக்கள் அவரை மகாராஜாவாகவோ, அல்லது ஆளுநராகவோ கருதாமல் தெய்வமாகக் கருதி வந்தார்கள். அவர் மறைந்ததால் அதற்காக கர்நாடக மாநிலத்திலுள்ள பிரஜைகள் அவருடைய சேவை தங்களுக்கு இல்லாதிருப்பதையொட்டி, மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்தாருக்கு எங்கள் கட்சியின் சார்பாக இரங்கலை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்ததாக, திரு. பி. டி. ராஜன் அவர்கள் நீதிக் கட்சியின் தலைவராக இருந்தார், கல்வி வல்லுநர் ஆக இருந்தார் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. அவர்கள் இறந்துவிட்டதால் வருந்துகிற அவர்களுடைய குடும்பத் தாருக்கும் நான் எங்கள் கட்சியின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் ஆதரித்து அமர் கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir, does the hon. Member Thiru Bomman represent the Swatantra Party or the Baratiya Lok Dal?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரங்கல் தீர்மானத்தின் போது அது வராது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் நாவலர் அவர்கள் இங்கு கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தில் அவை உறுப்பினர்களோடும் அனைத்துக் கட்சித் தலைவர்களோடும் கலந்து என்னுடைய இரங் கலையும் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த மைசூர் மன்னர். இங்கு பலரும் எடுத்துக் காட்டிய தைப்போல், சிறந்த அறிஞராகவும் உலகப் புகழ்பெற்ற மேதை களிலே ஒருவராகவும் விளங்கியவர்களாவார்கள். மன்னர்கள் சாம்ராஜ்யங்கள் அழிக்கப்பெற்று இந்தியாவிலே சமஸ்தானங்கள் இல்லையென்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டபோது வலிய முன் வந்து அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு தாங்களாகவே இந்தியத் திருநாட்டோடு இணைந்துவிட்ட மன்னர்களுடைய வரிசையில் முதல் வரிசையிலே இருந்தவர் மறைந்த மைசூர் மன்னர் அவர்கள் ஆவார்கள். மைசூர் சாம்ராஜ்யத்திலே இனி மன்னர்கள் இல்லை, மக்களாட்சி ஏற்படும் என்ற ஒரு நிலை பிறந்தபோதுகூட, அவர்கள்பால் இந்தியப் பேரரசு கொண்டிருந்த அன்பின் காரண மாகவும் நல்லெண்ணத்தின் காரணமாகவும் அந்த மாநிலத்தி லுடைய மக்கள் அவர்களிடத்திலே கொண்டிருந்த பற்றின் காரண மாகவும் 1950 ஆம் ஆண்டு முதல் 1956 ஆம் ஆண்டு வரையில் மைசூர் மாநிலத்தினுடைய 'ராஜ்பிரமுக்' என்கின்ற அந்தப் பட்டம் அவர்களுக்கு அளிக்கப்பட்டு அந்தப் பதவியிலே அவர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள்.



1974 டிசம்பர் 12] [டாக்டர் மு. கருணாநிதி]

அதற்குப் பிறகும்கூட சொந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அந்த மாநிலத்திலேயே கவர்னராக இருத்தலாகாது என்ற மரபை எடுத்துக் கொள்ளாமல் அந்த மாநிலத்தினுடைய மக்களின் அன்பினை நிறைவேற்றுகின்ற வகையிலே 1956 ஆம் ஆண்டு முதல் 1964 ஆம் ஆண்டு வரையிலே மைசூர் மாநிலத்தினுடைய கவர்னராக மறைந்த மைசூர் மன்னர் ஜெயசாமராஜ உடையார் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். 1964 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழகத்திலே, அப்போது சென்னை மாநிலமாக இருந்த இந்த மாநிலத்தில் அவர்கள் கவர்னராக பணியாற்றினார்கள். அவர்கள் சிறந்த மேதை என்பதற்கும் அவர்கள் நல்ல பல தத்துவங்களை மக்களுக்கு எடுத்துச் சொன்னவர் என்பதற்கும் ஆதாரமாகப் பல நூல்களை அவர்கள் யாத்துத் தந்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் பார்க்கும்போது Author of 'Dattatreya'—The way and the goal என்ற நூலும் Gita and Indian Culture என்ற நூலும் The Aesthetic Philosophy of India என்ற நூலும் The orb of the Mind ' on Vedanta என்ற நூலும் Indian Forestry என்ற நூலும் The Role of water in Life என்ற நூலும் Indian Logic நான்கு வால்யூம்கள்—இந்தப் பெரும் நூல்கள் எல்லாம் அவர்களால் இயற்றப்பட்டன என்பதே அவர் சிறந்த அறிஞராக நல்ல தத்துவ ஞானியாக உலகத்திலே புகழ்பெற்ற மேதைகளிலே ஒருவராக விளங்கியவர் என்பதற்குச் சான்றாகும். அப்படிப் பட்டவர் திடீரென்று எதிர்பாராதவிதமாக மறைந்து விட்டார் என்ற செய்தி மாண்புமிகு அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல கர்நாடக மக்கள் மட்டுமல்லாமல் இந்தியாவிலே இருக்கிற பல்வேறு மாநிலங்களிலே உள்ளவர்களும் உலகத்திலே அவரை அறிந்த பலரும் மனக் கலக்கத்தை எந்த அளவிற்குப் பெற்றார்களோ அதே அளவிற்குத் தமிழகத்திலே

இருக்கிற நாமும் பெற்றோம் என்று சொன்னால் மிகையாகாது. அப்படிப்பட்டவரை இழந்த அவருடைய குடும்பத்தாருக்கு இந்த அவை தெரிவிக்கின்ற இரங்கலோடு என்னுடைய இதயத்தையும் நான் இணைத்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தின் தலைசிறந்த பண்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்த, தமிழ்நாட்டினுடைய தலைவர்கள் அத்தனை பேர்களுடைய பேரன்பினை கட்சி வேறுபாடற்ற முறையிலே காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்டு ஒருங்கே பெற்ற மாபெரும் மனிதர் திரு. பி. டி. ராஜன் அவர்கள் ஆவார்கள். அவர்கள் எப்படிப்பட்ட செயல்களுக்கு எல்லாம் இந்த நாட்டிலே தலைமை வகித்தார்கள், எந்த மக்களுக்காகப் பாடுபட்டார்கள் என்பவைகளையெல்லாம் இந்த நேரத்திலே விரிவாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். அவையனைத்தும் எல்லோரும் நன்கு அறிந்த உண்மைகள் ஆகும்.

1938 ஆம் ஆண்டில் தமிழகத்திலே மொழிப் போர் நடைபெற்ற போது அதனுடைய தானைத் தலைவர்களிலே ஒருவராக விளங்கி தமிழ்மொழியைக் காப்பாற்றுவதற்காக அன்றைக்குப் படை நடத்திச் சென்ற பெருமையிலே, திரு. பி. டி. ராஜனுக்கும் அந்தப் பெருமை உண்டு என்று சொல்லலாம். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்லியதைப்போல 1956 ஆம் ஆண்டிலே தட்சிணப் பிரதேசம் மட்டுமல்லாமல், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளும் தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்ற எல்லைப் போராட்டத்திலே பல்வேறு கட்சிகளுக்கும் யார் தலைமை வகித்துப் போராடுவது என்ற பிரச்னை எழுந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்களால் முன்மொழியப்பெற்று, எல்லாக் கட்சித் தலைவர்களாலும் வழிமொழியப்பெற்று, திரு. பி. டி. ராஜன் அவர்கள் தேவிகுளம், பீர்மேடு எல்லைப் போராட்டத்திற்கும் தலைமை வகித்தார்கள். அதற்குப் பிறகு தமிழர்களின் உரிமைகள், தமிழ் மொழி உரிமை, தமிழ் மக்களுடைய உரிமைகள் இவைகளைக் காப்பாற்றுவதற்காக அந்த நேரத்திலே தன்னுடைய சுகதுக்கங்களை மறந்துவிட்டு ஈடுபட்ட தமிழராக இருந்தார்கள். கோலாலம்பூரிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்து கொண்டு தமிழ் வளர, உலகத்திலே தமிழின் தன்மை மேலும் மேலும் போற்றிப் பாதுகாக்கப்பட அவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்கள் எல்லாம் இன்றைக்கும் நினைந்து நினைந்து நம் எல்லோராலும் பாராட்டத்தக்கக் கருத்துக்களாக இருக்கின்றன.



அப்படிப்பட்ட சிறந்த பண்பாளரை, தமிழர்களுடைய தலைவரை இழந்திருக்கிறோம். அவர்களுடைய குடும்பத்திற்கும் இந்த அவையிலே மிகச் சிறப்புற்று விளங்கும் உறுப்பினர்களில் ஒருவராகத் திகழ்கிற திரு. பழனிவேல் ராஜன் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய இதயமார்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டு இந்த அவையின் சார்பிலே கொண்டுவரப்பட்ட இரண்டு இரங்கல் தீர்மானங்களோடு என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்த இரு பெரியவர்களுக்கு இந்த மன்றம் தெரிவித்த இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு அவைமுன்னவரவர்களால் முன் மொழியப்பட்ட இரங்கல் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலே பேரவை இப்பொழுது ஒத்தி வைக்கப்படுகிறது. பேரவை முற்பகல் 11-15 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-40 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

பேரவை மீண்டும் முற்பகல் 11-15 மணியளவில் கூடியது.

## (2) அரசினர் தீர்மானங்கள்.

### (அ) வினா நேரத்தைத் தள்ளி வைத்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, " சட்டப் பேரவை விதி 22-ன் கீழ் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று இருப்பதை இன்று தள்ளி வைத்து மற்ற அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

1974 டிசம்பர் 12]

### (3) அறிவிப்பு.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 6 (1)-ன்படி, கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன்.

1. டாக்டர் க. நாகராஜன்
2. திரு. துரைமுருகன்
3. திரு. கு. காமாட்சி
4. திரு. கா. காளிமுத்து
5. திரு. என். டென்னிஸ்
6. திரு. கே. கந்தசாமி

### (4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பருவமழை தவறியமை, பயிர் பாதிப்பு, குடிநீர் பற்றாக்குறை ஆகியவை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. கந்தசாமி, கே. என். குமாரசாமி, பி. வெங்கடசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, கா. காளிமுத்து, என். கே. பழனிசாமி, கே. டி. கே. தங்கமணி, சோ. அழகர்சாமி, ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திருவாளர்கள் எம். சுரேந்திரன், ஏ. சுப்பிரமணியம் ஆகியோர்,

'Failure of monsoon and consequent withering away of crops and scarcity of drinking water in most parts of Tamil Nadu'.

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தக்க அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டிலும் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன், கட்சிக்கு ஒருவராக.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, இந்த அட்ஜார்ன் மெண்ட் மோஷனைப்பற்றி ஒவ்வொரு கட்சியிலேயிருந்தும் இரண்டு மூன்று உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவரவர்கள் பகுதிகளிலே இருக்கின்ற நிலைமைகளை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்ற நிலையிலே . . .



1974 டிசம்பர் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியில்லை, ஒரு முறையை நாம் வைத்திருக்கிறோம். ஒரு கட்சியிலேயிருந்து பல உறுப்பினர்கள் கொடுத்தாலும் அந்தக் கட்சியிலிருந்து ஒருவரைத் தான் கூப்பிடுவது வழக்கம். எல்லா உறுப்பினர்களும் பேசுவது என்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுப்பார்கள். எனவே, அது முறை அல்ல.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, இன்றையதினம் தமிழ்நாட்டிலே பருவமழை தவறி என்றைக்கும் இல்லாத அளவிலே, கடந்த நூற்றாண்டுக்காலத்திலேயே இந்த ஆண்டுதான் இவ்வளவு மோசமான அளவில் பருவமழை தவறியிருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவிற்கு மழையில்லாததன் நிமித்தம், தமிழகத்தில் பல பகுதிகளிலேயும், எல்லா மாவட்டங்களிலேயும் என்று கூறக்கூடிய அளவிற்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, பயிர்களெல்லாம் வாடி வதங்கி, மக்கள் துயரப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இதன் விளைவாக வேலையின்மைப் பிரச்னை கிராமப்புறங்களில் ஏற்பட்டு அவர்கள் இருக்கின்ற இடத்தை விட்டு வேறிடங்களுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்னும் பலவிடங்களிலே குடிப்பதற்குக்கூடத் தண்ணீரில்லாமல் அதன் நிமித்தமாக வேறிடங்களுக்குப் போகக்கூடிய நிலைமைகளும் ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்தியிலேயிருந்து அறிகிறோம்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்திலேயே பயிர்களெல்லாம் வாடி, படக்கூடிய நிலைமைகளிலே இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். இவ்வளவு ஒரு மோசமான நிலை ஏற்பட்ட பிறகு, இந்த நேரத்திலே அரசு தீவிரமாக, வேகமாக என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை நம்மால் உணர முடியவில்லை.

மேட்டூரிலே தண்ணீர் கிடையாது, பற்றாக்குறை. அந்தத் தண்ணீரைப் பகிர்ந்தளித்து கூடுமான வரையிலே அதை இன்னும் அதிக நாட்களுக்கு நீடித்துக் கொடுக்க முடியுமா என்பதுபற்றி பொறி இயல் வல்லுநர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படிப் பிரித்துக் கொடுத்தாலும் கூட ஏதோ ஒரு பகுதி நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறதே தவிர பெரும்பகுதி நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அரசு முன்கூட்டியே யோசித்துச் செயல்பட்டிருப்பார்களேயானால் லட்சக்கணக்கான நிலங்களைப் பாழ் நிலையிலிருந்து காப்பாற்றி உணவு விளைச்சலை அதிகரித்திருக்க முடியும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பில்டர் பாயின்ட் போட்டு பம்ப் செட் வைத்து கிராஷ் புரோகிராம் என்று தீவிரமாகச் செயல்பட்டார்கள். இப்போதும் அப்படிச் செய்திருப் பார்களானால் தஞ்சை மாவட்டத்தில் 30 அடி, 40 அடியில் கிடைக்கக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தந்திருக்க முடியும்.

அடுத்து, குடிதண்ணீர் இல்லாமல் இருக்கின்ற பகுதிகளில் குடிதண்ணீர் கொடுப்பதற்கான முயற்சிகளிலும் காலம் தாழ்ந்து தான் ஈடுபட்டிருக்கிறார்கள். தற்போது தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைமையில் நிவாரணப் பணிகளுக்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதாக அரசு அறிவித்திருப்பது எந்த அளவுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய நிலையில் இருக்குமென்று அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து தினசரி ஆயிரக் கணக்கான மக்கள் தஞ்சை மாவட்டத்தை நோக்கி வந்து கொண்டே இருக்கிறார்கள். அரிசி விலை மிக அதிகமாக ஏறி யிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி வெளியே போகாது கட்டுப்படுத்தி வைத்திருப்பதன் காரணமாக கொஞ்சம் குறைவாக இருக்கிறது. வெளி மாவட்டங்களிலிருந்து தஞ்சை மாவட்டத்திற்கு வந்தால் குறைந்த விலையில் அரிசி கிடைக்கிறது என்று வெளி மாவட்டங்களிலிருந்து மக்கள் குடியேறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் துர்ப்பாக்கியமான நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அரசு ஆங்காங்கு குறைந்த விலையில் அரிசி கொடுக்க முயற்சி எடுத்திருக்குமானால் இப்படி எல்லோரும் தஞ்சையை நோக்கி வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அரசு முன்கூட்டியே கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கத் தவறி யிருக்கிறது. சக்திக்கேற்ற அளவுக்கு இந்தப் பாதகங்களைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அரசு அந்த முயற்சியில் தவறி இருக்கிறது. காலத்தோடு வேண்டிய





முயற்சிகளைச் செய்யவில்லை. கீழ்த் தஞ்சைப் பகுதியில் பயிர் காய்கிறது. இப்போதிருப்பதைவிட அதிகமான அளவுக்கு உணவு நெருக்கடி நாட்டில் ஏற்படுமோ என்று அஞ்சத்தக்க நிலைமையில் மக்கள் கவலையுற்றிருக்கும் இந்த நேரத்தில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது, மக்கள் துயருற்றிருக்கிற நிலையில் அவர்களுடைய வாழ்க்கைக்கு என்ன முடிவுகளை எடுக்கப் போகிறது என்பதை அறிய இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது, அவையை ஏன் ஒத்தி வைக்க வேண்டு மென்பதற்காக, சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்திலே பெரும்பகுதி இடங்களிலே பருவமழை தவறியதன் காரணமாக உழைக்கக்கூடிய மக்கள், குறிப்பாக விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும் விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வதற்கு எந்த வழியும் இல்லாமல் கையிலிருக்கும் பொருள்கள் அத்தனையையும் இதுவரை விற்றுச் சாப்பிட்டுவிட்டு இப்போது எந்த வழியும் இல்லாமல் காட்டிலிருக்கும் கிழங்குகளை மிருகங்கள், பன்றிகள் சாப்பிடுகின்ற கிழங்குகளைச் சாப்பிட்டு வருகிறார்கள். அந்தக் கிழங்குகள் விஷமுள்ளவையாகையால் அதைக் கொண்டு வந்து புளிக்க வைத்து மறுநாள் ஆட்டி மூன்றாவது நாள் கொழுக்கட்டையாக அவித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் இந்த நிலைமை இருக் கிறது.

இராமநாதபுரம் மாவட்ட விவசாயத் தொழிலாளர்கள் பஞ்ச காலத்தில் வேறு இடங்களுக்குப் போவார்கள். இந்த வருஷம் வேறு எங்கும் போகமுடியாத நிலைமையில் புல்களிலிருக்கக்கூடிய களைகளிலுள்ள புல் தானியங்களை சேகரித்து அதைக் கஞ்சியாகக் காய்ச்சி ஒரே வேளை அருந்தி உயிர் போகாது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நாலைந்து நாட்களில் எவ்வளவு பேர் பட்டினியால் சாவார்களோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலை இப்போதுள்ள பஞ்ச நிலை காரணமாக ஏற்பட்ட தல்ல. அரசாங்கக் கணக்குப்படியே சென்ற ஆண்டு 74 லட்சம் டன் உணவுப் பொருள் விளைந்திருக்கிறது. நெல்லை மட்டும்

[திரு. சோ. அழகர்சாமி] [1974 டிசம்பர் 12

எடுத்துக் கொண்டால் 67 லட்சம் டன் விளைந்திருக்கிறது. அரிசியாக்கினால் 47 லட்சம் டன் வருகிறது. தமிழகத்திலுள்ள 4 கோடி 11 லட்சம் பேருக்கு நபர் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு 2 கிலோ விதம் கொடுத்தால் கூட நமக்குத் தேவை 42,74,400 டன் தான். அரிசி மட்டும் 4,25,690 டன் மிச்சமிருக்க வேண்டும். சிறு தானியங்கள் வெளியே போனாலும் போகாவிட்டாலும் அரிசி மட்டுமே மிச்சமிருக்க வேண்டும்.

இன்று விவசாயத் தொழிலாளர்கள் பஞ்சத்தின் காரணமாக வேறு ஊர்களுக்குப் போகிறார்கள். இவர்கள் அங்கு போனவுடன் 2 ரூபாய் கூலியாக இருந்தது 1½ ரூபாயாக ஆகிவிட்டது. பசுமைப் புரட்சியில் ஹைபிரிட் வெரைட்டி என்று சொல்லப்படுகின்ற ஒட்டுப்புல்லை வாங்க வேண்டுமென்றாலும் கிலோ ரூ. 2.40 ஆகிறது. ஒரு கிலோ ஒரு வேளைக்குத்தான் காணும். ஆனால் அவர்களுக்குக் கிடைக்கிற கூலியோ ரூ. 1.50 தான். அரிசி போன வருஷம் உபரியாக விளைந்தும் இந்த நிலைமை இப்போது இருக்கிறது.

நகரத்தின் நிலைமை என்ன? 250 ரூபாய், 300 ரூபாய் மாதம் வாங்கக்கூடிய காவலர்கள், சட்டமன்றத்தைச் சுற்றியுள்ள காவலர்கள் போன்றவர்கள், என்.ஜி.ஓ.-க்கள் நிலைமை என்ன? 300 ரூபாய்க்குக் கீழ் சம்பளம் வாங்குகின்றவர்களுக்கு வாரத்திற்கு நபர் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசி கொடுக்கிறார்கள். மூன்று கிலோ அரிசி, குறைந்த பட்சம் இரண்டு கிலோ அரிசியாவது தேவை. தற்போது அரிசிக்கே ஒரு குடும்பத்திற்கு 300 ரூபாய் ஆகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பிடிப்பு போக எவ்வளவு அவனுக்கு வரப் போகிறது? மனிதன் எப்படி எதிர்காலத்திலே வாழப் போகிறான்? பயங்கரமான நிலைமை தமிழகத்தில் இருக்கிறது. விவசாயக் கூலிகள் என்ன செய்வது என்று தெரியாது தவிக்கிறார்கள். புதுக்கோட்டை பகுதியில் நெல்பயிர் காய்ந்து விட்டதால் ஆடுமாடுகளை மேய்க்கிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மிகப் பயங்கரமான பஞ்சம். இராமநாதபுரம் மாவட்ட மக்கள், விவசாயிகள் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் மதுரையில் திரண்டு 5,000 பேர் கலெக்டரிடம் உடனடி நிவாரணம் அளிக்க வேண்டுமென்று எடுத்துக் கூறினோம். இதுவரை நிவாரணம் அளிக்க எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. வேலைக்கு வழி இல்லை, உணவுக்கு வழி இல்லை.



1974 டிசம்பர் 12] [திரு. சோ. அழகர்சாமி]

எங்கள் கட்சியின் சார்பில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சொன்னோம். 'விளைந்திருக்கிறது, பதுக்கல்காரர்கள் கொள்ளையடிக்கிறார்கள், ஒரு ஏற்பாடு பண்ணுங்கள்' என்று சர்க்காரிடம் சொன்னோம். இன்றைக்கு படி அரிசி 7 ரூபாய். மற்ற தானியங்கள் படி 3½ ரூபாய்; சோளம் படி 3½ ரூபாய். சர்க்கார் நிர்ணயித்த விலை குவிண்டாலுக்கு 80 ரூபாய்.

(முற்பகல் 11-30)

விநியோக முறையை எடுத்துக்கொண்டால், மண்ணெண்ணெயை வைத்து வீட்டில் விளக்கு ஏற்றி படித்துக்கொள்ளலாம் என்றால் லிட்டர் விலை ரூ. 2.50. அதுவும் நியாயமான முறையில் விற்பதற்கு ஒரு ஏற்பாடும் இல்லை. சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்ட்டும் சரி அல்லது சர்க்காரும் சரி அதை ஒழுங்காக விநியோகிப்பதற்கு ஒரு ஏற்பாட்டையும் செய்யவில்லை. ரூ. 2.50-க்கு வாங்க வேண்டியிருக்கிறது.

நேற்று, நான் ப்ராட்வே பக்கம் போனேன். ஒரு ஆயிரம் பேர்கள் க்யூவில் நின்று கொண்டிருந்தார்கள். அரிசி போடுகிறார்கள் என்று அதை வாங்க க்யூவில் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு வார்டுக்கு ஒரு கடை என்று வைத்து ஒரு வாரத்திற்கு நூறு அல்லது இருநூறு கார்ட்களுக்கு என்று கொடுக்கலாமே. ஒன்றாம் நம்பர் கார்ட் முதல் இத்தனை கார்ட்கள் வரை இன்று அரிசி போடப்படும் என்று சொல்லி ஒழுங்குமுறைப்படுத்தி, இந்த நாளில் இந்தந்த கார்ட்காரர்கள் எப்போது வந்தாலும் அன்று அரிசியை வாங்கிக் கொள்ளலாம் என்று ஒரு ஏற்பாடு செய்தால் இந்தக் க்யூவே வேண்டாம். அப்புடிச் செய்தால் என்ன? இந்த அரசாங்கம் சென்ற காலங்களில் கடைப்பிடித்து வந்த கொள்கையின் காரணம்தான் இது.

நாங்களும் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். அரிசி மொத்த வியாபாரத்தில் வியாபாரிகளை நம்பாதீர்கள் என்று சொன்னோம். மொத்த அரிசி வியாபாரத்தையும் வியாபாரிகளிடம் கொடுத்தீர்கள், என்னவாயிற்று? ஒன்றரைக் கோடி ரூபாய் அளவிற்கு தவறாக வெளியே போயிற்று என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். மொத்த வியாபாரத்தையும் அரசாங்கமே கையில் எடுத்துக்கொண்டிருக்கவேண்டும் என்று சொன்னோம்; கேட்கவில்லை. நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 100 கொடுத்தாலும்

[திரு. சோ. அழகர்சாமி] [1974 டிசம்பர் 12

ஒரு கிலோ அரிசி ஒன்றே முக்கால் ரூபாய்க்கு தமிழ்நாட்டிலுள்ள 4 கோடியே 11 லட்சம் மக்களுக்கும் ஒழுங்காகக் கொடுத்திருக்க முடியும் என்று புள்ளிவிவரத்தோடு விவரமாகச் சொல்லியிருக்கிறோம். அதை அரசாங்கம் ஏன் கேட்கவில்லை?

சென்ற ஆண்டு 67 லட்சம் டன் நெல் மட்டும் விளைந்திருக்கிறது. மற்ற தானியங்கள் சேர்ந்து 74 லட்சம் டன் அளவிற்கு விளைந்திருக்கிறது. அப்படியிருந்தும் கூட இந்த நாட்டிலுள்ள உழைக்கிற, பாடுபடுகிற மக்களுக்கு—அவர்களுக்கு வயிறார உங்களால் கொடுக்கமுடியாது—ஒருவேளை வயிறாரச் சாப்பிட்டு அடுத்த நாள் உழைக்கக்கூடிய சக்தியைப் பெறக் கூடிய அளவிற்குக் கூட உணவு கொடுக்கக் கூடிய ஒரு காரியத்தை இந்த அரசு இதுவரை செய்யவில்லை. அரிசி வேண்டாம், மற்ற தானியங்களாவது கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

இன்று கிராமங்களில் உள்ளவர்களுக்கு வேலை இல்லை. கால்வாய் வெட்டுவது அல்லது கண்மாய் வெட்டுவது என்று வைத்து ஆண்களுக்கு ஆறு ரூபாய் சம்பளம், பெண்களுக்கு மூன்று ரூபாய் சம்பளம் என்று கொடுத்து அவர்கள் மொத்தமாகக் கிடைக்கக்கூடிய ரூபாயை வைத்து நியாய விலைக் கடையில் இருந்து அரிசி வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலையில் நியாய விலைக் கடைகள் கிராமப் பகுதிகளில் இருக்கின்றனவா என்றால் அதுவும் இல்லை. மதராஸ், மதுரை, திருச்சி போன்ற டவுன் அல்லது முனிசிபல் ஏரியாக்களில் மட்டும் உணவு தானியங்கள் கொடுப்பது என்றால் கிராம மக்கள் சாவதா? அவர்கள் எப்படியாவது செத்துப் போகட்டும் என்று விட்டுவிடுவதா, அப்படி கிராம மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? ஒரு வாரத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு கிலோ அரிசி என்றால் ஒரு குடும்பம் பிழைக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

வெளியில் ஏழு ரூபாய்க்கு கிடைக்கிறது. ஏழு ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்கிறீர்களா? அப்படி ஏழு ரூபாய்க்கு அரிசி விற்பதற்கு நீங்கள் அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள். சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்டும், முதல் அமைச்சர் அவர்களும் அதை அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அரிசி எப்படி வந்தது? எங்கேயிருந்து வந்தது? விவசாயிகளுக்கு அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறீர்களா என்றால் கிடையாது. அரிசி பூராவும் பதுக்கி



1974 டிசம்பர் 12] [திரு. சோ. அழகர்சாமி]

வைக்கப்பட்டிருக்கிறது. அரிசி இருக்கிறதா என்றால், அரிசி இருக்கிறது. ஆனால் பதுக்கப்பட்டிருக்கிறது. இன்று வேறு தானியங்கள் இருக்கின்றதா. இருக்கிறது. ஆனால் பதுக்கல். மண்ணெண்ணெய் இருக்கிறதா. இருக்கிறது. ஆனால் பதுக்கல். இவை அத்தனையும் கண்டு பிடிக்கப்பட்டு எடுக்கப்பட வேண்டும்.

தஞ்சாவூரில் குறுவை விளைந்திருக்கிறது. இந்த ஆண்டு நல்ல அறுவடையாகி இருக்கிறது. சம்பாவும், தாளடியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குறுவை விளைந்திருக்கிறது. கொள்முதல் என்ன லட்சணத்தில் இருக்கிறது? நான் தஞ்சாவூர் சென்றிருந்தேன். ஒரு மூட்டைக்கு ஐம்பது ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். கூடுதல் ஏழு கிலோ கொடுங்கள் என்று கேட்கிறார்கள். தனியார் சாக்கை வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்கள். நான் கொடுக்கிறேன் ஐம்பது ரூபாய், சர்க்காரிடம் ஏன் செல்கிறீர்கள் என்று சொல்லி அவர்கள் வாங்கி பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முதல் அமைச்சர் அவர்கள் ஒரு நாள் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஒரு நாள் லாரியில் வெளியே போகலாம் என்று தெரிகிறது. பதுக்கல்காரர்கள் கடத்தி விடுகிறார்கள். எல்லா [illegible] ஒருவருக்கு வாரத்திற்கு இரண்டு கிலோவாவது கொடுக்கவேண்டாமா? அரிசி இருக்கிறதா என்றால் இருக்கிறது. சென்ற ஆண்டு விளைந்திருக்கிறது. பிற தானியங்களும் இருக்கின்றன. அப்படி பிற தானியங்கள் இல்லை என்றால், மத்திய அரசாங்கத்தைக் கேளுங்கள். எல்லோரும் சேர்ந்து போராடலாம். ஒரு நபருக்கு வாரத்திற்கு இரண்டு கிலோ அரிசியும் ஒரு கிலோ கோதுமையும் கிடைக்கவில்லை என்றால், நாட்டில் பட்டினிதான் ஏற்படும். அதுமட்டுமல்ல. என்ன நிலை ஏற்படும் என்று யாராலும் சொல்லமுடியாது. இந்த ஆண்டு தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் திருநெல்வேலியில் இருந்து மதராஸ் வரையில் ஒரு கண்மாய் கூட நிரம்பவில்லை. பருவ மழை பொய்த்திருக்கிறது. ஏற்கனவே முந்திய ஆண்டு நன்கு விளைந்திருந்தபோதே நிலை இப்படி என்றால், அடுத்த ஆண்டு படி அரிசி ரூ. 25 என்றால், என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும்.

ஒரு வியாபாரியிடம் கேட்டேன். இப்படி அநியாயமாக படி அரிசி ஏழு ரூபாய் என்று விற்கிறீர்களே என்று. அதற்கு அவர் அப்படி அரிசி படி ஏழு ரூபாய்க்கு விற்கக்கூடாது என்று ஏதாவது

[திரு. சோ. அழகர்சாமி] [1974 டிசம்பர் 12

ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, சங்கரன்கோவில், விளாத்திக்
குளம் போன்ற இடங்களில் மக்களுக்கு அறவே வேலை இல்லை.
மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் புண்ணியத்தில்
புதிதாக ஒரு ஸ்கீம், ஒரு லட்சம் வீடுகள் திட்டத்தின்கீழ் எங்கள்
பகுதியில் 23 வீடுகள் கட்ட ஆரம்பித்தார்கள். அதை சீக்கிரம்
முடியுங்கள் என்று சொன்னோம். அந்த வீடுகளில் இருக்கவேண்டிய
முதியவர்கள் நான்கு வீடுகள் தவிர 19 வீடுகளைச் சேர்ந்தவர்கள்
பஞ்சத்திற்குப் பிழைக்கப் போய்விட்டார்கள். அவர்கள் திரும்ப
வருவது என்பது உறுதியில்லை. அவர்கள் திரும்ப வருவார்கள்
என்று சொல்ல முடியாது. 19 பேர்கள் ஊரைவிட்டுப் போய்விட்
டார்கள். நான்கு பேர்கள்தான் இருக்கிறார்கள். 23 வீடுகளுக்கு
உடைய உரிமையாளர்களில் 19 பேர்கள் ஊரை விட்டு ஓடிப்போகக்
கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சம்பவங்கள்
பல்வேறு இடங்களில் நடைபெற்றிருக்கின்றன. ஓட்டப்பிடாரம்,
சங்கரன்கோயில், கோவில்பட்டி, விளாத்திக்குளம் தாலுகாக்
கள் நாங்குனேரியில் ஒரு பகுதி ஆகியவைகளெல்லாம் பாதிக்கப்
பட்டிருக்கின்றன. தாம்பரபரணி ஓடுகின்ற இடங்கள், காவேரி
ஓடுகின்ற இடங்கள், கால்வாய் ஓடுகின்ற இடங்களைத் தவிர மீதி
இடங்களெல்லாம் மழை இல்லாத காரணத்தினால் மிகவும்
பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மற்றவர்கள் விஷயம் வேறு. பழைய தான்யத்தை வைத்
திருப்பார்கள். அடுத்த தை மாதம் வரையில் வீட்டிற்கு வேண்டி
யதை வைத்திருப்பார்கள். ஆனால், விவசாயக் கூலிகளுடைய
நிலைமை வேறு. அவர்களுக்கு வேலை இல்லை. நடவு வேலை
இல்லை. அறுவடை வேலை இல்லை. களை வெட்டுகின்ற வேலை இல்லை.
விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடையாது. பழைய
தானியம் அவர்களிடத்தில் இல்லை. அரிசி விலை ரூ. 7,
தான்யம் விலை ரூ. 3.50, கேழ்வரகு ரூ. 3.50 ஆகிவிட்டது. அவர்
களுக்கு கூலி ரூ. 3, எப்படி அவர்கள் ரூ. 4, 4.50-க்கு வாங்கு
வார்கள்? அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்
கிறது.

தீபாவளிக்கு மக்கள் எப்படி ஜவுளி வாங்கினார்கள் என்பது
எல்லோருக்கும் தெரியும். கைத்தறி துணியும் விற்கவில்லை, மில்
துணியும் விற்கவில்லை. வியாபாரத்தில் மந்தம் ஏற்பட்டு, கைத்
தறித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், மில்களை மூடக்



1974 டிசம்பர் 12] [திரு. சோ. அழகர்சாமி]

கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுதும் உணவுப்
பொருள் விலை உயர்ந்திருக்கிறது. சென்ற வருஷம் மழை
பெய்தது. அப்பொழுதே படி அரிசி ரூ. 7. இப்பொழுது
மழையே இல்லை, படி ரூ. 70-க்குக் கூட போகலாம் என்று எச்சரிக்
கிறேன். படி அரிசி ரூ. 7 விற்கிறது என்றால், கள்ளக்
கடத்தல் நடந்திருக்கிறது. குஜராத்துக்கு அரிசி போயிருக்
கிறது, கர்நாடகத்திற்கு அரிசி போயிருக்கிறது. கேரளாவிற்கும்,
மற்ற மாநிலங்களுக்கும் அரிசி போயிருக்கிறது. ஆந்திராவில்
இன்று படி அரிசி ரூ. 2.50 விற்கிறது, மைசூரில் ரூ. 3.50 விற்கிறது.
போன வருஷம் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்
பொழுது ஆந்திரா, கர்நாடகத்திலுள்ள விலையை விட
நம்முடைய விலை குறைவு என்று கூறினார். இன்றைக்குத் தமிழ்
நாட்டில் நிலைமை என்ன? அங்கெல்லாம் ரூ. 2.50, 3.50 என்று
விற்கின்றபொழுது தமிழ் நாட்டில் ரூ. 7 விற்கிறது. விளைந்த அரிசி
எங்கே போய்விட்டது? மக்களைப் பட்டினி போட்டுச் சாகடிக்கக்
கூடாது.

இது பற்றி சகல அங்கத்தினர்களுக்கும் ஆளும் கட்சி அங்கத்தி
னர்களும் கூட மனம் விட்டு பேசவேண்டும். இதற்குக் காரணம்
என்ன என்பதைக் கண்டுபிடித்தாக வேண்டும். இருக்கிற அரிசி
யையாவது எப்படி விநியோகிக்கவேண்டும், எல்லோருக்கும்
கிடைக்கும்படிச் செய்யவேண்டும் என்பது பற்றி மனம் விட்டு
பேச வேண்டும். மக்களுக்கு அரை வயிற்றுக்காவது சோறு
போடவேண்டும். என்ன செய்தால் அது சாத்தியப்படும் என்பது
பற்றி எல்லோரும் மனம் விட்டு பேசவேண்டும். இதற்குச்
சபையின் இதர அலுவல்களை ஒரு நாள் ஒத்திவைத்தால் கூட
போதாது. இரண்டு நாட்களுக்காவது ஒத்திவைத்து விவா
தித்து, தமிழக மக்களைப் பட்டினி போட்டு சாகடிக்கக் கூடாத
அளவுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஆகவே,
இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி
விவாதிப்பது மிகமிக அவசியம் என்பதை வலியுறுத்தி,
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

சபாநாயகர் அவர்களே, இந்தப் பொட்டலங்களை நான் உங்க
ளிடம் ஒப்படைக்கிறேன். இதிலே நான் கூறியபடி மக்கள்
சாப்பிடுகின்ற தானியம், கிழங்கு இருக்கிறது.

**திரு. கே. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இன்று இந்த சட்டப் பேரவையின்முன் நாட்டிலுள்ள ஒரு மனிதாபிமானப் பிரச்னை, அதாவது உணவுப் பிரச்னை எழுந்துள்ளது. அது குறித்து . . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சட்ட மன்றத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அவர்களுடைய பேச்சுக்கு ஆதாரமாக பொருட்களை வெளியிடுவது கூடாது என்று ஏற்கனவே பல முறை இந்த மன்றத்திலே முடிவு செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் இப்படி பொருட்களை 'எக்ஸிபிட்' செய்வது, அவைகளை காட்டுவது முறை தானா?

(சில உறுப்பினர்கள் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று கூறி எழுந்தார்கள்.)

Mr. CHAIRMAN (Dr. K. Nagarjan): I have not yet given my ruling (Interruption by Thiru V. Krishnamurthi) I think he wants to tell something supporting the point of order. Thiru Ponnappa Nadar.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மன்றத்தில் ஒழுங்குப் பிரச்னையை கிளப்பி யிருக்கிறார்கள். இந்த உறுப்பினர் உயர்திரு ஆறுமுகசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சில பொருட்களைக் கொண்டு வந்து அவைகளை வேண்டுமானால் சபாநாயகரின் அனுமதியோடு சபைக்குக் காட்டலாம் என்று தெரிவித்தார்கள். அவர்களுடைய பேச்சு முடிந்தபிறகு அந்தப் பொருட்களை அவர்கள் தங்களுடைய கைகளில் ஒப்படைத்திருக்கிறார்கள். இம்மாதிரியான நிகழ்ச்சி முன்பு நடந்திருக்கிறது. நாங்களெல்லாம் இன்று ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்திலே 'உங்களுடைய அமைச்சரவையிலே இருந்து இப்பொழுது உங்கள் கட்சியில் இருக்கிற உயர்திரு மதியழகன் அவர்கள் இட்லி இளைத்துப் போய்விட்டது என்று சட்டமன்றத்தில் இட்லியை காண்பித் தார்கள். அப்பொழுது அது சம்பந்தமாக பிரச்னை எழுப்பப்





பட்டு, அவர்கள் அப்படி காட்டுவதற்கு உரிமை இருக்கிறது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. [illegible] அப்பொழுது அந்த உரிமை இருந்தால் இப்பொழுதும் எதிர்க்கட்சி உறுப் பினர்கள் எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது. தங்களுடைய ஆதாரத்திற்காக அவர்கள் அந்தப் பொருள்களைக் காட்டுவதில் எந்தவிதமான தவறும் இல்லை. அதைப்பற்றி இவ்வளவு 'டென்ஷன்' இருக்க வேண்டியதில்லை. [illegible] விறு விறுப்பாக போகக்கூடிய இந்த அரசின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்யக்கூடிய திரு. கிருஷ்ணமூர்த்தியைப் போன்ற உறுப்பினர் அவர்கள் இம்மாதிரி பிரச்னையை கிளப்பியிருக்கி றார்கள் என்பது [illegible] இருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் இந்தப் பொருள்களைக் காண்பிப்பதில் எந்த விதமான தவறும் இல்லை என்று என்னுடைய கருத்தை தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு [illegible])

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** [illegible] அவர்கள் அப்பொழுது உறுப்பினராக இருந்த பொழுது நான் இங்கே உறுப்பினராக இருந்திருக்கிறேன். அவர்கள் [illegible] இட்லி இளைத்துப் போய்விட்டது என்று காட்டிய சமயத்தில், அப்பொழுது அது விரும்பத்தக்கது இல்லை. அது மாதிரி செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்பினேன்.

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்):** மாண்புமிகு உறுப்பினர் தாங்கள் அதே பாயின்ட் [illegible] பேசப்போகிறீர்களா அல்லது வேறு பாயின்ட் ஆப் ஆர்டரா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்தப் பிரச்னையில் எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. [illegible] பகுதியிலே அன்ன ஆகாரமில்லாமல் [illegible] என்பதைச் சொல்லி, புல்லிச்சி சாறைக் கிழங்கை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறி அந்தப் பொருள்களை காட்டு வதற்கு தங்களை உத்தரவு கேட்டு, பிறகு நான் கொடுத்திருக்கி

றார்கள். ஏற்கனவே திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொல்லியதுபோல, அவையிலே அம்மாதிரி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் அனுமதித்தது சரி என்றுதான் சொல்கிறேன். அதை உறுப்பினர்களுக்குக் காட்டுவது பற்றி நீங்கள் முடிவு செய்யலாம். உங்களுக்கு சரி என்று பட்டால் நீங்கள் அவைகளை உறுப்பினர்களுக்குக் காட்டலாம்.

Dr. H. V. HANDE : Mr. Chairman, the hon. Member Thiru Krishnamoorthi objects to evidence being produced. ஆதாரத்தை இங்கே கொண்டுவந்து காட்டக் கூடாது என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் நாங்கள் குற்றங்குறைகளை சொல்கின்றபொழுது ஆதாரம் உண்டா, ஆதாரத்தைக் காட்ட வேண்டும் என்று சொல்வார்கள். உதாரணமாக, புல் அரிசியை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு ஆதாரம் இருக்கிறதா, எப்படிப்பட்ட அரிசி, ஆதாரம் எங்கே என்று கேட்பார்கள். ஆதாரத்தைக் காட்டினால், அதைத் தடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நாங்கள் ஆதாரம் இல்லாமல் பேசக் கூடும். தாங்கள் கொடுக்கக்கூடிய தீர்ப்பு, 'புரூஃப்', ப்ரொட்யூஸ் பண்ணலாமா, கூடாதா என்பதைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

ஆதாரங்களைக் கொடுப்பதைப் பொறுத்தவரையிலே திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே பொருள்களைக் கொண்டு வந்திருப்பதை பொட்டலத்தோடு காண்பித்தார்கள். உள்ளே இருப்பதை சபையில் எடுத்துக் காட்டவில்லை. அதைக் காட்டக் கூடிய வாய்ப்பை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். சபையிலே அமர்ந்திருக்கக்கூடிய சபாநாயகராக இருந்தாலும், துணைத் தலைவராக இருந்தாலும், வேறு தலைமை தாங்கக்கூடிய உறுப்பினராக இருந்தாலும் அனுமதி கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அனுமதி கொடுங்கள் என்று சொல்வதற்கும் உரிமை இருக்கிறது.

The Chairman has the right and prerogative to give permission to the member to demonstrate it and that right vests with you, Sir.

தாங்கள் கொடுக்கலாம் என்று விரும்பினால் கொடுக்கலாம், விரும்பாவிட்டால் கொடுக்காமல் இருக்கலாம். நீங்கள் அனுமதி கொடுத்திருக்கிறீர்கள்.

We thank you for allowing him to give it to you.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நம்முடைய மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் பொருள்களை உங்களிடம் தந்திருக்கிறார்களே தவிர, மன்றத்தில் பிரித்துக் காட்டவில்லை என்பதை அனைவரும் அறிவார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்):** டாக்டர் ஹாண்டே அவர்கள் அதே பொருளை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் புதியதாக ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் கூறலாம்.

**திரு. கோவை செழியன்:** இன்றைக்குள்ள நிலைமை என்னவென்றால், நாங்கள், பல சட்டமன்ற உறுப்பினர்கள் முக்கால்வாசிப் பேர்கள் கிராமப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு வந்த பிரதிநிதிகளாவோம். எங்களுடைய கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுக்காவில் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்):** இதைப் பற்றி ஒரு பிரசங்கம் நிகழ்த்தக்கூடாது. இந்த பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியிருக்கிறார். அதைத் தவிர வேறு ஏதாவது புதியதாகக் கூற வேண்டுமென்றால் கூறலாம்.

**திரு. கோவை செழியன்:** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வேறு பல நேரங்களில் அரசாங்கத்தைத் தாக்கிப் பேசுவதால், இப்பொழுது அவர்களை 'பிளீஸ்' பண்ணுவதற்கு இங்கே இப்படி பேசுவார். அது வேறு விஷயம். . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்):** The hon. Member is not speaking pertinent to the point. மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு அவர்களுடைய கருத்தைக் கூற உரிமை இருக்கிறது. நீங்கள் கூற விரும்புவதைக்

கூறிவிடுங்கள். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எவ்வாறு அப்படிக் கூறலாம் என்பதையெல்லாம் தலைவரின் பொறுப்பிற்கு விட்டு விட வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே, மக்கள், தங்கள் வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்காக, எதையாவது தின்று, அதனால் பாதிக்கப்பட்டு, அவர்கள், ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். பண்ணை விதை போன்றவைகளை அவர்கள் உட்கொள்கிறார்கள். இந்த நாட்டில் உணவு நிலைமை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை பொது மக்கள் தெரிந்து கொள்வதற்கும், இந்த அவை அறிந்து கொள்வதற்கும், அவ்வாறு உட்கொள்ளப்படுகிற பொருள்கள் இவை, என்பதை உறுப்பினர்கள் இங்கே காட்டுவதற்காகக் கொண்டு வந்தது, கொடுத்தது எந்த விதத்தில் தவறு என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்) :** 'தவறு, தவறு அல்ல' என்று யார் உங்களிடம் கூறியது? நான் இன்னும் என்னுடைய தீர்ப்பைக் கூறவேயில்லையே. I have not yet given my ruling.

**திரு. கோவை செழியன் :** நாட்டு மக்கள் எத்தகைய பொருள்களைச் சாப்பிடுகிறார்கள் என்பதை உங்கள் மூலமாகவே, நீங்களே உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்டுங்கள் என்று கூறி, உங்களிடம் தான் கொடுத்திருக்கிறாரே தவிர, அவராகவே எடுத்துக் காட்டவில்லை. அந்தப் பொருள்களை எங்களுக்கும் காட்டுங்கள், உணவு நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை நாங்களும் தெரிந்து கொண்டுள்ளதால், அந்தப் பொருள்கள் என்னென்ன என்பதை நாங்களும் தெரிந்து கொள்கிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்) :** சபாநாயகரிடத்தில், இதுவரை, இவ்வாறு பொருள்களைக் கொடுத்ததாக மரபு இல்லை. விரும்பினால், உறுப்பினர்கள், அத்தகைய பொருள்களை, சபாநாயகரிடத்தில், சபாநாயகர் அறையில் காட்டலாம். உறுப்பினர்கள், பொருள்களை, சபாநாயகரிடத்தில், சபையில், கொடுத்தது, இதுவரை நடந்ததில்லை. ஏற்கனவே, 1966 ஆம் ஆண்டு, இந்த அவையில்,





சபாநாயகரால் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. "No member should exhibit any article in the House except with the previous permission of the Chair." என்று சபாநாயகரின் அனுமதியின் பேரில் தான், பொருளைக் காட்டவேண்டும். எனவே, There is no point of order.

**திரு. கே. கந்தசாமி :** எதிர்பாராத வகையில், இயற்கையின் ஒத்துழைப்பு இன்மையால், பருவ மழை தவறி இருக்கிறது. காவிரி ஆற்றிலும் தண்ணீர் இல்லை. புஞ்சை தானியங்களின் விளைச்சலும் குறைந்து போய்விட்டது. இத்தகைய நிலையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு வறட்சி ஏற்பட்டு விட்டதினால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்) :** குறுகிய கால அளவே உள்ளதால், தயவு செய்து உறுப்பினர் அவர்கள், ஏற்கனவே சொல்லப்பட்டதைக் கூறாமல், புதிதாக, அவர்களுடைய கருத்தைச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** நானும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். மனித உயிர் பாதிக்கப்படும் பிரச்னை இது, என்பதற்காக ஓரிரண்டு வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

இந்த வறட்சி நிலை எங்கள் பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, உசிலம்பட்டி, மதுரை, வட மதுரை, சேடப்பட்டி, திருமங்கலம் பகுதிகளில் மிக மோசமான வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மாதிரி நிலை நீடித்தால் மக்கள் எந்த நிலையை அடைவார்கள் என்று சொல்ல முடியாது. மக்கள் உணவு இல்லாமல். . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்) :** சபையை ஒத்திவைப்பதற்கான தீர்மானம் பற்றி இங்கே விவாதம் நடைபெறுகிறது. அதை ஒட்டிப் பேசுவது நல்லது. நாட்டில் உள்ள நிலைமைகளைப் பற்றி இப்போது விவரித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

[1974 டிசம்பர் 12

**திரு. கே. கந்தசாமி:** நாட்டில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதற்கு பரிகாரம் காணுங்கள் என்று இரண்டே வார்த்தைகளில் பேசி விட்டால், நீங்கள் இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தைத் தள்ளிவிடுவீர்கள். அதற்காகத் தான் ஒரு சிறிது விளக்கமாகக் கூறுகிறேன். ஆனாலும் சுருக்கமாகத் தான் கூறி வருகிறேன். நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த வறட்சி நிலைமை, மக்களிடையே ஒரு பெரும் திகிலை எழ வைத்துள்ளது. இனிமேல், சட்ட மன்ற உறுப்பினர்களோ, எதிர்க்கட்சித் தலைவர்களோ, அமைச்சர்களோ, எவரும், கிராமப்புறங்களில், பொதுக் கூட்டங்களில் அரசியல் பேச முடியாத நிலை வந்து விடும் போல இருக்கிறது. இவர்களை எல்லாம், பசி மிக்க மக்கள் சக்தி, அனுமதிக்குமா என்று நான் பயப்படுகிறேன். மக்கள், எவ்வளவு நாள் தான் உயிரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பார்கள்? இப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடுமென்பதற்கு முன் உதாரணமாக நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். திருமங்கலத்தில், விளைச்சல் கண்டிருந்த ஒரு வயலை நான்கு பேர் காவல். . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** A point of order. தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, அங்கே அமைச்சர்கள் அதிகாரிகளோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது சரிதானா, என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்):** அமைச்சர் அதிகாரிகளுடன் பேசுவது இதுவரை அனுமதிக்கப் பட்டுள்ளது. இந்த அவையில் வெளி ஆட்கள் எவரையும் அனுமதிக்கவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** On a point of order.

1967 ஆம் ஆண்டு இதுமாதிரி ஒரு பிரச்னை கிளப்பப்பட்டது. உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, மற்றவர்கள் பேசிக் கொண்டிருக்கக் கூடாது என்று. அப்போது இருந்த தலைவர்,

He pulled up the Member at that time. The Hon. Member Thiru K. T. K. Tangamani wants to know whether that ruling applies to Hon. Ministers also. Now two Ministers are talking to officials in the Officer's gallery. I want to know whether it would apply to the Hon. Ministers also.



1974 டிசம்பர் 12]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்):** ஒருவர் பேசுவது முறையா, இருவர் பேசுவது முறையா என்பது அல்ல பிரச்னை. அமைச்சர், அதிகாரிகளிடத்தில், கருத்து தெரிந்து கொள்ள பேசலாம்.

DR. H. V. HANDE: Then, the entire cabinet can talk to the officials in the gallery.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரு அமைச்சர், தகவல் அறிய, அதிகாரிகளிடத்தில் பேசலாம். ஆனால், நீண்ட நேரம் விவாதிக்கத் தேவையில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** நாலு வயல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அப்போது 8 பேர் அவர்களைக் கம்பால் பிடித்து, அமுக்கி, வைத்துக் கொண்டார்கள். 100 பேர் வரை அந்த வயலில் இருந்த நெல்லை அறுத்துக் கொண்டு போய் விட்டார்கள். எங்களைப்போல் நீங்களும் தொழிலாளிகள். உங்களுக்கு ஆபத்தை உண்டாக்க நாங்கள் விரும்பவில்லை. எனவே, உயிரோடு விட்டு விடுகிறோம். ஆனால் இங்கு நடந்ததை யாரிடமும் சொல்லக்கூடாது என்று மிரட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். நான் உங்களுக்கு இதை ஏன் சொல்ல வந்தேன் என்றால்,

This is a very grave and serious situation. The law and order problem has arisen. It is a period of crisis and the Government can declare National Emergency.

என்பதற்காகத் தான். ஒரு அவசர காலம் என்றால் மற்ற எல்லாவற்றையும் தள்ளிவிட்டு, அந்தக் காரியத்திற்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கிறோம் அல்லவா. அது மாதிரி இந்த மனித உயிர்களை எவ்வாறு காப்பது என்பதை முதலில் கவனிக்க வேண்டும். இதைத்தான் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். ஆகவே, கலைஞர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும், அரசு, உணவு வியாபாரத்தை ஏற்று நடத்த இருக்கிறது என்று கொடுத்த அறிக்கையை, நான் மிகவும் வரவேற்கிறேன். மாகாணம் முழுதும், கிராமப்புறங்கள் பூராவும் ரேஷன் ஏற்பாடு செய்ய வேண்டும்.

Compulsory ration should be introduced. பீரியட் ஆஃப் கிரைசிஸ் என்று அறிவித்து, மத்திய அரசிடம் அதற்கு உதவி பெற்று மக்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிக விலை கொடுத்துக் கூட, உதாரணமாக ரூ. 5-க்கு வாங்கி ரூ. 2½-க்கு விற்றால் கூட கவலை இல்லை. சப்சிடைஸ்ட் ரேட்டில் விற்கலாம். பின்னால் நல்ல விளைச்சல் வரும் போது, அவர்கள் உயிர் பிழைத்த பிறகு, அவர்கள் உயிரைக் காப்பாற்ற அரசு செலவு செய்ய வேண்டியிருந்ததை எடுத்துக் காட்டி, நஷ்டத்தை ஈடுபடுத்திக் கொள்ள வரி போட்டால், மக்கள் அதற்கு ஒப்புக்கொள்வார்கள். எனவே, இப்படிப்பட்ட ஒரு முக்கியமான நிலையை கவனத்தில் கொண்டு பஞ்ச நிலை, உணவு நெருக்கடி நிலையை மனதில் கொண்டு, அதைப்பற்றி விவாதிக்க இந்த சபையை ஒத்திப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(நண்பகல் 12-00)

**திரு. கா. காளிமுத்து :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இங்கே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தமிழ்நாடு முழுவதும் வறட்சிநிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். இருந்தாலும் அந்த வறட்சி நிலையின் உச்சகட்டமாக இராமநாதபுரம் மாவட்டம் பஞ்சத்தினால் தாக்கப்பட்டிருக்கிறது. பட்டினிச் சாவுகள் இப்போதே ஆரம்பமாகி இருக்கின்றன என்பதை மிகுந்த மன வேதனையோடு இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலைமையில் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான கண்ணோட்டத்தோடு அனைத்துக் கட்சிகளும் அணுகிப் பார்க்க வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வறட்சி ஏற்பட்டிருக்கிறது; அதை வறட்சி நிவாரணம் என்று கவனித்தால் போதும்; பஞ்சம் என்பது வெறும் வார்த்தை என்பதாக நம்முடைய முதலமைச்சரவர்கள் கருத்து தெரிவித்திருந்ததாகப் பார்த்தேன்.



முகவை மாவட்டத்தில் ஆரம்பத்தில் வறட்சி ஏற்பட்டிருந்தது. இப்போது ஏற்பட்டிருப்பது வறட்சி அல்ல; பஞ்சம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல ஒவ்வொரு மாவட்டத்திலுள்ளவர்களும், குறிப்பாக கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் 10 பேர், 15 பேர் என்ற அளவில் கூட்டங் கூட்டமாக அறுவடைக் காலங்களில் தஞ்சை மாவட்டத்திற்குச் செல்வதுண்டு. அவர்கள் அறுவடைக் காலத்தில் அங்கே வேலை செய்து ஒருவர் 100 ரூபாய், 200 ரூபாய் பெற்று திரும்புவார்கள். இப்போது அந்த கிராமங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. வேறு வழி இல்லாமல் முக்கால் பகுதி மக்கள் தஞ்சை மாவட்டத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். எப்போதும் ஆதரவளித்து வந்த தஞ்சை மாவட்ட மக்கள் இப்போது ஆதரவளிக்கும் நிலைமையில் இல்லை. ஆகவே, அங்கே போனவர்கள் திரும்புவதற்கு வழியில்லாமல், அவர்களிடம் பஸ் சார்ஜ் கூட இல்லாமல் சாலை ஓரங்களிலே பிச்சை எடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் அழகர்சாமி அவர்கள் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் என்ன சாப்பிடுகிறார்கள் என்பதை இங்கே காண்பித்தார்கள். இந்த மன்றத்தை அவமானப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அதைக் காட்டவில்லை. மாண்புமிகு அமைச்சர்களுக்கு அங்கே என்ன சாப்பிடுகிறார்கள் என்பதைக் காண்பிப்பதற்காகவே காட்டினார்கள். குசேலர் கண்ணனுக்கு அவல் கொண்டு வந்ததைப்போல அங்குள்ள ஏழை எளிய மக்கள் இதைத்தான் சாப்பிடுகிறார்கள் என்பதை இங்கே காட்டினார்கள். அமைச்சர்கள் மட்டத்தில் அதை சுவை பார்த்த பிறகாவது அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு நல்ல காலம் பிறக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டினிச் சாவு இருப்பதாகத் தகவல் இல்லை என்று முகவை மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சிவகங்கையில் உள்ள ஒரு கிராமத்தில் ஒருவர் இரண்டு படி அரிசி வாங்கி வைத்திருந்தார். அவருக்கு 4, 5 பிள்ளைகள் உண்டு. அந்த பிள்ளைகள் பட்டினி காரணமாக அரிசியைச் சாப்பிட்டுவிட்டார்கள். அதனால் மனவருத்தமடைந்த பெரியவர் மூட்டைப் பூச்சி மருந்தைச் சாப்பிட்டு இறந்துவிட்டார்.

[திரு. கா. காளிமுத்து] [1974 டிசம்பர் 12

குடிப்பதற்கு தண்ணீர் கூட இல்லை. முதுகுளத்தூர் வட்டாரத்தில் உள்ள மக்கள் 4, 5 மைல்களுக்கு அப்பால் சைக்கிளில் போய்—இளைஞர்கள்தான் போக முடிகிறது—2, 3 குடங்கள் தண்ணீர்கொண்டு வருகிறார்கள். அதைத்தான் குடிப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள்.

இப்போது 5 கோடி ரூபாய் இருந்தால் இந்தப் பஞ்சத்தை சமாளித்துவிடலாம் என்று கருத முடியாது. முகவை மாவட்டத்திற்கு மட்டுமே இது போதாது. மிகக் குறைந்த விலைக்கு அரிசியைப் போட்டால் கூட—படி அரிசி ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று போட்டால் கூட அதை வாங்கிச் சாப்பிட முடியாத நிலையில் மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக கஞ்சித் தொட்டி திறந்து, இப்போது ஏற்பட்டிருக்கும் பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 9-ம் தேதி மதுரையில் அனைத்துக் கட்சிகளும் ஒன்று கூடி, முகவை மாவட்டத்தில் கட்சிக்கு அப்பாலுள்ள மக்கள் கூட அதில் கலந்து கொண்டார்கள்—மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பம் கொடுத்தார்கள். 25,000 மக்களுக்கு மேல் அதில் கலந்துகொண்டிருந்தார்கள். அதையும் அரசு கவனத்தில் கொண்டு பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசிடத்தில் எவ்வளவு கோடி ரூபாய் வாங்க முடியுமோ அவ்வளவையும் வாங்கி, இந்தப் பஞ்சத்தைச் சந்திக்க வேண்டும். அப்படி வாங்குகின்ற பணம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களால் மட்டும் நிவாரண வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நிலை இல்லாமல் ஒவ்வொரு ஒன்றியத்திலும் அனைத்துக் கட்சிக் குழு அமைத்து, அந்தக் குழுவின் மூலம் பணிகள் தொடங்கப்பட வேண்டும்.

இப்போது ஏற்பட்டிருக்கிற வறட்சியால், பஞ்சத்தால் மக்கள் மிகக் கடுமையான நிலையை அடைந்திருக்கிறார்கள். ஆகவே, எந்தக் கட்சியாக இருந்தாலும்—ஆளும் கட்சியாக இருந்தாலும் அல்லது எதிர்க் கட்சிகளாக இருந்தாலும்—ஆடம்பரமான விழாக்களை நிச்சயமாக நடத்தக் கூடாது. ஒரு பகுதி மக்கள் அவதியால் அல்லல்படும்போது ஒவ்வொருவரும் அதை மனிதாபிமானத்தோடு சிந்தித்துப் பார்த்து, எளிய முறையில் சாப்பிட வேண்டும். நாம் சாப்பிடுகின்ற ஒவ்வொரு பருக்கையும் ஏதோ ஒரு கிருமியைப் போல் நம்முடைய கண்ணுக்குத் தெரியவேண்டும். மனிதாபிமா



1974 டிசம்பர் 12] [திரு. கா. காளிமுத்து]

னத்தோடு இதை அனைவரும் சிந்திக்க வேண்டும். ஒருமுறை உணவைக் குறைத்துக் கொண்டாவது அவதிப்படும் மக்களுக்கு உதவ வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த முறை நிவாரணப் பணிக்குப் பணம் ஒதுக்கப்பட்ட போது ஒரு குறிப்பிட்ட கட்சியினரிடம் ஒப்படைக்கப்பட்டதால் பல தவறுகள் நடந்துவிட்டன. அப்படிப்பட்ட தவறுகள் மேலும் நடக்காமல் இருக்க அனைத்துக் கட்சிகளிடமும் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். பஞ்ச நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது அதில் லஞ்சம் கலக்குமானால், அதைப் போன்ற அமோகம் வேறு எதுவுமில்லை. ஆகவே, எந்த விதத்திலும் தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது திருப்பத்தூர், திருவாடானை, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளில் பெருமளவில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அவைகளைப் பற்றி விரிவாக விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மாண்புமிகு தலைவர்வர்களே, தங்களுடைய அனுமதியின் பேரில் இந்த மாமன்றத்தில், நாங்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்தை முதலில் படித்து விட்டு, அதை எப்படி பரிபூரணமாக விவாதிக்க வேண்டுமென்பதற்கான கருத்துக்களை அடுத்தபடியாகக் கூற முற்படுகிறேன்.

"the unprecedented drought in various districts of Tamil Nadu and the prevailing scarcity of drinking water, the distress sale of cattle on account of famine resulting in starvation deaths in the Ramanathapuram district and other places. The prices of foodgrains has also reached the peak prices and it is not available in Municipal Towns and in the mofussil area and the distribution of foodgrains at fair and reasonable prices by Governmental agency is indispensable."

என்ற கருத்தை வலியுறுத்துகின்ற முகத்தான் இந்தத் தீர்மானத்தை இங்குக் கொண்டு வந்திருக்கிறோம். இது எப்படி

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 12

பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துக் கூறுவதோடு, என்னுடைய கருத்துக்களுக்கு ஆதாரமாக ஒன்றி ரண்டு சான்றுகளையும் கூற விரும்புகிறேன்.

இப்போது வரலாறு காணாத முறையில் தமிழ்நாட்டில் மழை பொய்த்ததன் காரணமாக பல பகுதிகள் பஞ்சத்தால் பாதிக்கப் பட்டிருக்கின்றன. அண்மையில் நாங்கள் பத்திரிகையில் பார்க்கும் போது இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிற பஞ்சத்தைப் பற்றி, இவ்வளவு கடுமையான, இவ்வளவு கொடுமையான பஞ்சமாக இருக்கிறது என்று பல படங்களைப் போட்டிருந்தார்கள். அதிலும் குறிப்பாக இன்று வறட்சி நிலை இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமின்றி, திருநெல்வேலி போன்ற தென் மாவட்டங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. அதே மாதிரி தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கிறது.

இப்போது வடாற்காடு மாவட்டத்தில் பல பகுதிகளில் வறட்சி காட்சியளிக்கிறது. இப்படிப் பார்க்கும்போது அரசாங்கத் தரப்பில் இருந்து 5 கோடி ரூபாய் இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்கு தற்காலிகமாக போதும் என்று கருதுவது எந்த வகையிலும் போதுமானதல்ல. முதலமைச்சரவர்கள் 5 கோடி ரூபாய் செலவிடப்படுவதற்கான புள்ளிவிபரங்களை இந்த மன்றத் தில் தெரிவித்திருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் பார்த்தோம். ஆனால் இருக்கின்ற நிலைமையில் இது போதாது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"வறுமையே வெளியே போ" என்று கோஷம் போட்டால் போதாது. இப்போது ஏற்பட்டிருக்கும் பஞ்சம் பொது மக்களால், ஏழை எளிய மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதது. இன்றைக்கு பசுமைப் புரட்சியைப் பற்றி மாண்புமிகு விவசாய அமைச்சரவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்; இந்த மன்றத் திலும் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உற்பத்தி பெருகி, 73 லட்சம் டன் அரிசியும், தானியங்களும் உற்பத்தியாகி இருக்கிறது என்று புள்ளி விபரங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உண்மையிலே இந்தப் புள்ளிவிபரங்கள் வெறும் ஏட்டுச் சுரக்கா யாகத்தான் இருக்கின்றனவே அல்லாமல் மக்கள் பிரச்னையைத் தீர்ப்பவையாக இல்லை என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குற்றஞ் சாட்டுகிறேன்.



1974 டிசம்பர் 12] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அதிக அளவில் தானியங்கள் உற்பத்தி இருந்த போதிலும் சிறு தானியங்கள் நம்முடைய நாட்டிலிருந்து உருண்டோடிவிட்ட காரணத்தால் பஞ்சம் ஏற்பட்டு விட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டிலிருக்கிற மிகப் பெரிய பிரச்னை உணவுப் பிரச்னை. ஆகவே, பஞ்ச நிவாரணப் பணிக்கு இந்த அரசாங்கம் என்னென்ன காரியங்களைச் செய்யப் போகிறது என்பதைத் திட்டவட்டமாக, தெளிவாக அறிவிக்க வேண்டும்.

இப்போது இவ்வளவு கடுமையாக பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு அரசாங்கத்தின் நடைமுறையில் ஏற்பட்டிருக்கிற கணக்கம்தான் என்று நான் குற்றஞ்சாட்டு கிறேன்.

இந்தப் பஞ்சத்தைப் போக்குவதற்கு, உடனடியாகப் பஞ்ச நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு மத்திய அரசிடமிருந்து அதிகமாகப் பணம் பெற வேண்டும். பசித்து இருப்பவர்கள் காத்திருக்க மாட்டார்கள். இராமாயணம், இன்னும் மற்ற கருத்துக்களைக் கூறி, பொறுத்திரு, பொறுத்திரு என்று சொன்னால் நிச்சயமாக பசித்தவர்கள் காத்திருக்கமாட்டார்கள். புரட்சிக் கனல் வெடிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் உணரவேண்டும்.

இன்று நாட்டில் பல மாவட்டங்களில் குடிதண்ணீர் கிடைப்பது கூட கஷ்டமாக இருக்கிறது. ஒரு குடம் தண்ணீருக்கு 50 காசு கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதுவும் சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பது இல்லை. குடிதண்ணீருக்காக கோடானு கோடி செலவழிக்கப்பட்டபோதிலும் அதனால் போதிய அளவு பயன் ஏற்படவில்லை என்பதுதான் நாட்டிலுள்ள நிலைமை. உணவுப் பொருள் கிடைக்காத நிலைமையில். இப்படி குடிதண்ணீருக்குக் கூட வழியில்லாத நிலைமையில் மக்கள் அதிகநாள் அவதிப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. வறுமை காரணமாக பல குடும்பங்கள் சாகின்றனர். குறிப்பாக மூட்டைப் பூச்சி மருந்தைத் தின்று செத்தது கோயம்புத்தூரில் நான்குபேர் கொண்ட ஒரு குடும்பமே குறித்து பத்திரிகையில் வந்திருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மன்ற நிகழ்ச்சியைக் காண போலந்து நாட்டு நாடாளுமன்றத் தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும், மூன்று அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வந்திருக்கின்றனர். இந்தப் பேரவையின் சார்பில் அவர்களை நான் வரவேற்கிறேன். (கரவொலி)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : உணவுப் பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது திட்ட வட்டமாக அறிவிக்கப்பட வேண்டும்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் போலந்து நாட்டில் இருந்து வந்திருக்கக் கூடியவர்களை இங்கே வரவேற்றீர்கள். அதை ஆங்கிலத்தில் சொல்லிவிட்டால் அவர்களுக்கும் புரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்குப் புரியும். சொல்லியிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஓர் உறுப்பினர் இம்மாதிரி தலைவரிடம் ஒரு வேண்டுகோளை விடுவது அங்கத்தினருக்கு முறைதானா என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கனம் சபாநாயகர் அவர்களே, நாம் நம்முடைய தாய்மொழியில் பேசுவதே பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த மன்றத்தில் நான் எல்லோருக்கும் புரியக்கூடிய மொழியில் பேசுவது நல்லது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோவை செழியன் உங்களைப்பற்றிச் சொல்லவில்லை.

(திரு. கோவை செழியன் எழுந்திருந்தார்.)

நான் அதைச் சொல்லிவிட்டேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அவர்கள் போலந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்களுடையது போலிஷ் மொழி. ஆங்கிலத்தில் சொல்வதனால் புரியும் என்று சொல்ல முடியாது.



திரு. கோவை செழியன் : தயவு செய்து தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. நான் திரு. பொன்னப்ப நாடார் அவர்களைப் பற்றிச் சொல்லவில்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்னது பேரவைத் தலைவரைப் பற்றி, திரு. பொன்னப்ப நாடாரைப் பற்றி அல்ல என்று சொல்லிவிட்டேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : திரு. செழியன் விளக்கத்திற்கு நன்றி. உணவுப் பிரச்சினை சம்பந்தமாக இந்த அரசுக்குத் தெளிவாக கொள்கை இல்லை. எல்லாப் பகுதிகளுக்கும் ரேஷன் கொண்டு வரப்படுமா என்று தெரியவில்லை. கட்டாயக் கொள்முதலைப் பற்றி பல கருத்துக்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு மிகக் குறைந்த விலைதான் கொடுக்கப்படுகிறது. அதுவும் டூயல் ப்ரைஸ் பாலிசி என்பதாக மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலை ஒன்றாக இருக்கிறது—மாநில அரசு நிர்ணயித்த விலை ஒன்றாக இருக்கிறது. அரசாங்கம் விவசாயிகளிடம் 51 கிலோ நெல்லை 51 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து அமோகமான லாபத்தைப் பெற்று வருகிறார்கள். வாங்கும் விலைக்கும்—விற்பனை விலைக்கும் இவ்வளவு இடைவெளி இருக்க வேண்டுமா என்பதைப்பற்றி சிவில் சப்ளை இலாக்கா ஆலோசிக்கவேண்டும். 51 ரூபாய் என்று கொள்முதல் செய்கிறார்கள். சில பகுதிகளில் படி அரிசி 6 ரூபாய், சில பகுதிகளில் 7 ரூபாய், சில பகுதிகளில் 5 ரூபாய், சில பகுதிகளில் 4½ ரூபாய் என்பதாகவெல்லாம் விற்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்திற்கு இதுபற்றி திட்டவட்டமான கொள்கை இல்லை. விவசாயப் பெருங்குடி மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் 51 ரூபாய் கொடுக்கிற நெல்லின் விலை மற்ற பகுதிகளில் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

எங்கள் பகுதியில் 75 பட்டணம் படி கொண்ட ஒரு கோட்டை 190 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, இந்த அளவு நெல்லே ராதாபுரம் பகுதியில் 220 ரூபாய்க்கு வாங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். இவ்வளவு இடைவெளி எதற்காக?

என்னைக் கேட்டால் தஞ்சைத் தரணியில் உள்ளவர்களுக்கு இன்னும் கொஞ்சம் நெல்லின் விலையைக் கூட்டிக் கொடுப்பது பொருத்தமாகக்கூட இருக்கும். விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கொடுக்க வேண்டும். உரத்தின் விலையும், மற்ற மற்ற பொருள்களின் விலையும் உயர்ந்திருக்கிற நேரத்தில் ந

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 12

வாங்கிச் சாப்பிடுகிறவர்களையே நினைக்கிறோம். விவசாயிகளைப் பற்றி நினைப்பது இல்லை என்கிற கருத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது.

கரும்புக்கு விலை நிர்ணயிப்பதில்கூடச் சிக்கல் ஏற்பட்டிருக் கிறது. அவர்கள் 157, 147 ரூபாய் வரை கொடுக்க வேண்டும், இல்லையென்றால் பயிரிடுவது இல்லை என்ற தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

இதேமாதிரி நெல் பயிரிடுகிறவர்களும் ஒத்துழையாமை இயக் கத்தை ஆரம்பித்துவிட்டால் பிரச்சினை மோசமாகிவிடும். உடனடி யாக எல்லாப் பகுதிகளிலும் ரேஷனைக் கொண்டு வருவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். அரசே உணவு வாணிபத்தை எடுத்துக்கொண்டு, விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையைக் கொடுத்து; வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் மலிவான விலையில் கொடுக்க வேண்டும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று எழுதிப் போட்டுவிட்டால் மட்டும் போதாது, ஏழைகள் படுகிற அவல நிலையும், துன்பங்களும், துயரங்களும் துடைக்கப் பட்டாக வேண்டும், இதுபற்றி அரசாங்கம் உடனடியாகத் திட்ட வட்டமான கொள்கை வரையறுத்துக்கொண்டாக வேண்டும். இது அண்மையில் ஏற்பட்ட நிகழ்ச்சி; மிகமிக முக்கியமான நிகழ்ச்சி. ஆகவே, இந்த அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதித்தாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள் கிறேன். இல்லையெனில், நாட்டில் ஏற்பட இருக்கிற அத்தனை அசம்பாவிதங்களுக்கும் அரசே பொறுப்பு எற்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்று எச்சரித்து என் வார்த்தைகளை இதோடு முடித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, some more hon. Members have given notice of an adjournment motion covering the same points viz. mal-distribution of rice, scarcity of rice and other articles. The Hon. Speaker must give us also an opportunity to speak.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பெயரில் தனியாக ஒத்திவைப்புத் தீர்மானம் எதுவும் கொடுக்கப்படவில்லை,

'failure of monsoon and the consequent withering away of crops and scarcity of drinking water in most parts in Tamil Nadu'.



1974 டிசம்பர் 12] [பேரவைத் தலைவர்]

இந்தப் பொருள்பற்றி யார் யார் தீர்மானம் கொடுத்திருக் கிறார்களோ அவர்களது கட்சித் தலைவர்களுக்கு மட்டும் பேச அனுமதி அளித்தேன். இதுபற்றி உங்கள் கட்சித் தலைவர் பேசிவிட்டார். ஆகவே, அதே கட்சியின் சார்பில் இன்னொரு உறுப்பினருக்கும் பேச அனுமதி கொடுப்பதற்கில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கு எல்லா கட்சிகளுடைய தலைவர்களாலும் உறுப்பினர்களாலும் எடுத்து வைக்கப்பட்டுள்ள ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து, ஒருசில கருத்துக்களை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற தமிழகத்தினுடைய சூழ்நிலையில் எதிர்க்கட்சிகள் தாங்கள் சட்ட சபையிலே ஆற்றவேண்டிய கடமையை, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக மிகச் செம்மையாக அரசினுடைய கவனத்தைக் கவர்கின்ற வகையில் ஆற்றியுள்ளார்கள் என்ற நிலையில் நான் அவர்கள் அனைவரையும் பாராட்டுவதற்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் தோழமைக் கட்சி களானாலும், எதிர்க்கட்சிகளானாலும், அவர்கள் எடுத்துச் சொல்கின்ற சீரிய, செழுமிய கருத்துக்களை மனதிற்கொண்டு, அவைகளைச் செயல்படுத்த என்றைக்கும் தயங்கியதில்லை யென்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று, தமிழகத்தினுடைய நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் தொடக்கத்திலே பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் ஒரே வரியிலே மிகச் சுருக்கமாக எடுத்துச் சொன்னார் கள். ஒரு நூற்றாண்டுக் காலத்தில், இந்த ஆண்டைப்போல் மழை அதிக அளவில் குறைந்துவிட்ட ஆண்டு எப்போதுமே இருந்த தில்லையென்று அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே தான் இன்றைக்கு எழுந்துள்ள பிரச்சினையை நாம் நோக்கவேண்டி யவர்களாக இருக்கிறோம். இந்த ஆண்டுதான் மழை இல்லை, விளைவு குறைவு. உற்பத்தி குறைவு, சென்ற ஆண்டு விளைந்த அரிசியெல்லாம் என்ன வாயிற்று என்று நம்முடைய நண்பர் அழகர்சாமி அவர்கள் கேட்டு விட்டு, அவரே பிறகு தன்னுடைய பேச்சின் இறுதிப் பகுதியில் அவைகளிலே பெரும்பாலும் பதுக்கப்

பட்டிருக்கிறது, அவைகளையெல்லாம் வெளிக் கொணர இந்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

ஆகவே, சென்ற ஆண்டு நாம் தந்த புள்ளி விவரங்கள் தவறானவை என்று கூறுவதற்கில்லை. 1-7-1973 முதல் 30-6-1974 வரையில் நம்முடைய தமிழகத்தினுடைய அரிசி உற்பத்தி ஏறத்தாழ 55 இலட்சம் டன் என்று கணக்கிடப்பட்டு, நம்முடைய விவசாயத் துறையில் புள்ளி விவரம் 1974-ல் வெளியிடப்பட்டு, அது உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், பெரியவர்களுக்கு 400 கிராம் என்றும் குழந்தைகள், சிறுவர்களுக்கு 200 கிராம் என்றும் போதுமான அளவுக்கு அவர்களுக்கு உணவிற்கு அரிசி வழங்கப்படுமானால், அரிசி உணவு மாத்திரம் 57 இலட்சம் டன் தேவைப்படுகிறது. நம்முடைய உற்பத்தி நாம் தந்திருக்கிற கணக்கின்படி 55 இலட்சம் டன். தேவை 57 இலட்சம் டன், அதாவது 4½ கோடி மக்கள் என்கின்ற அந்த கணக்கின்படி, இந்த 57 இலட்சம் டன் தேவையில், கிடைத்தது 55 இலட்சம் என்று கணக்கிடும்போது, இயல்பாகவே 2 இலட்சம் குறைந்திருக்கிறது. இன்னும், அதிலே நம்முடைய மத்திய அரசினுடைய சென்ட்ரல் பூலுக்கு நாம் தந்தது 50 ஆயிரம், மற்ற மாநிலங்களுக்குச் சென்ற ஆண்டு நாம் வழங்கியது ஏறத்தாழ 50 ஆயிரம்—ஆக, அதிலே 1 இலட்சம் டன் ஆக, 3 இலட்சம் டன் இந்த வகையிலே சென்ற ஆண்டு நமக்குப் பற்றாக்குறையாக இருக்கிறது.

எல்லோரும் அரிசியேதான் உண்கிறார்களா என்கின்ற கேள்வியும் எழாமல் இருக்காது. சில பேர் சிறு தானியங்களையும் உப தானியங்களையும் உண்கின்ற பழக்க வழக்கங்களையும் கொண்டவர்கள் சில மாவட்டங்களிலே இருக்கத்தான் செய்கிறார்கள். சிறு தானியங்களுடைய உற்பத்தி சென்ற ஆண்டு நன்றாக இருந்த பொழுதுதான் நாம் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் மற்ற மாநிலங்களுக்கு இந்த மாநிலத்திலிருந்து சிறு தானியங்களைக் கொண்டு போகலாம் என்ற உத்தரவு மத்திய அரசின் சார்பாக அமுல்படுத்தப்பட்ட காரணத்தால், மற்ற மாநிலங்களுக்கு இங்கிருந்து சிறுதானியங்கள் எடுத்துப்போவது தடைப்படுத்தப் படாமல், மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கின்ற கதவுகள் திறக்கப்பட்டு, அப்பொழுதே பல தடவை எடுத்துச் சொன்னதைப்



போல், சிறு தானியங்களை உண்டு கொண்டிருந்தவர்கள், தவிர்க்க முடியாத காரணங்களால், அரிசி தானியத்திற்குச் சென்றதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

இவ்வளவுக்கும் அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், அரிசி இருக்கிறது, பதுங்கியிருக்கிறது என்று. அரிசி பதுங்கி யிருக்கிறது என்பதை நாம் மறுத்துவிடுவதற்கில்லை. அதை வெளிக் கொணர நாம் எடுத்திருக்கின்ற முயற்சிகளையும், அதிலே நாம் பெற்றிருக்கின்ற படிப்படியான வெற்றிகளையும் அவ்வப்போது பத்திரிகைச் செய்திகள் வாயிலாக அறிந்திருக்கிறோம். இந்த அவையிலும் அதற்கானப் புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறோம்.

கேரளத்தைப் பற்றிச் சொன்னார்கள். சில பேர்கள் எல்லாம் இங்கே எடுத்துக் காட்டினார்கள். இதிலே, அதையும் நாம் மறுத்திடத் தயாராயில்லை. அங்கே, நேற்றைக்கு முன்தினம்கூட அவர் சொன்னதால், நான் குறிப்பிடுகிறேன். ஒரு பெரிய பந்தே அரிசி பற்றாக்குறை, விலை உயர்வு ஆகிய காரணங்களுக்காக நடைபெற்று தடியடிப் பிரயோகம் எல்லாம் கேரள மாநிலத்திலே நடைபெற்றது என்கின்ற செய்திகள் ஏடுகளிலே வந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்திலே மாத்திரமல்லாமல், இந்தியாவிலே பல இடங்களில் நிலைமைகள் இவ்வாறிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதை அரசு அலட்சியப் படுத்தவோ அல்லது மறுக்கவோ விரும்பவில்லை.

ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் தொடர்ந்து நீங்கள் வழங்க இருக்கிற கருத்துக்களை நாங்கள் கணக்கிலே எடுத்துக் கொள்வோம். இதற்கு முன்பு எடுத்துச் சொல்லப்பட்டக் கருத்துக்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும், 10-ம் தேதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் அதிகாரிகளோடு கலந்து பேசியதிலும் பல முடிவுகளை மேற்கொண்டு அவைகளை எல்லாம் நிருபர்கள் கேட்டபொழுது, அவை இந்த அவைக்குத்தான் அறிவிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லா கட்சிகளின் சார்பிலே கட்சி சார்பற்ற முறையில், அந்த விவரங்களை நான் இங்கே அளிக்க விரும்புகிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 12

நம் மாநிலத்தில் உணவு நிலைமை கவலைக்கிடமளிப்பதாய் உள்ளதால் இம்மாமன்றத்திற்கு நிலைமையை விளக்கி மன்ற உறுப்பினர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். தென்மேற்குப் பருவமழை ஆறு வார காலம் தாமதமாக வந்ததால் பாதிப்பு ஏற்பட்டது. இந்த மழையை நம்பி நடக்கும் வேளாண்மை ஓரளவு பாதிக்கப்பட்டு, சாகுபடியாகும் நிலப்பரப்பு சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் வரை குறைந்துவிட்டது. வடகிழக்குப் பருவ மழையும் இதுவரையில் பொய்த்துவிட்டது. இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மாவட்டங்களில் பெரும் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பருவ மழை தவறியதின் காரணமாகச் சாதாரணமாகச் சம்பா சாகுபடியின் கீழ் வரும் 37 இலட்சம் ஏக்கராவுக்குப் பதிலாக 27 இலட்சம் ஏக்கராக்கள்தான் பயிரிடப்பட்டிருக்கின்றன. இதிலும் விளைச்சல் திருப்திகரமாக இராது. தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளிலும் மழையின்மையால் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. தாளடி பயிர் நிலைமையும் நம்பிக்கை ஊட்டுவதாய் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய் வாரிய உறுப்பினர்கள், மற்ற அதிகாரிகள் ஆகியோருடன் நாம் இந்நிலைமையைப் பற்றி விரிவான விவாதங்கள் நடத்தியுள்ளோம். நமது தற்போதைய மதிப்பீட்டின்படி உணவு தானிய உற்பத்தியில் பெரும் துண்டு விழும் என்று அஞ்சுகிறோம்.

2. நம்முடைய பிரச்சினையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, நம் தேவைகளை நிறைவு செய்ய, கோதுமை மட்டுமல்லாமல், அரிசியையும் சிறு தானியங்களையும் இயன்ற அளவு அதிகமாக ஒதுக்கித் தரவேண்டுமாய் மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டுள்ளோம்.

அதே சமயத்தில் கொள்முதலை தீவிரப்படுத்தவும், நியாயமான ஒழுங்கான விநியோகத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யவும் நாம் முடிவு செய்துள்ளோம். இந்த நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமானால், இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும், பெரிய, சிறிய நிலச்சுவான்தாரர்களும், கூட்டுறவு நிறுவனங்களும், அரசுக்கு முழு ஒத்துழைப்புத் தருவது இன்றியமையாததாகும்.



1974 டிசம்பர் 12] [டாக்டர் மு. கருணாநிதி]

3. அரிசி கொள்முதலை தீவிரப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

(1) கிணறு மற்றும் சிறிய நீர்ப்பாசன வசதி பெற்றுள்ள நிலங்களில் ஒரு ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களுக்கு 'லெவி' கொள்முதலிலிருந்து பூரண விதிவிலக்கு அளிக்கப்படும்.

(2) ஆற்றுப் பாசனத்தில் 50 சென்ட் வரை நிலம் வைத்திருப்பவர்களுக்கும் லெவி கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும். ஆற்றுப் பாசனத்தில் 50 சென்ட்டுக்கு மேலாக ஒரு ஏக்கரா வரை நிலம் வைத்திருப்பவர்கள், 75 கிலோ நெல்லை அரசாங்கக் கொள்முதலுக்குக் கொடுக்க வேண்டும்.

(3) ஒரு ஏக்கராவுக்கு மேலுள்ள நிலங்களைப் பொறுத்த வரையில் லெவி விகிதங்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(4) லெவி முறையின் கீழ் நிர்ணயிக்கப்படும் விலையில் விவசாயி கொடுக்க வேண்டிய நெல்லை, 'சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்' எல்லா பகுதிகளிலும் கொள்முதல் செய்யும். உபரிப் பகுதிகளில் மட்டும் லெவி முறையின் கீழ் கொள்முதல் செய்யப்படுகிற நெல் போக, உபரி நெல்லை அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாங்க ஏற்பாடு செய்யும். இந்தக் கூட்டுறவு சங்கங்கள் கொள்முதல் விலையை விட சற்று அதிகமாக விலையைக் கொடுத்து உபரி நெல்லை வாங்கும். இந்த உபரி பகுதிகளில் தனிப்பட்ட வியாபாரிகள் நெல் மொத்த வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. அடுத்து,—

(1) பற்றாக்குறைப் பகுதிகளில் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு அரசாங்க அமைப்பின் மூலம் இப்போது செய்யப்பட்டு வரும் உணவு தானிய விநியோகம் தொடர்ந்து நடக்கும்.

(2) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விலைக்கு வாங்கப்படும் உபரி நெல்லைக் கொண்டு தேவைப்படும் பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படும்.

(3) மத்திய அரசு நமக்குத் தரும் அரிசி, கோதுமை, சிறு தானியங்கள் தேவைப்படும் பகுதிகளில் நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகிக்கப்படும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 12

(4) மாநிலத்தில் பகுதிவாரியாக அரிசி, நெல், வியாபாரத்திற்கு மொத்த விலை, சில்லறை விலை ஆகியவற்றிற்கு உச்சவரம்பு நிர்ணயித்து அரசு உத்தரவு வெளியிடும். இந்த உத்தரவை மீறுபவர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

(பிற்பகல் 12-30)

5. சிறுதானியங்களைப் பொறுத்தவரையிலே கூட உற்பத்தி குறைந்து அவை, தற்போது கிராமப் பகுதிகளில் உள்ளூரிலேயே பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படுவதால், அவற்றை கொள் முதல் செய்து விநியோகம் செய்யும் உத்தேசம் அரசுக்கு இப்போது இல்லை. இந்த தானியங்களைப் பொறுத்தவரை நமது மாநிலத்திற்குள்ளே அவற்றின் நடமாட்டத்தின் மீதோ, தனிப்பட்டோர் வியாபாரத்தின் மீதோ, தற்போது தடை எதுவும் விதிக்கப்படாது.

6. பருவ மழை பொய்த்த நிலைமையையும் மின் ஆற்றல் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியையும் நாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அதிகப்படியான 'டீசல்' எண்ணெய் பெற்றுள்ளோம். டீசல் பம்ப் செட்டுகள் வாங்குவதற்கு விவசாயிகளுக்குக் கடன் அனுமதித்து வழங்க கூட்டுறவு வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நிவாரண நடவடிக்கையாகவும் டீசல் பம்ப் செட்டுகள் வாங்க விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் முறையிலும், டீசல் பம்ப் செட்டுகள் வாங்குவோர்க்கு ஒரு பம்ப் செட்டுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. நெருக்கடியை முன்னிட்டு சில தொழிற்சாலைகளுக்கான மின்சார விநியோகத்தைக் குறைத்துக் கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான மின்சார வசதிகள் தடையின்றி வழங்கப்படுமென்று இம்மாமன்றத்திற்கு உறுதி கூற விரும்புகின்றேன். 60,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பை விரைவிலே வழங்க மின் வாரியத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

7. தண்ணீர் பற்றுக்குறையின் காரணமாக நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பயறு வகைகளையும் சிறு தானியங்களையும் சாகுபடி செய்யுமாறு விவசாயிகளை ஊக்குவிக்குமாறு விவசாய அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.



1974 டிசம்பர் 12] [டாக்டர் மு. கருணாநிதி]

8. உணவு உற்பத்தியைப் பெருக்க இந்த அரசு இதுகாறும் எடுத்து வந்துள்ள முனைப்பான நடவடிக்கைகளின் முழுப் பலனும் நமக்குக் கிட்டாமல் போகும் வகையில், மாநிலத்தில் பல இடங்களில் பருவ மழை பொய்த்து வறட்சிநிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையை உறுதியாக சமாளிக்க நாம் துரிதமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசியத்திலுள்ளோம். மாவட்டங்களிலுள்ள நிலைமையை நேரில் சென்று ஆய்வு செய்து விரிவான அறிக்கையை உடனடியாக அனுப்புமாறு வருவாய் வாரிய உறுப்பினர்களை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. வருவாய் வாரியத்தின் அறிக்கை அரசுக்கு இன்னும் இரண்டு வாரங்களில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அறிக்கை வந்த பின்பு அதைப் பரிசீலனை செய்து உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகளுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடும். இப்பணிகளுக்காக இப்போதைக்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்க அரசு உத்தேசித்துள்ளது. இந்தத் தொகையிலிருந்து உடனடியாக குடிதண்ணீர் நிலைமையைச் சீர்செய்ய வேலைகளை மேற்கொள்ள ஒரு கோடி ரூபாயையும், சிறு பாசன திட்டங்களை மேற்கொள்ளவும், கால்வாய்களைப் பழுது பார்க்கவும், இன்னும் ஒரு கோடி ரூபாயையும் மாவட்டங்களுக்குப் பகிர்ந்து அளித்துள்ளது. வறட்சி நிலைமையைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்க அரசு உறுதி கொண்டுள்ளது. எதிர்பாராத இவ்வகையில் மிகக் கணிசமான செலவை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையை முன்னிட்டு, மாநில அரசுக்கு மத்திய அரசு வறட்சி நிவாரணத்திற்கு நிதி உதவி செய்ய முன்வர வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகின்றேன்.

9. இந்த நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க அரசு உரிய காலத்தில் உறுதியான நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளது. இப்பொழுதுள்ள நிலைமையில் உற்பத்தியைப் பெருக்கவும், கொள்முதலை தீவிரமாக்கவும், ஒழுங்கான விநியோகத்துக்கு வகை செய்யவும், அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்குவது இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொருவருடைய கடமையாகும் என்பதை நான் மீண்டும் அறிவுறுத்த விரும்புகின்றேன்.

டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 12

இன்றைக்கு எழுப்பப்பட்டுள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அளித்துள்ள விளக்கங்கள் போதுமானவை, ஆகவே இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I am raising a point of order.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று மட்டும்தான் சொல்லவேண்டும்.

DR. H. V. HANDE : The Hon. Chief Minister, in his reply has stated......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் பல முறை சொல்லியிருக்கிறேன், என்ன நடைமுறை மீறப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். வேறு ஒன்றும் சொல்லக்கூடாது.

DR. H. V. HANDE : As per the Rules of the Assembly, whenever an adjournment motion or a particular subject is raised, the Hon. Chief Minister will stick to that subject but unfortunately he has not given any clear indication as to what he is going to do to solve the present food crisis, the immediate problem.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அது சொல்லவில்லை, இது சொல்லவில்லை என்று சொல்வது பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது.

DR. H. V. HANDE : This is a peculiar situation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்த அவையினுடைய நடைமுறைக்கும் சிட்சுவேஷனுக்கும் சம்பந்தம் இல்லை, உட்காருங்கள்.

DR. H. V. HANDE : The way in which we conduct the whole proceedings of the House.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள். பேரவைத் தலைவரைப் பற்றி குறிப்புகள் சொல்வது முறையல்ல.

DR. H. V. HANDE : My point is that to-day this matter was discussed in the Business Advisory Committee and it was decided that priority could be given to the adjournment motion in



1974 டிசம்பர் 12] [Dr. H. V. Hande]

spite of the fact that there is a No-Confidence Motion against the Ministry which could only be taken up to-morrow. That means that the Hon. Chief Minister should cover the entire points raised in the House. But he has given only a slip-shod answer. This adjournment motion has got added importance and it is not like an ordinary and routine adjournment motion. I also want to know, how the adjournment motion can be taken up before the No-Confidence Motion against the Ministry? . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்தக் கேள்வியை, எப்படி நோ கான்பிடன்ஸ் மோஷன் இருக்கும்போது அட்ஜார்ன்மெண்ட் மோஷன் எடுத்துக் கொள்ளப்படலாம் என்ற கேள்வியை எதிர்க் கட்சித் தலைவர்களைப் பார்த்து கேட்க வேண்டும், அது அவர்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி.

DR. H. V. HANDE : Sir, I am not questioning the decision of the Business Advisory Committee but it was taken on the specific understanding that full discussion would be allowed on the matter in the House. The Chair can ask any Member of the Business Advisory Committee about it. A proper indication was given that the whole matter can be discussed threadbare. But unfortunately the Hon. Chief Minister has not covered all the points raised in the House. Now a measure of rice is sold at Rs. 10 and this is a serious problem, and what is he going to do? I expected the Hon. Minister for Food to participate in the discussion but he has kept quiet. Even the Hon. Minister for Agriculture also has kept quiet . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி** : சார் ஒரு விளக்கம். . . .

**திரு. எஸ். வடிவேல்** : சார், ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உட்காருங்கள். முதலில் அவர்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டருக்குப் பதில் சொல்லி விடுகிறேன்.

Dr. H. V. HANDE : My question is, whether there is not a specific understanding reached in the Hon. Speaker's room that the whole matter should be discussed thoroughly . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே நோ கான்பிடன்ஸ் மோஷன் வந்திருக்கிறது, அதற்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற வாதங்களைப் பல முறைகள் எடுத்துச் சொல்கிற நேரத்திலே வந்திருந்த எதிர்க்கட்சிக்காரர்கள்தான் இந்த ஒரு தடவையாவது இதை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள், அப்படிச் சொன்னதால் தான் இதை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அனுமதிக்கலாமா இல்லையா என்று பார்ப்பதற்குத் தான் இந்த விவாதம். இன்றைக்கு அது அனுமதிக்கப்பட்டு அதன்மீது பேசப்போவதாகச் சொல்லப்படவில்லை. அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் விளக்கமாக இல்லை என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்வது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. அமைச்சர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்கிற நேரத்திலேகூட விடையளிக்க மறுக்கலாம், சில கேள்விகளுக்கு. விடையளிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்கு விதிமுறைகளிலே இடம் இல்லை. ஆகவே இதைச் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று வலியுறுத்துவதற்கு விதிமுறைகள் இடம் கொடுக்கவில்லை.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, மானியம் நான்காயிரமும் கடன் ஆயிரமும் தரப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நிலவள வங்கிகளிலே பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது. எப்படி அதை வாங்க முடியும் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் அதற்காக விண்ணப்பித்து, அது கிடைக்கவில்லையென்றால் முறையிடுங்கள், கவனிக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தில். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கேட்பது கூடாது. ஏதாவது பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால் சொல்லுங்கள்.





**திரு. சோ. அழகர்சாமி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். சென்ற ஆண்டு பூராவும் உபரி என்று வேறு மாநிலங்களுக்கு அனுப்பியிருந்தார்கள். இப்பொழுது பற்றாக்குறை இரண்டு இலட்சம் டன், போன ஆண்டுக் கணக்குப்படி என்று சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரி முதல் வருஷம் சொன்னதற்கும், போன வருஷம் வெளி மாகாணங்களுக்கு அனுப்பினோம் என்று பிரசங்கத்திலே சொல்லியிருக்கிறார்கள், எப்படி இந்தமாதிரி நெருக்கடி ஏற்பட்டது, இதை சமாளிப்பதற்கு எதிர்காலத்திலே என்ன ஏற்பாடு உள்ளது ? போன வருஷம் சொன்ன ஏற்பாட்டைச் சொல்கிறார்களே தவிர, புதிதாக ஒன்றும் செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி இன்னொரு பிரசங்கம் செய்வது முறையல்ல.

**திரு. ஆலடி அருணா :** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பற்றாக்குறையைக் குறிப்பிட்டு, கடந்த ஆண்டு அரிசி உற்பத்தி 55 இலட்சம் டன் என்று சொல்லி பற்றாக்குறை என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் 1969–70 ஆம் ஆண்டில் இந்த நாட்டின் அரிசி உற்பத்தி 40 இலட்சம் டன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது இதற்கெல்லாம் இடமில்லை.

Thiru ALADI ARUNA : You please allow me. The Hon. Chief Minister has given wrong figures.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. தவறான தகவல் கொடுத்திருந்தால். . . .

**திரு. ஆலடி அருணா :** எப்படி இது பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதைச் சொல்லிவிடுகிறேன். 1970–71 இல் உற்பத்தி 50 இலட்சம் டன், 1971–72 இல் 53,10,000 டன். அப்பொழுதெல்லாம் இல்லாத அளவிற்கு இப்பொழுது ஏன் விலை ஏறுகிறது ? இதற்கு முதலமைச்சர் பதில் சொல்வாரா ?

[1974 டிசம்பர் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் எழுந்து நின்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார வேண்டும். நீங்கள் உட்காருங்கள். நம்முடைய விதிமுறைகளிலே,

If leave o fthe House has been given for making the motion, the Speaker shall intimate to the House that the motion will be taken up the same day an hour and a half before the time fixed for termination of the business.

என்று இருக்கிறது. ஒன்றரை மணி நேரம்தான் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இப்பொழுதே ஒன்றரை மணி நேரம் விவாதித்திருக்கிறோம். ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன். அடுத்து. . . .

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த மன்றத்திலே அநேகமாக எதிர் வரிசையிலே உள்ள அத்தனை கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒரு முக்கியமான பிரச்னையின் மீது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இந்த முக்கியமான பிரச்னைக்கு அனுமதி தருவீர்கள் என்று எதிர்பார்த்தோம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த அவையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்ற தீர்ப்பை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளித்த விளக்கத்தில் எங்களுக்கு எந்தவிதமான, நூற்றுக்கு நூறு நம்பிக்கையில்லை, திருப்தியில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம். . . .



1974 டிசம்பர் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்தப் பொருள்பற்றி பேசுகிறீர்கள் என்று சொல்லுங்கள்.

**திரு. முனு ஆதி :** அந்தப் பொருளைப்பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது முடிந்துவிட்டது. அதில் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. நீங்கள் எதன்மேல் பேசுகிறீர்கள் ?

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தாங்கள் அளித்திருக்கின்ற தீர்ப்பின் மீது என் கருத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் கொடுத்த தீர்ப்பின் மீது கருத்து தெரிவிப்பதற்கு நம்முடைய விதிமுறைகளில் இடமில்லை. ஆகவே, அடுத்து அவை முன்னவர் அவர்கள். . . .

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, தீர்ப்பின் மீது என்னுடைய கருத்தைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைத்தான் சொன்னீர்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** நீங்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். என்னுடைய கட்சியின் சார்பாக நான் சொல்ல விரும்புவதெல்லாம், இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் பிரச்னை, பஞ்சத்தைப் பற்றியது, உணவுப் பிரச்னையைப் பற்றியது. ஆனால் முதலமைச்சரவர்கள் ஆறு மாதங்கழித்து இந்த நாட்டில் என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றிச் சொல்கிறார்கள். இன்றைக்கு உடனடியாக இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காண என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதில் எங்களுக்குத் திருப்தியில்லை. ஒன்று, இதைப்பற்றி விவாதிப்பதற்கு அவையை ஒத்திவைத்து அனுமதி கொடுத்திருக்க வேண்டும். பாராளுமன்றத்திலே கூட. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் தீர்ப்புக் கொடுத்த பிறகு எந்த விதிமுறையையொட்டிப் பேசுகிறீர்கள் ?

[1974 டிசம்பர் 12

**திரு. முனு ஆதி:** பேசுவதற்கு முன் தீர்ப்பு கொடுத்து விடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த விதியின் கீழ் பேசுகிறீர்கள்?

**திரு. க. உரோ. எட்மண்ட்:** நான் ஒன்று சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த மன்றத்திலே நடப்பது எல்லாமே விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் நடக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிமுறைகளை மீறி என்ன நடக்கிறது? நீங்கள் நிற்பதேகூட விதிமுறைகளை மீறியது தான்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** எட்டாவது அதிகாரத்தைப் படித்தால் தெரியும். சேப்டர் 8-லே அட்ஜர்ன்மெண்ட் மோஷனைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் அவையிலே முன்மொழியப்பட்டுவிட்ட பிறகு சபாநாயகருக்குள்ள அதிகாரமெல்லாம் அதற்கு 'லீவ் ஆஃப் தி ஹவுஸ்' இருக்கிறதா என்று கேட்க வேண்டும். 24 பேர் ஆதரித்தால்தான் இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதியிருக்கிறது. பேரவையின் அங்கீகாரம் இருக்கிறது என்று தெரிந்த பிறகு ஒப்புதல் கொடுக்க வேண்டும். மன்றத்திலே அனுமதி கொடுத்த பிறகு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பலமுறை விளக்கங்களைச் சொல்லியாகிவிட்டது.

THIRU G. R. EDMUND: Let me state the relevant rule.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிமுறைகளைப் படியுங்கள். அதிலே தெளிவாக இருக்கிறது. ஒன்று, அறையிலேயே தள்ளி விடலாம். . . .

**திரு. க. உரோ. எட்மண்ட்:** விதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிமுறைகளைக் காட்டுங்கள்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** எட்டாவது சாப்டரிலே, 42-லேயிருந்து 51 வரைக்கும் பத்து விதிமுறைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த விதிமுறையில், பேரவைத் தலைவரவர்கள் அவையைக் கேட்க வேண்டுமே தவிர, அவரே தள்ளிவிடக்கூடாது என்று இருக்கிறது?



1974 டிசம்பர் 12]

**திரு. க. உரோ. எட்மண்ட்:** நான் படிக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இதிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரே படிக்கட்டும்.

THIRU G. R. EDMUND: I shall now read the rule.
ரூல் 43 என்ன சொல்கிறது என்றால்,

A member desirous of moving a motion for an adjournment of the business of the House for the purpose of discussing a definite matter of urgent public importance shall, before the commencement of the sitting of the Assembly at which he proposes to ask for leave of the House to make his motion, hand to the Secretary three copies of a statement in writing of the matter proposed to be discussed and obtain the Speaker's consent to his asking for leave to make the motion.

நீங்கள் அதை மறுக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'Permission of the Speaker வேண்டும்.

THIRU G. R. EDMUND: The Chair has given his consent to raise the matter on the floor of the House.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை என்கிறேன். 'கன்செண்ட்' கொடுக்கவில்லை என்கிறேன். நான் சொல்கிறேன், ஒன்று அறையிலேயே தள்ளிவிடலாம். இரண்டாவது. . .

**திரு. க. உரோ. எட்மண்ட்:** அறையிலேயே தள்ளிவிடுவது அல்ல பிரச்னை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இன்றைக்குச் சபையில் நடந்த விஷயத்தைக் கூட நீங்கள் சொன்னீர்கள். இன்றைக்கு இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை எடுத்துக் கொள்வது பற்றி விளக்கங்கள் அளிப்பதற்கு நீங்கள் அனுமதி தந்தது பொதுவாக பாராட்டத் தக்கதுதான். ஆனால் இந்த ஒத்திவைப்புப்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 12

பிரேரணையை அனுமதிப்பதா, இல்லையா என்பது பற்றிப் பேசுவதற்கு நீங்கள் வசதி கொடுத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் ஏன் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது என்ற அந்த முறையில் நாங்கள் சொல்லியிருக்கிறோம். முதலமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்ததன் நோக்கம் என்னவென்றால், முதலமைச்சரவர்கள் பதில் சொன்ன பிறகும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டுமென்றும், பிறகு விவாதம் நடந்திருந்தால், முதலமைச்சரவர்கள் எங்களை வேண்டிக் கொண்டிருப்பார், எந்த முறையில் இதைச் செய்யலாம் என்று, நாங்களும் ஆலோசனை கூறியிருப்போம். உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்னை, இன்றைக்கே முடிய வேண்டிய பிரச்னை என்பதால் இதைச் சொல்கிறோம். இன்றைக்குக் காவிரி பிரச்னை இருக்கிறது. எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்து பேசி, உள்ளே நடக்கிறது என்ன என்று தெரியாத நிலைமையிலே இருந்ததை, மக்களின் நன்மைக்காக அமல் நடத்துவது மாதிரி இதுவும் வந்திருக்கலாம். அதற்குப் பிறகு சந்தேகம் இருக்காது. திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னதுமாதிரி இது முக்கியமான விஷயம். ஆகவே, தங்கள் ரூலிங்கிற்குக் கட்டுப்படுகிறோம் என்றாலும் இது மிகவும் முக்கியமான விஷயம், இதை விவாதித்திருக்க வேண்டும், எங்கள் கட்சி இதை முக்கியமான விஷயமாகக் கருதுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் பற்றி விவாதிப்பதற்கு நமக்கு வசதியில்லை என்று சொன்னால், அடுத்து இந்தச் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுப்பது பற்றி இரண்டு முறை இருக்கிறது.

The Speaker may withhold consent to the matter being raised before the House and in that case it shall be communicated to the member together with the reasons therefor and the member shall not raise the matter as such in the House.



1974 டிசம்பர் 12] [பேரவைத் தலைவர்]

இது ஒரு முறை. இன்னொரு முறை—

If the Speaker gives his consent under Rule 43, he shall, after questions and before the further business set down in the list of business for the day is entered upon, read the statement referred to in Rule 43, to the House and decide whether the matter proposed to be discussed is or is not in order.

பிறகு,

Before he so decides, he may, if he thinks necessary, call upon the member to explain how the matter is in order and he may also ask the Leader of the House or the Minister concerned to state the Government's point of view.

இது ஆர்டராக இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற வாய்ப்பே தவிர, அனுமதி அளிப்பதல்ல. அதுதான் விதிமுறை.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** அடுத்த விதி என்ன சொல்லுகிறது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பிறகு. ஆர்டர் என்று அவைத் தலைவர் முடிவு செய்த பிறகு பேரவையின் அனுமதி இருக்கிறதா இல்லையா என்பதற்கு உறுப்பினர்களை எழுந்து நிற்குமாறு கேட்க வேண்டும். பேரவைத் தலைவர் ஒரு முடிவு எடுப்பதற்காக உறுப்பினர்களுக்குத் தந்த வாய்ப்பே தவிர, தீர்மானம் அனுமதிக்கப்படவில்லை. அந்த முறையைப் பின்பற்றி இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தங்கள் தீர்ப்பின் பேரில் அதிருப்தி இருக்கும் காரணத்தால், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அ. தி. மு. க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த நாட்டிலே இருக்கின்ற மிக முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை. குறிப்பாக. தமிழகம் எங்கும் பஞ்சம் என்ற பூதம் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் மக்கள் பிரதிநிதிகளாகத்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 12

தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்கள் இந்தப் பிரச்னையின் மீது விளக்கமாகப் பேசுவதற்கு எங்களுக்குச் சந்தர்ப்பம் இல்லையே என்று நாங்களெல்லாம் வருத்தப்படுகிறோம். சபாநாயகர் கொடுத்தத் தீர்ப்பை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நாட்டில் இன்று பஞ்ச நிலைமையாக இருக்கிறது. அதைப் பற்றி விவாதிக்க ஒரு மணி நேரம் கூட இந்த மன்றத்தின் காலத்தை எடுத்துக் கொள்ள அவகாசம் கிடைக்கவில்லையே என்று நாங்கள் எல்லாம் வருத்தப்படுகிறோம். இதை ஒரு கண்டனத் தீர்மானமாக நாங்கள் அரசின் மீது கொண்டு வந்திருக்கிறோம். இதைப் பற்றி விவாதிக்க அனுமதி கிடைக்காத நிலையில் நாங்கள் இந்த அவையிலிருந்து வெளியேறுகிறோம்.

(ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இரண்டு முறையை விளக்கினீர்கள்.

The Chair can withhold consent or the Chair can also allow us to raise it on the floor of the House after obtaining the leave of the House. What I say is you have allowed us to move the motion here.

MR. SPEAKER: No.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: What I say is this.

விதி 48-ஏ படி பார்த்தால்—

If leave of the House has been given for making the motion, the Speaker shall intimate to the House that the motion will be taken up the same day an hour and a half before the time fixed for termination of business.

என்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையென்று சொல்லு கிறேன். இந்தத் தீர்மானம் அனுமதிக்கக்கூடிய நிலையில் இருக் கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகக் கொடுக்கப்பட்ட வாய்ப்பே ஒழிய அனுமதிக்கப்படவில்லை. உறுப்பினர்கள் பேசியது விதி 45-ன் கீழ் கொடுக்கப்பட்ட வாய்ப்பே தவிர, விதி 48 ன் கீழ் வரவில்லை.



1974 டிசம்பர் 12]

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When I have the permission to raise it on the floor of the House, you must allow me to discuss it for 1½ hours.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய விதிமுறைகளில்

The debate on a motion to discuss a definite matter of urgent public importance, if not earlier concluded, shall automatically terminate at the end of two hours after the commencement of the debate and thereafter no question can be put.

என்று இருக்கிறது. ஏற்கனவே இரண்டு மணி நேரம் விவாதித்து விட்டோம். கொடுக்கப்பட்ட வாய்ப்பு விதி 45-ன் கீழ்தானே தவிர, 48-ன் கீழ் அல்ல. அனுமதி கொடுக்கப்படவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** It is not in order, Sir. நீங்கள் சொல்லுவது நியாயமில்லை. மக்கள் பட்டினிப் பிரச்சினை இதிலே தங்கள் தீர்ப்பு நியாயமில்லை. இதைவிட அநியாயமான தீர்ப்பை எதிர்பார்க்க முடியாது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்தச் சபையிலே விவாதித்த விஷயம் மக்களுடைய உயிர்ப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் விதிமுறைகளை எல்லாம் அப்படியே துருவித் துருவிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை பெரிதாக இருக்கலாம். பிரச்சினைகளை இங்கே பேசுகின்ற நேரத்தில் ஒரு முறை இருக்கிறது. அந்த முறையைக் கைவிட வேண்டுமென்று சொன்னால் இங்கு உட்கார வேண்டிய அவசியமில்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இதை அனுமதித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்தார்கள். அதற்கு மேல் உறுப்பினர்கள் என்ன கருத்துக்களைச் சொல்லுகிறார்கள் என்று கேட்டிருக்க வேண்டும். அப்படி அரசாங்கத்திடம் விளக்கம் கேட்பதற்கு இயலாத நிலையில் இதற்கு அனுமதி மறுத்தது சரியாக இல்லையென்று கருதி வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

[1974 டிசம்பர் 12

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தங்களுடைய உத்தரவைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்காக வருத்தப்படுகிறேன். ஒன்றரை மணி நேரமோ இரண்டரை மணி நேரமோ ஆரம்பமாக விவாதித்திருக்கலாம். அது விவாதம் அல்ல. அது நாங்கள் எப்படி அது எடுத்துக் கொள்வதற்கு உரியது என்று எடுத்துச் சொல்வதற்காக கூறிய காரணங்களே தவிர, நாங்கள் பிரச்சினையை விவாதிக்கவில்லை. பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. அதிமுக்கியமான விஷயத்தைப் பற்றி இங்கு விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத காரணத்தால் நான் ஏற்கனவே சொன்னபடி எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திருமதி சத்தியவாணிமுத்து:** இந்த மிக முக்கியமான பிரச்சினையில் எதிர்க்கட்சிக்காரர்கள் கொடுத்திருக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதித்து விவாதிக்கலாமா கூடாதா என்பதைப் பற்றி அறிவதற்குத்தான் அனுமதித்தீர்கள். அதை எடுத்துக் கொள்ளலாமா கூடாதா என்பதற்குத் தாங்கள் தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னால் முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். நீங்கள் தீர்ப்பளித்த பிறகு முதலமைச்சரைப் பேச அனுமதித்திருக்க வேண்டும். நீங்கள் தீர்ப்புக் கூறுவதற்கு முன்னாலேயே முதலமைச்சரை விளக்கம் தரச் சொல்லிவிட்டீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் விதிமுறையைப் படிக்கிறேன். கொஞ்சம் கேளுங்கள்.

Before he so decides, he may, if he thinks necessary, call upon the member to explain how the matter is in order and he may also ask the Leader of the House or the Minister concerned to state the Government's point of view.

என்று இருக்கிறது. நான் தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்பு அவரையும் கேட்க வேண்டுமென்பது விதிமுறை.



1974 டிசம்பர் 12]

**திருமதி சத்தியவாணிமுத்து:** முதலமைச்சரைப் பேசச் சொல்லிவிட்டீர்கள். முதலமைச்சர் பேசிய பிறகு அதன்பேரில் உறுப்பினர்கள் விளக்கங்கள் கேட்டு 'காம்பரமைஸ்' ஆக ஒரு முடிவுக்கு வர அனுமதிப்பதுதான் ஜனநாயக முறை. எதிர்க் கட்சிக்காரர்கள், நாட்டு மக்கள் உணவு இல்லாமல் பட்டினி கிடக்கிறார்கள், வறட்சி நிலை கடுமையாக இருக்கிறது என்பது பற்றிப் பேசுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுகிறார். அதிலே சந்தேகங்களைக் கேட்கும்போது மீண்டும் பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். 'முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்; எனவே, அனுமதி இல்லை' என்று தீர்ப்புக் கூறுவது சரியாக இல்லை என்பதை வற்புறுத்திக் கூறி, எதிர்க் கட்சிகளின் சார்பில் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் உறுப்பினர்கள் அறிவதற்காகக் கூறுகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் என்ன முடிவுகள் எடுக்கப் பட்டனவோ அந்த முடிவின்படி அலுவல்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. குழப்பம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக இதை எடுத்துக் கூறுகிறேன். மிகத் தெளிவாக அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் வைத்துக் கொண்டு இன்றைக்கு எதை எடுத்துக் கொள்வது, நாளைக்கு எதை எடுத்துக் கொள்வது என்று எடுத்த முடிவுகளின்படி ஒத்தி வைப்புத் தீர்மானங்களின் பேரில் எந்த அடிப்படையில் விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டுமோ, அந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் தங்கள் விளக்கங்களைக் கூறினார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு இந்தத் தீர்மானங்களின் மீது அளித்த விளக்கங்களின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளுவதா இல்லையா என்று தீர்ப்பளிக்கும் பொறுப்பு பேரவைத் தலைவராகிய தங்களைச் சார்ந்தது. தாங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று முடிவு செய்தாலும் அதற்காக ஒதுக்கப்படக் கூடிய நேரம் ஒன்றரை மணி நேரந்தான். 'ஏன் ஒத்தி வைப்புத்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 டிசம்பர் 12

தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்கே 1½ மணி நேரம் எடுத்திருக்கிறார்கள்; அனுமதி அளிக்கப்பட்டாலே விவாதிப்பதற்கான நேரம் 1½ மணி நேரந்தான்', என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். எல்லாம் முறைப்படி நடைபெற்றிருக்கிறது என்பதை மட்டும் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

## (2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) விதி எண் 23-ஐ தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இராநெடுஞ்செழியன்:** விதிமுறைப்படி இன்று 'நான்-அபிஷியல் டே' என்று இருக்க வேண்டும். அந்த விதியைத் தளர்த்த வேண்டுமென்பதற்கான தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி எண் 23-ஐ தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(பிற்பகல் 1-00)

## (5) அரசினர் சட்ட முன்வடிவு

### (அ) 1974-ம் ஆண்டு சென்னை மாநகர காவல் துறை தமிழ்நாடு நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, "1974-ம் ஆண்டு சென்னை மாநகர காவல் துறை—தமிழ்நாடு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவை* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

1888-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1888) 41-வது பிரிவு ஏனையவற்றுக்கிடையே சென்னை மாநகரில் பொது இடங்களில் ஒலிப் பெருக்கிகளைப்

* 6—11—1974 தேதிய தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



1974 டிசம்பர் 12] [திரு. செ. மாதவன்]

பயன்படுத்துவதை முறைப்படுத்துகிறது. இதுபோன்றே, தமிழ்நாடு 1889-ம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1889) 3-வது பிரிவை சேர்ந்த (10) பகுதி, மாவட்டங்களில் பொது இடங்களில் ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்துகிறது. சென்னை மாநகரில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்துதல் என்பது எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்தச் செய்யப்படும் வகையில் 1888-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவலர் சட்டத்தின் 41-வது பிரிவில் "பொது இடங்கள்" என்று குறிப்பிட்டிருப்பதை நீக்கிவிடக் கருதப்பட்டுள்ளது.

ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்துவோர், அவற்றைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட வரையறைகள், நிபந்தனைகளை மீறி நடந்தால், அதன்பொருட்டு விதிக்கப்படும் அபராதத் தொகையை உயர்த்தி அதன்மூலம் கடும் தண்டனை விதிக்க வகை செய்துஃ, அவ்வாறு மேற்சொன்ன வரையறைகள், நிபந்தனைகளை மீறிப் பயன்படுத்தப்படும் ஒலி பெருக்கிகளைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்ய வகை செய்தும், 1888-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவல்துறைச் சட்டத்தில் புதிதாக 71-A பிரிவைச் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது; அதேபோன்ற வகையில், தமிழ்நாடு 1889-ம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டத்திலும் புதிதாக 3-A பிரிவைச் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

இச்சட்ட வரைவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகின்றது. பேரவைத் தலைவர் அவர்களே, இதனை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இந்த ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கு சில கட்டுதிட்டங்களை ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஒலி பெருக்கிகளைப் பல்வேறு இடங்களில் பல்வேறாகப் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். குறிப்பிட்ட நேரத்தில் பயன்படுத்தவேண்டுமென்று சொன்னாலும் கூட பல ஊர்களில் காலையில் இருந்து மாலை வரையில் ரிக்கார்ட்களை போட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். சிலயிடங்களில் கூட்டங்களைக்

கூட்டுகிறபோது ஒரு கட்சியினர், ஆளும் கட்சியினர் நடத்துகிற கூட்டங்களுக்கு மட்டும் எந்தவிதமான ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் 11-30 மணி வரை பேசக் கூடிய அளவில் வாய்ப்பு தருகிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுகிறார்கள் என்றால் 10 மணிக்கு நிறுத்தி விடவில்லை என்றால் உடனே மைக்மான் மீது கேஸ் போடப்படும் என்று சொல்கிறார்கள். சிலயிடங்களில் எங்களுக்கு ஒலிபெருக்கியைப் பயன்படுத்திக் கொள்ள உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதேசமயத்தில் போலீஸ் ஸ்டேஷனுக்கு உத்தரவு போகாததால் எங்களை மிரட்டி மைக் போடுகிறவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்வதைப் பார்க்கிறோம். இப்படி பலயிடங்களில் பல கோளாறுகள் நடப்பதைப் பார்க்கிறோம்.

எனவே, ஒரு கட்டுதிட்டம் என்று போட்டால் எல்லாக் கூட்டங்களுக்கும், எல்லா மக்களுக்கும், அமைச்சர்களானாலும் சரி அல்லது சாதாரணப் பிரஜைகளானாலும் சரி எல்லோருக்கும் ஒரேமாதிரியான சட்டம் போடுவது என்ற நம்பிக்கையூட்டினால் தான் இந்தத் திருத்தங்கள் பொருத்தமானவைகளாக இருக்கும். அது இல்லை என்றால் இத்திருத்தங்களுக்கு அர்த்தமே இல்லை. நான் எனது சொந்த அனுபவத்தில் சொல்கிறேன். திண்டுக்கல்லில் நாங்கள் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தோம். மதுரையில் இருக்கக் கூடிய எஸ். பி. யிடத்திலிருந்து உத்தரவு வாங்கிக் கொண்டு வந்தோம். ஆனால் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டர் எனக்கு வரவில்லை என்று சொல்கிறார். ஒழுங்கான முறையில் உத்தரவை காலாகாலத்தில் அனுப்பி வைக்கவில்லை என்றால் அதற்குக் கூட்டம் போடும் கட்சி எப்படி பொறுப்பாக முடியும்? உடனே அங்குள்ளவர்கள் ஸ்டேஷனுக்குச் சென்று மைக்மான் என்ன செய்வார், நாங்கள் உத்தரவு வைத்திருக்கிறோம் என்று சொன்னால் அந்த அதிகாரி எல்லாவற்றையும் எடுத்து வா என்று ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று கூட்டம் பத்து மணிக்கு முடிந்த பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அவரை வெளியே விடுங்கள் என்று சொன்னால் நாங்கள் வழக்கு போடப்போகிறோம் என்று சொன்னார்கள். எந்த அடிப்படையில் நீங்கள் வழக்கு போடப்போகிறீர்கள், வயலேஷன் ஆஃப் ரூல்ஸ் என்ன என்று கேட்டால் நீங்கள் கேட்க வேண்டாம் நாங்கள் எங்கள் விருப்பப்படி போடுவோம் என்று சொல்லி இந்தச் சட்டத்தை வைத்து கட்சிக்குக் கட்சி பாகுபாடு காட்டிவரும்



நிகழ்ச்சிகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதோ என்னவோ, நானாவது அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆளும் கட்சியினர் போடும் கூட்டங்களுக்கு அமைச்சர்கள் 11-30 மணிக்குக் கூட சிலயிடங்களில் வந்து பேசியிருக்கிறார்கள். 12 மணி வரை பேசும்போது அதை அனுமதித்து விடுகிறார்கள். ஆனால், நாங்கள் 10 மணிக்கு மேல் ஐந்து நிமிடம் பேசிவிட்டால் ஒலிபெருக்கிக்காரரை போலீஸ் அதிகாரிகள் மிரட்டுகிறார்கள். இதே ஊரில் அமைச்சர்கள் பேசும்போது 11-30, 12 மணி வரையில் அனுமதித்திருக்கிறீர்களே, ஏன் எங்களை அனுமதிக்கவில்லை என்று கேட்டால் அமைச்சர்களுக்கு ஒரு தனிச் சட்டம், மற்றவர்களுக்கு ஒரு தனிச் சட்டம் என்ற முறையில் விவாதிக்கிறார்கள். அப்படி அமைச்சர்களுக்கு என்று ஏதாவது தனிச் சட்டம் செய்திருக்கிறீர்களா என்று தயவுசெய்து சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கினால் நன்றாகயிருக்கும். அதிகாரிகள் தங்கள் வசதிக்காக அமைச்சர்கள் 12 மணி வரை பேசினாலும் அனுமதித்துவிட்டு, பிற கட்சியினர் கூட்டம் போடும்போது பத்து மணிக்கு மேல் ஐந்து நிமிடம் போனாலும் கூட காட்டு தர்பார் செய்கிறார்கள். அப்படி ஏதாவது தனிச் சலுகைகள் இருக்கின்றனவா? அப்படி தனிச் சலுகைகள் உள்ள சட்டத்தை எந்த மாநிலத்திலும் அனுமதிக்க முடியாது. சிலயிடங்களில் ஒலி பெருக்கிக் கடை வைத்திருப்பவர்கள் காலையில் இருந்து இரவு வரையில் ரிக்கார்ட்ஸ் போடுகிறார்கள். வியாபார விளம்பரத்திற்காகப் போடுகிறார்களோ என்னவோ. ஆனால், அது பல பேர்களுக்குத் தலைவலியைக் கொடுக்கிறது. வியாபார விளம்பரமாக இருந்தாலும்கூட எந்த அளவிற்கு எந்தெந்த நேரங்களில் போடலாம் என்று வரையறுத்துக் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

திருமண மண்டபங்கள் எல்லா ஊர்களிலும் எக்கச்சக்கமாக வைக்க வேண்டிய அளவில் நாடு இருந்து கொண்டிருக்கிறது. கல்யாண மண்டபங்களில் காலையில் இருந்து இரவு வரையில் ரிக்கார்ட்ஸ்கள் போடுவது என்று ஆரம்பித்துவிட்டால் அதற்குப் பக்கத்தில் வாழக் கூடியவர்களின் நிலை என்ன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நல்ல மங்களமான இசை போட்டாலும் பரவாயில்லை. திருமண மண்டபத்தில் கூட்

சமயத்தில் அமங்கலமான பாட்டைப் போட்டு அலங்கோலப் படுத்தி விடுகிறார்கள். கல்யாண மண்டபங்கள், ரெஸிடென்ஷியல் ஏரியாவில் இருப்பவற்றில் எந்த நேரத்தில் ஒலிபெருக்கியை அமைக்கலாம், எந்த நேரத்தில் அனுமதிக்கக் கூடாது என்று கல்யாணம் செய்பவர்கள் மனதும் புண்படாமல், அதே சமயத்தில் அதற்கு அருகே வாழ்கிற மக்களுக்கும் தொல்லை கொடுக்காத அளவிற்கு எந்தெந்த நேரத்தில் போட்டுக்கொள்வது என்று அவர்களையே கேட்டு ஓரளவு கட்டுப்படுத்தினால் அதன் அருகில் வாழ்கிற மக்களுக்கும் தொல்லையில்லாமல் இருக்கும்.

இப்படி பல விளக்கங்களைக் கொடுத்தால்தான் இந்தத் திருத்தங்களுக்கு அர்த்தம் இருக்க முடியும். இல்லை என்றால் சட்டத்தைத் திருத்தி அவரவர்கள் கட்சிக்கு வேண்டிய அளவிற்கு பயன்படுத்துவதற்கு அல்லது இதை அமல்படுத்துவது என்ற அளவிற்கு இருந்தால் இந்தச் சட்டத்திலேயே நம்பிக்கையில்லாமல் போய்விடும்.

**திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையின் முன்னால் கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்தங்கள் தாய்ச் சட்டத்திலுள்ள தண்டனைகளை அதிகப் படுத்தும் முறையில் அமைந்திருக்கின்றன. இன்று ஒலி பெருக்கிகள் பயன்படுத்துவதுபற்றி, பயன்படுத்துகிற நிலையில் விதிகள் மீறப்படுமானால் அதற்கான தண்டனையை அதிகப் படுத்துவதற்காக இந்தத் திருத்தங்களை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது.

இந்தத் திருத்தங்கள் எந்த அளவிற்கு அரசியல் கட்சிகளின் பிரச்சாரத்தைப் பாதிக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1967-ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் நாட்டு அரசில் ஒரு மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டது என்றால் 1967-க்கு முன்னால் நடைபெற்ற மிகப்பெரிய அந்த அரசியல் போராட்டத்தில் அன்றையதினம் பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்களுக்குப் பின்னால் இருந்த தலைவர்களும் நாட்டு மக்களைச் சந்திக்க இந்த ஒலிபெருக்கியை எந்தளவிற்குப் பயன்படுத்தி னார்கள் என்றால், அரசாங்கம் விதித்திருந்த விதிகளை எல்லாம் கூட மீறித்தான் அந்தக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் அனுபவபூர்வமாகப் பார்த்திருக்கிறேன்.





கோபி வட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசிய நேரத்தில் மாலை ஆறு மணிக்குப் பேசவேண்டியவர் மறுநாள் காலை ஆறு மணிக்கு பேசிய நேரத்திலும், அன்று விதிகள் மீறப் பட்டிருந்தாலும், அந்தப் பகுதி மக்கள் அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிற அரசு எதிர்காலத்தில் ஏற்பட இருக்கிற மிகப் பெரிய அரசியல் மாற்றங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக இந்தத் திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் எங்களில் பலருக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று ஜனநாயகக் கடமைகளை ஆற்ற விரும்புகிற எங்களைப் போன்ற வர்கள் மக்களைச் சந்திப்பதற்கும், மக்களிடத்தில் கருத்துக்களை வைப்பதற்கும் பொதுக் கூட்டங்களைத்தான் மலிவான ஒரு பிரச்சாரச் சாதனமாக நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். இன்று தமிழ் நாடு பற்றி பேசுகிற நேரத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் தேர்தல் செலவு பற்றி ஒரு மாறுதலைச் செய்ய வேண்டுமென்று கூறும்போது அவர்களுக்குப் பதிலிறுத்துப் பேசிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எந்தச் செலவை நாம் கட்டுப்படுத்தினாலும் பொதுக்கூட்டங்கள் பற்றிய செலவை கட்டுப்படுத்த முடியாது என்று பேசியிருக்கிறார்கள். ஆகவே, நான் அரசுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்ன வென்றால், மேட்டுக்குடி மக்கள் யாரோ ஒருசிலருக்காக, நகரங் களில் இருக்கிற ஒரு பகுதி மக்களுக்கு வேண்டுமானால் இது தொல்லையாக இருக்கலாம், அவர்களுக்கு இது துன்புறுத்துவதாக இருக்கலாம். ஆனால், கிராமங்களிலும் வேறு பல பகுதிகளிலும் இருப்பவர்கள் ஒலிபெருக்கியை விரும்புகிறார்கள், விரும்பி கேட்கிறார்கள். லட்சக்கணக்கில் கூடுகிறார்கள். காத்திருந்து பேச்சைக் கேட்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த நிலையை நாம் பதினைந்து ஆண்டுகளாகப் பார்த்து வருகிறோம். அந்த உரிமை பாதிக்கப்படாத அளவிற்கு இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

பேருக்கு வேண்டுமானால் சென்னை நகரப் போலீஸ் சட்டம், டவுன் தொல்லைச் சட்டம் என்றிருக்கலாமே தவிர சட்டத்தில் இதைக் கிராமங்களுக்கு விஸ்தரிக்கலாம் என்றிருக்கிறது. இந்தச் சட்டத்தை நகர மக்கள் அதிகமாக வாழ்கிற ஒருசில குறிப்பிட்ட

[திரு. செ. அரங்கநாயகம்] [1974 டிசம்பர் 12

பகுதிகள் தவிர மற்றப் பகுதிகளில் இந்தச் சட்டத்தை அமல் படுத்தாத ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கூறி இந்தத் திருத்தங்களை நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். ஜனநாயக கடமையாற்றுகிற அரசியல் கட்சிகளின்

(டாக்டர் க. நாகராஜன் தலைமை)

உரிமைகளை வெகுவாகப் பாதிக்கக்கூடிய அளவில் இந்தத் திருத்தங்கள் இருக்கின்றன. இது அரசாங்கம் அல்லது ஆளுகிற கட்சி தன்னைப் பாதுகாத்துக்கொள்ள கொண்டுவரப்பட்ட மசோதா என்று கூறி, நான் இந்த மசோதாவை எதிர்த்து அமைகிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM: Mr. Chairman, Sir, although I agree that the loud-speakers create a lot of disturbance and nuisance, certain acts are very necessary for existence of human beings. Now, it is proposed to substitute for 'public place', the words 'any place'. Now, there are schools or other places where religious lectures take place. Further, there are so many schools and colleges where the Headmaster or Headmistress and the Principals give instructions to students in the different classes all over the schools or colleges and the students hear such instructions and act according as they are instructed. In such cases, there is no time-limit, the time-limit can be only the school hours. There is no point in restricting that. That is very useful in schools and colleges, for sending instructions and communications to different classes, which this Government has no business to interfere with. I am sure the Government will appreciate that this is necessary in schools for not only giving instructions, but also for giving moral instructions to students by the Headmasters or Headmistresses and the Principals. I hope and trust that the Government will realise this and exempt such things.

Similarly, there are various religious lectures and discourses given at various places. Nobody generally objects to such things except some who have a prejudice who would say that in such and such a place, noise and nuisance are there. These useful and noble acts should be allowed and Government should say, 'No. you can have loud-speakers during particular periods during which the religious lectures are conducted in a particular place and allow licences for loud-speakers.



1974 டிசம்பர் 12] [Thiru K. M. Subramaniam]

On these two things, I sincerely request the Government to see that exemption is given. I am not concerned with political speeches, but educational institutions and religious discourses are different and it is absolutely essential for schools and colleges and places where religious lectures are given to have loud-speakers. They should be exempted. I hope and trust the Government will exempt these places. Now the Government is transferring 'public place' into 'any place'. While doing so, these two places I have mentioned should be exempted. Thank you, Sir.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, ஒலிபெருக்கியால் ஏற்படுகிற தொல்லைகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றுப் பேசுகின்ற நேரத்திலே, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

காற்றிலே பொல்யூஷன் ஏற்பட்டு மக்களுக்கு எப்படி பெரிய தொல்லை ஏற்படுகின்றதோ, அம்மாதிரியான முறையில் சப்தத்தின் காரணமாகவும் மனித சமுதாயத்திற்குப் பெரிய கேடு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ஒலிபெருக்கியின் சப்தத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டு நாளாவட்டத்தில் அவர்களுடைய கேட்கும் சக்தியை இழக்கக்கூடிய ஒரு பெரிய அபாயம் இருக்கிறது என்பதை அதைப்பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு ஒரு கட்டுப்பாடு கொண்டுவரவேண்டியது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன்.

அதே நேரத்தில் அரசியல் கட்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற நேரத்தைப் பற்றி அதிலே பாரபட்சம் காட்டப்படுகிறது என்று இங்கே பேசிய எதிர்க் கட்சித் தோழர்கள் சொன்னார்கள். எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அதற்கென்று ஒரு நேரத்தை, பொது மக்களுக்குத் தொல்லை தராத ஒரு நேரத்தை அமைத்துக் கொடுத்து, எல்லா கட்சிகளும் அதை ஒரு மரபாக ஏற்றுக்கொண்டு, அதன்படி நடக்க வேண்டும் என்று என்று வற்புறுத்தினால் கூட அது நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதுமட்டுமின்றி, திருமணங்களைப்பற்றி யெல்லாம் சொன்னார்கள் திருமணங்களிலெல்லாம் ஒப்பாரிகள் வைக்கப்படுவது பற்றி மாண்புமிகு அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

அப்படிப்பட்ட சம்பவங்களெல்லாம் நடைபெறுகின்றன.
இன்றைக்குத் திருமணங்களில் லவுட்ஸ்பீக்கர் வைப்பது, திருமணத்
தினுடைய முழுப் பகுதியாகவே ஆகிவிட்டது என்று மக்களி
டையே ஒரு பரவலான தவறான கருத்து ஏற்பட்டிருக்கிறது.
ஆகவே, திருமணங்களில்கூட முக்கியமான நேரத்திற்கு மட்டும்,
அரை மணி அல்லது கால் மணி திருமணத்தைப் பற்றி சொல்
கின்ற அந்தக் குறிப்புகளைச் சொல்கின்ற நேரத்திற்கு மட்டும்
என்று அப்படி ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயிப்பது நல்லது
என்று நான் நினைக்கிறேன்.

வியாபாரஸ்தலங்களைப் பற்றியும் சொல்ல வேண்டிய
அவசியம் இருக்கிறது. திருவிழாக்கள் என்றால் நகரங்களிலும்
சரி, கிராமங்களிலும் சரி, மணிக்கணக்கில் தூங்கவிடாமல் ஒலிப்
பெருக்கி மாபெரும் தொல்லையாக இருக்கிறது. அதிகமான
அளவுக்கு இந்தத் தொல்லை ஏற்படாமல் கட்டுப்படுத்துவதற்கு
சட்டத்தைத் திருத்துவது வரவேற்கத்தக்கதுதான். அதே
நேரத்தில் பள்ளி வாசல்களில், முஸ்லிம் பெருமக்கள் தொழுகை
நடத்தக் கூடிய பள்ளிவாசல்களில் 'பாங்' சொல்வதற்கு
குறிப்பிட்ட நேரத்தில் அது நடத்தப்படுகிறது. அப்படிப்
பட்டவர்கள் அனுமதி கேட்கிற நேரத்தில் வேறுவித கோணத்
தில் அதைத் தடுப்பதற்கு முயற்சிக்கின்ற தன்மை இருக்கிற
காரணத்தினால், அப்படிப்பட்ட மத சம்பந்தமான நல்ல அம்சங்
களைச் சொல்வதற்கு குறிப்பிட்ட நேரங்கள் இருக்கின்றன. அந்த
நேரங்களில் அதை அவர்கள் சொல்வதற்கு பூரண அனுமதி
அளிக்க வேண்டும். 'பாங்' சொல்வதற்கு குறிப்பிட்ட
நேரத்தை அனுமதிக்கவேண்டும். பள்ளிவாசல்கள் போலீஸ்
அதிகாரிகளை அணுகிக் கேட்கின்ற நேரத்தில், அதிலே எந்த
விதமான தடையும் இல்லாமல், சிக்கல்கள் ஏற்படாத முறையில்,
அதற்கான நேரத்தினை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்பதை
வலியுறுத்திக் கூறி, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை
வரவேற்று, முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட்: நம்முடைய முஸ்லீம் லீக்
கட்சியைச் சார்ந்த உறுப்பினர் மதிப்பிற்குரிய வகாப் அவர்கள்
பேசும்பொழுது முஸ்லிம் சமுதாயத்தினர் சில நேரங்களில்
தொழுகை நடத்துகிறார்கள், குறிப்பிட்ட நேரத்தை அவர்களுக்கு



ஒதுக்கி அனுமதி வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு
முன்னால், சில மத ஸ்தலங்களில், கோவில் திருவிழாக்களில்
நடப்பது பெரிய தொல்லையாக இருக்கிறது என்று சொன்னார்கள்.
அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று புரியவில்லை. அதைப்
பற்றி விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** கோவில்களில் திருவிழாக்கள் நடக்கின்ற
நேரத்தில், திருவிழாக் காலங்களில் கடைகளை வைத்துக்
கொண்டு, வெளியிலே கடைகளை வைத்துக் கொண்டு விளம்பரம்
செய்பவர்களைப் பற்றித்தான் சொன்னேன். கோவில்களிலே
இருக்கிற மைக்கைப் பற்றிச் சொல்லவில்லை. கோவில்களில்
சுப்பிரபாதம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி
கொடுக்கலாம். அதே நேரத்தில் சர்ச்சுகளுக்கும் மதிப்பிற்குரிய
அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட அப்படிப்பட்ட நேரங்களை
ஒதுக்கி மார்க்கப் பிரசாரம் செய்வதற்கு அனுமதி பெறுவது
பற்றி ஒரு ஆட்சேபணையும் இல்லை. அப்படிப்பட்ட ஸ்தாபனங்
களுக்கும் அம்மாதிரி அனுமதி தரவேண்டும் என்றுதான்
சொல்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சென்னை
மாநகர காவல் துறை—தமிழ்நாடு நகரத் தொல்லைகள் (திருத்த)
சட்ட முன்வடிவை ஆதரித்து என்னுடைய கருத்தைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் மிகவும் அவசியமாக இருக்கிறது. நகரங்களுக்கு
மட்டுமல்லாமல், கிராமப்புறங்களுக்கும் இந்தச் சட்டத்தை
விஸ்தரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையாக இருந்தால், மேலும்
சிறந்ததாக இருக்க முடியும். கிராம மக்கள்கூட இந்தத்
தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இப்படி மைக் வைத்துக்
கொண்டு, மக்களுக்கு நிம்மதி இல்லாமல், நினைத்தபடியெல்லாம்
ரிகார்டுகளைப் போட்டு, ரிகார்டு என்று சொல்லி பல்வேறு
பாடல்களைப் போட்டு, அசிங்கப்படுத்தக்கூடிய ஒரு நிலைமை
உருவாக்கப்பட்டிருக்கிறது. இதை ஒழுங்குபடுத்தி, இந்தச்
சட்டத்தை கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். ஒரு
குறிப்பிட்ட நேரத்தில்தான் மைக் வைக்க வேண்டும் என்று
சொல்ல வேண்டும். இரவு 11 மணி இல்லை, 12 மணி இல்லை,

/

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 டிசம்பர் 12

1 மணிக்குக்கூட திருவிழாக்களிலும் இம்மாதிரியாக ரிகார்டு போடுகிறார்கள். ஆகவே, அதைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை காலையிலிருந்து இத்தனை மணி நேரம், மாலையிலிருந்து இத்தனை மணி நேரம் என்று நேரம், காலத்தை ஒதுக்கி, நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும், எல்லா இடங்களிலும் இந்தச் சட்டம் அமுலாக்கக்கூடிய அளவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்த மசோதாவின் பேரில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். அரசியல் கூட்டங்களுக்கு ஒலிப்பெருக்கி வைப்பதற்கு போலீஸ் அதிகாரிகளை அனுமதி கேட்டு, அவர்களுடைய அனுமதியைப் பெற்று ஏற்பாடு செய்கிறார்கள். அரசியல் கூட்டங்கள் அல்லாத இடங்களில் இம்மாதிரி கட்டுப்படுத்துவது அவசியம் என்றாலும், அரசியல் கூட்டங்களை நடத்துகிறபொழுது, தலைவர்கள் வருவதற்குச் சில நேரங்களில் நேரம் ஆகிவிடுகிறது என்ற காரணத்தினால், அவர்களுக்கு அனுமதி கொடுத்த நேரத்திற்குப் பிறகுகூட, கூட்டத்தை நடத்துவதற்கான நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. அம்மாதிரி நிலைமைகள் ஏற்படுகின்றபொழுது, அவர்கள் பாதிக்கப்படாவண்ணம், அரசியல் கூட்டங்களை நடத்துவதற்குச் சங்கடங்கள் ஏற்படாவண்ணம், நிலைமைகள் இருக்க வேண்டும் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். அம்மாதிரி நடவடிக்கைகள் எடுக்கும்போது மற்றக் கட்சிக்காரர்களுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மைக் மூலம் விளம்பரம் செய்யும்போது, அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அனுமதி கொடுக்க வேண்டும் என்பதை மாற்றி, அங்கங்கே உள்ள போலீஸ் அதிகாரிகளே அனுமதி வழங்கலாம் என்ற அதிகாரத்தை போலீஸ் அதிகாரிகளுக்கு வழங்கலாமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் பேரில் முதலில், நான் பேச வேண்டாம் என்றுதான் நினைத்தேன். மசோதாவின் நோக்கத்தை மேல் எழுந்தவாரியாகப் பார்த்தால் ஒன்றும் தவறாகத் தெரியவில்லை. ஆனால் இதை அமுல் நடத்தும்போது சில சங்கடங்கள் ஏற்படக் கூடும் என்றே நினைக்கிறேன். அந்தச் சிக்கல்களை எவ்வாறு களைவது என்பது பற்றி ஆராய்வது நல்லது. நமது நாட்டில் ஒலிப்பெருக்கி



1974 டிசம்பர் 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வைத்து பொதுக் கூட்டங்கள் நடத்துவது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற ஒரு பழக்கமாகி விட்டது. நாதசுரம்கூட தேவையில்லை. ஒலிப்பெருக்கி இருந்தால் போதும் செலவு மிச்சம் என்ற அளவிற்கு மனப்பான்மை வளர்ந்து விட்டது. அதேமாதிரிதான் பொதுக் கூட்டங்களுக்கும். நேரத்தைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது பிரச்னை. சில இடங்களில் அமைச்சர்கள் தாங்களாகவே, 10 மணி ஆகிவிட்டால் அதற்கு மேல் ஒலிப்பெருக்கி வேண்டாம் என்று கூறுவதையும் பார்த்திருக்கிறேன். மற்றக் கட்சித் தலைவர்களும் அப்படித்தான். இன்னும் சில நேரங்களில் 10 மணிக்கு மேலும் மைக் வைத்து அமைச்சர்கள் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். மற்றத் தலைவர்களும் கூட. எனவே, இந்த நேரக் கட்டுப்பாட்டை எல்லோரும் அனுசரிக்க வேண்டும். இது சாத்தியமா? இந்த மாதிரி விஷயங்களை எல்லாம் கவனிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒலிபெருக்கி அனுமதி வாங்குவதற்கு போலிஸ் ஸ்டேஷன் என்பதைவிட, தனியாகவே ஒரு இலாகாவை அமைத்து விடலாம். ஸ்டாம்ப் பேப்பர் ஒட்ட வேண்டும் என்று வற்புறுத்த வேண்டியதில்லை. உறுதிமொழிக் குழுவில் கூறியுள்ளவை மசோதாவாக வந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் இதில் அமுல் படுத்துவதிலுள்ள சில சிக்கல்களைக் கவனித்து தீர்த்தால் போதும் என்று மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சமயத்தில் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ரேடியோவில் சுப்ரபாதம் வைக்கிறார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பக்கத்து வீட்டுக்காரர் வால்யூமைக் கூட்டி, அது ஆயிரம் பேருக்குக் கேட்கும்படி செய்கிறார்களே, இதற்கு என்ன செய்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காதிலே மணியைக் கட்டிக் கொள்ளுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த நாட்டிலே ஆரன் பண்ணுவது இருக்கிறது பாருங்கள் அதுபோல வேறு எங்குமே கிடையாது. இதிலே டபிள் ஆரன் வேறு. ஏற்கனவே இது பற்றி

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 12

போக்குவரத்து இலாகாவில் பேசியுள்ளேன். இப்படிச் சத்தத்தை உண்டு பண்ணுகிறார்கள். எனவே, மற்ற கட்சிகளுக்கு ஏதேனும் தடை வந்து விடாமல் இந்த மசோதா நல்லவிதமாக அமுல் படுத்தப்பட்டால் நல்லது என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** நம் ஒலிபெருக்கிகூட 1½ மணிக்கு ஆஃப் ஆகி விட வேண்டும்.

(திரு. ஜே. ஜேம்ஸ் பேச எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 நிமிஷம்தான் இருக்கிறது. எவ்வளவு நேரம் பேச முடியும்? இப்படிச் செய்தால் பின் இன்னொரு நாளுக்குத் தான் போகும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, சீக்கிரத்தில் முடித்து விடுகிறேன். இந்த மசோதா நல்ல நோக்கத்தோடுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டும் கூறி, முடித்து விடுகிறேன். ஒலிபெருக்கி உபயோகப்படுத்த போலீஸ் அதிகாரிகளிடத்தில் அனுமதி வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. வரவேற்கிறேன். கலெக்டரிடத்தில் வாங்க வேண்டுமென்றால் காலதாமதம் ஆகிறது. போலீஸ் அதிகாரிகளிடத்திலேயே அந்த அதிகாரம் இருந்தால் நலம் என்றே நான் நினைக்கிறேன்.

அதோடு, இந்தச் சட்டம் எல்லோருக்கும் பொருந்த வேண்டும். எதிர்க்கட்சிகளுக்கெல்லாம் 10 மணி என்று போலீஸ் அதிகாரிகள் நிர்ப்பந்தப்படுத்தி விடுகிறார்கள். அமைச்சர்களுக்கும் இந்த கட்டுப்பாடு கொண்டுவரப்பட வேண்டும். அமைச்சர்கள் இந்த சட்டத்தை மீறி நடக்கிறார்கள். எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. முன்னாள் அமைச்சர் கக்கன்ஜீ ஒரு இடத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது, 10 மணி ஆகிவிட்ட சமயம் சைரன் சத்தம் கேட்டவுடன், மைக்கை ஒதுக்கி வைத்து விட்டு, மைக் இல்லாமல் பேசினார். அந்தமாதிரி, அமைச்சர்களும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 டிசம்பர் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவோடு முடிவுற்று பேரவை, நாளைக் காலை 9 மணியளவில் மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.29 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

@ 1. Notification issued with G.O. Ms. No. 116, Co-operation dated the 21st March 1973, in regard to certain amandments to Rule 13 and 14 of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 199 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

@ 2. Notification issued with G.O. Ms. No. 94, Excise and Prohibition, dated the 14th May 1974 in regard to closure of all liquor shops including arrack shops in the entire State of Tamil Nadu on 15th May 1974. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

@ 3. Notification issued with G.O. Ms. No. 424, Co-operation, dated the 19th November 1973, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

@ 4. Notification issued with G.O. Ms. No. 634, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Tiruchengode Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

@ 5. Notification issued with G.O. Ms. No. 392, Agriculture, dated the 15th March 1974, in regard to regulation of trade over the purchase and sale of ragi in the Dharmapuri district. [Laid

on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 6. Notification issued with G.O. Rt. No. 689, Revenue, dated the 26th April 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge to the film show organised by the Secretary, West Mambalam Post and Telegraph office, Recreation Club at 10 a.m. on 28th April 1974 at Ram Theatre, Kodambakkam, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 7. Notification issued with G.O. Ms. No. 652, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Dharapuram Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

@ 8. Notification issued with G.O. Ms. No. 661, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Kanyakumari Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 9. Notification issued with G.O. Ms. No. 642, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Arkonam Local Planning Area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 10. Notification issued with G.O. Ms. No. 627, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Palani Local Planning Area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 11. Notification issued with G.O. Ms. No. 638, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Srivilliputhur Local



Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 12. Notification issued with G.O. Ms. No. 631, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Sivakasi Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 13. Notification issued with G.O. Rt. No. 633, Revenue, dated the 19th April 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge to the film show proposed to be held by the Madras District Kabaddi Association at 10 a.m. on 21st April 1974 at Plaza Theatre, Mount Road, Madras-2. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 14. Notification issued with G.O. Ms. No. 662, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Pudukkottai Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 15. Notification issued with G.O. Ms. No. 663, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Mayuram Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 16. Notification issued with G.O. Ms. No. 645, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Devekottai Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 17. Notification issued with G.O. Ms. No. 655, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Walajapet Local

Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 18. Notification issued with G.O. Ms. No. 637, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Tirupattur Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

£ 19 Notification issued with G.O. Ms. No. 867, Rural Development and Local Administration, dated the 30th March 1974 in regard to postponement of the general revision of assessment books in respect of Municipalities specified in the Schedule and in respect of the Mettur Township Committee. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

£ 20. Notification issued with G.O. Ms. No. 387, Rural Development and Local Administration, dated the 20th February 1974 in regard to revision of strength according to 1971 Census population as 60 (sixty) Councillors in the Madurai City Municipal Corporation Council. [Laid on the table of the House under section 432 (2) of the Tamil Nadu Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

& 21. Notification issued with G.O. Ms. No. 483, Rural Development and Local Administration, dated the 1st March 1974 in regard to certain amendments to the rules for the election of Mayor and Deputy Mayor of Corporation of Madurai. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

& 22. Notification issued with G.O. Ms. No. 1304, Rural Development and Local Administration, dated the 22nd May 1974 in regard to the date of Mayor and Deputy Mayor election for the year 1974. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

& 23. Notification issued with G.O. Ms. No. 1179, Rural Development and Local Administration, dated the 8th May 1974 in regard to an amendment to the rules for the election of Mayor and





Deputy Mayor of Corporation of Madurai. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971..]

& 24. Notification issued with G.O. Ms. No. 1026, Rural Development and Local Administration, dated the 16th April 1974 in regard to declaration of the areas forming the Kumbakonam Local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

& 25. Notification issued with G.O. P. No. 7468, Revenue, dated the 19th December 1973 in regard to certain amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 26. Order issued with G.O. Ms. No. 1989, Revenue, dated the 10th May 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge to the International Retrospective Children's Film Festival to be conducted by the Children's Film Society, India from 17th to 26th May 1974. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 27. Notification issued with G.O. Ms. No. 463, Co-operation dated the 20th December 1973 in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

& 28. Order issued with G.O. Rt. No. 822, Revenue, dated the 20th May 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge to one film show proposed to be held by the Inner Wheel Club of Nilgiris at 10 a.m. on the 19th May 1974 at Bedford Talkies, Coonoor. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 29. Notification issued with G.O. Ms. No. 82, Agriculture, dated the 25th January 1974 in regard to declaration of notified market areas or Kaveripakkam and Takkolam markets in respect of paddy, groundnut, gingelly and sugarcane jaggery in all forms

in North Arcot district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

& 30. Notification issued with G.O. Ms. No. 946, Public (Services-A), dated the 19th March 1974 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of temporary post of Research Assistant in Health Education Bureau of Health and Family Planning Department for inclusion within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

& 31. Notification issued with G.O. Ms. No. 1024, Rural Development and Local Administration, dated the 16th April 1974, in regard to declaration of the areas forming the Salem local Planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

& 32. Notification issued with G.O. Ms. No. 612, Rural Development and Local Administration, dated the 15th March 1974, in regard to constitution of Madurantakam and Karunguli Town Panchayats into a Municipality with twenty councillors with effect on and from the 1st April 1974. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 33. Notification issued with G.O. Ms. No. 802, Rural Development and Local Administration, dated the 27th March 1974, in regard to constitution of Suramangalam town panchayat in Salem district into a municipality with twenty councillors with effect from 1st April 1974. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 34. Notification issued with G.O. Ms. No. 1003, Agriculture, dated the 20th June 1974, in regard to exclusion of certain villages from the notified market area of the Annur market of the Coimbatore district declared as such for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, in respect





of cotton, groundnut and tobacco. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

& 35. Notification issued with G.O. Ms. No. 1025, Rural Development and Local Administration, dated the 16th April 1974, in regard to declaration of the areas forming the Dindigul local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

& 36. Notification issued with G.O. Ms. No. 2246, Revenue, dated the 28th May 1974, in regard to certain amendments to the Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Rules, 1973. [Laid on the table of the House under section 43 (5) of the Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1972 (Tamil Nadu Act 11 of 1973).]

& 37. Notification issued with G.O. Ms. No. 660, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Namakkal local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

& 38. Notification issued with G.O. Ms. No. 626, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Vaniyambadi local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

& 39. Notification issued with G.O. Ms. No. 94, Rural Development and Local Administration, dated the 18th January 1974, in regard to division of 32 wards and reservation of two seats for Scheduled Castes and three seats for women in the Thiruvannamalai Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 40. Notification issued with G.O. Ms. No. 101, Rural Development and Local Administration, dated the 18th January 1974, in regard to division of 16 wards and reservation of one seat

for Scheduled Castes and two seats for women in the Walajapet Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 41. Notification issued with G.O. Ms. No. 628, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Sattur local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

& 42. Notification issued with G.O.Ms. No. 330, Rural Development and Local Administration, dated the 14th February 1974, in regard to division of twenty-four wards and reservation of two seats for Scheduled Castes and two seats for women in the Virudhachalam Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 43. Notification issued with G.O. Ms. No. 775, Agriculture, dated the 10th May 1974, relating to regulation of trade in gingelly and blackgram in Ramanathapuram district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

& 44. Notification issued with G.O. Ms. No. 1569, Home, dated the 25th June 1974, in regard to cancellation of notification relating to the exemption granted to the vehicle MSM 7806 and reduction of tax in respect of the vehicle TMZ 8140 belonging to the Little Sisters of the Poor, Madras. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

&& 45 Notification issued with G.O. Ms. No. 899, Home, dated the 11th April 1974, in regard to reduction of tax in respect of goods vehicle MDK 3208 and truck trailer MDY 1702 belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]



& 46. Notification issued with G.O. Ms. No. 1574, Rural Development and Local Administration, dated the 29th June 1974, in regard to revision of strength according to 1971 census population as sixty-five councillors in the Madurai City Municipal Corporation Council. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

& 47. Notification issued with G.O. Ms. No. 658, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Coonoor local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

& 48. Notification issued with G.O. Ms. No. 678, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Tiruvallur local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

&& 49. Notification issued with G.O. Ms. No. 640, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Tenkasi local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

&& 50. Notification issued with G.O. Ms. No. 683, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Udumalaipettai local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

&& 51. Notification issued with G.O. Ms. No. 646, Rural Developement and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Vridhachalam local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

1974 டிசம்பர் 12]

&& 52. Notification issued with G.O. Ms. No. 1087, Rural Development and Local Administration, dated the 23rd April 1974, in regard to declaration of the areas forming the Nagercoil local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

&& 53. Notification issued with G.O. Ms. No. 669, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Ambur local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

&& 54. Notification issued with G.O Ms. No. 816, Home, dated the 1st April 1974 making the Tamil Nadu Motor Vehicles Taxation Rules, 1974. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

&& 55. Notification issued with G.O. Ms. No. 1396, Home, dated the 7th June 1974 in regard to an amendment to rule 409 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

&& 56. Notification issued with G.O Ms. No. 954, Rural Development and Local Administration, dated the 9th April 1974 in regard to variation in the list of parks in the area within the jurisdiction of Vellore Municipality. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play fields and open spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

&& 57. Notification issued with G.O. Ms. No. 1530, Rural Development and Local Administration, dated the 15th June, 1974 in regard to appointment of Divisional Development Officers to be officers for the purpose of inspecting and Superintending the operations of all the Panchayats and Panchayat Union Councils within their respective jurisdictions. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



1974 டிசம்பர் 12]

&& 58. Notification issued with G.O. Ps. No. 2035, Revenue dated the 16th May 1974 in regard to amendment to the Third Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959). [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

&& 59. Notification issued with G.O. Rt. No. 1196, Revenue, dated the 11th July 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on cinematographic film show organised by the Staff Recreation Club, Food Corporation of India, Madras at 10 a.m. on 13th July 1974 at Krishnaveni Theatre, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

&& 60. Notificaion issued with G.O. Ms. No. 1233, Rural Development and Local Administration, dated the 15th May 1974 in regard to variations to the list of parks in the area within the jurisdiction of the Arkonam Municipal Council. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

&& 61. Notification issued with G.O. Ms. No. 635, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Pollachi local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

&& 62. Notification issued with G.O. Ms. No. 684, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Shencottah local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

&& 63. Notification issued with G.O. Ms. No. 672, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Gudiyatham

local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

&& 64. Notification issued with G.O. P. No. 2726, Revenue, dated the 1st July 1974 in regard to an amendment to rule 26 of the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

&& 65. Notification issued with G.O. Ms. No. 130, Rural Development and Local Administration, dated the 23rd January 1974 in regard to division of twenty-four wards and reservation of two seats for scheduled castes and one seat for women in the Theni-Allinagaram Municipal Council. [Laid on the table of the House under sction 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

&& 66. Notification issued with G.O. Ms. No. 946, Agriculture, dated the 7th June 1974 in regard to declaration of the notified market area for Kelamangalam market in respect of groundnut, gingelly, tamarind, cane jaggery in all forms and cotton. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

% 67. Notification issued with G.O. Ms. No. 1377, Rural Development and Local Administration, dated the 30th May 1974 in regard to amendment to the Schedule appended to the Rural Development and Local Administration Department notification No. 11 (2)/RUL/1124(X)/74, published at pages 33 to 36 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

% 68. Notification issued with G.O. Ms. No. 1470, Rural Development and Local Administration, dated the 14th June 1974 in regard to revised notification relating to jurisdictions of development districts in Tiruchirappalli, Thanjavur and Pudukottai Revenue districts under the Tamil Nadu District Development Councils Act, 1958. [Laid on the table of the House under section 11 (3) of the Tamil Nadu District Development Councils Act, 1958 (Tamil Nadu Act XVIII of 1958).]



% 69. Notification issued with G.O. Ms. No. 1562, Rural Development and Local Administration, dated the 23th June 1974 in regard to establishment of a District Development Council for the Pudukottai Development District with effect from the 1st July 1974. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu District Development Councils Act, 1958 (Tamil Nadu Act XVIII of 1958).]

% 70. Notification issued with Roc. No. 853/74-E4, dated the 9th June 1974 in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Narasingapuram and Vennandur Town Panchayats in Salem district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 71. Notification issued with G.O. Ms. No. 832, Rural Development and Local Administration, dated the 29th March 1974 in regard to declaration of the areas forming the Madurai local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 72. Notification issued with G.O. Ms. No. 654, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Colachel local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 73. Notification issued with G.O. Ms. No. 670, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Tiruvannamalai local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 74. Notification issued with G.O. Ms. No. 674, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Valparai local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 75. Notification issued with G.O. Ms. No. 1503, Rural Development and Local Administration, dated the 21st June 1974 in regard to declaration of the areas forming the Tirunelveli local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 76. Notification issued with G.O. Ms. No. 1502, Rural Development and Local Administration, dated the 21st June 1974 in regard to declaration of the areas forming the Coimbatore local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 77. Notification issued with G.O. Ms. No. 1210, Rural Development and Local Administration, dated the 13th May 1974 in regard to declaration of the areas forming the Rameswaram local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 78. Notification issued with G.O. Ms. No. 651, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Cumbum local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 79. Notification issued with G.O. Ms. No. 1086, Rural Development and Local Administration, dated the 23rd April 1974 in regard to declaration of the areas forming the Vellore local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]



% 80. Notification issued with G.O. Ms. No. 639, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Bodinayakanur local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

% 81. Notification issued with G.O. Ms. No. 1096, Home, dated the 3rd May 1974 in regard to amendment to rule 168-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act I of 1939).]

% 82. Notification issued with G.O. Ms. No. 1917, Home, dated the 31st July 1974 in regard to exemption from levy of surcharge on motor vehicles tax in respect of stage carriages plying exclusively within the Madras Metropolitan area with effect from the 1st October 1974. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation, Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

% 83. Notification issued with G.O. Ms. No. 1701, Revenue, dated the 18th April 1974 in regard to appointment of all Joint Commercial Tax Officers and Deputy Commercial Tax Officers of the Inspector Squads, Intelligence Wing, the Entertainments Squads and of the Central Intelligence Wing, Board of Revenue to exercise the power of an Entertainments Tax Officer within their respective jurisdictions. [Laid on the table of House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

% 84. Notification issued with G.O. Ms. No. 2327, Home, dated the 30th August 1973 in regard to amendments to rule 155-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

% 85. Notification issued with G.O. Ms. No. 2375, Revenue, dated the 6th June 1974 in regard to amendment to the Revenue Department Notification II-1 No. 3987 *(b)* of 1971, published at page 2 of Part II—Section 1 of the *Tamil Nadu Government*

Gazette Extraordinary, dated the 8th September 1971, as subsequently amended. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 1 of 1969).]

% 86. Notification issued with G.O. Ms. No. 1986, Revenue, dated the 9th May 1974 in regard to setting up of check-posts at Aliyur in Pollachi taluk, Coimbatore district and at Kalipettai in Dharmapuri district. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

% 87. Notification issued with G.O. Ms. No. 2174, Revenue, dated the 23rd May 1974 in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

%% 88 Sixteenth Annual Report of the South India Viscose Limited, Coimbatore for the year 1973. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

89. The Second Annual Report and Accounts of the Tamil Nadu Theatre Corporation limited for the year ended 31st March 1974. [Laid on the table of the House under Section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

90. The Third Annual Report of the Tamil Nadu Agricultural University, Coimbatore for the year 1973–74. [Laid on the table of the House under section 49 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

91. The Report of the Comptroller and Auditor-General of India for the year 1972–73. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

92. The Advance Report of the Controller and Auditor-General of India for the year 1972–73. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

93. Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Agro-Industries Corporation Limited for the year ended 31st March 1973. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]





## B. *Reports, Notifications and Other Papers.*

@ 1. Errata issued with Memo. No. 27710/ME/74-1, Rural Development and Local Administration, dated the 20th March 1974 to Notification No. 11 (2) RUL 877 (ak)/74, published at pages 47 to 49 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

@ 2. Errata issued with Memo. No. 40129/ME/74-1, Rural Development and Local Administration, dated the 10th April 1974 to Notification No. II (2)/RUL/1124/(h)/74, published at pages 1 to 6 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

@ 3. Errata issued with Memo. No. 34140/ME/74-1, Rural Development and Local Administration, dated the 23rd March 1974 to the Notification No. II (2)/RUL/877(s) 74, published at pages 13 to 18 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

@ 4. Errata issued with Memo. No. 12260/ME/74-1, Rural Development and Local Administration, dated the 8th April 1974 to the Notification II-1 No. 6307(k) of 1973, published at pages 5 to 10 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* (Extraordinary), dated the 31st December 1974.

@ 5. Errata issued with Memo. No. 40126/ME/74-2, Rural Development and Local Administration, dated the 29th April 1974 to the Notification No. II (2)/RUL/1124 (x)/74, published at pages 33 to 36 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

@ 6. Errata issued with Memo. No. 15516/ME/74-1, Rural Development and Local Administration, dated the 6th March 1974 to Notification No. II (2)/RUL/100 (t)/74, published at pages 37 to 39 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

@ 7. Errata issued with Memo. No. 40149/ME/74-1, Rural Development and Local Administration, dated the 25th March 1974 to the Notification No. II(2)/RUL/877(ae)/74, published at pages 36 to 40 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

@ 8. Errata issued with the Memo. No. 27713/ME/74-1, Rural Development and Local Administration, dated the 13th March 1974 to Notification No. II(2)/RUL/877(o)/74, published at pages 7 to 10 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

@ 9. Notification issued with G.O. Ms. No. 1031, Revenue, dated the 8th March 1974 in regard to reduction in stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of gift deeds to be executed by the owners of layouts handing over lay-out roads in Coimbatore town in favour of the Municipal Council, Coimbatore.

@ 10. Notification issued with G.O. Ms. No. 1731, Revenue, dated the 22nd April 1974 in regard to reduction in stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of a sale deed to be executed in favour of the Beatitudes Social Welfare Centre, Vysarpadi.

@ 11. Notification issued with G.O Ms. No. 1583, Revenue, dated the 9th April 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of mortgage deed to be executed in favour of the Melvisharam Muslim Educational Society.

@ 12. Notification issued with G.O. Ms. No. 1376, Revenue, dated the 27th March 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of mortgage deed to be executed in faour of the Housing and Urban Development Corporation Ltd., New Delhi.

£ 13. Errata issued with Memo. No. 21371/ME/74-1, Rural Development and Local Administration, dated the 9th March 1974 to Notification No. 11(2)/RUL/283 (aaq)/74, published at pages 26 to 28 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

£ 14. Errata issued with Memo. No. 28706/ME/74-1, Rural Development and Local Administration, dated 22nd March 1974 to Notification No. 11(2)/RUL/1003/(i)74, published at pages 13 to 19 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.



£ 15. Errata issued with Memo. No. 35336/ME/74-1, Rural Development and Local Administration, dated the 4th April 1974 to Notification No. II (2)/RUL/1005(u)/74, published at pages 34 to 37 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* (Extraordinary), dated the 16th February 1974.

£ 16. Errata issued with Memo. No. 15435/ME/74-1, Rural Development and Local Administration, dated the 5th March 1974 to Notification No. II(2)/RUL/255(at)/74, published at pages 4 to 7 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 17th January 1974.

£ 17. Errata issued with Memo. No. 20036/ME/14-1, Rural Development and Local Administration, dated the 29th April 1974 to Notification II-1 No. 5773 (f) of 1973, published at pages 3 to 6 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 1st December 1973.

£ 18. Errata issued with Memo. No. 7079/ME/74-1, Rural Development and Local Administration, dated the 18th April 1974 to notification II—1 No. 6307(b) of 1973, published at pages 1 to 6 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 27th December 1973.

£ 19. Errata issued with Memo. No. 26568/ME/74-1, Rural Development and Local Administration, dated the 3rd April 1974 to Notification No. II (2)/RUL/748(i)/74, published at pages 1 to 4 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 5th February 1974.

£ 20. Notification issued with G.O. Ms. No. 1617, Revenue, dated the 10th April 1974 in regard to reduction in stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the deed of exchange to be executed by the Correspondent, Ramanathan Chettiar High School, Nachandupatti and the Executive Officer, Kottoor Sri Sivan Temple in respect of the exchange of lands.

£ 21. Notification issued with G.O. Ms. No. 1467, Revenue, dated the 1st April 1974 in regard to remission of registration fees for settlement deed to be executed by the American Board of Commissioners for Foreign Mission in favour of the American College Governing Council, Madurai.

£ 22. Errata issued with Memo. No. 38366/ME/74-1, Rural Development and Local Administration, dated the 8th April 1974 to Notification No. 11(2)/RUL/1124(ae)/74, published at pgaes 43 to 47 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

£ 23. Errata issued with Memo. No. 27713/ME/74-2, Rural Development and Local Administration, dated the 11th June 1974 to Notification relating to the division of the Ambur Municipality into wards, published on page 2 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 15th March 1974.

£ 24. Errata issued with Memo. No. 43507/ME/74-1, Rural Development and Local Administration, dated the 15th April 1974 to notification No. 11(2)/RUL/1124(r)/74, published at pages 27 to 33 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinaary, dated the 23rd February 1974.

£ 25. Errata issued with Memo. No. 54171/ME/74-1, Rural Development and Local Administration, dated the 18th April 1974 to Notification No. 11(2)/RUL/1003(o)/74, published at pages 25 to 28 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.

£ 26. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council for the period from 17th January to 23rd May 1974 during its forty-seventh session.

& 27. Errata issued with Memo. No. 44955/ME/74-1, Rural Development and Local Administration, dated the 15th April 1974 to Notification No. II(2)/RUL/1124 (ab)/74, published at pages 39 to 42 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

& 28. Notification issued with G.O. Ms. No. 2350, Revenue, dated the 5th June 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of mortgage deed to be executed by the Tamil Nadu Housing Board in favour of the Life Insurance Corporation of India.



& 29. Notification issued with G.O. Ms. No. 2188, Revenue, dated the 24th May 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of sale deeds to be executed by the Tamil Nadu Housing Board in favour of allottees of the plots.

& 30. Erratum to errata issued with Memo. No 40126/ME/74-3, Rural Development and Local Administration, dated the 11th June 1974 relating to division of Dharapuram Municipality into wards, published on page 1 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 7th May 1974.

& 31. Errata issued with Memo. No. 52170/ME/74-1, Rural Development and Local Administration, dated the 25th April 1974 to Notification No. 11(2)/RUL/1124 (ag)/74, published at pages 1 to 10 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 25th February 1974.

& 32. Errata issued with Memo. No. 42600/ME/74-1, Rural Development and Local Administration, dated the 10th April 1974 to Notification No. 11(2)/RUL/1003 (g)/74, published at pages 8 to 13 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.

& 33. Errata issued with Memo. No. 9082/ME/74-1, Rural Development and Local Administration, dated the 8th April 1974 to Notification II—1 No. 6307 (g) of 1973, published at pages 1 to 3 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 31st December [illegible]

& 34. Notification issued with G.O. Ms. No. 1974, Revenue, dated the 9th May 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of mortgage deeds and agreements to be executed by Government servants on foreign service terms in the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited, Madras.

&& 35. Notification issued with G.O. Ms. No. 2089, Revenue, dated the 20th May 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the lease deed to be executed by the Kapaleswarar Temple Trust in favour of the National Council of Women in India.

&& 36. Notification issued with G.O. Ms. 1998, Revenue, dated the 13th May 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deed to be executed by Thirumathi E. L. Viswasam, in favour of the Madras Vigilance Association, Madras.

&& 37. Errata issued with Memo. No. 17715/ME/74-1, Rural Development and Local Administration, dated the 15th April 1974 to Notification No. 11(2)/RUL/100 (r)/74, published at pages 39 to 43 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.

&& 38. Erratum issued with Memo. No. 95736/ME/74-2, Rural Development and Local Administration, dated the 9th August 1974 to the errata to the notification relating to division of Arkonam Municipality into wards published on page 169 in Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 20th March 1974.

&& 39. Notification issued with G.O. Ms. No. 2654, Revenue, dated the 25th June 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the reconveyance deed to be executed by the Principal, Tirunelveli Medical College in favour of Messrs. Bhuhari and Sons Private Limited.

&& 40. Notification issued with G.O. Ms. No. 2520, Revenue, dated the 15th June 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deed to be executed in favour of the Electricity Staff Co-operative Building Society Limited, Tirunelveli.

% 41. Errata issued with Memo. No 93418/ME/74-1, Rural Development and Local Administration, dated the 15th July 1974 to the errata to the notification relating to Division of Kumbakonam Municipality into wards published in Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 24th May 1974.



% 42. Errata issued with Memo. No. 27711/ME/74-1, Rural Development and Local Administration, dated the 20th March 1974 to the schedule appended to Rural Development and Local Administration Department Notification No. 11(2)/RUL/877(u)/74 published at pages 19 to 21 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

% 43. Errata issued with Memo. No. 24326/ME/74-2, Rural Development and Local Administration, dated the 20th May 1974 to Rural Development and Local Administration Department Notification No. 116, Part II—Section 2 published at page 2 of *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th March 1974.

% 44. Notification issued with G.O. Ms. No. 1321, Revenue, dated the 25th March 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of sale deed to be executed in favour of Swedish Red Cross Rehabilitation Trust, Katpadi.

45. The Administrative Reforms Commission Report on Co-operation.

+ % 46. The Tamil Nadu Prohibition (Amendment) Ordinance 1974 (Tamil Nadu Ordinance No. 4 of 1974).

+ % 47. The Tamil Nadu Local Authorities' Laws (Second Amendment) Ordinance, 1974 (Tamil Nadu Ordinance No. 5 of 1974).

$ % 48. The Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974 as introduced in Lok Sabha.

$ % 49. The Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974 as passed by Lok Sabha.

$ % 50. The Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974 as passed by Houses of Parliament.

$ % 51. Lok Sabha Debate on the Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974.

$ % 52. Rajya Sabha Debate on the Constitution (Thirty-sixth Amendment) Bill, 1974.

---

@ Despatched to Members on 10th September 1974.

£ Despached to Members on 5th October 1974.

& Despatched to Members on 8th November 1974.

&& Despatched to Members on 22nd November 1974.

% Despatched to Members on 5th December 1974.

% Laid on the table of the Legislature Library with reference to the Proviso to Rule 21 (5) of the Tamil Nadu Legislature Assembly Rules.

+% Despatched to Members on 23rd October 1974.

$% Despatched to Members on 12th December 1974.



## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### வெள்ளிக்கிழமை, 1974 டிசம்பர் 13.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### சுய அதிகாரம் பெற்ற கல்லூரிகள்

*1 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சர்வகலாசாலையின்கீழ் இயங்கும் கல்லூரிகளில் சிலவற்றிற்கு சுய அதிகார அந்தஸ்து வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஆம். இது பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, என்ன என்ன அதிகாரங்கள் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் குழு சில வசதி வாய்ப்புகள் கொண்ட கல்லூரிகளை, ஆட்டானமஸ் காலேஜ் என்ற அளவுக்கு, சிலபல உரிமைகள் கொடுத்துத் தனியாக நடத்துவது நல்லது என்று பரிந்துரை செய்தது. அதைப் பல்வேறு பல்கலைக்கழகங்கள் ஆராய்ந்து, பல்கலைக்கழகத்தினுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டு கல்லூரிகள் சிலவற்றில் இப்படிப்பட்ட முறைகளைப் புகுத்தலாம் என்ற அளவுக்கு யோசனை சொல்லியிருக்கிறது. அதில் அவர்கள் குறிப்பாகக் கூறியிருப்பது,

(a) Academic reputation and previous performance in university examination and other academic, cultural activities.

(b) Academic attainments of the staff.

[1974 டிசம்பர் 13

(c) The mode of selection of students and teachers, viz.. whether such selection is without regard to caste, creed or social class.

(d) physical facilities, i.e., library, accommodation and equipment.

(e) institutional management, viz., whether it is motivated by and responsive to academic or non-academic considerations.

(f) The financial resources that the management can provide for the development of the Institution.

(g) The responsiveness of the admiistrative structure to the views of staff and students.

(h) Extent of freedom enjoyed by the staff for advanced scholarship, research and experimentation and incolvement in educational innovation and reforms.

இந்தத் தகுதிகள், வாய்ப்புகள் உடைய கல்லூரிகளாகப் பார்த்துத் தேர்ந்தெடுக்கலாம் என்ற அளவுக்கு அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், இந்த அளவுக்குப் பரீட்சார்த்தமாக அமெரிக்கன் கல்லூரியை இப்படி ஆட்டானமஸ் காலேஜாக ஆக்கலாம் என்ற அளவுக்கு சிண்டிகேட் அவை, செனட் அவை ஆகியவற்றின் பரிந்துரையுடன் பல்கலைக் கழக மானியக் குழுவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இதைப் பொறுத்து சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய கருத்து என்ன என்று அறிவதற்காகக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. கல்லூரிக் கல்வி இயக்குநரின் அறிக்கை இதுபற்றி எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மதுரைப் பல்கலைக்கழகத்தில் அமெரிக்கன் காலேஜை இப்படி ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித் தார்கள். அதே மாதிரி, சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஏதாவது கல்லூரியின் பெயர் அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக்கழகத்திடம் இந்த முறையை யொட்டிக் கருத்து அறிவிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதன் அறிக்கை வந்த பிறகு, சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஓரிரு கல்லூரிகளை எடுக்கலாம் என்பதுதான் அரசினுடைய எண்ணம். ஆனால், பல்கலைக்கழகத்தினுடைய கருத்து கேட்கப்பட்டிருக்கிறது.



1974 டிசம்பர் 13]

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் சங்க இலக்கிய நூல்கள் எல்லாம் ஆராயப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. திருக்குறள் ஆராய்ச்சிக் கென்று தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, பல்கலைக்கழகத்தின் வாயிலாக ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மேற்கூறிய தகுதிகள் எல்லாம் அமெரிக்கன் கல்லூரிக்கு இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அது ஒரு ரெசிடென்ஷியல் யூனிவர்சிடி மாதிரி இயங்குமா என்ற விவரத்தை அமைச்சரவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது ரெசிடென்ஷியல் யூனிவர்சிடியாக ஆகாது. ஆட்டானமஸ் காலேஜ் என்ற பிரிவில் வரும். பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையில் இருக்கும். பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாடு இருக்கும். ஆனால், ஸிலபஸ் வகுக்க, தேர்வு முறைகளைக் கையாள ஆகியவைகளில் அந்தக் கல்லூரிக்குத் தனியுரிமை அளிக்கப்படும். ஆட்டானமஸ் காலேஜ் என்றால் அதுதான். பல்கலைக்கழக மானியக் குழுவினுடைய இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கா. காளிமுத்து:** அரசுக் கல்லூரிகள் எவற்றுக்கேனும் இத்தகைய சுய அதிகாரம் வழங்கும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கல்லூரிக் கல்வி இயக்குநரிடத்திலிருந்து கருத்து அறியப்படுகிறது. ஏதேனும் முக்கிய அரசுக் கல்லூரிகளை இப்படிப் பட்ட வகையில் அமைக்கலாமா என்பது குறித்து கல்லூரிக் கல்வி, இயக்குநருடைய கருத்து கேட்கப்பட்டிருக்கிறது.

**திரு. மு. முத்தையா:** மதுரைப் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும் மதுரைக் கல்லூரி மாணவர்களிடையே ஒரு மாத காலத்திற்கு முன்பு வகுப்புக் கலவரம் ஏதேனும் நடந்தது உண்டா? அப்படி நடந்திருந்தால் இனிமேல் நடக்காமலிருப் பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தனிக் கேள்வி வேண்டும்.

[1974 டிசம்பர் 13

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இப்படி அதிகாரம் வழங்கப்படுகிற கல்லூரிகளுக்கு அரசாங்க மானியமும் பல்கலைக் கழக மானியக் குழு அளிக்கும் மானியத் தொகையும் தொடர்ந்து அளிக்கப்படுமா? அல்லது, நன்கொடை வசூலிப்பது போன்ற அதிகாரமும் சுய அதிகாரத்தில் அடங்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 'ஆடானமஸ் காலேஜ்' என்று சுய அதிகாரம் கொண்ட கல்லூரி அமைக்கும்போது செலவினம் ஓரளவுக்குக் கூடும். அந்தச் செலவினத்தைப் பல்கலைக் கழக மானியக் குழு ஐந்தாண்டுகளுக்கு ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கிறது. முதல் ஐந்து ஆண்டு களுக்குக் கூடுதலாக ஆகும் செலவைப் பல்கலைக் கழக மானியக் குழு தரும்.

### தனியார் கல்லூரிகளின் கணக்குகள்

*** 2 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்லூரிகளில் கணக்குகளை அரசு தணிக்கை செய்கிறதா?

(இ) இது எந்த ஆண்டிலிருந்து செயல்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 1972-73-ம் ஆண்டு கணக்குகளிலிருந்து தனியார் கல்லூரிகளின் கணக்குகளை அரசு தணிக்கை செய்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தனியார் கல்லூரிகளினுடைய கணக்கைத் தணிக்கை செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தால் கட்டாயம் ஆக்கப் பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால், எல்லாத் தனியார் கல்லூரி களிலிருந்தும் கணக்கு கேட்டிருக்கிறதா? சில கல்லூரிகள் கணக்கு கொடுக்காமலிருந்தால் அதுகுறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? நன்கொடை வாங்குவது போன்று செய்கிறார்களே, அதுவும் அந்தக் கணக்கில் வருகிறதா என்று அரசு ஆராய்ந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒவ்வொரு தனியார் கல்லூரியும் மூன்று தணிக்கையாளர்களின் பெயர்களை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அறிவிக்க வேண்டுமென்றும், கல்லூரிக் கல்வி இயக்குநர்,



1974 டிசம்பர் 13]

அவர்களில் ஒருவரைத் தெரிந்தெடுப்பார் என்னும் முறை இருந்து வருகிறது. ஆனால், அடிக்கடி கல்வித் துறையின் சார்பாகப் பல்வேறு அறிக்கைகள் வெளிவருவது குறித்து சட்ட திட்டங்கள் முதலியவை போடுவதன் காரணமாக, கல்லூரிக் கல்வி இயக்குநரகத்திலேயே ஒரு தணிக்கைப் பிரிவு ஏற்படுத்தி, தணிக்கை செய்வது முறையாக இருக்கும். ஏனென்றால், கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய்க்குமேல் நாம் மானியம் பல்வேறு கல்லூரிகளுக்கு அளித்து வருகிறோம். அந்த முறையில் 1972-73-ம் ஆண்டிலிருந்து அது நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஒரேயொரு கல்லூரி தவிர மற்றெல்லாத் தனியார் கல்லூரிகளும் இந்த முறைக்கு ஒத்து வருகிறார்கள். எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி ஒன்றுதான் கட்டுக்கு அடங்க மறுக்கிறார்கள். கட்டுக்கடங்க வேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அவர்களும் தனியாகத் தணிக்கையாளர்களை வைத்துக் கணக்குகளைச் சரிபார்த்துக் கொள்வதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. என்றாலும், அரசாங்கத் தணிக்கையாளர்களிடம் அந்தக் கணக்கைக் காட்ட வேண்டும் என்பது நம்முடைய வற்புறுத்தல். ஆனால், எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி மட்டும் இன்னும் கணக்குக் காட்டாமல் இருக்கிறார்கள். கணக்குக் காட்டுகின்ற வரையில் அதற்கு மானியம் வழங்காமல், மானியங்களை நாம் நிறுத்தி வைத்திருக்கிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, தனியார் கல்லூரியின் கணக்குகளை அரசு தணிக்கை செய்வது குறித்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதும் தனியார் கல்லூரிகளில், சிலபல இடங்களில், ரூ. 800 என்று பேராசிரியருக்குச் சம்பளம் வழங்குவதாகக் கையெழுத்து வாங்கிக் கொண்டு, ரூ. 400 மட்டும் கொடுக்கும் நிலை இருக்கிறதே, அது அந்தத் தணிக்கையில் எப்படி வரும்? அடுத்தபடியாக, மாணவர்களுடைய உணவுக்காகச் செலவழிப்பதற்காக அரசாங்கம் ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கிறது. அந்தக் கணக்கும் தணிக்கை செய்யப்படுமா? இன்னும் சில இனங்களில் அரசாங்கக் கல்லூரியில் இருப்பதைவிட இரண்டு மடங்கு தனியார் கல்லூரியில் வசூலிக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு சமயத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்க வேண்டும்.

[1974 டிசம்பர் 13

**திரு. சோ. அழகர்சாமி:** தணிக்கை செய்யும்போது இம்மாதிரி விஷயங்களும் அதில் அடங்குகின்றனவா? இதை யெல்லாம் கண்டு பிடிப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? இனிமேலாவது அம்மாதிரி தவறுகள் நடக்காமலிருக்க விசேஷ ஏற்பாடு ஏதாவது செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்று பல்வேறு தவறுகள் நடைபெறக்கூடும் என்பதற்காகத்தான் நாம் தனியாகத் தணிக்கைப் பிரிவு வைத்து, கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின் மூலமாகச் சரியாகத் தணிக்கை நடைபெற வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. உறுப்பினர் கூறிய அத்தகைய தவறுகளெல்லாம் இருக்குமானால் அவை கண்டு பிடிக்கப்பட்டு தக்க நடவடிக்கை—மானியத்தை நிறுத்துதல், அங்கீகாரத்தை நிறுத்துவது போன்ற நடவடிக்கை—எடுக்கலாம் என்று நாம் குறிப்பிட்டிருக்கிறோம். கல்லூரிகளுக்குத் தரும் நன்கொடைகளும் கணக்கில் வர வேண்டும். நன்கொடைகளையும் கணக்கில் காண்பிக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்வி ஆண்டு முடிந்த மூன்று மாதங்களுக்குள் தணிக்கை முடிவுபெற வேண்டும். சில நேரங்களில் கல்வி கணக்கு ஆண்டு முடிந்து சில மாதங்கள் ஆகியும் தணிக்கை முடிவுறாமல் கால தாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்த்து, கல்வி ஆண்டு முடிந்த மூன்று மாதங்களுக்குள் தணிக்கை முடிவு பெற வேண்டும் என்ற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக் கணக்குகளின் தணிக்கை 1973-74-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அதுபோன்று 1973-74-ம் ஆண்டுக் கணக்குகளின் தணிக்கை இப்பொழுது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எத்தனை மாதங்களுக்குள் தணிக்கை செய்கிறார்கள் என்ற முழு விவரங்கள் இல்லை. குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகத் தணிக்கை முடிந்தால்தான் மானியம் மற்றவைகள் தருவதற்கு முடியும். கல்வித் துறையினர் இதை வற்புறுத்தி வருவார்கள். ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தணிக்கையைச் செய்து முடிக்க வேண்டும் என்ற நிலைதான் இருக்கும். ஆனால், அதுபற்றிய விவரக் குறிப்புகள் இப்பொழுது இல்லை.



1974 டிசம்பர் 13]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, தணிக்கை செய்வதற்கு மறுக்கின்ற கல்லூரிகளை அரசாங்கம் எடுத்து நடத்துவதற்கு சட்டம் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா? ஏனென்றால் நீண்ட நெடுங்காலமாக பல கல்லூரிகளில் ஸ்பெஷல் ஃபீஸ், டொனேஷன் என்ற முறையில் அதிகமாக வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்க்க இப்படிச் சட்டம் செய்வது ஒரு காரணமாக இருக்கும் என்பதால் அரசாங்கம் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போது இருக்கிற சட்ட விதிமுறைகளின்படி தனியார் கல்லூரிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள உரிமை இல்லை. அதற்காகத் தனிச் சட்டம் கொண்டுவர வேண்டும். இப்போது பள்ளிகளைப் பொறுத்த வரையில் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். மேலும் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அரசாங்கமும் தனியாரும் முடிவு செய்தால் போதுமானது. ஆனால் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் தனியார், அரசாங்கம், பல்கலைக் கழகம் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும். ஆகவே, தனியார் கல்லூரிகளை எடுத்துக் கொள்வது என்பது அவ்வளவு சுலபத்தில் நடைபெற முடியாது. வேறு இரண்டு மாநிலங்களில் தனியார் கல்லூரிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களைப் பிறப்பித்திருப்பதாக அறிகிறோம். அதுபற்றிய விபரங்களை எல்லாம் சேகரிக்கச் சொல்லியிருக்கிறேன். விபரங்கள் வந்த பிறகு தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கல்லூரிகளுக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் எந்த வகையில் பாதுகாப்பு அளிக்கலாம், கல்லூரிகளை முறைப்படுத்தும் சட்டத்தை எவ்வாறு கொண்டுவந்து செயல்படுத்தலாம் என்பவைகள் பற்றி விரிவான ஆலோசனைகள் செய்யப்படும்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, தனியார் கல்லூரிகளின் வரவு-செலவுத் திட்டத்தை தணிக்கைச் செய்வதைப்போல கல்லூரிகளில் சேர்க்கப்படுகின்ற மாணவர்களையும் எந்த அடிப்படையில் சேர்க்கிறார்கள் என்பதைத் தணிக்கை செய்து, ஆண்டுதோறும் இந்த மன்றத்தில் விபரம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாணவர்களைச் சேர்ப்பதைப் பொறுத்தவரையில் அரசு தலையிடுவதற்கு இப்போது இருக்கிற சட்டம் இடம் தரவில்லை. இந்திய

[1974 டிசம்பர் 13

அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள அடிப்படை உரிமை அப்படித் தலையிடக் கூடாது என்று இருக்கிறது. ஆகையால்தான் தாழ்த்தப் பட்டவர்களும், பிற்பட்ட வகுப்பினர்களும் இத்தனை சதவிகிதம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று எல்லா தனியார் கல்லூரி களுக்கும் ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதை அவர்கள் கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கண்காணித்து வருகிறோம்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, எஸ்.ஐ.இ.டி, நிர்வாகம் மிகவும் திறமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் களுடைய கணக்கை அவர்களுடைய ஆடிட்டர்களைக் கொண்டு தணிக்கை செய்து, சரிசெய்து கொண்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல், அவர்களுக்கு அளிக்கும் மானியங்களை நிறுத்தாமல், தொடர்ந்து மானியம் அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் அவர்களுடைய திறமையைப்பற்றிக் குறை சொல்லவில்லை. தவறு செய்வதற்கும் நல்ல திறமை வேண்டும் (சிரிப்பு). தவறுகள் நடைபெறக் கூடாது என்பதற்காகத்தான் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். அவர்களே அவர்களுடைய ஆடிட்டர்களை வைத்து தணிக்கை செய்துகொள்வதை வேண்டா மென்று சொல்லவில்லை. அரசாங்கத் தணிக்கைக்கும் அதைக் காட்ட வேண்டுமென்றுதான் சொல்கிறோம்.

சிறுபான்மையோர் நடத்தும் வேறுசில கல்லூரிகளும் இருக்கின்றன. சிறப்பாகவும் நடைபெறுகின்றன. அவர்கள் எல்லாம் கணக்கைக் காட்டுகிறார்கள். இஸ்லாமிய கல்லூரி என்று எடுத்துக் கொண்டாலும், முஸ்லீம் கல்லூரி என்று எடுத்துக் கொண்டாலும் கூட நியூ காலேஜ் கணக்கைக் காட்டுகிறார்கள். வேறு பல கல்லூரிகளும் கணக்கைக் காட்டுகின்றன. இந்த ஒரு கல்லூரி மட்டும் காட்டமாட்டேன் என்று பிடிவாதமாக இருப்பதால் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, தனியார் கல்லூரிகளில் தணிக்கை செய்வதிலும் கண்காணிப்பதிலும் பல பிரச்சனைகள் இருக்கின்றன. அதனால் பொதுவாக இப்போது தனியார் தொழிற்சாலைகளில் கணக்குகளையும் நிர்வாகத்தையும் ஒழுங்கு படுத்துவதற்கு அரசாங்க அதிகாரிகளை நாம் நியமித்திருப்பதைப் போல தனியார் கல்லூரிகளிலும் அரசாங்க அதிகாரிகளை நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது இருக்கிற விதிமுறைகளில் அது இயலாது.



1974 டிசம்பர் 13]

**மாவட்டத் தலைமையிடங்களில் நாடக அரங்குகள்**

* 3 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் நாடக அரங்கு ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்த நாடக அரங்குகளை பல நகராட்சி மன்றங்கள் நடத்திக் கொண்டிருக் கின்றன. அவை பெரும்பாலும் நல்லமுறையில் நடைபெறவில்லை. எனவே, சுற்றுலாத் துறையின் மூலமாக அரசே, தம்முடைய கலைவாணர் அரங்கத்தைச் சீர்திருத்தி ஏற்று நடத்துவதைப்போல நகராட்சி மன்றங்கள் நடத்தும் நாடக அரங்குகளையும் ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கத்திடம் இப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இல்லை. ஆனால் தாகூர் நூற்றாண்டு விழாவினை யொட்டி, ஒரு நாடக அரங்கை கட்டலாம் என்ற முயற்சியில் பாரதி நினைவு இயக்க அமைப்பு நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது. மாநில அரசும் மத்திய அரசும் அதற்கு நிதி தரும் முயற்சி இருக்கிறது. சென்னையில் ஏற்கெனவே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, 4½ லட்சம் ரூபாய் செலவில் 'ஃபைல் ஃபவுன்டேஷன்' எல்லாம் போட்டிருக்கிறார்கள்.

தனியார் அல்லது தனியார் அமைப்புகள் ஆங்காங்கே பெரிய நாடக அரங்குகளை கட்ட முன்வருவார்களானால் அதற்கு நிதி தரும் திட்டம் ஒன்று மத்திய அரசிடம் இருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் நாடக அரங்கு கட்ட முன் வந்தால் அதற்கு இணையான மானியம் தரும் திட்டம் மத்திய அரசிடம் இருக்கிறது. அதற்கு மாநில அரசு சிபாரிசு செய்கிறது. அந்தவகையில் சென்னையில் பார்த்தசாரதி சபா, திருநெல்வேலியில் சங்கீத சபா, மற்றும் நாரத கான சபா ஆகிய கலை அரங்குகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பெரிய நகரங்களில் சிறந்த முறையில் கலை அரங்குகளை அமைக்க தனியார்கள் முன்வந்தால் மத்திய அரசு மாநில அரசின் சிபாரிசின் பேரில் நிதி உதவி வழங்குகிறார்கள்.

[1974 டிசம்பர் 13.

*Hospital Advisory Committees*

* 4 Q.—THIRU K. T. K. TANGAMANI :
THIRU D. S. A. SIVAPRAKASAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether some of the Advisory Committees for District Headquarters Hospitals and Taluk Headquarters Hospitals have not met for several years;

(*b*) whether there is a proposal to reconstitute these Committees; and

(*c*) if so, the date from which it will be given effect to?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) & (உ) மருத்துவமனை ஆலோசனைக் குழுக்கள் அனைத்தும் அவை அமைக்கப்படும் நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குச் செயலில் இருக்கும். அக்கால அளவு முடிவடைந்த பின்னர் அவை மாற்றி அமைக்கப்படுகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த மருத்துவ மனைகளில் இருக்கின்ற ஆலோசனைக் குழுக்களில் எந்தக் குழுவிலும் எதிர்க் கட்சி உறுப்பினர்—குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் யாரும் இல்லை. ஆகவே, எந்த முறையில் இந்தக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்தக் குழுவைப் பொறுத்த வரையில், மாவட்ட மருத்துவ மனைக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் வேறுசில அரசு அலுவலர்களும் 'அஃபிஷியல் மெம்பர்ஸ்' என்ற முறையில் இடம் பெறுகிறார்கள்.' 'நான்-அஃபிஷியல் மெம்பர்ஸ்' என்ற முறையில் தலைமை மருத்துவ மனை நகர மன்றத்தில் இருந்தால் அந்த நகர மன்றத்தின் தலைவர் அல்லது அவர் விரும்பும் ஒரு உறுப்பினர், தொழில் சம்பந்தப்பட்ட ஒருவர், சமூக நலப்பணியில் ஈடுபட்டுள்ள அம்மையார் ஒருவர், சட்டமன்ற உறுப்பினர் இருந்தால் அவர்—இந்த 4 பேர்களும் மற்றும் இருவரும் சேர்ந்து 6 பேர்கள் நிய மிக்கப்படுகிறார்கள். இப்படி அமைக்கப்படுகின்ற குழுவினரிட மிருந்து தக்க ஆலோசனைகள் பெறப்படுகின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்த ஆலோசனைக் குழு இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளுக்கும் அமைக்கப்படுகிறதா? இந்த ஆண்டு கோவையில் இருக்கிற இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில்



1974 டிசம்பர் 13]

ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதில் சட்டமன்ற உறுப்பினர் இல்லை. இந்த ஆலோசனைக் குழு எந்த எந்த விஷயங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்க உரிமை பெற்றிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இ.எஸ்.ஐ. மருத்துவ மனை களுக்கு இதுவரையில் எந்தக் குழுவும் அமைக்கப்படவில்லை. காரணம் அவை பொது மக்களோடு தொடர்புடையவையாக இல்லை. தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்குமே சிகிச்சை அளிக்கப்படுவதால் பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு அவசியமில்லை. இரண்டாவதாக அண்மையில்தான் இந்த இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் தோன்றியிருக்கின்றன. பெரிய அளவிலான மருத்துவ மனைகள் மூன்று இடங்களில்தான் இருக் கின்றன. எதிர்காலத்திலே அவை வளரக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

பொதுவாக மருத்துவ மனைகளுக் கென்று அமைக்கப்படும் குழுவினர் அந்த மருத்துவ மனைகளுக்கான சிறு சிறு தேவைகள் நிறைவு செய்யப்படுவதில் மற்றும் நல்லமுறையில் மருத்துவ மனைகள் நடைபெறுவதற்கும் ஏற்ற பரிந்துரைகளை வழங்கினால் அதில் உரிய கவனம் செலுத்தப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் மருத்துவ மனைகளின் முன்னேற்றம் பற்றி மருத்துவத் துறை இயக்குநருக்கு தக்க ஆலோசனைகள் வழங்குவதற்கு இந்தக் குழுக்கள் இருக்கின்றன.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஆலோசனைக் குழுக்களிலிருந்து வழங்கப்படும் பல கருத்துக்களின் மீது உரிய கவனம் இயக்குநராலும் அரசாங்கத்தினாலும் செலுத்தப் படவில்லை என்று சொல்லப்படுகிறது. எதிர்காலத்திலாவது அவர்களுடைய ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த உரிய நட வடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஆலோசனைக் குழு அதிக செலவு இல்லாத தேவைகளை பரிந்துரைப்பதாக இருந் தால் அவை உடனடியாகக் கவனிக்கப்படுகின்றன. திடீரென்று ஒரு இடத்தில் 40 படுக்கைகள் போட வேண்டுமென்று சொன்னால் அது நிதி வசதிகளைப் பொறுத்து, பிற வாய்ப்புகளை அறிந்துதான் நிறைவேற்ற முடியும். அதற்கு வேண்டிய நிதி வசதி இருக்க வேண்டும். அவை எல்லாம் பரிசீலனை செய்து பார்த்த பிறகு, அதே தரத்திலுள்ள வேறுபல மருத்துவ மனைகளின் தரத்தையும் உயர்த்த படிப்படியாக நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில்தான்

இப்படிப்பட்ட ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும். இன்னும் சொல்லப்போனால் 3 பேர் ஒரு டாக்டரை மாற்றினால்தான் மருத்துவமனை நன்றாக நடைபெறும் என்று சொல்வார்கள். அதே டாக்டர் அங்கே இருந்தால்தான் நோய் தீரும் என்று வேறு மூன்று பேர் சொல்வார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் எப்படி நடந்துகொள்வது என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பழனியப்பன் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, ப்ரைமரி ஹெல்த் சென்டர் அபிவிருத்திக்காக ப்ளாக் லெவலில் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது செயல்படாமல் இருக்கிறது. அதைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஆரம்ப சுகாதார அபிவிருத்தி என்ற திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. ஆரம்பச் சுகாதார நிலையத்தின் பணிகள் பஞ்சாயத்து யூனியனுடன் மிக நெருக்கமான நிலையில் செயல்பட்டு வருகிறது. நடைமுறையில் ஏதாவது குறைபாடுகள் காணப்படுமானால் ஒன்றியத் தலைவர் ஒன்றியத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் சொல்கிற ஆலோசனை ஏற்கப்படும்.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை :** தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழுக்களுக்கு நான்-அபிஷியலைத் தலைவராகப் போடுவதோடு, மாதந்தோறும் கூட்டம் நடைபெற வேண்டுமென்று அரசு உத்திரவிடுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாதந்தோறும் ஒரு முறை கூடுவது என்பது இயலாத காரியம். ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், அங்கு நடைபெறுகிற காரியங்களில் காணக்கூடிய குறைகளை அங்குள்ள அதிகாரிகளிடம் அறிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஆலோசனைக் குழு கூட்டத்தை கூட்டுகிற போதே சில உறுப்பினர்கள் ஊரில் இல்லை என்று கலந்துகொள்ள முடியாது கூட்டம் நடைபெறுவது இல்லை என்று தெரிகிறது. அவர்களுக்கு அரசு மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தித் தெரிவிக்க இருக்கிறது.

**திரு. ஆலடி அருணா :** இந்தக் குழுக்களுக்கு நான்-அபிஷியல்ஸ் போடுகிறபோது, பொதுச் சுகாதாரம், மருத்துவம் ஆகியவற்றில் கொஞ்சங்கூட திறமை இல்லாதவர்களைப் போடுவதாகக் குற்றச்சாட்டு இருக்கிறது. இத்தகைய குற்றச்சாட்டு அமைச்ச ருக்கு வந்திருக்கிறதா ?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பொதுச் சுகாதாரம் தெரியாத யாரும் பொதுவாழ்வில் இருக்க முடியாது. சட்ட மன்ற உறுப்பினர்கள் என்றால் எல்லாம் தெரிந்தவர்களாகத் தான் இருக்கக்கூடும் என்று நம்புகிறேன். அவர்களுக்கு பொதுச் சுகாதாரம் பற்றி ஒன்றும் தெரியாது என்று நான் எதிர்பார்க்கவில்லை. குற்றச்சாட்டு எதுவும் வரவில்லை.

*Medical facilities for Padi*

*5 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal to run Government Dispensaries and Maternity Centres in the Padi Industrial area near Madras ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பாடிக்கு வெகு அருகாமையில் அம்பத்தூரில் ஒரு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையும் ஆவடியில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையமும் இயங்கி வருகின்றன. அம்பத்தூரில் அரசாங்க உதவியோடு ஏழைகளுக்கு உதவும் வகையில் ஒரு தனியார் மருத்துவமனையும் இருக்கிறது. அது அந்த ஒன்றியத்தின் ஆலோசனையின் மூலமாகத் தான் நடைபெற வேண்டும். எனவே தற்பொழுது அரசால் பாடி கிராமத்தில் புது மருத்துவமனைகளும் தாய்சேய் நல விடுதிகளும் ஏற்படுத்துவதற்கில்லை.

*Quality control for drugs*

*6 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whethe any system of quality control is being adopted in the case of drugs manufactured in this State; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (ஆ). தலைவர் அவர்களே, 1940-ஆம் ஆண்டு மருந்துப் பொருட்கள் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் மருந்துப் பொருள்களுக்கான குறிப்பீடுகளை வரையறுப்பதுடன் உயர்ந்தவகை மருந்துப் பொருட்கள் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றித் திட்டவட்டமாகக் கூறுகிற தயாரிப்பு வழிமுறைகளையும் வரையறுக்கிறது. இம் மாநிலத்தில் தரமான மருந்துப் பொருட்கள் மட்டும் விற்பனை செய்யப்படுவதை உறுதிப் படுத்தும்பொருட்டு, தயாரிக்கப்படும் மருந்துத் தொகுதிகளி

லிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக மாதிரிகள் மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிர்வாகத்தினரால் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக பரிசீலிக்கப்படுகிறது. தவறு செய்யும் தயாரிப்பாளர்கள் அல்லது வணிகர்கள் மீது இச்சட்டத்தின்கீழ், நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. என். டென்னிஸ்:** பல மருந்துகள் வெறும் வியாபார நோக்கோடு தயாரிக்கப்படுகின்றன. அதன் காரணமாக தரக் குறைவாக இருக்கிறது. அதனால் ஃபேட்டல் கேஸ்கள் ஆனதும் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக தமிழ்நாட்டில் இந்த மருந்துகளின் தரம்பற்றி பரிசீலனை செய்கிற அதிகாரிகளின் எண்ணிக்கை 69-க்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. அவர்கள் மூலம் பரிசோதனை பரவலாக நடை பெறுகிறது. மருத்துவ மனையில் உள்ளவர்கள் புகார் அனுப்பினால் உடனேயே பரிசோதனை செய்யவும் நடைமுறை இருக்கிறது. இதை விரிவுபடுத்த மருந்து ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற்படுத்தவும் அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. தரக்குறைவான மருந்துகள் உற்பத்தி செய்யாமல்—விநியோகிக்கப்படாமல் இருக்க எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அரசாங்கம் விரிவான நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, தனியார் துறையில் மருந்துப் பொருள்களை தயாரிப்பதே லாப நோக்கோடு தான் செய்யப்படுகிறது. சமுதாயத்தின் நலன் கருதி செய்யப் படுவதில்லை. சமுதாயத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற மருந்துப் பொருள்களை அரசாங்கமே தயாரிக்க அந்தத் தொழிலை நடத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டால் உண்மையில் அவை தரமுள்ள மருந்தாக இருக்கும். இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் தனியார் துறையில் மருந்து தயாரிக்கிற நிலையங்களே சற்றுக் குறைவு. ஆனால் அண்மையில் தமிழகத்தில் இருந்த தாதா பார்மகூடிகல் நிறுவனத்துடன் அரசாங்கமும் கூட்டு சேர்ந்து தமிழ்நாடு தாதா பார்மகூடிகல் என்ற பெயரில் மருந்து உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கிறது. கிங் இன்ஸ்டிட்யூடிலும்



சமுதாயத்தின் நலன் கருதிய அடிப்படையான மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மத்திய அரசாங்கத்தின் ஆதரவில் துறையில் ஒரு நிலையம் மருந்து உற்பத்தி செய்து வருகிறது. தனியார் யாருமே மருந்து உற்பத்தி செய்யக் கூடாது என்றால் அதை மத்திய அரசுதான் செய்யவேண்டும். கேள்வி கேட்ட உறுப்பினர் மத்திய அரசுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய இடத்தில் இருக்கிறார். ஆகவே, அவர் மத்திய அரசின் மூலம் அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## உணவுப்பொருள் கலப்பட வழக்குகள்

*7 வினா—**திரு. என். இட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ஆம் ஆண்டில் உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்ததாக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்ட வாரியாக?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே 1972-73-ஆம் ஆண்டில், சென்னை மாநகரில் 292 நபர்கள் பேரில் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்ததாக வழக்குகள் தொடரப்பட்டன. அவர்களில் 119 நபர்கள் அபராதம் விதிக்கப் பட்டனர்; இரண்டு நபர்கள் வழக்குகளிலிருந்து விடுவிக்கப் பட்டனர்; 28 நபர்கள் முறைமன்றம் கலையும் வரை சிறைத் தண்டனையும், தண்டமும் விதிக்கப்பட்டனர். மீதமுள்ள 143 வழக்குகள் முறைமன்றங்களில் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

சென்னையைத் தவிர்த்த மாநிலத்தின் பிறவிடங்களில் 1972-73-ஆம் ஆண்டில் 3462 பேர்களுக்குத் தண்டனை விதிக்கப் பட்டது. அவர்களில் 56 பேர்களுக்கு முறைமன்றம் கலையும்வரை யிலிருந்து ஓராண்டு காலத்திற்குட்பட்ட பல்வேறு கால அளவுகளில் சிறைத்தண்டனை வழங்கப்பட்டனர். எட்டு பேர்களுக்கு தலா ரூ. 1,000 அபராதமும் ஆறு திங்கள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் ஆகிய இரு தண்டனைகளும் விதிக்கப்பட்டன.

சென்னை மாநகரிலோ அல்லது மாநிலத்தின் பிற பகுதிகளிலோ 1954-ஆம் ஆண்டைய உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 1972-73-ஆம் ஆண்டில் யாரும் உணவுப்பொருள் ஆய்வாளர்களால் கைது செய்யப்படவில்லை.

[1974 டிசம்பர் 13

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, உணவுப் பண்டங்களில் கலப்படம் மிகவும் நடைபெறுகிற ஒரு கால கட்டத்தில் நாம் இருக்கிறபோது கலப்படம் செய்கிறவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை விதித்தாக வேண்டும். குறைந்த பட்சம் பத்தாண்டு சிறைதண்டனையாவது உணவில் கலப்படம் செய்கிறவர்களுக்கு விதிக்கக்கூடிய அளவில் சட்டத்தைத் திருத்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆலோசனை மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. அவர்களது ஆலோசனையின் பேரில்தான் முன்பு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. உணவுக் கலப்படம் என்பது நாடு முழுமைக்கும் பொதுவான ஒன்றுகிறபோது—நாடு முழுமைக்கும் பொருந்தக்கூடிய ஒரு பொதுவான சட்டம் வருவதுதான் நல்லது. அதுபற்றித்தான் அவர்கள் ஆலோசித்து வருகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** இன்றைக்கு வருகின்ற பெரும்பகுதி உணவுப் பொருள்கள் கலப்படம் செய்யப்பட்டனவாகவே இருக்கின்றன. மஞ்சளில் இருந்து எல்லாப் பொருள்களிலும் கலப்படம் செய்யப்படுகிறது. இதனால் மனிதனது சுகாதாரம் கெட்டு, பலபேர் இறக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேல்நாடுகளில் இதுபோன்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க தனியான நிறுவனம் இருப்பதுபோலவே இங்கும் ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா? உணவுப் பொருள்களில் கலப்படம் செய்கிறவர்களுக்கு தூக்குத் தண்டனை அளிக்கக்கூடிய வகையில் சட்டத்தைக் கொண்டுவர மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தண்டனை மூலமாக ஓரளவுக்குத்தான் சமுதாயத்தில் திருத்தம் காண முடியும். பெரும் அளவுக்கு பொதுமக்களுடைய கண்காணிப்பும், கவனமும் இருந்தால்தான் இத்தகைய குற்றத்தை நாம் பெரும் அளவுக்குத் தவிர்க்க முடியும். இதைத் தவிர்ப்பதற்காக மத்திய அரசாங்கம் ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டுவர தீவிரமாகப் பரிசீலனை செய்கிறார்கள். அந்தச் சட்டத்தில் கடுமையான தண்டனை இருக்கும். கண்டுபிடிக்கப்படுகிறவர்கள், தண்டனை வர்கள் ஆகியோருடைய எண்ணிக்கையை வைத்துப் பார்க்கிற போது உண்மையான குற்றவாளிகள் தப்பித்துக்கொள்கிற இடமிருக்கிறது. நிரபராதிகள் தண்டிக்கப்படவும் இடமிருக்கிறது. தப்பித்துவிடவும்



1974 டிசம்பர் 13]

அங்கங்கே கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் என்று ஏற்படுத்திக் கொண்டு மக்களே உணவுக் கலப்படத்தை கண்டுபிடித்து கண்டிக்க ஆரம்பித்தால்தான் தவறு செய்கிறவர்களே அஞ்சுவார்கள். அதனால் சமுதாயத்திற்கு நன்மை ஏற்படும். இத்தகைய நல்ல சூழ்நிலையை உண்டாக்க மாண்புமிகு உறுப்பினர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 8, திரு. ஏ. எம். இராஜா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் . . .

**திரு. சோ. அழகர்சாமி :** கலப்படம் சம்பந்தமாக எல்லோருடைய கவனமும் இருக்கும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ½ மணி நேரம் ஆகியிருக் கிறது, 8 கேள்விகள்தான் ஆகியிருக்கின்றன.

**திரு. நா. வீராசாமி :** முக்கியமான கேள்விகளுக் கெல்லாம் . . .

### பவானி ஆற்றிற்கு வெள்ளத் தடுப்புச் சுவர்

***8 வினா—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பவானி ஆற்றிற்கு பவானியில் இருந்து ஜம்பை வரை வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பவானி நகர எல்லைக்குள் பவானி நதியின் இடதுகரையில் பவானி பாலத்திலிருந்து முறியன் அணைக்கட்டு வரை வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூபாய் முப்பது இலட்சம் மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்த மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். விரைவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்குத் தொகையை 'சாங்ஷன்' செய்து நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நிதி ஆதாரத்தைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** இப்படி அந்தப் பவானி ஆற்றுக்குத் தடுப்புச் சுவர் கட்டுவதால், தனிப்பட்டவர்களுடைய நிலங்களைக் கையகப்படுத்த வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அப்படித் தனிப்பட்டவர்களுடைய நிலங்களைக் கையகப்படுத்தும்போது, அவர்கள் கோர்ட்டுகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமைகள் ஏற்படும். அப்படி அவர்கள் கோர்ட்டுக்குச் செல்லும்போது, தாமதம் ஏற்பட்டு, அந்தப் பணிகள் தாமதப்படுமா? இன்னொன்று, அந்தத் துறையிலேயுள்ள பொறியாளர்கள் சொல்கிறார்கள், அது அவ்வளவாகப் பயன்படாது என்று. பெரும் வெள்ளம் வருகிற நோக்கிலே, அது பெரும் அளவுக்குப் பயன் அளிக்காது என்று சொல்கிறார்கள். அதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்து, நல்ல பலன் இருக்கும் வகையில் நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதை நிறைவேற்றும் போது அவைகள் எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும்.

### நீராறு சுரங்க வேலைத் திட்டம்

* 9 **வினா—திரு. அ. ப. சண்முகசுந்தரம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் நீராறு சுரங்க வேலைத் திட்டம் எப்போது முடிவு பெறும்?

(இ) இத் திட்டத்தின் கீழ் பாசனம் பெறும் பூமியின் பரப்பளவு என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

(அ) மேல் நீராறு தடைவரை அமைக்கும் பணிகள் இவ்வாண்டு ஜூன் மாதம் நிறைவு பெற்றது.

(இ) இத் திட்டத்தின் மூலம் 55,000 எக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இத் திட்டத்தின் கீழ் வறட்சிப் பகுதிகளான பல்லடம் போன்ற தாலுகாக்களுக்கு பாசனத்துக்கோ, அல்லது குளம், குட்டைகளோ வெட்டுவதற்கு சர்க்காருடைய ஆய்வு அறிக்கையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



### சினிமா பிலிம் இறக்குமதி மீதான வரி

* 10 **வினா—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சினிமா பிலிம் இறக்குமதி மீது போடப்பட்டுள்ள வரியை ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசை தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

(அ) இல்லை.

(இ) இவ் வினா எழ இடமில்லை.

### தொழில்நுட்பக் கல்வி பெற்றோருக்கு உதவி

* 11 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில்நுட்பக் கல்வி பயின்றவர்கள் சுயமாகத் தொழில் துவங்கிட அரசு அளித்துவரும் சலுகைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### *New industries with assistance from 'SIPCOT'*

12 Q.—THIRU N. K. PALANISWAMY: With the Hon. the Minister for Industries be pleased to state the number of major and medium industrial units formed in the State with the assistance of the State Industries Promotion Corporation of Tamil Nadu during 1973–74?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

1973-74-ம் ஆண்டில் சிப்காட் உதவியுடன் 9 பெரிய தொழிற்சாலைகளும், 19 நடுத்தர தொழிற்சாலைகளும் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

---

@ 240–245-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** அப்படி ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளுக்குப் போதுமான ரா மெட்டீரியல்ஸ் அளித்து, 'கரண்ட் கட்' டிலிருந்து அவற்றிற்கு விதிவிலக்கு அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மூலப் பொருள் மத்திய சர்க்காரினுடைய அலாட்மென்ட்டைப் பொறுத்து அமைந்திருக்கும். மின்சாரத்தைப் பொறுத்த அளவுக்குப் புதிய தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்ற திட்டம் ஏற்கனவே உத்தரவில் போடப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, சிப்காட் மூலம் தற்பொழுது இராணிப்பேட்டையில் ஏதாவது பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க யோசனை இருக்கிறதா ? அல்லது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ? அவர்கள் நிலத்தை மட்டும் விநியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க ஏதாவது அடிப்படை அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இராணிப்பேட்டையில் சிப்காட் உதவியுடன் தொழிற்சாலை நடைபெறுகிறது.

*Manufacture of Plaster of Paris*

* 13 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether any investigation on the manufacture of Plaster of Paris from Gypsum has been conducted in the Chemical Testing and Analytical Laboratory at Guindy; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

(அ) ஆம்.

(இ) தோண்டி எடுக்கப்பட்ட கனிக்கல்லிலிருந்து (Gypsum) பாரீஸ் உறை மாவு (Plaster of Paris) தயாரிப்பதற்காக, ராஜபாளையம் திருவாளர்கள் ராம்ராஜ் சர்ஜிகல் காட்டன் மில்ஸ்க்காக 1956 ஆம் ஆண்டில் ரசாயன சோதனை—பகுப்பாய்வுக் கூடத்தில் சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த ரசாயன சோதனை பகுப்பாய்வுக் கூடத்தில் நடத்தப்பட்ட சோதனைகளை அடிப்படையாகக் கொண்டு ராஜபாளையத்தில் திருவாளர்கள் ராம்ராஜ் சர்ஜிகல் காட்டன் மில்ஸ் நிறுவனத்தால் கனிக்கல்லிலிருந்து பாரிஸ் உறை மாவு தயாரிக்கும் பிரிவு ஒன்று நிறுவப்பட்டது. அதன் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு ஒரு டன் ஆகும். தூத்துக்குடியில் கடலிலிருந்து கிடைக்கும் கனிக்கல்லிலிருந்து பாரிஸ் உறை மாவு தயாரிக்க இதே முறை பின்பற்றப்படுகிறது. தூத்துக்குடியில் கடலிலிருந்து கிடைக்கும் கனிக்கல்லிலிருந்து ஒரு டன் உறைமாவு தயாரிக்கும் திறன் கொண்ட பாரீஸ் உறைமாவு தயாரிக்கும் துறைப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.





**திரு. என். கே. பழனிசாமி :** இன்னும் பல இடங்களில் அம்மாதிரி செய்வதற்கான வாய்ப்பு இருந்தும், செய்யாமல் இருக்கிற இடங்களில் அம்மாதிரி செய்ய சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ? அப்படி பிளாஸ்டர் ஆஃப் பாரீஸை நாமே செய்வதனாலே, எவ்வளவு ரூபாய் மீதமாகும் என்பதை கனம் அமைச்சரவர்கள் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் உபயோகப்படுத்தப்படுகின்ற பொருள். அதிலே, இலாபம், மீதம் என்று பார்க்க முடியாது. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த அளவுக்கு தொழிற்சாலைகளிலே, ஜிப்ஸத்திலேயிருந்து பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் செய்ய யார், யார் முன் வருகிறார்களோ, அவர்களுக்கு உதவி செய்கிறோம்.

**செங்கற்பட்டு மாவட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாக்கள்**

* 14 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ஆம் ஆண்டு, மே மாதம் முதல் 1973 ஆம் ஆண்டு, அக்டோபர் 22-ஆம் தேதி முடிய செங்கற்பட்டு மாவட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாக்கள் எவ்வளவு ?

(இ) இதில் தாழ்த்தப்பட்டவர்கள் பெற்றுள்ள நிலப் பட்டாக்கள், மனைப்பட்டாக்கள் முறையே எத்தனை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :**

(அ) 56,167.

(இ) நிலப் பட்டாக்களின் எண்ணிக்கை 5,524

மனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 14,822

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, ஏழைகளுக்கு உதவிடும் வகையில் நம்முடைய அரசு பட்டாக்கள் வழங்குகிறது. ஆனால், பட்டாக்கள் பெற்றவுடன் அவற்றை ஏழ்மையின் காரணமாக, திரும்பி விற்கின்ற நிலை ஏற்படுகிறது. அப்படி, ஏதாவது பட்டாக்களைத் திரும்பி விற்பதற்கான அங்கீகாரம் வழங்காத நிலைமை அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்பொழுதே அந்தப் பட்டா கொடுப்பதிலே ஒரு கண்டிஷன் இருக்கிறது. இத்தனை ஆண்டுகளுக்குள் அதைப் பாத்தியம் செய்யக் கூடாது என்று தான் இருக்கிறது. அதையும் மீறி செய்தால், கொடுக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில், இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஏழை அரிசனங்களுக்கு, பின்தங்கியவர்களுக்குக் கொடுக்கப்பட முடியாத நிலையிருப்பதால், அரசு அதிகாரிகளைச் சந்தித்து, இது பற்றி விசாரிக்கின்ற நேரத்தில், அவர்கள், பட்டாக் கொடுக்கின்ற வேலையைச் செய்வதற்கென்று நியமிக்கப்பட்ட தனி அதிகாரிகளை அரசு எடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். பட்டாக்கள் கொடுக்க வேண்டியது இன்னும் இருப்பதால், உடனடியாகத் தனி அதிகாரி போட்டு, பட்டாக்களைத் துரிதமாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 750 ஏக்கரா நிலங்கள் பட்டா செய்யப்பட வேண்டும் என்று குறிப்பு இருக்கிறது. அதற்கு மேலாகவே, 902 ஏக்கர் நிலங்கள் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற பிரச்னை பட்டா கொடுக்கின்ற பிரச்னை அல்ல. ஏழைகளுக்குப் பட்டா கொடுப்பதற்கு அரசாங்கம் ரூ. 200 வருமானம் உள்ளவர்களுக்கு என்று நிர்ணயித்திருக்கிறது. இப்பொழுது வருமானம் அதிகமாக உயர்ந்துவிட்ட காரணத்தால், ரூ. 200-ஐ 250 ஆக்க வேண்டும், அதிகமாக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். அதை அரசாங்கம் கவனித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் பரிசீலனை செய்யப்படும்.

1974 டிசம்பர் 13]

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க, நிலப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. மனைகளை ஆர்ஜிதம் செய்யும்போது 4(1) நோட்டிபிகேஷன் பப்ளிஷ் செய்ய வேண்டியிருக்கிறது, அது சென்னை வரையில் வந்து திரும்பிவர, 6 மாதங்கள் ஆகிறது. ஆகவே, அதனை சுலபமாக்க, கலெக்டருக்கே, 4(1) நோட்டிபிகேஷன் வெளியிடுகின்ற அதிகாரத்தை அரசாங்கம் அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கும், மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. மூலக்கேள்வி, அரசு நிலங்களை, பட்டா செய்து கொடுப்பது பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது, தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் பொறுத்து, நம்முடைய அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** சில இடங்களிலே ஏழைகளுக்கு சர்க்கார் பட்டா செய்து கொடுக்கிறார்கள். ஒரு பெரிய இடத்திலே, கல் ஊன்றாமல், அனைவருக்கும் பட்டா செய்து கொடுக்கிறார்கள். பெரிய இடம் விஸ்தீரணமாய் இருப்பதால், கல் ஊன்றாத நிலையில், அந்த ஏழை தனது நிலம் எங்கு என்று தெரியாத நிலைமையில், கட்டிடம் கட்டவோ, குடிசை போடவோ முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, பட்டா செய்து கொடுக்கும்போதே, கல் ஊன்றி, இந்த இடம் இன்னாருக்கு என்று தெரியப்படுத்தினால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பட்டா கொடுப்பதற்கு முன்பே, அது சர்வே செய்யப்பட்டு, அளவு பார்த்து, கல் ஊன்றப்பட்டுத்தான் கொடுக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. எங்காவது தவறுகள் இருந்தால் அதனை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த வீட்டு மனைப்பட்டா வழங்குவதிலே, மேட்டரிலே ஸ்பெஷல் ஸ்டாம்ப் போட வேண்டுமென்ற கோரிக்கை வந்து, அந்த ஸ்பெஷல் ஸ்டாம்ப் இல்லாமல் அங்கே பட்டா வழங்கும் வேலை தேங்கி நிற்கிறது. அதனை அரசு கவனிக்குமா?

[1974 டிசம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றிக் கேட்க அனுமதித்தால், எல்லா மாவட்டங்களுக்கும் கேட்க ஆரம்பித்தால் எப்படி முடியும்?

**திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி :** தலைவர் அவர்களே, அரசாங்க நிலங்களைப் பட்டா வழங்குகின்றபோது நிலம் இல்லாதவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆனால் அந்த நிலத்தை வேறு ஒரு நபர் உழுது கொண்டிருக்கிறார், அவரை அப்புறப்படுத்திவிட்டு பட்டா போட்டுக் கொடுத்தால் தான் நிலமில்லாத ஏழைகளுக்குப் பலன் கிடைக்கும். அந்த மாதிரி ஆக்கிரமிப்பு செய்தவர்களை அப்புறப்படுத்தி நிலங்களை வழங்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பட்டா கொடுப்பது என்றாலே அவர்களிடத்திலே அந்த பொஸஷனைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் சட்டம். எங்காவது அதுமாதிரி தவறு இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** சார், இது முக்கியமான கேள்வி.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** துணைக் கேள்விகள் கேட்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சோ. அழகர்சாமி.

**திரு. சோ. அழகர்சாமி :** சுதந்திரம் கிடைத்து 27 ஆண்டுகள் ஆகியும் குடியிருக்க வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படவில்லை, இது முக்கியமான கேள்வி. மனை கேட்டு விண்ணப்பித்து பல வருடங்கள் ஆகியுங்கூட பக்கத்திலே பலவிதமான புறம்போக்குகள் இருந்துங்கூட நீர்வை ஏற்பட்ட தரிசு புறம்போக்கு, பி.டபிள்யூ.டி. புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, ஹைவேஸ் புறம்போக்கு என்று பலவிதமான புறம்போக்குகள் இருக்கின்றன, இதனால் அந்த அந்த டிபார்ட்மெண்ட்களுக்குள்ளேயே தகராறு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, குறிப்பிட்ட ஒரு காலம் வைத்து அதற்குள்ளாக விவசாயத் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனை இல்லாதவர்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?



1974 டிசம்பர் 13]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் எல்லா புறம்போக்குகளையும் கொடுத்துவிட முடியாது. நத்தம் புறம்போக்காக இருந்தால் கொடுக்கலாம். பி.டபிள்யூ.டி. புறம்போக்கு ஆக இருந்தால் கேட்டு பரிசீலித்துத்தான் கொடுக்க முடியும். டாங்க் புறம்போக்கு, ரிவர் புறம்போக்கு என்றெல்லாம் இருக்கின்ற இடங்களில்கூட கேட்கிறார்கள், அதையெல்லாம் பரிசிலித்துத்தான் கொடுக்க வேண்டும். இன்னும் அதிகமான பேர்களுக்கு நிலங்கள் கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை. குறிப்பாக தாமதம் எங்காவது ஏற்படுகிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, வீட்டு மனை வழங்க மத்திய அரசாங்கம் கிராண்ட் கொடுத்துக் கொண்டு வருகிறதே. அதற்கு என் நீங்கள் தீவிர நடவடிக்கை இதுவரையில் எடுக்கவில்லை. எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, குடியிருப்புச் சட்டத்தின்கீழ் விவசாயக் கூலிகளுக்கு மனை வழங்குவதற்காக மத்திய அரசு ஒரு திட்டம் தீட்டி, வீட்டு மனைகளைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே அதற்காக 6 டெபுடி கலெக்டர்களைப் போட்டு ஜீப்கள் எல்லாம் கொடுத்து வேலை செய்து 75 லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்திருக்கிறோம். அதிலே மத்திய அரசு 45 லட்சம் ரூபாய்தான் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறது. அதற்குப் பிறகு அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதற்குக் கூட மத்திய அரசாங்கம் பணம் தரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி அந்தப் பணத்தை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்லது.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, கொடுக்கப்படுவது 2 சென்ட் நிலம்தான், அது போதுமானதல்ல. மத்திய அரசுக்கு சொல்லி அதிகமாகக் கொடுக்கச் செய்ய அரசு முன்வருமா?

[1974 டிசம்பர் 13

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** போதவில்லை என்று சொல்லி 3 சென்ட் தர வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு கேரளாவிலே 2 சென்ட்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறது. ஆனால் அதற்கான பணம் அவர்கள் தரவில்லை.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் குடியிருப்புச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்படுகிற நிலங்களைப் பொறுத்தவரையில் கிராம அதிகாரிகள், ஏழை மக்களிடத்திலே அதிகாரிகள் வந்தால் நீங்கள் போய் பட்டா பெறக் கூடாது என்று சொல்லி தடைசெய்துகொண்டிருக்கிறார்கள். இதிலே விசேஷ கவனம் செலுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எந்தப் பிரச்னையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திலிருந்து தப்பாது என்று நான் நினைக்கிறேன்.

*15 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிபூண்டித் துணை வட்டம், (1) அன்னவரம், (2) தண்டலச்சேரி ஆகிய அரிசனக் காலனிகளில் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி குடியிருப்போருக்கு, வீட்டு மனைப்பட்டா வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவது ஏன்?

(இ) இது எப்பொழுது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) கும்மிடிப்பூண்டி துணைவட்டம், தண்டலச்சேரி கிராமம் புல எண். 90-ல் இருந்த 14 ஆக்கிரமிப்புகளை ஒழுங்குபடுத்தி 30—1—1974 அன்று பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்படி கிராமம் புல எண் 67-ல் உள்ள 12 ஆக்கிரமிப்புகளில், 10-க்கு அதே தேதியில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள இரண்டு ஆக்கிரமிப்புகளில் சம்பந்தப்பட்டவர்கள் நிலத்தின் கிரயத்தைக் கொடுத்த பிறகே அவர்களுக்குப் பட்டா செய்யப்படும்.

கும்மிடிப்பூண்டி துணை வட்டத்தில் கிராம கணக்குகளில் அன்னவரம் என்ற கிராமம் இடம் பெறவில்லை. எனினும் முக்காரம்பாக்கம் என்ற கிராமத்தில் 'அன்னவரம்' என்ற ஒரு சிற்றூர் இருக்கிறது. அவ்வூரில் உள்ள 36 ஆக்கிரமிப்புகளில், 23-க்கு



1974 டிசம்பர் 13]

30—1—1974-ல் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 13 ஆக்கிரமிப்புகளில் விரைவில் பட்டாக்கள் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, நம்முடைய செங்கற்பட்டு மாவட்டத்திலே சென்னைக்கு 32 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற குடியிருப்பு மனைகளை ஆக்கிரமிப்புச் செய்து இருக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த நண்பர்கள் இருக்கிறார்கள். 1970 ஆம் ஆண்டுக்கு முன்னதாக அப்படி ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்களுக்குத்தான் மனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டு அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று இப்போது விதிமுறை இருக்கிறது. இதன் காரணத்தினால் அதற்குப் பின்னாலே வீட்டு மனையில்லாமல் அங்கங்கே இருக்கின்ற தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள்—1971-ல் வந்தவர்கள் இருக்கிறார்கள். 1972-ல் வந்தவர்கள் இருக்கிறார்கள்—இதுவரை வீடுகட்டி இருப்போர்க்கெல்லாம் வழங்க முடியாமல் போய்விடுகிறது, ஆகவே அந்த விதியைத் தளர்த்தி இதுவரை வீடுகட்டி இருப்போர்க்கெல்லாம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

*Allotment of fertilisers*

*16 Q.—THIRU N. DENNIS:
THIRU P. SOUNDARAPANDIAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether the State Government have requested for a larger allotment of fertilisers for the State in 1973; and

(b) if so, the details thereof,

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*17 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு அதிக உரம் வழங்கும்படி மத்திய அரசிடம் மாநில அரசு அண்மையில் விண்ணப்பித்துக் கொண்டுள்ளதா?

(இ) மத்திய அரசு அளித்த பதில் யாது?

---

@ 246-ம் பக்கத்தில் இணைப்பு II அச்சிடப்பட்டுள்ளது.

[1974 டிசம்பர் 13

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) 80 ஆயிரம் டன் நைட்ரஜன் கூடுதலாகக் கேட்டதில் 30 ஆயிரம் டன்தான் கொடுக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, விவசாயிகளின் தேவைக்கேற்ப உரம் அதிகமாகக் கொடுக்க அரசு முன்வர வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கு உரம் ஒழுங்காகக் கிடைக்கவில்லை. ஆதலால் விநியோக முறையையும் அரசு சீர்படுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, தற்போதுள்ள விநியோக முறையின்படி விவசாயிகள் எல்லோருக்கும் ரசாயன உரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது கூட தேவையான இரசாயன உரம் அரசாங்கத்தின் கையிருப்பில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்தின் கையிருப்பில் இன்றைக்கு உள்ளது யூரியா 1 கோடியே 87 லட்சத்து நாற்பதாயிரம் கிலோ, அமோனியம் சல்பேட் ஒரு கோடியே 37 லட்சத்து 43 ஆயிரம் கிலோ. ஏன் கிலோவில் சொல்கிறேன் என்றால் விவசாயிகளுக்கு கிலோ கணக்கில்தான் கொடுக்கிறோம், டன் கணக்கில் கொடுப்பதில்லை. எத்தனை பேர்களுக்கு அது உதவும் என்பதை நீங்கள் பார்த்துக் கொள்ளலாம். கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் ஒரு கோடியே 17 லட்சத்து 76 ஆயிரம் கிலோ. யாராவது உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே உரம் எங்காவது கிடைக்கவில்லை என்று சொன்னால் ஒரு குறிப்பு அதைப்பற்றி என்னிடத்திலே கொடுத்தால்கூட நாளையேகூட அங்கே போய்ச் சேரும்படி நான் ஏற்பாடு செய்ய முடியும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அரசாங்கத்தின் கையிருப்பில் அதிக உரம் இருப்பதாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமப் பகுதிகளிலே விவசாயிகளுக்குத் தேவையான உரம் கிடைப்பதில் மிக மிகக் கஷ்டம் இருக்கிறது. என்ன • காரணம் என்று ஆராய்ந்து உரம் அவர்களுக்குத் தேவையான அளவிற்குக் கிடைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை எதிர்பார்த்துதான் ஏற்கனவே நான் பதில் சொன்னேன். எந்த கிராமத்திலே தேவைப்படுகிறது என்று ஒரு சிறு குறிப்பு என்னிடத்திலே மாலைக்குள் கொடுத்தால்கூட நாளையே கிடைக்கும்படி செய்யலாம்.



1974 டிசம்பர் 13]

**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிர்ச்சி அடையத்தக்க அளவிற்கு உரம் போதுமான அளவிற்குக் கொடுக்கக்கூடிய அளவிற்கு இருப்பு இருப்பதாகச் சொன்னார்கள். எந்த எந்த இடத்திலே கிடைக்கவில்லை என்று சொன்னால் அதை நிவர்த்தி செய்ய முன்வருகிறேன் என்றும் அறிவித்து இருக்கிறார்கள். குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே அந்த மாவட்டத்திற்கு அதிகமாக உதவி செய்யக்கூடிய முறையிலே— அதிகமான உரம் தேவைப்படுகிறது, அங்கே அதிக அளவிற்கு உரம் கொடுக்க ஆவன செய்யப்படுமா? அது மட்டுமல்ல, உரத்தின் விலையேறியிருக்கிறது. அதன் காரணமாக விவசாயம் கட்டுபடியாகவில்லை என்று விவசாயப் பெருங்குடி மக்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே, ஆகவே உரத்தின் விலையைக் குறைப்பதற்கும் தீவிரமான முயற்சியை அவர்கள் மேற்கொண்டு அதற்காக மத்திய அரசோடு மோதக்கூடிய அளவிற்கு நிலைமையை அரசாங்கம் உருவாக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், மேற்கொண்டு 80,000 டன் நைட்ரஜன், டன் என்பது அதை யூரியா என்றால் 2-ஆல் பெருக்கிக் கொள்ள வேண்டும், அம்மோனியம் சல்பேட் என்றால் 5-ஆல் பெருக்கிக் கொள்ள வேண்டும், கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் என்றால் 4-ஆல் பெருக்கிக் கொள்ள வேண்டும். 30,000 டன் அதிகமாக மத்திய அரசு கொடுத்திருக்கிறது. ஏற்கனவே கைவசம் இருக்கும் இந்த உரம் தீர்ந்து போகுமானால் மேற்கொண்டு கேட்டு வாங்கலாம். நான் சொன்ன கணக்கில்கூட தனியார் மூலமாக விநியோகமாகும் 'நான்-பூல் ஃபெர்டிலைசர்', கணக்கைச் சொல்லவில்லை. கூட்டுறவுத் துறை மூலமாக விநியோகிக்கப்படும் அந்த உரத்தையும் கணக்குச் சொல்லவில்லை. அரசின் கையில் இருப்பதைச் சொன்னேன். எந்தச் சங்கடமும் இல்லை. சின்ன துண்டுத் தாளில் எழுதிக் கொடுத்தால் போதும், ஒரு நாளைக்குள் எந்தக் கிராமத்திற்கு எந்த உரம் தேவையோ அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள், மறுபடியும் எதற்காகக் கேட்க வேண்டும்?

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஏறத்தாழ 5 கோடி கிலோ உரம் கைவசம் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலேயிருக்கின்ற நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு சாதாரணமாக 50 கிலோ வேண்டும். அப்படிப் பார்த்தால் 17 கோடி கிலோ தேவைப்படுகிறது. அதற்கு அரசு எந்த வகையிலே அந்த உரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, நான் சொன்ன கணக்கு, ஏற்கனவே கொடுத்து போக, இன்று காலையில் கைவசம் இருப்பதைச் சொன்னேன். ஆனால், ஏற்கனவே ஏறத்தாழ 25 கிலோ என்ற அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எங்கே தேவையோ அதைத் தெரிவித்தால் போதும், அங்கு டி.ஏ.ஓ., ஜில்லா விவசாய அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறேன், கேட்டால் தாமதமில்லாமல் கொடுக்கும்படியாக. அதற்கும் கொடுக்க முடியாமல் எங்கேயாவது இருந்தால் துண்டுத் தாளில் எழுதிக் கொடுங்கள் போதும்.

DR. H. V. HANDE: The Hon. Minister just now mentioned that fertilisers are being distributed in a proper manner. Is it not a fact that there are a number of complaints (several parties have complained) that fertilisers are not being distributed properly and that the supply has been irregular, If so, may I know what concrete steps have been taken by this Government to see that this irregularity is set right? In fact, in G. O. Ms. No. 1136, the Government itself has accepted that there have been several irregularities in fertiliser distribution. Viewed in that context, the blanket assurance given by the Hon. Minister just now is absolutely baseless. Is it not a fact that there have been a number of complaints about fertiliser distribution and is it not a fact that persons are forced to buy fertilisers in blackmarket at a fanciful price. When that is the factual position, what is the meaning of his blanket assurance? What are the steps taken by this Government to see that fertilisers are distributed in a proper manner and irregularities are set right?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: I would like to know what is the date of that G.O. which the hon. Member is referring to?



DR. H. V. HANDE: It is dated 16th July 1974 and G.O. No. is 1136. This G.O. is about three or four months old. Whether it has been implemented or not is a different matter. But it says that there have been several irregularities in fertiliser distribution. The Hon. Minister has given a blanket assurance that enough fertilisers are available. But we know the sufferings of the people to get fertilisers. With this kind of assurance, I would like to know whether the Hon. Minister is earnest in solving this problem. I would like to know what are the concrete steps he has taken to set right the irregularities and to prevent blackmarketing. Many people have written to us and we have also exhibited the post cards here. People are not getting fertilisers. May I know what concrete steps have been taken to prevent blockmarketing ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The hon. Member is not probably aware that the fertiliser year ends with 31st July. The G.O. he has referred to pertains to last fertiliser year. From August, new fertiliser year has started. We have assured that enough fertilisers are available. If complaint is received, I have taken steps to see that it is immediately redressed. A complaint was received from Pudukkottai and the Director of Agriculture immediately replied to the Collector and enough stocks of fertilisers were rushed there. That is how we redress the complaint.

DR. H. V. HANDE: Point of Order, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடிக்கட்டும்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The question is how we are dealing with complaints. As soon as a complaint is received, immediately steps are taken to redress the complaint. If in a particular place fertiliser is not available, steps are taken to see that the fertiliser is distributed there. If the hon. Member has got any concrete case, he need not raise it here. He can send me a note. I do not want a postcard. Even a small paper is enough. Please do not waste money on post-card.

DR. H. V. HANDE: On a point of order, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரம், துணைக் கேள்விகள் கேட்டு மேலும் தகவல் அறிவதற்காகத்தானே தவிர கேள்வி நேரத்தை விவாதத்திற்குப் பயன்படுத்தக் கூடாது. நம் முடைய விதிமுறைகளில் அப்படி இருக்கிறது. விவாதம் வேண்டு

மென்றால் மறுபடியும் போதிய நேரம் கிடைக்கவில்லை, விவாதத்திற்கு இடம் கொடுங்கள் என்று கேளுங்கள். அதன்பிறகு பார்க்கலாம்.

**திரு. ஆலடி அருணா :** அமைச்சரவர்கள் ஒரு கார்டு போட்டால் போதும் என்று சொல்கிறார்கள். . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** என்னுடைய கேள்வி என்னவென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் இரண்டு பேரிலே யார் பேசுவது ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் சொல்வது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். கேள்வி கேட்பதற்கு இடம் கொடுக்கலாமே தவிர, விவாதத்திற்கு இடமில்லை.

DR. H. V. HANDE : I put a question in order to elicit an answer. I was saying about the post cards we have received regarding complaints about fertiliser distribution. Number of complaints are there. Number of complaints have been received not only by us. Ruling party members also know that there are irregularities in fertiliser distribution and fertilisers are not readily available.

இரண்டு மடங்கு பணம் கொடுத்து உரம் வாங்க வேண்டிய நிலைமையிருக்கிறது. இது எல்லா எம்.எல்.ஏ.க்களுக்கும் தெரியும். ரூலிங் பார்ட்டி எம்.எல்.ஏ. உட்பட எல்லோரையும் கேட்டுப் பாருங்கள், அவர்களுக்கும் அந்தக் கஷ்டம் இருக்கிறது. இரண்டு மடங்கு விலை கொடுத்து பிளாக் மார்க்கெட்டில் வாங்க வேண்டிய நிலைமையிருக்கிறது. அதற்குப் பரிகாரம் சொல்லவில்லை. ஏதோ கிண்டல் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வார்த்தைகளைக் கொஞ்சம் கவனமாகப் பயன்படுத்துங்கள், கிண்டல் என்றெல்லாம் ஏன் சொல்ல வேண்டும் ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அப்படித்தான் அவர்கள் பேசுகிறார்கள். அவர் மாத்திரம் கேட்கலாம், நாங்கள் எடுத்துச் சொல்லக் கூடாதா ?





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கார்டு போடுங்கள் என்று சொன்னார்கள், அதில் வேறு என்ன இருக்கிறது ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : I do not want to evade any question of Dr. Hande. He need not create any heat over this debate. He can put his question in a calm manner and I will answer him. We have got enough fertilisers to meet the needs of Tamil Nadu State. We have got from Central Government some fertilisers from allotments to other States. Some dealers are insisting that complex fertilisers should be bought before staight fertilisers are given. That refers to private dealers. But I referred to the stocks in the hands of Government. I have received complaints that some dealers are insisting that two bags of complex fertilisers should be purchased before one bag of straight fertiliser is purchased. We have to deal with it. That is not under the direct control of the State Government. Dealers get stock from non-pool, from indigenous producers. But, nevertheless, we are seeing that those complaints are also properly dealt with.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து வினா எண் 18.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, நான் துணைக் கேள்வி கேட்க வேண்டும். இது விவசாயப் பிரச்னை. அமைச்சரவர்கள் சொல்வது உண்மை இல்லை என்று சொல்வதற்கு இடமில்லை என்றால் என்ன அர்த்தம் ? விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வி கேட்பதற்குள் உட்கார் உட்கார் என்றால் எங்கள் உரிமை பறி போகிறது. ஆசிரியர்கள் மாணவர்களை மிரட்டுவதுமாதிரி உட்கார் உட்கார் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்வி கூப்பிட்டாகி விட்டது.

(முற்பகல் 10-00)

*Tomato cultivation*

*18 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the steps taken to promote Tomato cultivation on a large scale in this State?

**(திரு. குழ. செல்லையா, திரு. முனு ஆதி குறுக்கே பேசிக் கொண்டே நின்றனர்).**

[1974 டிசம்பர் 13

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தக்காளிக்கென்று தனித்திட்டம் இல்லை. காய்கறி சாகுபடித் திட்டத்தில் ஏக்கருக்கு ரூ. 120 வீதம் கடன் உதவி வழங்கப்படுகிறது.

**திரு. குழ. செல்லையா :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்மைக்கு மாறான தகவல்களைத் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்).

**திரு. முனு ஆதி :** ஒரு துணைக் கேள்வி கேட்க வேண்டுமென்றால் மறுப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? வேண்டாம், உட்காருங்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? அப்பட்டமான பொய்யைச் சொல்லுகிறார் என்று சட்டசபையில் சொல்லக் கூடாது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உண்மைக்கு மாறான தகவலைக் கொடுத்திருந்தால் வேறு நடவடிக்கை இருக்கிறது. இது அல்ல முறை.

**திரு. முனு ஆதி :** ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கக் கூடாதா? இவ்வளவு பாரபட்சமாக இருக்கக்கூடாது.

**திரு. என். டென்னிஸ் :** ஏக்கருக்கு 120 ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுப்பது குறைந்த தொகையாக இருக்கிறது. இதை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** 120 ரூபாய் ஏக்கர் ஒன்றுக்கு கடனுதவியாகக் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதியில் தக்காளி உற்பத்தி செய்ய அதிகப் பணம் தேவைப்படுமானால் கோவாப்பரேட்டிவ் சென்ட்ரல் பாங்கு தாராளமாகப் பணம் கொடுக்கிறது. அதனிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is hybrid tomato introduced in Tamil Nadu. I mean hybrid variety of tomato, because it has been giving very good yield?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the question is about yield of tomato. We get an yield of 10 to 20 tons per acre in 90 to 110 days; this is high-yielding variety. The tomato yield is fairly good.



1974 டிசம்பர் 13]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** காய்கறியை பதப்படுத்தி செய்வதற்காக ஒரு தனித் திட்டம் [illegible] எஸ்டேட்டில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. அதனால் பல லட்சக் கணக்கான ரூபாயை நஷ்டப்படுத்திவிட்டார்கள். அந்தத் திட்டத்தைப் புதுப்பிக்க வழி இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் நல்லது. அரசாங்க எஸ்டேட்டில் தோட்டம் போட்டது பழைய காலக் கதை. அதைப் பற்றித் தகவல் சேகரித்துத் தர தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். முத்தையா :** தக்காளி காய்கறி வகையைச் சார்ந்தது என்றாலும் சத்துள்ளது. ஜூஸ் தயார் செய்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்பலாம். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒட்டப்பிடாரம் பகுதியில் ஒரு தக்காளி ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தக்காளி சத்துள்ளது என்று சொன்னார்கள். எல்லோருக்கும் தெரிந்த ஒரு உண்மை. அதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன். தொழிற்சாலை தொடங்குவது பற்றி ஆராய வேண்டும். வேறு துறையினரும் ஆராய்ந்தாக வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** 10 மணி ஆகிவிட்டது. என்.சி. மோஷன் கொடுத்திருக்கிறோம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண் 10. . .

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஏற்கனவே மணி பத்தாகி விட்டது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தங்கமணி அவர்கள் இந்த அவையில்தான் இருக்கிறார்கள். கேள்வி நேரத்தில், சில உறுப்பினர்கள் எப்படி குரல் எழுப்பினார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். கேள்வி நேரத்திற்கு எவ்வளவு நேரமானாலும் துணைக் கேள்விகள் தாராளமாகக் கொடுங்கள் என்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் ஒரு மணி நேரம் ஆனவுடன் மற்றக் கேள்விகளுக்கான விடைகளை அச்சடித்துக் கொடுத்துவிடலாம் என்று சொன்னால், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

[1974 டிசம்பர் 13

**திரு. கே. டி. கே. தங்கமணி:** விதியில் தெளிவாக கேள்வி நேரம் ஒரு மணி நேரம் என்று இருக்கிறது. கேள்வி நேரத்தை நீடிக்க வேண்டுமென்று கூடத் நாங்கள் சொல்லவில்லையே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பல முறை அப்படிச் செய்திருக்கிறோம். பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

## குறுகியகால பயிர் வகைகள்

* 19 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற குறுகியகால பயிர் வகைகளைத் தேர்ந்தெடுக்க சோதனை ஏதேனும் மேற்கொள்ளப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) & (இ) பேரவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** சோதனை எப்போது மேற்கொள்ளப்பட்டது? அவை எத்தனை நாட்களில் பலன் கிடைக்கும் தன்மையுள்ளவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எந்த சோதனையைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. விவர அறிக்கையில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். நெல்லைப் பற்றியுள்ளது; சோளத்தைப் பற்றியுள்ளது; கம்பைப் பற்றியுள்ளது; வரகைப் பற்றியுள்ளது; பருத்தியைப் பற்றியுள்ளது. எல்லாவற்றிலும் என்னென்ன காரியங்கள் நடந்திருக்கின்றன என்பது விவரமாக அச்சடித்துக் கொடுக்கப் பட்டிருக்கிறது. எதைப்பற்றி என்று குறிப்பிட்டுக் கேட்டால் மேற்கொண்டு விவரங்கள் கொடுக்கலாம்.

**திரு. எஸ். வடிவேல்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையைப் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். . .

---

@ 247–256 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.



1974 டிசம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று எடுத்துக் கொள்ளப் படுவதாக இருந்த கேள்விகளுக்கான தாள்கள் நேற்றே அவையில் வைக்கப்பட்டு விட்டன. நேற்றைய கேள்விகள் இன்று வருகின்றன. உறுப்பினர்கள் கையில் அவை இருக்க வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல்:** நேற்று வராதவர்கள் இன்று வந்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வராதது அவையின் குற்றம் அல்ல.

## சென்னை மாநகராட்சிக்குக் கடன்கள்

* 20 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73 ஆம் ஆண்டிற்கு கடன் உதவி கோரி சென்னை மாநகராட்சி மன்றம் மாநில அரசிடம் விண்ணப்பித்துக் கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் மாநில அரசு எடுத்த முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம்.

(இ) சென்னை மாநகராட்சி மன்றத்துக்கு 1972-73 ஆம் நிதியாண்டில் ரூபாய் 106.25 இலட்சங்கள் கடனாக வழங்கப் பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** குறிப்பாக சென்னை மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தனி அதிகாரி பொறுப்பில் இருக்கும் காலத்தில் அரசு கடனாகவும் மானியமாகவும் எவ்வளவு கொடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பாலங்கள், சாலைப் பணிக்காக 98.945 லட்சம்; குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 16.120 லட்சம்; வடிகால் திட்டங்களுக்கு 11.40 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

**Thiru K. M. SUBRAMANIAM:** Sir, since the Corporation has been superseded and since it is under the administration of a Special Officer, will the Government think of circularising the

budget proposals at least to M.L.As. of the City? that is one. Secondly, whether the Government has proposed any grant for reconstruction, repair and improvemnet of interior roads and educational buildings this year?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பாலங்கள் மற்றும் சாலைப் பணிக்கு 65.90 லட்சம் கேட்டிருந்தார்கள். அரசு அதற்கு 98.945 லட்சம் வழங்கியிருக்கிறது. குடிநீர் வழங்கு திட்டத்திற்கு 79.02 லட்சம் கேட்டிருந்தார்கள். 16.120 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. வடிகால் திட்டத்திற்கு 62 லட்சம் கேட்டிருந்தார்கள். 11.40 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தனி அதிகாரி பொறுப்பேற்ற பின்னர் பாங்குக்குக் கொடுக்க வேண்டிய தவணைத் தொகை எல்லாம் கொடுத்து வைத்தால் இருப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவர்கள் ஏன் கடன் கேட்டார்கள்? எப்போது கேட்டது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அரசாங்கம் தனியாக வழங்கியிருக்கிறது.

## கும்பகோணம் பகுதியில் சிறப்பங்காடி

* 21 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் பகுதியில் சூப்பர் மார்க்கெட் ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) & (இ) கும்பகோணம் நகரில் கூட்டுறவுச் சிறப்பு அங்காடி ஒன்றை சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டகசாலை, 30—6—1974 அன்று ஏற்படுத்தியுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** கூட்டுறவுத்துறை மூலம் தமிழ்நாட்டில் சூப்பர் மார்க்கெட் திறக்கப்படுகின்றன. ஆனால் சில பகுதிகளில் அதை தனியார்கள் நடத்துகிறார்கள். எனவே,



தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா கூட்டுறவு சிறப்பங்காடிகளையும் கூட்டுறவுத் துறையில் கொண்டு வந்து நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சிறப்பங்காடிகள் எல்லாம் கூட்டுறவுத் துறையில்தான் இருக்கின்றனவே தவிர அவர்கள் கூறுவது தவறானதாகும். தனியார்கள் எப்போதும் கூட்டுறவுச் சிறப்பங்காடிகளை வைத்துக் கொள்ள முடியாது.

## வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினின்று விலக்களிக்கப்பட்ட கட்டடங்கள்

* 22 வினா—**திரு. என். டென்னிஸ்:**
**திரு. என். கே. பழனிசாமி:**
**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநிலையங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் அனைத்துக்கும் குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடுகள் சட்டத்தினின்று விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) இந்து, கிறிஸ்துவ, முகம்மதிய சமயப் பொறுப்புக் கழகங்களுக்கும், அறநிலையங்களுக்கும் சொந்தமான கட்டிடங்கள் அனைத்துக்கும், தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் அனைத்து விதித்துறைகளினின்றும் அரசு விதிவிலக்கு அளித்துள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** பொதுவாக இந்தமாதிரி விதிவிலக்கு கொடுத்ததன் காரணமாக அந்தந்த கோவில் ட்ரஸ்டிகள் அல்லது மடங்களின் ட்ரஸ்டிகள் தங்களுக்கு இஷ்டப்பட்டவர்களுக்கு குறைவாகவும் தங்களுக்கு வேண்டாதவர்களுக்கு அதிகமாகவும் வாடகையை உயர்த்தி அவர்களை அங்கிருந்து வெளியே தள்ளிவிடுவதன் காரணமாக பலபேர்கள் பாதிக்கப்படுவதால் இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கும் அவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தக்கூடிய முறையில் மாக்ஸிமம் ரென்ட் இவ்வளவுக்கு மேல் போகக் கூடாது என்ற முறையில் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

[1974 டிசம்பர் 13

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த விதிவிலக்கு அளிப்பதன் காரணமாக—இந்து, முஸ்லீம், கிருத்துவ சமய சார்புள்ள அறநிலையங்களுக்குச் சொந்தமான வீடுகளை பல பேர்கள் மிகமிகக் குறைந்த வாடகையில் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் ; எனவே, இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த அறநிலையங்களுக்கான செலவுகள் சரிக்கட்டப்படுவதற்கு அந்த வாடகைகளை உயர்த்தவேண்டுமென்று அடிக்கடி கோரிக்கைகள் பல்லாண்டுகளாக வந்து கொண்டிருக்கின்றன என்பதால் எல்லா மதங்களுக்கும் பொதுவாக இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்குச் சொந்தமான கட்டடங்களை குறைந்த விலையில் பலர் அனுபவித்துக்கொண்டிருப்பதால் அந்த அறநிலையங்களைப் பாதுகாக்கும் வகையில் அமைச்சர்கள் கூடி ஒரு முடிவு எடுத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சாமி சிலைகளுக்குச் சொத்து வைத்துக் கொள்வதற்கு உரிமை இருக்கிறது, தனி மனிதர்களுக்குச் சொத்து வைத்துக்கொள்ள உரிமை இருப்பதுபோல். மனிதனைப்போல் சட்டத்திற்குக் கட்டுப்படுவதற்குச் சாமிகளுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, இந்த விதிவிலக்கு எந்தவகையில் அளிக்கப்பட்டிருக்கிறது ? சட்ட ஆலோசனை ஏதாவது கேட்கப்பட்டதா ? அதன் விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அறநிலையங்களில் இருப்பவர்கள் கோவில்களை பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. கோவில்களுக்குச் சொந்தமான வீடுகளை பல பேர்கள் ரூ. 30, ரூ. 40 என்று வாடகை கொடுத்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா மதங்களில் உள்ளவர்களும் அந்தக் கோரிக்கையை வைத்திருந்தார்கள். பல்லாண்டு காலமாக இருந்துவரும் கோரிக்கையாகும் அது. எனவே, அந்தத் தடைக்கற்களை நீக்க அமைச்சர்கள் கூடி ஒரேயடியாக எல்லா மதங்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இன்று எங்களுக்கு வந்துள்ள தகவலில் இருந்து அதன் காரணமாக எல்லா அறநிலையங்களும் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் நல்லெண்ணத்தோடு கோவில் சொத்துக்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று ஆரம்பித்திருந்தாலும் இன்று நடைமுறையில் பல தர்மகர்த்தாக்கள் அதைத் தவறான முறையில் பயன்படுத்திக்

கொண்டு வருகிறார்கள். இன்றும் பலர் குறைந்த வாடகையே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விதிவிலக்கு கொடுத்துத் தான் அதிக வாடகை பெறவேண்டும் என்பதில்லை.

Fair rent application can be preferred by the Landlord or the tenant.

எனவே, தர்மகர்த்தாக்களுக்கு, லான்ட் லார்ட் என்ற முறையில் ஃபேர் ரென்ட் பிக்ஸ் செய்யச் சொல்லி நியாயமான அளவிற்கு வாடகை வாங்கிக் கொள்ளலாமே. இந்த விதிவிலக்குக் காரணமாக தர்மகர்த்தாக்கள் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? எனவே, மீண்டும் இந்த முறையை மறுபரிசீலனை செய்ய சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அம்மையார் அவர்கள் இதை ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்று தெரியவில்லை. இப்போது எதிர்க்கிறார்கள். முன்னால் நிறைய வக்கீல்களுக்கு இது ஒரு வேலையாக இருந்தது. அம்மையார் அவர்களும் ஒரு வழக்கறிஞர். அந்த வேலை கெட்டுப்போய் விட்டதா? வாடகைகள் மிகவும் குறைவாக வந்து கொண்டிருக்கிறது என்று அடிக்கடி அறநிலையங்களைச் சார்ந்தவர்கள் சொல்லி வந்திருக்கிறார்கள். இப்படி விதிவிலக்கு அளிப்பது தவறு என்று யாரும் இந்த மன்றத்தில் இதுவரை சொல்லவில்லை. வாடகைகள் மிக மிகக் குறைவாக இருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. திரும்ப ரிவேர்ஸ் கியரில் போக வேண்டுமென்றால் அதில் என்ன லாபம் என்று புரியவில்லை.

### *Development of Colachal harbour.*

*23 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI:
THIRU P. SOUNDARAPANDIAN:
THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether there is a proposal with the Government for providing necessary facilities at Colachal to serve as a fishing harbour and also amenities for boat building purposes; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை :** (அ) & (இ) ஆம். கொளச்சலில் முழு அளவு வசதிகள் கொண்ட துறைமுகம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் பரிசீலிக்கப்பட்டது; அப்பகுதி மணல் படியும் இயல்புள்ளதென்ற காரணத்தாலும் அருகாமையில் தூத்துக்குடியில் ஒன்றும் கேரளத்திலுள்ள விழிஞ்சத்தில் ஒன்றுமாக இரு துறைமுகங்கள் அமைந்துள்ள காரணத்தாலும் அத்திட்டம் கைவிடப்பட்டது. எனினும், கொளச்சலில் படகு மாற்றம் செய்யும் தோணித் துறையொன்று ஏற்படுத்தும் திட்டம் தற்போது பரிசீலனையில் உள்ளது. மேற்படி திட்ட மதிப்பீடு சுமார் 41 லட்சம் ரூபாய்.

ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தின்கீழ், படகு கட்டும் பணியை மேற்கொள்வது என்று தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்தப் பணியை எப்போது ஆரம்பிப்பார்கள்? பல்லாண்டுகளாக இந்தப் பிரச்னை அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. காலவரையறை ஏதாவது உண்டா? உடனடியாக அதை ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை :** சுமார் ரூ. 43.6 லட்சம் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் உலக வங்கிக் குழு ஒன்று நம் நாட்டிற்கு மீன் துறை அபிவிருத்திக்காக மட்டும் 75 கோடி ரூபாய் கொடுப்பது பற்றி முடிவு செய்வதற்காகச் சமீபத்தில் வந்திருந்தது. இந்தக் குளச்சல் பகுதியை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று உலக வங்கியாரை எங்கள் துறையினர் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மதிப்பீடு செய்து அனுப்பும்படி உலக வங்கியார் எங்கள் நிறுவனத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. தமிழகத்தில் மீன்வளத்தைப் பெருக்க உலக வங்கி மூலம் தற்போது 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விளக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மேற்குக் கடற்கரையில் இது ஒரு முக்கியமான துறைமுகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் இப்போது ஓஷியானோகிராபி சர்வே எல்லாம் நடந்ததாகக் கேள்விப்படுகிறேன். அது ஒரு சாதகமான முடிவு. அதுமட்டுமின்றி. ஒரு சிறிய கப்பல் பாலம் கட்டினால், இரண்டு



மூன்று பர்லாங் தூரம் கட்டினால் பெரிய கப்பல்கள் வர ஏதுவிருக்கிறது. மணல் மேடிட்ட பகுதிகள் அதிகம் இல்லை என்ற கருத்தெல்லாம் சொல்கிறார்களே, இதுபற்றி அரசாங்கம் விரிவான விவரங்களைத் தர முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை :** இந்திய அரசுக்கு முறைப்படி செலவு பற்றி மதிப்பீடு செய்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது. பருவ காலங்களில் அடிக்கிற பெரிய காற்று காரணமாக வருகிற மணல் கரைகட்டி விடுகிற அளவிற்கு மேடிட்டு விடுவதால் எடுத்துக்கொள்கிற முயற்சிக்குப் பலன் ஏற்படாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது இரண்டு கோடி ரூபாய் அளவில் திட்டத்தை ஆய்வு செய்ய துறை ஆணை பிறப்பித்திருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கொளச்சல் பகுதியை மீன்பிடித் துறைமுகமாக ஆக்குவது என்பது எப்போது பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்பட்டது? இதுவரை காலதாமதமானதற்குக் காரணம் என்ன? மத்திய அரசிடம் இதற்காக ஏதாவது நிதி உதவி கோரப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை :** மக்கள் கோரிக்கை வந்த உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மத்திய அரசுக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். மத்திய அரசு உரிய வகையில் ஆய்வு செய்து அது தேவையற்றது என்று முடிவு செய்த பிறகு கடந்த திங்களில் அதை நிரந்தர மீன்பிடி துறைமுகமாக ஆக்க வேண்டும் என்ற திட்டத்தை மறு பரிசீலனை செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது.

*Jersy Farm at Kodaikanal*

*24 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal to set up a Jersy farm at Kodaikanal by the Tamil Nadu Dairy Development Corporation; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) நியூஜிலாந்து நாட்டு அரசு உதவியோடு கோடைக்கானலில் ஜெர்சி இனக் கால்நடைப் பண்ணை ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

[1974 டிசம்பர் 13

(இ) இதுகுறித்து இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. இச்செயற்குறிப்பு பற்றிய விவரங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தப் பேச்சுவார்த்தை அதிக நாட்களாகத் தொடர்ந்து வருகிறது. இதில் ஏதாவது சிக்கல் இருக்கிறதா? இதில் ஒரு முடிவுக்கு வருவதற்கு—ஆந்திரா பிரிந்ததற்குப் பிறகு நமக்கு ஹோசூர் ஒன்றுதான் இருக்கிறது. இதை கொடைக்கானலில் சீக்கிரம் ஏற்படுத்துவதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா? இதில் என்ன சிக்கல்? ஏன் முடிவு எடுக்கக் கூடாது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, இதற்காகத் தற்காலிகமான செயற்குறிப்பு ஒன்றைத் தமிழ்நாடு அரசுச் சார்பில் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு நாம் அனுப்பியிருக்கிறோம். அதனுடைய அடிப்படையிலே பால்பண்ணை வளர்ச்சித் துறை, கால்நடை வளர்ப்பு வல்லுனர்கள் ஆகியவர்கள் இந்தப் பண்ணைக்குத் தேவைப்படும் இடங்களை நியூசிலாந்து அதிகாரிகளுடன் கொடைக்கானலில் பார்வையிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்தத் திட்டம் விரைவாக செயல்பட வேண்டும் என்று நம்முடைய பால் பண்ணை கழகத்தின் சார்பில் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தியிருக்கிறோம். மத்திய அரசாங்கம் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்கிறது. விரைவில் செய்ய வேண்டும் என்பதற்கு மேலும் வற்புறுத்தலாம்.

## சிறுதொழில் நடத்த வங்கிக் கடன்கள்

* 25 வினா—திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசவுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம், சிறுதொழில் நடத்த பின்தங்கிய, தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், மாவட்ட வாரியாக மாவட்ட நல அதிகாரிகள் மூலம் மனு செய்தவர்கள் தற்போது எத்தனை பேர்கள்?

(உ) கடன் வசதி பெற்றவர்கள் எத்தனை பேர்கள்?



1974 டிசம்பர் 13]

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அ) ஆம்.

(இ) & (உ) இதைப்பற்றி விவரங்களடங்கிய அட்டவணை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** பின்தங்கியவர்களுக்கும், அரிசனங்களுக்கும் சிறு தொழில்கள் நடத்துவதற்காக மாவட்ட நல அதிகாரிகள் மூலமாக விண்ணப்பங்கள் பெற்று, அவைகளை ஆய்வு செய்து பாங்குகளுக்கு அனுப்பப்படுகிறது. பாங்குகளில் இருக்கக்கூடிய ஏஜண்டுகள், தங்கள் இஷ்டத்துக்குத்தான் கொடுப்போம், இஷ்டப்படவில்லை என்றால் கொடுக்க மாட்டோம் என்று அறிவித்துவிட்டார்கள். அதன் காரணமாக தேவை இல்லாமல் விண்ணப்பதாரர்களெல்லாம் 20 அல்லது 30 ரூபாய் செலவு செய்து கடன் கிடைக்காமல் போய்விடுகிறது. தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளில் அரிசனங்களுக்கும், பின்தங்கியவர்களுக்கும் சுலபமாகக் கடன் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலிருந்து கடன் கோரி கொடுத்துள்ள விண்ணப்பங்கள் 88,988. அதிலே 66,000-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அரிசன நலத் துறை அதிகாரிகளினால் பரிந்துரைக்கப்பட்டு, வங்கிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவைகளில் 13,000 சொச்சம் பேர்களுக்குக் கடன் வழங்கியுள்ளார்கள். ரூ. 1 கோடி 14 லட்சத்துக்கு மேல் இதுவரைக்கும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. 35,000 சொச்ச மனுக்கள் இன்னும் பரிசீலனையில் இருக்கின்றன. சிபார்சு செய்த விண்ணப்பங்கள் இன்னும் பரிசீலனையில் இருக்கின்றன. கொடுக்கப்படும் என்று நம்புகிறேன். இல்லையென்றால் அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

**திரு. த. சோலையா:** தலைவர் அவர்களே, அரிசனங்களும், பின்தங்கிய வகுப்பினர்களும் கடன் கேட்டிருக்கிற விவர அறிக்கையிலே, அதிகமாகக் கேட்டிருப்பது இராமநாதபுரம் மாவட்டத்திலே இருப்பவர்கள்தான். ஆனால், கடன் தொகை பெற்றிருப்பதிலே குறைந்த தொகை 4 லட்சத்துக்குள்ளேதான்

@ 257-ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 டிசம்பர் 13

அங்கே பெற்றிருக்கிறார்கள். தஞ்சாவூர், சேலம், தர்மபுரி, திருநெல்வேலி போன்ற இடங்களில் ரூ. 37 லட்சம், 21 லட்சம், 14 லட்சம், 15 லட்சம் என்று அதிகமான தொகை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், மழையே இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிற வறண்ட பிரதேசமாகிய இராமனாதபுரம் மாவட்டத்தில் கடன் கொடுக்கப்பட்டது குறைந்திருக்கிறது. ஆகவே, வருகிற ஆண்டிலாவது நடைமுறையிலாவது அதை மனதில் கொண்டு, அரிசனங்களுக்கும், பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் இராமனாதபுரம் மாவட்டத்திலே கடன் வழங்குவதிலே முன்உரிமை கொடுக்க அரசாங்கம் இனியாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடனுக்கும், இராமனாதபுரத்தில் இருக்கிற இன்றைய நிலைக்கும் அதிகமாகப் பொருத்தம் இருக்கிறதோ என்னவோ ? ஆனால், இந்தக் கடன்கள் சிறு தொழில்கள் செய்வதற்கான கடன்கள், அந்தந்த மாவட்டங்களில் கொடுப்பதற்கு பரிசீலனை செய்து பரிந்துரை செய்யப்படுகிறது. இராமனாதபுரம் மாவட்டத்தில் 15,000 விண்ணப்பங்களில், 12,000 விண்ணப்பங்கள் சிபார்சு செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ரூ. 4 லட்சத்துக்கு மேல் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 3,000 சொச்சம் அப்ளிகேஷன்கள் இருக்கின்றன. அவைகளில் சிபார்சு செய்த அப்ளிகேஷன்கள் 2,000. அவைகளை நாங்கள் கொடுப்பதற்கு சிபார்சு செய்திருக்கிறோம். ஆனால், இது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கொடுக்கின்ற கடன் தான். அரிசனத் துறை மூலம் பெறுகின்ற கடன்களுக்கு எங்களிடம் மனுக்கள் வந்திருந்தால், இராமனாதபுரம் போன்ற பஞ்சப் பிரதேசங்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்து, அப்படிப்பட்ட பகுதிகளில் அதிகமான கவனத்தை அரிசன நலத் துறை மேலும் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** 10½ மணி ஆகிவிட்டதே, இன்னும் கேள்வி நேரம் போய்க் கொண்டிருக்கிறதே ? தினமும் இம்மாதிரி செய்வீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சில நாட்களில் கேள்வி நேரம் 1½ மணி நீட்டிக்கப்பட்டிருக்கிறது.



1974 டிசம்பர் 13]

(திரு. கு. காமாட்சி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கு. காமாட்சி, நீங்கள் உட்காருங்கள். திரு. சோமசுந்தரம்.

**திரு. ந. சோமசுந்தரம் :** தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளில் அரிசனங்களுக்கும், பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் கடன் பெறுவதற்கு மாவட்ட நல அதிகாரிகள் மூலம் மனுச் செய்தால் கடன் கொடுக்கப்படும் என்ற விதிகள் இல்லை, நாங்கள் இஷ்டப்பட்டால் தான் கொடுப்போம், நாங்கள் விரும்பா விட்டால் கொடுக்கமாட்டோம் என்று எல்லா வங்கிகளிலும் சொல்கிறார்கள். அப்படிச் சொல்வது மட்டுமல்ல. பல பேர்களுக்கும் நேரிடையாகவே கடன் கொடுக்கிறார்கள். மாவட்ட நல அதிகாரிகள் சிபார்சு செய்தவர்களுக்குக் கடன் கொடுப்பது இல்லை. காரணம், அதற்கு அரசாங்கத்திலிருந்து எந்தவிதமான உத்திரவாதமும் அளிக்காதது தான். ஆகவே, மாவட்ட நல அதிகாரிகள் சிபார்சு செய்வதைப் பொருட்படுத்தப் போவதில்லை என்று சொல்லி மாவட்ட நல அதிகாரிகளால் சிபார்சு செய்யப் பட்ட பல மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசாங்கம் அறியுமா ? இனிமேலாவது ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் தான் இந்தக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அந்த வங்கிகளுக்கு அவர்களுடைய மேலிடத்து அதிகாரிகளிடமிருந்து என்ன உத்தரவு வருகிறதோ, என்ன உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டு எந்தத் தகுதியில், அடிப்படையில் கடன் வழங்க வேண்டும் என்று இருக்கின்றதோ அதற்கு மாறாக அவர்களுக்கு இப்படிப் பட்ட கடன்கள் கொடுப்பதற்குத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபொழுது எனக்கு வேலை இதே தான். ஆனால், அங்குள்ள நிலை என்னவென்றால் அந்த அதிகாரிகள் தங்களுக்கு என்ன விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவோ, அதன்படி தகுதி இருக்கும்பட்சத்தில் நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். மாநில அரசும், மத்திய அரசும் கலந்து பேசி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இம்மாதிரி கடன் கொடுப்பதற்கு ஏழைகளுக்கு ஆளையாவது அடமானமாக ஏற்றுக்கொண்டு கடன் கொடுக்க வேண்டும் என்ற விதி ஏற்பட்டாலொழிய, இப்பொழுது இருக்கிற விதிமுறையின்படி நாம் ஒன்றும் செய்வதற்கு இல்லை.

[1974 டிசம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

### (2) நடைமுறைக் கேள்வி.

### மதிப்பீட்டுக் குழுவிற்குத் தரப்படாத ஒரு கோப்பை உறுப்பினர்கள் பார்வைக்கு வைப்பது குறித்து

DR. H. V. HANDE: Sir, before the Chair moves to the next item, I would like to raise a very important point of order and I would request the Chair to give me three or four minutes and also kindly listen to me.

To-day it is likely that the No-Confidence Motion given notice of by the hon. Member, Thiru Kovai Chezhiyan and the Censure Motion given notice of by the hon. Member, Thiru Aladi Aruna, may be taken up for discussion. But before it is taken up, I think it is very important that a particular document should be placed on the table of the House and the main point that is going to be discussed is the food problem. In the Report of the Estimates Committee, it has been stated that a particular file has not been given. In the Lok Sabha a precedent has been set up and I request the Hon. Speaker to see that a copy of that file is placed on the table of the House so that it would be useful for the discussion to take place now. If it is not possible for the Hon. Speaker to have a copy of that file placed on the table of the House, like the Speaker of the Lok Sabha, he can call the Leaders of all the Opposition Parties to his Chamber and help them to peruse that file. Then only the discussion on the food problem will be useful, meaningful and purposeful. I am quite sure that the other Members belonging to the Opposition Parties will agree with the suggestion I have made. I would like to have a ruling of the Hon. Speaker on this matter.

(முற்பகல் 10.30)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஃபைலைக் காட்டக் கூடாது, அது ரகசியம் என்பதல்ல பிரச்சினை. டெண்டர் கொடுக்க வேண்டும் என்றால் 'லோயஸ்ட்' டெண்டர்



1974 டிசம்பர் 13] [திரு. செ. மாதவன்]

எடுக்கலாமா? அல்லது, அதிக பணம் வந்தால், 'நெகோஷியேடெட் டெண்டர்' எடுக்கலாமா, கூடாதா, என்பது தான். இதிலே என்ன தவறு என்று சொல்லட்டும். ஃபைலை மறைக்கும் பிரச்சினையே எழவில்லை.

DR. H. V. HANDE: The entire file has to be shown to us. The notings made by the Hon. Minister should be made known to us. We would like to peruse the entire file. The Hon. Minister Thiru P. U. Shanmugham, was the Food Minister then, and he made some notings. Unless we peruse the entire file including the notings, we will not know what is behind the huge mystery surrounding it.

திரு. ஜே. ஜேம்ஸ் எழுந்தார்.

திரு. கோவை செழியன் எழுந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜேம்ஸ்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் அறிக்கையில் "எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் தலைவருக்கே இந்த ஃபைல்கள் கொடுக்கப்படவில்லை" என்று காணப்படுகிறது. இந்த அவையில், அதுபற்றி நாம் விவாதிக்கும்போது நிச்சயமாக அந்த ஃபைல்கள் இருந்தால், விவாதத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு, இந்த மன்றத்திற்குப் பயன்படுகிற அளவில் அமையும் என்பதால், அந்த ஃபைல் இந்த மன்றத்தில் வைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது, எதிர்க்கட்சித் தலைவர்களுக்காவது இந்த ஃபைல்கள் காட்டப்பட வேண்டும். அப்படிக் காட்டப்பட்டால் ஒழிய நாம் சரியானபடி விவாதத்தை நடத்த வழியில்லாமல் போய்விடும். எனவே, அந்த ஃபைல்கள் சட்ட மன்றத்தில் காட்டப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இந்த ஃபைல்களில் எந்தவிதமான தவறும் இல்லை, ரகசியமும் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஃபைல்கள் நாடாளுமன்றத்தில் கூட, உறுப்பினர்களால் கேட்கப்பட்டு, அவைகள் தருவிக்கப்பட்டுக் கொடுக்கப் பட்டிருக்கின்றன, உறுப்பினர்களுடைய பார்வைக்கு வைக்கப் பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது பொய். உறுப்பினர் உண்மையைச் சொன்னால் நல்லது. நாடாளுமன்றத்தில் கேட்கப் பட்டது சி. பி. ஐ. ரிபோர்ட். 'நோட்டிங்' போட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்த 'நோட்டிங்' பற்றி கேட்கிறார்கள், அது என்ன 'நோட்டிங்' என்று கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு முதலமைச்சர் கூட அந்த கமிட்டியில் எக்ஸ் அஃபிஷியோ உறுப்பினராக இருந்திருக்கிறார். எனவே, அந்த அறிக்கையில் கண்டிருப்பன வற்றிற்கு அவரும் உடன்பாடு என்று பொருள். அந்த அறிக்கையில், கமிட்டியின் தலைவர் 39 ஆவது பாராவில் சில வாசகங்கள் இருக்கின்றன, அவை எங்களுக்கு சந்தேகங்கள் உண்டு பண்ணுகின்ற வாசகங்கள். நான் அவைகளை, இந்த விவாதம் நன்றாகப் புரியவும், நாங்கள் என்ன சொல்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளவும், அந்த 39 ஆவது பாராவை உங்கள் அனுமதியோடு படிக்கின்றேன்.

"The Committee wanted to peruse the connected files to know as to how the offer of Thiru Thandavarayan was accepted on negotiation. The file was not made available to the Committee till this date. The Committee is of the opinion that the entire partners of A. M. Associated Traders are responsible for the illegal export and this led to large-scale movement of rice with false permits from Tamil Nadu to other States causing artificial scarcity especially in and around Madras City."
என்று இருக்கிற காரணத்தால் அந்த மதிப்பீட்டுக் குழுவே தன்னுடைய சந்தேகத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

எங்களுடைய கட்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஆலடி அருணா அவர்கள் கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் இந்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டுதான் இந்தக் கண்டனம் பற்றிப் பேசப் போகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து நாங்களும் விவாதத்தில் கலந்து கொள்ளப் போகிறோம். எனவே, அந்த ஃபைல்கள் இந்த மன்றத்தில் வைக்கப்படுவது தான் முறை. இதற்கு முன்னால் கூட, எங்கள் கட்சியில் இருந்த



திரு. மதியழகன் அவர்கள், ஃபைல்கள் கேட்டபோது அவருக்கு இந்த மன்றத்தில் அந்த ஃபைல்கள் கொண்டு வந்து காட்டப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத் தலைவர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுக்கும், அமைச்சரவைக்கும் ஏற்பட்ட ஒரு விவாதத்தின்போது, ஃபைல்கள் இந்த மன்றத்திற்குக் கொண்டு வந்து காட்டப் பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த ஃபைல்கள் இந்த மன்றத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். அல்லது திரு. ஆலடி அருணா அவர்களுக்காவது அந்த ஃபைல்கள் காட்டப்பட வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. எட்மண்ட் அவர்கள் ஃபைலைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், ஒரு பிரச்சினை எழும்போது, எந்த ஃபைலைப் பார்க்க வேண்டும். எந்த பதிலில் இருந்து அந்த ஃபைல்கள் தேவைப்படுகின்றன என்பதை அவர்கள் எடுத்துக் கூற வேண்டும். இப்பொழுதுள்ள பிரச்சினை என்ன? ஒரு டெண்டர் கேட்கப்பட்டிருக்கும்போது, லோயஸ்ட் டெண்டர் மூலமாக, அல்லது அரசுக்கு அதிக வருவாய் வரக் கூடிய வகையில் நெகோஷியேடெட் டெண்டர் மூலமாக, ஏற்றுக் கொள்ளலாமா என்பதுதான் பிரச்னை. அதிக வருவாய்க்கு டெண்டர் எடுத்தது தவறு என்று கூறினால், நாங்கள் அதற்குப் பதில் சொல்கிறோம். பதில் சொல்வதற்கு அச்சப்படுபவர்கள் நாங்கள் அல்ல.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பலர் ஒரே சமயத்தில் எழுந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரே கட்சியில் நான்கு பேர் ஒரே நேரத்தில் பேச எழுந்தால் எப்படி? உங்கள் தலைவர் நிற்கிறார். யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. முனு ஆதி :** நாங்கள் அப்படி எழுந்தால்தான் நீங்கள் எங்களைப் பேச அனுமதிக்கிறீர்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** ஆளும் கட்சி உறுப்பினர் அவர்களே இந்த மதிப்பீட்டுக் குழுவில் கண்டனம் எழுப்பி யுள்ளார். அவர் மதிப்பீட்டுக் குழுத் தலைவர். பொறுப்புள்ள அரசாங்கமாக இருந்தால், நாங்கள் கேட்காமலேயே அந்த

அறிக்கையை அவர்களாகவே இங்கே சபை முன் வைத்திருக்க வேண்டும். அவர் கூறியுள்ள குற்றச் சாட்டுகளுக்கு என்ன பதில் என்பதை அவர்கள் இங்கே காட்டியிருக்க வேண்டும். அந்த ஃபைல்களைப் பார்த்தால் உண்மை புரியும். அதற்காகத் தான் ஏன் ஃபைல்களை ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்று கேட்கிறோம்.

It is a file of Government—whether it is written by himself or somebody. . . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்தக் கட்சியின் தலைவரும் அரசாங்கத்தின் மீதுள்ள குறைகளை எடுத்துச் சொல்லலாம். ஆளுங்கட்சிக்காரரே தவறுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார் என்றால், அவருடைய கடமையை நான் பாராட்டுகிறேன். ஒரு ஃபைல் இந்த மன்றத்தில் வைக்கப்பட வேண்டுமென்று கேட்கும் போது, அந்த ஃபைல் இந்த மன்றத்தில் எந்த விதத்தில் தேவைப் படுகிறது என்பதை உறுப்பினர் அவர்கள் கூறவேண்டும். அந்த ஃபைலில் என்ன தவறு இருக்கிறது என்பதைச் சொல்லி கேட்கட்டும் நாங்கள் தாராளமாக பதில் சொல்கிறோம்.

(இந்த நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் பேசவேண்டுமென்றால் எப்படி ? திரு. தங்கமணி அவர்கள் பேசட்டும்.

**திரு. கோவை செழியன் :** நீங்கள் பாரபட்சம் காட்டுகிறீர்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, எஸ்டிமேட்ஸ் கமிட்டியினுடைய 24-ஆவது ரிப்போர்ட்டை தாங்கள் கவனத்தில் கொண்டு நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ரிப்போர்ட்டில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதைப் பற்றி நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏப்ரல் 20-ஆம் தேதி அந்த அறிக்கை இந்தச் சபையில் வைக்கப்பட்டும், ஆகஸ்ட் 28-ந் தேதியன்று தான் அந்த அறிக்கைகள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசின் சில நடவடிக்கைகளினால், அல்லது பிரிண்ட் செய்வதில், தாமதம் ஏற்பட்டு விட்டதாகச் சொன்னார்கள். அது ஏற்றுக் கொள்ளக் கூடிய விஷயம் தான். ஆனால் இந்த ரிப்போர்ட்டைப் பார்க்கும்போது அதில் சில கடிதங்கள், குறிப்பிட்ட சில





கடிதங்கள், அப்படியே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக இந்த மாதிரி முறைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கும் கடிதங்களை எல்லாம் குறிக்கப் பட்டிருக்கும்போது, இந்த ரிப்போர்ட்டுக்கான சில தஸ்தாவேஜுகள் மட்டும் கிடைக்கவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள்.

ஆகவே, தாங்கள் அந்த தஸ்தாவேஜுகளை பார்க்க வேண்டும். அந்த தஸ்தாவேஜுகளை தாங்கள் பார்த்த பின்னால், அவை இந்த விவாதத்திற்கு உதவுவதாக இருக்குமானால், அதுபற்றி பின்னால் நீங்கள் என்ன முடிவு எடுக்கிறீர்களோ அதற்கு கட்டுப்பட, அதை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்த ரிப்போர்ட்டில் சில முரண்பாடான கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தாண்டவராயன் பற்றி மட்டும் சொல்லவில்லை. திண்டிவனத்தில் காணமல் போன அரிசி, வளவனூரில் காணமல் போன அரிசி, திருக்கோவிலூரில் காணமல் போன அரிசி பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் உங்களுக்கு எது சரி என்று படுகிறதோ அதைச் செய்யுங்கள். சம்பந்தப்பட்ட கடிதங்களையும் பாருங்கள், ஃபைல்களையும் பாருங்கள். பார்த்த பின்னால் நீங்கள் என்ன முடிவு செய்கிறீர்களோ அதற்கு நாங்கள் கட்டுப்படுகிறோம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. தங்கமணி அவர்கள் இந்த அறிக்கைபற்றித் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டத்திலும் வடாற்காடு மாவட்டத்திலும் எந்த எந்த ஊரில் யார் யார், அல்லது தனிப்பட்ட வியாபாரிகள் என்னென்ன தவறு செய்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு, அந்தத் தவறுகளை நம்முடைய போலீஸ் இலாகாவினரும் உணவு இலாகாவினரும்தான் கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத் துறையினர் கண்டுபிடித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், முறையான நடவடிக்கை எடுத்திருக் கிறார்கள் ; ஆகையால் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அதைச் சொல்லிவிட்டு, ஒரு ஃபைலை கேட்டும் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கிடைக்கவில்லை என்று சொல்லப் பட்டிருக்கிற ஃபைலைப் பற்றிய விவரங்களை யார் கேட்டாலும் சொல்லத் தயாராக இருக்கிறோம். பதில் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். பதில் சொன்ன பின்னால் நாங்கள் எதையாவது

[திரு. செ. மாதவன்] [1974 டிசம்பர் 13

மறைத்துவிட்டோம் என்று தெரிந்தால் ஃபைலைக் கேட்டு, தெரிந்துகொள்ளலாம். அதல்லாமல், ஃபைலை காட்டு, ஃபைலைக் காட்டு என்று சொல்வது சரியல்ல.

(திருமதி சத்தியவாணிமுத்து, திரு. கு. காமாட்சி, திரு. முனு ஆதி ஆகியோர் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் ஒரு பாயினட் ஆப ஆர்டர் கேட்டு ரொம்ப நேரமாக நின்றுகொண்டிருக்கிறார். அவருடைய பாயின்ட் ஆப் ஆர்டரை முதலில் சொல்லட்டும். திரு. கோவை செழியன் உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரைச் சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த அமைச்சரவை மீதும் முதலமைச்சரவர்கள் மீதும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதற்கு பல காரணங்கள் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது அவை முன் இருப்பது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, அவர்கள் தவறானத் தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இன்னும் அவைக்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோவை செழியன், நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரைப்பற்றி சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு பிரச்சனையை எழுப்பியிருக்கிறார்கள். ஒரு தீர்மானத்தை நானும் நண்பர் ஆலடி அருணாவும் கொடுத்திருக்கிறோம். அந்தத் தீர்மானம் இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்படுமானால் விவாதத்திற்கு இந்த குறிப்பிட்ட ஃபைல் தேவை என்று திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்னால், இத்தகைய வாசகங்களைப் போட்ட பின்னால் அது தேவை என்று திரு. ஹாண்டே தெரிவித்திருக்கிறார்கள். ஒருவேளை அந்தத் தீர்மானம் இந்த மன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படுமானால் சம்பந்தப்பட்ட இந்த ஃபைல் விவாதத்திற்குத் தேவை.



1974 டிசம்பர் 13] [திரு. கோவை செழியன்]

இந்த மன்றத்தினால் நியமிக்கப்பட்டது எஸ்டிமேட்ஸ் கமிட்டி. அந்தக் கமிட்டியில் முதலமைச்சரவர்களும் உறுப்பினராக இருக்கிறார்கள். அந்தக் கமிட்டி தன்னுடைய ரிப்போர்ட்டில் 39-வது பாராவில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு, இது சம்பந்தப் பட்ட ஃபைல் கேட்டும் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக் கிறார்கள்.

ஆனால் சட்ட அமைச்சரவர்கள் அதில் என்ன குறை, என்ன தவறு இருக்கிறது என்று சொன்னால் அதற்குப் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறார்கள். ஃபைலை பார்த்தால்தானே என்ன ஊழல் நடந்திருக்கிறது என்று நாங்கள் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே, அந்த ஃபைலை இந்த அவையிலே காட்டாவிட்டாலும் தங்களுடைய அறையிலே காட்டச் சொல்லுங்கள்.

இதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால், சமீபத்தில் நாடாளுமன்றத்தில் சி.பி.ஐ. ரிப்போர்ட் பற்றிய பேச்சு வந்தது. அதில் ப்ரைம் மினிஸ்டர் அவர்கள் பெருமனது வைத்து, இந்த விவகாரத்தைப் பெரிதாக்காமல் இருப்பதற்காக ரிப்போர்ட்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர்களுக்குக் காட்டுகிறேன், அவர்கள் பார்க்க அனுமதிக்கிறேன் என்று சொன்னார்கள். அந்த முறையிலே தாங்கள் இந்தக் குறிப்பிட்ட ஃபைலை தனியாக எங்களுக்கு பார்க்க ஏற்பாடு செய்யுங்கள். அதில் என்ன தவறு இருக்கிறது என்று நாங்கள் தெரிந்துகொள்கிறோம். தவறு ஒன்றும் இல்லை என்று தெரிந்தால் இந்த விவகாரத்தைப் பற்றிப் பேசாமலே இருந்துவிடுகிறோம். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைத் தாங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஃபைலைக் காட்டாவிட்டால் இந்த மன்றத்திலே நான் சத்தியாகிரகம் இருப்பேன். என்னை வெளியே அனுப்பினால், வெளியிலே நான் உண்ணாவிரதம் இருப்பேன் (குறுக்கீடுகள்). இங்கே நீங்கள் சத்தம் போடுங்கள்; வெளியிலே போனால் மக்கள் உங்களை சும்மாவிடமாட்டார்கள்.

**திரு. சி. ஆறுமுகம் :** எங்களையா சும்மா விடமாட்டார்கள். வெளியே வந்து பாருங்கள். செழியனே வேண்டுமானால் வந்து பார்க்கட்டும். இப்படியே எத்தனை நாளைக்கு மிரட்டிக் கொண்டிருப்பீர்கள்? மிரட்டலுக்கு ஒன்றும் நாங்கள் பயப்பட மாட்டோம். சும்மா மிரட்டாதீர்கள். வேண்டுமானால் வெளியே வந்து பாருங்கள். (திரு. முனு ஆதி : சவாலா இது?) சட்ட மன்றத்திற்குள்ளே இருந்து மிரட்டிக்கொண்டிருக்காதீர்கள்.

[திரு. சி. ஆறுமுகம்] [1974 டிசம்பர் 13

(திரு. முனு ஆதி குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டு எதையோ சொல்லிக் கொண்டிருக்காதே. பார்க்க வேண்டுமென்றால், வா வெளியிலே பார்த்துக் கொள்ளலாம். (மணியடிக்கப்பட்டது) இங்கே சட்டமன்ற மரபைக் காக்க வேண்டும்.

(திரு. ஆலடி அருணா, திரு. கோவை செழியன், திரு. முனு ஆதி ஆகியோர் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் உட்காருங்கள். சட்டசபை மரபைக் காக்க வேண்டும்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, நீங்கள் எப்போதும் ஆளும் கட்சிக்குப் பாதுகாப்பு கொடுக்க தவறுகிறீர்கள்.

(பல உறுப்பினர்கள் குறுக்கீடு)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நம்முடைய சட்டமன்றத்தில் இந்தமாதிரி விவாதங்கள் நடக்கும்போது உறுப்பினர்கள் உணர்ச்சி வசப்பட்டு, ஒருவருக்கொருவர் சவால் விடுவதைத் தவிர்க்க வேண்டுமென்று பலமுறை எடுத்துக்காட்டி இருக்கிறோம். நாம் சட்டமன்றத்தில் கூடி இருப்பது மக்கள் பிரதிநிதிகளாக. மக்கள் பிரதிநிதிகளாக இங்கே உட்கார்ந்துகொண்டு, இந்த மாதிரியான விவாதங்கள் நடைபெறும்போது உணர்ச்சி வசப்படாமல், உணர்ச்சி வசப்பட்டு சவால், சவாலுக்கு எதிர் சவால் விடாமல், நம்முடைய உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு கடமையில் ஈடுபட வேண்டும். இந்த மன்றத்திலே விவாதத்திற்குத் தேவையான நல்ல சூழ்நிலையை உருவாக்க எல்லா எதிர்க் கட்சிகளும் ஆளும் கட்சியும் ஒத்துழைக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது சுவையான வாதம். இதில் சூடு தேவையில்லை. இதில் மர்மம் இருக்கிறது, ரகசியம் இருக்கிறது. அதனால் ஃபைலைக் காட்டமாட்டோம் என்று யாரும் சொல்லவில்லை. எஸ்டிமேட் கமிட்டி ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்கள் குறிப்பாக கோவை செழியன் அவர்களும் அருணா அவர்களும் அதைப்பற்றி நிறைய பேசலாம். நீங்கள் பேசுங்கள். அந்த சுவையான வாதங்களைக் கேட்க நாங்கள் காத்திருக்கிறோம். அந்த ஃபைலில் இன்னின்ன தவறு இருக்கிறது என்று சொல்லுங்கள். அதைக் கேட்கத் தயாராக இருக்கிறோம். தகுந்த பதில் சொல்ல காத்திருக்கிறோம்.



1974 டிசம்பர் 13] [திரு. செ. மாதவன்]

நம்முடைய அம்மையார் அவர்கள் கூட ஒரு ஃபைலை காட்ட வேண்டுமென்று சொன்னார்கள்; காட்டினோம். அதன் விவரங்களை எல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

நீங்கள் பேச ஆரம்பிக்க வேண்டும். என்.சி. மோஷனைப் பற்றி நீங்கள் பேசவேண்டும். அப்போது இந்த ஃபைலைப்பற்றிப் பேச வேண்டும். அதில் இருக்கிற மர்மம் என்ன என்று சொல்ல வேண்டும். அந்த நேரத்தில் இந்த ஃபைலை காட்ட வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால் காட்டுகிறோம். ஃபைலை காட்ட நாங்கள் பயப்படவில்லை. தேவைப்பட்டால் காட்டத் தயாராக இருக் கிறோமே அல்லாமல் நாங்கள் பயப்படவில்லை. (ஆரவாரம்).

(திரு. க. உரோ. எட்மண்ட், திரு. ஆலடி அருணா, திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் எழுந்தார்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த அம்மையார் முதலில் பேசட்டும்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். கேட்க வேண்டிய முறையில் கேட்டால் காட்ட வேண்டியதைக் காட்டத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் அந்த வார்த்தைகளைச் சொல்லவில்லை. அம்மையார் அவர்கள் அந்த வார்த்தைகளை விரும்பினால் நான் ஆட்சேபிக்கவில்லை. (ஆரவாரம்)

**திருமதி சத்தியவாணிமுத்து :** சம்பந்தப்பட்ட இந்த ஃபைலைப் பற்றி இந்த மன்றத்து உறுப்பினர்கள் ஃபைலை காட்ட வேண்டு மென்று கேட்கவில்லை. அவர்கள் கேட்டிருந்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது காட்ட வேண்டியதில்லை; தேவைப் பட்டால் காட்டுவேன் என்று சொல்லலாம். ஆனால் இந்த ஃபைலை கேட்டிருப்பது எஸ்டிமேட் கமிட்டியினர். எஸ்டிமேட் கமிட்டியினர் கேட்டும் கொடுக்கவில்லை. அதைத்தான் நாம் பார்க்க வேண்டும். அவர்கள் கேட்டும் கொடுக்காமல் இருந்துவிட்டு, அந்த ஃபைல் பற்றிய கேள்வி இப்போது எழவில்லை என்று சொல்வது சரியல்ல. எஸ்டிமேட் கமிட்டியினர் கேட்டும் கொடுக்கவில்லை என்று சொல்வதால் தமிழகத்து மக்களுக்கு இது ஒரு கேள்விக் குறியாக இருக்கிறது.

அதிலே இருக்கிற மர்மம் என்ன? ஏன் காட்டத் தயங்குகிறீர்கள்? எஸ்டிமேட் கமிட்டி சேர்மென் கேட்டபோது அப்போது ஏன் கொடுக்கவில்லை? அவர் கேட்டபோது அந்த ஃபைல் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் இந்தக் கேள்வியே எழுந்திருக்காது. அவருக்கு அந்த ஃபைல் காட்டப்படாததனால் தான், அதிலே ஊழல் இருக்கிறது, அதிலே மர்மம் இருக்கிறது—700 டன்னுக்கு வாகன் லோடு அன் ஆதரைஸ்டாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது, பர்மிட் இல்லாமல் வெளியில் அனுப்பப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எஸ்டிமேட் கமிட்டித் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவேதான் அதில் உள்ள மர்மம் என்ன என்பதைத் தெரிந்துகொள்வதற்காக இப்போது ஃபைலைக் காட்டுங்கள் என்று கேட்கிறோம். அதைக் கொடுத்தால் என்ன? அதில் என்ன இரகசியம் இருக்கிறது? அந்த ஃபைலை ஏன் எஸ்டிமேட் கமிட்டி தலைவருக்குக் காட்டப்படவில்லை? அதிலுள்ள இரகசியம் அம்பலமாகிவிடும் என்று அஞ்சுகிறீர்கள். ஆகவேதான் இப்போதும் நானும் வலியுறுத்திக் கேட்கிறேன். அந்த ஃபைலை எதிர்க் கட்சித் தலைவர்களுக்காவது காட்டியாக வேண்டும்.

(திரு. ஆலடி அருணா பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார். திரு. எட்மண்ட், திருமதி அனந்தநாயகி ஆகியவர்களும் எழுந்து பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றார்கள்.—கூச்சல் குழப்பம்.)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எத்தனைபேர் கேள்வி கேட்டாலும் நாங்கள் பதில் சொல்லத் தயாராய் இருக்கிறோம். அதற்காக அவசரப்படவேண்டியதில்லை. ஏதோ அந்த பைலில் மர்மம் இருப்பதாக நினைத்துக்கொண்டு பேசுவது சரியல்ல. தாண்டவராயன் சம்பந்தப்பட்ட வழக்கு—அந்த வழக்கு வழக்கு மன்றத்திற்குப் போய் இருக்கிறது. சார்ஜ்ஷீட் போடப்பட்டிருக்கிறது. இரகசியமாக இருந்தால் வழக்கு மன்றத்திற்குப் போய் இருக்கமாட்டோம். இன்றைக்கு அந்த பைலை மறைக்க வேண்டுமென்றோ, அதில் மர்மம் இருக்கிறது, தரமாட்டோம் என்றோ அரசு சார்பில் இதுவரை சொல்லப்படவில்லை. இப்போதும் அந்த பைல் சம்பந்தமாக என்ன குற்றச்சாட்டு இருக்கிறது என்று சொல்லுங்கள். நாங்கள் அதற்குப் பதில் சொல்கிறோம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பைலில் என்ன தவறு இருக்கிறது என்று சொன்னால் பைலைக் கொண்டு வருகிறோம்



என்று சொல்கிறார்கள். நாங்கள் எல்லாம் சாதாரண உறுப்பினர்கள். ஆனால் இந்த அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்டிமேட் கமிட்டி—அதன் தலைவர்—அந்த பைலைப் பார்வையிடவேண்டுமென்று கேட்டபோது அவருக்கு ஏன் அந்த பைல் கொடுக்கப்படவில்லை? எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டில் 39-வது பாராகிராபில் எஸ்டிமேட் கமிட்டி தலைவரே அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன்பேரில் பலவிதமான சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. ஆகவே பைலைக் காட்டுங்கள் என்று கோருகிறோம். ‘பைலில் குறை இருந்தால் சொல்லுங்கள். அந்த பைலைக் கொடுக்கிறோம்’ என்று அமைச்சர் சொல்கிற வாதம் பொருத்தமல்ல. எஸ்டிமேட் கமிட்டி தலைவருக்கு அந்த பைல் கொடுக்கப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சினையே எழுந்திருக்காது.

for illegal export, false permits

என்பதாக அவரே சந்தேகக் கண்ணோடு சொல்லியிருக்கிறபோது அந்த பைல் இருக்கிறதா, அல்லது அழிக்கப்பட்டுவிட்டதா என்கிற சந்தேகம் எல்லாம் எங்களுக்கு எழுகிறது, ஆகவேதான் பைலைக் காட்டுங்கள் என்று சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் இதற்குப் பதில் சொல்கிறேன். எத்தனைபேர், எத்தனைதரம் கேட்டாலும் பதில் சொல்லத் தயாராய் இருக்கிறேன். திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னது ரொம்ப மகிழ்ச்சியைத் தந்தது. ‘தவறு என்ன என்று எங்களுக்குத் தெரியவில்லை, குற்றம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே ஒரு பைலைத் தாருங்கள்’ என்று சொல்வது ஒரு விநோதமான கேள்வியாக எதிர்தரப்பில் இருந்து எழுந்திருக்கிறது. திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் ‘நான் அந்தமாதிரி உத்தரவு போடவில்லை, பைலைக் காட்டுங்கள்’ என்றார். உடனே பைல் அவர்களுக்குக் காட்டப்பட்டது. அந்தமாதிரி ஒரு அருமையான வாதத்தை எழுப்பினால் இப்போதும் பைலைக் காட்டமாட்டோம் என்று நாங்கள் சொல்லவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எஸ்டிமேட் கமிட்டியில் திட்டவட்டமாக அந்த பைல் கேட்கப்பட்டும் கொடுக்கப்படவில்லை. சட்டமன்ற விதிப்படி எஸ்டிமேட் கமிட்டித் தலைவர் ஒரு தஸ்தாவேஜியைக் கேட்கும்போது அதைக் கொடுப்பதுதான் அரசாங்கத்தின் கடமை. கொடுக்க வேண்டுமென்பதுதான் விதி முறை. எஸ்டிமேட் கமிட்டி சேர்மென் அவரது கட்சியைச்

சேர்ந்தவரேதான். அவர் துணிச்சலாக—அந்த பைல் கேட்கப்பட்டது. கொடுக்கப்படவில்லை—என்ன தவறு எங்கே இருந்தாலும் அதைச் சுட்டிக்காட்டவேண்டும் என்கிற நிலையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் கேட்டேன் கொடுக்கவில்லை என்பது வேறு விஷயம். இந்த அவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்டிமேட் கமிட்டி—அதன் தலைவர் அரசாங்கத்திடம் ஒரு பைலைக் கேட்டபோது அது கொடுக்கப்படவில்லை என்பது ஒரு பிரிவிலேஜ் ஆகும். அந்த பைலைக் காட்டியாகவேண்டும் என்பதற்கு இதைவிட ஆதாரம் எதுவும் தேவை இடையாது. இன்றைக்கு எஸ்டிமேட் கமிட்டி தலைவர் கேட்ட அந்த பைல் கொடுக்கப்படவில்லை என்கிற காரணத்தினால்தான் அதில் என்ன மர்மம் இருக்கிறது என்பதே ஒரு கேள்விக் குறியாகிவிட்டது. அவருக்கு பைல் கொடுக்கப்படாத காரணத்தினால்தான் The Committee wanted to peruse the connected file என்பதாக சந்தேகத்தின் அடிப்படையில் தமது அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார். அந்த பைல் அவரிடம் காட்டப்பட்டிருந்தால் ரிப்போர்ட் வேறு மாதிரியாகக் கூட இருந்திருக்கலாம். அந்த பைலைக் கொடுங்கள் என்று பலமுறை கேட்டோம். கொடுக்கப்படவில்லை என வேதனையோடு அவர் சொல்கிறார் என்றால் இது ஒரு ப்ரிவிலேஜ் ஆகும். இன்றைக்கு அந்த பைலைக் கொண்டுவந்து வைத்தாக வேண்டியது அவர்களது கடமை. அதில் என்ன குறை இருக்கிறது, சொல்லுங்கள் நாங்கள் பைலைக் காட்டுகிறோம் என்று ஜோஸ்யம் கேட்பதுபோலச் சொல்வது சாமர்த்தியமாகாது. இது மிகமிகக் கண்டனத்திற்குரியது. உங்களிடம் பைல் இருக்கிறதா? அல்லது அழித்துவிட்டீர்களா? என்றெல்லாம் சந்தேகம் எழுகிறது. ஆகவே, அந்த பைலை உடனடியாகக் காட்டியாகவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

(திரு. ஆலடி அருணா எழுந்திருந்தார். திரு. எட்மண்ட் எழுந்திருந்தார். கூச்சல் குழப்பம்.)

(முற்பகல் 11-00)

**திரு. ஜே. ஜேம்ஸ் :** எஸ்டிமேட்ஸ் கமிட்டியானது தன்னுடைய அறிக்கையிலே . . . ஆன் எ பாய்ன்ட் ஆஃப் பிரிவிலெஜ், சார் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாய்ன்ட் ஆஃப் பிரிவிலெஜ் என்று சொல்கிற சமயத்திலே இரண்டுமுறைகள் இருக்கின்றன. ஒன்று, பேரவைத் தலைவருக்கு எழுதிக் கொடுத்து, இந்த மாதிரி





உரிமைப்பிரச்னை எழுப்பப்போகிறேன் என்று எழுப்புவது. மற்றொன்று, இந்த அவையிலே நடக்கிற நிகழ்ச்சியைப்பற்றி, ஸ்பான்டேனியஸ்ஸாக எழுப்பலாம். (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன், அவையில் பாய்ன்ட் ஆஃப் பிரிவிலேஜ் எழுப்புவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று எழுதிக் கொடுப்பது. மற்றொன்று, அவையில் ஏதாவது உரிமை மீறிய நிகழ்ச்சி நடைபெறுமானால், அப்பொழுது எழுப்பலாம். எழுந்து ஏதாவது சொல்வதற்காக, பாய்ன்ட் ஆஃப் பிரிவிலெஜ் என்று சொன்னால், முன்னிடம் கொடுப்பார்கள் என்பதற்காக, அதனைச் சொல்வது முறை அல்ல. நான் உங்களுக்குப் பிறகு இடம் தருகிறேன், உட்காருங்கள்.

**திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார், லோயஸ்ட் டெண்டர் வந்தது, ஹையர் ரேட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக லோயஸ்ட் டெண்டரை முடித்துவிட்டு, ஹையர் ரேட்டுக்குக் கொடுத்தோம் என்று சொன்னார். ஆனால் திரு. கிருஷ்ணமூர்த்தி அறிக்கை என்ன சொல்கிறது.

"Thiru R. Thandavarayan did not participate in the tender auction held by the Collector on the 9th March 1971. But, his offer was accepted by the Government on a negotiated deal."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் சொல்கிறார், பல டெண்டர்கள் மீதும் முடிவு எடுத்தோம், என்று. டெண்டர் விவகாரத்திலேயே கலந்து கொள்ளாத தாண்டவராயனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அமைச்சர் சொல்வதற்கும் அறிக்கையிலேயுள்ளதற்கும் வேறுபாடு இருக்கிறது. அறிக்கை வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சரவர்களைப் பத்திரிகை நிருபர்கள் சந்தித்துக் கேட்டபொழுது, அந்த விவகாரத்திற்கும் அரசுக்கும் தொடர்பு இல்லையென்று கூறினார். ஆனால், இப்பொழுது அமைச்சர் அவர்கள் அரசாங்கம்தான் இதன்மீது முடிவு எடுத்திருக்கிறது என்று சொல்கிறார். இப்படி ஒன்றுக்கு ஒன்று மாறுபாடுள்ள கருத்துக்களைக் கூறுவதால், அந்த ஃபைலைப் பேரவைக்குத் தந்தாகவேண்டுமென்று கேட்க எங்களுக்கு நியாயமிருக்கிறது. டெண்டரில் கலந்துகொள்ளாத தாண்டவராயனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யார் குறைந்த டெண்டர் கொடுத்தார், யார் பெரிய டெண்டர் தந்தார் என்ற அடிப்படையில் தான் முடிவெடுத்திருக்கிறோம் என்று சொன்னார். ஆனால்,

[திரு. ஆலடி அருணா] [1974 டிசம்பர் 13

டெண்டரில் கலந்துகொள்ளாதவருக்குத்தான் கொடுக்கப்பட்
டிருக்கிறது என்று மதிப்பீட்டுக் குழுச் சொல்கிறது. எனவே,
பெருத்த முரண்பாடு இருப்பதால், எதிர்க் கட்சிகளுடைய
பார்வைக்கு அந்த ஃபைலைக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கோபம் இல்லாமல் வாதம்
செய்தால் விஷயம் எல்லாம் வந்துவிடும். என்னுடைய விளக்கத்தை
அவர்கள் சரியாகக் கேட்கவில்லையென்பதுதான் அவருடைய
வார்த்தைகளிலேயிருந்து தெரிய வந்தது. டெண்டர் கால்ஃபார்
பண்ணினோம். லோயஸ்ட் டெண்டருக்குக் கொடுக்காவிட்டால்
குற்றம். மேற்படி வந்த டெண்டர்களிலே இல்லாமல்,
'நெகோஷியேட்டட் டெண்டர்' என்ற முறையிலே ஒருவருக்குக்
கொடுக்கும்போது, ஏற்கனவே வந்த அதிகமான தொகையைக்
கருத்திலே கொண்டு ஹையஸ்ட் ரேட்டுக்குக் கொடுக்கும்
போது . . . (Interruption)

Thiru Aladi Aruna : No. He is misleading the House.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** டெண்டர் கால்ஃபார்
பண்ணும்போது, லோயஸ்ட் டெண்டராக இருந்தால், சில
சமயத்திலே அக்சப்ட் பண்ணவேண்டும். அரசாங்கத்துக்கு
இலாபம் கிடைக்குமானால் ஹையஸ்ட் டெண்டர் அக்சப்ட் பண்ண
வேண்டும். அந்த இரு முறைகளைப் பின்பற்றும்போது,
நெகோஷியேட்டட் டெண்டர் என்ற மூன்றாவது முறையிலே
அதிகமான வருவாய் வந்ததன் காரணமாக, இந்த டெண்டர்
ஒப்புக்கொள்ளப்பட்டது என்பது அரசாங்கத்தின் வாதம். அதிலே
என்ன தவறு? அந்த ஃபைலில் என்ன தவறு இருக்கிறது என்று
சொன்னால், காட்டத் தயாராக இருக்கிறோம்.

திருமதி அனந்தநாயகி அவர்கள், கமிட்டிக்குக் கொடுக்கவில்லை
என்று சொல்கிறார்கள். மறுபடி கமிட்டி கூடுகிறது. போன
கமிட்டியின் காலம் முடிந்தவுடன் அவர்கள் அறிக்கையைச்
சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்கு அடுத்த கட்டமாக, அந்தப்
பிரச்னை பற்றிய வழக்கு எழுப்பப்பட்டவுடனே, நாமே வழக்கு
போட்டிருக்கிறோம். ஆகவே, எதையோ மறைத்துவிட்டோம்
என்பது கிடையாது. நீங்கள் அதைச் செய்தால்தான் தருவோம்
என்று அந்த மாதிரி சொன்னால், என்று அல்ல. இந்த
நெகோஷியேட்டட் டெண்டரை ஒத்துக்கொள்கிறோமே, அதிலே
என்ன தவறு என்று சொன்னால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத்
தயாராக இருக்கிறோம். தவறே எங்களுக்குத் தெரியாது, ஆகவே
கொடுங்கள் என்று சொன்னால் எப்படிச் சொல்வது ?



1974 டிசம்பர் 13]

(திரு. ஆலடி அருணா, திரு. முனு ஆதி, திரு. சீனிவாசன்
ஆகியோர் நின்றனர்).

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நீங்கள் அவர்களுக்கு டைம் கொடுக்
கிறீர்களே தவிர, எங்களுக்குத் தர மறுக்கிறீர்களே . . .

(குறுக்கீடுகள்)

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, we are
sorry for the way the A.D.M.K. Members are speaking. I don't
think we can co-operate with them. There should be some
decency in our behaviour, there should be some manners. We
are all responsible members. When a member of our party, a
fellow-member is addressing the House, there is no point in
another member heckling him. Sir, I am sorry to say that this
sort of thing is happening and umpteen times this has happened.
This is a sorry state of affairs. Perhaps they want to show to the
country by creating such scenes ...... (Interruption). We know
that we are facing an election soon. Perhaps this may be a
prelude to it. In the House, we should respect the feelings of
other members who are discharging their duty fearlessly. If this
be the threat thrown at us, we are sorry to say we will not be
able to function in the House.

**திரு. முனு ஆதி :** விளக்கம் சொல்கிறேன். அவர்கள் செய்த
தப்புக்கு எங்களைச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் தலைவர் விளக்கம்
சொல்வார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. முனு ஆதி :** நானும் சொல்லலாம், அதிலே ஒன்றும் தப்பு
இல்லை. ஏனென்றால், திரு. பொன்னப்ப நாடார் தவறாக நினைக்கக்
கூடாது. தலைவரவர்களே, கனம் உறுப்பினர், பொன்னப்ப நாடார்
அவர்களும், ஜேம்ஸ் அவர்களும், ஒரு கட்சிக்கு அதிகச் சலுகைத்
தருகிறீர்கள் என்று சொன்னார்கள். நாங்கள் சொல்வது,
அப்படி எங்கள் கட்சியினர் அதிகச் சலுகை எடுத்துக்
கொண்டார்கள் என்று சொல்லக் கூடாது ; எங்கள் கட்சிக்காரர்கள்
அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள் என்று வைத்துக்கொள்
ளுங்கள். (குறுக்கீடு) அப்படியே டான்ஸ் ஆடி, நானும் பேசு
வேன், அப்படியே சிரித்து நானும் பேசுவேன். தயவுசெய்து
அவர்களைக் கொஞ்சம் அடக்குங்கள். பேசும்பொழுது சிரிக்கத்
தான் தெரிகிறது அவர்களுக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் இந்த அவையிலே நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறார். (திரு. முனு ஆதி : நாங்கள் கூடத்தான்). நீண்ட நெடுங்காலமாக இருக்கிற முதிய உறுப்பினர் கருத்துக்களைக் கூறியிருக்கிறார். அந்தக் கருத்துக்கள் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு மட்டிலுமல்ல, ஆளுங்கட்சிக்காரர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறார். இந்த மன்ற மரபு கெடாத வகையிலே, பெருமைகள் கெடாத வகையிலே நடந்துகொள்ள வேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் எல்லாம் வரவேண்டியிருக்கிறது. அதற்கு முன்பாக வார்த்தையிலே சூடாக்கிக் கொள்ளாதீர்கள். உங்கள் கட்சியிலே தலைவர் இருக்கிற நேரத்திலே, ஒவ்வொருவரும் வரிசையாக எழுந்து கொள்கிறார்கள். இப்பொழுது எட்மண்ட் பேசினார், முனு ஆதி பேசியாயிற்று, செழியன் பேசினார்.

**திரு. முனு ஆதி :** நீங்கள் அனுமதிக்காமல் நான் பேசியிருக்கிறேன். நீங்கள் அனுமதிக்கப் போவதில்லை. நான் சொல்ல வேண்டியது பதிவாக வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் அனுமதிக்காமலே பேசியது இன்னும் மோசம். அந்த முறை நல்ல முறையல்ல வென்ற கருத்தைக் கூறிக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி :** எல்லோருக்கும் பாரபட்சம் இல்லாமல் அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னொரு கட்சியைக் கூப்பிடுவதற்கு முன்பாக வரிசையாக எழுந்து கொள்கிறீர்கள், எங்களைக் கூப்பிடப் போகிறீர்களா, இல்லையா என்று கேட்கிறீர்கள். அந்த முறையிலே நடந்து கொள்வது நல்லதல்ல.

**திரு. பெ. சீனிவாசன் :** இப்பொழுதெல்லாம் பேசிய கருத்து ஒரே கருத்து . . . (திரு. ஜே. ஜேம்ஸ் நின்று கொண்டிருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜேம்ஸ் நீங்கள் உட்காருங்கள், நீங்கள் எவ்வளவு நேரம் கேட்கிறீர்களோ, அவ்வளவு நேரம் கொடுக்கிறேன். முதலில் திரு. சீனிவாசன் பேசட்டும் . . .

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டியானது இந்த அறிக்கையை தயாரிப்பதற்காக 15—4—1974 ஆம் தேதியன்று கூடியது. கூடி, அந்த அறிக்கையை தயார் செய்தது. ஆனால்,





அந்த அறிக்கை 20—4—1974-ம் தேதியன்று இந்தச் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு அப்புறம், இந்தச் சட்டமன்றம் கூடுவதற்கு முன்பாக, இடையே ஒரு சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது. அன்றும்கூட, சட்டமன்றத்தில் இந்த அறிக்கைத் தாக்கல் செய்யப்படவில்லை. அதோடு மட்டுமல்ல, இந்த அறிக்கையின் நகல் சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு 9—9—1974 அன்று தபாலில் அனுப்பப்பட்டது. இந்த அறிக்கையில் 39 ஆவது பாராவில், அக்குழுத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறியிருப்பது என்ன?

"The Committee wanted to peruse the connected files to know as to how the offer of Thiru Thandavarayan was accepted on negotiation. The file was not made available to the Committee till this date. The Committee is of the opinion that the entire partners of A.M. Associated Traders are responsible for the illegal export and this led to large scale movement of rice with false permits from Tamil Nadu to other States causing artificial scarcity especially in and around Madras City."

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அறிக்கையைப் பற்றி இங்கே குறிப்பிடப்படுகிற இந்த நேரத்திலே—அந்தத் தலைவர் அவர்களே இங்கே இருக்கிறார்கள்—இந்த அறிக்கையிலே அவர்கள் குறிப்பிட்டிருப்பது என்னவென்று சொன்னால், பைல் கிடைக்கவில்லை, இல்லீகல் எக்ஸ்போர்ட் சம்பந்தமான பைல் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கூறுகிற குற்றச்சாட்டுகளுக்கு அந்தத் தலைவர் மறுப்புக் கூறவில்லை. ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஹெல்ப்லஸ் என்ற முறையிலே வேறு காரியம் செய்ய முடியாமல் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என்ற முறையிலே வேறு கதியில்லாமல் இந்த அறிக்கையிலே இவ்வாறு கூறியிருக்கிறார்கள். இந்த அறிக்கைப் பற்றி பின்னாலே சட்டமன்றத்திலே இந்த அறிக்கை தாக்கல் செய்யப்படும்போது விவாதம் எழுப்பப்படும். அப்போதாவது அந்த பைல் வைக்கப்படும் என்று நினைத்துத்தான் இந்த அறிக்கையிலே அவர்கள் அந்த மாதிரி குறிப்பை எழுதியிருக்கிறார்கள். இல்லீகல் எக்ஸ்போர்ட் என்று கூறியது மாத்திரமல்ல, நாங்கள் தஸ்தாவேஜுகளை இங்கே வைக்க வேண்டுமென்று கேட்டும் கூட எஸ்டிமேட்ஸ் கமிட்டி தலைவர் அவர்கள் ஏன் அந்த பைலை கொடுக்கவில்லை என்ற காரணத்தைச் சட்டமன்றத்திலே கூறவில்லை, இதிலே மர்மம் இருக்கிறது இல்லீகல் எக்ஸ்போர்ட்டுக்கு உதவியான பைல் அது. ஆகவே தாங்கள் ஒரு தீர்ப்புக் கொடுக்க வேண்டும். அந்தப் பைலை வைக்காமல் இதைப்

பற்றி இந்தச் சட்ட மன்றத்திலே விவாதம் தொடங்க முடியாத சூழ்நிலை இருப்பதன் காரணத்தினுல் அந்த பைலை இங்கே வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இவ்வளவு பேர்கள் பேசி இருக்கிறார்கள். தலைவர் அவர்களே, இந்த விவகாரம் பற்றிய அறிக்கை உருவாகிய இடமே—நான் அப்போது துரதிருஷ்டவசமாக துணைத் தலைவராக இருந்தேன்—என்னுடைய அறையிலேதான் உருவாகியது. சட்ட அமைச்சர் அவர்கள் தெரியாமல் பேசுகிறாரா அல்லது திசை திருப்பி விடுகிறாரா என்று தெரியவில்லை. இந்த அறிக்கையைத் தயாரிக்கும்போது அந்த பைலை திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்டார்கள், கிடைக்க வில்லை, அவருடைய கிளார்க்கை 3, 4 தடவைகள் அனுப்பி பைலை கேட்டும்கூட பைல் வரவில்லை. பைல் இல்லாமல் ரிப்போர்ட் தயார் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு அந்த அறிக்கையிலே 39 ஆவது பாராவை எந்தச் சூழ்நிலையிலே அவர் அன்றைக்குக் கொடுத்திருந்தாலும் நான் அதற்காக பாராட்டுகிறேன். அரசாங்கம் இதிலே வழக்குப் போட்டிருக்கிறது. அந்தத் துணிவை பாராட்டவில்லை என்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தச் சூழ்நிலையில் இந்த லிஸ்டில் இல்லாத தாண்டவராயன் என்பவரை அழைத்து டெண்டர் கொடுத்தார்கள், உங்களோடு பிறகு அவருக்கு என்ன தகராறு ஏற்பட்டு அதன் காரணமாக அவரை நீங்கள் கோர்ட்டிலே நிறுத்தியிருக்கிறீர்கள் என்று பார்க்கவேண்டும். எஸ்டிமேட்ஸ் கமிட்டி தலைவராக இருந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒருவாரமாக இந்தச் சிக்கலிலே இருந்தார்கள். இப்பொழுது இருப்பதாகச் சொல்கிற அந்த பைல் உண்மையான பைல் அல்ல. ஏதோ ஜூலியஸ் சீஸர் நாடகத்தில் அந்தோணி இதோ வில் இருக்கிறது, வில் இருக்கிறது என்று மாப்-ஐ எந்த்யூஸ் பண்ணுவதற்காகச் சொன்னமாதிரி பைல் இருக்கிறது, பைல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருப்பதாகச் சொல்கிற பைல் போர்ஜரி பைல். எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்பது இந்தச் சட்டமன்றத்தினாலே உருவாக்கப்பட்ட கமிட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவராலே அறிவிக்கப்பட்ட கமிட்டி. பைல் வேண்டுமென்று கேட்டும் தரப்படவில்லை. மூன்று நான்கு தடவைகள் கேட்டும் கொடுக்க முடியாது என்று. சொல்லிவிட்டார்கள். இல்லையென்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னால் நன்றியுடையவனாக இருப்பேன். அந்த பைலே கிடையாது, பஸ்பமாக்கிவிட்டார்கள். இனி எந்தக் காலத்திலும் அந்த உண்மையான பைல் வராது.





THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, I have been listening to the point of order that has been raised regarding production of the file which is the subject-matter of discussion. So far as the file is concerned, Government can withhold a file only if it finds that such disclosure is not in public interest. That is what the proviso also states : " provided the Government may decline to produce a document on the ground that its disclosure would not be in the public interest ", என்று கூறப் பட்டிருக்கிறது. அந்த பைல் சம்பந்தமாக எஸ்டிமேட்ஸ் கமிட்டித் தலைவர் பலமுறை கேட்டதாகவும் அவர்களுக்கு அதைக் கொடுப்பதற்கு மறுத்ததாகவும் திரு. சீனிவாசன் அவர்கள் கூறினார்கள். அப்படி அதைக் கொடுப்பதற்கு மறுத்திருந்தால் உண்மையிலேயே வருந்தத்தக்கது. ஏனென்றால் அந்த பைலில் எந்தவிதமான மர்மமும் இல்லை என்று தெளிவாக, திட்டவட்டமாக சட்ட அமைச்சர் அவர்கள் வாதிட்டிருக்கிறார்கள். அப்படியானால் நெகோஷியேட்டட் டெண்டர் எப்படி ஏற்பட்டது? நெகோஷியேஷனில் என்ன காரியங்கள் ஏற்பட்டன, நெகோஷியேஷனுக்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்ற விவரங்களையெல்லாம் அவர்கள் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் தரவில்லை. இதைப்பற்றிப் பலமுறையும் இந்தச் சட்டமன்றத்திலே சொல்லப் பட்டிருக்கிறது. பைலிலே இருக்கிற நோட்டிங்சைப்பற்றி பிரிவிலேஜ் கொண்டுவர முடியாத நிலைமை இருக்கலாம். ஆனால், இந்த மாதிரி கமிட்டியிலே பைலை கேட்கும்போது கொடுத்திருந்தால் கஷ்டமில்லாமல் இருந்திருக்கும். இந்த மாதிரி பைலை தங்களுடைய அறையிலே கொண்டு வரச்சொல்லி ஸ்குருட்டினி செய்வதற்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. ஜனநாயக முறைப்படி இந்த அவை மிகவும் அதிகாரம் கொண்ட அவையாக இருப்பதால் ஏதாவது ஊழல் இருக்கிறது அல்லது சிக்கல் இருக்கிறது என்று சந்தேகம் ஏற்பட்டால் தங்களுடைய அறையிலே அதைப் பார்த்து முடிவு செய்வது நலமாக இருக்கும். சூடான வார்த்தைகளைச் சொல்லித் தட்டிக் கழிக்காமல் வரப்போகிற விவாதங்களிலே எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கக்கூடிய வகையில் தங்களுடைய அறையிலே அந்த பைலை கொண்டுவந்து வைத்து, எஸ்டிமேட்ஸ் கமிட்டி தலைவராக இருந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு அதற்குப் பிறகு தாங்கள் முடிவு செய்தால் நலமாக இருக்கும்—இந்த மன்றத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் பாதுகாவலன் என்ற முறையிலே—தங்களுடைய முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[1974 டிசம்பர் 13

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** மிஸ்டர் ஸ்பீக்கர்
சார், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் என்ற முறையிலே என்னுடைய
தலைமையிலே இருந்த கமிட்டியினால் தயாரிக்கப்பட்டு இந்த மன்றத்
திற்கு அளிக்கப்பட்ட ஒரு ரிப்போர்ட் சம்பந்தமாக எழுந்துள்ள
பிரச்சினையில் பொதுவாக நான் கலந்துகொள்ளவில்லை. நானே
அந்தக் கமிட்டியிலே உறுப்பினராக இருந்தவன் என்ற காரணத்
தினால் கலந்து கொள்ளக்கூடாது என்பது மரபு, இருந்தாலும்கூட
அந்தக் கமிட்டியிலே நடைபெற்றதைப்பற்றி சிலர் சொல்கின்ற
சமயத்திலே உண்மைக்குப் புறம்பாக சில இருந்ததால் அதை
மறுப்பது என்னுடைய கடமை என்ற முறையிலே நான் இங்கே
தங்களுடைய அனுமதியோடு சில, சொல்லிவிட விரும்புகிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவராக இருந்த திரு. சீனிவாசன்
அவர்கள் இந்தக் குறிப்பிட்ட பைலை நான் திரும்பத் திரும்பத்
கேட்டேன், அதைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அதை எப்படி
யாகிலும் தரவேண்டுமென்று நான் முயற்சி செய்தும் கிடைக்க
வில்லை, அதற்குப் பிறகுதான் ரிப்போர்ட் தயாரானது என்று
சொன்னார்கள், அதைப்பற்றியே கருத்தைச் சொல்லலாம் என்று
நினைக்கிறேன். அரிசி ஏற்றுமதி, லைசென்ஸ் இல்லாமல் முறை
கேடாக தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றியது
சம்பந்தமாக பத்திரிகைகளிலே வந்த செய்திகளை வைத்துக்
கொண்டு அதுபற்றிய விவரங்கள் இருந்தால் தரவேண்டுமென்று
இலாகாவிடம் கேட்டேன். அந்த இலாகாவிலிருந்து டி.ஐ.ஜி.
(சி.ஐ.டி.) போலீஸுக்கு அனுப்பப்பட்டு அவர்களால் தயாரிக்கப்
பட்டு உணவுத் துறைக்கு அனுப்பப்பட்டு உணவுத் துறை சட்ட
மன்ற செயலாளருக்கு அனுப்பி அது எனக்கு வந்து சேர்ந்தது.
மார்ச் மாதம் 29-ம் தேதி எனக்குக் கிடைத்தது என்று நான் கருது
கிறேன். மார்ச் மாதம் 29 ஆம் தேதி செயலாளருக்குக் கிடைத்த
அந்த 'ப்ரீப் நோட்' என்று சொல்லப்படுவது எனக்கு ஏப்ரல்
மாதம் 1 ஆம் தேதி என்னுடைய பார்வைக்கு வைக்கப்பட்டது.
அதை நான் பார்த்து அதிலே குறிப்பாக இந்த தாண்டவராயன்
என்று சொல்லக்கூடிய பகுதியை மட்டும், இவர் பேரிலே இவ்வளவு
தாரம் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள், யார், இவர் பேரிலே எப்படி
கொடுக்கப்பட்டது, டெண்டரில் கலந்து கொள்ளாமல் 'நெகோஷி
யேட்டட் டீலிலே' கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்களே, அது
சம்பந்தமாக அந்த ஃபைலை கமிட்டிக்குக் கொடுத்தால் உதவியாக
இருக்கும் என்று நான் கூறினேன். ஏப்ரல் மாதம் 1 அல்லது 2-ம்
தேதி, குறிப்பிட்ட இலாக்காவிற்குச் சொல்ல வேண்டுமென்றால்,
செயலாளரிடத்திலிருந்து டி.ஓ. லெட்டர் மூலமாக அந்த உணவுத்



1974 டிசம்பர் 13] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

துறைக்குச் செல்லும். கமிட்டியினுடைய கடைசிக் கூட்டம் 15-ம்
தேதி நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்குள்ளாக அது வர
வில்லை என்றுதான் நான் சொல்லியிருக்கிறேனே தவிர, அரசாங்கம்
கொடுக்க மறுத்தார்கள் என்றோ அல்லது கொடுப்பதற்குத் தயக்கப்
பட்டார்கள் என்றோ என்னுடைய ரிப்போர்ட்டிலே இல்லை என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆலடி அருணா :** அவர்கள் கொடுத்த அறிக்கையில்
'the file was not made available to the Committee till this date'
என்று இருக்கிறது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொடுத்த
அறிக்கையில், பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுத்த அறிக்கை
யிலேயும் இப்பொழுது அவர்கள் எந்த அடிப்படையில் இப்படிப்
பேசுகிறார் என்று தெரியாது, ஆனால் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்
என்ற முறையில் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதில்
'the file was not made available to the Committee till this date'
என்று இருக்கிறது.

What does it mean? Does it not mean refusal to make the
file available?

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே,
**திரு. எஸ். வடிவேல் :** சார்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சீனிவாசன் அவர்கள்
சொன்னதற்கு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பதில் சொன்
னார்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, என்னுடைய பெயரை
இழுத்திருப்பதால் ஓரிரு வார்த்தை கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். இங்கே சம்பந்தம் இல்லாதவற்றைத் கூறி இந்த விஷ
யத்தைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்
பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அந்த நேரத்தில் இருந்த
நிலைமையில் ஃபைல் வருவதற்குத் தாமதமாகிறது என்று சொல்ல
வில்லை, ஃபைலைத் தர மறுக்கிறார்கள், தர முடியாது, உன்னால் என்ன
செய்ய முடியுமோ செய்து கொள் என்ற அந்த நிலைமையில் திரு.
கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த அறிக்கையைக் கொடுத்திருக்கி
றார்கள். இன்றைக்குள்ள நிலைமையில் அவர்கள் இதை மறுக்கலாம்.
ஆனால் இதைக் கொடுத்தபோது இருந்த நிலைமை இது.
(குறுக்கீடு) இது யூகம் இல்லை. இந்த விவகாரம் முழுவதும் முதல
மைச்சருக்குத் தெரியாது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும்

சட்ட அமைச்சரவர்களுக்கும் இடையில் நடந்த விவகாரம். என்னுடைய அறையில் உட்கார்ந்திருந்தபொழுது நடந்தது என்பதால் சொல்கிறேன், இல்லையென்றால் நான் சொல்லியிருக்க மாட்டேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இங்கே இவ்வளவு நேரம் நடந்த விஷயத்தை முடிக்க வேண்டுமென்ற கருத்திலே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஒரு பிரச்னை எழுப்பப்பட்டதற்குப் பிறகு சட்ட அமைச்சரவர்கள் பதில் சொல்லும் பொழுது பதில் சரியான முறையில் வரவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. என்ன குற்றச்சாட்டுகளோ அதற்கு நேரடியாகப் பதில் சொல்வதற்குப் பதிலாக அதைத் தலைகீழாகத் திரித்து, மறித்து பதில் சொல்வதாக இருக்கிறது. ஆகவே, அது சந்தேகத்திற்குரியதாகிறது.

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். அந்த ஃபைல் இருந்தாலும்கூட அந்த ஃபைல் உண்மையானது அல்ல, அது அழிக்கப்பட்டு விட்டது என்ற குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். இது சாதாரண விஷயம் அல்ல, ரொம்ப பிரதானமாக, மேலே ஆழ்ந்து கவனிக்க வேண்டிய பிரச்னை. அம்மாதிரி ஃபைல் அழிக்கப்பட்டிருக்கிறதா என்பதை விசாரிப்பதற்குத் தகுந்த கமிட்டி அல்லது கமிஷனை அமைக்க வேண்டுமென்பது இந்தப் பிரச்னையிலேயிருந்து எழுகிறது.

மூன்றாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், எஸ்டிமேட் கமிட்டித் தலைவராக இருந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், சொன்ன பதிலிலேயிருந்து, அவர் தனக்கு இந்த ஃபைல் வேண்டுமென்பதற்காக எந்த மாதிரியான கடிதப் போக்குவரத்து நடந்திருக்கிறது என்பதை இந்தச் சபையிலே வைப்பது அவசியம் என்று மறுபடியும் ஒன்று புதிதாகத் தோன்றியிருக்கிறது. ஆகவே, நெடு நேரமாக இப்படியே நடந்து கொண்டிருப்பதைவிட இந்த இரண்டு மூன்று முக்கியப் பிரச்னைகளை முழுமையாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மதிப்பீட்டுக் குழு அறிக்கை பற்றி இங்கே எழுப்பப்பட்ட பிரச்னைக்கு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பதில் சொன்னார்கள்.





திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அதைப்பற்றிப் பேசினார்கள். அந்த அறிக்கையைப் படித்தால் நன்றாகத் தெரியும். இது சம்பந்தமாகப் பலயிடங்களில் நடந்த பல குற்றச்சாட்டுகளுக்கு—தாண்டவராயன் மீது உட்பட—பல வழக்குகள் போடப்பட்டிருப்பதும், போலீசாரும் இலாக்காவினரும் ஏராளமான விஷயங்கள் எஸ்டிமேட் குழுவிற்குக் கொடுத்து அதைப்பற்றியெல்லாம் அறிக்கையிலேயும் இருக்கிறது. ஆகவே, பைலே கொடுக்கவில்லை என்பது சரியான வாதம் அல்ல. ஏராளமான ஃபைல்கள் ரெஃபர் செய்யப்பட்டு, பாராட்டும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பைல் பற்றி, வரவில்லை என்பதுதான் பிரச்னை. ஆனால் இப்பொழுது அந்த ஃபைலே இல்லை என்ற பிரச்னை வந்துவிட்டது. ஆகவே, எதிர்க்கட்சியினர் ஃபைலே இல்லை என்று சொன்னால், அதை எப்படிக் காட்ட முடியும் என்றெல்லாம் நாங்களும் கேட்கலாம்.

ஆகவே, நான் சொல்வது, டெண்டர் கூப்பிடும்போது அரசாங்கத்திற்கு ஒரு நிலை, அதைவிட அதிகமான வருவாய் வரும் என்ற நிலையை எடுத்து உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பது எங்கள் நிலை. ஃபைல் சம்பந்தமாக இதைப்பற்றி எந்தக் கருத்தையாவது சொல்லி, அரசாங்கத்திற்கு நஷ்டமாகக் கூடிய அளவிற்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது, அதிகமாக டெண்டர் கொடுத்த விலையை ஏற்கவில்லை, ஆகவே, நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது அரசாங்கத்திற்கு என்ற வாதங்கள் ஏற்பட்டு கேட்டால் ஃபைலைக் காட்டுவதற்கு எங்களுக்குக் கொஞ்சமும் தயக்கம் இல்லை. அந்த ஃபைல் எதற்கு என்று இல்லாமல் சிலர் ஃபைலைக் காட்டச் சொல்வதும், சிலர் அந்த ஃபைலே இல்லை என்று சொன்னால் பிறகு அந்த ஃபைலை எப்படிக் கொடுப்பது என்ற பிரச்னை எழும். ஆகவே, எதிர்க்கட்சியினரால், தாண்டவராயனைப் பொறுத்தவரையில், அதிக விலைக்கான டெண்டரை மறுத்தது என்ற பிரச்னை எழுப்பப்படுமானால் உடனடியாக அந்த ஃபைலை உங்கள் முன்னால் வைக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, நம்முடைய மதிப்பீட்டுக் குழுவின் மரபுப்படி இங்கே நான் சொல்லவில்லை என்றாலும், அதனுடைய தலைவர் மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உணவுத் துறையிலே கேட்டு அது வரவில்லை என்று பல தடவை அந்தக் கமிட்டியில் பேசி, அதற்குப்

[திரு. எஸ். வடிவேல்] [1974 டிசம்பர் 13

பிறகுதான் அப்படி எழுதப்பட்டது என்பதை நான் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குப் பக்கத்திலிருந்த எஸ்டிமேட் கமிட்டி மெம்பர்களுக்கும் அது நன்றாகத் தெரியும். இப்பொழுது ஏதோ தவறாகச் சொல்கிறார்கள் என்பதை நான் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, நம்முடைய முன்னாள் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள் தாக்கல் செய்த இந்த அறிக்கையைப் பற்றிய சில விஷயங்களைப்பற்றி எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் சில விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி விளக்கம் கொடுத்தும்கூட நீண்ட இடைவெளிக்குப் பிறகு, நீண்ட நேரம் கழித்து (குறுக்கீடு) அன்றைக்கு அந்த அறிக்கையைத் தயார் செய்த நேரத்தில் இருந்த நிலைமை வேறு, இன்றைக்கு அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'மோட்டிவ்' கற்பித்துப் பேசக்கூடாது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எம்.ஏ., பி.எல்., பட்டம் பெற்ற வழக்கறிஞர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் வேண்டாம்.

**திரு. க. உரொ எட்மண்ட்:** பெருமையாகத்தான் சொல்கிறேன். அவர் ஒரு வழக்கறிஞர். அவருக்கு வார்த்தைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பது நல்லமுறையில் தெரிந்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் வேண்டாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அந்த அறிக்கையில் 39-வது பாராவில்
'the file was not made available to the Committee till this date' என்று சொல்லியிருக்கிறார்கள். 'the file was not made available' என்றால் அதற்கு சட்ட ரீதியாக என்ன பொருள் என்று காண வேண்டும். நாங்கள் கேட்டோம், வேண்டுமென்றே. wantonly it was not made available என்றுதான் பொருள். உண்மையிலேயே குறிப்பிட்ட காலத்திலே கிடைக்கவில்லை என்றால்,



1974 டிசம்பர் 13] [திரு. க. உரொ. எட்மண்ட்]

We were not able to get the file in time என்று எழுதியிருக்கலாம். ஆனால் உபயோகித்திருக்கும் வார்த்தை 'the file was not made available' என்பது, wantonly it was not made available என்றுதான் பொருள்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

(பல உறுப்பினர்கள் எதிர் வரிசையில் எழுந்து நின்றனர்)

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், மீண்டும் அது விஷயமாக எழுந்து சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்காக வருந்துகிறேன். எந்த நிலைமையிலும் நான் ஒரே மாதிரிதான் இருப்பேன். சில பேருக்கு சீசன் மாறுவது மாதிரி மாறிக் கொண்டிருக்கும் . . .

(திருவாளர்கள் பெ. சீனிவாசன், முனு ஆதி, எட்மண்ட், கோவை செழியன், ஆலடி அருணா மற்றும் பலர் உரத்த குரலில் பேசினர்)

(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையில் சட்ட அமைச்சர் சொன்னதைப் போல் இந்த ஃபைலைக் கொடுப்பதற்கு அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட அமைச்சர் எழுப்பிய வாதம் எல்லாம் குறிப்பாக இந்த ஒரு ஃபைலைப் பொறுத்து மாத்திரமல்ல. அதுவே அவையின் மரபாகிவிடக்கூடாது; திடீரென்று முதலமைச்சர் ஃபைலைப் பார்க்க வேண்டும்; இன்னொரு அமைச்சரின் ஃபைலைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி அதற்காகக் கிளர்ச்சி நடத்துவது நல்லதல்ல என்ற காரணத்தால் குறிப்பிட்ட விஷயத்தை எடுத்துச் சொல்லி, இப்படி அந்த ஃபைலில் இருக்கிறது என்று சொன்னால் 'இல்லை' என்று மறுக்கவோ அல்லது 'ஆமாம்' என்று ஒத்துக் கொண்டு வருத்தம் தெரிவிக்கவோ நடவடிக்கை எடுக்கவோ வாய்ப்பாக இருக்கும் என்பதுதான்.

அப்படி எதிர்க்கட்சியிலிருந்து அந்த ஃபைலில் இன்ன தவறு நடந்திருக்கிறது என்று குறிப்பிடவில்லையானாலும், நாட்டுக்கும் உலகத்திற்கும் ஏதோ ஒரு தவறை மறைப்பதாக சூழ்நிலை உருவாகும் அளவில் விவாதங்கள் நடைபெற்றிருக்கிற

காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறியது போலவும், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் காட்டியது போலவும், எதிர்க்கட்சியிலுள்ள தலைவர்கள் எடுத்துக் காட்டியது போலவும் நான் உங்களுக்கு உறுதி யளிக்கிறேன்—உங்களுடைய அறையில் அந்த ஃபைலை சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள்— யார் யார் அதைக் காண வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவர்கள் அந்த ஃபைலைப் பார்த்துவிட்டு இருக்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அதைப் பற்றி அரசு பதிலளிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் தயாராக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் . . . (குறுக்கீடு) I am not going into the file matter I am entirely on a different point. அவர்கள் "சீசன் மாறுவது போல்" என்ற வார்த்தையைச் சொன்னார்கள்.

(திரு. செழியன் தன்னுடைய இருக்கையிலிருந்து எழுந்து வந்து திரு. எட்மண்ட் அவர்களிடம் ஏதோ கூறிச் சென்றார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. செழியன், இது முறையல்ல. அங்கிருந்து இங்கு வந்து சொல்லிவிட்டுப் போவது சரியல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி பாராட்டத்தக்கது. அவர் வாக்குறுதி கொடுத்ததன் அஸ்திவாரமே அதன் விவரத்தைத் தெரிந்து கொண்டு பேச வேண்டுமென்ற முறைக்காகத்தான். ஆகவே, தாங்கள் "நோ கான்பிடன்ஸ் மோஷனை" நாளைக்கு எடுங்கள். அல்லது ஒரு மணி நேரம் சபையை ஒத்தி வைத்து மீண்டும் சபை கூட உதவி செய்ய வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் "ஃபைலைப் பார்த்த பிறகு என்.சி. மோஷனை எடுக்க வேண்டும்" என்று சொல்லுகிறார்கள். நேற்றையதினமே அது ஒத்தி வைக்கப்பட்டு ஒரு நாள் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தோம். இன்றைக்கும் ஒத்தி வைக்கப்பட்டு அடுத்த நாளும் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்த

---





வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்காக மகிழ்ச்சி யடைகிறேன். தீர்மானத்தில் கருத்துக்களைச் சொல்லிவிட்டு, என்.சி. மோஷனை எடுத்து விவாதித்து விட்டு பிற்பகல் உடனடியாக அவர்கள் விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தங்கள் அறையில் வந்து பார்த்துவிட்டுப் பேசுவதற்கு அங்கத்தினர் களுக்கும், அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் உரிமை இருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** படித்து விட்டுத்தானே பேச முடியும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்ன வார்த்தைகளை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டுமென்று சொன்னால் கேள்வி நேரம் முடிந்து இந்த நேரம் வரை நடைபெற்றது அவ்வளவையும் எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டும். ஒவ்வொரு உறுப்பினர் வாயிலும் என்னென்ன வார்த்தைகள் வந்தன ? (கூச்சல்-குழப்பம்). திரு. எட்மண்ட் உட்காருங்கள். திரு. ஆலடி அருணா உட்காருங்கள்.

திரு. எட்மண்ட் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன வார்த்தையை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்காக ஒரு கருத்தைச் சொன்னேன். உறுப்பினர்கள் பேசும்போது என்ன என்னவோ எல்லாம் பேசியிருக்கிறார்கள். எக்ஸ்பஞ்ச் பண்ணுவதாக இருந்தால் கேள்வி நேரத்திற்குப் பிறகு இதுவரை நடந்தது பூராவையும் எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டும். ஆனால் அப்படி எக்ஸ்பஞ்ச் பண்ணத் தேவையில்லை. மறுபடியும் இந்த விவாதத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம். அடுத்த விவாதத் திற்குப் போகலாம்.

**Dr. H. V. HANDE :** I would like to know the final decision of the Chair on the point of order that I have raised, what is your decision? உங்களுடைய தீர்ப்பைச் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் பேசிவிட்டார்கள். அதற்குப் பிறகு என்ன முடிவு, முதலமைச்சர் அவர்கள் சொன்ன

கருத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களா என்பது பற்றித் தாங்கள் தீர்ப்புக் கூறவில்லை. தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் ஆகிய இரண்டையும் எடுத்துக் கொள்வதற்கு முன்பு என்ன நடைபெற வேண்டுமென்பது பற்றி ஒரு விவாதம் நடைபெற்றிருக்கிறது. ஆலடி அருணை அவர்கள் கொடுத்த தீர்மானம் 25—11—1974-ல். திரு. கோவை செழியன் அவர்கள் கொடுத்த தீர்மானம் 7—12—1974-ல். இந்தத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கும் உறுப்பினர்கள் பேரவைத் தலைவரிடத்தில் கொடுத்தபோதே, இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுவதற்கு முன்பே இப்படிப்பட்ட ஃபைல் தேவை, இது வந்தால்தான் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுவது முறையாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்திருப்பார்களானால் நம்முடைய அவையின் நேரம் இவ்வளவு வீணாகி இருக்கத் தேவையில்லை. இவ்வளவு நாள் கழித்து, தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுகிற அந்த நேரம் பார்த்து ஃபைலைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்து விட்டு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுவது முறையல்ல.

டாக்டர் ஹாண்டே அவர்கள் தன்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டருக்கு என்ன தீர்ப்பு என்று கேட்டார்கள். அதுபற்றிய விவாதந்தான் இதுவரை இந்த. மன்றத்தில் நடைபெற்று வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடையளித்தார்கள். அவர்கள் கூறியதை ஏற்றுக்கொள்ளுகிறேன். அந்த ஃபைலை எந்தெந்தக் கட்சித் தலைவர்கள் பார்க்க விரும்புகிறார்களோ அவர்கள் எல்லாம் வந்து பார்க்கலாம். (குறுக்கீடு.) அங்கத்தினர்கள் கூட வந்து பார்க்கலாம்.

அடுத்த நிகழ்ச்சியை இப்போது எடுத்துக் கொள்ளலாம்.

பேரவை விதி 55 (1)-ன் கீழ் இரண்டு விதமான தீர்மானங்கள் வந்திருக்கின்றன.



**(3) அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம், அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் இவைகளை எந்தக்கட்சி உறுப்பினர்கள் முன்மொழிவது என்பது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆலடி அருணை அவர்கள் ஒரு கண்டனத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார்கள். அதைப் பேரவைக்குப் படிக்கிறேன்—

"This House condemns the policy of the Ministry in having completely failed to take suitable and prompt action against the rice dealers, millers and officers who were mostly responsible for the irregularities committed."

திரு. என். கே. பழனிசாமி அவர்கள்—

"This House distpproves the policy of the Ministry on food problem and its failure to tackle acute famine condition prevailing in many parts of Tamil Nadu."

என்ற பொருள்படத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களும், திரு. எம். சுரேந்திரன் அவர்களும்—

"This House disapproves the policy of the Government in regard to procurement of foodgrains and their proper distribution to the people in sufficient quantities and in regard to maintaining the prices of articles of daily consumption at levels which a common man can easily reach."

என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எஸ். வடிவேல் அவர்கள்—

'To disapprove the policy of the Ministry on food problem and its failure to tackle the acute famine condition prevailing in many parts of Tamil Nadu.'

என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

இவை எல்லாம் கண்டனத் தீர்மானங்கள். . . .

**திரு. ஆலடி அருணை :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொன்னதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

[பேரவைத் தலைவர்] [1974 டிசம்பர் 13

மாண்புமிகு உறுப்பினர்கள் ஐவர் கண்டனத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப் பட்டிருக்கிறது. கண்டனத் தீர்மானமும், நம்பிக்கையில்லாத் தீர்மானமும் ஒரே கட்சியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில் எப்படி தீர்மானங்களை எடுத்துக் கொள்வது என்பது பற்றிக் கட்சித் தலைவர்கள் எடுத்துக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நாங்களும் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரவில்லை.

**திரு. ஆலடி அருணா:** பாயின்ட் ஆப் ஆர்டர். எனது தீர்மானம் எனக்குத் தெரியாமல், நியாயத்திற்கு விரோதமாக திருத்தப் பட்டிருக்கிறது. அதனால் அதைப் பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். என்ன தவறான முறையில் எனது தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

I have a right to use such words in the resolution. The resolution has been changed completely. Is it democratic?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நமது விதிமுறைகள்படி பேரவைத் தலைவர்தான் படிக்கவேண்டும் என்று இருக்கிறது.

THIRU ALADI ARUNA: Please allow me to speak.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 41-வது விதியின்கீழ் கொடுக்கப்படுகிற தீர்மானங்கள், 42-வது விதியின்கீழ் கொடுக்கப் படுகிற தீர்மானங்கள், கேள்விகள் இவற்றை முறைப்படுத்து வதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை உண்டு.

**திரு. ஆலடி அருணா:** முறைப்படுத்தும்படி என் தீர்மானத்தில் என்ன தவறு இருக்கிறது. எனது தீர்மானத்தில் * * *

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 டிசம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதைப் படிப்பதை நான் அனுமதிக்கவில்லை. அதை பேரவைத் தலைவரின் அறைக்கு வந்து கேட்கவேண்டும். அருணா அவர்கள் தான் எழுதிக் கொடுத்ததை படித்தது இந்த அவைக் குறிப்பில் ஏறாது என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: It also raises some fundamental questions. Supposing I give notice of a Resolution, normally the Resolution has to be presented to the House as it was presented to the Hon. Speaker. Supposing any modification is made, that modification will have to be communicated to the Member and you must satisfy him also that it contains arguments or defamatory statement or it refers to the conduct or character of the person in his official capacity. He can also say that it is not precise.

சாதாரணமாக, தீர்மானத்தைப்பற்றி, மோஷன்பற்றி எந்த முறையில் அவை எடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட் டிருக்கிறது. அந்த முறையில் ஏதாவது மாறுதல் இருக்கிறதா என்று அவர்களையும் என்னையும் கன்வின்ஸ் செய்தால் சரியாக இருக்குமே தவிர, இல்லாவிட்டால் நாங்கள் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து வேறு ஒரு ரூபத்தில் ஒரு தீர்மானம் வருவது சரியல்ல. ஆக்சுவலாக அவர்கள் என்ன எழுதிக் கொடுத்தார்கள், என்ன மாடிஃபை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆலடி அருணா அவர்கள் சொல்வதிலிருந்து அவர்கள் கொடுத் துள்ள தீர்மானத்திலிருந்து சில வாசகங்கள் டெலீட் செய்யப்பட் டிருப்பதாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 41-வது விதியின் கீழ் கொடுக்கிற தீர்மானங்கள், வினாக்கள் இவற்றை வேண்டிய அளவிற்கு, நல்லமுறையில் அவை இருக்கவேண்டுமென்பதற்காக திருத்துவதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. எனவே, உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்ததைப் படிக்கவேண்டு மென்று சொல்லி வற்புறுத்துவது முறையல்ல.

**திரு. ஆலடி அருணா:** திருத்தவோ, மாற்றவோ பேரவைத் தலைவருக்கு உரிமை இல்லை என்று நான் வாதிக்கவில்லை. விதிகளுக்கு முரணாக அல்லது பாராளுமன்ற முறைகளுக்கு

முரணாக என்ன வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறன
என்று என் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதை நான் ஏற்றுக்
கொள்ளவில்லை என்றால் அதற்குப் பிறகு அதைத் திருத்துவது
என்பது ஜனநாயக முறையாகும். நான் பயன்படுத்தியுள்ள
வார்த்தைகள், வேர்ட்ஸ், ஜனநாயக முறைக்கு உட்பட்ட
வார்த்தைகள்தான். அவை பார்லிமென்ட்டரி வேர்ட்ஸ்தான்.
ஆகவே, தாங்கள் திருத்தியிருப்பது என் தீர்மானத்தின்
அடித்தளத்தைக் குறுக்குவதாக இருக்கிறது. எனவேதான்
என் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கேள்வியை என்
அறைக்கு வந்து கேட்கவேண்டுமே தவிர இந்த அவையில்
அதைக் கேட்கக் கூடாது.

**திரு. ஆலடி அருணா:** எனக்கு தெரிவிக்கவே இல்லையே.

**திரு. க. உரா. எட்மண்ட்:** என் கட்சியைச் சார்ந்த உறுப்
பினர் திரு. ஆலடி அருணா அவர்கள் ஒரு கண்டனத்
தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆலடி அருணா அவர்கள்
கொடுத்திருக்கும் தீர்மானத்தில் உள்ள சில வாசகங்களை தாங்கள்
விரும்பவில்லையோ என்னவோ, அதில் சில வார்த்தைகளை அகற்றி
விட்டு அதற்குப் பதிலாக சில வார்த்தைகளைப் போட்டிருக்
கிறீர்கள். ஆலடி அருணா அவர்கள் கண்டனத் தீர்மானத்தில்
எழுதி இருந்த சில வார்த்தைகள் உங்களுக்கு பிடிக்கவில்லையோ
அல்லது அது சில அதிகாரிகளை தனிப்பட்ட முறையில் தாக்கு
வதாக இருக்கிறது என்று நீங்கள் கருதி நீக்கியிருந்தால்
தங்களிடமிருந்து சில விளக்கங்களை நான் கேட்க விரும்புகிறேன்.
மதிப்பீட்டுக் குழுத்தலைவர் அவர்கள்' கொடுத்திருக்கிற
அறிக்கையின் ஆறாவது பக்கத்தில் முதல் பாராக்ராஃபில்—
பதினெட்டாவது பாராக்ராப் என்று நினைக்கிறேன்—

"It is only against the mill owners, rice dealers and
officials . . . ."

என்றுதான் இருக்கிறது. அரசாங்கத்திற்கு எதிராக இந்தக்
கண்டனத் தீர்மானம் இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் படித்ததிலும்
வந்திருக்கிறது.

**திரு. க. உரா. எட்மண்ட்:** அது நிச்சயமாக அரசுக்கு
எதிராகவோ அல்லது அமைச்சரவைக்கு எதிராகவோ இல்லை.
'It is only against the mill owners, rice dealers and officials'.
அதேமாதிரி திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கிற
அறிக்கையின் ஆறாவது பக்கத்தில் ஒரு பாராவில் சொல்லி
யிருக்கிறார்கள்.

'The Committee is further surprised to note the conspiracy
of the parties as well as the Taluk Supply Officer. . . .' It is an
attribution against the Taluk Supply Officer to state that they
have conspired with the parties, namely, rice dealers.

அதோடு நிற்கவில்லை.

'to cheat the Government by putting false claims'. This is more
defamatory.

இப்பேர்ப்பட்ட டெபமேட்டரி ஸ்டேட்மெண்ட்களை எல்லாம் ஒரு
குழுத் தலைவர் அவர்களது அறிக்கையில் போட்டு அதை
மன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின்
நகல் இந்த மன்றத்திலுள்ள அத்தனை உறுப்பினர்களுக்கும்
அனுப்பப்பட்டிருக்கிறது. அப்போது அதைத் திருத்தாத நம்
தலைவர் அவர்கள் எங்கள் கட்சியைச் சார்ந்த ஆலடி அருணா
அவர்கள் தமது கண்டனத் தீர்மானத்தில் ஏதோ அதிகாரிகள் மீது
கூறப்பட்டுள்ள அந்த வார்த்தைகளை மட்டும் நீக்கவேண்டிய
அவசியம் என்ன என்பதற்கு மட்டும் விளக்கம் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. எட்மண்ட் அவர்கள் டெபமேட்டரி ஸ்டேட்மென்ட்களை
யெல்லாம் தாங்கள் அனுமதித்திருக்கிறீர்களே என்று
சொன்னார்கள். அதை டெபமேட்டரி என்று அவர்கள் ஏற்றுக்
கொள்வார்களேயானால் அது பொய் என்று அர்த்தம். அவர்களது
அறிக்கையில் உள்ளதை டெபமேட்டரி என்று ஒரு தடவை
சொன்ன பிறகு அதுபற்றி விவாதம் எழுப்புவதற்கு எந்த

விதமான உரிமையும் கிடையாது. அது உண்மை என்று ஏற்றுக் கொண்டால்தான் குற்றம் சாட்ட முடியுமே தவிர டெபமேட்டரி என்று ஏற்றுக்கொண்ட பிறகு விவாதத்திற்கு இடமில்லை.

**திரு. நா. வீராசாமி :** பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்போது கொண்டுவரப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானத்தில் அரசாங்கத்தைப் பற்றியோ, அமைச்சரவையைப் பற்றியோ அல்லது அமைச்சரவையில் இருக்கிற எந்த அமைச்சரைப் பற்றியோ இல்லையென்று. . .

**திரு. க. உரொ. எட்மண்ட் :**

I am very sorry he has not understood my point.
நான் சொன்னது கண்டனத் தீர்மானத்தில் தங்களால் நீக்கப் பட்ட வார்த்தைகள் அல்லது வெர்ட்ஸ் அரசாங்கத்திற்கு விரோத மாக இல்லை என்றுதான்.

(கூச்சல் குழப்பம்.)

**திரு. முனு ஆதி :** நான் நின்றுகொண்டுதான் இருப்பேன். எங்களை உட்கார வைக்கிறீர்கள். அவர்கள் சம்பந்தா சம்பந்தம் இல்லாது பேசுகிறார்கள். அவர்களைப் பேசுவதற்கு அனுமதிக் கிறீர்கள். அவர்கள் கடைசிவரை, ஒன்றை மணி நேரம் பேசு வதற்கு அனுமதிக்கிறீர்கள். ஆனால், நாங்கள் பேசுவதற்கு முன்பே உட்கார வைத்து விடுகிறீர்கள். இது நியாயம் இல்லை.

**திரு. நா. வீராசாமி:** திரு. எட்மண்ட் அவர்கள் இங்கு கொண்டுவரப்பட்டுள்ள கண்டனத் தீர்மானத்தில் அமைச்சரவையைப் பற்றியோ அல்லது அமைச்சரவையில் இருக்கிறவர்களைப் பற்றியோ அல்ல, வியாபாரிகள், அதிகாரிகள். . . .

**திரு. க. உரொ எட்மண்ட்:** சட்டமன்ற மரபு என்னவென்றால் குற்றஞ்சாட்டப் பட்ட உறுப்பினர் ஒருவர் தான் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னால் அதை ஏற்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. எட்மண்ட் அவர்கள்பேசியது, திரு. வீராசாமி அவர்கள் பேசியது இரண்டு





பதிவாகியிருக்கிறது. தங்கள் அறையில் எல்லா உறுப்பினர்களின் பார்வைக்கு அதை வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொன்னதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த ஸென்ஷர் மோஷனை தனியாக எடுத்து, நோ கான்பிடன்ஸ் மோஷனை தனியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** திரு. ஆலடி அருணா அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தை அப்படியே கொண்டுவருவதாக இருக்கிறதா அல்லது மாற்றிக் கொண்டுவருவதாக இருக்கிறதா என்பதுபற்றிச் சொன்னால் பரவாயில்லை.
Then we will be satisfied.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் குழு அறிக்கையில் சில வார்த்தைகள் இருக்கின்றன, முறைகேடான வார்த்தைகள் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதை பேரவைத் தலைவர் அனுமதிக்கவில்லை. எட்மண்ட் அவர்கள் அவர்களது வாயிலிருந்தே, அனுமதிக்கத் தகாத வார்த்தைகள் என்று அவர்களே சொன்னார்கள்.

THIRU G. R. EDMUND : I am sorry, the Chair is diverting my argument. My argument is this. When the Chair has permitted the Chairman of the Estimates Committee to present such a report to the House, why not these words be permitted on the floor of the House. That is my point. Nothing is serious when compared to the words used in the Estimates Committee Report.

THIRU ALADI ARUNA : Sir. I want to know whether the words used in my motion are parliamentary or unparliamentary. The Chair has not stated anything about it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் ஒரு முடிவை கொடுத்த பிறகு அவையிலுள்ளவர்கள் சிலர் அதை ஏற்றுக்கொள்ளாத நிலையில் கூட இருக்கலாம். ஆனால்,

பேரவைத் தலைவர் கூறிய முடிவுதான் முடிவு. அதுதான் இந்த
மன்றத்திலே கடைப்பிடிக்க வேண்டிய தீர்ப்பாகும். நான் எடுத்த
முடிவு தவறாக இருக்கலாம். ஆனால் அதுதான் முடிவு. . .

**திரு. ஆலடி அருணா :** அமெண்ட்மெண்டு நாளைக்குக் கூட
கொடுக்கலாம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எடுத்த முடிவை நான்
தவறு என்று சொல்லவில்லை. உங்களுக்குத் தவறாகப் பட்டிருக்
கலாம். நான் தவறு என்று சொல்லவில்லை. தலைவருக்கு முடிவு
எடுப்பதற்கு உரிமை இருக்கிறது. நான் திருத்தியபடிதான்,
அந்த அளவிலேதான் இந்த அவையிலே இந்தத் தீர்மானம்
அனுமதிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இரண்டு தீர்மானங்கள் இந்த
அவையிலே வருவதாக தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள். முதலில்
கண்டனத் தீர்மானத்திற்குத் தனியாக அனுமதி கோரிக்கொண்டு
அதற்குப் பிற்பாடு நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அனுமதி
கோரி இரண்டும் வெவ்வேறாக வருவதுதான் பொருத்தமாக
இருக்கும். வெவ்வேறாக வருவது என்று சொன்னால் கண்டனத்
தீர்மானத்தில் பேசுபவர்கள் கண்டனத் தீர்மானத்தின் பேரில்
பேசுவார்கள். மற்றவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்
பேரில் பேசுவார்கள். இப்படிப் பொதுவாக விவாதம்
நடத்தினால் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். முன்பு
ஒரு முறை கூட இம்மாதிரியாக ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது
என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு
கண்டனத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். இன்னொரு
உறுப்பினர் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொடுத்திருந்தார்.
அப்படி இரண்டும் வெவ்வேறாக எடுத்துக்கொள்ளப்பட்டு
இரண்டின் பேரிலும் விவாதம் நடந்திருக்கிறது. ஆகவே,
இப்பொழுதும் அந்த முறையைப் பின்பற்றுவதில் விதி முறையில்
ஒன்றும் கஷ்டம் இருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கருணாநிதி :** ஒரே கட்சியினர் நம்பிக்
கையில்லாத் தீர்மானமும், கண்டனத் தீர்மானமும் கொடுத்திருக்
கிறார்கள். இன்னும் சில கட்சியினர்கள் கண்டனத்



தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இன்னொரு கட்சியினர்
நம்பிக்கையில்லாத் தீர்மானம் தந்திருக்கிறார்கள். ஆகவே,
கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகிற வாய்ப்பையும்
உரிமையையும் ஒரே கட்சிக்குத் தருவதா, அல்லது மற்ற கட்சியின
ருக்கும் பகிர்ந்துகொண்டு இந்த வாய்ப்பைத் தருவதா என்ற
பிரச்னையும் எழுகின்றது. அதைப்பற்றி தலைவர்கள்
அபிப்பிராயம் சொல்லவேண்டும்.

(திருமதி த. நா. அனந்தநாயகி அவர்கள் எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கட்சித் தலைவர்கள் இருக்
கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, as a Member of
the House I have got every right to speak about it. No Confi-
dence Motion is more comprehensive than the Motion which
condemns the policy of the Government. Every point can be
brought under the No Confidence Motion. So, we need not have
separate discussion for this Motion and that Motion. On the No
Confidence Motion I can speak on anything.
பேசுபவர்கள் அதில்
கண்டனத் தீர்மானத்தைப் பற்றிப் பேசுபவர்கள் அதில்
இல்லாத பொருளைப் பற்றி பேசமுடியாமல் போய்விடலாம்.
ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு
விட்டால், அதில் கண்டனத் தீர்மானத்திலுள்ள பொருளைப்
பற்றியும் பேசலாம். அதில் இல்லாத மற்ற பொருள்களைப்
பற்றியும் பேசலாம். அதில் எல்லாவற்றையும் பற்றிப் பேசலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முன்மொழிந்து பேசு
பவர்களுக்கு அதிக வாய்ப்பு உண்டு. அம்மையார் அவர்கள்
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டால்
போதும், அதிலே எல்லாவற்றையும் பற்றிப் பேசலாம் என்று
கூறுகிறார்கள். அதைப்பற்றி கட்சித் தலைவர்கள் என்ன சொல்லு
கிறார்கள் ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இதுவரையில் நாம் அனுசரித்து
வந்திருக்கிற முறைப்படி யார் முன்னால் தீர்மானம் கொடுத்
திருக்கிறார்களோ அதைப் பின்பற்றித் தான் அனுமதித்திருக்

கிறோம். நம்பிக்கையில்லாத் தீர்மானமும், கண்டனத் தீர்மானமும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் முன் தேதியிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த இரண்டையும் கொடுத்த ஒரே கட்சியை அனுமதிப்பதா என்றால், நாம் வகுத்திருக்கிற முறைப்படி முன்தேதியில் கொடுத்த அ.தி.மு.க.வினரைத் தான் அனுமதிக்க வேண்டும். அவர்கள் தானாகவே முன்வந்து அந்த வாய்ப்பை இன்னொரு கட்சியினருக்குக் கொடுப்பதற்குத் தயாராக வரவேண்டுமே தவிர, வேறு வழி இல்லை. அது தான் மரபு. அவர்கள் அப்படி அந்த வாய்ப்பைக் கொடுக்க முன்வந்தால், அவர்களுக்குப் பின்னால் எந்தக் கட்சியினர் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கட்சித் தலைவர்கள் இதில் முடிவு சொல்வதற்கு இல்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலே அருணா அவர்கள் கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. கோவை செழியன் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சியினர் கொடுத்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களும், திரு. எம். சுரேந்திரன் அவர்களும் கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** திரு. ஏ. சுப்பிரமணியம் கொடுத்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம்.





### (4) அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை முன் மொழிய இந்தப் பேரவை அனுமதிக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்கு, இதை அனுமதிக்கலாம் என்று ஆதரவு அளிக்கும் உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(39 உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 39 மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு தருவதாக எழுந்து நிற்பதால், இந்தக் கண்டனத் தீர்மானத்தை முன்மொழிவதற்கு இந்தப் பேரவை அனுமதி அளிக்கிறது என்று அறிவிக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்களும், திரு. எட்மண்ட் அவர்களும்
" This House expresses its want of Confidence in the Council of Ministers headed by Dr. M. Karunanidhi. "
என்று தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. கோவை செழியன் கொடுத்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முன்மொழிய இந்தப் பேரவை அனுமதிக்கிறதா என்று தெரிந்துகொள்வதற்கு, இதை அனுமதிக்கலாம் என்று ஆதரவு அளிக்கும் உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(40 உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு 40 உறுப்பினர்கள் ஆதரவு தருவதாக எழுந்து நிற்பதால், இந்தப் பேரவை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிவதற்கு அனுமதி அளிக்கிறது என்று அறிவிக்கிறேன்.

இவைகளை எப்பொழுது எடுத்துக் கொள்ளலாம் ?

**திரு. கோவை செழியன் :** நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, உடனடியாக எடுத்துக்கொள்வதுதான் இந்த அவையிலே மரபாக இருந்திருக்கிறது. ஆகவே, இதை உடனடியாக எடுத்துக்கொள்வதுதான் முறை. அதற்கு அமைச்சர் அவை தயாராக இருக்கிறது.

[1974 டிசம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை திரு. கோவை செழியன் முன்மொழிவார்.

THIRU KOVAI CHEZHIYAN: Sir, I move the following motion :—

'This House expresses its want of confidence in the Council of Ministers headed by the Hon'ble Thiru M. Karunanidhi.'

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I second it.

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following motion :—

'That this House disapproves the policy of the Government headed by Chief Minister Thiru Karunanidhi in regard to procurement of foodgrains and their proper distribution to the people in sufficient quantities and in regard to maintaining the prices of articles of daily consumption at levels which a common man can easily reach.'

THIRU G. R. EDMUND: Sir, I second it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் இரண்டின் பேரிலும் இப்பொழுது விவாதம் தொடங்கும். திரு. கோவை செழியன், எவ்வளவு நேரம் வேண்டும் ?

**திரு. கோவை செழியன் :** 1½ மணி நேரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு மணி நேரத்தில் முடித்து விடுங்கள். ஒரு வேண்டுகோள். இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர் ஒருவர் இன்னொரு உறுப்பினர் மீது ஏதாவது குற்றச்சாட்டு கூற விரும்பினால், அதற்கு ஒரு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஏற்கனவே முடிவு எடுத்திருக்கிறோம். எந்த ஒரு உறுப்பினர் மீதும் எந்தவிதமான ஒரு குற்றச்சாட்டை ஒரு உறுப்பினர் கூற விரும்பினாலும் அந்தக் குற்றச்சாட்டைப் பேரவைத் தலைவருக்கு முன்னதாகக் காட்டி, அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதாரங்களைக் கொடுத்து, அதை பேரவைத் தலைவர் அனுமதித்த பிறகு இந்த அவையிலே கூற வேண்டும் என்ற ஒரு மரபை நாம் கடைப் பிடித்துக்கொண்டு வருகிறோம். அந்த முறையைப் பின்பற்ற வேண்டும் என்று எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.



1974 டிசம்பர் 13]

(நண்பகல் 12-00)

* **திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதியின் தலைமையில் உள்ள மந்திரிசபையின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை நான் முன்மொழிந்து பேசுவது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்புகளில் ஒன்று என்று நான் நம்புகிறேன்.

இன்றைக்கு இந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே சில கருத்துக்களை நான் சொல்ல வேண்டிய நிலையில் இருப்பதால் நான் சொல்கிற கருத்துக்களை எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள், ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்கள் முழுமையாகக் கேட்டு விட்டு நான் சொல்கிற கருத்துக்கள் தவறு என்று அவர்கள் கருதுவார்களேயானால் அவர்களுக்குப் பேசுகிற வாய்ப்பு கிடைக்கிறபோது அவர்களுடைய கருத்துக்களை அவர்கள் பேசலாம். ஆனால் நான் பேசிக் கொண்டிருக்கிறபோது தயவு செய்து அடிக்கடி எழுந்து சந்தேகங்கள், விளக்கங்கள் கேட்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கேட்பதால் எனக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிற நேரம் குறைந்துகொண்டே வந்து விடுகிற நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு ஜனநாயக முறையில் என்ன உரிமை இருக்கிறதோ அதே உரிமை மற்ற கட்சிக்காரர்களுக்கும் இருப்பதால் அவர்கள் பதில் கொடுப்பதை அவர்கள் நேரத்தில், கொடுத்துக் கொள்ள வேண்டும் என்று தான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அமைச்சரவை உடனடியாகப் பதவி யிலிருந்து விலக வேண்டுமென்ற தீர்மானத்தை நான் கொண்டு வந்தாலும் இந்தக் கருத்து, இந்த மன்றத்திலே இருக்கின்ற ஒரு சிலருடைய உள்ளத்திலே உள்ள கருத்து மட்டுமல்ல, இந்த நாட்டிலே இருக்கிற நூற்றுக்கு 99 பேர், இந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே தமிழகத்திலே இருக்கிற மக்கள் அத்தனை பேரும் இந்த மன்றம் இன்றைக்கு என்ன முடிவை எடுக்க இருக்கிறது

என்பதை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறபோது இந்தத் தீர்மானத்திற்கு மதிப்பு அளித்து அரசாங்கத்தினுடைய தவறுகளை ஒத்துக் கொண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உள்ளபடியே நாட்டு மக்களுடைய எண்ணத்திற்கு மதிப்புத் தந்து பதவியிலிருந்து விலகுவார்களானால் நான் அவரைப் பாராட்டுவேன். பாராட்டுவது மட்டுமல்ல, நாட்டு மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிற ஒரு கொந்தளிப்பும், எந்த நேரத்திலேயும் புரட்சி வெடித்து விடுமோ என்ற நிலைமையும் நாட்டிலே இருக்கிறது; அத்தகைய ஒரு பெரிய புரட்சியை, ரத்தக் கிளறியை தமிழ்நாட்டிலே உருவாக்கக் கூடாது என்ற ஒரு நல்ல எண்ணத்தினாலேதான் நான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறபோது, அவர்களாகவே இதை ஒத்துக் கொள்ள வேண்டும், விலகவேண்டும் என்று விரும்பு கிறேன்.

டாக்டர் க. நாகராஜன் தலைமை

நான் ஏற்கனவேயே இந்த மாமன்றத்தில் குறிப்பிட்ட மாதிரி தமிழ் நாட்டினுடைய பல பகுதிகளிலே உள்ள விவசாயி களானாலும் சரி, தொழிலாளர்களானாலும் சரி, மாணவர் களானாலும் சரி, அவர்கள் அனைவரும் இன்றைக்குப் போர்க் கொடியை உயர்த்தி இருக்கிறார்கள். இந்தப் போராட்டம் எந்த அளவிற்கு உச்சக் கட்டத்திற்கு வந்துவிடுமோ என்று அஞ்சு கிறேன். மாணவர்களின் போராட்டம் வெடித்து விடுமேயானால் தெருத் தெருவாக ரத்தக் கிளறி உண்டாகி விடுமே என்று அஞ்சித் தான் இன்றைக்கு நாட்டிலே பசியும் பட்டினியும் தலைவிரித்து ஆடுகிற நேரத்தில் அதைத் தணிக்க விரும்புகின்றோம். பசியாலே பாதிக்கப்பட்டவர்கள் எதைச் செய்வார்கள் என்று சொல்ல முடியாது, பட்டினியாலே வாடுகிறவர்கள் எந்த அளவிற்குச் செல்வார்கள் என்று சொல்ல முடியாது என்ற அச்சத்தில்தான், அப்படி ஒரு நிலை ஏற்படும் முன் தாங்களாகவே பதவி விலகிச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தங்களுடைய கடமையை உணர்ந்து அவர்களாகவே விலகிக் கொள்வார் களென்று நான் நம்புகிறேன்.





நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் அமைச்சரவையிலே இருக்கிறவர்கள் என்னுடைய பழைய நண்பர்கள் என்ற அனுதாபத்தினால்தான், அவர்கள் மீதுள்ள அன்பால்தான், அத்தகைய ஒரு நெருக்கடியான நிலைமையை அவர்கள் உண்டு பண்ணக் கூடாது என்பதற்காகத்தான்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியிலே அமர்ந்திருக்கிறவர்கள் இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிற இந்தப் பஞ்ச நிலை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து இருக்கிறார்களா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

இதைச் சொல்வதற்குக் காரணம் இந்த ஆட்சியாளர்கள் நாட்டு மக்களைச் சந்தித்து நீண்ட பல காலம் ஆகிவிட்டது. இன்றைக்கு மக்களின் உண்மையான கஷ்டங்கள், அவர்களின் தொல்லைகள், ஆட்சியாளர்களுக்குத் தெரியாது. குறிப்பாக, அமைச்சர்களைப் பொறுத்தவரையிலும் அந்த அமைச்சர் களுக்கு ஆலோசனை சொல்கிறவர்கள் அந்தக் கட்சியிலே இருக்கிற உண்மையான நாணயமான தொண்டர்களுக்கு குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புக் கிடைத்து இருக்குமே யானால் நாட்டு நிலைமையை நிச்சயமாக அவர்கள் உணர்ந்திருப் பார்கள். நான், ஆளுங்கட்சியிலுள்ள எல்லா உறுப்பினர்களையும் குறை உள்ளவர்கள் என்று சொல்லவில்லை. ஏறத்தாழ பாதிக்கு மேலே, ஆளுகின்றவர்களுடைய தவறுகளை எடுத்துச் சொல்லும் வாய்ப்பு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அமைச்சர்களும் அவர்களிடத்தில் சென்று உங்கள் கருத்துக்கள் என்ன என்று கேட்க மாட்டார்கள்.

எனக்கே போதிய அனுபவம் நிறைய இருக்கிற காரணத்தினால் தான் சொல்கிறேன். அத்தகைய நல்லவர்களின் உபதேசங்களை அமைச்சர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆனால் அவர்கள் அருகில் யார் இருக்கிறார்கள் என்றால் அரசியல் லாபம் கருதி திடீர் அரசியல்வாதிகளானவர்கள், பெரிய பணக்காரர்கள், குறுக்கு வழியிலே அரசியலைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்து பயனடைய விரும்புபவர்கள், ஆலை அதிபர்கள், ஆற்காடு நவாப்கள், சுல்தான்கள் இப்படி இருக்கிறார்களே தவிர, . . . . .

[1974 டிசம்பர் 13

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, அவர்களுடைய பத்திரிகையிலே என்னைப்பற்றித்தான் வந்திருக்கிறது. என்னைப் பற்றித்தான் உறுப்பினர் குறிப்பிடுகிறார். சபையிலே தைரிய மாகப் பேரைச் சொல்லலாமே. நான் அந்தச் சட்ட மன்ற உறுப் பினரைக் கேட்கிறேன். எந்த அமைச்சரிடத்தில் எந்தத் தவறான நடவடிக்கையை எடுக்கச் சொல்லியிருக்கிறேன். எந்த அமைச்சரை நான் திசை திருப்பியிருக்கிறேன். என்ன சொல்லி திசை திருப்பியிருக்கிறேன் என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். ஏனென்றால், ஆற்காடு நவாப் என்று யாரும் இப்போது இல்லை. அவர்கள் எல்லாம் இறந்து போய்விட்டார்கள். எனவே, என்னைத் தான் அது குறிக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆற்காடு நவாப் இப்போதும் இருக்கிறார். இறந்து போனவர்கள் என்று தவறுதலாகக் கூறி விட்டால் வருத்தப்படுவார்கள். இப்போதும் ஒருவர் இருக்கிறார். பிரின்ஸ் ஆஃப் ஆர்க்காட் என்று பெயர், என்பதைக் கூற விரும்புகிறேன்.

**திரு. கோவை செயழின்:** இந்த மாமன்றத்தில் மற்ற அனைவரும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தபோது, நான் அந்த வார்த்தையைக் கூறியவுடன், தன்னைப்பற்றித்தான் குறிப்பிடு வதாகக் கூறுகிறார். அந்த வார்த்தைக்குத் தனி அர்த்தம் இருக் கின்றது. ஒரு வார்த்தையை நான் கூறுகிறேன் என்றால் அதற்குப் பல பொருள் இருக்கின்றன என்று அர்த்தம். அகராதி யிலேயே அப்படிப் பார்க்கலாம்.

நான் இந்த நேரத்திலே ஒரு விஷயம் நினைவூட்ட விரும்பு கிறேன். இந்த மன்றத்தில் முன்பு "கும்பகோணம் வேலை செய்யப்பட்டிருக்கிறது" என்று சொன்னபோது உறுப்பினர்கள் எல்லாம் எழுந்து, இப்படி ஊரைச் சொல்லாதீர்கள் என்றார்கள். அந்த வார்த்தை அகராதியிலே இருப்பதால்தான் சொன்னேன் என்று அவர்களுக்குப் பதில் கிடைத்தது. அது மாதிரி அகராதியில் உள்ள வார்த்தையைத்தான் நான் பயன்படுத்தினேன். நவாப் என்றால் நவாப் தர்பார் நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் என்று பொருள்படும். இல்லை, இல்லை, அது என்னைத்தான் குறிப்பிடுகிறது என்று அந்த உறுப்பினர் வீராசாமி கூறுவார்களே யானால் அப்படி எடுத்துக் கொள்வது அவருடைய விருப்பம். அதற்கு நான் தடை சொல்ல மாட்டேன்.



1974 டிசம்பர் 13]

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, எந்தக் காரணத் தினாலும் ஒருவருடைய ஊரைப் பற்றியும், பேரைப் பற்றியும் குறிப்பிட்டு, அவர்களுடைய உணர்ச்சியைப் புண்படுத்தாதிருக்கும் படி உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்) :** உறுப் பினர்கள் யாரும் பேசும்போது, உருவகப்படுத்தி, ஊரையோ, தொழிலையோ குறிப்பிடாதிருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** 'கும்பகோணம் என்பதற்கு அகராதியில் உள்ளதைத்தான் சொன்னேன்' என்று சொன்னார்கள் என்றுதான் நான் சொன்னேன். நண்பர் காசிராமனைப் போன்ற நல்லவரைத் தேர்ந்தெடுத்துள்ள அந்த ஊரைப்பற்றி நான் ஒன்றும் குறை சொல்லவில்லை. அவர் மனம் புண்படும்படியாக நான் நிச்சயம் எந்தமாதிரியான கருத்தையும் சொல்லமாட்டேன்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்குக் காரணம், இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பஞ்ச நிலையை, பட்டினி நிலையை ஆட்சிக் கொலுவிலே வீற்றிருக்கிறவர்களுக்கு எடுத்துக் கூறி, அதற்கு நிவாரணம் தேடத்தான். மக்கள் சார்பிலே இதை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வருகின்ற நேரத்தில், இன்று நான் உள்ளே வருகின்றபோது இங்கே இருக்கிற அலுவலர்கள், செக்ரெட்டேரியேட்டில் இருக்கிற என்.ஜி.ஓ.க்கள் எல்லோரும் கறுப்புச் சின்னம் அணிந்திருப்பதைப் பார்த்தேன். அப்போது நான் அவர்களை ஒன்று கேட்டேன். இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வருகிறேன். என்னுடைய தீர்மானத்தை ஆதரிக்கும் வகையிலே நீங்கள் இந்த 'பாட்ஜை' போட்டிருக்கிறீர்களா என்று கேட்டேன்.

இங்கே இருக்கிற அரசு ஊழியர்கள் வெளிப்படையாக எதையும் கேட்டால் ஆபத்திலே மாட்டிக் கொள்வார்கள். ஆகவே ஊமைப் போராட்டம் நடத்துகின்ற வகையிலே இந்தக் கறுப்புச் சின்த்தைப் போட்டிருக்கிறார்கள். நீங்கள் இந்தக் கறுப்புச் சின்னத்தை எதற்காக போட்டிருக்கிறீர்கள் என்று நான் கேட்டேன். நாங்கள் சம்பளத்தைப்பற்றிக் கூடக் கவலைப்பட வில்லை. மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்

களுக்கும் வழங்கும் சம்பள விகிதத்தில் வித்தியாசம் இருக்கிறது. டியர்னஸ் அலவன்ஸ் ( ) வழங்குவதில் இப்போது 95 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு 156 ரூபாய் கொடுக்கப் போகிறார்கள். ஆகவே, எங்களுக்கும் அந்த 156 ரூபாய் வேண்டும். அப்படிக் கொடுத்தால்கூட இப்போ திருக்கும் நிலைமையில் போதாது. நாங்கள் நல்ல முறையில் வாழ முடியவில்லை; எங்கள் குடும்பத்தை நடத்த முடியவில்லை; அரிசி விலை படி 10 ரூபாய் விற்கிறது; பருப்பு விலை ஏறிவிட்டது; எண்ணெய் விலை ஏறிவிட்டது; எல்லாப் பொருட்களின் விலையும் ஏறிவிட்டது; அதனால் வாழ்க்கை நடத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இந்த அலுவலகத்திலே நாங்கள் பல ஆண்டு களாகப் பணியாற்றி வந்தாலும் எங்களுக்கு நியாயமான பஞ்சப் படி உயர்வு கிடைக்கவில்லை; நியாயமான ப்ரமோஷன் வருகின்ற போது ஆண்டுக்காண்டு கிடைக்கும் ஊதிய உயர்வு கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் ஃபைனான்ஸ் டிப்பார்ட்மெண்டில் கொறி போடு கிறார்கள், பப்ளிக் சர்வீஸ் டிப்பார்ட்மெண்டில் கொறி போடுகி றார்கள். அதனால் ப்ரமோஷன் வந்த பின்னால் கூட பணம் கிடைக்கவில்லை. ஃபைனான்ஸ் டிப்பார்ட்மெண்டில் கொறி போடு கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அரசாங்கத்திடம் பணம் இல்லை.

நான் அமைச்சர்களைக் கேட்கிறேன். நீங்கள் போட்டிருக்கிற பல திட்டங்களில், சில திட்டங்களை நிறுத்தி வைத்துவிட்டு, அந்தப் பணத்தைக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுடைய வயிற்றை நிரப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். தற்காலிகமாக சில திட்டங்களை நிறுத்தி வைத்துவிட்டு, உடனடி யாகச் சம்பள உயர்வு, பஞ்சப் படி உயர்வு, ஆண்டுக்காண்டு உயர்த்துகின்ற ஊதிய உயர்வு போன்றவைகளை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அதை நான் இங்கே சொல்கிறேன்.

ஆக, ஊமைப் போராட்டம் நடத்துவது என்.ஜி.ஓ.-க்கள் மட்டு மல்ல; அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள், பாமர மக்கள் எல்லாம் அத்தகைய நிலையிலேதான் இருக்கிறார்கள். ஆட்சியிலே இருக்கின்றவர்கள் இந்தக் குறைகளை எல்லாம், இந்தத் தவறுகளை எல்லாம் உணர்ந்து தீர்த்து, உடனடியாக நிவாரணம் செய்திருந் தால் இந்தத் தீர்மானம் இன்றைக்கு இங்கே வந்திருக்காது.



இப்போது கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால், கிராமத் திலே இருக்கின்ற நிலைமைகளை நேற்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல முறையிலே எடுத்துச் சொன்னார்கள்.

சென்னையிலே 1,000 ரூபாய், 1,500 ரூபாய் சம்பளம் வாங்குகிற வர்கள்கூட படி அரிசி 10 ரூபாய் விற்பதால், பருப்பு விலை ஏறி விட்டதால், எண்ணெய் விலை ஏறிவிட்டதால் மூன்று வேளை சாப்பிட முடியவில்லை எனக்குத் தெரியும். இங்கே இருக்கிற பத்திரிகை நிருபர்களில் பலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை உணவுதான் சாப்பிடுகிறோம் என்று அவர்கள் சொல்கி றார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒரு வேளைதான் உணவு சாப்பிட முடிகிறது என்றால் கிராமப்புறங்களிலே இருக்கிற தினம் 2 ரூபாய், 3 ரூபாய் கூலி வாங்குகிறவர்களுடைய நிலைமை எப்படி இருக்கும்? அவர்கள் எந்த அளவுக்கு வாழ்க்கை நடத்த முடியும் என்று உங்களைக் கேட்கிறேன். இதையெல்லாம் கேட்பதற்காகத் தான் நேற்று ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்த போது, அந்தத் தீர்மானத்தை ஒட்டி முதலமைச்சரவர்கள் சில தகவல்களைச் சொன்னார்கள். உடனடி நிவாரணம் அளிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அதைச் செய்யாமல் ஆறு மாதங் களுக்குப் பின்னால் ஒரு வருடத்திற்குப் பின்னால் நடக்க இருப்ப வைகளைப்பற்றிப் பேசினார்கள்.

என்னுடைய கவலை எல்லாம் இன்றைக்கு அரிசி விலை மிக உயர்ந்துவிட்டது; பருப்பு விலை ஏறிவிட்டது, எண்ணெய் விலை ஏறிவிட்டது; விலைவாசி பெருமளவுக்கு உயர்ந்துவிட்டது. கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய நிலைமை உங்களுக்குத் தெரியாது. விவசாயிகள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கி றார்கள். காரணம் தண்ணீர் இல்லை. என்னுடைய தொகுதியின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. நான் சென்ற ஆண்டு சட்டமன்ற விவாதத்தின்போதே சொன்னேன். அப்போது பரம்பிக்குளம்-ஆளியாறு தண்ணீர் வரும் என்று பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்று வரையில் தண்ணீர் வரவில்லை. அதற்குக் காரணம் வாய்க்கால் உடைந்து விட்டது என்று சொல்கிறார்கள். வேறு பல காரணங்களையும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. கோவை செழியன்] [1974 டிசம்பர் 13

ஏற்கெனவே கையில் இருந்த தாலி முதல் பல பொருட்களை விற்று நெல் விதைத்தார்கள், கடலை விதைத்தார்கள், கம்பு விதைத்தார்கள், சோளம் விதைத்தார்கள். அத்தனையும் இன்றைக்கு காய்ந்துபோய் விட்டது. அதனால் மக்களுக்கும் உணவு இல்லை; ஆடு மாடுகளுக்கும் உணவு இல்லை. எங்கள் பக்கத்தில் பனை மரத்து ஓலையை வெட்டி, மாடுகளுக்குப் போடுகிறார்கள்.

காங்கேயம் தொகுதியில் பெரிய மாட்டுச் சந்தை இருக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கான விவசாயிகள் உணவு கிடைக்காத காரணத்தால் ஆடு மாடுகளை ஓட்டிவந்து விற்கிறார்கள். குறைந்த விலைக்கு கொடுத்தால்கூட விலைக்கு வாங்க ஆள் இல்லை என்ற காரணத்தால் அந்த ஆடு மாடுகளையே அடித்துத் தின்று கொண்டிருக்கிறார்கள். இது நான் மிகைப்படுத்திச் சொல்லும் செய்தி அல்ல. தயவுசெய்து அமைச்சர்கள் வேண்டுமானால் என் தொகுதிக்கு வாருங்கள், நான் அழைத்துச் சென்று பஞ்சத்தைக் காட்டுகிறேன்.

குடிக்கத் தண்ணீர் இல்லை. உண்ண உணவும் இல்லை. அதனால் கற்றாழையைத் தின்று கொண்டிருக்கிறார்கள். கற்றாழையை வெட்டி வந்து, தண்ணீரில் கழுவி வேக வைத்து சாப்பிடுகிறார்கள். பண்ணைக் கீரை என்று சொல்லக்கூடிய ஒருவகை கீரையையும் பறித்து வந்து சாப்பிடுகிறார்கள். அதை எடுத்து வந்து, களி செய்து சாப்பிடுகிறார்கள். அதனால் காலரா நோய் வந்து பலர் செத்திருக்கிறார்கள்.

இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால் வந்த ஒரு செய்தியை அனைவரும் பார்த்திருப்பார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டினியால் 20 பேர்கள் செத்துவிட்டார்கள் என்ற செய்தியை நான் பார்த்தேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்பட்ட பிறகும், இந்த ஆட்சியிலே இருப்பவர்கள் அதற்கான பரிகாரங்களைக் கண்டிருக்கிறார்களா என்றால் இல்லை. அதைப்பற்றிக் கவலைப்படுவதாகவேத் தெரியவில்லை. ஏதோ அப்படிச் செய்யப் போகிறோம். இப்படிச் செய்யப் போகிறோம் என்று சில காரியங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, நடைமுறையில் என்னென்ன செய்ய வேண்டுமென்று யோசிக்கவே இல்லை.



1974 டிசம்பர் 13] [திரு. கோவை செழியன்]

ஊருக்கு ஊர் மக்கள் உணவில்லாமல் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றால் ஊருக்கு ஊர் உடனடியாக கஞ்சித் தொட்டி திறக்க வேண்டும். அடுத்தபடியாக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பஞ்ச நிவாரண வேலை செய்யவேண்டும்.

இரண்டு, மூன்று ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் கூட விவசாய வேலை இல்லாமல் வெளியூர் போகிறார்கள். வெளியூர் போனால் மட்டும் வேலை கிடைத்துவிடுமா? அங்கும் இதே நிலை தானே? பிறகு வேலைக்கு எங்கே போவான்? வெளியூருக்குப் போயாவது வேலை செய்து, பஞ்சத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று அலைந்து திரிகிறான். விவசாய வேலை இல்லாததால் அவர்களுக்கெல்லாம் மாற்று வேலை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு நிவாரணம் செய்ய வேண்டுமென்றால் அது ஒன்றுதான் வழி. வேலை செய்ய ஆள் இருப்பதால், இந்த நேரத்தில் ரோடு போடுதல், குளம் வெட்டுதல் போன்ற பணிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நான் முன்னால் இந்த மன்றத்தில் தெரிவித்ததைப்போல ஊருக்கு ஊர் 'பான்ட்ஸ் ஸ்கீம்' போட்டு, பெய்கின்ற மழை நீர் துளியும் வெளியே போகாமல் நிறுத்தியிருந்தால் இன்றைக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா? இனிமேலாவது அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இந்தச் சட்டமன்றத்தில் நான் சொன்னேன். ஊருக்கெல்லாம் வெளிச்சம் போடுவதை இரண்டாவதாக வைத்துக் கொள்ளுங்கள்; முதலில் விவசாயிகளுக்கு மின்சாரம் தாருங்கள் என்று சொன்னபோது அதை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நேற்றைக்கு அறிவிக்கிறார்கள் நாங்கள் விவசாயத்திற்கு கரண்டு தருகிறோம் என்று. இப்போது கரண்டு தருகிறோம் என்று சொன்னால், எப்போது மின்சாரக் கம்பங்கள் போட்டு, எப்போது கம்பி போட்டு, வேலை தொடங்குவார்கள் என்று தெரியாது. எப்படியும் இரண்டாண்டு, மூன்றாண்டு காலம் ஆகிவிடும். அதுவரை என்ன நிவாரணம் செய்யப் போகிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

எலெக்ட்ரிசிட்டி போர்ட்டை எடுத்துக் கொண்டால், மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு எலெக்ட்ரிசிட்டி போர்டில் பண நெருக்கடி

இருக்கிறது. வேலைகளைத் தொடங்குவதற்கு பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ 46 கோடிக்கு மேல் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதை ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்றைக்கு விளக்கமாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஏனோ மாறுபட்டிருக்கிறார்கள். இடையிலே அவருக்கு என்ன கோளாறு வந்ததோ தெரியவில்லை. ஆனால் அன்றைக்கு அவர் சொன்ன கருத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

நிதி வசதி இல்லாதபோது மின்சாரம் தருகிறேன் என்று சொன்னால் எப்படி? நேற்றையதினம் வரையிலும் இரண்டாயிரம் ரூபாய் தாருங்கள், மின்சாரம் தருகிறேன் என்று சொன்னார்கள். நான் என் வட்டாரத்திலுள்ள பல மோட்டார்களுக்கு இன்னமும் கனெக்ஷன் கொடுக்காமல் இருக்கிறிர்களே என்று அதிகாரிகளிடம் சென்று பல முறை கேட்டேன். மெட்டீரியல்ஸ் இல்லை யென்று சொன்னார்கள். என் மெட்டீரியல்ஸ் வாங்கக் கூடாது என்று கேட்டதற்குப் பணம் இல்லை யென்று சொன்னார்கள். இன்றைக்கு மட்டும் எப்படி உடனடியாகக் கனெக்ஷன் கொடுக்க முடியும்? (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி எழுந்திருந்தார்.) சொல்லுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகிற நண்பர் அவர்கள் ஊறுகாய் மாதிரி என்னைத் தொட்டுத் தொட்டுப் பேசுகிறார்கள். நான் அவருக்குச் சொல்வது எல்லாம் அவர்கள் என்னை சில சமயத்தில் ஒரு மாதிரியாகப் பார்க்கிறார்கள்—வேறு சில சமயத்தில் வேறு மாதிரியாகப் பார்க்கிறார்களே தவிர என்னிடத்தில் ஒன்றுமில்லை. தயவு செய்து என்னை இழுத்து வைத்துப் பேச வேண்டியதில்லை. அவருடைய கருத்துக்கு வாதங்கள் இருந்தால் எடுத்துவைத்துப் பேசலாம்.

**திரு. கோவை செழியன் :** நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவரது கட்சிக்காரர்களுக்குத்தான் ஊறுகாயாக மாறிவிட்டார்கள். நான் அவர் உணவாக இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறேன். எப்படியோ தெரிந்தோ, தெரியாமலோ பல உண்மைகளை அவர்கள் பேசுகிறார்கள். இன்று காலையில் நடந்த விவாதத்திற்கே அவர்தான் கதாநாயகன். எஸ்டிமேட் கமிட்டி சேர்மனாக இருந்து பல நல்ல கருத்துக்களை அவை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்று காலையில்தான் அவரைப்பற்றி ஒரு நோட்டீஸ் வந்தது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் என்.ஸி. மோஷனைப் பற்றிப் பேசுங்கள். இன்று மோட்டார்களை மின்சார கனெக்ஷன் கொடுப்பதுபற்றிச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள்.

**திரு. கோவை செழியன் :** எனக்கு மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் அன்பு உண்டு. பற்று உண்டு. அந்தப் பற்றின் காரணமாகத்தான் சொல்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** உங்கள் கட்சிக்கு வரவில்லை என்று கோபமா?

**திரு. கோவை செழியன் :** இந்த மாதிரி ஆள் எங்களுக்குத் தேவையில்லை. அங்கே இருந்து கொண்டே எங்களுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யுங்கள் என்றுதான் சொல்கிறேன். இன்று காலையில் அவரைப்பற்றி ஒரு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் என்.ஸி. மோஷனுக்கு வாருங்கள். இந்த மன்றத்திலுள்ள உறுப்பினரைப்பற்றி விமர்சிக்க இது நேரம் இல்லை.

**திரு. கோவை செழியன் :** அவர் சொன்னதால் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அவரைப்பற்றிச் சொன்னதனால் அவர் தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டியதாயிற்று.

**திரு. கோவை செழியன் :** நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. உங்கள் அனுமதியின்றி நோட்டீசைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆயினும் முதலமைச்சர் அவர்கள் ஸி.ஐ.டி. மூலமாக அந்த நோட்டீஸ் அடித்தவர்களைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நோட்டீஸ் போட்டவர்கள் தைரியமாக தங்கள் பெயரைப் போட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். அச்சகத்தின் பெயரைக்கூட போடுவதற்கு அவர்களுக்குத் தைரியம் இல்லை. அது யாரோ கோழை போட்ட நோட்டீஸ் என்று கருதுகிறேன்.

**திரு. கோவை செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அந்தக் கோழைகள்—அந்தப் பேடிகள் அந்த அற்பர்கள் யார் என்பதை வி.ஐ.டி.க்கள் மூலம் முதலமைச்சர் அவர்கள் விசாரித்தறிந்தால், அவர்களை நாங்களும் சேர்ந்து கண்டிக்கத் தயாராய் இருக்கிறோம். (திரு. ஆலடி அருணா நின்று கொண்டிருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆலடி அருணா பேசுபவர் பக்கத்தில் நிற்கக் கூடாது. தம் இடத்தில் உட்கார வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** இன்றையதினம் கிராமப்புறங்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் ஒரு தீர்மானத்தைப் படித்து விட்டு நிம்மதியோடு உட்கார்ந்துவிட்டார்கள். அதன் விளைவு என்ன? டீசல் என்ஜின் தருகிறேன் என்று சொல்கிறார்கள். நான் சென்ற முறையே சொன்னேன். இதை வைத்து தனிப்பட்ட முதலாளிகள் தான் கொள்ளை அடிக்கிறார்கள். உண்மையில் இதனால் விவசாயிகளுக்கு எவ்வித நன்மையும் இல்லை. தரும் ஆயிரம் ரூபாய் யாருக்குப் போகின்றது.

தண்ணீர்ப் பஞ்சம் வருவதற்குக் காரணம் நில்வள வங்கிகள் புதிய கிணறுகளை வெட்டக் கூடாது என்று தடுக்கிறார்கள். இந்த முறையே தவறு என்று மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் திருநெல்வேலியில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை முழு மனதோடு பாராட்டுகிறேன். அமெரிக்காவில் இருந்து வந்தவன் அங்குள்ள நிலைமையை யொட்டி சப் சாயில் வாட்டர் போய் விடுகிறது என்று எழுதி வைத்துவிட்டுப் போய்விடுகிறான். உடனே உலக பாங்கி அதை ஒத்துக்கொண்டு பணம் (லோன்) மறுத்து வருகிறார்கள். புனாவிலிருந்து ஒரு டீம் வந்தது. அவர்கள் கிரவுண்டு வாட்டரைப்பற்றி ஆராய்ந்து ஒரு ரிப்போர்ட் அளித்திருக்கிறார்கள். அது பப்ளிஷ் ஆகியிருக்கிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் ஹார்டு எரியா, டெல்டா ஏரியா என்று இரண்டு வகை நிலம்தான் இருக்கிறது. தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்களைத் தவிர மற்ற இடங்கள் நம் மாநிலத்தில் ஹார்டு ராக் எரியா, சப் சாயில் வாட்டர் போய்விடுகிறது என்கிற தத்துவம் இதற்கு ஒத்து வராது என்று விவசாய அமைச்சர்



அவர்கள் சொல்லியுள்ள கருத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். கிணறுகளில் அடி வெட்டுகள் வெட்ட வேண்டும். அதற்குப் பணம் தர வேண்டும். சப் சாயில் வாட்டரை அதிகப் படுத்த—அங்கங்கே பாண்டு ஸ்கீமை இம்ப்ளிமெண்டு செய்து கிணறுகளை எல்லாம் ரிசார்ஜ் செய்ய அதிகப்படியான நிதி ஒதுக்க வேண்டும். விவசாய அமைச்சர் சொல்லியுள்ள கருத்துக்கு அமைச்சரவையில் உள்ளவர்களும் செவி சாய்க்க வேண்டும். எதிர்க் கட்சியில் இருப்பதால் எப்போதும் எதிர்த்துக் கொண்டிருப்பேன் என்று எண்ண வேண்டாம். அவர்கள் சொன்ன நல்ல திட்டத்தை ஆதரிப்போம். என்றைக்கும் அண்ணா தி.மு.க. நல்ல திட்டங்களை ஏற்றுக்கொள்ளும் என்று நான் இப்போதும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பொதுவாக கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கிற பஞ்ச நிலையை, வறட்சி நிலையைப் போக்க உடனடியாக எந்த நிவாரண திட்டங்களையும் ஏற்படுத்தவில்லை. டாக்டர் முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி தம் உரையில் ஒன்றும் சொல்லவில்லை. அதுதான் எனது குற்றச்சாட்டு.

கிணற்று மோட்டார்களுக்கு கனெக்ஷன் கொடுக்கப்படும் என்று அறிவித்தவுடனே நாட்டில் செழிப்பு வந்துவிடுமா? என்றைக்கு விவசாயம் செய்வது? நெல் போட்டு எப்போது பயிரிடுவது? கரண்டு நிலைமை என்ன? ஏதோ நேற்று தப்பித்துக் கொள்வதற்காக முதல்வர் சொல்லிவிட்டார்கள். நாட்டில் இருக்கிற ஆயிரக்கணக்கான விவசாயிகளும், ஏழைகளும் உங்களை எதிர்பார்த்தார்கள். உடனடியாக ஏதாவது செய்வார்கள் என்று எதிர்பார்த்தார்கள். உடனடியாக எந்தத் திட்டமும் தரவில்லை. ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஐந்து கோடி எங்கே போதும்? குறைந்தது 30 கோடியாவது தேவைப்படுகிறது. இந்த 30 கோடியை எப்படித் தருவது என்பதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்து வைத்துப் பேசுங்கள். ஐந்து கோடி ஒரு மாவட்டத்திற்கே போதாது.

இன்னமும் அவர்கள் பயத்தைத்தான் காட்டியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பஞ்சம் இன்னும் அதிகமாகப் போகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன நிவாரணம்?

காவிரி விஷயத்தைப்பற்றிப் பேசுகின்றபோது சில 'கருத்துக்
களை நான் சொன்னதற்காக முதலமைச்சர் அவர்கள். என்னிடம்
கோபித்துக் கொண்டார்கள். காவிரித் தண்ணீர் நமக்கு வர
வேண்டும். அதற்காக உங்களோடு சேர்ந்து எந்தப் போராட்டத்
தையும் நடத்த நாங்கள் தயாராய் இருக்கிறோம். அதற்கு யாரும்
குறுக்கே நிற்கவில்லை. ஆனால் எங்கள் கேள்வி எல்லாம் இதுபற்றி
எத்தனை முறை நீங்கள் கர்னாடக முதலமைச்சரோடு கலந்து
பேசினீர்கள்? அவரை ஏன் சந்தித்திருக்கக் கூடாது? நேரடியாகச்
சந்தித்துப் பேசியிருந்தால்—சட்ட ஒருபுறம் இருந்தாலும்—
கோர்ட்டு ஒருபுறம் இருந்தாலும்—மனிதாபிமானத்தோடு அவ
ரிடம் இருந்து நீரைப் பெற்றிருக்க முடியும். எனக்கு ஒரு
நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களைப்பற்றி கர்னாடக முதல
மைச்சர் ஹனுமந்தையா ஒரு முறை பேசினார்கள். 'நான்
மைசூர் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தேன். ராஜாஜி தமி
ழகத்தின் முதலமைச்சராக இருந்தார். அப்போதும் காவிரிப்
பிரச்சினை எழுந்தது. உடனே அவர் என்னை அழைத்துப் பேசி
னார்கள். சட்டம் ஒருபுறம் இருக்கட்டும்—தஞ்சை மாவட்டத்தில்
பயிர்கள் வாடுகின்றன என்றார்—சட்டத்தைத் தூக்கி எறிந்து
விட்டு உடனே தண்ணீரைத் திறந்துவிட உத்தரவிட்டேன்
என்றார்கள். அந்த முன் உதாரணத்தை இவர்கள் ஏன் பின்பற்றி
இருக்கக் கூடாது என்று கேட்கிறேன். அண்டை மாநிலத்தவர்
களோடு ஒரு சுமுகமான உறவை வைத்துக் கொள்ள வேண்டும்
என்று இவர்கள் முயற்சி செய்யவில்லை. அதற்கு மாறாக வசைமாறி
யாகப் பொழிந்தார்கள். கோளத்துக்காரர்களைப்பற்றி கண்டபடி
பேசினார்கள். கர்னாடக மக்களைப்பற்றிப் பேசினார்கள். இப்படிப்
பேசினால் அண்டை மாநிலத்தவர்களுக்கு நம்மிடம் அனுதாபம்
வருமா? இந்த அரசு செய்த தவறான பேச்சுக்கள், செயல்களி
னால் தான் தமிழகத்திற்கு இன்றுள்ள இந்த நிலைமை ஏற்பட்டிருக்
கிறது.

(பிற்பகல் 12.30)

நேற்று, இன்னொரு காரணத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு,
என்னுடைய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினுடைய முதல்
கருவே, தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது, அரிசியி





னுடைய விலை ஏறிவிட்டது, இன்றைய நிலவரப்படி படி அரிசி
ரூ. 10, ஒரு படி சாதாரண அரிசி ரூ. 9 என்பதுதான். ஆக, இந்த
அளவுக்கு அரிசி விலை ஏறி விற்கிறதே என்ன காரணம்?

சென்ற முறை, முதலமைச்சரவர்கள் பெருமையோடு சொன்
னார்கள், கோவை மாவட்டத்திலே பொதுக் கூட்டத்திலே சொன்
னார்கள், எங்களுடைய ஆட்சியினுடைய பெருமையைப் பாருங்கள்,
எங்கள் சாதனையாலேதான் 50 இலட்சம் டன் உற்பத்தியைச் செய்
தோம், அதனாலே அண்ட மாநிலங்களுக்குத் தருகிறோம், குஜராத்
திற்குத் தருகிறோம், கேரளாவிற்குத் தருகிறோம்,
கர்நாடகத்திற்குத் தருகிறோம் என்றெல்லாம் பெருமை
பேசினார்கள். ஐம்பது லட்சம் டன் இருக்கும்போதே, வெளி
மாநிலங்களுக்கு அனுப்பினீர்களே, இன்றைக்கு உங்கள் கூற்றுப்
படி 55 இலட்சம் டன் உற்பத்தியாகிறதே, இப்பொழுது
பற்றாக்குறை எதனால் ஏற்பட்டிருக்கிறது, இதை நீங்கள் சொல்ல
வேண்டும். இந்தக் கேள்வியை நான் சென்ற முறையே
கேட்டேன். இதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், எங்கேயோ
சுற்றி வளைத்துச் சொல்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.
உண்மையான காரணம் என்ன? ஐம்பத்தைந்து இலட்சம் டன்
அரிசி உற்பத்தியாகியிருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள்,
பெரியவர்களுக்கு 400 கிராம், சிறுவர்களுக்கு 200 கிராம் என்று
கணக்குப் போட்டால், 57 இலட்சம் டன் தேவைப்படுகிறது,
அதற்கு நான் எங்கே போவேன் என்று முதல்வர் சொல்கிறார்கள்.
இப்படி 57 இலட்சம், 55 இலட்சம் என்று சொல்லி தப்பித்துக்
கொள்ளப் பார்க்கிறார்களே தவிர, உண்மை நிலைமை என்ன?
அரிசிப் பற்றாக் குறை ஏற்பட்டதற்கு என்ன காரணம்? தயவு
செய்து அவர்கள் சொல்ல வேண்டும்.

நான் சென்ற முறை கேட்டேன். எனக்கு, இன்றைக்குப் பதில்
கிடைத்திருக்கிறது. எனது அருமை நண்பர் வி. கிருஷ்ணமூர்த்தி
அவர்களுடைய எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டிலே தெளிவாக
இருக்கிறது. நான் அப்பொழுதே சொன்னேன், எஸ்டிமேட்ஸ்
கமிட்டி ரிப்போர்ட்டைத் தாருங்கள் என்று சொன்னேன். முதல
மைச்சரவர்கள் சொன்னார்கள், அதிலே என்ன இருக்கிறது,
ஒன்றுமே இல்லை, ஏன் அதைக் கேட்கிறீர்கள் என்று சொன்னார்கள்.
ஆனால் அதிலே இருக்கிறது. தமிழ் நாட்டிலே இருக்கிற அரிசி
யைத் தவறான பேரிலே, தவறான பெர்மிட்டுகளைப் போட்டு,

தவறான ஆட்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. "இன்ஃப்ளுயன்ஸ்
ஷியல் பிஸினஸ்மென்" என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறார்
நண்பர் கிருஷ்ணமூர்த்தி. அந்த 'இன்ஃப்ளுயன்ஸ்ஷியல் பிஸினஸ்
மென்" யார்? அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டிலேயிருந்து
அரிசியை வெளிமாநிலங்களுக்குக் கொண்டு போனார்கள். அதைத்
தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னமும் சொல்லியிருக்கி
றார்கள், artificial scarcity was created in and around Madras City
என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். Artificial scarcity
உங்களுடைய நிர்வாகத் திறமையின்மையாலே, தவறான நிர்வாகத்
தாலேதான் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் அந்த ரிப்போர்ட்டிலே
சொல்கிற 700 வாகன் லோடுகள் தமிழ்நாட்டினுடைய பல பகுதி
களிலிருந்து கேரளாவிற்கும், வங்காளத்திற்கும், மகாராஷ்டிரா
விற்கும் சென்று இருக்கிறது என்று எழுதப்பட்டிருக்கிறது என்று
சொன்னார்கள். அதைத்தான் நான் சென்ற முறை சொன்னேன்.
பற்றாக்குறை எதனால் ஏற்பட்டது? 55 இலட்சம் டன் மட்டு
மல்ல, 18 இலட்சம் டன் புஞ்சை தானியம் விளைந்திருக்கிறது
என்று உங்கள் ரிப்போர்ட்டிலே சொல்கிறீர்கள். இங்கே இருக்கிற
முதலமைச்சர் இதற்கு எல்லாம் பதில் தரவேண்டும். யூரியாவி
னுடைய விலை ரூ. 52 என்று இருந்தபொழுது, எந்தக் குறுவை
யானாலும், தமிழ்நாட்டினுடைய பல பகுதிகளிலே இருக்கிற நிலம்
விளைந்து அந்த விளைச்சல் ஏறிற்று. கோட்டையிலேயிருந்து திடீ
ரென்று ஒரு உத்தரவு வருகிறது, தஞ்சாவூரிலேயிருக்கிற அரிசி
எல்லாம் வெளியே போகலாம் என்று அனுமதி தந்தார்கள். மூன்று
நாட்களுக்குப் பின்னாலே அதை நிறுத்தி வைத்தார்கள். இந்த
இடைக்காலத்திலே ஏறத்தாழ 9 இலட்சம் டன்கள் தமிழ்நாட்டிலே
யிருந்து வெளியே போய்விட்டது என்ற குற்றச்சாட்டை நான்
சொல்கிறேன். அத்தகைய குற்றவாளிகள் யார்? கோர்ட்டிலே
கேஸ் போட்டிருக்கிறேன் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளா
தீர்கள். அது அங்கே இருக்கட்டும், நாம் கோர்ட்டைப் பற்றி
பின்னாலே பேசிக்கொள்வோம். அத்தகைய சண்டாளர்களை,
துரோகிகளைத் தெருவிலே அழைத்து வந்து நிறுத்தியிருக்க
வேண்டும். ஏன் இவ்வளவு நாட்கள் விட்டு வைத்தார்கள்? தமிழ்
நாட்டு மக்களுடைய வயிற்றை அடித்தவர்களை, வயிற்றிலே
மண்ணைப் போடுகின்ற அந்தச் சண்டாளர்களை விட்டு வைத்திருக்க
லாமா? எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் வராமல் இருந்திருந்
தால் அந்த விவகாரம், உலகத்திற்குத் தெரியாமலே போயிருக்கும்.





நல்ல வேளை, கிருஷ்ணமூர்த்தி இருந்ததால் அதுவாவது வந்தது.
அவருக்குப் பதில் வேறு யாராவது இருந்திருந்தால், நமக்குத்
தெரியாமலே போயிருக்கும்.

சென்ற முறை சொன்ன கணக்கு என்ன தெரியுமா? ஐம்பத்
தைந்து இலட்சம் டன் உற்பத்தியாகியிருக்கிறது. தமிழ்நாட்டுக்கு
தேவை 45 இலட்சம் டன் என்பது. ஆனால், இன்றைக்குப் புதிய
கணக்குப் போட்டு, தமிழ்நாட்டுக்கு 57 இலட்சம் டன் தேவை
என்று சொல்கிறார்கள். ஆக, பிரச்னையிலிருந்து நழுவத்தான்
இது காரணமாக இருக்கிறதே தவிர, உண்மை நிலைமை என்ன
என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்றுதான் நான் இதனைக்
கேட்க விரும்புகிறேன்.

இன்னமும் சொன்னார்கள், அரிசி பேரத்தில் ரூ. 1½ கோடிக்கு
மேலாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று. ரூ. 1½ கோடி
நஷ்டத்தை இதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்சால்
வன்ஸி, பணமில்லாதவன், சொத்தில்லாதவன், கடன்காரன்
இவர்களையெல்லாம் நம்பி, ஏராளமான நெல்லைத் தந்திருக்கி
றார்கள். அதிலே அவர் சொல்கிறார், வெகுத் தெளிவாகச்
சொல்கிறார், ஒருவன் சொல்கிறான் 3,000 மூட்டை நெல்லை தண்ணீர்
அடித்துக் கொண்டு போகிறது என்று. பிப்ரவரி 17-ம் தேதி
செத்துப் போனவன், மார்ச் 30-ம் தேதி அரசாங்கத்திற்கு
ரிஜிஸ்தர் லெட்டர் எழுதியிருக்கிறான். தந்தி கொடுக்கிறான். அந்தக்
கமிட்டி சேர்மென் அறிக்கை கொடுக்கிறார். How a deadman
could send a registeredletter ? செத்துப் போனவன் எப்படி
இதைச் செய்ய முடியும்? செத்துப் போனவன் ஓட்டுப்
போடுவதைப் பார்த்திருக்கிறோம், செத்துப் போனவர்
எப்படி ஐயா, ரிஜிஸ்டர்ட லெட்டர் போட்டிருக்கிறார்?
நான் கேட்கவில்லை, குழுத் தலைவர் கேட்கிறார். இதற்கெல்லாம்
பதில் சொல்லவேண்டும். இவை எல்லாம் எங்கே போயிற்று?
அதையும் அவர்களே சொல்கிறார்கள். கேரளாவுக்குப் போயிற்று
என்று. இந்தக் குற்றச்சாட்டுக்கு மூலகர்த்தாக்கள் யார்? தனிப்
பட்ட அமைச்சரவை நான் சொல்லமாட்டேன். இந்த மந்திரி சபை
இதற்கு மூலகாரணம். இன்னமும் சொல்கிறேன், இந்த மந்திரி
சபைக்குத் தலைமை வகிக்கிற கலைஞர் கருணாநிதி அவர்களைக்
காரணமாகச் சொல்கிறேன். ஆக, நீங்களாகப் பதவியிலிருந்து
விலகுங்கள்.

*[திரு. கோவை செழியன்]* *[1974 டிசம்பர் 13*

இன்றக்கு இரண்டு மூன்று நாளைக்கு முன்னாலே, மதுரையிலே பொதுக் குழுவிலே நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் "ஏறத்தாழ ரூ. 3½ கோடிக்கு மேல் ஹல்லிங் ஏஜண்டுகளிடமிருந்து (Due) பாக்கி வாங்க முடியவில்லை. ஏன் வாங்க முடியவில்லையென்றால், பல பெரிய சக்திகள் வந்து என்னுடைய கழுத்தைப் பிடிக்கின்றன என்று சொன்னார்கள். இப்போது இல்லையென்று சொல்வார், நெஞ்சிலே கை வைத்து, அண்ணாவின் மீது ஆணை வைத்து சொல்லுங்கள். யார் அந்த இன்ஃப்ளுயன்ஷியல்மென்? செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள்? அவர் கழுத்திலே கையை வைக்கின்றவர்கள் யார்? சொல்லுங்கள். முதலமைச்சரவர்கள் அவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தியிருக்க வேண்டாமா? அவர்கள் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தாலும் சரி, அவர்களையெல்லாம் கொண்டு வந்து தண்டித்திருக்க வேண்டாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மதுரையிலே நான் ஏதோ பேசியதாகச் சொல்கிறார்.

**திரு. கோவை செழியன்:** நீங்கள் இல்லை. உணவு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் ஒன்றும் அது மாதிரிப் பேசவே இல்லையே.

**திரு. கோவை. செழியன்:** உங்களுடைய பொதுக் குழுவிலே நடந்த விவகாரத்தை நான் சொல்கிறேன். நீங்கள், இல்லையென்றால், நான் ஆதாரத்திற்கு ஆளைக் கொண்டு வர முடியாது. அண்ணா பக்கத்திலே இருக்கிறார், பார்த்துப் பேசுங்கள்.

அது மட்டுமல்ல, அத்தகையவர்களை, விஜிலன்ஸ், போலீஸ் டிபார்ட்மென்ட்டிலே சொல்லி, அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

நான் சொன்னேன், இந்த மாதம் முதல் வாரத்திலே "25,000 மூட்டை நிலக்கடலை ஒரு வியாபாரியாலே கடத்தப்பட்டது. கடத்தப்பட்டபோது முதலமைச்சரவர்களுக்கு இது தெரியாது. ஆனால், முதலமைச்சருடைய ரூமிலே இருந்து கொண்டு ஒருவர் ஃபோன் செய்து, இராணிப்பேட்டையிலே இருக்கிற ஆர்.டி.ஓ.-வுக்குச் சொல்லி, அதை விட்டுவிட வேண்டுமென்று சொல்கிறார்.



*1974 டிசம்பர் 13]*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முதலமைச்சரிடமிருந்து யார் சொன்னார்கள்? எப்போது சொன்னார்கள்? இப்போதாவது அறிவிக்க வேண்டுகிறேன்.

**திரு. கோவை செழியன்:** இப்படி தப்புச் செய்கிறவர்களுக்கு வக்காலத்து வாங்கி வாங்கித்தான் உங்களுக்குக் கெட்டபெயர் வருகிறது. திரு. வீராசாமி அவர்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் யாருக்கும் வக்காலத்து வாங்கவில்லை யார் சொன்னார்கள் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கிறேன் என்றுதான் சொல்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** அவர் பேசும்போது 25,000 மூடை என்று சொன்னார் . . .

**திரு. கோவை செழியன்:** 2,500 மூடை . . .

**திரு. நா. வீராசாமி:** 2,500 என்று இப்போது சொல்கிறார், முதலில் 25,000 என்று சொன்னார். நான் ஆர்.டி.ஓ.-வுக்கோ வேறு யாருக்கோ ஃபோன் செய்யவில்லை. வேண்டுமானால் விசாரணை செய்யுங்கள். அவர் ஏதேதோ கற்பனை செய்து கொண்டு பேசுகிறார். என்னைப் பொறுத்தவரையில் நான் எந்த ஆர்.டி.ஓ.-க்கும் விட்டு விடுங்கள் என்று சொல்லவில்லை, யாரிடமும் சொல்லவில்லை. வேண்டுமானால் விசாரணை செய்யுங்கள். என்மீது தவறு என்று நிரூபித்தால் நான் எந்தத் தண்டனைக்கும் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** சி.ஐ.டி. மூலம் விசாரித்து நான் சொல்வது தவறு என்று சொன்னால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். வீராசாமி அடிக்கடி எழுந்து பேசிக் கொண்டிருக்கிறார். * *

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அவர் என்னைப்பற்றி
எது வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகட்டும்,
எனமீது எந்த நீதிவிசாரணைக்கும்
** நான் சொல்லிவிட்டேன், என்மீது எந்த நீதிவிசாரணைக்கும்
நான் தயாராக இருக்கிறேன், ஓரே ஒரு பெட்டிஷன் மட்டும்
கொடுக்கட்டும், நான் போய் நிற்கிறேன், நான் எந்த அதிகாரி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

யிடமாவது பேசியிருக்கிறேன் என்று நிரூபித்தால் நான் தூக்குத் தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எதை வேண்டுமானாலும் ஒருவரைப்பற்றிச் சொல்லலாம் என்ற நிலைமை இருக்கக் கூடாது. ஒன்று, என்னைப்பற்றிப் பேசியதை அவர் நிரூபிக்க வேண்டும், அல்லது அவர் கூறியவற்றை சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து அகற்ற வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் இப்போதே விசாரணைக்குத் தயாராக இருக்கிறேன். உங்களுக்குப் பிடித்த நீதிபதியை வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள், நான் தயாராக இருக்கிறேன். நிரூபித்தால் நான் எந்தத் தண்டனைக்கும் தயாராக இருக்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். நான் சொல்கின்ற கருத்துக்கள் தவறு என்று சொன்னால் எந்தத் தண்டனையையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நீதிவிசாரணை வையுங்கள். வெறும் அதிகாரியைப் போய்க் கேட்டால் எந்த அதிகாரி பதில் சொல்வார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாம் இந்த மன்றத்திலே ஒரு மரபைக் கடைப்பிடித்து வருகிறோம்.

**திரு. கோவை செழியன் :** இப்படிச் சொன்னால் எப்படி இங்கே பேசுவது? நிரூபிக்கிறேன். விசாரணை வையுங்கள். உண்மையாக இருந்தால்தான் பேச வேண்டும் என்று நீங்கள் . . .

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே உள்ள ஜனநாயக அமைப்புகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது புகார் கொடுத்தால் விசாரணை செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய சட்டமன்றத்திலே ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறோம். அதற்காக நம்முடைய அரசு ஒரு நீதிபதியையும் ஏற்படுத்தியிருக்கிறது. அப்படிக் கொடுப்பதற்கு யாருக்கும் தைரியம் கிடையாது. அப்படிக் கொடுப்பதற்கு இங்கே * *

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** * * என்று அவர்கள் சொன்னதை தயவுசெய்து அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. நா. வீராசாமி :** நான் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஒரு சட்ட மன்ற உறுப்பினரைப்பற்றி எதுவேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலைமை இருக்கக் கூடாது. இங்கே இருக்கிற ஒவ்வொரு ஏ.டி.எம்.கே. உறுப்பினரைப்பற்றியும் நானும் பேசலாம். குற்றச்சாட்டு என்மீது உண்மையாக இருந்தால் சொல்லுங்கள், நிரூபித்தால் நான் எந்தத் தண்டனைக்கும் தயாராக இருக்கிறேன். குற்றச்சாட்டுகள் இருந்தால் அதை எப்படி விசாரிக்க வேண்டும் என்று முறைப்படுத்தி நாம் இந்தச் சட்ட மன்றத்திலே ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அதற்காக ஒரு நீதிபதிகூட நியமிக்கப்பட்டு இருக்கிறார். என்மீது புகார் கொடுத்தால், அது நிரூபிக்கப்பட்டால் எந்தத் தண்டனைக்கும் தயாராக இருக்கின்றேன். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாவிட்டால் என்ன செய்வது? எப்படி வேண்டுமானாலும் வேண்டுமென்றே குற்றச்சாட்டு சொல்வது என்றால் முறைதானா என்பதற்குத் தாங்கள்தான் தீர்ப்புக் கொடுக்க வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** நான் அந்தச் சவாலை ஏற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது சவாலை ஏற்றுக்கொள்கிற இடம் இல்லை. நாம் இந்த மன்றத்திலே ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். குற்றச்சாட்டு என்று இருந்தால் அதைப்பற்றி பேரவைத் தலைவரிடம் கூறி, அவரிடம் ஆதாரங்களைக் காட்டி அதற்குப் பிறகு அவர் அனுமதித்தால்தான் பேச வேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கிறோம். அப்படி ஒரு மரபு இருக்கிறது. அந்த முறைப்படிதான் நாம் நடந்து கொள்ள வேண்டும். அப்படியில்லாமல், நான் பேசுகிறேன், நீங்கள் வேண்டுமானால் விசாரித்துக் கொள்ளுங்கள், தவறு இருந்தால் ஒத்துக்கொள்கிறேன் என்று சொல்வது சரியல்ல. திரு. கோவை செழியன் பேசும்போது, * * என்று பேசிய அந்தப் பகுதியையும், வீராசாமி பேசும்போது, * * என்று கூறிய அந்தப் பகுதியையும், இரண்டு பகுதிகளையும் அவைக் குறிப்புகளிலிருந்து நீக்கிவிடலாம் என்று ஆணையிடுகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1974 டிசம்பர் 13

**திரு. கோவை செழியன் :** நீங்கள் இப்படி எடுத்ததை எல்லாம் அடித்துக் கொண்டேயிருந்தால் எதற்காக நான் பேசவேண்டும்? நீங்கள் வேண்டுமானால் நீதி விசாரணை வைத்துக்கொள்ளுங்கள். தவறு இருந்தால் என்னைத் தூக்குமேடையிலே வேண்டுமானாலும் ஏற்றுங்கள், நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்குப் பேரவை இடம் தரவில்லை. பேரவைத் தலைவருக்கும் அந்த வேலையில்லை. அதையெல்லாம் வெளியிலே வைத்துக்கொள்ளலாம்.

**திரு. கோவை செழியன் :** எதைத்தான் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையிலே நாமே ஒரு முறையை வைத்திருக்கிறோம்.

**திரு. கோவை செழியன் :** நீங்கள் பாராளுமன்றத்திலே அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் படித்துக்கொண்டுவருகிற ஒருவர். பாராளுமன்றத்திலே சொல்லிக் கொண்டு வருகிற நிலைமை தங்களுக்குத் தெரியாதா? எதையும் எக்ஸ்பஞ்ச் செய்வது என்றால் நான் வெளியே போய்விடுகிறேன். எதற்காகப் பேசவேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாராளுமன்றத்திலே எந்த முறை இருக்கிறது? யார்மீதும் தனிப்பட்ட முறையிலோ அல்லது பொதுவான முறையிலோ குற்றச்சாட்டு என்றால் அவைத் தலைவரிடம் காட்டி, அவர் வாய்ப்புக் கொடுத்தால்தான் சொல்லலாம். குற்றம் சாட்டப்பட்ட அந்த உறுப்பினருக்குப் பதில் அளிக்கிற வாய்ப்பை உருவாக்கித் தந்துவிட்டு சொல்லச்செய்கிற முறைதான் பாராளுமன்ற முறை. அதைத்தான் நாமும் இங்கே மேற்கொண்டுவருகிறோம். இந்த முறைதான் கட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவு ஆகும். அதன்படிதான் பேசவேண்டும். அப்படியில்லாமல், நான் பேசுகிறேன், விசாரணை வையுங்கள், இல்லையென்றால் தூக்கு மேடை ஏறுகிறேன் என்று சொல்வதற்கு இது இடம் இல்லை. அது சரியல்ல.

**திரு. கோவை செழியன் :** பாராளுமன்றத்திலே நான் ஒரு எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். ராஜ்நாராயண் போன்றவர்கள் . . .



1974 டிசம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேண்டியதில்லை. நம் அலுவல் ஆய்வுக் குழுவிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அந்த முடிவைத்தான் நாம் மேற்கொள்ளவேண்டும். அந்த முடிவு மாற்றப்படவேண்டும் என்றால் அதற்காக மறுபடியும் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டித்தான் முடிவு எடுக்கவேண்டும். ஆகவே, குற்றச்சாட்டு என்றால் பேரவைத் தலைவரிடம் கேட்டு, அவர் அனுமதித்தால்தான் பேசவேண்டும். பொதுவான முறையிலே குற்றச்சாட்டு சொல்வது சரியல்ல.

**திரு. கோவை செழியன் :** அலுவல் ஆய்வுக் குழுவுக்கு ஒரு உறுப்பினரின் உரிமையைப் பறிப்பதற்கு அதிகாரம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவு இந்த அவையைக் கட்டுப்படுத்தாது என்று திரு. கோவை செழியன் கருதினால் அவருடைய கட்சித் தலைவர்தான் அதற்குப் பதில் சொல்லவேண்டும்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, என்னை மிக இக்கட்டான நிலைமையிலே நிறுத்தியிருக்கிறீர்கள். பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்னபடி அலுவல் ஆய்வுக் குழுவிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எடுத்த முடிவைத்தான் அந்த அந்தக் கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் நியாயம் என்பதை என்னுடைய கட்சி உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்களுக்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதால் நான் விட்டுவிடுகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிலே எந்த எந்த நாள், எதை எதை எடுத்துக் கொள்ளலாம் என்றுதான் முடிவு செய்யவேண்டும். இதை எல்லாம் முடிவு எடுப்பதற்கு உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்கிறீர்கள். இது நான் எடுத்த முடிவல்ல. அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவு. எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து எடுத்த முடிவு. தலைவர்கள் என்றால் தொண்டர்களும் மற்றவர்களும் என்றுதான் பொருள். ஆகவே,

எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்கிற கேள்வியை திரு. கோவை செழியன் தனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்றுதான் கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி. அப்படிக் கேட்பது இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்பதாகப்போய் அது உரிமை மீறிய செயலாகப் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, இந்த மன்றத்திலே உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமையிருக்கிறது. ஆகவே, தலைவர்கள் என்பவர்கள் எங்கள் பிரதிநிதிகளாகப் போகிறார்கள். அவர்கள் எடுத்த முடிவிற்குக் கட்டுப்படுகிறேன். அவருக்கும் எனக்கும் தகராறு ஏற்படுவது மாதிரி வெளியே காட்டிக் கொள்ளாதீர்கள். எங்களுக்கு அந்த எண்ணம் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லும் குற்றச்சாட்டுகள் தவறு என்றால் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன். நீதி விசாரணை வைக்கட்டும். அதற்குப்பிறகு அதை நிரூபிக்கிறேனா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். அவர் சொன்ன காரணத்தால் சொல்கிறேன். சமீபத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சிப் பத்திரிகையான சுதேசமித்திரன் பத்திரிகையில் மூன்றாள் முதலமைச்சர் பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இவரைப் பற்றிப் பெரிய குற்றச்சாட்டுகளை எழுதியிருக்கிறார்கள். நானாவது இங்கே சட்டமன்றத்திலே பேசுகிறேன். கேள் போட முடியாது. ஆனால் அவர் வெளியே கிளப்பியிருக்கிறார். அதற்கு கேஸ் போடலாம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, எப்படி நம்முடைய கோவை செழியன் பேசுகிறாரோ அதேபோல் பெயர் குறிப்பிட்டு எழுதவில்லை. பக்தவத்சலத்திற்குத் தைரியம் இருந்தால், அறிக்கையில் சட்டமன்ற உறுப்பினர் வீராசாமி இப்படிச் செய்திருக்கிறார் என்று குறிப்பிட்டிருந்தால் வழக்குப் போட்டிருக்கலாம். ஒரு எம்.எல்.ஏ., ஒரு எம்.எல்.ஏ. என்று பொறுப்பேற்ற தன்மையில் இருந்தது. இருந்தாலுங்கூட கோவை செழியன் அவர்கள் சொன்னதைப்போல் சும்மாயிருக்கவில்லை. நான் மறுப்பு அறிக்கை ஒன்றை விடுத்தேன். பக்தவத்சலத்தை சார்ந்தவர்கள் மறுபடியும் போய்ப் பார்த்திருக்கிறார்கள். நான் ஒரு





சைட் ஸ்டேட்மென்டைத்தான் கேட்டேன் என்று சம்பந்தப்பட்டவர்களிடம் பக்தவத்சலம் சொல்லிவிட்டு, இனிமேல் நான் எதுவும் இதைப்பற்றி எழுதவில்லை. நீங்களும் இதைப் பெரிது படுத்த வேண்டாம் என்று சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார். (குறுக்கீடு) நான் சொல்வது கதையாக இருக்கலாம், இவர்கள் சொல்வதுதான் அரிச்சந்திரன் சொல்வதற்கு அடுத்தபடியான உண்மை. நான் கேட்பதெல்லாம், பக்தவத்சலம் அல்ல, இந்த நாட்டிலே எவ்வளவு பெரிய சக்தியாக இருந்தாலும் சரி சொல்லட்டும். நான் மறுப்புத் தெரிவித்ததற்குப் பிறகு பக்தவத்சலம் ஒன்றும் சொல்லவில்லை. இது கதையாக இருந்தால் பக்தவத்சலம் தொடர்ந்து எழுதியிருப்பாரே. ஏன் அவர் தொடர்ந்து எழுதவில்லை—இதுபற்றிப் பக்தவத்சலத்திற்கு முறையாகப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, இதை வைத்து இந்த அரசாங்கத்தின் மீதும் குறை சொல்ல முடியும். ஏனென்று கேட்டால் இவருடைய செயலைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற கட்சிக்காரர்களும், முனிசிபல் சேர்மனும் அங்குள்ள சர்வ கட்சிக்காரர்களும் ஒரு நாள் கடையடைப்பு செய்தார்கள். இவரை எதிர்த்து, இவர் செய்கிற அக்கிரமங்களை எதிர்த்து, இவர் செய்கிற அடாவடித் தனங்களை எதிர்த்து பந்த் நடத்தினார்கள். அதுமட்டுமல்ல, இவர் செய்த வேலைகளை எதிர்த்து, இவர் செய்த தவறான வேலைகளைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பவர்களும் அறிக்கை விட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருப்பது அமைச்சரவை மீது தொழிய ஆர்க்காடு வீராசாமி மீது அல்ல. இந்த மன்றத்திலேயிருக்கின்ற எந்த உறுப்பினர்களைப் பற்றியும் தனிப்பட்ட முறையிலே பேசுவது கூடாது என்று ஒரு முறை இருக்கிறது. அந்த முறையைப் பின்பற்ற வேண்டும். ஆர்க்காடு வீராசாமியைப்பற்றித் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருப்பது சரியா?

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, நகராட்சி மன்றத் தலைமையைப்பற்றிச் சொன்னார்கள். ஆர்க்காடு நகர திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிச் சொன்னார்கள். ஆர்க்காடு நகர திராவிட முன்னேற்றக் கழகம் அந்த 'பந்த்'திலே நாங்கள் கலக்கவில்லை. யாரோ இப்படிப் பெயரைப் பயன்படுத்தியிருக்

ஊர்கள் என்று உடனே மறுப்பு நோட்டீஸ் போட்டிருக்கிறது. இரண்டாவதாக, நகராட்சி மன்றத் தலைவர் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை. அவர் உறுப்பினராகவும் சேரவில்லை. அதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இராதாகிருஷ்ண முதலியார் என்றுதான் அவருக்கே கடிதம் எழுதியிருப்பார்கள். நாங்கள் அப்படிப் பெயர் போட்டுக் கொள்பவர்களைக் கழகத்தில் சேர்ப்பதில்லை. அவர் உறுப்பினர் இல்லை என்பதை ஆதாரத்தோடு சொல்ல முடியும். அடுத்தபடியாக, நகர திராவிட முன்னேற்றக் கழகம் பந்திலே கலந்துகொள்ளவில்லை என்று அதற்கு மறுப்பு போட்டிருக்கிறார்கள். தனிப்பட்ட வடநாட்டுக்காரன் தன்னிடத்திலே பணம் இருக்கிற ஒரேயொரு காரணத்தினால் அரசியல்வாதிகளை விலை கொடுத்து வாங்கலாம் என்ற மாயை உருவாக்கினார். அதற்குச் சிலர் பலியானார்கள். கோவை செழியன் அவர்கள் நிச்சயமாக அதற்கெல்லாம் பலியாகக் கூடாது.

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, 'நான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அரசாங்கத்தின் மீது கொண்டு வந்தேன். ஆனால் அது எங்கே போகிறது என்றால் இப்படிப்பட்ட ஆட்களைக் கட்சியிலே வைத்திருந்தால் எப்படி சரியாக நடக்க முடியும்? திரு. வீராசாமி சொன்னார்கள், அப்படிப்பட்டவர்கள் கட்சியை விட்டுப் போய்விட்டார்கள் என்று. அப்படிப்பட்டவர்கள் இத்தகையவர்கள் இருக்கின்ற இடத்தில் எப்படி இருப்பார்கள்? இன்னும் பலர் போய்விடுவார்கள். ஆர்க்காட்டு நிகழ்ச்சி பற்றிப் பேசுவது என்றால் தனியாக நாள் வைத்துப் பேச வேண்டும். சென்னையிலிருந்து இரண்டு போலீஸ் அதிகாரிகளை அனுப்பி உள்ளூர் போலீஸ்காரர்களுக்குத் தெரியாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் மீண்டும் சொல்கிறேன். பேசும்பொழுது தனிப்பட்ட உறுப்பினரைப்பற்றிய செயலைப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்காகத்தான் அவர் பேசினார். இன்னும் 5 நிமிடங்களுக்குள் முடித்துவிடுங்கள். அப்படி முடியவில்லை என்றால் பத்து நிமிடங்களில் முடித்து விடுங்கள்.



**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, (குறுக்கீடு) என்னைத் திசை திருப்ப வேண்டுமென்பதற்காகக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேச வேண்டுமென்றால் புதுக்கோட்டையிலே நடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக்குழுவிலே ஒரு குற்றச்சாட்டை முதலமைச்சரவர்களிடத்திலே சொன்னார்கள். அதையெல்லாம் வெளியிலே சொன்னால் அசிங்கமாகப் போய்விடும். எனவே என்னை அங்கெல்லாம் இழுக்க வேண்டாம். இப்படி இந்த வீராசாமி 'டீ-ஃபேக்டோ' சீஃப் மினிஸ்டராக இருப்பதால் உண்மையான முதலமைச்சருக்கு வேலையில்லாமல் போய் விடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் மீண்டும் தனிப்பட்ட உறுப்பினரைப்பற்றிப் பேசுவது முறை அல்ல. நம்பிக்கையில்லாத் தீர்மானம் இருப்பது சர்க்காரின் மீது. அதைப்பற்றி மட்டும் பேசுங்கள். இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் மீது தனிப்பட்ட முறையில் எதையும் பேசுவது கூடாது. அந்த முறைகூடத் தெரியாமல் பேசுவது சரியல்ல.

**திரு. கோவை செழியன்:** ஆகவே, இந்த ஆட்சியின் மீது இப்படிப்பட்ட குறைகள் மட்டுமல்ல, நான் பல செய்திகளைச் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். உணவுப் பிரச்னை மட்டுமல்ல, பல பிரச்னைகளைப்பற்றியும் நாம் விவாதித்துத் தீர வேண்டியதாக இருக்கிறது.

இந்த நிர்வாகம் எப்படியிருக்கிறது? ஆட்சி கையிலே இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது என்பதால் எதையும் செய்ய முடியும் என்று இங்கேயுள்ள அமைச்சர்களில் சிலர் செய்கிறார்கள். சென்ற முறை பேசும்பொழுதே கூடச் சொன்னேன். போலீஸ் டிபார்ட்மெண்ட் அதிகாரிகளை எப்படியெப்படிப் பழி வாங்கினார்கள் என்று சொன்னேன். இன்றைக்கு நாம் பார்க்கிறோம், சி.ஐ.டி. டி.ஐ.ஜி. ரிடையர் ஆகிவிட்டார், ஒரு மாதம் வரையில் வேறு ஆள் போடவில்லை. ஏன்? எதற்காகவோ மாநில சுயாட்சி என்று கேட்கிறார்கள். எம்.பி.எஸ்.ஸி.யில் சிலபேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஐ.பி.எஸ். கன்பேர் பண்ணுவது, டைரக்டாக டெல்லியிலிருந்து சிலர் வருகிறார்கள். I.P.S. கன்பர் செய்யப்பட்ட சீனியர் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு தராமல் Junior I.P.S. அதிகாரிகளுக்குத் தருவது

என்ன நியாயம்? உங்களுக்கு வேண்டியவர்களுக்கு பிரமோஷன் வர வேண்டுமென்பதற்காக பழைய, நீண்ட காலமாக இருக்கும் சீனியர் ஆபீசர்கள் பலருக்கு பதவி உயர்வு தரவில்லை. அதற்காக ஒருவர் கோர்ட்டிற்கே போயிருக்கிறார். அதைப்பற்றி நான் இங்கே பேசக்கூடாது. அப்படிப் போனவர் யார்? பாகிஸ்தானிலே ஹைகமிஷனர் ஆபீசிலே செக்யூரிட்டி ஆபீசராக வேலை பார்த்து பல மெடல்களைப் பெற்றவர். அவருக்கு புரமோஷன் கிடைக்கவில்லை என்பதற்காக கோர்ட்டிற்குப் போய் இருக்கிறார். இது உங்கள் நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கிற குறைதானே அதை நான் சொன்னால் முதலமைச்சரவர்களுக்கும், மற்றவர்களுக்கும் கோபம் வருகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கோர்ட்டிற்குப் போய் இருக்கிறவர் எந்தச் சர்க்காரை எதிர்த்துப் போயிருக்கிறார் என்ற விவரங்களைச் சொன்னால் நல்லது.

**திரு. கோவை செழியன்:** சர்க்காரைப்பற்றிக் கவலை இல்லை. புரமோஷன் வரவில்லை என்று போய் இருக்கிறார். இன்னும் சொன்னால் அசிங்கமாகப் போய்விடும். வேண்டிய ஜூனியர் அதிகாரி ஒருவரை புரமோஷன் செய்ய வேண்டுமென்பதற்காக சில காரியங்களைச் செய்கிறார்கள். ஒருவருக்கு உயர்ந்த பதவி தர வேண்டுமென்பதற்காக 7 அதிகாரிகளை அடிஷனல் ஐ.ஜி.க்களாக பதவி உயர்வு தருகின்றீர்கள். அதுமட்டுமல்ல, உங்களுக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை செய்ய வேண்டுமென்பதற்காக என்னென்ன தில்லுமுல்லு வேலைகளைச் செய்திருக்கிறீர்கள்.

ஒரு அதிகாரிக்கு புரமோஷன் வர வேண்டுமென்பதற்காக ஒரு டிபார்ட்மெண்டையே, ஒன்றாக இருந்த டிபார்ட்மெண்டை 'பைபர்கேட்' செய்து இரண்டாக ஆக்கினார்கள். பிறகு டெல்லியிலிருந்து சீனியர் மோஸ்ட் அதிகாரி வருகிறார். வந்தவுடன் அவருக்கு வேலை போகிறது. மறுபடியும் அந்த டிபார்ட்மெண்டை ஒன்றாக ஆக்குகிறீர்கள். 'ஹவுசிங் அண்ட் லேபர்' டிபார்ட்மெண்டை எத்தனை முறை பைபர்கேட் செய்தீர்கள், எத்தனை முறை ஒன்றாக்கினீர்கள்? செய்த முடிவை ஒரே முடிவாகச் செய்திருக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவரை உயர்த்த வேண்டுமென்றால் அதற்காக ஒரு டிபார்ட்மெண்டையே கிரியேட் செய்கிறீர்கள். அதைப்பற்றிக் கேட்டால் அட்மினிஸ்ட்ரேஷன் என்று சொல்கிறீர்கள். நான்கு நாட்களுக்கு ஒரு முறை அட்மினிஸ்ட்



ரேஷன் கருத்தை மாற்றிக் கொள்வதா? அதனால் எத்தனை அதிகாரிகள் பொருமிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்.ஜி.ஓ.க்கள் மட்டும் பொருமிக் கொண்டிருப்பதாகச் சொன்னேன். உயர்ந்த அதிகாரிகளும் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள். சென்ற முறை பேசும்பொழுதே நான் சொல்லியிருக்கிறேன், பெரிய போலீஸ் அதிகாரிகளை அவமானப் படுத்தியிருக்கிறீர்கள் என்று சொன்னேன்.

(பிற்பகல் 1.00)

இப்படி பல கோளாறுகளை நிர்வாகத்திலே நீங்கள் வைத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கோவை செழியன்:** முக்கியமான பாயின்டுக்கே வரவில்லையே.

இந்த ஆட்சியின் நிர்வாகம் அலங்கோலமாக இருக்கிறது. உணவுப் பற்றாக்குறை என்று சொன்னால் உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்களை மட்டும் குறை சொல்ல மாட்டேன். அந்த ஃபைல்களில் முடிவுகளை அவரா எடுக்கிறார்? அவ்வளவையும் முதலமைச்சர் அனுமதியைப் பெற்றுத்தான் செய்கிறார்கள்.

**மாண்புமிகு மன்னை திரு. பா. நாராயணசாமி:** முதலமைச்சர் அனுமதி பெற்றுத்தான் எல்லாம் செய்ய வேண்டும்.

**திரு. கோவை செழியன்:** உங்களைத்தான் நான் குறை சொல்லவில்லையே. நிர்வாகத்திலே பல கோளாறுகள் நடைபெறுகின்றன. பத்திரிகையில் பார்க்கிறோம். திடீரென்று ஒரு அமைச்சருடைய பொறுப்பை எல்லாம் (ஃபைல்களை எல்லாம்), முதலமைச்சரே எடுத்துக் கொள்ளுகிறார். அதற்குப் பின்னால் அறிக்கை வருகிறது. அதை மறுத்து இன்னொரு அறிக்கை வருகிறது. இதெல்லாம் நாகரிகமான, ஆரோக்கியமான ஆட்சியின், நிர்வாகத்தின் லட்சணமா என்று கேட்க விரும்புகிறேன்.

[illegible]

[திரு. கோவை செழியன்] [1974 டிசம்பர் 13

கடைசியாக உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது—நாட்டு மக்கள் புரட்சி செய்வதற்கு முன்னாலே—திரு. அரங்கண்ணல் அவர்கள் கேலியாகத் தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர் எப்பேர்ப்பட்டவர்? (குறுக்கீடு)

பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—நாங்கள் எவ்வளவோ பெரிய நல்ல காரியங்களை எல்லாம் செய்திருக்கிறோம். அந்த நல்ல காரியங்களை எல்லாம் ரஷ்ய நாட்டிலே இருந்து வந்த தூதர்கள் பாராட்டினார்கள்; ஸ்லம் கிளீரன்ஸ் போர்டைப் பற்றிப் பாராட்டினார்கள். கண்ணொளித் திட்டத்தைப் பற்றியெல்லாம் பாராட்டினார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் போர்டு கட்டிய கட்டடங்களைப் பார்த்து, கண்ணொளித் திட்டம் பற்றிய விளம்பரங்களைப் பார்த்துப் பாராட்டியிருப்பார்களே தவிர, அதற்குப் பின்னாலே எவ்வளவு ஊழல்கள் நடைபெற்றிருக்கிறது என்று அவர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை. இங்கு அது பல பேருக்குத் தெரியும். மதிப்பிற்குரிய அரங்கண்ணல் அவர்கள் வெளி நாட்டுக்குச் சென்று விட்டு வந்து அகப்பட்டுக் கொண்டு அபராதம் கட்டியிருக்கிறார்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** விரைத்தைப் புரிந்து கொண்டு நண்பர் செழியன் போன்றவர்கள் பேசினால் நான் மகிழ்ச்சியடைவேன். எந்தக் கோர்ட்டிலும் நான் அபராதம் கட்டவில்லை. ஓர் அரசாங்க அதிகாரி இதுதான் முடிவு என்று சொல்லி அபராதம் கட்டச் சொன்னார். அதைக் கட்டிவிட்டு மேலே அப்பீல் செய்திருக்கிறேன். இன்னும் கோர்ட்டுக்குப் போகவில்லை. டெல்லி சர்க்காருக்கு அப்பீல் போட்டிருக்கிறேன். முடிவை எதிர் பார்க்கிறேன். அங்கே என்ன திருவிளையாடல் நடந்தாலும் அதற்குப் பிறகு கோர்ட்டுக்குப் போக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே போன்ற குற்றச்சாட்டு முன்பு ஒரு முறை கூறப்பட்டு திரு. அரங்கண்ணல் அவர்கள் விடையளித்தார்கள். மீண்டும் அதைப் பற்றிப் பேசுவது முறையல்ல.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அபராதம் கட்டியிருக்கிறேன் என்று அவரே ஒத்துக் கொண்டார். விடுங்கள் அதோடு கதையை.



1974 டிசம்பர் 13]

**திரு. இராம. அரங்கண்ணல்:** மறுபடியும் சொல்லுகிறேன். அபராதம் கட்டியிருக்கிறார், அதோடு விடுங்கள் கதையை என்று விட்டு விட வேண்டாம். நான் கட்டவில்லை—அபராதம் கட்டியிருப்பது டிப்பார்ட்மெண்டுக்கு. முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்கள் மீது மண்ணை வாரி வீசும்போது நாமும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்முடைய சூழ்நிலைகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**திரு. கோவை செழியன்:** பெனல்டி கட்டியிருக்கிறார். (மணி அடிக்கப்பட்டது).

ஐந்து நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து நிமிடம் ஐந்து நிமிடம் என்று பேசிக் கொண்டே இருப்பது சரியல்ல. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. கோவை செழியன்:** என்னுடைய குற்றச்சாட்டெல்லாம் ஆட்சிக் கொலு மண்டபத்தில் உட்கார்ந்திருக்கும் இந்த அமைச்சர்கள் தங்களுடைய உண்மையான ரெஸ்பான்சிபிலிடிஸ் என்று சொல்லக்கூடிய தங்களுடைய வேலைகளை, நிர்வாகத்தை, தங்களுடைய பொறுப்பை ஒழுங்காகச் செய்யவில்லை என்பதுதான். நாட்டிலே மக்கள் பசி, பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் போது அதற்கு நிவாரணம் தேடவில்லை. மதுரையில் உட்கார்ந்து தீர்மானம் போட்டோம் என்று சொல்லுகிறார்கள். முயல் கறியும், மான் கறியும் சாப்பிட்டுவிட்டு சாங்கோபாங்கமாகத் தீர்மானம் போட்டோம் என்று சொல்லுகிறார்கள். விளைவு என்ன? திட்டங்கள் என்ன? தமிழ் நாட்டில் பட்டினி, பஞ்சம் தீருமா?

மாணவர்கள் போராட்டம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கிறது. மதுரையில் சட்டக் கல்லூரி மாணவர்களை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு நாட்களுக்குக் கல்லூரிகளை மூடி வைத்திருப்பீர்கள்? எவ்வளவு நாட்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளை மூடி வைத்திருப்பீர்கள்? புரட்சி வெடித்து நிச்சயமாக நீங்கள் அத்தனை பேரும் புரட்சி வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப் போகிறீர்கள்.

இன்னமும் சொல்லுகிறேன்—ஆட்சியில் இருக்கும் அமைச்சர்கள் நாட்டைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. நாட்டைப் பற்றிச் சிந்திப்பதில்லை. பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். இருக்கின்ற அமைச்சர்கள் நாட்டிலே எங்கே பசி, பட்டினி என்று பார்ப்பதற்குப் பதிலாக தினசரி 15,000 ரூபாய், 20,000 ரூபாய் வைத்து சீட்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதை இல்லையென்று சொன்னால் மந்திரிசபையிலுள்ள மந்திரியையே சாட்சியாகச் சொல்ல வைப்பேன். இதுவா நேரம்?

நாட்டு மக்கள் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்சி வெடித்துக் கொண்டிருக்கிறது. எந்த நேரத்தில் மாணவர்கள், பாட்டாளிகள், நடுத்தர மக்கள், போர்க் கொடி எழுப்புவார்கள் என்று சொல்ல முடியாது. நான் புரட்சியைத் தூண்டிவிடுகிறேன் என்று எண்ண வேண்டாம். அவர்கள் போர்க்கொடியை எழுப்புவதற்கு முன்னால், அதிலே உங்கள் ஆட்சி அடித்துக் கொண்டு போகப்படுவதற்கு முன்னால் தவறை ஒப்புக் கொள்ளுங்கள். ராஜினாமாச் செய்வதாகச் சொல்லலாம். ராஜினாமாச் செய்தாலும் தப்பித்துக் கொள்ள முடியாது. எதிர்காலச் சந்ததிக்குப் பதில் சொல்லித்தான் தீரவேண்டும். அதற்கு முன்னால் உங்களுடைய பாவங்களைக் கழுவிக் கொள்ள பொதுமக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் செய்த தவறுகளை மக்கள் மன்றத்தில் சொல்லி மன்னிப்புக் கேட்கத் தவறினால் எதிர்காலச் சந்ததி உங்களைச் சும்மா விடாது என்று அறிவுறுத்துகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் 1½ மணிக்கு மேலும் 5 நிமிடங்கள் எடுத்துக் கொண்டு முடித்துவிட வேண்டும்.

***திரு. ஏ. சுப்பிரமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்த கண்டனத் தீர்மானத்தின் மீதும் நண்பர் செழியன் அவர்கள் முன்மொழிந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீதும் பேசும்போது எனக்கு ஒரு சங்கடம் இருக்கிறது. குதிரை தப்பிப் போனதற்குப் பிறகு லாயத்தைப் பூட்டுகின்ற ஒரு உணர்வு எனக்கு ஏற்படுகிறது.



நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கும் கண்டனத் தீர்மானத்திற்கும் அடிப்படையான காரணம் என்னவோ அந்த நிலைமை தமிழகத்தில் வளர்ந்து முற்றிப் போயிருக்கிறது. இனிமேல் எப்படித் திருத்த முடியும் என்ற கவலை கூட எனக்கு ஏற்படுகிறது; மாநில மக்களில் பல பேருக்கு ஏற்பட்டிருக்கிறது.

என்னுடைய கண்டனத் தீர்மானத்திற்கு அடிப்படையானது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கின்ற உணவு நிலைமை, வறட்சி நிலைமை, விலைவாசியேற்றம் ஆகியவைதான்.

நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கும்போது கொடுத்தார்கள். அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால் தமிழகத்தில் இருக்கும் நாலரைக் கோடி மக்கள் பசியால் வாடுகின்ற கொடுமையை உணர்ந்திருக்கிறார்களா இல்லையா? உணர்ந்தும் அதுபற்றி எதும் நடவடிக்கை எடுக்க இயலாது போகின்ற அளவுக்கு நிலைமை முற்றிப் போய்விட்டது என்ற காரணத்தோடு தோல்வி மனப்பான்மையோடு இந்த அறிக்கையைத் தந்திருக்கிறார்களா என்ற ஐயப்பாடுதான் ஏற்படுகிறது.

ஏற்கனவே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தின்போது உணவுப் பிரச்சினை பற்றி இங்கே விவாதிக்கப்பட்டது. மீண்டும் அது பற்றி விவாதிக்க வேண்டிய துரதிருஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்தில் வாழ்கின்ற மக்கள் எந்த அளவுக்கு உணவுப் பொருள் விலையேற்றத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே வருணிக்கத் தேவையில்லை.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்திலே ஒரு படி அரிசி ஒன்றே முக்கால் ரூபாய்க்குத் தஞ்சையில் விற்றது இன்றைக்கு அதே தஞ்சையில் 3½ ரூபாய்க்கு வந்திருக்கிறது. இடையில் 7 ரூபாய் 8 ரூபாய்க்குக் கூடத் தஞ்சையில் விற்றது. இன்றைக்கு சென்னையில், கோவையில் எல்லாம் பட்டணம் படி ரூ. 7, ரூ. 8 சில இடங்களில் ரூ. 10 என்று விற்கப்படுகிறது. விலைவாசியேற்றம் 10 சதவிகிதம், 15 சதவிகிதம், 20 சதவிகிதம், 25 சதவிகிதம் என்றால் நம்மால் புரிந்து கொள்ள முடியும். வளர்ந்து வருகிற பொருளாதாரத்திலே மேலும் மேலும் பொருளாதாரத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது ஓரளவு விலைவாசியேற்றம் [illegible]

முடியாதது என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கு ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வு அதிலும் குறிப்பாக அரிசி விலை பல நூறு மடங்கு அதிகரித்திருப்பது ஆத்திரத்தைத் தருகிற ஒன்று.

தமிழகம் அரிசியைப் பொறுத்தவரை தன்னிறைவு பெற்ற மாநிலம். உபரியான மாநிலம் என்று முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பட்ஜட் உரையிலே சொல்லியிருக்கிறார்கள்.

So far as rice and other food grains are concerned, Tamil nadu is in marginal surplus.
என்று அவரே சொல்லியிருக்கிறார்.

மறுபடியும் நேற்றைய தினம் இங்கு பேசும்போது சொன்னார்கள்: 55 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகியிருக்கிறது என்று சொன்னார்கள். இது தவிர ஏறத்தாழ 15 லட்சம் டன் புன்செய் தானியங்கள் உற்பத்தியாகியிருக்கின்றன. அவர்கள் நேற்றைய தினம் கொடுத்த கணக்கு, 57 லட்சம் டன், வயது வந்த ஒரு நபருக்கு 400 கிராம், குழந்தைகளுக்கு 200 கிராம் என்று சொன்னால் 57 லட்சம் டன் தேவைப்படுகிறது என்று கணக்கு ஒன்றைச் சொன்னார்கள். அந்தக் கணக்கைப் போட்டுப் பார்த்தேன். எனக்கு 50 லட்சத்திற்கு மேல் வரவில்லை. இங்கு 55 ப்ளஸ் 15=70 லட்சம் டன் இருக்கிறது. நம் தமிழக மக்கள் நன்செய் தானியத்தை மட்டும் உண்பதில்லை, புன்செய் தானியங்களையும் உண்கிறார்கள். அப்படியிருக்கும்போது திடீரென்று பெப்ரவரியில் சர்ப்ளஸாக இருந்த இந்த மாநிலம் இந்த நிலைக்கு எப்படி வந்தது?

பற்றாக்குறை அல்லது விலைவாசியேற்றம்; பற்றாக்குறை இல்லை என்று சொல்கிறார்கள். பற்றாக்குறை இல்லை, ஏனெனில் நன்கு விளைந்திருக்கிறது. அதிகமாக வெளியே போகவில்லை என்று உணவு அமைச்சர் அவர்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் சொன்னார்கள். தஞ்சையிலிருந்து பதினெட்டாயிரம் டன் அரிசிதான் வெளியே போயிற்று என்று சொன்னார்கள். சம்பா அறுவடையில் அங்கு மார்க்கெட்டின் சர்ப்ளஸ் ஆறு லட்சம் டன் இருக்கும். கேரளாவிற்குக் கடத்தப்படுகிறது என்று சொன்னார்கள். இங்கிருந்து அரிசி கேரளாவிற்குப் போய் அங்கிருந்து துபாய், குவாத் போன்ற இடங்களில் விற்கப்படுகின்றன. இந்தத் தகவலை ஒரு மாதத்திற்கு முன் அங்கிருந்து





வந்த என் நண்பர் ஒருவர் சொன்னார். துபே ஹோட்டலில் தஞ்சாவூர் அரிசி சாப்பிட்டேன் என்று அவர்கள் சொன்னார்கள். பத்திரிகைகளிலும் வந்தது. தஞ்சையிலிருந்து கேரளாவிற்கு அரிசி கடத்தப்படுகிறது. இவையெல்லாம் பத்திரிகைகளில் வந்திருக்கிற செய்திகள்.

மார்ச் மாதத்தில் உபரியாக இருந்த நம் மாநிலத்தில் இப்போது அரிசி இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. வறட்சியான பகுதிகளில் மட்டுமல்ல இந்த நிலைமை. காவிரி நீர் பாய்கிற பகுதிகளிலும், காளிங்கராயன் வாய்க்கால் பாய்கிற பகுதிகளிலும், தாம்பிரவருணி நீர் பாய்கிற பகுதிகளிலும் இந்த நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அரிசியின் விலை சாதாரண மக்கள் எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்கு ஏறியிருக்கிறது. அதன் விளைவு என்ன? நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் அவர்களது பகுதியில் உள்ள கிராம மக்கள் சாப்பிடும் கிழங்கைக் கொண்டு வந்து காட்டினார்கள். என் பகுதியில் கிராமங்களில் பலபேர்கள் கத்தாழைக் கிழங்கைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம் ஒரு கிலோ அரிசி ரூ. 3.50, ரூ. 4, ரூ. 5 என்று விற்றால் அதை வாங்கிச் சாப்பிட வசதி பெற்றவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? நடுத்தர மக்கள்கூட, ரூ. 500, ரூ. 700 என்று சம்பளம் வாங்கக் கூடியவர்கள் கூட இன்று திண்டாடுகிறார்கள். ஒரு மூட்டை அரிசி ஒரு மாதத்திற்கு வாங்கவேண்டுமென்றால் ரூ. 425 கொடுத்து ஒரு மூட்டை அரிசி வாங்க வேண்டியிருக்கிறது. அதை வாங்கி விட்டு மற்றச் செலவுகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று சொன்னால் எப்படி இந்த நாட்டு மக்கள் பிழைப்பார்கள்? அரிசியின் விளைவு குறைவாக உள்ள மாநிலங்களில் இத்தகைய நிலை என்றால் என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அரிசி அதிகமாக விளைந்துள்ள இம்மாநிலத்தில் இந்த நிலை என்றால் எப்படி?

சென்ற பட்ஜட் உரையில் நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள். வங்கத்திற்கும், பம்பாய்க்கும், கருநாடகத்திற்கும் ஆயிரக்கணக்கான டன் அரிசி வாரி வழங்கியதாக. அப்படி அடுத்த மாநிலங்களுக்கு வாரி வழங்குகிற அளவிற்கு இந்த மாநிலத்தில் விளைந்திருக்கிறது. அப்படியிருக்க திடீரென்று [illegible]

இத்தகைய ஒரு நிலை ஏற்பட்டு படி அரிசி பத்து ரூபாய்க்குப் போகிற நிலை எப்படி வந்தது என்பது கேள்விக் குறியாகும். இதற்கு முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் பதில் சொல்ல வேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் ஒரு காரணம் சொல்கிறார்கள். மத்திய அரசு நோட்டு அடித்துவிடுகிறது, அதனால் விலையேற்றம் என்று சொன்னார்கள். ஆனால் பீஹாரில், மராட்டிய மாநிலத்தில், ஏன் கேரளாவில் கூட இங்கு விற்கப்படுகிற விலை இன்று இல்லை. (குறுக்கீடு) மராட்டியம் அரிசிப் பற்றாக் குறை மாநிலம். அம்மாதிரி இடங்களில் விலை ஏறி இருந்தால் புரிந்து கொள்ளமுடியும். ஆனால் இங்கு நல்லமுறையில் அரிசி விளைந்திருக்கிறபோது மற்ற மாநிலங்களில் விற்பதைவிட அதிக விலையில் இங்கு ஏன் விற்கப்படுகிறது? வேறொன்றும் இல்லை. இது செயற்கையாக உண்டாக்கப்பட்டது என்பதுதான் என் குற்றச்சாட்டு.

சொல்கிறார்கள், மார்ச் மாதத்தில் மத்திய அரசு புன்செய் தானியங்களின் போக்குவரத்து நடமாட்ட கட்டுப்பாட்டை எடுத்துவிட்டதால் விலை ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். சென்ற கூட்டத் தொடரில் உணவு அமைச்சர் அவர்கள் வெகு அழகாகச் சொன்னார்கள், புன்செய் தானிய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தாததால் விலை ஏறிவிட்டது என்று சொன்னார்கள். புன்செய் தானியங்கள் சாப்பிடுகிறவர்கள், அரிசி சாப்பிடுகிறவர்கள் எத்தனை பேர்கள் என்று எதாவது கணக்கு எடுத்தார்களா? இல்லை. சட்டமன்றத்தில் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள்.

முதல் அமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு பேசியிருக்கிறார்கள். இதைப் பத்திரிகைகளில் சொல்லிவிட்டுப் போக சரியாக இருக்கும், அல்லது சட்டமன்றத்தில் சொல்லி விட்டுபோக சரியாக இருக்கும். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. அப்படியிருந்தாலும் எவ்வளவு ஏறும்? சிறிது ஏற்றம் வரலாம். புன்செய் தானியங்களின் நடமாட்டத்தின் கட்டுப்பாடு எப்போது எடுக்கப்பட்டது? மார்ச் 6-ம் தேதி எடுக்கப்பட்டது. விலைவாசி யேற்றம் ஜூன் மாதம் தொடங்கியது. மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் விலையேற்றம் தொடங்கியிருக்கிறது. ஜூன் 11-ம் தேதிக்குப் பிறகு திடீரென்று தஞ்சை மாவட்டத்திலிருந்து நட-





மாட்டக் கட்டுப்பாட்டை எடுத்ததற்குப் பிறகு. ஆயிரக்கணக்கான லாரிகள் அங்கிருந்து போன பிறகுதான் இந்த விலையேற்றம் ஏற்பட்டது.

சாதாரண பொருளாதாரத்தில், விலையேற்றத்திற்குக் காரணம் டிமாண்ட் அன்ட் சப்ளையைப் பொறுத்தது. முதல் அமைச்சர் அவர்களின் கணக்குப்படி குறைவு இரண்டு லட்சம் டன்தான் என்றால் அந்த அளவிற்குத்தான் விலைவாசி ஏறியிருக்கவேண்டும். உங்கள் விநியோகம் ஒழுங்காக இருந்தால், வேறு வெளியில் அரிசி போகாமல் இருந்தால் அப்படி இருந்திருக்கும். அப்படியில்லாமல் அபரிமிதமாக விலை ஏறியிருக்கிறது. காரணம் என்ன? நீங்கள் ஏராளமான அரிசியை இந்த மாநிலத்திலிருந்து வெளியே போவதற்கு அனுமதித்து விட்டீர்கள். அதுதான் என் குற்றச் சாட்டு. இதை யாரும் மறுக்கவில்லை. பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. இல்லையென்றால் இந்த நிலை ஏன்? தஞ்சாவூரில் திடீரென்று நடமாட்டத் தடையைப் போடுகிறார்கள், எடுக்கிறார்கள். செங்கற்பட்டிலிருந்து சென்னைக்கு திடீரென்று தடையை எடுத்தார்கள், பிறகு தடை போட்டார்கள். அப்படி நடமாட்டத் தடை வருவது, போவது என்றால் தடை எப்படி வருகிறது? ஏன் வருகிறது?

இதற்கெல்லாம் பதில் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழங்கி இருக்கிற எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையில் இருக்கிறது. இவையெல்லாம் ஏன் வருகின்றன என்று அவர்கள் அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். பல தவறுகள் பற்றி அதில் சொல்லப் பட்டிருக்கிறது. இன்ஸால்வென்ஸி கொடுத்தவர்கள், சொத்து இல்லாதவர்களை ஹல்லிங் ஏஜென்டாகப் போட்டு நெல் அரைக்க கொடுக்கப்பட்டு அவர்கள் அரிசி கொடுப்பதில்லை. வெள்ளம் வந்து அடித்துப் போய் விட்டது என்று ஆயிரக்கணக்கான மூட்டைகளுக்குக் கணக்கு காட்டுகிறார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரம்ப வந்திருக்கின்றன. அதுபற்றிப் பின்னால் சொல்கிறேன்.

தஞ்சையிலிருந்து அரிசி ஏராளமாக வெளியே கொண்டுபோக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் குறைந்த விலையில் விற்கவேண்டிய அளவிற்கு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள்.

[திரு. வ. சுப்பிரமணியம்] [1974 டிசம்பர் 13

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது, புட் கார்ப்பரேஷன் இருக்கிறது. அரசாங்க இயந்திரங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் கொள்முதல் செய்யவில்லை. இந்த மாநில மக்களுக்கு அரிசி வழங்குகிற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. அதைத் தட்டிக் கழிக்கமுடியாது. முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் இரண்டு லட்சம் டன் வேண்டுமென்று கேட்டிருப்பதாகவும் அதை எல்லோரும் ஆதரிக்கவேண்டும் என்றும் கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது இதில் எந்த அளவிற்கு எப்படி பயன்படும் என்று தெரியவில்லை. நாங்கள் மத்திய அரசிடம் இரண்டு லட்சம் டன் கேட்டோம், அவர்கள் தரவில்லை அல்லது பத்தாயிரம் டன் தான் தந்தார்கள் என்ற குற்றச்சாட்டை மத்திய அரசின்மீது சுமத்தலாம். நான் கேட்பது இந்த நிலையை தமிழ்நாட்டில் ஏன் உண்டாக்க வேண்டும் என்பதுதான். தனிப்பட்டவர்கள் கொள்முதல் செய்து, அறைத்து, அவற்றை கடத்துவதற்கு அனுமதிக்கப் பட்டார்கள். அவர்கள் கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். நேற்றையதினம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொள்முதலை தீவிரப்படுத்தவும், நியாயமான ஒழுங்கான விநியோகத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யவும் நாம் முடிவு செய்துள்ளோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது குதிரை ஓடிய பிறகு லாயத்தைப் பூட்டுவது போல் செய்கிறீர்கள். முதல் அமைச்சர் அவர்கள் நன்கு விஷயங்கள் தெரிந்தவர்கள், திறமைசாலி, அதுபற்றி ஒன்றும் சந்தேகம் கிடையாது. இப்படிப் பட்ட ஒரு முதல் அமைச்சர் ஏன் இந்த நிலையை உண்டாக்கி வைத்தார்கள் என்பதுதான் பிரச்னை இன்று இப்பிரச்னையில் மக்களுடைய வாழ்வை வைத்து பந்தாடியிருக்கிறது அரசு என்ற குற்றச்சாட்டை கூற விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த நிலைமை வந்தபொழுது அரிசி வழங்கு வதாக சர்க்கார் அறிக்கை தந்தார்கள். அரிசி எவ்வளவு? 1967-ல் அன்றைக்கு காங்கிரஸ் சர்க்கார் இருந்தபொழுது 6 அவுன்ஸ் கொடுத்ததாக குற்றம் கூறி தி.மு.க.-வினர் ஆட்சிக்கு வந்தனர். அதே அரசு இப்பொழுது என்ன அறிவித்திருக்கிறது? ஒரு குடும்பத்திற்கு 3 கிலோ என்று அறிவித்திருக்கிறார்கள். இது 3 அவுன்ஸ் ஒரு ஆளுக்கு வரும். இதுவும் கூட பல இடங்களில் கிடைக்கவில்லை. நகரங்களில் கொடுப்பதாக கார்டு கொடுக் கிறார்கள். பொதுவாக பல நேரங்களிலே கிடைப்பது இல்லை.



1974 டிசம்பர் 13] [திரு. வ. சுப்பிரமணியம்]

கோவையில் 10 கிலோ அரிசி கொடுப்பதாக கலெக்டர் அறிவித்து விட்டார். ரேஷன் கடைக்குப் போனால் அரிசி கிடைப்பதில்லை. 5 கிலோ கூட கிடையாது. ஒரு வாரம் கழித்து வாருங்கள் என்று தான் சொல்கிறார்கள்.

நகரங்களில் இப்படிப்பட்ட நிலைமை. கிராமப்புறங்களில் ஒன்றுமே கிடையாது, கார்டும் கிடையாது, அரிசியும் கிடையாது. நெசவாளர் சமுதாயத்தினருக்கும் கிடையாது. அவர்களுக்கும் அரிசி கிடையாது. அவர்கள் பாவு காய்ச்சுவதற்கு கஞ்சிக்கு அரிசி வேண்டும். அதைக் கேட்டேன். அமைச்சர்களைக் கேட்டேன். அதிகாரிகளைக் கேட்டேன். சென்ற மாதம் வந்து கேட்டபொழுது அரிசி இருப்பு இருக்கிறது, அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். உயர்தர அதிகாரிகள் சொன்னார்கள். ஆனால், அரிசி வரவில்லை. காரணம் என்ன? பத்திரிகையில் அறிவிப்பு விடுகிறார்கள். செய்கிறோம் என்று அறிவிப்பு விடு கிறார்கள். ஆனால், செய்ய முடியவில்லை.

ஏற்கனவே எல்லாவற்றையும் தனியார்கள் எடுத்துக்கொண்டு கொள்ளை லாபம் அடிக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச் சாட்டு மட்டும் அல்ல. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே நெருக்கமான உறுப்பினர்களே என்னிடத்தில் சொல்கிறார்கள். 'இம்மாதிரி நீங்களாவது பேசவேண்டும் சட்டமன்றத்தில், நாங்கள் பேச முடியாது, இம்மாதிரி கொடுமை நடந்து கொண் டிருக்கிறது' என்று சொல்கிறார்கள். நேற்று கூட வரும் பொழுது ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் என்னிடம் சொன்னார். 'நீங்களாவது சட்டசபையில் பேசுங்கள், நாங்கள் பேசினால், எங்கள் கட்சிக் கூட்டத்தில் பேசினால், மாற்றுக் கட்சிக்கு ஆதர வாகப் பேசுவதாக குற்றம் சுமத்துகிறார்கள். ஆதலால் நாங்கள் பேச முடியவில்லை. எங்களுக்கு வாய்ப்பூட்டு போடுகிறார்கள், நீங்களாவது பேசுங்கள்' என்று என்னிடம் சொல்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இதில் கட்சிப் பிரச்னை வரக்கூடாது என்று சொன்னார்கள். கட்சிப் பிரச்னை அல்ல. இந்த மாநிலத் திலுள்ள 4½ கோடி மக்களை சாகடிக்கின்ற பிரச்னை. எல்லோருக்கும் இதிலே மனத்தில் ஆதங்கம் இருக்கிறது. ஆளும் கட்சியினர் உள்பட அத்தனை பேர்களுக்கும் இதிலே வேதனை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு கொடுமையான தவறு செய்கிறது

என்ற உணர்வு எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்குக் கொடுமையான தவறைச் செய்கிறார்கள். நிலைமை என்ன ?

ப்ரொக்யூர்மெண்ட் செய்கிறார்கள். ஒரு லட்சத்து பத்தாயிரம் டன்கள் இதுவரையில் ப்ரொக்யூர்மெண்ட் செய்திருக்கிறார்கள். எஃப்.ஸி.ஐ., சிவில் சப்ளை கார்ப்பரேஷன் இரண்டும் சேர்ந்து. ஒரு கதை சொல்வார்கள். ஒரு அதிகாரியினுடைய பியூன் 'எனக்கும் எஜமானனுக்கும் சேர்ந்து ரூ. 1,010 சம்பளம்' என்று சொன்னானாம். அதிலே அவனுக்குப் பெருமை. எஜமானனுக்கு ரூ. 1,000 சம்பளம், அவனுக்கு ரூ. 10 சம்பளம். அதைப்போல நம்முடைய அரசு ஃபுட் கார்ப்பரேஷன், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனும் இரண்டும் சேர்ந்து ஒரு லட்சத்து பத்தாயிரம் டன்கள் கொள்முதல் செய்ததாக சொல்கிறது. அதிலே நம்முடைய கொள்முதல் எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதை நீங்களே சொல்லுங்களேன். கதையை நீங்கள் சொன்னீர்கள். ஃபுட் கார்ப்பரேஷன் எவ்வளவு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எவ்வளவு கொள்முதல் செய்தது என்பதையும் நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஃபுட் கார்ப்பரேஷன் கொள்முதல் அதிகமாக இருந்தது என்று பத்திரிகையில் செய்தி வந்தது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எஜமானனுக்கு ரூ. 1,000, தொழிலாளிக்கு ரூ. 10, ஆக ரூ. 1,010 என்று கதை சொன்னீர்கள். ஃபுட் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்தது எவ்வளவு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்தது எவ்வளவு என்பதை நீங்களே சொல்லுங்கள். பத்திரிகை செய்தியைப்பற்றி கூறினீர்கள். உங்களைப் போன்ற உறுப்பினர் அதை மாத்திரம் அடிப்படையாக வைத்துக்கொண்டு பேசக் கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பத்திரிகை செய்திக்கு முதல் அமைச்சர் அவர்கள் மறுப்பு வெளியிட்டார்கள். அதே முதல் அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு கொள்முதல் சரியாக இல்லை. . .





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கொள்முதல் மொத்தத்தில் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்று நான் சொன்ன கருத்து வேறு, ஃபுட் கார்ப்பரேஷன் அதிகமாகச் செய்தது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் குறைவாகச் செய்தது என்று சொல்கிற கருத்து தனியாக உள்ளது. நான் கேட்பது நீங்களே எவ்வளவு என்று சொல்லுங்கள். நீங்கள் சொல்கிற கருத்துப்படி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் குறைவாகச் செய்தது, எஃப்.ஸி.ஐ. அதிகமாகச் செய்தது என்றால், எப்படி கணக்கு என்று சொல்லுங்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அந்தக் கணக்கை நீங்கள் கொடுத்தால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இரண்டும் சேர்ந்து என்று சொல்லப்படுகிறது. ஃபுட் கார்ப்ப ரேஷனைவிட சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் 5 டன்கள் அதிகமாகவே, ஜாஸ்தி கொள்முதல் செய்ததாகச் சொல்லி, இரண்டும் சேர்ந்து மொத்தமாக ஒரு லட்சத்துப் பத்தாயிரம் டன்கள் கொள்முதல் செய்ததாக வைத்துக்கொள்வோம்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** ஃபுட் கார்ப்ப ரேஷன் 7,000 டன் கொள்முதல் செய்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் ஃபுட் கார்ப்பரேஷன் 7,000 டன்கள், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஒரு லட்சத்து ஓராயிரம் டன்கள் கொள்முதல் செய்திருக்கிறார்கள். இதில் முதலாளிகளும் இல்லை, தொழிலாளிகளும் இல்லை. ஃபுட் கார்ப்ப ரேஷன், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இரண்டும் ஒருங்கிணைந்து கொள்முதல் செய்கிறார்கள். இவைகள் மாநில, மத்திய அரசு களினுடைய கொள்முதல் நிலையங்கள் தான். அவர்கள் மொத்த மாகச் சேர்ந்து கொள்முதல் செய்கிறார்கள். நாங்கள் தான் கொள்முதல் செய்வோம், நீங்கள் தனியாகப் போங்கள் என்று வேண்டுமானால் நாம் பிரித்துக்கொள்ளலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கொடுத்த விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்தக் கொள்முதலை வைத்துக்கொண்டு நீங்கள் எப்படி மாநிலத்து மக்களுக்கு அரிசி வழங்கப் போகிறீர்கள். அது தான் இன்றைக்குள்ள பிரச்னை. இந்தக் கொள்முதலை வைத்துக் கொண்டு எப்படி எல்லோருக்கும் அரிசி வழங்கப் போகிறீர்கள்?

முடியாது. உங்களுக்குத் தெரியும். ஏற்கனவே ரேஷன் வரக்கூடும் என்ற செய்தி வந்தது. அந்தச் செய்தி வந்ததற்குப் பிறகு இப்பொழுது ரேஷன் இல்லை என்ற செய்தி வந்திருக்கிறது. காரணம், அப்படி அரிசி வழங்குகின்ற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைமை ஏற்பட்டாகிவிட்டது.

பாரதியார் 'தனி ஒருவனுக்கு உணவு இலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடியிருக்கிறார். உணவு வழங்க முடியாத நிலைமை ஒரு அரசுக்கு இருக்குமானால், அது அழிந்து போவதே மேல் என்று சொன்னார்கள். இன்றைக்கு அரசாங்கத்தின் முழு முதல் கடமை, 'எலிமெண்டரி டியூடி' மக்களுக்கு உணவு வழங்குவது. தமிழக அரசு, இந்த மாநில அரசு, மக்களுக்கு உணவு வழங்கக்கூட முடியவில்லை என்பதனை நேற்றையதினம் முதல் அமைச்சரவர்களே பகிரங்கமாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால் இந்த அரசு மக்களுக்கு சாதாரணமாக தன்னுடைய கடமையைச் செய்வதற்குக் கூட தகுதியற்றதாக இருக்கிறது என்பது தான். திறன் இருக்கிறது, ஆனால் திறனிருந்தும், அந்தத் திறனை செயலாற்ற முடியாத அளவுக்கு வேறு வேறு ஏதோ சூழ்நிலைகள், உணர்வுகள் அவர்களைத் தடுத்து, இந்த மோசமான நிலைமையை இன்றைக்கு தமிழகத்திலே அவர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து, பஞ்சாப் மாகாணத்திலிருந்து கோதுமை வாங்கினார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பஞ்சாபில் அரசாங்கம் இருக்கிறது, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் இருக்கிறது, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது இந்த அரசு ஏன் அங்கிருந்து தனியார்களிடமிருந்து கோதுமை வாங்கிக்கொண்டு வந்தது? அந்த மாநில அரசின் வாயிலாகவே நாம் அந்தக் கோதுமையை வாங்கியிருக்கலாம். அரசின் வாயிலாக கோதுமையை வாங்கி இங்கே கொண்டுவந்து விநியோகம் செய்திருக்கலாம். தனியார்களிடம் இந்த அரசுக்கு ஏன் இவ்வளவு நம்பிக்கை? தனியார்கள் கொள்முதல் செய்யவேண்டும், ஹோல்லிங் ஏஜன்சி தனியாருக்குக் கொடுக்கவேண்டும் என்று தான் இந்த அரசு விரும்புகிறது. அதில்



என்னென்ன நடக்கவேண்டுமோ அது நடக்கிறது. அதைப் போலத்தான் வெளி மாநிலங்களிலும் கொள்முதல் செய்வதற்கு தனியார்கள் பேரில் இந்த அரசுக்கு ஏன் இவ்வளவு பற்றுதல் என்பது எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வது தமிழக அரசு தனியாருக்கு இந்தக் கொள்முதலைக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். நாங்கள் முதலில் சர்க்காருக்கு சர்க்கார் கொடுக்கவேண்டும் என்று தான் பஞ்சாபில் இருக்கிற உணவுத் துறையிலிருந்து தமிழ் நாட்டில் இருக்கிற உணவுத் துறை மூலம் நாம் கேட்கச் சொன்னோம். அவர்கள் முதலில் கொடுப்பதாகச் சொன்னார்கள். நாமும் பணம் டெபாசிட் பண்ணிவிட்டோம். அதற்கான பெர்மிட்டும் கொடுக்கப்பட்டுவிட்டது. பிறகு தனியார்கள் வாங்கலாம் என்று சொன்னார்கள். ஆகவே தான் நாங்கள் எப்படியும் நமக்கு கோதுமை வரவேண்டும் என்பதற்காக, தனியார்களுக்குக் கொடுப்பதாக இருந்தாலும் கொண்டுவரலாம் என்று அவர்களுக்கு 'என்.ஓ.சி.' கொடுத்து, அவர்கள் கொண்டுவருவதற்கு உத்தரவு போட்டோம். அப்படி கொடுத்தபிறகு தனியார் ஒருவர் வாங்கிக்கொண்டு வந்தார். அப்படி அவர் வாங்கிக் கொண்டு வந்ததற்குப் பிறகு 'நாங்கள் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள், தனியார்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள், அது கூடாது, எங்களுக்குக் கொடுங்கள்' என்று கேட்டோம். தருகிறேன் என்று போனில் சொன்னார்கள். அதற்குப் பிறகு திடீரென்று நாங்கள் ரூ. 1¼ கோடி கொடுத்ததை திருப்பிக் கொடுத்துவிட்டு பஞ்சாப் மாநிலத்தினர் 'உங்களுக்குக் கொடுக்க முடியாது' என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகுதான் தனியார்கள் 5,000, 10,000 டன்கள் கொண்டு வருவதற்கு அனுமதித்திருப்பதாக எனக்கு விவரம் தெரிகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பஞ்சாப் கோதுமை விவகாரம் அமைச்சர் அவர்கள் சொல்வது போல் அவ்வளவு எளிதான விஷயம் அல்ல. அமைச்சர் அவர்கள் சொல்வது சரியில்லை என்று நினைக்கிறேன். தனியார்களிடமிருந்து எவ்வளவு வாங்கினார்கள், என்ன விலைக்கு வாங்கினார்கள்? தமிழக சர்க்கார் இங்கேயிருந்து அவர்களுடைய பொறுப்பான அதிகாரிகளை அனுப்பி கோதுமையை வாங்கியிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கோதுமையை தமிழகத்தில் விநியோகிக்க தமிழக சர்க்கார் பஞ்சாப் சர்க்கார் மூலமாக வாங்கி ஏன் விநியோகம் செய்யவில்லை என்று கேட்டார். முதலில் பஞ்சாப் சர்க்கார் ஒத்துக்கொண்டது. அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் ரூ. 1¼ கோடி பணமும் அனுப்பப்பட்டது. சர்க்கார் மாத்திரம் அல்லாமல் தனியார்களும் இங்கிருக்கிற உணவு நெருக்கடியை உத்தேசித்து வாங்கி விநியோகம் செய்யலாம் என்ற கொள்கையின் அடிப்படையில் தனியார்களுக்கு 'என்.ஓ.சி.' கொடுத்து அனுமதித்தோம். நாங்கள் கொடுத்த பணத்தை திருப்பி அனுப்பிவிட்டு, பஞ்சாப் சர்க்கார் தனியார்களுக்கு வழங்கியதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அதைப்பற்றிதான் திரு. ஏ. சுப்பிரமணியம் கேட்கிறார்கள். தனியாரிடமிருந்து நாம் மொத்தமாக எவ்வளவு கோதுமை வாங்கினோம், எவ்வளவு கோதுமை பஞ்சாபிலிருந்து நமக்கு வந்திருக்கிறது. அது என்ன விலையிலே நமக்கு வந்திருக்கிறது, அது ஜாஸ்தியான விலையா, குறைவான விலையா? . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** விலை நிர்ணயத்தைப் பொறுத்த வரையில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்ன விலையோ, அதே விலைதான் தனியாருக்கும் நிர்ணயிக்கப்பட்டது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அவர் கேட்டது பஞ்சாப் சர்க்கார் மூலம் வாங்கலாமே, ஏன் தனியார் மூலம் வாங்க அனுமதிக்கப்பட்டது என்பது. அதற்குத்தான் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாப் சர்க்கார் முதலில் நம் சர்க்கார் மூலம் தருவதாக சொல்லிவிட்டு பிறகு தனியாருக்கு மாத்திரம்தான் தந்திருக்கிறார்கள், சர்க்காருக்குத் தரவில்லை.

(பிற்பகல் 1-30)

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எப்போது வாங்கியது? வாங்கும்போது நம்முடைய அதிகாரிகள் சென்றார்கள் அல்லவா? எவ்வளவு ரூபாய்க்கு வாங்கியது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் போய் வாங்கவில்லை. மாநிலங்களிடையே வாங்கிக் கொள்ளலாம் என்று மத்திய அரசு கூறியதால்



பஞ்சாபிலிருந்து கோதுமை வாங்குவதற்காக ரூ. 1¼ கோடி பணம் கட்டினோம். ஆனால் அதற்குப் பிறகு, அவர்கள், நாங்கள் தனியார்களிடத்தில் கொடுத்து விட்டோம். உங்களுக்கு இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அங்கே தனியார்களிடத்தில் எவ்வளவு வாங்கப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பஞ்சாபிலே தனி வியாபாரிகள் யாரிடத்திலும் இந்த அரசு கோதுமை வாங்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பஞ்சாப் சர்க்காரிடத்திலும் வாங்கவில்லை. தனியார் இடத்திலும் வாங்கவில்லை. இங்கேயிருந்து சில தனியார்களே, அங்கே போய் வாங்கினார்கள்.

**திரு. ஆலடி அருணா:** தனியார்களுக்கு கோதுமை தரக்கூடாது என்று பஞ்சாப் அரசை ஏன் கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது. அந்த மாநிலத்திலிருந்து இந்த அரசின் முன் அனுமதியின்றி தனியார்கள் யாரும் கோதுமை வாங்கக் கூடாது என்று கூறியிருக்கலாமே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாம் அப்படி ஒரு நிபந்தனையை பஞ்சாப் சர்க்காருக்கு போட முடியாது. தனிப்பட்ட வியாபாரிகளுக்கு நிபந்தனை போட்டால் தமிழகத்திற்கு கோதுமை வராமலே போய்விடும். பஞ்சாப் சர்க்கார் அல்லவா, இதற்கு ஒத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுப்பதாகச் சொன்ன ஃபைலை என்னுடைய அறையில் 3-00 மணிக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் வந்து பார்க்கலாம்.

இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, பேரவை நாளைக் காலை 9 மணியளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

94. Notification issued with G.O. Ms. No. 681, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Periyakulam local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

95. Notification issued with G.O. Ms. No. 1084, Rural Development and Local Administration, dated the 23rd April 1974 in regard to declaration of the areas forming the Thanjavur local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

96. Notification issued with G.O. Ms. No. 1291, Rural Development and Local Administration, dated the 21st May 1974 in regard to declaration of the areas forming the Aruppukottai local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

97. Notification issued with G.O. Ms. No. 62, Agriculture, dated the 21st January 1974 in regard to regulation of trade over the purchase and sale of blackgram, chillies, tamarind, coconut, castor, cotton, redgram, cashewnut and cumbu in the Chingleput district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

98. Notification issued with G.O. Ms. No. 515, Rural Development and Local Administration, dated the 5th March 1974 in regard to declaration of the areas forming the Dharmapuri local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

99. Notification issued with G.O. Ms. No. 1161, Housing, dated the 1st December 1974 making the Tamil Nadu Slum Areas (Improvement and clearance) Acquisition Rules, 1973. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]



### B. *Reports, Notifications and other Papers.*

@ 53. The Madras City Police and Tamil Nadu Towns Nuisances (Amendment) Bill, 1974 with Annexure.

@ 54. The Tamil Nadu Gaming (Amendment) Bill, 1974 with Annexure.

@ 55. The Tamil Nadu Land Encroachment (Amendment) Bill, 1974 with Annexure.

---

@ Despatched to Members on 11th December 1974.

[1974 டிசம்பர் 13

## இணைப்பு 1.

123-ம் பக்கத்தில் 11 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்கள் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு அரசு பின்வரும் உதவியை அளிக்கிறது.

**தவணை முறையில் இயந்திரங்களைக் கொள்முதல் செய்தல்.**—உள்நாட்டு இயந்திரங்களையும் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களையும் வாங்கி வழங்குவதில் தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் தொழில் முனைவோருக்கு உதவி புரிகிறது. இயந்திரங்கள் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து ஓராண்டு இடைவெளிக்குப் பின்னர், அந்த இயந்திரத்தின் விலை 12 அரையாண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. சாதாரண இயந்திரங்களுக்காக ரூ. 3 லட்சம் வரையிலும் நுணுக்கமான இயந்திரங்களுக்காக ரூ. 5 லட்சம் வரையிலும் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

இயந்திரத்தின் விலை ரூ. 25,000-க்குக் குறைவாக இருந்தால், அதில் 5 சதவீதத்தையும், விலை ரூ. 25,000-க்கும் அதிகமாக இருந்தால் 10 சதவீதத்தையும் விரயக் காப்புத் தொகையாக (Margin Money) தொழில் முனைவோரிடமிருந்து தமிழ் நாடு சிறுதொழில்கள் வளர்ச்சிக் கழகம் வசூலிக்கிறது. வேலையில்லாத, பொறியியல் பட்டதாரிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோரிடமிருந்து தொடக்கத்தில் விரயக்காப்புத் தொகை வசூலிப்பது தள்ளிக்கொடுக்கப்படுகிறது.

கழகம் இதுவரையில் அளித்த உதவிகள் வருமாறு:—

| ஆண்டு. | இத்திட்டத்தால் பயனடைந்த தொழில் முனைவோரின் எண்ணிக்கை. | வாங்கப்பட்ட இயந்திரங்களின் மதிப்பு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1970–71 (தொடக்கத்தில் 5½ மாதம்) .. .. | 11 | 7·62 |
| 1971–72 .. .. | 154 | 75·91 |
| 1972–73 .. .. | 401 | 168·99 |
| 1973 ஏப்டல் முதல் 1974 ஜனவரி வரை | 443 | 168·49 |
| | 1,009 | 421·01 |



1974 டிசம்பர் 13]

**வணிக நோக்குடைய தொழிற்பேட்டைகள்:**—கட்டிடத்தின் அடித்தளத்தில் கடைகள்/பணிக்களரிகளுக்கும், முதல் மாடியில் குடியிருப்பதற்கும் இடவசதி செய்து கொடுப்பதே இத்தகைய தொழிற்பேட்டையின் நோக்கம். இந்தக்-கட்டிடங்கள் படித்துவிட்டு வேலையற்றிருப்போர் தொடக்கக் காலத்தில் 3 முதல் 5 ஆண்டுகளுக்குக் குறைந்த வாடகைத் தொகை அடிப்படையில் பணி நிலையங்கள் நடத்துவதற்காக ஒதுக்கப்படுகின்றன. அம்பத்தூர், வியாசர்பாடி, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், காரைக்குடி, சேலம், நாகர்கோவில், தஞ்சாவூர், பேட்டை, விருத்தாசலம் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளில் குடியிருப்போடு இணைந்த பணிக்கூடங்கள் 11 கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

**தொழிற்பேட்டைகள்.**—தொழில் நுட்பத் தகுதி பெற்ற தொழில் முனைவோருக்கு தொழிற்சாலைக்கான இடவசதிகள் அளிக்கவே தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுகின்றன. படித்துவிட்டு வேலைவாய்ப்பற்றிருப்போர் திட்டத்தின்கீழ் தொழிற்கூடங்களுக்கு, சதுர அடி ஒன்றுக்கு 10 காசு என்னும் ஈடுசெய் வீதத்தில் வாடகை வசூலிக்கப்படுகிறது. 1971-72 ஆம் ஆண்டில், அம்பத்தூர் தொழிற்பேட்டையில், ரூ. 4.35 லட்சம் செலவில் ஒவ்வொன்றும் 1,100 ச.அடி பரப்புள்ள 24 சிறு பணிக்கூடங்கள் கட்டப்பட்டு தொழில் நுட்பத் தகுதி பெற்றோருக்கு வாடகைக்கு விடப்பட்டன. இதைப்போலவே, 1972-73-ல் அம்பத்தூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, அடையாறு, கிண்டி ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளில் 60 பணிக்கூடங்கள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் ரூ. 44.18 லட்சம் செலவிடப்பட்டது.

தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் பணிக்கூடத் திட்டத்தின்கீழ், ரூ. 176.84 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பல்வேறு தொழிற்பேட்டைகளில், 231 பணிக்கூடங்கள் கட்டப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 231 தொழில் முனைவோர்கள் பயனடைந்துள்ளனர்.

**ஆலோசனைப் பணிகள்.**—சிறுதொழில்கள் தொடங்குவதற்காக நிதி நிர்வாகம், பொருள்கள் நிர்வாகம், பணியாளர் நிர்வாகம் முதலியன பற்றி தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் ஆலோசனைகள் நல்கி வருகிறது.

**தொழில் நுட்பப் பணியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்.**—படித்துவிட்டு வேலைவாய்ப்பற்றிருப்போர் பல் வேறு பொருள்களின் தயாரிப்பு அல்லது பழுதுபார்த்தல் பணியில் குறிப்பிட்ட காலங்களுக்கு அரசுச் செலவில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு அவர்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பில் முதலீடு செய்வதற்காக, இந்திய அரசும் 50 சதவீத மானியம், 50 சதவீதக் கடன் என்ற அடிப்படையில் நிதி அளிக்கிறது. பயிற்சி பெறும் உறுப்பினர் களுக்கு மாநில அரசும், பங்கு மூலதனக் கடன் வழங்குகிறது.

1971-72 ஆம் ஆண்டில் 4 கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மூலதன முதலீடு செய்வதன் மூலமும் வட்டியில்லாக் கடனாகவும், கடனாகவும் மொத்தம் ரூ. 2.00 லட்சம் வரையில் உதவி அளிக்கப் பட்டது. இதைப்போலவே, 1972-73 ஆம் ஆண்டில் ரூ. 5.43 லட்சமும், 1973-74 ஆம் ஆண்டில் ரூ. 25.77 லட்சமும் 4 சங்கங் களுக்கு பங்கு மூலதனத் தொகையாக வழங்கப்பட்டன.

**தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் உதவி.**— தொழில் நுட்பத் தகுதி பெற்றோருக்குச் சிறுதொழில்கள் தொடங்கவும், வேலைவாய்ப்பற்ற தொழில் நுட்பப் பணியாளர் களுக்கு ஆதாயமிக்க சொந்தத் தொழில் நடத்தவும் இக்கழகம் கடனுதவி அளிக்கிறது. இது பேரளவு ரூ. 2 லட்சம் வரையில் குறைந்தது ரூ. 10,000 வரையிலும் கடன் வழங்குகிறது. இந்தக் கடனுக்கு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டு கள் இடைவெளிவிட்டு பின்னர் ஏழு ஆண்டுத் தவணையில் இத் தொகை திருப்பிச் செலுத்தத் தக்கதாகும்.

இதுவரையில் இக்கழகத்தினால் வழங்கப்பட்ட மொத்த உதவி விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு | பயனடைந்த தொழில் நுட்பத் தகுதி பெற்றோரின் எண்ணிக்கை | அனுமதி வழங்கப்பட்ட தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1971–72 | 3 | 1·45 |
| 1972–73 | 12 | 9·97 |
| 1973–74 (31—12—73 வரை) | 3 | 2·64 |
| | 18 | 14·06 |

**தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம்—தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்—கூட்டுத் திட்டம் :**—குறைந்த வசதி





யுடைய தொழில் முனைவோர்கள், புதிதாகத் தொழிற்சாலைகள் அமைப்பதை அல்லது ஏற்கெனவே உள்ளவற்றை விரிவுபடுத்து வதையும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ் நாடு சிறுதொழில் முதலீட்டுக் கழகம், "தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம்—தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகக் கூட்டுத்திட்டம் என்னும் பெயரில் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இத் திட்டத்தின்கீழ், தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகமும் சேர்ந்து 10 சதவீத குறைந்த அளவு விரயக்காப்புத் தொகையுடன் குறைந்த வீத வட்டி வீதத்துடனும் கூட்டாக நிதி உதவி அளிக்கக் கருதப் பட்டுள்ளது. பின்தங்கிய பகுதியில் ஒரு திட்டம் அமைந்திருந் தால், அத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவில் 15 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

The following assistance is given by the Government to technically qualified persons to start industries :—

*Hire Purchase of machinery.*

The SIDCO helps entrepreneurs to procure and supply indigenous as well as imported machinery. The cost of machinery is recovered in 12 half-yearly instalments after an interval of one year from the date of receipt of machinery. The maximum assistance rendered is Rs. 3 lakhs in ordinary cases and Rs. 5 lakhs in cases involving sophisticated machinery.

The Small Industries Development Corporation Limited is collecting Margin Money at 5 per cent of the value of machinery from the entrepreneurs if it is less than Rs. 25,000 and at 10 per cent for machinery costing more than Rs. 25,000. The collection of initial margin money is waived in the case of unemployed engineering graduates and technocrats.

The Assistance given by the Corporation so far is as follows :—

| Year | No of enterpreneurs benefitted by the scheme, | Value of machinery provided. Rs. in lakhs) |
|---|---|---|
| 1970–71 (5 months in the initial set up) | 11 | 7.62 |
| 1971–72 | 154 | 75.91 |
| 1972–73 | 401 | 168.99 |
| April 73 to January 74 | 443 | 168.49 |
| Total | 1,009 | 421.01 |

*Commercial Estates.*—The idea of such an Estate is provide accommodation for shops/worksheds in the ground floor and residence in the first floor. These buildings are allotted to the educated unemployed for running service centres on a subsidised rental basis, for an initial period of 3 to 5 years. Eleven twin residence-*cum*-worksheds have been constructed and allotted in the Industrial Estates at Ambattur, Vyasarpadi, Madurai, Tiruchirappalli, Vellore, Karaikudi, Salem, Nagercoil, Thanjavur, Pettai and Vridhachalam.

*Industrial Estates.*—Industrial Estates are constructed to provide factory accommodation to technically qualified entrepreneurs. The rent charged for Industrial sheds under the Educated Unemployed Scheme subsidised at 10 paise per square feet. During 1971-72, 24 small worksheds of 1,100 square feet each were constructed in the Industrial Estate, Ambattur at a cost of Rs. 4.35 lakhs and allotted to technically qualified persons on rental basis. Similarly, 60 sheds were constructed and allotted during 1972-73, in the Industrial Estates at Ambattur, Coimbatore, Salem, Madurai, Adyar and Guindy. A sum of Rs. 44.18 lakhs was spent under this scheme.

Under the workshed scheme of Small Industries Development Corporation, 231 sheds have been constructed in various Industrial Estates at an estimated cost of Rs. 176.84 lakhs and 231 entrepreneurs have benefited under the scheme.

*Consultancy Services.*—The Small Industries Development Corporation is giving Consultancy Service on financial management material management, personnel management, etc., to small-scale industries.

*Formation of Technicians' Industrial Co-operative Societies.*—Educated unemployed persons are given training for specified periods at Government cost in the manufacture of various goods or in servicing. They are helped to form Co-operative Societies. The Government of India also provide funds to the State Government on 50 per cent grant and 50 per cent loan basis towards participation in the share capital structure of these societies. The State Government also sanction share capital loans to the trainee-members.



During 1971–72, Four Industrial Co-operative Societies were assisted by way of equity participation and loan assistance to the total extent of Rs. 2.00 lakhs. Similarly, four societies were assisted with a sum of Rs. 5.43 lakhs during 1972–73 and a sum of Rs. 25.77 lakhs was sanctioned during 1973–74, as share capital participation.

*Assistance rendered by Tamil Nadu Industrial Investment Corporation Limited.*—The Corporation assists by giving loans to technically qualified persons to start small-scale industries and unemployed technical persons to go into gainful self-employment. The maximum loan is Rs. 2 lakhs while the minimum is Rs. 10,000. The loan is repayable in seven annual instalments with three years of repayment holiday from the date of sanction.

The total assistance sanctioned by the Corporation so far is as follows :—

| Year. | No. of technocrats benefitted. | Amount sanctioned (RS. IN LAKHS) |
|---|---|---|
| 1971–72 | 3 | 1.45 |
| 1972–73 | 12 | 9.97 |
| 1973–74 (up to 31–12–73) | 3 | 2·64 |
| Total | 18 | 14.06 |

*TIIC—SIDCO—Consortium Scheme.*—The Tamil Nadu Industrial Investment Corporation Limited has since introduced a scheme under the name and style of TIIC—SIDCO—Consortium Scheme to encourage entrepreneurs with small means to set-up new units or expand existing ones. Under the scheme, joint financing of small-scale industries by TIIC and SIDCO at a reduced margin of 10 per cent and at concessional rates of interest is envisaged. A subsidy of 15 per cent of the total expenditure on a project is also given, if it is in a backward area.

## இணைப்பு II

[131-ம் பக்கத்தில 16-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குள்ள விடையைக் காண்க]

(a) Yes. The estimate total requirement for 1972–73 was 2.84 lakhs Nitrogen Tonnes and for 1973–74 it was 3.05 lakhs Nitrogen Tonnes.

(b) Estimate and Receipt of Chemical Fertilisers in Tamil Nadu for 1973–74 (February 1973 to January 1974)—

| | |
|---|---|
| 1. Estimated total requirements. | 3,05,000 N.T. |
| 2. Stock held at the commencement of Kharif and Rabi Season. | 22,000 N.T. |
| 3. Net requirements .. | 2,83,000 N.T. |
| 4. Promised supply from the Private Manufacturers. | 1,33,861 N.T. |
| 5. Promised supply from the Pool sources. | 1,49,139 N.T. |
| 6. Allotment by the Goverment of India. | 91,830 N.T. |
| 7. Supply actually received from the Manufacturers. | 1,04,214 N.T. |
| 3. Supply actually received from the Pool sources. | 87,753 N.T. |
| 9. Total Receipt .. .. | 1,91,967 N.T. |





## இணைப்பு III

[36-ம் பக்கத்தில் 19-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குள்ள விடையைக் காண்க.]

(அ) & (இ) ஆம், மானாவரி சாகுபடிக்கு ஏற்ற குறுகிய காலப்பயிர் வகைகளை தேர்ந்தெடுக்க விவசாயத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் விவரம் பின்வருமாறு:—

1954 முதல் 1964 வரையிலும் வறட்சி தாங்கக் கூடிய நெல் இனங்களை உருவாக்கும் திட்டம் ஒன்று செயல்பட்டதின் மூலம் 1963-64-ல் கோ 31 என்ற மத்திமகால நெல் ரகம் வெளியிடப் பட்டது.

நான்காவது திட்ட காலத்திற்குள் அதாவது 1973-ல், டி.கே.எம். 7 (குள்ளக்கார்) என்கிற குறுகிய கால, வறட்சி தாங்கக்கூடிய நெல் ரகம் வெளியிடப்பட்டுள்ளது. அதோடு ஒரு சிறந்த கல்சர் 1251 (டி.கே.எம். 6 டி.என். 1)-ம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. டி.கே.எம். 7 என்கிற ரகம் 108 நாட்கள் வயதுடையது; சொர்ணவாரி, சம்பா, நவரைப் பருவங்களுக்கும் தகுந்தது, நம் மாநிலத்தின் வட, தென் பகுதிகளில் கல்சர் 1251 அனுசரணை ஆராய்ச்சியில் சோதனை செய்யப்படுகிறது. இது வரை கிடைத்த விவரங்களின் மூலம் நேரடி விதைப்பில் திருநெல்வேலி மாவட்டத்தில் சராசரியாக 108 நாட்களில் ஹெக்டேருக்கு 4,684 கிலோ நெல் தந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இதுவன்றி, ஆடுதுறை மண்டல விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மிகவும் குறுகிய கால கல்சர் 7711 (ஐ.ஆர். 262 எ.டி.டீ. 27) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் வயது 85 முதல் 90 நாட்கள்; இது இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்யாகுமரி, செங்கற்பட்டு, வட ஆற்காடு முதலிய மாவட்டங்களில் பரிசோதனையில் இருக்கின்றது. இதன் மகசூல் சில இடங்களில் ஹெக்டேருக்கு ஆறு டன்னுக்கும் அதிகமாகவும் சாதாரண சூழ்நிலைகளில் சராசரியாக ஹெக்டேருக்கு 3.9 டன்னு கிடைத்துள்ளது.

கல்சர் 1251 (டி.கே.எம். 6 டி.என். 1) உழவர்களின் வயலில் நிலையான ரகங்களுடன் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது. புதிதும் உயர்ந்த உயர்ப்படிவ ((genotypes) ) ரகங்களைக் கொண்டு புது கரு ஒட்டுச் சேர்க்கும் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு இருக்கின்றன.

[1974 டிசம்பர் 13

**சோளம்.**—தென் மாவட்டங்களில் பயிரிட சி.ஓ.எச். 2 என்ற விரியச் சோளம் வெளியிடப்பட்டுள்ளது. இதனை கோவில்பட்டி உயரச் சோளம் என்று வழங்குவர். இவ்வகை சோளம் 90 நாள் பயிராகும். சராசரியில் ஏக்கருக்கு 44 குவிண்டால் தானியமும் 120 குவிண்டால் தீவனமும் இவ்வகை கொடுக்கிறது. இது முந்தைய உயர்வித்தான 120 நாள் வயதுடைய கே 3 என்ற சோளவகையை விட 42 சதவிகிதம் அதிக தானிய விளைச்சல் அளிக்கக் கூடியது. தீவன விளைச்சலிலும் சுமார் 19 சதவிகிதம் அதிகம் காண்பதாகும்.

இதேபோல் கோவை மாவட்ட பகுதிகளில் பயிரிடவும் சேலம், வட ஆற்காடு வட்டாரங்களில் பயிரிடவும் பொருத்தமான சி.ஓ.எச். 1 என்ற சோளம் உருவாக்கப்பட்டுள்ளது. இது 100-105 நாட்கள் வயதுடையது. இது ஆனி-ஆடிப் பட்டத்தில் ஹெக்டேருக்கு 63 குவிண்டால் தானியமும் 125 குவிண்டால் தீவனமும் அளிக்கக்கூடியது. இவை தவிர மேலும் சில குறுகிய கால புதுவகைகளை உருவாக்க சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

**கம்பு.**—குறுகியகால கம்பு இனங்கள் தமிழ் நாட்டில் ஆறேழு ஆண்டுகளாக பயிரிடப்பட்டுவருகின்றன. இவை 80 முதல் 90 நாட்களில் பலன் அளிப்பன. சாதாரணமாக மானாவாரியாக பயிராகும் நாட்டுக் கம்பு இனங்களும் 90 முதல் 95 நாட்களில் பலன் அளிப்பன. எனவே குறுகிய வயது என்பது கம்பு பயிரில் பெரும் பிரச்சினை ஆகாது. எச்.பி. 3 என்ற விரியக் கம்பு மட்டும் வறட்சி நிலையிலும் 75 நாட்களுக்குள் ஹெக்டேருக்கு 15 குவிண்டால் வரை தானிய மகசூல் தருவதாகும். எச்.பி. 3 விரியக் கம்பினை விட உயர்ந்த வகைகளையும் பூசன நோய்கள் தாக்காத புதிய இனங்களையும் உருவாக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**கேழ்வரகு.**—சில ஆண்டுகளுக்கு முன்வரை கொ. 1, கே 2 என்ற 120 நாட்கள் வயதுடைய இனங்கள் மானாவாரி கேழ்வரகு வட்டாரங்களுக்கு (சேலம், தர்மபுரி, வட ஆற்காடு முதலிய பகுதிகள்) பரிந்துரை செய்யப்பட்டன. தற்போது கோ 10, சாரதா, பி.ஆர். 202 முதலிய இனங்கள் பரிந்துரைக்கப்படு கின்றன. இவற்றில் கோ 10 என்பது 90-95 நாட்களில் அறு வடைக்கு வரும்; மற்ற இரண்டும் 100-105 நாட்களில் பலன் தருவன. மானாவாரியில் இவற்றின் தானிய விளைச்சல் சராசரி யாக ஹெக்டேருக்கு 20 குவிண்டால் ஆகும்.



1974 டிசம்பர் 13]

**வரகு.**—மானாவாரியில் மட்டும் பயிராகும் இச் சிறுதானியம் சாதாரணமாக 140 நாட்கள் வயதுடையது. தற்போது பயிரிட பரிந்துரை செய்யப்பட்டுள்ள கோ 2 என்ற இனமும் 140 நாட்கள் வயதுடையதே. குறுகியகால வயதுடைய வகைகளுக்கு இப் பயிரில் தேவை ஏற்படவில்லை. எனினும், தற்போதுள்ள கோ 2 வித்தினை விட சுமார் ஒரு மாதம் வயது குறைந்த அதிக விளைத்திறன் படைத்த சில வகைகளை உருவாக்க ஆராய்ச்சி நடத்தப்பட்டுவருகின்றது.

**பருத்தி.**—மானாவாரிய பருத்தி சாகுபடியில் பயிர் காலத்தில், பின்பருவத்தில் நிலவும் வறட்சியை தவிர்க்க, குறுகிய கால ரகங்கள் சாகுபடி செய்வது சிறந்தது. இதனை கருத்தில் கொண்டு கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தீவிர ஆராய்ச்சி நடத்தப்பட்டதில் "பாரதி" (எம்.சி.யு. 6) என்னும் புதிய ரகம் வெளியிடப்பட்டது. இது தற்போது மானாவாரியில் சாகுபடி ஆகும் கம்போடியா ரக "லட்சுமி" பருத்தியைவிட 15 நாட்களும், கருங்கண்ணி பருத்தி ரகமான கே 8-ஐ விட 30 நாட்களும் வயதில் குறைந்தது. "பாரதி" ஹெக்டேர் ஒன்றுக்கு 693 கிலோகிராம் பருத்தி மகசூல் அளிக்க வல்லது; 150 நாள் வயதுடையது; பஞ்சு மகசூல் ஹெக்டேருக்கு ஏறத்தாழ 253 கிலோகிராம் ஆகும். கே. 8 பருத்தி 180 நாள் வயதுடையது; பருத்தி மகசூல் ஹெக்டேர் ஒன்றுக்கு 315 கிலோகிராம் ஆகும்; பஞ்சு மகசூல் ஹெக்டேருக்கு 113 கிலோ கிராம் ஆகும்.

**நிலக்கடலை.**—நான்காம் திட்டகாலத்துக்கு முன் நிகழ்ந்த ஆராய்ச்சியின் பயனாக டி.எம்.வி. 2, டி.எம்.வி. 7 என்னும் இரண்டு குறுகியகால கொத்து நிலக்கடலை வகைகள் வெளியிடப் பட்டன. டி.எம்.வி. 2 வட ஆற்காட்டில் உள்ள குடியாத்தம் கடலை வகையிலிருந்து தேர்வு செய்யப்பட்டது. இதன் வயது 100 முதல் 105 நாட்கள் ஆகும். இதை இறவையிலும், மானா வாரியிலும் எல்லா பகுதிகளிலும் பயிரிடலாம். ஆயின் இவ் வகைக்கு விதை மந்தகாலம் இன்மையால் பயிர் முற்றியப் பிறகு மழை பெய்தால் ஈரத்தில் விதைகள் முளைக்கும் தன்மை உண்டு. மேலும் இந்த ரகம் "டிக்கா" இலைப்புள்ளி நோயால் எளிதில் பாதிக்கப்படுகிறது. இக்குறைகளை நீக்கும் பொருட்டு, "டென்னசி வெள்ளை" என்னும் அமெரிக்க கொத்து நிலக்கடலை யிலிருந்து "நேர்வழித் தேர்வு" மூலம் டி.எம்.வி. 7 என்னும்

கொத்து ரகம் உருவாக்கப்பட்டது. இது டி.எம்.வி. 2 கடலை வகையைவிட 20 சதம் கூடுதல் விளைச்சலும், முற்றியபின் 10 நாளைக்கு விதை உறக்காலமும் கொண்டது. இதன் வயது 105 நாட்களே. இது இலைப்புள்ளி நோயால் அதிக சேதம் அடைவதில்லை. இது ஹெக்டேருக்கு 1.32 டன்கள் மகசூல் காணும்.

நான்காம் ஐந்தாண்டு காலத் தொடக்கத்தில் புரோமி 3 என்னும் ஆப்பிரிக்க ரக நிலக்கடலையையும் யாசி என்னும் ஆப்பிரிக்க ரக கடலையையும் இனச்சேர்க்கை முறையில் இணைத்து டி.எம்.வி. 9 என்னும் உயர் விளைச்சல் ரகம் உருவாக்கப்பட்டது. இந்த ரக நிலக்கடலை டி.எம்.வி. 7 என்னும் ரகத்தை போன்று குறுகிய வயதுடையது. இதற்கு பயிர் முற்றிய பிறகு 15 நாட்களுக்கு விதை மந்தகாலம் உள்ளது. இதன் மகசூல் ஹெக்டேருக்கு 1.38 டன்கள். இதனை டிக்கா என்னும் இலைப்புள்ளி நோய் தாக்குவதில்லை. இது மானாவாரி, இறவை நிலங்களில் பயிர் செய்யப் பயன்படுகிறது. அகில இந்திய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் திண்டிவனத்தில் பல்வேறு கொத்துக்கடலை வகைகள் பரிசோதனை செய்யப்பட்டு முடிவாக நான்கு கடலை இனுசுகளான 14-4, டி.ஜி. 3, இ.எக்ஸ். 1.1, ஏ.எச். 8180 என்பன தேர்ந்தெடுக்கப்பட்டன.

இவற்றை டி.எம்.வி. 7 கொத்து ரகத்துடன் சோதிக்கப்பட்டு எந்த ரகம் மிக்க கூடுதல் விளைச்சல் கொடுக்கும் என ஆராயப்பட்டு வருகிறது.

**ஆமணக்கு.**—நான்காம் ஐந்தாண்டு திட்டத்திற்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் முடிவாக எஸ்.ஏ. 1, எஸ்.ஏ. 2 என்ற இரண்டு குறுகிய கால உயர்விளைச்சல் ஆமணக்கு ரகங்கள் உருவாகின. எஸ்.ஏ. 1-ஐ காட்டிலும் எஸ்.ஏ. 2 ஒரு மாதம் குறைவான வயது கொண்டது. இது வறட்சி தாங்க கூடியது. குறைவான மழை உள்ள இடங்களில் இதனை லாபகரமாக பயிர் செய்யலாம்.

**எள்.**—மானாவாரியில் குளிர்கால சாகுபடிக்கு (நவம்பர்-டிசம்பர் முதல் பிப்ரவரி-மார்ச்சு வரை) இரண்டு குறுகிய கால எள் இனுசுகளான டி.எம்.வி. 2, டி.எம்.வி. 3 என்பன ஆராய்ச்சியின் பயனாக வெளியிடப்பட்டன. இரு வகைகளும் 80 நாட்கள் வயது கொண்டவை. எண்ணெய் இருப்பு 50 முதல் 52 சதம் உடையவை.





**சூரியகாந்தி.**—கோவில்பட்டியில் உள்ள பிராந்திய ஆராய்ச்சி பண்ணையில் சூரியகாந்தி அபிவிருத்தித் திட்டத்தில் அநேக சூரிய காந்தி வகைகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு ரஷ்ய நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இ.சி. 68414 என்னும் உயர் விளைச்சல் ரகம் கே 1 என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இதன் வயது 90 நாட்கள். இன்னும் குறுகிய கால உயர்விளைச்சல் ரகங்கள் வெளியிட இனச்சேர்க்கை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீவிர ஆராய்ச்சியின் பலனாக மானாவாரி இயற்கைச் சூழ்நிலையில் பயிரிடுவதற்குத் தகுந்த, குறைந்த காலத்தில் பலனளிக்கக் கூடிய கீழ்க்கண்ட பயிர்வகைகளை தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது:—

**சோளம் சி.ஓ.எச். 2.**—கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் உள்ள மானாவாரி நிலப்பகுதியில் பயிரிடுவதற்கு ஏற்ற டௌனிமைல்ட்யூ என்னும் நோயினால் பாதிக்கப்படாத, 100 முதல் 105 நாட்களில் பலன் தரக்கூடிய உயரமான கலப்பினச் சோளம்.

**771 சோளம்.**—குட்டையான நடுத்தர சோளவகை; பயிர்ப் பூச்சித் தாக்குதலையும் நோய்களையும் தாங்கக்கூடிய சக்தி வாய்ந்தது; வறட்சி நிலைமையிலும் வளரக் கூடியது. இதில் உயரளவு செரிட்டோன் சத்து அடங்கியுள்ளது.

**சி.ஓ. 4 தினை.**—மழைக் காலங்களில் கலப்பினப் பயிருக்கு ஏற்ற 65 நாட்கள் குறுகிய கால அளவில் பலன் தரக்கூடிய தினை வகையாகும்.

சாமை; கேழ்வரகு.—சி.ஓ. 2 சாமையும், சி.ஓ. 10 கேழ்வரகும் குறுகிய காலப் பயிர்களாகும்; பலன் தர சுமார் 90 நாட்களாகும்.

**பருப்புகள்—சி.ஓ. 1. துவரை.**—தனித்துப் பயிரிடுவதற்கும் கலந்து பயிரிடுவதற்கும் சி.ஓ. 1 துவரை ஏற்றதாகும். பயிர்க்கால அளவு 135 நாட்களாகும்.

**சி.ஓ. 2. உளுந்து.**—மானாவாரி நிலைமையில் எல்லா பருவங்களிலும் பயிரிடக்கூடிய உளுந்து; இதை மற்ற பயிர்களுடன் கலந்து பயிரிடலாம்.

**சி.ஓ. 2. பச்சைப்பயறு.**—எல்லாக் காலங்களிலும் பயிரிடக்கூடிய 60 முதல் 70 நாட்களில் பலனளிக்கக்கூடிய பச்சைப்பயறு. இதில் 80 சதவீதம் ஒரே சமயத்தில் பூத்துக் காய்க்கிறது.

**சி.ஓ. 1. காராமணி.**—எல்லா மாவட்டங்களிலும் மானாவாரிப் பயிராகப் பயிரிடக் கூடிய, 100 நாட்களில் பலன் தரக்கூடிய காராமணிப் பயறு.

**சி.ஓ. 6, சி.ஓ. 7, சி.ஓ. 8.**—ஒரு ஹெக்டேருக்கு 4 டன்கள் விளைவைத் தரக்கூடிய, 120 நாட்களில் பலன் கொடுக்கும் 'அவரை' வகைகள்.

**பி.ஓ. எல். 2. வேர்க்கடலை.**—105 நாட்களில் பலன் தரக்கூடியது; ஒரு ஹெக்டேருக்கு 1,500 கிலோ கிராம் விளைச்சல் தரக்கூடியது.

(*a*) & (*b*) Yes. The details of experiments conducted by the Agricultural Department to evolve short duration crops suitable for rainfed cultivation are given below :—

*Paddy.*—A scheme for the evolution of drought resistant varieties in paddy functioned for ten years from 1954 to 1964 as a result of which a medium duration paddy strain, namely, Co. 31 was released for general cultivation in the year 1963–64.

During the first four years of the Fourth Plan period TKM 7 (Kullakar) a short duration drought resistant paddy strain was released for cultivation (during 1973). An elite culture 1251 [TKM 6 × T(N) 1] has been identified. TKM 7 matures in 108 days and it is suitable for Sornavari, Samba and Navarai-seasons.

The culture 1251 is now tested in adaptive research trials in the southern and northern parts of the State. From the available data from Tirunelveli District it is known that the culture 125 has recorded an average grain yeild of 4684 Kg./ha. in 108 days under direct seeding.

A very short duration culture 7711 of parentage (IR 262 × ADT 27) has been evolved at the Regional Agricultural Research Station, Aduthurai. It has a duration of 85 to 90 days. This culture is being tested in Ramanathapuram, Madurai, Tirunelveli,



Kanyakumari, Chingleput and North Arcot Districts. The available data indicated its good performance. Its grain yeild has gone even above six tons per hectare whereas the average yield is 3·9 tons per hectare under normal environments.

The elite culture 1251 of parentage [TKM 6 x T(N) 1] is being tested at farmers' fields along with sutiable standards. New Crossing Programmes are also under taken with new and improved genotypes.

*Cholam.*—For cultivating in tracts of southern districts, a new hybrid Co. H2 has been released. This is also known as Kovilpatti Tall Cholam.

This new variety matures in 90 days and yeilds about 44 quintals of grain and 120 quintals of fodder per hectare on an average. This amounts to a superiority of about 42 per cent in grain and 19 per cent in straw over the earlier release K 3 (which has a longer duration of 120 days). Likewise for the Periamanjal Cholam and Thalaivirichan Cholam tracts a new hybrid, namely, Co. H1 has been developed. This is suitable for June-July sowings and matures in 100–105 days. Its yeild potential is about 63 quintals grain and 125 quintals of fodder per hectare. Apart from these varieties a few other early maturing varieties are also presently under evolution.

*Cumbu.*—Short duration hybrid varieties of cumbu are under-spread in Tamil Nadu during the past six or seven years. These mature in 80–90 days. Since even native varieties of cumbu mature in 90–95 days, problem of "early maturity" has not been very pronounced in cumbu crop.

In severe drought also the hybrid variety HB. 3 yeilds up to 15 quintals of grain per hectare in a very short duration of 75 days. Research has been under taken to develop hybrids even superior to HB. 3 with better yeild potential and resistance to fungal diseases.

*Regi.*—A few years ago, long duration (120 days) varieties, such as Co. 1 and K2 varieties were being recommended for the rainfed tracts in the Districts of Salem, Dharmapuri and North Arcot.

Recently, varieties like Co.10, Saradha and PR. 202 are being recommended. Among these, Co. 10 comes to maturity in 90–95 days, while the other two mature in 100–105 days. These varieties are capable of yeilding about 20 quintals of grain per hectare on an average.

*Varagu.*—Varagu is cultivated exclusively under dry land conditions, and has a growth duration of about 140 days. The presently recommended strain Co. 2, is also of 140 days duration. Generally speaking, the need for short duration improved varieties in this crop is not emphasised. However presently, efforts have been commenced to develop short duration varieties in this crop also. A few selections maturing earlier than Co. 2 by about a month and with better yield potential are being evolved.

*Cotton.*—Investigations are underway to isolate very early cotton types, as an approach to escape the severe drought prevalent during the latter half of the cotton cropping season on the dry land areas. MCU. 6 cotton is one such strain evolved at the Regional Agricultural Research Station, Kovilpatti, which possesses shorter duration by 15 days than the existing Cambodia strain Laxmi and by about 30 days than the current Karunaganni Strain K.8.

MCU 6 (Bharathi) yeilds 693 Kilos of cotton kapas per hectare. It yeilds 253 Kilograms of lint per hectare. The variety K.8. cotton has a duration of 180 days. This yields 315 kilograms of kapas per hectare and 113 kilograms of lint per hectare. The average yeild of this strain is 1·32 tonnes per hectare.

*Groundnut.*—Two high yielding short duration strains of groundnut, viz., TMV 2 and TMV 7 were evolved prior to the Fourth Plan period. TMV 2 was evolved by mass selection form the Gudiyatham bunch variety. This has a duration of 100–105 days and is a cosmopolitan variety suited for cropping both under rainfed and irrigated conditions. This strain possesses the problem of non-dormancy, i.e., the seed germinates in the field itself at maturity immediately on receipt of rains. It is highly susceptible to the 'Tikka' leaf spot disease.

To get over the defects of the strain TMV 2, work was carried out in later years and the strain TMV 7 has been evolved. TMV 7 is a high yeilding bunch strain suited for rained cropping evolved by superline selection from the variety "Tennessee white" of





USA. This gives 20 per cent higher yeild than TMV 2 and has a dormancy period of 10 days beyond maturity. This has a duration of 105 days and is also comparatively tolerant to 'Tikka'. The average yeild of this strain is 1.32 tonnes per hectare.

In the beginning of the IV Five-Year Plan period TMV 9, a short duration bunch strain, evolved by hybridisation between Bromie-3 and Bassi (African types) was released. This has the same duration as TMV 7 and has dormancy period of 15 days and yeilds 1.38 tonnes per hectare and is highly tolerant to 'Tikka' leaf spot disease. It is suited for both rainfed and irrigated cropping. As a result of experiments conducted at the Regional Agricultural Research Station, Tindivanam under the All-India co-ordinated Oilseeds Improvement Project four varieties, viz., 14–4, TG. 3, EX. I. I and AH 8180 were selected as promising varieties.

These varieties have been raised under district trials with TMV 7 to find out which will give additional yeild.

*Castor.*—As a result of the breeding work initiated prior to the Fourth Plan, 2 high yeilding short duration strains suited for rainfed cropping, viz., SA 1 (135 days) and SA 2 (110 days) were evolved and released during Fourth Five-Year Plan period. SA 2 is shorter in duration than SA. 1 by a month and is drought resistant and suitable for areas where rainfall is low.

*Gingelly.*—As a result of experiments conducted prior to Fourth Plan period two short duration varieties, viz., TMV 2 and TMV 3 strains of gingelly have been evolved which are suited for rainfed cropping during cold weather (November–December to February–March). Both have a duration of 80 days with an oil content of 52 per cent.

*Sunflower.*—Under the scheme for the improvement of sunflower implemented at the Regional Agricultural Research Station, Kovilpatty a number of varieties were studied. A high yeilding strain viz., K1 CEC. 68414—Russia) with a duration of 90 days was released. Hybridisation work has also been taken up for evolution of short duration strains of sunflower.

As a result of intensive work the following strains suited to rainfed condition with short duration have been released by the Tamil Nadu Agricultural University recently.

*Cereals—Cholam Co. H2.*—A tall hybrid cholam variety with 100–105 days duration resistant to downy mildew suited for rainfed cropping in Coimbatore and southern districts.

771 *Cholam.*—A medium dwarf cholam varietly tolerant to pests, diseases and drought with high ceretone content.

*Co. 4 Tenai*—A short duration Tenai variety of 65 days suitable for mixed cropping under rainfed conditions.

*Samai and Ragi.*—Co. 2 Samai and Co. 10 Ragi. Short duration varieties having a duration of about 90 days.

*Pulses.*—Co. 1 Redgram suitable for pure as well as mixed cropping having a duration of 135 days.

*Co. 2 Blackgram.*—Non-season bound variety suitable to be grown under rainfed conditions as a mixed crop.

*Co. 2 Greengram*—Non-season bound variety maturing in 60 to 70 days with 80 per cent synchronous fruiting and maturity.

Co. 1 Cowpea having a duration of 100 days suitable for all districts as rainfed crop.

Co. 6, Co. 7 and Co. 8 Lab lab varieties which mature in 120 days yeilding about 4 tonnes per hectare.

*Pol. 2 Groundnut—Duration* 105 days. Yeilds 1,500 Kg. per hectare.





## இணைப்பு IV

45-ம் பக்கத்தில் 25-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குள்ள விடையைக் காண்க)

தேச உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சிறு தொழில் நடத்த பின்தங்கிய தாழ்த்தப்பட்டவர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தைக் காட்டும் மாவட்ட வாரியான விவர அறிக்கை.

கீழே கொடுக்கபட்டிருக்கும் அறிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நல அதிகாரிகளுக்கு வரப்பெற்ற கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை, வங்கிகளுக்கு அனுப்பிய எண்ணிக்கை, வங்கிகள் கடன் வழங்கிய எண்ணிக்கை, கடன் தொகை என்பவற்றை குறிப்பது ஆகும்:—

| மாவட்டத்தின் பெயர். | பெற்றுக்கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | அவைகளில் வங்கிகளுக்கு அனுப்பிய எண்ணிக்கை. | கடன் வழங்கிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | கடன் வழங்கப்பட்ட தொகை. | நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| சென்னை .. | 2,759 | 2,589 | 91 | 97,890·00 | 5 |
| செங்கல்பட்டு .. | 7,357 | 7,357 | 259 | 2,16,400·00 | 7,098 |
| வடஆற்காடு .. | 4,349 | 4,349 | 241 | 2,63,268·87 | 4,101 |
| தென்ஆற்காடு .. | 6,253 | 3,379 | 466 | 2,72,193·00 | 2,874 |
| திருச்சிராப்பள்ளி .. | 4,624 | 655 | 211 | 1,99,138·61 | 1,352 |
| தஞ்சாவூர் .. | 12,232 | 8,579 | 4,067 | 37,27,651·00 | 996 |
| மதுரை .. | 5,785 | 5,785 | 212 | 2,74,815·00 | 5,573 |
| கோயம்புத்தூர் .. | 1,290 | 1,290 | 2,240 | 4,36,480·00 | 1,050 |
| சேலம் .. | 5,450 | 5,108 | 2,658 | 21,67,105·00 | 270 |
| தர்மபுரி .. | 4,379 | 4,379 | 1,678 | 14,48,967·00 | 2,701 |
| நீலகிரி .. | 1,461 | 1,352 | 338 | 3,09,835·00 | .. |
| இராமநாதபுரம் .. | 15,019 | 12,209 | 1,029 | 4,04,140.00 | 2,810 |
| திருநெல்வேலி .. | 16,017 | 8,109 | 1,414 | 15,61,700·00 | 6,695 |
| கன்னியாகுமரி .. | 2,013 | 1,212 | 194 | 1,09,648.00 | 419 |
| ஆக மொத்தம் | 88,988 | 66,352 | 13,098 | 1,14,89,231·48 | 35,944 |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### சனிக்கிழமை, 1974 டிசம்பர் 14.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### நாட்ராம்பள்ளியில் தீயணைப்பு நிலையம்

*26 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்ராம்பள்ளியில் தீயணைப்பு நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி: தலைவர் அவர்களே, தீயணைக்கும் நிலையம் எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது? அவசரக் காலங்களில் விவசாயத்திற்கு உதவுகின்ற முறையில் தீயணைக்கும் படையைப் பயன்படுத்துமாறு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தீயணைக்கும் படையை விவசாயத்திற்கு எப்படிப் பயன் படுத்துவது என்று புரியவில்லை.

திரு. ஜி. ராமசாமி: கடலை பயிரிட்டு அறுவடையாகும்போது விவசாயிகள் அதை வெட்டுவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். அந்த நேரங்களிலும் பம்ப் செட் அமைத்துவிட்டுத் தண்ணீர் ஏறுகிற போது, வெட்டுவதற்கும் இம்மாதிரி தீயணைக்கும் படைகளைப் பயன்படுத்துவது மிகவும் நன்றாக இருக்கும். அம்மாதிரி செய்ய அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவைகளெல்லாம் ஓரிரு குறிப்பிட்ட இடங்களில் சிறிய அளவில் செய்ய வேண்டிய காரியங்களே தவிர, பெருமளவில் இவைகளைச் செய்ய இயலாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கருத்தை நான் அவசரப்பட்டு ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, தீயணைக்கும் நிலையங்கள் நகர்ப் புறங்களில்தான் அதிகம் இருக்கின்றன. கிராமப் புறங்களில் தீ விபத்து ஏற்பட்டால், அதை அணைக்கப் போதுமான வசதிகள் இல்லை. சிறிய அளவில், சிறு பாப்செட்களில் தீ விபத்து ஏற்படும்போது, அதற்காகத் தீயணைக்கும் கருவிகள் ஆங்காங்கு அமைப்பதற்கான வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது 26 இடங்களில் இந்தத் தீயணைக்கும் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இவைகளில் கிராமப் புறப் பகுதிகளும் இணைந்திருக்கின்றன.

Thiru K. S. KOTHANDARAMIAH: The previous Estimates Committee has recommended the opening of fire service station at Hosur. So far it has not been taken up. It is a fact that during five or six months in a year, very heavy strong wind blows in Hosur taluk and Harijan houses get into fire accident. So will the Hon. Minister look into this and sanction a fire station to Hosur?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே வரிசைக் கிரமமாக 59 இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது ஒப்புதல் அளிக்கப்பட்ட 26 இடங்கள் கூட அந்த வரிசைக் கிரமத்தின்படிதான் எடுத்துக்கொள்ளப்படும்.

(திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஜே. ஜேம்ஸ் எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி, நாட்ரம் பள்ளியில் தீயணைக்கும் நிலையம் தொடங்குவது பற்றியது. ஒவ்வொரு ஊரிலும் தீயணைக்கும் நிலையம் அமைக்கவேண்டும் என்பது இதில் வராது.





Thiru K. T. K. TANGAMANI: The Chair has allowed supplementaries. Arising out of those supplementaries, we would like to put some questions if the Hon. Minister is willing to answer.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வியில் வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சென்னையில் ஓரிடத்தில் தீ பிடித்ததற்குப் பிறகு, முக்கியமானவர்கள் போய்ச் சொல்லியும் கூட, ரொம்ப நேரத்திற்குப் பிறகுதான் தீயணைப்புப் படை வந்ததாக ஒரு பத்திரிகையில் விவரமாகப் படித்திருக்கிறேன். அதுபற்றி அரசு ஏதாவது விசாரணை நடத்தியிருக்கிறதா? அம்மாதிரித் தவறு இனி ஏற்படாமலிருக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி போன்ற மிகப் பொறுப்புள்ளவர்களே, ஓரிடத்தில் வந்தது, ஒரு பத்திரிகையில் போட்டிருந்தார்கள் என்ற முறையில் கேள்விகள் போட்டால், நான் பதில் சொல்ல இயலாதவனாக இருக்கிறேன். குறிப்பாகக் கேள்விகள் கேட்டால் அவைகள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பத்திரிகையின் பெயரைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். சென்னையில் நடந்த தீ விபத்து குறித்து 'துக்ளக்' பத்திரிகையில் ஒன்றரை பக்கம் எழுதியிருந்தார்கள். தீயணைக்கும் படையா? தீ உண்டாக்கும் படையா? என்று போட்டுச் சில விவரங்கள் கொடுத்திருந்தார்கள். அந்த விவரங்கள் அரசின் கவனத்திற்கு வந்ததா, அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று அறிந்துகொள்வதற்காகத் தான் கேட்கிறேனே தவிர, குறை கூற வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இம்மாதிரி விபத்துக்கள் வரும்போது அவற்றைத் தடுத்து நிறுத்த என்ன ஏற்பாடு செய்யப்பட்டது என்று அரசின் சார்பில் ஏதாவது அறிக்கை வந்தால் உதவியாக இருக்கும். அவ்வாறு ஏதாவது கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பத்திரிகையின் ஆசிரியரே ஒப்புக்கொண்டிருக்கிறார். எதுவாயிருந்தாலும் எதிர்த்து எழுதுவதுதான் கொள்கை என்று அவரே ஒப்புக்கொண்டிருப்பதால், அந்த வகையில் எழுதியிருக்க

கூடும். ஆனால், எழுதியதில் உண்மை இருந்தால் தொடர்புடைய அதிகாரிகள் உடனடியாக அதை விசாரித்திருப்பார்கள். இந்தக் கேள்விக்குப் பிறகு நானும் அதைப்பற்றி விசாரிக்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்னியாகுமரி ஜில்லாவில் அரசு பத்தாயிரம் ஏக்கரா ரப்பர் தோட்டம் வைத்திருக்கிறார்கள். வனத்தில் மரம் ஒன்றோடொன்று உராய்ந்து, வேனிற் காலத்தில் தீ விபத்து ஏற்படுகிறது. அப்படி விபத்து ஏற்பட்டு அரசுக்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, ரப்பர் தோட்டத்தின் அருகாமையில் இம்மாதிரி விபத்துக்களைத் தடுப்பதற்கு ஏதுவாக ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுபற்றி அதிகாரிகளைக் கலந்தாலோசித்து அது இயலுமா என்பதைப்பற்றி ஆராயலாம்.

### தீயணைப்புத் துறை

* 27 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீயணைப்புப் படையின் பெயரை மாற்றி அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தீயணைப்புத் துறை இயக்குநரிடமிருந்து இத்துறையின் பெயர் மாற்றம் குறித்து வரப் பெற்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நல்ல தமிழ்ப் பெயராக வைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் ஏதாவது இருக்கிறதா ? ஏதாவது பெயரைத் தெரிந்தெடுத்து இப்பொழுது வைத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தீயணைப்புத் துறை விழா ஒன்றிலே நான் உரையாற்றியபோது இதைக் குறிப்பிட்டேன். இந்தத் தீயணைப்புப் படையை, தீ விபத்து ஏற்பட்டால் அணைப்பதற்கு மாத்திரம்தான் பயன்படுத்துகிறார்கள் என்று தவறாக மக்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். மற்ற விபத்துக்களின் போதும் இது பயன்படுகிறது. விபத்துக்கு ஆளானவர்களைக் காப்பதற்கும் இது பயன்படுகிறது. அதையும் சுட்டிக் காட்டும்





வகையில் பெயர் அமைந்தால் பொருத்தமாக இருக்கும் என்று சொன்னேன். பிறகு அந்த அதிகாரிகளிடமிருந்து எனக்கு அனுப்பிவைக்கப்பட்ட பெயர் 'தீ மற்றும் விபத்துப் பாதுகாப்புப் படை' என்ற ஒரு பெயரைக் குறித்து அவர்கள் அனுப்பினார்கள். அது அவ்வளவு பொருத்தமானதாக இல்லாததால், பொறுத்திருந்து ஒரு நல்ல பெயர் கிடைக்கின்ற வரையில் இதே பெயர் நீடிக்கட்டும் என்று நான் கூறியிருக்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, இந்த தீ அணைப்புப் படைக்குப் பெயர் மாற்றுவதற்கு முன்னால் தீயணைப்புப் படைகள் போதுமான அளவுக்கு இருக்கிறதா என்று பார்த்தால், போதுமானதாக இன்று நாட்டில் இல்லை. நெல்லை மாவட்டத்தில் ஏறத்தாழ நான்கு இடங்களில்தான் இருக்கின்றன. வட்டத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே தீயணைப்பு நிலையங்கள் நிறுவுகின்ற வகையில், முன்பெல்லாம் ஆண்டொன்றுக்கு ஐந்து இடங்கள், ஆறு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது 1974-ம் ஆண்டில் 26 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. அந்தக் காரியங்கள் இப்பொழுது படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

* 28 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தில், உறுப்பினர்கள் யார், யார் ?

(இ) பாடநூல்களில் எந்தெந்த அடிப்படையில் பாடல்களும், பாடங்களும் சேர்க்கப்படுகின்றன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ)

(1) முதலமைச்சர்—தலைவர்.

(2) கல்வி அமைச்சர்—துணைத் தலைவர்.

(3) அரசுக் கல்வித் துறைச் செயலர்—உறுப்பினர்.

(4) அரசு நிதித்துறைச் செயலர்—உறுப்பினர்.

(5) நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்—உறுப்பினர்.

(6) எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர்—உறுப்பினர்.

(7) பள்ளிக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்.

(8) கல்லூரிக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்.

(9) தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்.

(இ) பாடத்திட்ட விதிகளின் அடிப்படையில், அந்தந்த நிபுணர் குழுக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பாடல்களும், பாடங்களும் சேர்க்கப்படுகின்றன.

*** 29 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்துக்கு மத்திய அரசு அளித்து வந்த மானிய உதவி சென்ற ஆண்டில் நிறுத்தப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) பாட நூல்கள் வெளியிடுவதற்கு மத்திய அரசு மானிய உதவி அளிப்பதில்லை ; ஆனால் கல்லூரி நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கு ரூ. 1 கோடி திட்டத்தின் கீழ் உதவி அளிக்கிறது. 1973-74-ம் ஆண்டில் ரூ. 18 லட்சம் உதவி கிடைத்தது. இதுவரையில் ரூ. 55,06,000 உதவி கிடைத்துள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, பாடத்திட்ட விதிகளின் அடிப்படையில், அந்தந்த நிபுணர் குழுக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பாடல்களும் பாடங்களும் சேர்க்கப்படுகின்றன என்று பதில் அளித்தார்கள். இப்பொழுதும் வழக்கம்போல் பழைய காலத்துப் பாடல்களே சேர்க்கப்படுகின்றன. காலத்திற்கேற்ப மாறுதல்களுடைய சிறந்த பாடல்கள் சேர்க்கப்படாமல் ஒரே மாதிரியான பழைய காலத்துப் பாடல்கள் நிறைய இடம் பெறுகின்றன.



பாவேந்தர் பாரதிதாசன், வாணிதாசன் ஆகியோர் பாடல்கள், அறிஞர் அண்ணாவின் கட்டுரைகள் ஆகியவை இன்னும் மிகுதியாகத் தமிழ்ப் பாட நூல்களில் இடம் பெறச் செய்ய இந்த நிறுவனம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பாடங்களைத் தெரிந்தெடுக்கின்ற வல்லுநர்களைத் தெரிந்தெடுக்க ஒரு கல்விக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் அவர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர், தமிழ்நாடு கல்வி நிறுவன இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், வட்டார ஆங்கிலக் கல்வி நிலையத்தினர் ஆகியோர் இடம் பெறும் குழுவினர் வல்லுநர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். அவர்கள் பார்த்து இப்பொழுது வகுக்கப்பட்டிருக்கிற பாடத் திட்டங்களினுடைய அடிப்படையில் பாடங்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். ஆகவே, இதை இதைச் செய்யவேண்டும் என்று நாம் வற்புறுத்துவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அந்தக் குழுவிற்கு எழுதியனுப்புவார்களானால், அவர்கள் ஆராய்ந்து எது ஏற்றது, எது ஏற்றதல்ல என்று கருதி, ஏற்றுக்கொள்வதைப் பாட நூல்களில் சேர்ப்பதற்கு முயற்சி செய்வார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, வருகின்ற ஆண்டுக்கு பாட நூல் நிறுவனம் மூலம் முதன் முதலாக டாக்டர் அம்பேத்கார் அவர்களின் வரலாற்றை சேர்ப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திலுள்ள உறுப்பினர்களே அதுபற்றி முடிவு செய்ய வேண்டும். அவர்கள் பரிந்துரை செய்வதை மேற்கொண்டு செயற்குழு, கல்விக் குழு, நிதிக் குழு பார்வையிட வேண்டும். கல்விக்குழுதான் இறுதி முடிவு செய்ய வேண்டும். அதிலே வல்லுநர்கள் இருக்கிறார்கள். சிறந்த முறையில் பாட நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்குத்தான் கல்விக் குழுவில் வல்லுநர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குழுவில் எந்தெந்தப் பாடங்களை சிலபஸ்படி அமைக்க வேண்டுமென்று முடிவு செய்கிறார்கள். அரசாங்கம் அவர் எழுதிய புத்தகத்தை வைக்க வேண்டும், அல்லது

இவர் எழுதிய பாடலை வைக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அந்த குழுவுக்கு எழுதி அனுப்பலாம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, கல்லூரிப் பாட நூலுக்கு மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் தருவதாக ஒப்புக் கொண்டு இதுவரையில் 55 லட்சம் ரூபாய் தந்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தி நூலுக்கு மத்திய அரசு சுமார் 100 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் செய்தி இருக்கிறது. இந்தி நூலுக்கு இவ்வளவு தொகை ஒதுக்கி கொடுக்கிற மத்திய அரசாங்கம் தமிழ் பாட நூல்களுக்குக் குறிப்பாக கல்லூரிப் பாட நூல்களுக்கு இன்னும் 10 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு, பல்வேறு மாநில கல்வி அமைச்சர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் திட்டமும், ஒவ்வொரு மாநில அரசும் 25 லட்சம் ரூபாய் அதோடு சேர்த்து வட்டார மொழிகளில் கல்லூரிப் பாட நூல்களை வெளியிடுவதற்கு உதவி செய்வதற்காகக் கொண்டுவரப் பட்டது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல இந்திய அரசு இந்தி மொழி வளர்ச்சிக்காக அதிகத் தொகை ஒதுக்கியிருக்கிறது. அப்படி இல்லாமல் 14 மொழி களுக்கும் சமத்துவ அடிப்படையில் நிதி வழங்க வேண்டுமே அல்லாமல் தனிப்பட்ட ஒரு மொழிக்கு மட்டும் கூடுதல் சலுகை அளிக்கக் கூடாது என்று கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று ஒதுக்கினால் கூட, மத்தியபிரதேசம், இராஜஸ்தான், உத்தரபிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் இந்தி நூல்களைத் தான் வெளியிடுகிறார்கள். ஆகவே, 4 கோடி ரூபாய் இந்தி மொழிக்கு என்று ஆகிவிடுகிறது. தமிழுக்கு, மலையாளத்திற்கு, கன்னடத்துக்கு ஒரு கோடி ரூபாய் என்ற விதத்தில் தான் வரும். இதையெல்லாம் கணக்கிட்டு சமத்துவ அடிப்படையில் எல்லா மாநில மொழிகளுக்கும் அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சரிடம் தெரிவித்திருக்கிறோம். அவர்களும் அரசாங்கத்தோடு பேசுவதாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், எந்த அளவுக்கு நிதி வரும் என்று சொல்ல முடியாது.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் ஆங்கிலப் பாடப் புத்தகங்களில் பாடங்களை மட்டும் வைத்துக்கொண்டு, பாடல்களை நீக்கிவிட வேண்டுமென்று பாட நூல் குழு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி அரசாங்கம் என்ன முடிவு செய்யப்போகிறது என்று அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆங்கிலப் பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் பெங்களூரில் இருக்கிற ஆங்கில பயிற்சிமொழி நிறுவனத்தார் தொகுத்துத் தருகிற பாடங்களை அப்படியே அச்சிட்டுக் கொடுக்கிறோம். தமிழ்நாட்டில் இருக்கிற 3-வது வகுப்பு முதல் 10-வது வகுப்பு வரையில் அவர்கள் தொகுத்தளிக்கும் பாடங்களையே அச்சிட்டு வழங்கி வருகிறோம். எஸ்.எஸ்.எல்.சி.-க்கு மட்டும் சென்னை பல்கலைக் கழகம் பாடங்களைத் தயாரித்து அளிக்கிறது. அதை அப்படியே வைத்துக்கொள்கிறோம்.

## *Text books in Telugu language.*

* 30 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(a) whether suitable arrangements have been made to bring out text books for Elementary schools in Telugu language;

(b) whether a Committee has been constituted to take up this work and the number of members therein; and

(c) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஆம். ஐந்து உறுப்பினர்கள்.

(உ) (1) பேராசிரியர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,
தெலுங்கு பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை-5.

தலைவர்

(2) திரு. பி. எஸ். கோபாலகிருஷ்ணா, எம்.ஏ.,
உதவி ஆசிரியர்,
விஞ்ஞான பிரகிதி,
தெலுங்கு பாஷா சமிதி,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-5. உறுப்பினர்

(3) திரு. டி. சின்னகிருஷ்ணய்யா, எம்.ஏ., எம். லிட்.,
தெலுங்கு உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை-5. உறுப்பினர்

(4) திரு. கெ. கோபாலன், எம்.ஏ.,
உதவி ஆசிரியர்,
ஸர் தியாகராய கல்லூரி,
சென்னை-21. உறுப்பினர்

(5) திரு. வை. பத்மநாபசுவாமி,
தெலுங்கு பண்டிட்,
சாரதா வித்யாலயா,
பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
சென்னை-17. உறுப்பினர்

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, I am thankful to the Hon. Minister for the information. But we have a number of grievances. Text-books for VIII and X Standards have been given to private Companies and they are not supplying them in time and we do not have text-books. Even for Mathematics, Science, etc. there are no text books. Since the members are from colleges, they do not know the position in elementary schools and high schools. I request the hon. Minister to give representation to High School Pandits and teachers in the Committee, so that text-books may be given in proper time and students may not suffer.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அமைக்கப்பட்டிருக்கும் குழுவினால் தெலுங்கிலும் பாட நூல்களில் என்னென்ன பகுதிகள், பாடங்கள் இருக்கலாம் என்று முடிவு செய்யப்படுகிறது. அவர்கள் வெளியிடும் கருத்துக்களின்படி தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் சிறப்பாக தெலுங்கு பாட நூல்களை வெளியிடுகிறது. கணக்கைப் பொறுத்த வரையில் 3 முதல் 6-வது வகுப்பு வரையில் உள்ள நூல்கள் வெளியிடப்படுகின்றன.



அதைப்போலவே விஞ்ஞானத்தில் 3 முதல் 6-வது வகுப்பு வரையில், ஹிஸ்டரியில் 4 முதல் 7-வது வகுப்பு வரையில், ஜாக்கிரஃபியில் 6 முதல் 7-வது வகுப்பு வரையில் உள்ள பாட நூல்களை தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் சிறப்பாக வெளியிட்டு, அவை பள்ளிகளில் வைக்கப்படுகின்றன. இந்த நூல்கள் வெளிவருகிறவரையில் ஆந்திர மாநிலம் வெளியிட்டிருக்கிற புத்தகங்களை வைத்திருக்கிறோம். மேல் வகுப்புகளுக்கு தனியார் போட்டிருக்கிற புத்தகங்கள் 'ஓல்டு சிலபஸ்' படி இருப்பதால், 1974-75-ம் ஆண்டுக்கு தனியார் வெளியிட்டுள்ள புத்தகங்களை 'டெக்ஸ்ட்புக் கமிட்டி' அங்கீகரித்தால் அவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுதுதான் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் சில வகுப்புகளுக்கு தெலுங்கு பாடப் புத்தகங்களைத் தயாரித்திருப்பதால், அடுத்து அடுத்து மேல் வகுப்புகளுக்கும் தயாரிக்கின்ற முயற்சியில் சிறப்பாக ஈடுபடும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, தெலுங்கு மொழிப் பாடப் புத்தகங்களை கொண்டுவர அரசு ஏற்பாடு செய்திருப்பதைப்போல் மலையாள மொழியிலும் பாடப் புத்தகங்கள் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது மொழிகளிலும் பாட நூல்களைக் கொண்டுவர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கணக்கு 3 முதல் 6-வது வகுப்பு வரையில், விஞ்ஞானம் 3 முதல் 6-வது வகுப்பு வரையில், ஹிஸ்டரி 4 முதல் 7-வது வகுப்பு வரையில் உள்ள பாட நூல்களை மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, கல்வி மற்றும் இதரப் பிரச்சனைகளில் ஏற்பட்டிருக்கிற சிக்கல்களை பைசல் செய்வதற்கு அரசாங்கம் கல்வி வாரியம் ஒன்றை அமைக்கும் ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அந்த உத்தேசம் இல்லை. கல்வி வாரியம் ஒன்றைத் தனியாக அமைத்துவிட்டால் இந்தச் சட்டமன்றத்தில் அதுபற்றி விவாதம் நடத்த முடியாது. அதனால் உரிய பலன் இல்லாமல் போய்விடும். இந்த மன்றத்தில் விவாதங்கள் நடைபெற்றால்தான் பாட முறைகள்

மற்றவைகள் எல்லாம் எப்படி எப்படி அமைய வேண்டுமென்றும், என்னென்ன முறைகளில் செலவு செய்ய வேண்டுமென்றும் கருத்துக்கள் கூற முடியும். கணக்குகளையும் மற்றவைகளையும் பரிசீலனை செய்ய முடியும். கல்வி வாரியம் என்று அமைத்து விட்டால் அதற்கும் சட்டமன்றத்திற்கும் தொடர்பு இல்லாமல் போய்விடும். லாப நோக்கத்தோடு செய்யப்படும் சில பல காரியங்களுக்காகத்தான் வாரியங்கள் அமைப்பது பொருத்தமாக இருக்கும். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் கல்வி வாரியம் அமைக்கும் முயற்சியில் ஈடுபடாமல் கல்வித் துறையைப் பல பிரிவுகளாகப் பிரித்து, இயக்குநர்களை அதிகப்படுத்திப் பணிகளைச் செம்மைப்படுத்த ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The Hon. Minister has stated that arrangements have been made to bring out the books. I am glad to know it. It should be implemented immediately. At least next year the books should be got ready so that students may not suffer. Will the Government do it, Sir ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதற்குள்ளாக நூல்கள் வெளியிடப்படுமானால் அடுத்த ஆண்டில் இருந்தே அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரலாம். இவை இன்னும் வராத காரணத்தினால், அந்தப் பகுதிகளில் ஆந்திர மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட நூல்களைத்தான் வைத்துக்கொண்டு வருகிறோம்.

*Pharmacy Council*

*31. Q.—No. Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :—

(*a*) whether it is a fact that the election of members to the Madras Pharmacy Council has not been conducted in time; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மருந்தியல் குழுவின் கடும் நிதிப் பற்றாக்குறை காரணமாக அந்தக் குழுவின் தேர்தல் செலவுகளைச் செய்ய அக் குழுவால் இயலவில்லை.





**திரு. என். கே. பழனிசாமி :** இது முக்கியமானதொரு கவுன்சில்—மெடிகல் கவுன்சிலுக்கு எந்த அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதே அந்தஸ்து இதற்கும் கொடுக்கப்பட்டு, இதன் தேர்தல் நடந்து இது நடைமுறையில் செயல்படும்படியாகச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஏற்கனவே அந்தக் குழு அமைக்கப்பட்டு ஆயிரம் ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அவர்கள் அளவுக்கு மீறி செலவிட்டு, செயல்பட்டுவிட்டு தேர்தலை நடத்துவதற்காக மூவாயிரம் ரூபாய் அரசாங்கம் தர வேண்டுமென்று கேட்டார்கள். மூவாயிரம் ரூபாய் தரவேண்டியது அவசியம்தானா என்று அரசாங்கம் பரிசீலித்து, அதற்கு அவசியம் இல்லையென்று கருதியது. தேர்தலுக்காக மூவாயிரம் ரூபாய் அளிப்பதுபற்றி திரும்பவும் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எந்த அடிப்படைக் கொள்கையில் கொடுப்பது என்பது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பார்மசி கவுன்சில் ஆண்டுக்கு எத்தனை முறை கூட வேண்டுமென்று விதி இருக்கிறது? எத்தனை முறை கூட்டப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இரண்டு மூன்று ஆண்டுகளாக அதற்குத் தேர்தல் நடத்தப்படாமல்—அது இயங்குகிறதா என்பதே சந்தேகத்தில் இருக்கிறது.

*Assistance for Pharmacy Units*

*32. Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state the details of assistance now given to the B. Pharmacy Graduates for the setting up of Pharmacy units in the State?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இம்மாநிலத்தில் மருந்தியல் பிரிவுகளை அமைப்பதற்காக மருந்தியல் பட்டதாரிகளுக்குத் தற்போது உதவி எதுவும் வழங்கப்படவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி :** இப்போது பில்சுகளின் விலையெல்லாம் உயர்ந்து கொண்டே போவதனால் ஏழை மக்கள் வாங்க முடியாத நிலை இருக்கிறது. மருந்து கலக்கிக் கொடுப்பதுதான்

*[1974 டிசம்பர் 14*

உதவிகரமாக இருக்கும். ஆகவே பாங்குகளின் மூலமாகவாவது கடன் கொடுத்து மருந்தியல் பட்டதாரிகள் இந்தத் தொழிலை நடத்த உதவி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இதில் இரண்டு மூன்று பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஒன்று மருந்தியல் பட்டதாரிகள் இதுபோன்ற கடைகளை வைக்க விரும்புகிறார்களா என்பது. அப்படியே அவர்கள் தொழில் நடத்துவதற்கு முன்வந்தாலும் மூலப்பொருள் அவர்களுக்குப் போதுமான அளவில் கிடைக்குமா என்பது. அடுத்து அவர்கள் இதுபோன்று தொழில் நடத்த கடனுக்கு முயற்சி செய்தார்களா என்பது. கடன் பெறுவதற்கு அவர்கள் இதுவரை எவ்வித முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை. அப்படிச் சிறிய அளவில் ஆரம்பித்தால் அது சிக்கனமாக இருக்குமா என்பது ஆகியவை எல்லாம் ஆலோசிக்கப் படவேண்டும்.

**திரு. கோவை செழியன் :** வேலையில்லாமல் இருக்கிற என்ஜினியரிங் பட்டதாரிகளுக்கு சிறு தொழில் நிறுவனத்தின் மூலமாகப் பண உதவி தந்து அவர்கள் தாங்களே தொழிற்சாலை ஆரம்பிக்க ஊக்குவிப்பதுபோல மருந்துக் கடை ஆரம்பிப்பதற்கும் மருந்தியல் பட்டதாரிகளுக்கு கடன் உதவி அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அப்போதுதான் அந்தக் கடையும் ஒழுங்காக இருக்கும். அவர்களுக்கும் வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருந்துக்கடை ஆரம்பிக்க வேண்டுமென்ற வகையில் எந்த விண்ணப்பமும் மருந்தியல் பட்டதாரிகளிடம் இருந்து வந்ததாகத் தெரியவில்லை. டிப்ளமா பார்மஸி பெற்றவர்கள் மருத்துவ மனைகளிலும், தனிப்பட்டோர் மருத்துவக் கடைகளிலும் அமர்கிற வாய்ப்பு இருக்கிறது. கம்பௌண்டராகப் பயிற்சி பெற்றவர்களும் அங்கே வேலையில் இருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் யாருமே மருந்துக்கடை வைக்க அனுமதிக்கக் கூடாது என்று தடுக்கப்பட வேண்டும் என்கிறபோதுதான் திரு. கோவை செழியன் அவர்களுடைய கருத்து ஆலோசிக்கப்பட வேண்டியதாக இருக்கும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** பி பார்மஸி க்ராஜுவேட்டுகள் வேலை வாய்ப்புக் கிடைக்காமல் சிரமப்படுகிறார்கள். அவர்கள் டிரக் இன்ஸ்பெக்டர்களாக இப்போது பணியாற்றுகிறார்கள். இன்னும் இந்தப் பதவியின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு



*1974 டிசம்பர் 14]*

முன்வருமா ? மேலும் இவர்களிடையே ஒரு குறை இருக்கிறது, பி. பார்மசி பட்டம் பெற்றவர்களே—இவர்களது பணியை மேற்பார்வை செய்கிற டெபுடி டைரக்டராக நியமிக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையும் இவர்களிடையே இருக்கிறது. அதையும் இந்த அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அங்கத்தினர் அவர்களுடைய கேள்வியைப்யொட்டிப் பார்த்தால் இத்துறை அமைச்சரே மருத்துவப் பட்டம் பெற்றவராகத்தான் இருக்கவேண்டும் என்கிற நிலை ஏற்படும். டிரக் இன்ஸ்பெக்டர்களைக் கேள்வி கேட்கிற இடத்தில் டெபுடி டைரக்டர் இருக்கிறார். இவரைக் கேள்வி கேட்கிற இடத்தில் நலத்துறை இயக்குநர் இருக்கிறார். மொத்தமாக இவர்கள் கொடுக்கிற அறிக்கைகளைப் படிக்கிற இடத்தில் மந்திரி இருக்கிறார்.

## நுங்கம்பாக்கம் பகுதியில் குடிநீர்த் தேக்கத் தொட்டி

**33 வினா—திரு. வை. பாலசுந்தரம் :* மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 30 லட்சம் ரூபாய் செலவில் நுங்கம்பாக்கம் ஏரிக்கரை திறந்தவெளி பகுதியில் குடிநீர் தேக்கத் தொட்டி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த வேலை எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) நுங்கம்பாக்கம் ஏரிக்கரை திறந்த வெளி பகுதியில் குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கும் திட்டம் ஒன்று தமிழ்நாடு நீர்வழங்கு—கழிவுநீரகற்று வாரியத்தின் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. இதற்காகும் செலவு இன்னும் முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லை.

(இ) தற்போது கூறுவதற்கு இடமில்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை சென்னை மாநகராட்சியின் நீண்டநாள் பிரச்சினையாக இருக்கிற காரணத்தினால் மக்களுடைய நலன் கருதி—இதை உடன்டியாகச் செய்து தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 டிசம்பர் 14

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நீண்ட நாட்களாக இருக்கிற பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தத் திட்டம் சென்னையில் ஒரு பகுதிக்கு மட்டுமானதுதான். இது போல மற்ற, மற்ற பகுதிகளுக்கான திட்டங்களும் இருக்கின்றன. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் சரியான செலவு என்ன ஆகும் என்பது இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. அவசிய, அவசரமான திட்டங்கள் முறையாக அப்போதைக்கப்போது எடுத்துக்கொள்ளப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is the Government aware of the fact that the tank already constructed is opposite to the place where my hon. friend Balasundaram mentions, that is, in Prakasam Mudali Street. It is not working properly. May I know whether the Government has any proposal to rectify the defects and make it work properly. If a tank is constructed in Nungambakkam, it will prevent the flow of water to tail-end areas of the city. In view of the fact, will the Government stop the construction of this tank till the Veeranam Scheme comes into being?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் கேட்ட முதல் கேள்விக்கு என்னிடத்தில் விடையில்லை. அது எந்த அளவுக்கு இயங்குகிறது என்பது மாநகராட்சியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். இது எய்டு பி ஸ்கீமில் வருகிறது. வீராணம் நீர்த்திட்டம் வருகிறபோதுதான்—இந்தத் தொட்டியில் தண்ணீர் சேமித்து விநியோகிக்க வேண்டும் என்கிற முறையில் இது யோசிக்கப்பட்டது. இதற்கு இன்னமும் திட்டவட்டமாகச் செலவு மதிப்பீடு வரவில்லை.

**செந்துறை, ஆண்டிமடம் ஒன்றியங்களில் நீர் வழங்கு திட்டங்கள்**

*34 **வினா—திரு. செ. சதாசிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்திலும் உடையார்பாளையம் வட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்திலும் குடிநீர் வழங்குவதற்கும் யுனிசெப் மூலம் ஆழக்குழாய் கிணறு போட்டுக் கொடுப்பதற்கென எந்தெந்த கிராமங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?



1974 டிசம்பர் 14]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) செந்துறை ஒன்றியத்தில் 17 கிராமங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. ஆண்டிமடம் ஒன்றியத்தில் 30 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(இ) யுனிசெப் உதவி திட்டத்தின் இரண்டாவது கட்ட வேலைகளின் போது வேலை துவங்கப்படும். இந்த ஆண்டிலே துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. செ. சதாசிவம்:** எப்போதுமே இந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பதாலும் தற்சமயம் பருவ மழையும் பொய்த்து விட்டதாலும் இந்தப் பகுதிக்கு ஸ்பெஷல் திட்டத்தின் மூலம் எல்லாக் கிராமங்களுக்கும் ஆழக் குழாய்க் கிணறுகள் அமைத்துக்கொடுத்து பொதுமக்களுக்குத் தண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த கிராமங்களில் ஏறத்தாழ 17 கிராமங்கள் ஒரு ஒன்றியத்திலும், 30 கிராமங்கள் மற்றொரு ஒன்றியத்திலும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் என்கிற புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே யுனிசெப் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு அமைக்கப்பட எடுத்துக்கொள்ளப்பட்ட குழாய்க் கிணறுகளின் வேலை முடிந்தவுடன் இந்த வேலையும் துவங்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 35, 36, 37, 38 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோள்படி பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

**கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்**

*39 **வினா—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பெரிய மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஈரோட்டைத் தலைமையாகக் கொண்டு, ஹெட்குவார்ட்டர்ஸ் ஆகக் கொண்டு ஒரு மாவட்டம் அமைப்பதற்கு முன்பு நடவடிக்கை மேற் கொண்டிருக்கிறார்கள். ஈரோட்டிலே கலெக்டரேட் தவிர, மீதி எல்லா ஆஃபீஸ்களும் அமைந்து இருக்கிற காரணத்தினால் ஈரோட்டிலே ஒரு ஹெட்குவார்ட்டர்ஸ் வைத்து, மாவட்டம் அமைக்க அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த எந்த மாவட்டத்தைப் பிரிக்கப் போகிறோம் என்று சொல்லிவிடுங்கள். எல்லோரும் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரேயடியாகப் பதில் சொல்லிவிடலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அரசைப் பொறுத்தவரையிலே, 7 மாவட்டங்களைப் பிரிக்கலாமா என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கலாமா என்று ஆலோசித்து வருகிறது. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதைப் பொறுத்த வரையில், நிதிக் கஷ்டம்தான் அந்தத் திட்டங்களை எல்லாம் உடனடியாக நிறைவேற்ற முடியாமல் தடுக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த எந்த மாவட்டத்தைப் பிரிக்கப் போகிறோம் என்று சொல்லிவிடுங்கள். எல்லோரும் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** யார் யாருக்கு அக்கறை இருக்கிறதோ, அவரவர்கள் தனித்தனியாகக் கேட்டால் சொல்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தின் தெற்கே தென் ஆற்காடும், வடக்கே ஆந்திராவும், அதல்லாமல் சென்னையைச் சுற்றியிருக்கிற பெரிய மாவட்டமாகவும் இருப்பதால், அம்மாவட்டத்தைச் சுற்றிப்பார்க்க



மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏறத்தாழ 5 நாள் சென்றால் கூட முடியவில்லை. அதுவும் கூட சென்னையைச் சுற்றியிருப்பதால், செங்கல்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, காஞ்சி புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டத்தையும், செங்கல்பட்டைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டத்தையும் வைத்து, இரண்டாகப் பிரிக்க அரசிடம் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நானே, ஏற்கனவே சொன்னதைப் போல் பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதாக உத்தேசம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள், செங்கல்பட்டு மாவட்டத்தைப் பிரிக்க ஒத்துக் கொண்டதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட ஒரு புதிய மாவட்டம் அமைத்து, என்னுடைய ஒன்றியத்தைப் போன்ற தலைநகரத் திலிருந்து 70 மைல் தூரத்திலுள்ள பகுதிகளைச் சேர்த்து, பிரித்து அமைக்கின்ற திட்டம் முன்பு இருந்ததே, அது இன்னும் அரசினுடைய சிந்தனையில் இருக்கிறதா, கைவிடப்பட்டதா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் ஏற்கனவே, சொன்னதைப் போல், பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதை பொறுத்தவரை, தனித்தனியாகக் கேள்வி கேட்பதை விட, என்னிடத்திலே, தனியாகக் கேட்டால் நான் இன்னும் அதிக விவரங்களைச் சொல்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே, எந்த எந்த மாவட்டங்கள் பிரிக்கப்படும் என்று சொல்லிவிட்டால் . . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் கேட்பது எனக்குப் புரிகிறது. வட ஆற்காடு மாவட்டத்தைப் பிரிக்கக் குறிப்பு இருக்கிறது.

[1974 டிசம்பர் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா உறுப்பினர்களும் அவரவர் மாவட்டத்தைப் பற்றி கேட்கக் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) விவரம் இல்லையென்றால் பரவாயில்லை.

### கோவை மாவட்ட அலுவலகம்

*40 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இட நெருக்கடியைப் போக்க அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கான புதிய இரண்டு மாடிக் கட்டடம் முதல் நிலையாகக் கட்டுவதற்காக, 1974-75-ம் ஆண்டில் ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை, வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதாக, ஜெயில் பக்கத்திலே இருக்கிற கிரவுண்டுக்கு மாற்றுவதாகச் சில அதிகாரிகள் சொன்னார்களே, அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஜெயிலுக்குப் பக்கத்திலே நாம் போக வேண்டாம். ஏற்கனவே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் காம்பவுண்டுக்குள்ளேயே கட்டுவதற்கான குறிப்பு இருக்கிறது.

### பகத்தூர்-நீலிபாளையம் சாலை

* 41 வினா—**திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பகத்தூர்-நீலிபாளையம் பாலம், சாலை அமைத்தல் குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?



1974 டிசம்பர் 14]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** குறிப்பிட்ட பாலம் சாலை வேலையை நெடுஞ்சாலைத்துறை மூலம் செய்ய, பொது நிதியிலிருந்து 1½ லட்ச ரூபாய் செலவு செய்ய காரமடை ஊராட்சி ஒன்றியத்துக்கு ஊராக வளர்ச்சி இயக்குநர் 6—7—1974-ல் அனுமதி வழங்கியுள்ளார்.

### *Representation from Electricity Department staff of Madras Corporation.*

* 42 *Q.*—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that the Retrenched Workers of the Madras Corporation Electricity Department have submitted any memorandum to the Government about January-February 1974; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) & (ஆ) இல்லை. எனினும், சென்னை மாநகராட்சி மின்சாரத்துறை சார்நிலைப் பணியாளர் சங்கத்தால் 11—2—1974-ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படியொன்றை, தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு 18—2—1974 ஆம் நாளன்று அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது.

**திரு. க. உரா. எட்மண்ட்:** தலைவரவர்களே, அதன்மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? எடுக்கவில்லையென்றால் உடனடியாக எடுக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, ஆட்குறைப்பினால் வேலையை விட்டு நீக்கப்பட்ட தற்காலிகப் பணியாளர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளுதல்; தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருதல்; பணிக்கொடையும் ஊதியக் கொடையும் வழங்கப்படுதல்; தமிழ்நாடு மின்சார வாரியத்திலுள்ள தொழிலாளர்களுக்குச் சமமாகத் தங்கள் சம்பளம் வரையறுக்கப்பட வேண்டும்; மேலும் பதவி உயர்வு வேண்டும் என்று இப்படிப்பட்ட காரியங்களைக் கேட்டிருக்கிறார்கள். அவைபற்றி நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம்.

[1974 டிசம்பர் 14

## கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

* 43 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 முதல் 1973 வரை தமிழகத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களில் கையாடல் செய்தது சம்பந்தமாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** 1971-73 வரையிலே 542 வழக்குகள் தொடரப்பட்டன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, கூட்டுறவு சங்கங்களில் கையாடல்கள் நிரம்ப நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, இதைக் குறைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதைக் குறைப்பதற்கு 1971-73 ஆண்டுகளிலே 542 வழக்குகள் தொடரப்பட்டன. 1974-லே மட்டும் 350 வழக்குகள் தொடரப்பட்டன.

**திரு. ஆ. பரந்தாமன் :** 1971-ம் ஆண்டில் தூத்துக்குடியிலே கூட்டுறவுத் துறையில் ஏறத்தாழ ரூ. 30 இலட்சத்துக்கு ஊழல் நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது. அந்த நேரத்திலே அதன் தலைவராக இருந்தவர் யார் ? அந்த விசாரணை எந்த அளவிலே இருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அப்பொழுது தலைவராக இருந்தவர் விராபாரு. ஆனால், அங்கே மோசடி நடந்ததாகத் தெரியவில்லை. அந்தச் சங்கத்திலே நஷ்டம் இருந்தது. அடுத்த கேள்வியிலே அதுபற்றி வருகிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இன்றைக்குள்ள நெருக்கடியான கட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் அத்தியாவசியமான பொருள்களை அளிப்பது, மற்ற சேவைகளைச் செய்யக்கூடிய நிலையிலிருக்க வேண்டும்.



1974 டிசம்பர் 14]

அங்கு கையாடல், ஊழல் போன்றவைகள் நடப்பதைத் தடுக்க, சந்தானம் கமிட்டியிலே சிபாரிசு செய்யப்பட்டதைப்போல, 3 வருஷம் முடிந்தவுடன், வேறு நிர்வாகம் வரக்கூடிய வகையில், மாற்ற அரசு முயற்சி செய்யுமா ? அப்படி முடியவில்லையென்று சொன்னாலும் கூட, அரசாங்கச் சிப்பந்திகளைப் போடுகிறோமே, செக்ரட்டரி போன்றவர்கள், 3 வருஷங்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று வகையில், வேறு அரசாங்க அதிகாரிகளைப் போட்டால்தான் ஊழல் இல்லாமல் இருக்கும், ஊழலை மறைக்க முடியாது என்பதை உணர்ந்து அதற்கான உத்தரவைப் போட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அவைபற்றியெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். 3 ஆண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. சில இடங்களிலே 3 ஆண்டுகளுக்கு மேல் இருக்கவேண்டுமென்று நம்முடைய கனம் உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது நிர்வாகத்தைப் பொறுத்திருக்கிறது. தொழிலிலே நல்ல ஈடுபாடு கொண்டு, முதல் இரண்டு ஆண்டுகளிலே நட்டப்பட்டாலும், மூன்றாவது ஆண்டிலே இலாபம் வருகின்ற அளவிலே, கொண்டு வருகின்ற, திறமையுள்ளவராக இருந்தால், மேலும் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், 3 ஆண்டுகளுக்கு மேல் கொடுக்கக் கூடாது என்று சட்டம் இருந்து வருகிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, ஏறத்தாழ 500 வழக்குகள் தொடரப்பட்டிருப்பதாக நம்முடைய அமைச்சரவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். பொதுவாக கூட்டுறவுத் துறையிலே ஒரு நபர் பதவியிலே இருந்து போன பிறகுதான் அவர் செய்த தவறுகள் எல்லாம் தெரிய வருகின்றன. ஆகவே, இவற்றைக் குறித்து, தனி வழக்கு விங் ஒன்றை வைத்து, உடனடியாக அந்த வழக்குகளைத் தீர்க்க அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, இவற்றை விரைவில் தீர்க்கத்தான் 3 ஏ.பி.பி.க்களை மாநிலம் பூராவுக்கும் சேர்த்து போட்டிருக்கிறோம். அதோடு, 1 எஸ்.பி., 1 டி.எஸ்.பி. கூட்டுறவுத் துறையில் தனியாக வழக்குப் பிரிவு எல்லாம் போட்டு வேலை நடைபெற்று வருகிறது.

[1974 டிசம்பர் 14

**திரு. எம். சுரேந்திரன்:** சார், கூட்டுறவு துறையிலே உள்ள வழக்குகளுடைய புள்ளி விவரத்தை அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால், அந்தப் புள்ளி விவரங்களைவிட அதிகமாக ஊழல்களும், கையாடல்களும் நடந்து கொண்டிருப்பதாகப் பரவலான கருத்து இருக்கிறது. அந்தக் கருத்துப்படி பார்க்கின்ற பொழுது, இப்படி அதிகமான தவறுகளுக்குக் காரணம், வழக்கு தொடருவதற்கும் அதிலே தீர்ப்பு கூறுவதற்கும் நீண்ட நாள் ஆகின்றது, சட்ட நுணுக்கங்கள் காரணமாக பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, இதை உடனடியாகக் கண்டுபிடித்து, உடனே தீர்ப்பதற்கு ஏதாவது முறையான நடவடிக்கை எடுத்தால்தான் அதைக் கட்டுப்படுத்த முடியும் என்று தோன்றுகிறது. அம்மாதிரியான முறையிலே, அமைச்சரவர்கள் சிந்திப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல தொந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்றால் தனியார்களிடமிருந்து கூட்டுறவுத் துறைக்கு எடுக்கும் நேரத்தில் தனியார்களே இதைச் சொல்கிறார்கள். இந்தச் சர்க்காருக்கு வணிக வியாபாரத்தை, மக்களுக்கு விநியோகிக்கின்ற வியாபாரத்தை கூட்டுறவுத் துறையில் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் கொள்கை இருப்பதால் வேகமாக எவ்வளவு நடவடிக்கை எடுக்க முடியுமோ அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்காகத் தான் இத்தனை அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். மேலும் ஊழல் நடைபெறாத அளவில் நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்கான முறைகள் இப்பொழுது கையாளப்பட்டு வருகின்றன.

**திரு. செ. கந்தப்பன்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தம்முடைய பதிலில் ஏராளமான வழக்குகள் இருக்கின்றன என்று பரவலாகப் பேசப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்ளும் முறையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். கவனத்திற்கு வரும் பிரச்சினைகள் அத்தனைக்கும் வழக்குகள் தொடரப்பட்டிருக்கிறதா? அல்லது வழக்கே தொடராத நிலையில் பிரச்சினைகள் இருக்கின்றனவா என்பதை அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து தெளிவுபடுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1974 டிசம்பர் 14]

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, கவனத்திற்கு வந்துள்ள எத்தனையோ விஷயங்களில் வழக்குகள் தொடர முடிந்தவைகளுக்கெல்லாம் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. சில விஷயங்கள் கவனத்திற்கு வருகின்றன, ஆனால் வழக்கு தொடர முடியாமல் சில விஷயங்கள் இருக்கலாம். கவனத்திற்கு வந்து வழக்கு தொடரக்கூடிய எதையும் நிறுத்தவில்லை. சில வழக்குகளில் தண்டனை கூட வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. நா. காசிராமன்:** தலைவரவர்களே, 800-க்கும் அதிகமான கையாடல் வழக்குகள் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எந்தக் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தமட்டிலும் மிக அதிகப்படியான தொகை இந்தக் கையாடலில் சம்பந்தப்பட்டிருக்கிறது, அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யார், யார் என்பதை அறிவிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அந்த விவரம் இப்பொழுது இல்லை. எது, எது என்று தனியாகக் கேட்டால் தனியான விவரம் தருகிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் இதுவரையிலும் கூட்டுறவுத் துறை சங்கங்கள் கையாடலில் ஏறக்குறைய 800 வழக்குகள் போடப்பட்டிருக்கிறது, வழக்குகள் போடப்பட்டிருக்கிறது என்று அரசாங்கத்திடமிருந்து அடிக்கடி தகவல் வருகிறது. ஆனால் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். வழக்குகள் போடப்பட்டிருக்கிறது என்று அரசாங்கத்திடமிருந்து அடிக்கடி தகவல் வருகிறது. ஆனால் போடப்பட்டிருக்கும் வழக்குகளில் எத்தனை வழக்குகளுக்கு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது? காரணம் என்னவென்றால் சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் கூடச் சொன்னேன், திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவுச் சங்கத்தில் கையாடல் செய்யப்பட்டிருப்பது பற்றி. எனக்கு இப்பொழுது தகவல் வந்திருக்கிறது, அதைத் திரும்பப் பெற இருப்பதாக. இப்படிப்பட்ட சம்பவங்களில் எத்தனை வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

[1974 டிசம்பர் 14

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, 1971-ஆம் ஆண்டில் 194 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே 49 வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. 1972-ஆம் ஆண்டில் 188 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே தண்டனை அளிக்கப்பட்டது 61 வழக்குகள். 1973-ஆம் ஆண்டில் 160 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே தண்டனை அளிக்கப்பட்டவை 5 வழக்குகள். மற்றவைகள் வழக்கு மன்றத்தில் இருக்கின்றன, சில போலீஸ் இன்வெஸ்டிகேஷனில் இருக்கின்றன.

**திரு. க. உரொ எட்மண்ட் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். ஒரு கிளாரிபிகேஷன் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிறகு இன்னொரு கேள்வி கேட்க வேண்டுமென்றால் கொடுக்கிறேன். கிளாரிபிகேஷன் கேட்கத் தான் கேள்வி.

THIRU G. R. EDMUND : He has not answered my question. My question is, out of so many cases registered so far, in how many cases have the charge-sheet been filed ? But the Hon. Minister 's answer is regarding the disposal of the cases. I do not want to know about the number of cases. What I want is in exactly how many cases have the charge-sheets been filed ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தனிக் கேள்வி போடவும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், 1971-லிருந்து 1973 ஆம் ஆண்டு வரைக்கும் இந்த இலாக்காவிலே மோசடி என்று மிஸ்-அப்பிரோபிரியேஷன் நடந்த கேஸ்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 1971-ஆம் ஆண்டிலே தஞ்சையைப் பொறுத்தவரையில் இதே மன்றத்தில் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது, 1 கோடிக்கும் அதிகமாக சர்சார்ஜ் செய்யப்பட்டதாகச் சொல்லப் பட்டதே அந்த கேஸ் ஏதாவது எடுக்கப்பட்டதா ? அது எந்த நிலையில் இருக்கிறது ? அதில் யார் யார் எதிரிகளாகச் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, மொத்தமாக வழக்குகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். அநேகமாக அடுத்த திங்களில் சார்ஜ் ஷீட் கொடுத்து, 1 கோடியே 77 இலட்சத்திற்கான வழக்குகள் அதிலே பரிசீலனைக்கு உள்ளாக்கப்



1974 டிசம்பர் 14]

பட்டிருக்கிறது. அதிலே வழக்குகள் விசாரணையில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், சாட்சிகள் நிரம்ப இருக்கிறார்கள். இன்னும் கிளைச் சங்கங்களின் கணக்கை எடுப்பதால் தாமதமாக விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அடுத்த திங்களில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இருந்தாலும் மேனேஜ்மெண்ட் உயர் நீதிமன்றத்திலே எல்லா 'ஃபைல்களும்' வேண்டுமென்று டிசம்பர் மாதம் 1-ஆம் தேதி கோர்ட்டிலே தாக்கல் செய்திருக்கிறார்கள். மறுபடியும் 17-ஆம் தேதி விசாரணை போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு உடனடியாக அந்த வழக்கு தொடரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து வினா எண் 44.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, இது முக்கியமான கேள்வி, ரொம்ப நேரமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1½ மணி நேரம் கேள்வி நேரத்தைக் கொண்டு போனீர்களே என்று நேற்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அதன்படி பார்த்தால் 1 மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டுமென்ற நிலையில் எத்தனை பேருக்குக் கொடுக்க முடியும் என்பதைப் பாருங்கள். இந்த ஒரு கேள்விக்கு மட்டும் 11 துணைக் கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, ஒன்றை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் பொழுது நீங்கள் தயவு செய்து நியாயமான கேள்விகளை மட்டும் தேர்ந்தெடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** .
ஒரு முறை பேசிவிட்டார்கள் என்பதற்காக மறுபடியும் அதைப் பேசிக்கொண்டிருப்பது மன்ற உறுப்பினர்களின் பெருமையைக் கெடுக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். அப்படி மன்ற உறுப்பினர்களின் பெருமையைக் கெடுக்கக்கூடிய நிகழ்ச்சி எதையும் அனுமதிக்க முடியாது. எனவே அந்த நிகழ்ச்சியை சபைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன், பத்திரிகையாளர்களும் அதை வெளியிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[1974 டிசம்பர் 14

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்,

If any Question particularising any area, say, Tirunelveli, then it is different; but . . . .
திருநெல்வேலியைப்பற்றி ஒரு கேள்வி வருகிறது என்றால் அதிலே சப்ளிமெண்டரி கேள்விகள் அதிகமாக வராது. ஆனால் ஜெனரல் கொஸ்டினாக இருந்தால் 'கோஆப்பரேஷன்' பற்றி வருகிறபோது அதிகமாக சப்ளிமெண்டரி கேள்விகள் வரத்தான் செய்யும், அப்போது அதிகமான துணைக் கேள்விகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்விகள் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே 11 துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கேள்வி நேரம் முடிய 10 நிமிடங்கள்தான் இருக்கின்றன, இன்னும் முடிக்கவேண்டிய கேள்விகளும் இருக்கின்றன. பேசவேண்டிய கருத்துக்களையெல்லாம் பிறகு வருகிற விவாதங்களிலே உறுப்பினர்கள் பேசிக் கொள்ளலாம்.

## நெல்லை மாவட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

* 44 வினா—**திரு. இரா. இராமலிங்கம்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடியிலுள்ள நெல்லை மாவட்டக் கூட்டுறவு விற்பனை விநியோகச் சங்கத்தில் இதுவரையில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி நாலாம் ஆண்டு ஜூன் திங்கள் முப்பதாம் நாள் வரை 38.15 இலட்சம் நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. இரா. இராமலிங்கம்:** நிர்வாகக் குழுவைக் கலைக்கும்போது அந்தச் சங்கத்தினுடைய இழப்பு 10 லட்சமாக இருந்தது, இன்றைக்கு 40 லட்சமாக வளர்ந்துவிட்டது. இந்த நிலைமையிலே அந்தச் சங்கம் லாபகரமாக நடைபெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது அந்தச் சங்கத்தை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா?



1974 டிசம்பர் 14]

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அப்போது 17 லட்சமாக இருந்தது இப்போது அதிகமாக இருந்தாலும் கடைசி இரண்டு ஆண்டுகளாக லாபம் வந்துகொண்டிருக்கிறது. இனி லாபம் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** 1971-73 ஆம் ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையிலே போடப்பட்ட வழக்குகளிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கேள்வி முடிந்து விட்டது. இது கேள்வி எண் 44, இதை நான் அனுமதிக்கவில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் உள்ள நெல்லை மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அதிகமான நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் சம்பந்தப்பட்ட ரைஸ்மில்லில் வேண்டிய விலை கொடுக்க முடியாத நிலை ஆனது. இரண்டாவது கொள்முதல் செய்யப்பட்டதிலும் சாக்குகளும் காணாமல் போய்விட்டன. அந்த ரைஸ்மில்லை நடத்த முடியவில்லை என்றால் அதை லீஸ்-க்கு விடவேண்டும் அல்லது நிலைமையைச் சீர்திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும், அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அரிசி ஆலை மூடப்பட்டிருந்தது. ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி நாலாம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் நாளிலிருந்து லாபம் கிடைத்து வருகிறது. மறுபடியும் அந்த அரிசி ஆலை ஓடுகிறது. மாதம் 25 ஆயிரம் ரூபாய் அளவிலே லாபம் கிடைக்கிற முறையிலே செயல்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் நிகர லாபம் அந்த சொசைட்டி மூலம் கிடைக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நஷ்டம் ஏற்பட்டால் ஒரு சொசைட்டி கலைக்கப்படுகிறது. மேலும் நஷ்டம் வருகிறது என்றால் அதற்கு என்ன காரணம் என்று அரசாங்கம் ஆராய்ந்ததா? நஷ்டம் தொடர்ந்து வருகிறது என்றால் அதைச் சீர்திருத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எப்போதும் வியாபாரத்திலே லாப நஷ்டம் வருவது அந்த அந்தக் காலத்திலே இருக்கிற கொள்முதலைப் பொறுத்தது. கொள்முதலில் நஷ்டம் வந்தால் தனிப்பட்டவர்கள் காரணம் என்று சொல்லமுடியாது.

மீண்டும் லாபமாக நடப்பதற்கு என்ன என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கலாம். அந்த முறையிலே எடுக்கப்பட்டு கடைசி இரண்டு ஆண்டுகளாக லாபத்திலே ஓடுகிறது. மேலும் லாபத்திலே ஓடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**திரு. க. உரொ. எட்மண்ட்** : வியாபாரத்தில் லாப நஷ்டம் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நான் அப்படியே அதை ஏற்றுக்கொள்கிறேன். தூத்துக்குடி சங்கத்தைப் பொறுத்த வரையில் நஷ்டம் ஏற்படுவதற்கும் காரணம் அதிகாரிகள் தவறு என்று வணிக்கை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அறிக்கையைப் பரிசீலனைசெய்து அவர்கள்மேல் நடவடிக்கை எடுத்து நஷ்டத்தை வசூல்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : தணிக்கை செய்து தான் மறுபடியும் தனி அதிகாரி போட்டிருக்கிறார்கள். வசூல் செய்யவேண்டிய நிலைமை இருந்தால் அப்போதே செய்திருப் பார்கள்.

**திரு. எஸ். வடிவேல்**: இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கையாடல் நடந்ததைப் போல திருவாரூரிலே உள்ள சங்கத்திலேயும் ஒரு கோடி ரூபாய் கையாடல் நடந்திருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? யாராவது கைது செய்யப் பட்டிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : திருவாரூர் சங்கத்திலே ஜாயின்ட் ரிஜிஸ்திராராக இருந்தவர் கைது செய்யப் பட்டிருக்கிறார். அதிலே பணிபுரிந்த ராமசாமி என்ற அதிகாரி கைது செய்யப்பட்டு வழக்கு பதிவுசெய்யப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : தூத்துக்குடி கூட்டுறவு சங்கத்திலே ஏதாவது பணம் கையாடல் செய்யப்பட்டிருந்து அதை ரைட் ஆப் செய்திருக்கிறார்களா? அதைப்பற்றி விவரங்கள் இருந்தால் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : அப்படி ஒன்றும் தெரியவில்லை.





*Fixed Deposits with State Housing Board*

*45. Q.—Thiru G. R. EDMUND : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the State Housing Board has been permitted to accept Fixed Deposits; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பொதுமக்களிட மிருந்து காலம் குறித்த வைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்வதற்கு 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

*Manufacture of mineral rich food*

*46. Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :—

(a) whether it is a fact that a pilot project for the manufacture of mineral rich food has been launched in Gandhigram in Madurai district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை** : (அ) ஆம்.

(இ) காந்தி கிராமம் கிராமச் சுகாதார—குடும்ப நலத் திட்ட நிறுவனம் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்துடன் சேர்ந்து, மதுரை மாவட்டத்திலேயே விளையும் உணவுப் பொருள்களையும், உணவு ஆகக்ப் பொருள்களையும் கொண்டு 'வின் உணவு' Win food எனப்படும் புரதச்சத்து மிகுந்த குழந்தை உணவை (தாய்ப்பால் மறக்கடிப்பது) மலிவு விலையில் தயாரித்துள்ளது. "வின் உணவு" தயாரிப்பதற்கான சோதனை அடிப்படைத் தொழிற்சாலை ஒன்றை காந்திகிராமம் நிறுவனம் அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது. மாநில அரசின் பல்வேறு சத்துணவுத் திட்டங்களில் இந்த உணவு பயன்படுத்திக் கொள்ளப்படும். இதற்கென்று அந்நிறுவனத்திற்கு ரூ. 55,000 மானியமும், ரூ. 2 இலட்சம் வட்டி யில்லாக் கடனும் துறையின் மூலமாக வழங்கப்பட்டன. குழந்தை உணவுத் தயாரிப்பு 1974 ஆகஸ்டு இறுதியில் தொடங்குமென எதிர் பார்க்கப்பட்டது. அது அண்மையிலே ஒன்பதாம்நாள் அன்று அங்கு ஆளுநர் அவர்களால் தொடங்கப்பெற்றும் இருக்கிறது.

[1974 டிசம்பர் 14

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த உணவுக்கு வின் என்று பெயர். இது நல்லமுறையிலே இருப்பதன் காரணமாக அந்த உணவை அதிகமாக விளம்பரம் செய்யவும் மற்றப் பகுதிகளுக்கு இந்த உணவைத் தயாரித்துக் கொடுக்கவும் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** இது ஒரு முன் மாதிரியான திட்டம் ஆனபடியால் இது தற்போது புதியதாகத் தொடங்கப் பெற்றிருந்தது. பரீட்சார்த்தமாகச் செயல்படச் செய்து அது எந்த அளவிற்குப் பயன்படும் என்பதை அறிந்து கொண்டு, பின்னால் வேண்டுமானால் மாநில அளவிலே விரிவு செய்யவேண்டுமென்றுதான் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திருவண்ணாமலை ஈசானிய மடம்

*47 **வினா—திரு. எஸ். முருகையன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை, ஈசானிய மடத்திற்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் அண்மையில் ஏதேனும் விற்கப்பட்டதா?

(இ) விற்பதற்கான அனுமதியை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கமிஷனரிடம் பெறப்பட்டதா?

(உ) விற்ற பணம் எதற்காகச் செலவழிக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) மற்றும் (இ) ஆம்.

(உ) நீண்ட கால வைப்புத் தொகையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. எஸ். முருகையன்:** தலைவர் அவர்களே, நீண்டகால வைப்புத் தொகை என்ற முறையில் முதலீடு செய்யப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக அந்த மடாதிபதி அந்த மடத்தினுடைய சொத்துக்களையெல்லாம் விற்று அதை நீண்டகால வைப்புத் தொகையில் போடுவதும், பிறகு அதை வாங்கி ஆடம்பரமாகச் செலவுசெய்வதுமாக இருக்கிறார். ஏற்கனவே செய்ததும் அல்லாமல் மீண்டும் செய்துகொண்டிருக்கிறார். அரசாங்கம் அதைக் கண்காணித்து அந்தத் தொகையை நல்லமுறையிலே செலவழிக்கச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?



1974 டிசம்பர் 14]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** எந்த மடாதிபதியாக இருந்தாலும் அல்லது எந்த மத நிறுவனமாக இருந்தாலும் அந்தச் சொத்துக்களை விற்கவேண்டுமானால் ஆணையருடைய அனுமதி பெற்றுத்தான் விற்கவேண்டும். அதோடு வைப்புத் தொகையிலே வைத்துள்ள பணத்தைச் செலவழிக்கவேண்டுமானாலும்கூட ஆணையரின் அனுமதி பெற்றுத்தான் செலவு செய்ய வேண்டும். முறையான செலவாக இருந்தால் அனுமதி தருகிறார் ஆணையர். தவறான செலவு என்றால் யார் கேட்டாலும் அனுமதிப்பது கிடையாது.

(முற்பகல் 10-00)

**திரு. முனு ஆதி:** அந்த மடாதிபதி அனுபவித்து வருகிற சொத்துக்கு டிரஸ்ட் உண்டா? ரமண மகரிஷி பரம்பரையைச் சேர்ந்தவருக்கு என்று உயில் எழுதப்பட்டு அவர் ஒருவருக்குத்தான் அதிகாரம் இருக்கிறதா? சொத்துப் பராமரிப்பு தனி மனிதன் கையில் இருக்கிறதா? அல்லது அரசாங்கம் டிரஸ்ட் நியமித்திருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரமண மகரிஷி அல்ல. இது ஈசானிய மடம்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அரசியல் சட்டப்படி மடங்களுக்கு அறங்காவலர்களை நியமிக்க முடியாது. பரம்பரை அறங்காவலர்களாக மடாதிபதிகள் நிர்வகித்து வருகிறார்கள். வரவு-செலவு, சொத்துக் கண்காணிப்பு அரசாங்கத்தினுடைய ஆளுகைக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த ஈசானிய மடத்தைச் சேர்ந்தவர்கள் பல நல்ல காரியங்களை, சமூக காரியங்களைச் செய்து வருகிறார்கள். அறவை விடுதியைக் கூட நடத்தி வருகிறார்கள். அதற்காகத்தான் இந்தப் பணம் செலவழிக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால் மேலும் ஊக்கமளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. இந்தப் பணத்தைப் பொறுத்தவரை பிக்செட் டெப்பாசிட்டில் போட்டு வைத்திருக்கிறார்கள். நியாயமான செலவுக்குத் தேவை என்று கேட்பார்களேயானால் ஆணையர் பரிசீலிப்பார்.

[1974 டிசம்பர் 14

**திரு. எஸ். முருகையன் :** இதுவரை அந்த மடத்தின் சொத்துக்கள் எவ்வளவுக்கு விற்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு வைப்புத் தொகையாக இருக்கிறது? அவர்கள் நல்ல காரியங்களைச் செய்வதாக அம்மையார் அவர்கள் சொன்னார்கள். நல்ல காரியங்களைச் செய்வதற்கு டிரஸ்ட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சொத்தை விற்று நடத்த வேண்டுமென்ற சூழ்நிலை இல்லை. எவ்வளவு தொகை இருக்கிறது? எவ்வளவு நிலம் விற்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இதற்கான நஞ்சை, புஞ்சை நிலங்களில் திருவண்ணாமலை வட்டத்தில் உசம்பாடி கிராமத்தில் 13.68 ஏக்கர் நிலமும், சிலாப்பந்தல் கிராமத்தில் 31 சென்ட் நிலமும், திருவண்ணாமலை நகரத்தில் 41¾ சென்ட் நிலமும் விற்கப்படுவதற்கு ஆணையாளர் அனுமதி கொடுத்துள்ளார். 6—4—1972-ல் ஏலத் தொகை படி ரூ. 53,470-ம், அதற்குப்பிறகு 18—8—1972-ல் ஏலத் தொகை படி ரூ. 22,125-ம்—ஒட்டு மொத்தமாக 75,595 ரூபாய் பிக்ஸட் டெப்பாசிட்டில் போடப் பட்டுள்ளது. அதல்லாமல் திருவண்ணாமலைக்குப் பக்கத்தில் 54½ சென்ட் நிலத்தை ஏலப்படி ரூ. 200-க்கு விற்க ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

## திருச்செந்தூர் கோவில் திருப்பணி

*48 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் திருப்பணி வேலை ஆரம்பமாகிவிட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) முன்பே ஆரம்பமாகி பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

(இ) சஷ்டி மண்டபம், வெள்ளித் தேர், தங்கத் தேர், மண்டபத்தில் குளிர் சாதனங்கள் அமைத்தல், மற்றும் மகா மண்டபம், தூண்கள் கட்டுதல் ஆகிய திருப்பணி வேலைகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டு விட்டன. தற்சமயம் வெளிப் பிரகாரங்களில் திருப்பணி வேலைகள் துவங்கி நடைபெற்று வருகின்றன.



1974 டிசம்பர் 14]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** திருச்செந்தூர் கோயில் திருப்பணிக்கு ஒதுக்கப்பட்ட தொகை விவரம் எவ்வளவு? இந்தப் பணிகள் அத்தனையும் எப்போது முடிவுறும்?

**மாண்புமிகு திரு. கண்ணப்பன் :** 1970 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 44,95,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 20,22,000 ரூபாய்க்கான வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதி இருக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. நா. காசிராமன் :** கடற்கரையில் அருகில் அமைந்துள்ள திருச்செந்தூர்க் கோயில் கிழக்குப் பகுதி கடல் அலையின் வேகத்தில் பாதிக்கப்பட்டு சில மண்டபங்கள் இடிந்து விழுந்து விட்டதாகத் தெரிகிறது. அதற்கு, பம்பாய் மாரின் டிரைவ் பகுதியில் அலையின் வேகத்தைக் குறைக்க ப்ரீஸ்ட்ரெஸ்டு கான்கிரீட் போட்டிருப்பது போல் இங்கும் போட்டு அலையின் வேகத்தைக் குறைத்து கோயிலுக்குப் பழுது ஏற்படாமல் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** எந்த மண்டபமும் இடிந்து விழவில்லை. கடற்கரை அரிப்பு ஏற்படும் என்று கருதி ஏற்கனவே, ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய அரசு உதவி வேண்டுமென்று கேட்கப்பட்டு அங்கிருந்து நிதி உதவி தர முடியாது என்று மறுத்துவிட்ட பிறகு கோயில் நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு கடலரிப்பைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடந்து முடிந்து தற்போது பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு தியேட்டர் கார்ப்பரேஷன்

*49 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :**
**திரு. த. சோனையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தியேட்டர் கார்ப்பரேஷன் ஆரம்பம் ஆன தினத்திலிருந்து நாளது தேதி வரை திரைப்படக் கொட்டகைகள் நிறுவுவதற்கென கடன் கோரி பெறப்பட்ட மனுக்கள் எத்தனை?

(இ) அவைகளுள், எத்தனை மனுக்களுக்கு எவ்வளவு கடன் வழங்கப்பட்டுள்ளது?

[1974 டிசம்பர் 14

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** 12-12-1974 வரை பெறப்பட்ட மனுக்கள் 103. அனுமதிக்கப்பட்ட மனுக்கள் 76. கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ரூ. 83,90,000. இதுவரை வழங்கப்பட்ட தொகை 34 மனுக்களுக்கு ரூ. 30 லட்சம்.

**திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** கடன் பெற்றவர்கள் குறித்த காலத்திற்குள் தியேட்டரைக் கட்டி முடிக்க வேண்டுமென்ற விதிமுறை உள்ளதா? யார் யார் கட்டடம் கட்டியிருக்கிறார்கள்? கட்டத் தவறியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** கொடுத்த தொகையைக் கொண்டு கட்டடங்கள் கட்டி ஒரு மாதம் இரண்டு மாதங்களுக்குள் முடிவுற்று படங்கள் காட்டுகின்ற நிலைமை இருக்கிறதே தவிர இன்னும் ஒன்றும் திறக்கப்படவில்லை என்ற நிலைமை இல்லை.

**திரு. த. சோனையா:** நபர் ஒன்றுக்கு தியேட்டர் கட்டுவதற்குக் கொடுக்கப்படுகின்ற தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** ரூ. 1,20,000.

**திரு. முனு ஆதி:** தியேட்டர் கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன் செமி-பர்மனென்ட், பர்மனென்ட் இரண்டும் அடங்கியதா? செமி-பர்மனென்ட் தியேட்டருக்கு எவ்வளவு தொகை? பர்மனென்ட் தியேட்டருக்கு எவ்வளவு தொகை?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** செமிபர்மனென்ட் தியேட்டருக்குத்தான் இந்த ஸ்கீம். தியேட்டர் கார்ப்பரேஷனிலுள்ள குழு 1,20,000 ரூபாய் ஒரு தியேட்டருக்குக் கடனைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறது. அரசாங்கம் அல்ல.

**திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** எஸ்டிமேட் தொகையில் எவ்வளவு சதவிகிதம் கடனாக வழங்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** 77 சதவிகிதம்.

**டாக்டர் க. நாகராஜன்:** செமி-பர்மனென்ட் தியேட்டர் கட்ட 2 லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. அதற்கு உரிமை ஐந்து ஆண்டுகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஐந்து ஆண்டுக்



1974 டிசம்பர் 14]

காலத்தை நீட்டித்து பத்தாண்டுக் காலம் என்று மாற்ற முன்வர வேண்டும். செமி-பர்மனென்ட் தியேட்டர் அல்லது பர்மனென்ட் தியேட்டர் என்று மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** இதற்காக அரசாங்க அதிகாரிகளும், தியேட்டர் துறையில் அனுபவம் பெற்ற உறுப்பினர்களும் கொண்ட குழு ஒன்று இருக்கிறது. குழு ஆலோசனை செய்து என்ன சொல்லுகிறதோ அந்த ஆலோசனையின்பேரில் அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தற்போது பொருளாதார நெருக்கடியை முன்னிட்டு அரசாங்க நிர்மாணங்களைக் கூட நிறுத்தி வைத்திருக்கும்போது சினிமா தியேட்டர்கள் கட்ட கடன் வழங்குகிற முறை தேவையில்லை என்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? சினிமா தியேட்டர்களை செல்வந்தர்கள் கட்டுகிறார்கள். சொந்தப் பணத்தைக் கொண்டு அந்தத் தொழிலை நடத்த வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதற்காகக் கடன் கொடுப்பதை நிறுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** பணம் படைத்தவர்கள் சினிமா தியேட்டர்களைக் கட்டுவதோடு மட்டுமல்லாமல் நடுத்தர மக்களும் இந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமென்று விரும்பிய காரணத்தால் இந்த நிலை உருவாகியிருக்குமென்று நம்புகிறேன். எனக்கு அது தெரியாது. முதலிலே அப்படி நினைத்து முடிவு செய்திருக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** செமி-பர்மனென்ட் தியேட்டருக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் என் முடிவு செய்தது? பர்மனென்ட் தியேட்டருக்கும் பணம் கொடுக்க முன்வராத காரணம் என்ன? செமி-பர்மனென்ட் தியேட்டர் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பர்மனென்ட் தியேட்டராக வேண்டுமென்றால் அப்போது யார் கடன் கொடுப்பது? வசதி இல்லாதவர்கள் அப்படியே நிறுத்திவிட்டால் கொடுத்த பணம் 1,20,000 ரூபாய் பாழாகிவிடுமே. இதையெல்லாம் பரிசீலித்துப் பார்க்க மீண்டும் ஆலோசனைக் குழு ஒன்றை அரசு போட்டு எந்த முறையைக் கையாள வேண்டுமென்று முடிவு எடுக்க முன்வருமா?

[1974 டிசம்பர் 14

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** பட்டணங்களில் பல லட்சக்கணக்கான முதலீடு போட்டு கொட்டகைகளைக் கட்டி நடத்த வசதி இருக்கிறது. கிராமப் புறங்களில் கொட்டகையை துணியைப் போட்டு நடத்துவார்கள். அதை ஓரளவு நிவர்த்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் நடுத்தர மக்களும் இந்தத் தொழிலில் ஈடுபடலாம் என்ற வகையில் செமி-பர்மனென்ட் தியேட்டர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று குழு நிபுணர்கள் முடிவு எடுத்திருக்கலாம். எனக்குத் தெரியாது. அதிகப் பணம் கொடுத்து நிலையான தியேட்டர்களாகக் கட்டக்கூடாதா என்று கேட்கிறார்கள். இதை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

## திரைப்பட அரங்குகள்

* 50 வினா—**திரு. எஸ். அழகுத் தேவர் :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் சினிமா கொட்டகைகளை அரசுடைமையாக்கப்படும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** (அ) அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கோவை செழியன் :** தமிழக அரசு தமிழ்நாட்டில் இருக்கிற தியேட்டர்களை எல்லாம் தேசவுடைமையாக்கப் போவதாகச் சொன்னார்கள். அந்த முடிவு எதனால் எடுக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும். மேலும் கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் இப்போதே பல தியேட்டர்களுக்குச் சென்று ஒரு குறிப்பிட்ட, எம்.ஜி.ஆர். படத்தைப் போடக்கூடாது என்று வற்புறுத்துகிறார்கள். தனிப்பட்ட முதலாளிகளிடத்திலேயே வற்புறுத்துகிறார்கள். அப்படியிருக்க அவைகளை நாஷனலைஸ் செய்துவிட்டால் குறிப்பிட்ட ஒருசிலரின் படங்களை மட்டும்தான் போடவேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவு போட்டால் என்னவது ? இதுபற்றி அரசின் விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 14]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** திரு. செழியன் அவர்கள் குற்றஞ்சாட்டுவதுபோல் கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் போடவேண்டாம் என்று வற்புறுத்தவில்லை. வரி ஏய்ப்பை மட்டுந்தான் அவர்கள் கண்டுபிடிக்கிறார்களே, ஒரு படத்தைப் போடவேண்டாம் என்று எந்த அதிகாரியும் சொல்ல மாட்டார்கள். போட்டால்தானே எங்களுக்கு வருமானம் வரும். எங்களது ஆசை அதுபோன்ற படங்கள் அதிகமாகப் போடவேண்டும், அதிக வருமானம் வரவேண்டும் என்பதுதான். வரி ஏய்ப்பைத் தான் அதிகாரிகள் கண்டுபிடிக்கிறார்கள்.

## *New Industries in Thanjavur district*

* 35 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government have requested the Engineering and Design Organisation of the Fertilisers and Chemicals Travancore Limited, to prepare and submit a techno-economic survey report for the setting up of industries in Thanjavur district;

(*b*) if so, whether the report has been received by the Government; and

(*c*) the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டமன்றப் பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

THIRU N. K. PALANISAMY :

"Sugar industries, Distillery Project, Insecticide Formulation Plant, Fish Meal and Oil Plant, Paper Carton Making Plant, Recovery of Zinc, Carbon Electrode and Manganese Dioxide from used dry Cells, etc."

இம்மாதிரி முக்கியமான தொழில்களுக்கு சிபார்சு செய்திருக்கிறது. இந்த முக்கியமான தொழில்கள் பூராவும் தஞ்சாவூரில் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? அல்லது, அவைகளை ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுப்பார்களா ?

---

@ 391–392-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 டிசம்பர் 14

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் அரசாங்கமே முடிவு எடுத்தது. மற்ற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இராமநாதபுரத்தில் தொழில்களை ஆரம்பிப்பதில் காட்டும் ஆர்வம் தஞ்சை மாவட்டத்திற்குக் காட்டப்படவில்லையே, அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போதுதான் அம்மையார் அவர்களுக்குத் தஞ்சை மாவட்டமோ என்ற சந்தேகம் வருகிறது. எந்த மாவட்டமாக இருந்தாலும் இந்த அரசுக்கு அன்பு உண்டு.

**திரு. ஆ. கு. சுப்பையா:** வேதாரண்யம் பகுதியில் மெரைன் காம்ப்ளக்ஸ் என்று உப்பை மூலப்பொருளாகக் கொண்ட ஒரு இரசாயனத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே அங்கு உப்புத் தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது. ப்ரோமின் ப்ளான்ட்க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கமே நிலம் எடுத்து அங்கு ஒரு பெரிய ஸால்ட் காம்ப்ளக்ஸ் உருவாக்கலாமா என்பது பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** தஞ்சை மாவட்டம் முழுவதும் தொழில் துறையில் பிற்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு தொடங்கப்படுகிற தொழில்களுக்கு சப்ஸிடி கொடுக்கிற முறையில் பாக்வேர்ட் ஏரியாவாக அது டிக்ளேர் செய்யப்படவில்லை. தஞ்சை மாவட்டம் நமது முதல் அமைச்சர் அவர்கள் பிறந்த மாவட்டம். அங்கு வெறும் நெல் மட்டுமே விளைகிறது. எனவே, அங்கு தொழில்கள் ஆரம்பிக்கும்போது தஞ்சை மாவட்டத்தையும், சிதம்பரம் போன்ற தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சில பகுதிகளையும் தொழில் துறையில் பாக்வேர்ட் ஏரியா என்று நோட்டிபை செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தொழில் துறையில் சப்ஸிடி கொடுக்கிற பாக்வேர்ட்னஸ் என்ற வகையை மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டம் தொழில் துறை



1974 டிசம்பர் 14]

யில் பாக்வேர்ட் என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் டெக்னோ எக்கனாமிக் சர்வே செய்து தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

* 36 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டி:**
திரு. எஸ். டென்னிஸ்:
**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டத்தில் கார்டு போர்டுகள் உற்பத்தி ஆலை ஒன்று தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) தனியார் துறையில் கார்டு போர்டுகள் உற்பத்தி செய்ய மாயூரத்திற்கு அருகில் உள்ள மல்லியக் கொல்லை என்ற ஊரில் ஒரு தொழிற்சாலையும் மன்னார்குடிக்கு அருகில் உள்ள குமாரபுரம் என்ற ஊரில் மற்றொரு தொழிற்சாலையும் நிறுவத் திட்டங்கள் உள்ளன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தத் தொழிற்சாலைக்கு அரசு ஏதாவது கடன் வழங்கியிருக்கிறதா? இது எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அரசு நேரடியாகக் கடன் வழங்கவில்லை.

**திரு. சி. கணேசன்:** ஏற்கனவே, மாயூரம் பகுதி செம்பனார் கோவிலில் கார்ட்போர்ட் பாக்டரி ஒன்று துவக்கப்பட்டு அது இப்போது செயல்படாமல் இருக்கிறது. மீண்டும் அது செயல்படுத்தப்படுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உறுப்பினர் அவர்கள்தான் நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது எனக்கு அதை அறிவுறுத்தினார்கள். ஆண்டு ஒன்றுக்கு மூவாயிரம் டன் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைக்கு அவர்கள் அனுமதி பெற்றிருக்கிறார்கள். நம்முடைய சிபார்சு மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய டி.ஜி.டி.டி. ரெஜிஸ்ட்ரேஷனை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். வேலையைத் துரிதமாகத் துவங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1974 டிசம்பர் 14

Visit of World Bank Team to Ambathur Industrial Estate.

* 37 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether any team of the World Bank visited this State to inspect the Ambattur Industrial Estate at the instance of the Central Government in February 1974; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) ஆம். தேவையான மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு சர்வதேச வளர்ச்சி சங்கக் கடன் மூலம் உதவி பெறக்கூடிய தொழிற்சாலைகளைப்பற்றி தெரிந்து கொள்வதற்காக உலக வங்கிக்குழு இந்திய அரசின் அழைப்பின் பேரில் அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கு வருகை தந்தது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அம்பத்தூரில் மிகவும் சிறப்பான முறையில் இருக்கக்கூடிய இந்தியா மீட்டேர்ஸ் நம் மாநில, மத்திய அரசு உதவி பெற்று—கிட்டத்தட்ட 800 பேர்கள் வேலை செய்து வந்த அது ஆறு மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பாக்டரியைத் திறக்க ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? இந்தியாவிலேயே அம்மாதிரியான நூதனமாகவுள்ள அந்த மீட்டர் தொழிற்சாலையைப் பற்றி அரசினுடைய கருத்து என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சிறப்பான தொழிற்சாலை என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. மோசமான தொழிற்சாலையாக அது மாறிவிட்டது. இருந்தாலும் வேலை இல்லை என்ற ஒரு நிலை தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடாது என்ற ஒரு பரிந்துரை தொழிலாளர்கள் தலைவர்களால் அரசுக்குத் தரப்பட்டு இது சம்பந்தமாக மத்திய அரசின் நிறுவனங்களுடன் கலந்து நாமும் உதவி செய்து அந்தத் தொழிற்சாலையை நடத்தவேண்டுமென்று பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்னும் இரண்டு நாட்களில் நம் தொழில் துறை செயலாளர் பம்பாய் சென்று மத்திய அரசினுடைய நிதி நிறுவனங்களுடன் பேச்சு நடத்த இருக்கிறார்கள். அதில் சங்கடம், உற்பத்திச் செலவு அதிகம். எனவே, அந்தப் பொருள்களின் விலை அதிகம். நமது மின்சார போர்ட் அதை வாங்க மறுக்கிறது. காரணம் குறைந்த விலையில் மற்றத் தொழிற்சாலைகளிலிருந்து, மற்ற மாநிலங்களில் இருந்து கிடைக்கிறது.



1974 டிசம்பர் 14]

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** இந்தத் தொழிற்சாலையைப் பார்வையிட்ட பின்னர் அவர்கள் அறிக்கை ஏதாவது வைத்தார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய அரசுக்குத்தான் தருவார்கள். நம்மிடம் பேசும்போது உதவிகள் செய்யலாம் என்ற சில கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதை முடிவான கருத்தாக நாம் ஏற்கமுடியாது.

**திரு. கே. என். குமாரசாமி:** அந்தத் தொழிற்சாலையில் உற்பத்திச் செலவு அதிகம் என்ற காரணத்தால் ஒரு தொழிற்சாலையை நிறுத்தி விடமுடியாது. உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கான வகைகளைப்பற்றி டெக்னிக்கல் என்ஜினியர்களை வைத்து ஆலோசித்து மற்ற மாநிலங்களைவிட விலை குறைவாகக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கேள்விக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. தங்கமணி அவர்கள் அனுப்பித்து வைத்தார்கள். அதுவும் பரிசீலிக்கப்பட்டது. பண்டமெண்டல் டிசைன் தவறு என்ற கருத்தும் சொல்லப்படுகிறது. இது டெக்னிக்கலாக இருப்பதால் நான் நுழைய விரும்பவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தக் குழு ஆய்வு செய்து என்ன பரிந்துரைகளைத் தந்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உலக [illegible] தொடுக்கப் பட்டிருக்கிறது. இது ஒரு அஸோஸியேஷன் [illegible] நாஷணல் டெவலப்மெண்ட் அஸோஸியேஷன். இவர்கள் எந்த அளவிற்கு க்ரெடிட் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ்-க்கு கொடுக்கலாம் என்பது பற்றி, மத்திய அரசின் அழைப்பின் பேரில் அம்பத்தூருக்கு வந்திருந்தார்கள். இறுதியாக எந்தக் கருத்தும் நமக்குத் தெரிவிக்கப்படவில்லை.

**திரு. நா. வீராசாமி:** இந்தியா மீட்டேர்ஸ் பற்றி, நம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு அதன் நிலைமைபற்றி நன்கு தெரியும். அதில் இன்றையதினம் இயக்குநர்களாக இருப்பவர்கள் அக்கறை அதிகம் காட்டாததாலும், அவர்கள் பம்பாயில் இருப்பதால், மேலும் அதில் 400 பேர்கள் வேலை செய்கிற இடத்தில் 800 பேர்களை

[1974 டிசம்பர் 14

எடுத்திருப்பதாலும் நிர்வாகச் செலவு அதிகமாகிறது என்பதாலும் அந்தத் தொழிற்சாலை இயங்க முடியாமல் இருக்கிறது. நாம் எப்படியாவது அந்தத் தொழிற்சாலையை எடுத்து நமக்குத் தேவையான அளவிற்கு மீட்டர்களைத் தயாரிப்பதற்குத் தொழில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நமக்குத் தேவையான மீட்டர்கள்தான் அங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு உற்பத்திச் செலவு அதிகமாகிறது. இருந்தாலும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்ற ஒரே அடிப்படையில் பரிசீலித்து வருகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்த வொர்ல்டு பாங்க் டீம் பொதுவாக ஏதாவது ஆராய்ச்சி வேலைகளுக்கு இந்த அம்பத்தூர் எஸ்டேட்டுக்கு வந்ததா? குறிப்பாக, ஏதாவது பார்வையிடுவதற்கு வந்ததா? அல்லது மொத்தத்தில் இனிமேல் ஏதாவது வழி வகைகள் செய்வதற்கு வழி பிறக்குமா? இதனுடைய அறிக்கை மத்திய சர்க்காரிடம் தாக்கல் செய்யப்பட்டிருப்பது உண்மையா? அதனுடைய காப்பி மாகாண சர்க்காருக்குக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த விவரங்களெல்லாம் என்னிடம் இல்லை. மத்திய அரசாங்கத்திலிருந்து அவர்கள் அனுப்புகிற தூதுக்குழுவை நம்முடைய மாகாணத்திற்கு வரும் பொழுது நாம் அழைத்துச்சென்று நம்முடைய ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸைக் காண்பிக்கிறோம். அவர்களுடைய அசோஸியேஷன் International Development Association for Credit to small-scale sector.

*Brassware Units.*

*38 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether it is proposed to set up more brassware Units in the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.



1974 டிசம்பர் 14]

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இந்த பித்தளைத் தகடு தயார் செய்வதற்கு வேண்டிய செப்பு, துத்தநாகம் எம்.எம்.டி.ஸி. மூலமாக மத்திய அரசினால் தமிழகத்திற்கு வழங்கப்படுகிறது. பித்தளைத் தகடுகள் போதிய அளவுக்குக் கிடைப்பதில்லை. தமிழக அரசுத் தொழிற்சாலைகளுக்கு அப்படிப்பட்ட மூலப்பொருள்களை செப்பு, துத்தநாகம் இவைகளை வரவழைத்துத் தருவதற்கு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேள்வியும், பதிலும் ஒன்றாக இருக்கிறது. நாம் தான் வரவழைத்தாலும் அவர்கள் மூலமாகத் தான் வரவழைக்க முடியும். மத்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு 450 டன். 115 டன், 114 டன், 56 டன் இப்படி மிகக் குறைவாகக் கொடுக்கிறது. இது இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள்களாக இருப்பதால், நாமும் மத்திய அரசாங்கத்தை அதில் குறை கூற முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) நடைமுறைக் கேள்வி

### பேரவைத் தலைவரின் கவனத்தை ஈர்க்கும் முறைகுறித்து.

THIRU K. M. SUBRAMANIAM: On a point of Order, Sir. I am raising a point of order on the proceedings of the House. (interruption) I am coming to the point and I do not want any tutoring. We can call your attention by raising our hands whenever we want to express anything. But in the papers I have read today that in certain legislatures, some legislators are producing noise to attract the attention of the Hon. Speaker. I try to attract the attention of the Hon. Speaker by raising my hands. Please don't force me to attract your attention by producing noise. Thank you very much. This is the point of order I am raising.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை. ஓர் உறுப்பினர் கையைத் தூக்குவதோ, ஒலி எழுப்புவதோ அந்த உறுப்பினருடைய நிலைமையை உணர்த்துவதாக இருக்கும்.

## (3) கவன ஈர்ப்பு.

### குமரி மாவட்டத்தில் மிடாளம் முதலிய கடற்கரை கிராமங்கள் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டதும், துயர் தணிப்பு நடவடிக்கைகளும் குறித்து.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the severe sea erosion in Midalam, Enayam and in some other coastal villages of Kanyakumari district in the months of September-October 1974 resulting in great damage and loss of several houses and the necessity to provide permanent remedial measures for these coastal villages from such damages.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, the Government are aware that due to rough sea and high tidal waves along the shores of the Kanyakumari district on 30th September 1974, sea erosion had occured. Due to this sea erosion, 191 dwellings in the following six villages are reported to have been damaged including some houses constructed in stone masonry :—

1. Kothilpad (54).
2. Colachal (63).
3. Melamidalam (26).
4. Enayamthurai (32).
5. Ramanthurai (12).
6. Mullurthurai (4).

Even in 1972, the coastal line in Arabian sea got affected badly and about 98 huts in the following eight villages were washed away :—

1. Poothurai.
2. Eramanthurai.



3. Thengapattinam.
4. Mullurthurai.
5. Puthanthurai.
6. Enayamthurai.
7. Melamidalam.
8. Kurumpanai.

2. Protective measures were carried out in the following places during 1970-71 at a total cost of Rs. 4.60 lakhs :—

1. Midalamthurai.
2. Pallamthurai.
3. Melamanakudi.
4. Eramanthurai.

Even these protective works were damaged due to the fury of the waves. A portion of the sea wall constructed in 1971 at Pallamthurai village was damaged by the high tidal waves occurred during June 1973. An estimate for reconstruction of the above wall at a cost of Rs. 4.59 lakhs has been proposed by the Chief Engineer this month.

3. The problem of sea erosion is a recurring feature along the coastal line of Kanyakumari district. Considering the magnitude of the problem, a scheme to construct a permanent sea wall for a length of 14.5 KM. along the Arabian Sea coast of Tamil Nadu to arrest the sea erosion at a cost of Rs. 3,51.00 lakhs has been proposed by the Chief Engineer (Buildings), has been forwarded to the Government of India seeking assistance for the scheme.

THIRU N. DENNIS: Since 1962, due to sea erosion in many coastal villages in Kanyakumari district, hundreds of houses have been badly damaged. Major portions of some villages like Enayam and Midalam have been washed away by sea erosion and future generation would come to know of these villages only in history. Unless permanent measures are taken, these villages would be fully immersed and washed away by sea erosion in the coming

[திரு. என். டென்னிஸ்] [1974 டிசம்பர் 14

years. Raising of wall would not serve the purpose since the wall also is subject to sea erosion and is liable to be washed away. The only remedy is the dumping of big stones as is done in Kerala, in Neendakara, along the sea shore. Such a thing can be done here also. It is a humanitarian problem and it is a life and death problem for the fishermen community of that locality. It has to be attended to with sympathy. May I know from the Hon. Minister the immediate remedial measures that would be taken by Government in this regard?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்தக் கடல் அரிப்பினால் ஏற்படும் கொடுமையை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. நான் கூட கன்யாகுமரி மாவட்டத்திற்கு வந்திருந்தபொழுது அதை நேரில் பார்த்தேன். அதற்காக ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்து, ரூ. 351 லட்சத்தில் தயார் செய்து, மத்திய அரசாங்கத்தின் உதவியை நாம் கேட்டிருக்கிறோம். அந்த உதவி வந்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். எங்கு அவசரமாக உதவி தேவைப் படுகிறதோ, அதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை எனது அறிக்கையில் விளக்கி யிருக்கிறேன்.

## (4) அறிவிப்புகள்.

### (அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவை (செனேட்) 6—12—1974 முதல் திருத்தி அமைக்கப்படவேண்டியிருப்பதால், அப்பேரவைக்குத் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 18—12—1974 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.



1974 டிசம்பர் 14] [பேரவைத் தலைவர்]

நியமனத்தாள்கள் 19—12—1974 வியாழக்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 19—12—1974 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற்படுமாயின் 20—12—1974 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்னாள் ஓய்வறை) வாக்கெடுப்பு நடைபெறும்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

### (ஆ) 1974-ம் ஆண்டு, சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு சென்னை மாநகர குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

### (இ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பிச்சையெடுத்தல் தடுப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

### 6. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) வேளாண்மை பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்தல்

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I move—

" That in pursuance of clause (*h*), under the heading ' Class II—other Members ', of sub-section (2) of section 18 of the Tamil Nadu Agricultural University Act, 1971. (Tamil Nadu Act 8 of 1971), this Assembly do proceed on a date to be fixed by the Honourable Speaker, to elect one member to the Board of Management of the Tamil Nadu Agricultural University to fill up the vacancy caused by the expiry of the term of office of Thiru Kovai Chezhiyan, M.L.A.".

The motion was put and carried.



### (4) அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) வேளாண்மை பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஒரு அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 19—12—74 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 20—12—1974 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 20—12—1974 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 21—12—1974 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னறை ஓய்வு அறை) வாக்கெடுப்பு நடைபெறும்.

### (6) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்குத் தேர்தல்

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I move—

" Whereas the following members—

1. Thiru N. Rajangam, M.L.A., Hon'ble Minister for Harijan Welfare,

2. Thiru N. Kittappa, M.L.A.,

3. Thiru A. K. Subbiah, M.L.A.,

were elected by the Legislative Assembly under clause (*f*) of sub-section (2) of section 8 of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959) as members of the Tamil Nadu Land Improvement Board to fill the vacancies

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1974 டிசம்பர் 14

in the office of the members of the Board reconstituted by the Government in their order Ms. No. 2766, Agriculture, dated the 16th October 1971;

And whereas the term of office of the members referred to in clause (f) of sub-section (2) of the said section expired on the 15th October 1974;

Now, therefore, in pursuance of clause (f) of sub-section (2) of section 8 of the Tamil Nadu Land Improvement Schemes Act 1969 (Tamil Nadu Act 31 of 1959) this House do proceed on a date to be fixed by the Hon'ble Speaker, to elect three members of the Legislative Assembly to be the members of the said Board."

The motion was put and carried.

## (4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** பேரவைக்கு ஓர் அறிவிப்பு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற் கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை **19—12—1974,** வியாழக்கிழமை **பிற்பகல்** 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள், 20—12—1974. வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 20—12—1974 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 21—12—1974, சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர் முன்னால் ஓய்வறை) வாக்கெடுப்பு நடைபெறும்.



## (7) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, அமைச்சரவை மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதும், கண்டனத் தீர்மானத்தின் மீதும் விவாதம் தொடரும்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சைத் தொடங்கும் முன்னால், நேற்றையத் தினம், இங்கே அரிசி வியாபாரம் சம்பந்தப்பட்ட ஃபைல்களைப் பற்றிப் பேசும்போது பேரவைத் தலைவர் அவர்கள் தன்னுடைய அறையிலே அந்த ஃபைல்களைப் பார்க்கலாம் என்று சொன்னார்கள். அந்த ஃபைல்களைப் பார்த்ததில் இன்னும் சில விவரங்கள் வேண்டுமென்று அமைச்சரிடத்தில் கேட்டு இருந்தேன் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த விவரங்கள் என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய அறையில் வந்த அவற்றைப் பார்க்கலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அந்த ஃபைலைப் பார்த்ததாலே, சில கேள்விகள் பிறக்கின்றன.

ஒன்று, அந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

In pursuance of the criminal conspiracy, they obtained two tenders in rice and paddy ......... one in the name of ........... another in the name of Thiru R. Thandavarayan, a false name assumed by Thiru S. Arumugam of Messrs. Asoka Traders on 9th March 1971. . . . . they had acquired the export permit of Thiru M. K. Aboo for exporting 200 tonnes. This individual was one of the successful tenderers....... Then in paragraph 25, 'tenderer Thiru U. N. Sankar Kutty was permitted to lift 668 tonnes of rice. Tenderer Thiru R. Thandavarayan was allowed to lift 5137 tonnes of rice and 7159 tonnes of paddy. என்று. தாண்டவராயன் என்ற பொய்யான பெயருக்கு டெண்டர் போயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. எ. சுப்பிரமணியம்] [1974 டிசம்பர் 14

இப்படி பொய்யான பெயருடைய அவருக்கு—என்ன சொந்தம் அவருக்கு இருக்கிறது என்பது தெரியாத நிலையில்—ஏறத்தாழ 82 லட்சம் ரூபாய்க்கு அரிசி வாங்க அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது.

இது மட்டும் அல்லாமல் மிச்சம் இருக்கிற அரிசி, நெல்லையும் கூட நெகோஷியேடட் விலைக்கு விற்றிருக்கிறார்கள். இப்படி ஒரு ஏற்பாடு எப்படி நடந்தது? தகுதி, பண வசதி, உண்மையான பெயர் இவற்றை எல்லாம் பார்க்காமல் இதற்கு ஏற்பாடு செய்தவர்கள் யார் என்பது பெரிய கேள்வியாக இருக்கிறது.

வளவனூரிலே, அரிகண்டநல்லூரிலே, திண்டிவனத்திலே இந்த மாதிரி பேரங்கள் 1971-ல் நடந்திருக்கிறது. அந்த ஆண்டு வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் வழக்கு விஷயமாக 1974 ஆண்டு சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அறிக்கை வெளிவந்த பிறகு, பத்திரிகைகளில் எல்லாம் செய்திகள் வந்த பிறகு, சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கால தாமதம் குறித்து சந்தேகம் எழுகிறது. மூன்று ஆண்டுகள் வரையில் ஏன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லை என்பதை இந்த அரசு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, பஞ்சாபிலேயிருந்து கோதுமையை வாங்க தனியார்கள்தான் போனார்கள் என்றார்கள். யார் போனார்கள்? யாரிடத்தில் வாங்கினார்கள்? என்ன விலைக்கு வாங்கினார்கள் என்பது தெரிய வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகள் வாங்குகிறார்கள் என்றால் அவர்கள் நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் பெற்றிருக்கிறார்களா? அப்படி அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்தால், பஞ்சாப் அரசு கோதுமை தரமாட்டேன் என்று அறிவித்த தேதிக்குப் பிறகா அல்லது அதற்கு முன்பா என்ற விவரங்கள் தெரிய வேண்டும்.

அடுத்த, அரசே கொள்முதல் செய்யப் போவதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சற்றுக் கூடுதலான விலை கொடுத்து என்று கூறியிருக்கிறார்கள். சற்று



1974 டிசம்பர் 14] [திரு. எ. சுப்பிரமணியம்]

அதிகமான விலை என்றால் என்ன தெரியவில்லை. கூட்டுறவு சங்கங்களின் மூலம் ஏன் வாங்கிக் கொள்கிறார்கள்? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வாங்கக் கூடாதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதிக விலை கொடுக்கலாம் என்று சொல்கிறார்களா? வேண்டாம் என்று சொல்கிறார்களா? மத்திய அரசு ரூ. 74 என்று நிர்ணயித்திருக்கிறது. அதே ரூபாயில்தான் வாங்க வேண்டும் என்று விரும்புகிறாரா? உறுப்பினர் அவர்கள் தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எ. சுப்பிரமணியம்:** விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதையே தான் இந்த அரசு செய்திருக்கிறது. ரூ. 74 போதாது என்பதற்காகத்தான், சற்று அதிக விலை, என்று கூறுகிறது மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறபடிதான் வாங்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்களா?

**திரு. எ. சுப்பிரமணியம்:** 'கூடுதல் விலை' என்றால் எப்படி? தங்கள் இஷ்டம் போல் கூட்டுறவுச் சங்கங்கள் விலையை நிர்ணயித்துக் கொள்ளலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரசாங்கம் தான் விலையை நிர்ணயிக்கிறது என்று என்னுடைய அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

**திரு. எ. சுப்பிரமணியம்:** சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வாங்குவதுதானே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மறுபடியும் உறுப்பினர் குறிப்பது ஏன்? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் வாங்க வேண்டுமென்றால் ரூ. 74 தான் கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வாங்கினால் விவசாயிகளுக்குச் சற்று அதிக விலை கிடைக்கும், என்று அரசு சொல்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அரிசி விநியோகத்தைப் பொறுத்த வரையில் அரசு இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மக்களுக்கும் அரிசி நியாயமான விலைக்குத் தேவையான அளவுக்குக் கிடைக்க வேண்டும். அரசாங்கம் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும். இங்கே நகரங்களில் இருக்கிற மக்களுக்குக் கார்டு கொடுத்து, 3 கிலோ, 5 கிலோ என்று அரிசி கொடுக்கிறீர்கள். ஆனால் கிராமப் புறங்களில் இருக்கிற மக்களுக்கு அதுவும் கிடைப்பதில்லை. நகரப்புறங்களிலே 2 ரூபாய் என்று விற்கிற அரிசி கிராமப்புறங்களில் 4 ரூபாய் 5 ரூபாய் என்று விற்கிறது. இந்த நிலை இல்லாமல் எல்லா மக்களுக்கும் தேவையான அளவுக்கு நியாயமான விலையில் நீங்கள் அரிசி கொடுக்க வேண்டும்.

நெல் கொள்முதல் செய்வதில், 57 கிலோவுக்கு என்று விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் விவசாயிகளிடத்திலே 67 கிலோ தர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்கப்படுகிறது. இந்தத் தகவல் கூட ஆளும் கட்சித் தரப்பிலிருந்து எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு உணவு தானியம் பதுக்கப்பட்டிருக்கிறது. பதுக்கப்பட்டிருக்கும் உணவு தானியங்களை வெளியே கொண்டுவர வேண்டும்; அதற்கு அரசாங்கம் தயவு தாட்சணியமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்த வரையில், கஞ்சி காய்ச்சுவதற்கு அரிசி தேவைப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு அதற்குத் தனியாக அரிசி கொடுக்க வேண்டும்.

வறட்சி நிவாரணத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கம் இப்போதுதான் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. வறட்சி தொடங்கி பல மாதங்கள் ஆகிவிட்டன. எல்லாப் பகுதிகளுமே இன்றைக்குப் பஞ்சத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. இவ்வளவு பெரிய பஞ்ச நிவாரணப் பணிக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது என்பது "யானைப் பசிக்கு சோளப் பொரி" போட்டது போலாகும். ஆகவே, இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 6 லட்சம் தறிகள் இருக்கின்றன. இன்றைக்கு கைத்தறித் துணிகள் தேக்க நிலை அடைந்திருக்கின்றன. அதன் காரணமாக தறிகள் முடங்கிக் கிடக்கின்றன. நெசவாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். கைத்தறி ஜவுளி தேங்கிவிட்டது என்ற காரணத்தைச் சொல்லி, தறிகளை முடங்கச் செய்து, நெசவாளர்களின் கூலியைக் குறைக்கப் பார்க்கிறார்கள். ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூலி போதாது, கூலியை உயர்த்த வேண்டுமென்று சொல்லி, கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியினர் குறைந்த கூலியைக் கொடுப்பதற்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது கூடாது, கூலியைக் கூட்ட வேண்டுமென்று பல முறை இந்தச் சட்டமன்றத்தில் பலரும் பேசியிருக்கிறார்கள். இப்போது இருக்கிற கூலியையும் 'மாஸ்டர் வீவர்ஸ்' பறித்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அவர்களுக்குக் கடன் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைகளை எடுத்துக் கொண்டால், கோவை பஞ்சாலைகளில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள துணி தேங்கிக் கிடக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். கடந்த ஆண்டுகளில் அவர்கள் கோடிக் கணக்கில் லாபத்தைக் கொட்டியிருக்கிறார்கள். நூல் விலையையும், துணி விலையையும் கணக்கு வழக்கு இல்லாமல் ஏற்றி, இந்த லாபத்தை சம்பாதித்தார்கள். அதுவும் நெசவாளர்களைச் சாகடித்து, பொது மக்களைச் சுரண்டி மக்கள் துணிக் கடை பக்கமே போக முடியாத அளவுக்கு விலையை ஏற்றி, இந்த லாபத்தைச் சம்பாதித்தார்கள். இப்போதும் அந்த லாபத்தை எதிர்பார்த்து, கிடைக்காததால் துணி விற்பனை இல்லாமல் தேக்கம் அடைந்திருக்கிறது. துணி தேங்கி விட்டது என்ற காரணத்தால் உற்பத்தியைக் குறைக்க ஆலைகளை ஓடவிடாமல், 'லே ஆஃப்' கொடுத்து, தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காமல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏராளமான தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு 'லே ஆஃப்' காம்பன்சேஷன் கொடுக்காமல் 10, 15 ஆயிரம் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அதனால் அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பெருத்த கஷ்டங்

களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதற்கு அரசு என்ன செய்யப் போகிறது என்பதுபற்றி ஒன்றுமே தெரியவில்லை. எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட கொடுமை இருக்கிறது.

ஆக, இப்படி உணவுப் பிரச்சனையில் இந்த அரசு வேண்டுமென்றே திட்டமிட்டு, தமிழ்நாட்டு மக்களைக் கொடுமைப்படுத்தி, சாகடித்துக் கொண்டிருக்கிறது. மற்றப் பிரச்சனைகளிலும் அப்படித்தான் விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள் ஆகிய எல்லாப் பிரிவினருக்குமே இந்த அரசு திட்டமிட்டு கொடுமை செய்கிறது. அவர்களை எல்லாம் அசட்டை செய்கிறது. இப்படிப்பட்ட ஒரு அரசு இந்தச் சட்டமன்றத்தின் நம்பிக்கையை இழந்து விட்டது; இந்த மாநில மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்று சொல்லி, இந்த அரசுமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்ட இந்த அரசு மீண்டும் பதவியில் இருக்கத் தகுதி இல்லாததாகிவிட்டது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுவரையில் தீர்மானங்களை முன்மொழிந்தவர்கள் பேசியிருக்கிறார்கள். தீர்மானங்களை முன்மொழிந்தவர்கள் ஆகையால் அவர்கள் அதிக நேரம் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆகவே, இனிமேல் பேசக்கூடியவர்கள் 10 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளக் கூடாது. அடுத்து திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசுவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இயங்கும் அமைச்சரவைமீது இந்த மாமன்றம் தன்னுடைய நம்பிக்கையை இழந்துவிட்டது என்ற தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒருவேளை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தனக்குப் பின்னாலே 169 அங்கத்தினர்கள் இருக்கிறார்களே என்று நினைக்கலாம். "இதற்கு முன்னால் பல நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் வந்தபோதெல்லாம் இந்த எதிர்க் கட்சிக்காரர்களுக்கு என்ன நிலைமை ஏற்பட்டது என்று தெரியாதா; எனக்குப் பின்னால் 169



அங்கத்தினர்கள் இருக்கும்போது மீண்டும் இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே. இதற்கும் பழைய கதிதான்" என்று நினைக்கலாம்.

ஆனால் நான் ஒன்று சொல்வேன். இதற்கு முன்னால் இந்த மன்றத்தில் வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானங்களுக்கும் இப்போது வந்திருக்கிற தீர்மானத்திற்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. இன்றைய தினம் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதற்கான முக்கியக் காரணம் இந்த மாநிலத்தில் எந்த அளவுக்கு அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகத்தான். அரிசிப் பஞ்சத்தைப்பற்றி எனக்கு முன்னால் பல நண்பர்கள் கூறினார்கள். ஆனால் இந்த அரிசிப் பிரச்னை 1971-ம் ஆண்டு ஏற்பட்டது என்று நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னுடைய அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். 1972-ம் ஆண்டு வரையிலும் இந்த அரசுக்கு ஆதரவு தந்து கொண்டிருந்தவர்கள் கூட இன்றையதினம் எங்களோடு சேர்ந்து இந்த அரசை எதிர்க்கிறார்கள் என்றால் நிச்சயமாக எங்கள் வாதம் மிக வலிவடைந்திருக்கிறது என்பதை முதலில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

169 அங்கத்தினர்கள் உங்களுக்குப் பின்னால் இருந்தாலும் கூட இன்றையதினம் அவர்கள் அத்தனைபேரும் நாட்டு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கிற 4½ கோடி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது இந்த அமைச்சரவை. ஆதலால் அன்றைக்கு மதியழகன் அவர்கள் சொன்னதைப்போல இந்த மாமன்றத்தைக் கலைத்துவிட்டு நீங்கள் மக்களைச் சந்திக்கத் தயாராக வேண்டும்.

1971-ம் ஆண்டு இதைப்போல நீங்கள் செய்திருக்கிறீர்கள். ஆகவே அதை மீண்டும் இந்தத் தருணத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவேளை நீங்கள் உங்களுக்கு ஆதரவு இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு, மீண்டும் இந்த நாட்டை ஆளலாம் என்று நினைத்தால் நிச்சயமாக மக்கள் உங்களை அனுமதிக்க மாட்டார்கள்;

அனுமதிக்கத் தயாராக இல்லை என்பதை ஆங்காங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் வைத்து, நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இத்தருணத்தில் எங்கள் தலையாய கடமை என்னவென்றால், நீங்கள் ராஜினாமாச் செய்யவில்லை என்றால், உங்கள் பொறுப்பை விட்டுவிட்டு மக்களைச் சந்திக்கத் தயாராக இல்லை என்றால் நீங்கள் தங்கி இருக்கிற அறையில் உங்களை 'கேரோ' செய்கின்ற நிலைமை எங்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகத்தில் அதிக நம்பிக்கை உள்ளவர்களாக நாங்கள் இருப்பதால் இதுவரையில் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாமல் இருக்கிறோம் என்பதை நீங்கள் பயன்படுத்திக் கொண்டு, நீங்கள் இந்த நாட்டைத் தொடர்ந்து ஆள்வதற்கு நினைக்க வேண்டாமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

முதன் முதலாக நீங்கள் இந்த நாட்டை 1967-ம் ஆண்டு ஆளத் தொடங்கியபோது, இந்த நாடு உணவுப் பிரச்னையில் எந்த அளவுக்குச் சிறப்பாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். 1966-ம் ஆண்டு பல்வேறு காரணங்களால் பஞ்சம் ஏற்பட்ட போதிலும் கூட அன்று இருந்த அரசு 6 அவுன்ஸ் அரிசி கொடுக்கத் தயாராக இருந்தது. ஆனால் இன்றையதினம் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிற பஞ்ச நிலை நிச்சயமாக முன்னால் இல்லாத அளவுக்கு மழை இல்லாத காரணத்தால் அல்ல, வேறுபல காரணங்களால் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சில மாதங்களுக்கு முன்னால், தஞ்சாவூரிலிருந்து அரிசியை தாராளமாக வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லலாம் என்று 3 தினங்களுக்குப் போட்ட உத்தரவின் காரணமாக பல லட்சம் டன் அரிசி வெளி மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் சென்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகையால் இன்றையதினம் தமிழ்நாட்டில் இந்த உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1967-ம் ஆண்டு நீங்கள் பொறுப்பை ஏற்றவுடன் ஆங்காங்கே படியரிசி போட்டீர்கள். அதற்கு நீங்கள் பெயரும் சூட்டினீர்கள். அண்ணா படியரிசி என்றும், எம்.ஜி.ஆர் படியரிசி என்றும் கூறி,





மாநில முழுதும் அதை விஸ்தரிக்கப் போகிறோம் என்று வாக்குறுதி கொடுத்தீர்கள். ஆனால் அந்த வாக்குறுதி காப்பாற்றப் பட்டதா? இன்றைக்கு நிலைமை என்ன? ஒன்பது ரூபாய், பத்து ரூபாய்க்குப் படியரிசி விற்கிறது.

இன்னும் ஒருசில மாதங்களில் படியரிசி 15 ரூபாய் வரையில் விற்கக் கூடிய அளவுக்கு விலை ஏறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்றால் நிச்சயமாக இதற்கான பொறுப்பை ஆளுகின்ற அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு உணவு நெருக்கடி ஏற்பட்டிருப்பதற்குக் காரணமே உணவுக் கொள்கையில் இந்த அரசு நேர்மையான, நிலையான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வராத காரணம் தான். நமது மாநிலத்தில் கழிந்த போகம் நன்றாக விளைந்தது. மழை பொய்க்கவில்லை. இருந்தும் முறைகேடான செயல்களினால் தான் இன்றைக்கு நமது மாநிலத்தில் உணவு நெருக்கடி தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. கொள்ளை லாபம் அடிக்கிறவர்களுக்கும், கருஞ்சந்தை வியாபாரிகளுக்கும் இந்த அரசு துணைபோனதன் காரணமாகத்தான் இன்றைக்கு நம் மாநிலத்தில் இந்த அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தம் அறிக்கையில் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதனை நண்பர் கிருஷ்ணமூர்த்தி அறிக்கை என்று சொல்வதைவிட முதலமைச்சரின் அறிக்கை என்றேகூடச் சொல்லலாம். ஏனென்று சொன்னால் முதலமைச்சர் அவர்களும் எஸ்டிமேட் கமிட்டியின் உறுப்பினராக இருக்கிறார். அந்த அறிக்கையில் காணப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் முதலமைச்சர் அவர்களும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அறிக்கைபற்றி இந்த அவையில் பல சந்தர்ப்பங்களில் விவாதம் வந்திருந்தும் முதலமைச்சர் அவர்கள் அந்த அறிக்கைபற்றி இதுவரை ஒரு கருத்தும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் தம் மனச்சாட்சியின் அடிப்படையில்தான் அவர் எதுவும் கூறவில்லை என்று கருதுகிறோம். நண்பர் கிருஷ்ணமூர்த்தி கூறியதனைத்தையும் அவரும் ஏற்றுக்கொள்கிறார் என்று கருதுகிறேன். சாதாரணமாக

முதலமைச்சர் அவர்கள் மனச்சாட்சி உள்ளவர்கள். மனச்சாட்சியின்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கழிந்த பல நிகழ்ச்சிகளில் இருந்து அறிகிறோம். இந்த அறிக்கையில் இருக்கிற குற்றச்சாட்டுகளுக்கும் எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் இருக்கிறார்கள்.

அப்துல் உசாப் ராவுத்தரைப் பொறுத்தவரையில் 8 லட்சம் ரூபாய் அளவுள்ள அரிசி காணாமல்போய் இருக்கிறது. எந்த உத்தரவாதத்தில் அவருக்கு 7 லட்சம் பெறுமான நெல்—30 ஆயிரம் மூட்டை நெல் கொடுக்கப்பட்டது? அவரது சொத்து எவ்வளவு? நாணயம் எவ்வளவு? அவருடைய பினான்ஷியல் பொசிஷன் என்ன என்று ஆராய்ந்து பார்த்தார்களா? ஒரு நயா பைசா கூட சொத்து இல்லாத ஒரு இன்சால்வென்ட் ஆசாமியிடம் எப்படி பல லட்சம் ரூபாய் பொறுமான நெல் ஒப்படைக்கப்பட்டது? இதில் உள்ள மர்மம் என்ன? வெளியில் இருக்கிற விஷயங்கள் மட்டுமல்ல. வேறுபல சக்திகளும் ஈடுபட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக ஜகதீசன் அவர்களோடு அரசு மேற்கொண்ட வியாபாரத்தின் பயனாக ஏறத்தாழ 3 லட்சம் ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு அவரிடம் ஒப்படைத்த நெல்லுக்குப் பதிலாக உமியையும், தவிட்டையும் வைத்து அரசை ஏமாற்றியிருக்கிறார். அதனைக் கண்காணித்துக் கொள்வதற்கு அதிகாரிகளே இல்லாமல் போய்விட்டார்களா? அவரது கோடவுன் இருக்கிற அதே திண்டிவனத்தில் ஸ்பெஷல் தாசில்தார் இருக்கிறார். ஆர்.ஐ. இருக்கிறார். இன்ஸ்பெக்டர்கள் 5 பேர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய மோசடி எந்த அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது? இவர்கள் மீது அரசு எந்த நடவடிக்கையும் இதுவரை எடுத்ததாக இந்த அறிக்கையில் காணப்படவில்லை.

நான் ஒன்றைக் கேட்கிறேன். இவ்வளவு மதிப்புள்ள அரிசியைக் கொஞ்சம் கூட பொறுப்பு இல்லாதவர்களிடம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால் இது அவர்களாகவே செய்திருக்க முடியாது. இதற்கு நிச்சயமாக—அவர்கள் மீது பொறுப்பைச் சுமத்திவிட்டு தப்பித்துக் கொள்ள முடியாது. இதற்குப் பொறுப்பு



அன்றைய தினம் அந்தத் துறையை நிர்வகித்து வந்த அமைச்சரே தான் ஏற்றுக்கொண்டாக வேண்டும். தம்முடைய சொந்தப் பணம் என்று சொன்னால் ஒரு நயாபைசாவை இப்படித் தனி நபர்களிடம் கொடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் அன்றையதினமே அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சரை ராஜிநாமாச் செய்திருக்கச் சொல்ல வேண்டும். அந்த அமைச்சரை டிஸ்மிஸ் செய்திருக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எங்கள் கட்சிக்கும் நியாயமாகக் கொடுக்க வேண்டிய நேரத்தைக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஏ.டி.எம்.கே.-க்கு 1½ மணி நேரம் கொடுத்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைத்தான் முன்பே சொன்னேன். முதலில் பேசியவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளவர்கள். அதனால் அதிகநேரம் கொடுக்கப்பட்டது. நீங்கள் இன்னும் 5 நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அடுத்ததாகக் கள்ளத்தனமாகப் பர்மிட்டுகள் இல்லாமல் பல லட்சம் ரூபாய் பொறுமான அரிசி தாண்டவராயன் என்பவர் பெயரில் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்றால் இந்தத் தாண்டவராயன் யார் என்று பைலைப் பார்த்த கட்சித் தலைவர்கள் கேட்கிறார்கள். தாண்டவராயன் ஒரு ரூபாய்க்குக் கூடச் சொத்து இல்லாதவர்—101 ரூபாய் சம்பளத்தில் இருக்கிற ஒரு சாதாரண மனிதனுக்கு பெரிய வியாபாரம் செய்வதற்கு பெர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது எந்த இடத்தில் வழங்கப்பட்டது? அதுவும் பெரிய இடத்து சிபார்சின் பேரில் வழங்கப்பட்டதா? அவருக்குப் பின்னாலுள்ள பெரிய மனிதர்கள் யார்? இதற்கு அரசாங்கப் பொறுப்பில் உள்ளவர்களும் உடந்தையாக இருந்திருக்கிறார்களா என்று இந்த அரசாங்கத்தைக் கேட்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 டிசம்பர் 14

அதுமட்டுமல்ல; இந்த ஊழல் சம்பந்தமாக ஒரு ஸ்பெஷல் சன்செஷன் கொடுத்ததாக அந்த பைலில் காணப்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்பதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் கூறியாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளத்தனமாக வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வியாபாரம் சம்பந்தமாக இப்போது இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருப்பதாக பைலில் கூறப்படுகிறது. அந்த இன்வெஸ்டிகேஷன் ரிப்போர்ட் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டாக வேண்டும். இந்த மாமன்றத்திலுள்ள எதிர்க் கட்சித் தலைவர்கள் அதனைப் பார்ப்பதற்கு வாய்ப்பு அளித்தாகவேண்டுமென்று தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக இப்போது முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள். மாநிலம் முழுவதும் அரிசி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக ரேஷன் கொண்டுவந்தாக வேண்டும். ரேஷன் கடைகள் மூலமாக உணவு தானியங்கள், குறைந்த விலையில் விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும். இல்லையென்றால் பிரஞ்சு நாட்டில் ஏற்பட்ட புரட்சி இங்கும் உணவு நெருக்கடி காரணமாக வந்தே தீரும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது சில பிரதேசங்களில் ரேஷன் அமல்படுத்தப்படுகிறது. அதில் குறிப்பாக ஒன்றைச் சொல்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ரேஷன் முறையில் வாராவாரம் அரிசி விநியோகம் செய்யப்பட்டு வந்தது. துக்ளக் முறைபோல திடீரென்று 2 வாரங்களுக்கு ஒரு முறை—மாதத்திற்கு 2 முறை ரேஷன் வழங்கப்படும் என்று செய்திருக்கிறார்கள். ஏழை எளியவர்கள்—அன்றாடம் 3 ரூபாய், 3½ ரூபாய் கூலி பெறக்கூடியவர்கள் பணத்தைச் சேர்த்து 50, 60 என்று பதினைந்து நாளைக்கு ஒரு முறை ரேஷன் வாங்கக்கூடிய நிலையில் இல்லை. வசதியில்லாதவர்கள் இப்படி வாங்க முடியாது விடுகிற காரணத்தை வைத்து, அந்த அரிசியைத் தவறாக விநியோகிக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. ப்ளாக் மார்க்கெட்டில் அதை விற்கிறார்கள். முன்போலவே



1974 டிசம்பர் 14] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வாராவாரம் ரேஷன் அளிக்கிற ஏற்பாட்டையே அங்கே தொடர்ந்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது சம்பந்தமாக நான், நேரடியாகப் பேட்டி கண்டுசொன்னேன்; ஏழைகளுக்கு இதனால் ஏற்பட்ட கஷ்டங்களை எடுத்துக் கூறினேன். அமைச்சர் அவர்கள் நல்ல மனதுடன் உடனடியாக ஏற்கனவே இருந்தது போல் வாராவாரம் ரேஷன் கொடுப்பதற்குள்ள ஏற்பாடு செய்கிறேன் என்று என்னிடம் உறுதிமொழி அளித்தார்கள். ஆனால், இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நீங்கள் ரேஷன் கொடுத்தும்கூட மக்கள் வாங்கக்கூடிய நிலையில் இல்லை. அவர்கள் ரேஷன் இல்லாத முறையில்தான் அவதியுறுகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

அது மட்டுமல்ல; 2 கிலோ ரேஷன் கொடுத்துக் கொண்டிருந்து அதுகூடப் போதாத நிலை இருந்தது. ஆனால், இப்பொழுது 1½ கிலோவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் உண்மையிலே அது போதாது. மக்களுக்கு 2 கிலோ அளவாவது கொடுக்க வேண்டும். அதையும், மாநிலம் முழுவதும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்று நாட்டிலிருக்கிற படித்த இளைஞர்களிடம் இருக்கிற பதட்ட நிலையைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை, படித்தவர்களுக்கு வழி இல்லை, வாய்ப்பு இல்லை. இந்த அரசு சிக்கன நடவடிக்கையாக, நியமனங்களை நிறுத்தி வைத்திருப்பதாக நான் அறிகிறேன். குறிப்பாக, இளைஞர் அணியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஏற்கனவே, இளைஞர் அணியில் ரூ. 175 சம்பளத்தில்தான் அவர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் இந்தக் குறைந்த சம்பளத்தை வைத்து வாழ்க்கையை நடத்துவது என்று சொன்னால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆனால், கழிந்த சில நாட்களுக்கு முன்பு திடீரென்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான இளைஞர்கள், இளைஞர் அணியிலிருந்து நீக்கப்பட்டார்கள். குறிப்பாக, கன்னியாகுமரி ஜில்லாவில் 52 இளைஞர்கள் வேலை பார்த்துக்

கொண்டிருந்தார்கள். அதில் 42 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, திடீரென்று அந்தச் செய்தி பத்திரிகையில் வந்ததன் காரணமாக, அவர்களுக்கு ஓட்டல்களில் சாப்பாடு போடுவதற்கும் ஓட்டல்காரர்கள் மறுத்துவிட்டார்கள். அவர்களது ஊர் 200, 300 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. ஆகவே, அவர்கள் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. ஆகவே, அரசாங்கம், மறு பரிசீலனை செய்து, ஏற்கனவே பிறப்பித்த சஸ்பென்ஷன் ஆர்டரை மாற்றி, அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்லூரிகள் எல்லாம் இன்று மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன என்பதை இந்த அரசு சற்று ஆலோசிக்க வேண்டும். இப்பொழுது, இன்று பத்திரிகையில் கல்லூரி முதல்வர்கள் எல்லாம் அரசியலில் மாணவர்களை இழுக்கக் கூடாது என்ற ஒரு வேண்டுகோளை விட்டிருக்கிறார்கள். அரசியலில் மாணவர்களை இழுத்தது இந்த அரசுதான், திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றையதினம் இந்த மாநிலத்திலே இருக்கிற அனைத்துக் கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன. கல்லூரிகளைத் திறந்து நடத்துவதற்குச் சக்தியற்ற இவர்களுக்கு நிச்சயமாக இந்த நாட்டை ஆள அருகதை இல்லை. ஆகவே, கல்லூரிகளை மூடுவதற்குப் பதிலாக, இந்த அமைச்சரவை தன்னை மூடிக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது, சென்னை லா காலேஜானது மூடப்பட்டிருக்கிறது. ஏன் ? அங்கே ஒரு யூனியன் தேர்தல் நடைபெற்றது. அங்கே காங்கிரஸ் அனுதாபிகள் வெற்றி பெற்றுவிடுவார்கள் என்ற சூழ்நிலை உருவானதும் எ.டி.எம்.கே மாணவர்களும், டி.எம்.கே. மாணவர்களும் சேர்ந்து பேலட் பாக்ஸை தூக்கிக் கொண்டு போய் விட்டார்களென்ற செய்தி வந்தது. நான் கூறுவதெல்லாம் இந்தத் தேர்தலில் அரசியல் நுழையக் கூடாது. அதனால்தான் இன்று லா காலேஜ் மூடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல; அந்த நிகழ்ச்சிகளில் அண்ணல் காந்தியடிகளுடைய படம் நொறுக்கப்பட்டிருக்கிறது. தலைவர் காமராஜின் படம் நொறுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு அத்தனையையும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாகக் கையாலாகாத அரசு என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்ததாக, தொழிலாளிகளைப் பொறுத்தமட்டில், இந்த அரசு ஏதோ தொழிலாளர்களின் அரசு என்றெல்லாம் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது. இன்றையதினம் மாநிலத்தில் சிமெண்ட் உற்பத்தி எவ்வளவோ பாதிக்கப்பட்டிருக்கிறது. சிமெண்ட் கிடைக்காமல் நாம் அவதிப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். ஆனால், மாண்புமிகு விவசாய அமைச்சர் ஆதித்தனார் அதிகத் தொடர்பு கொண்டுள்ள தாளையூத்து சிமெண்ட் ஆலையும், சங்கரி சிமெண்ட் ஆலையும் இன்று ஓடாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளிகளுக்கு நியாயமான போனஸ் கொடுக்க மறுக்கப்பட்டதன் காரணமாக அங்கு தொழிலாளிகள் நடத்துகின்ற போராட்டம் காரணமாக, இன்று இந்த இரண்டு ஆலைகளும் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால், மூடப்பட்டது மட்டும் அல்ல, ஏறத்தாழ 3,700 தொழிலாளிகள் வேலையிழந்து இருக்கிறார்கள். அவர்கள் குடும்பம் படுகின்ற அவஸ்தையைப் பார்த்தால் நிச்சயமாக யாரும் மனம் உருகாமல் இருக்க முடியாது. ஆகவே, பொறுப்பிலிருக்கிற அமைச்சர் உடனடியாகத் தலையிட்டு அந்த ஆலையைத் திறந்து தொழிலாளிகளுக்குப் போனஸ் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

ஆகவே, நான் கடைசியாக, இந்த அரசானது இந்த நிலையில் மாணவர்களைத் துன்புறுத்தி, தொழிலாளிகளைத் துன்புறுத்தி, இந்த நாட்டிற்குச் சேவை செய்கின்ற மனப்பான்மையற்று தொடர்ந்து நடந்து வருவது சரியல்ல. ஆகவே, இந்த அரசின் மீது இந்த மாமன்றம் தன்னுடைய நம்பிக்கையை இழந்து விட்டது என்ற தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகிறேன்.

**திரு. சொ. காவேரிமணியம்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளும் அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், அதே நேரத்தில் கண்டனத் தீர்மானத்தையும் இரண்டையும் எதிர் வரிசையிலே இருக்கக்கூடிய அருமை நண்பர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த இரண்டு தீர்மானங்களும் ஆளும் அரசு முதல் தடவையாகச் சந்திப்பது அல்ல, இதற்கு முன்னால் இரண்டு அல்லது மூன்று தடவைகள் இந்த மாதிரியான தீர்மானங்களை எல்லாம் சந்தித்து, அவர்கள் சொன்ன காரணங்களை, அவர்கள் சொன்ன விளக்கங்களை, எந்த அளவிற்கு அவர்கள் சொன்னதிலே மாறுபட்ட உண்மைகள்

[திரு. கோ. காவேரிமணியம்] [1974 டிசம்பர் 14

இருக்கின்றன என்பதை, எங்களுடைய வழிகாட்டியும், டாக்டரும் முதல்வருமான கலைஞர் அவர்கள் இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அமைச்சர் பெருமக்களும், அதே நேரத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் மிகத் தெளிவான முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இங்கு கொண்டு வந்திருக்கக்கூடிய இரண்டு தீர்மானங்களில், அதனுடைய சாரங்களில் எந்த அளவிற்கு உண்மையில்லை என்பதையும் அதே சமயத்தில் இது தேவையில்லை, தேவையற்றது என்பதையும் நான் இங்கே தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர்கள். எதிர்க் கட்சியைச் சார்ந்த 2 அல்லது 3 பேர்கள் இந்த அரசு விலக வேண்டும். இந்த அரசு மக்களுடைய நம்பிக்கையை இழந்துவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் முதல் தடவையாக இன்று இதைக் கேட்கவில்லை. கடந்த 1971-லேயிருந்து ஆளுகின்ற அரசைப்பற்றி எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், நம்பிக்கையை நாங்கள் இழந்து விட்டோம், இழந்துவிட்டோம் என்று சொல்லி தயவு செய்து எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய நண்பர்கள் பொதுமக்களுடைய நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள் என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இதனை விரிவாகச் சொல்வதற்குக் காரணம், எனக்கு முன்னால் பேசிய எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பிரெஞ்சுப் புரட்சியைப் போன்ற புரட்சி ஏற்பட இருக்கிறது, அமைச்சர்களை நாங்கள் கேரோ செய்வோம் என்றெல்லாம் சொன்னார்கள். நான் மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன், நம்முடைய அமைச்சர்கள், செவியானது கைத்துப் போகக் கூடிய அளவுக்கு மக்களுடைய குறைகளைக் கேட்கக்கூடியவர்கள். அதுமட்டுமல்ல, எந்த நேரத்திலும், பொதுக் காரியங்களாக இருந்தாலும் சரி, பொதுப் பிரச்னைகளாக இருந்தாலும் சரி, அவைகளை நன்கு ஆராய்ந்து, தேவையான திட்டங்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லக்கூடிய, பொதுமக்களோடு தொடர்புள்ள அமைச்சர்களைத் தான் தமிழக அரசு பெற்றுள்ளது என்று நான் மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். பிரெஞ்சுப் புரட்சியைப்போல் வரும்



1974 டிசம்பர் 14] [திரு. சோ. காவேரி மணியம்]

என்று சொன்னார்கள். பிரெஞ்சுப் புரட்சி வந்தது என்றால், அந்த அமைச்சர்கள், அந்த மன்னர்கள் எந்த அளவு ஆடம்பரத்தில் ஈடுபட்டிருந்தார்கள், மக்களுடைய எண்ணங்களைப் புறக்கணித் தார்கள், செய்ய கடைப்பிடிக்க வேண்டிய ஜனநாயகப் பண்புகளை யெல்லாம் தூக்கி எறிந்தார்கள் என்பதை யெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? அப்படிப்பட்ட அமைச்சர்களையா நாம் பெற்றிருக்கிறோம்? அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் களையா பொதுமக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும். இன்று இருக்கக் கூடிய நிலைமையை ஆளுக்கட்சி முழுமையாக. . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏதோ முன்பிருந்த அமைச்சர்கள் மக்களைப் பார்க்காதவர்கள், மோசமான வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்று எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் ?

**திரு. சோ. காவேரிமணியம்:** அம்மையார் அவர்களுக்கு நான் பிரெஞ்சு நாட்டு மன்னர்கள், அமைச்சர்கள் எப்படி இருந்தார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிந்த வரலாற்றை, எனக்கு முன்னாலே ஓர் உறுப்பினர் பேசினாரே, பிரெஞ்சு நாட்டுப் புரட்சி போன்று இங்கு ஏற்படும் என்று சொன்னதற்காகச் சொன்னேன். அங்கே இருக்கக்கூடிய நிலைமையையும் இங்கே இருக்கக்கூடிய நிலைமையையும்தான் நான் ஞாபகப்படுத்தினேனே தவிர, வேறு ஒன்றுமல்ல.

(டாக்டர் க. நாகராஜன் தலைமை)

ஆகவே இந்தநாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியை இந்த அரசு பூரணமாக உணர்ந்திருக்கிறது, உணராமல் இல்லை. தேவையான காரியங்கள், செய்யப்பட்டு, திட்டங்கள் நடை முறையிலே கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணமாக, இந்த ஆட்சியினுடைய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் 6, 7, 8 ஆகிய நாட்களிலே மதுரையிலே உள்ள திருப்பரங்குன்றத்திலே

[திரு. சொ. காவேரி மணியம்] [1974 டிசம்பர் 14

தன்னுடைய பொதுக்குழு, செயற்குழு கூட்டங்களைக் கூட்டியது. அப்படிக் கூடுகின்ற நேரத்திலே இந்த நாட்டினுடைய மூலப் பிரச்னையாகிய இந்த நாட்டு மக்களுடைய உள்ளத்தைத் தொடக் கூடிய பிரச்னையாகிய உணவுப் பிரச்னையையும் ஏற்பட்டிருக்கின்ற வறட்சி நிலைமையைப்பற்றியும் அதனை எப்படித் தீர்க்க வேண்டு மென்பதைப்பற்றியும் 6-ஆம் நாளன்று முழுவதும் சிந்தித்து எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதைப்பற்றிய கருத்துக்களை யெல்லாம் உறுப்பினர்களிடம் கேட்டு எவ்வாறு சிக்கலைப் போக்க வேண்டுமென்ற கருத்துக்களை யெல்லாம் கேட்டு உன்னிப்பாகக் கவனித்து திட்டங்களை யெல்லாம் தீட்டியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் அமைச்சர்கள் இதை அலட்சியப்படுத்துகிறார்கள் அல்லது அந்தச் சட்ட மன்ற உறுப்பினர்கள் எங்கேயோ ஓடி மறைந்துவிட்டார்கள் என்று சொல்வது எவ்வளவு உண்மைக்குப் புறம்பானது என்பதைக் காட்டுவதற்காகத்தான் நான் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சி நண்பர்களைப் பார்த்து நான் சொல்லிக்கொள்வேன். எங்களை 'பதவியிலிருந்து விலகுங்கள், உங்களை மக்கள் நம்பவில்லை. நீங்கள் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டீர்கள், என்று சொல்கிற அவர்களைப் பார்த்து பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், 8-ஆம் நாளன்று மதுரையிலே நடைபெற்ற ஊர்வலத்தை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். வறட்சி நிலைமையைப் போக்க அமைச்சரவை நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது, எங்களுடைய அமைச்சர்கள் நல்லமுறையிலே கவனித்து வருகிறார்கள், இந்த நாட்டு மக்களின் உண்மையான நிலையை உணர்ந்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டுதான் மக்கள் அன்றைக்குப் பெரிய ஊர்வலமாக வந்து ஆதரவு தெரிவித்தார்கள். எதிர்க்கட்சி நண்பர்கள் சொல்வதைப் போல் அமைச்சர்களுடைய காரணத்தினாலோ அல்லது ஆளுகிற பொறுப்பிலே உள்ள எங்களுடைய காரணத்தினாலோ இந்த வறட்சி ஏற்படவில்லை என்பதை மக்கள் நல்லமுறையிலே தெளிவாக தெரிந்துகொண்ட பிறகுதான் நாங்கள் வருகின்ற ஊர்வலத்தை, ஆடம்பரமில்லாத அந்த ஊர்வலத்தை, எங்களுடைய கொடிகளோடு வந்த அந்த ஊர்வலத்தை ஆதரிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு புறக்கணிக்கக்



1974 டிசம்பர் 14] [திரு. கொ. காவேரிமணியம்]

கூடிய நிலைமையில் நடக்கவில்லை, வேண்டாத நிலைமையில் இல்லை, இந்த நிலையைத் தெரிந்தவுடன் எங்கள் தலைவர் டாக்டர் அவர்கள் எந்த எந்த முறையிலே இதைத் தீர்ப்பதற்கு வழிவகை இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்து அந்த மாவட்டக் கலெக்டர்களிடம் இது சம்பந்தமாக ரிப்போர்ட்டுகளைக் கேட்டிருக்கிறார்கள். ரெவின்யூ போர்டு மெம்பர்களைச் சில மாவட்டங்களுக்கு அனுப்பி அவர்களிடமும் அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை மையமாக வைத்து ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலையை எப்படிப் போக்குவது என்பதை நல்லமுறையிலே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் 5 கோடி ரூபாய், நீங்கள் எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு முன்னதாகவே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதற்கு முன்னமேயே நாட்டு மக்களின் நாட்டின் நிலையை உணர்ந்து ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, 60 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் கொஞ்சம் திணறினார்கள், அவர்கள் அரசினுடைய பாலிசிபற்றிச் சொல்கிற நேரத்திலே, அரசு லெவி மூலம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் கொள்முதல் செய்ய இருக்கிறது. கூட்டுறவுத் துறை மூலமாக நெல்லை வாங்க இருக்கிறது. எந்தவிதத்திலும் விவசாயி களுக்குத் துன்பம் ஏற்படாத முறையிலே நியாயமான விலை கொடுத்து வாங்க இருக்கிறது என்று நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள்.

நான் இதை யெல்லாம் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், எந்த அளவிற்கு இதிலே இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது, நல்லமுறையிலே திட்டங்களை வகுத்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான். இதற்குப் பிறகும் அருமை எதிர்க்கட்சி நண்பர்கள் நாங்கள் ஏதோ செய்த தவறின் காரணமாக அல்லது அமைச்சர்கள் செய்த தவறின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது என்றால், அவர்கள் வேண்டாத, விரும்பாத, பொல்லாத கருத்தைச் சொல்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், எங்கள் அரசுமீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், அதற்கான காரணங்களையெல்லாம் நான் முன்னாலேயே எடுத்துச் சொன்னேன். அதை ஏற்றுக்கொள்ளாமல் நீங்கள் தேவையில்லாத தெளிவில்லாத காரணங்களைச் சொல்லி நீங்கள் உங்களுடைய நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கிற தமிழகத்தை ஆட்சி செய்கின்ற இந்த அமைச்சரவைமீது எதிர்க் கட்சிகளால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் சென்ஷர் மோஷனையும் எங்கள் கட்சியின் சார்பாகக் கடுமையாக எதிர்த்து எனது கருத்துக்களைச் சொல்ல முயல்கிறேன்.

இன்று நாட்டில் வான் பொய்த்த காரணத்தினால்—கடந்த நூற்றாண்டுக் காலமாக இல்லாத மழையின்மை இந்த ஆண்டு இல்லை, மழைபெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாமல் போய்த்து விட்டதால்—நாட்டு மக்கள் உயிருக்கும் உடலுக்கும் பாதுகாப்பு என்றும் வற்றாத ஆறாக இருக்கின்ற காவிரியிலே தண்ணீப் பஞ்சம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலே ரெகுலராக என்றும் வற்றாத ஆறாக இருக்கின்ற காவிரியிலே தண்ணீர்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியிலே உசிலம்பட்டி, திருமங்கலம், சேடபட்டி, வடமதுரை, ஆண்டிபட்டி பகுதிகளிலேயும் இராமநாதபுரம் மாவட்டத்திலே முகவை வட்டம் போன்ற அத்தனை பகுதிகளிலேயும் வறட்சி ஏற்பட்டு ஆற்றிலே ஊற்றெடுக்கிற பகுதிகள் எல்லாம் வறண்டுபோய் தண்ணீர்நிரம்பி யிருக்கவேண்டிய கண்மாய்கள் எல்லாம் வறண்டுபோய் இன்றைக்குக் குடிநீருக்குக்கூட பஞ்சம் ஏற்படக்கூடிய நிலைமையில் பரமக்குடி, உசிலம்பட்டி போன்ற பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதுபற்றி நான்தான் முதன்முதலில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன்.

'Famine conditions are now prevailing in my district and all over the State and precautionary measures should be taken immediately'





என்ற ரெக்வஸ்டோடு என்னுடைய தொகுதியைப்பற்றி நான் கொடுத்திருந்தாலும் மாநில அளவில் இருக்கக்கூடிய நிலையினைப் பற்றிச் சுருக்கமாக ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கும் முதல்வர் அவர்களுக்கும் கலக்டருக்கும் கொடுத்தேன்.

'slowly developed and it has taken a very dangerous dimension'

என்ற நிலைக்கு வந்திருக்கிற காரணத்தினால் இன்று எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள்

'to register their protest in a democratic basics'

என்ற முறையிலே அவர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க எதிர்ப்பான கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய முறையிலே ஜனநாயக ரீதியிலே சென்ஷூர் மோஷனையும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்கே இந்தத் தீர்மானங்களின் விளைவு என்ன என்பது தெரியும். தெரிந்தாலும் தங்களுடைய கருத்தை இந்த மாமன்றத்தின் முன் எடுத்துச் சொல்வதால் மக்களுக்காக சிறப்பாகச் செயல்படுகிறோம் என்ற விவரத்தைத் தெரிவிக்கச் செயல்படுகிறார்கள்.

நான் ஏற்கனவே அட்ஜார்ன்மெண்ட் மோஷன் மீது பேசுகிற போதே கூறினேன். இது மனிதப் பிரச்னை, சமுதாயப் பிரச்னை, தேசியப் பிரச்னை என்ற முறையிலே அணுகப்பட வேண்டும், அரிசியை அரசியலாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் எந்தக் கொள்கையை எந்தக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறவராக இருந்தாலும் இது உயிர்ப் பிரச்னையாக இருக்கிறது மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்னை, எப்படி வாழ்க்கை நடத்துவது என்று மக்கள் சிந்திக்கின்ற பிரச்னை தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளத்திலே மெஜாரிட்டியாக இருக்கிறவர்கள் சிந்திக்கின்ற பிரச்னை, மைனாரிட்டியாக இருக்கிறவர்கள், நம்முடைய நிலத்தை எப்படி வைத்துக் கொள்ளப் போகிறோம், தொழிலை எப்படி நடத்தப் போகிறோம், மேஜாரிட்டியாக இருந்தவர்கள் வாடும் போது அவர்களுடைய உயிரைப் பாதுகாக்க கொலை, கொள்ளை

ஏற்படக்கூடிய நிலை வரக்கூடிய பரவலான நிலைமையைப்பற்றி தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தான் அன்றைக்குப் பேசும்பொழுதே குறிப்பிட்டேன். 'நேஷனல் எமர்ஜென்ஸி' என்று டெக்ளேர் செய்வதைப்போல், அந்நியப் படையெடுப்பு என்று வரும்பொழுது எப்படி அவசரப் பிரகடனம் செய்து அத்தனை தேசிய சக்திகளையும் ஒன்றுபடுத்தி தேச மக்களின் உயிரையும், உடமையையும் பாதுகாப்பதற்காகத் தியாகம் செய்யத் தயாராகிறோமா, அதைப் போல் இன்றையதினம் மத்திய, மாநில அரசுகள் அத்தனை சக்திகளையும் ஒன்று திரட்டி அவசரப் பிரகடனத்தைப்போல்

'Similar to that of National emergency'

ஒரு பிரகடனத்தை நாம் மத்திய அரசின் மூலமாகவோ அல்லது மாநில அளவிலோ அதற்குரிய அவசர கால நடவடிக்கைகளை எடுத்து இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்குத் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சோஷலிசம் பேசுகிறோம், சமதர்மம் பேசுகிறோம், மனித வர்க்கம் அத்தனைபேரும் ஒன்று என்ற நிலையை உணர்ந்திருக்கும் நிலையில் சமுதாய வேறுபாடுகளை, பொருளாதார ரீதியாக, கலாச்சார ரீதியாக கல்வி ரீதியாக இருக்கும் வேறுபாடுகளை நீக்கி சமத்துவ சமுதாயத்தை நிறுவ முயற்சிக்கிறோம். அந்த நிலையில் மெஜாரிட்டி சமுதாயத்தினர் ஏழைகளாக, வாழ வகையற்றவர்களாக இருக்கிறார்கள். பர்ச்சேசிங் கெப்பாசிட்டி இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் உழைக்கத் தயாராக இருக்கிறார்கள், 24 மணி நேரமும் உழைக்கத் தயார், ஆனால் உண்பதற்கு உணவு கொடுங்கள் என்ற நிலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அந்தக் கேள்விக் குறியோடு வாழ்கின்ற அந்த மெஜாரிட்டி சமுதாயத்தினரைக் காக்க மக்கள் நலனுக்காக இருக்கும் அரசு ஏன் அனைத்துச் சக்திகளையும் பயன்படுத்தி அதிக விலை கொடுத்து, நேற்று உணவு அமைச்சரவர்கள் விளக்கம் சொன்னார்கள், பஞ்சாப் மாநிலத்தை கோதுமை கேட்டதாகவும், டெலிபோனிக் மெசேஜ் மூலம் கேட்டதற்கு, 1¼ கோடி ரூபாய்க்கு டிராஃப்டாக வேண்டுமானாலும் கொடுக்கிறோம் என்று தெரிவித்தபொழுது அவர்கள் மறுத்தார்கள் என்று சொன்னார்கள். நான்கூட





இடைவெளியில் பேசுவதாக இருந்தேன், ஆனால் இன்று வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தால் அப்பொழுது பேசவில்லை. ஏன் அந்த அரசு மறுத்தது? நேஷனல் இண்டகிரெட்டி, நேஷனல் யூனிட்டி என்று பேசுகிறார்கள், தேச ஒற்றுமையைப்பற்றி, தேச ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறார்கள், அங்கே அதற்குத் தலைமை வகிக்கின்ற இந்திரா காந்தி அரசை, மத்திய அரசை ஏன் வலியுறுத்தவில்லை, அவர்கள் மூலமாக என்ன முயற்சி எடுத்தீர்கள், அப்படி எடுத்தீர்கள் என்றால் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள்.

ஏதோ தமிழ்நாட்டிலேயிருந்து கேட்கிறார்கள் என்று அதில் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடிய நிலை இருந்தால், அவர்கள் பேசுகின்ற தேச ஒருமைப்பாட்டுப் பிரச்சாரம் அரசியலுக்காகத்தானே தவிர, மக்களுக்காக அல்ல என்ற அளவிற்கு மக்கள் மன்றத்தில் வைக்கலாமே, அப்படி ஏன் அணுகவில்லை என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் மறுத்ததன் மூலமாக தனிப்பட்ட நபர்களின் மூலம் லாப நோக்கத்தோடு, தனிப்பட்ட நபர்களின் லாபத்திற்காகச் செய்வதைப்போல ஒரு 'பட் இன்டென்ஷனை' எதிர்க் கட்சிக் காரர்கள் கற்பிக்கும் அளவிற்கு ஏன் இடம் கொடுக்க வேண்டும். ஆகவே, கோதுமை மட்டுமல்ல, நெல்லும் சர்ப்ளஸாக இருப்பதாகத் தெரிகிறது. அதேபோல் அண்டை மாநிலமாகிய ஆந்திராவில் அரிசி மிகக் குறைந்த விலைக்குக் கிடைப்பதாகவும், நெல் அதிகமாக விளைந்து சர்ப்ளஸ் ஸ்டேட்டாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அங்கே நாம் இப்பொழுதே இருக்கும் மூலதனத்தை அல்லது வேறு துறைகளுக்கு இருக்கும் பணத்தை 'டைவர்ட்' செய்து அதிகமான கோதுமையையும், நெல்லையும் இந்தியாவிலேயோ அல்லது மத்திய அரசின் மூலமாக வெளி நாடுகளிலேயிருந்தோ பெறுவதற்கு வாய்ப்பிருக்கும். அவைகளை வாங்கி ஏன் ஸ்டாக் செய்து கொள்ளக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிக்கையில் அவசரகால நடவடிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மக்களின் வேதனையை நன்கு உணர்ந்துள்ள தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக 10 லட்சம் டன்களை ப்ரொக்யூர் செய்து ஸ்டாக் செய்தால் தான் தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்ற முடியுமே தவிர,

அப்படி இல்லையானால் மக்களைக் காப்பாற்ற முடியாது. நமக்கு அரிசி இல்லை என்ற நிலை வரும்பொழுது இப்பொழுது தேவைப் படுவதைத் தவிர, சில மாதங்களுக்குப் பிறகு வரும் **ஆபத்தை** உணர்ந்து, குறிப்பிட்ட சீசனிலே மலிந்த விலைக்குக் கிடைக்கும் என்ற நிலையை உணர்ந்து ஏன் உடனடியாக அண்டை மாநிலங் களுக்குச் சென்று வாங்கி ஸ்டாக் செய்யக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே, கலைஞரவர்களும், உணவு அமைச்ச ரவர்களும் இதைப் பரிசீலித்து உடனடியாக அண்டை மாநிலங் களிலிருந்து உணவுப் பொருட்களை வாங்கி ஸ்டாக் வைத்துக் கொண்டு, அதற்குரிய முறைகளை சட்ட முறைப்படி எதைச் செய்ய வேண்டுமோ அதைப் பின்னால் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்து கோடி ரூபாய் வறட்சிக்காகச் செலவு செய்யப் போவதாகக் கூறப்படுகிறது. சில மாவட்டங்களில் அதிக பட்ச வறட்சி என்று கூறப்பட்டு வருகிறது. ஆனால் நெற்களஞ்சியமாகிய, மனிதனின் இதயத்தைப் போல் இருக்கின்ற தஞ்சை மாவட்டத்தில் கூட பஞ்சம் என்ற நிலையை அறிகிறோம். பஞ்சம் என்றால் சாதாரண அர்த்தத்தில் நான் குறிப்பிடவில்லை, எப்பொழுதும் பெருமளவில் விளைச்சலாகும் 12 இலட்சம் ஏக்கர்களில் விளைச்சல் சரியாக இல்லை. பயிர் செய்யக்கூடிய நிலங்கள் இன்னும் பாழடைந்து கிடக்கின்றன என்ற நிலையைக் குறிப்பிட்டார்கள். இப்படி வறண்டு கிடக்கும் நிலையில் எப்படி மக்களைக் காப்பாற்றப் போகிறோம்? ஆகவே, எல்லா மாவட்டங்களிலேயும் துரிதமான நடவடிக்கை எடுக்க கலெக்டர்களுடைய மாநாட்டை மாநில அளவிலே முதல்வரவர்கள் கூட்டினார்கள். அத்தனை அமைச்சர் களுடைய, அதிகாரிகளுடைய ஆலோசனைகளைக் கேட்டார்கள். அப்படிக் கேட்டறிந்த பிறகு இனிமேல்தான் ரெவின்யூ போர்டு ரெவின்யூ அதிகாரிகள் ஆறு பேர்கள் மாவட்ட ரீதியாக இந்த மாத இறுதிக்குள் ரிப்போர்ட் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், அதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்கள். எந்தப் பிரச்னையானாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் கலைஞர் அவர்கள் இதிலே இன்னும் துரிதமாக செயல்பட வேண்டும். மனிதர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள், பலயிடங்களில் பட்டினியாகக் கிடக்கிறார்கள், இரண்டு நேரம், ஒரு நேரம்தான்





சாப்பிடுகிறார்கள். அந்த நிலையில் நீங்கள் மனிதாபமானத்தோடு அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று விரும்புகிறீர்கள். அதற்கு உடனடியாகச் செயல்பட வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் விநியோக முறை என்று வரும்பொழுது எதிர்க்கட்சி நண்பர்களெல்லாம் குறிப்பிட்டார்கள், இங்கே ஊழல் இருக்கிறது அதை இந்த அரசு சிந்திக்க மறுத்தது அல்லது பிரச்சனைகளைச் சமாளிக்கச் செயலற்றுப் போய்விட்டது என்று பொதுவாகக் குறிப்பிட்டார்களே தவிர, இந்த இடத்தில் இந்த ஊழலில் இந்த அரசு சம்பந்தப்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை.

Intentionally they have committed certain irregularities.

என்று சொல்லவில்லை.

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்கிறாரே, அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர், ஆளுங் கட்சியில் சேர்ந்துவிட்டாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN (DR. K. NAGARAJAN) : Test is not a point of order.

**திரு. கே. கந்தசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். நான் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்தாலும் ஆளுகிற அரசு நல்ல தலைவர்களைக் கொண்ட அரசு தமிழ்ச் சமுதாயத்தை ஆள்வதால் அதை முழு மனதாக ஆதரிக்கின்ற ஃபார்வர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்தவன் என்ற நிலையை விளக்க விரும்புகிறேன். அவர்கள் இன்றையதினம் ஆட்சியில் இருப்பவர்களை அந்த ஆட்சிப் பீடத்திலேயிருந்து இறக்க வேண்டுமென்ற அக்கறை கொண்டு, அதில் தாங்கள் அமர வேண்டுமென்று அக்கறை கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு, ஏழை எளிய பாட்டாளி வர்க்கத்திற்கு உதவி அளிப்பவர்கள் யாராக இருந்தாலும்

[திரு. கே. கந்தசாமி] [1974 டிசம்பர் 14

அவர்களுக்கு முழு மனதோடு ஆதரவு தருகின்ற தேவர் திருமகனின் பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறவன். இன்றையதினம் கலைஞர் அவர்கள் நல்லாட்சியை நடத்துவதால் இதை நான் ஆதரிக்கிறேன் என்பதை விளக்க ரீதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவுப் பிரச்னையில் கம்பல்சரி ரேஷன் கொண்டுவரப்படக் கூடும் என்று அறிகிறேன். அதைக் கொண்டு வர வேண்டுமென்று ஆணித்தரமாகக் கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால், ஒவ்வொரு கிராமத்திலும் கட்டாய ரேஷன்கடையைத் திறந்தால் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. அதை விநியோகிக்கும் நபர்கள் தவறு இழைப்பதற்குப் பதிலாக மக்களின் பிரதிநிதி களாக இருக்கும் கூட்டுறவு இயக்கங்கள் மூலம் சப்ளை செய்ய வேண்டுமென்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இன்றைக்குக் குற்றஞ்சாட்டுபவர்கள் சொல்லக் கூடிய அளவிற்கு அங்குமிங்கும் சில குறைபாடுகள் இருப்பதை உணரவேண்டும். கூட்டுறவு மூலமாக நடக்கும் விநியோகத்தை All Party Vigilance Committee என்று போட்டு எங்கெங்கு ரேஷன் கடை திறக்கிறார்களோ, அந்த இடங்களிலே எல்லாம் கூட்டுறவு தலைவரையும், உறுப்பினர்களையும் கொண்டு அத்தனைபேரும் கூறுகின்ற குறைபாடுகளைத் தவிர்த்து நடத்தக் கூடிய அளவிற்கு இதர கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களானாலும் நான் முதலில் குறிப்பிட்டதைப்போல் இது மக்கள் பிரச்னையாக இருப்பதால் ஆளுகின்ற அரசைச் சேர்ந்தவர்கள் அங்கே விநியோகம் செய்வதில் அதிகமாகக் கலந்து கொள்கிறார்கள் என்ற நிலையில்தான் மற்றவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அப்படிக் குற்றஞ்சாட்டுகின்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களை இந்த விஜிலென்ஸ் பாதுகாப்பு கமிட்டியில் உறுப்பினர்களாகப்போட்டு, பஞ்சாயத்து தலைவர்களையும் போட்டு கிராமங்களில் விநியோகம் செய்தால் இவர்கள் குறிப்பிடும் ஓரிரு தவறுகளையும் நாம் தவிர்க்க முடியும். அரசுக்கு மற்றவர்கள் கற்பிக்கும் மாசையும் தவிர்க்க முடியும்



1974 டிசம்பர் 14] [திரு. கே. கந்தசாமி]

என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு கலைஞர் அவர்களோடு கலந்து செயல்பட வேண்டும்.

(முற்பகல் 11-30)

இதற்கு முன்னோடியாக ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். காவிரிக்கு கபினியிலிருந்து தண்ணீர் வராது கர்நாடக அரசு நிறுத்தி வைத்தது. 25,000 ஏக்கருக்குத் தண்ணீர் கேட்டு பத்து பதினைந்தாயிரத்துக்குக் கூடத் தண்ணீர் வராத நிலையில் சர்வ கட்சித் தலைவர்களையும் கலைஞர் அவர்கள் இரண்டு மூன்று முறை அழைத்து ஆலோசனை கேட்டார்கள். அதன்படி செயல்பட்டார்கள். அதன் காரணமாக எதிர்க்கட்சியிலிருப் பவர்கள் அந்தப் பிரச்சினை பற்றிக் குறை ஏதும் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

அதே போன்று இப்போது எதிர்பாராது வான் பொய்த்த காரணத்தால் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு அரசுக்கு மாசு கற்பிக்கும் வகையில் போணி திரட்டி, மக்கள் சக்தியைத் திரட்டி இந்த அரசுக்குக் களங்கத்தை உண்டாக்கிவிடலாம் என்று எண்ணுகிறார்கள். இந்தப் பிரச்சினையிலும் எதிர்க் கட்சித் தலைவர்களையும் அழைத்து அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்று அரசு செயல்பட்டால் பின்னால் அவர்கள் குறை கூற முடியாத நிலை ஏற்படும்.

மதுரையில் உசிலம்பட்டி பகுதியில் வைகைத் தண்ணீர் வரவில்லை. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் குற்றப் பரம்பரையைச் சார்ந்தவர்கள். அவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். வைகை அணை கட்டியதே அந்தப் பகுதியில் 22,000 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டு மென்பதற்காகத்தான். ஆனால் அந்த நேரத்தில் அரசியல் காரணத்தால் 10,000 ஏக்கருக்குக் கூட அந்தத் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. அந்தத் தண்ணீரை வேறு பகுதிகளுக்கு அன்று கொண்டு சென்றார்கள். அப்போது இழைக்கப்பட்ட அந்த அநீதி கலைஞர் ஆட்சியில், சோழன் ஆட்சியில் களையப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. கந்தசாமி] [1974 டிசம்பர் 14]

அடுத்து, ரோடு போடுவதற்கு டி.இ. . . (மணி அடிக்கப்பட்டது—திரு. கே. எ. வகாப் பேச அழைக்கப்பட்டார்).

இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் தீர்க்க வேண்டுமென்று கூறிக்கொண்டுவரப்பட்டுள்ள சென்ஷர் மோஷனையும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கடுமையாக எதிர்த்து மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான இந்த அரசு நல்ல முறையில் மக்களைக் காக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக அரசின் பேரில் கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் எதிர்த்தும் ஆதரித்தும் என்ற முறையிலே கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அருமை நண்பர் முனு ஆதி அவர்கள் எந்தக் கட்சியிலே இருந்து பேசுகிறீர்கள் என்று கேட்டார்கள். மூன்று கட்சிகள் இருக்கின்றன. ஒன்று ஆளும் கட்சி, இரண்டாவது எதிர்க்கட்சி, மூன்றாவது இரண்டுக்கும் சமமாக சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்த சில தோழமைக் கட்சிகள் இருக்கின்றன. அரசு தவறுகள் செய்தால், குற்றங்கள் செய்தால் எடுத்துக் காட்டும். எதிர்க்கட்சிகள் இல்லாத புகார்களை ஊழல் என்று மாய்மாலம் செய்வதை. . .

**திரு. முனு ஆதி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய கனம் உறுப்பினர் வகாப் அவர்கள் இரண்டுக்கும் நடுநிலைமை, சமநிலை, தோழமைக் கட்சி, ஆளும் கட்சிக்கும் பக்கபலமாக இருப்போம், எதிர்க்கட்சியையும் ஆதரிப்போம் என்று சொல்லுவது என்றால் அவர்கள் எந்தக் கட்சி? அப்படி என்றால் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்பது எல்லாம் ஒன்றும் இல்லாத கட்சி, நாங்கள்தான் துலாக்கோல் கட்சி என்று சொல்லுகிறார்களா?

**திரு. கே. எ. வகாப் :** எதிர்க்கட்சிகள் கூறுகின்ற உண்மைக்குப் புறம்பான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை விடுத்து நாட்டுமக்களின் உண்மையான நிலையை நாங்கள் பிரதிபலிக்கிறோம். நாட்டு மக்களின் உண்மையான நிலையைச் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லுவது எங்களுடைய கடமை. நீங்கள்



1974 டிசம்பர் 14] [திரு. கே. எ. வகாப்]

ஆட்சியிலிருப்பவர்கள் இறங்கவேண்டும், ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்கத்தில் சொல்லுகிறீர்கள். தோழமைக் கட்சியினர் ஆட்சிக்கு வரவேண்டுமென்ற நோக்கம் இல்லாதவர்கள். நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையான நோக்கத்தில் ஆட்சியிலிருப்பவர்கள் செயல்படும் போது பாராட்டி எதிர்க்கட்சியை எதிர்த்து ஆளும் கட்சியை ஆதரிக்கிற தோழமைக் கட்சி என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் நாட்டிலே அரிசிப் பிரச்சினையை வைத்து அரசியலை நடத்த முயற்சிக்கிறார்கள். எந்த அரிசிப் பிரச்சினையால் இந்த அரசு வந்ததோ அந்த அரிசிப் பிரச்சினையில் இந்த ஆட்சியைக் கவிழ்ப்போம் என்று பேசுவதைக் கேட்கிறோம்.

உண்மையில் நாட்டிலே பஞ்சம் வருமோ என்ற நிலைதான் இருக்கிறது. இருள்சூழ்ந்த எதிர்காலந்தான் இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

குழந்தைக்குக் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, வலியும் வந்து விட்டது. தாய் பதறி அழுகிறாள். டாக்டரை அழைத்து மருந்து கொடுக்கத் துடிக்கிறாள். பக்கத்தில் இருக்கும் மாற்றாந்தாய் டாக்டர் எதற்கு, மருந்து எதற்கு. பக்கத்தில் இருந்து அழுதாலே போதும் என்று சொல்லுகிறாள். இன்றையதினம் உள்ள எதிர்க் கட்சிகள் குழந்தை பிழைக்க வேண்டுமென்ற எண்ணத்தை மறந்து விட்டு இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் குற்றங்களைச் சொல்லுகின்றவர்களாக, மாற்றாந் தாய் போல் இருக்கிறார்கள். நாங்கள் அந்த முறையில் செயல்பட மாட்டோம்.

நாட்டிலுள்ள பஞ்ச நிலைமையை, இருண்ட சூழ்நிலையான எதிர்காலத்தைப் போக்க ஆளுகின்ற அரசுக்கு, திறமையாக ஆளுகின்ற முதலமைச்சருக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறி எல்லா அம்சங்களிலும் அனுசரணையாக ஆலோசனை செய்கிற முதலமைச்சருக்கு எதிர்க் கட்சிகள் ஆலோசனை கூறுவதற்குப் பதிலாக பதவியை விட்டு இறங்குங்கள் என்ற கோஷத்தைத் திரும்பத் திரும்ப எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் கண்டிக்கிறோம்.

[திரு. கே. எ. வகாப்] [1974 டிசம்பர் 14

இந்த நிலையைப் போக்க இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டுங்கள் என்று அரசுக்கு ஆலோசனை கூறலாம். பர்மா விலிருந்து வியட்நாமிலிருந்து, பிலிப்பைன்சிலிருந்து அரிசியை வரவழையுங்கள் என்று சொல்லலாம். உங்களால் முடியாது என்றால் மத்திய அரசாங்கத்தைக் கேட்டு வகோபித்த தீர்மானத்தை நாம் போடலாம். அப்படிப்பட்ட முறையில் நாங்கள் கருத்துக்களைத் தெரிவிப்போமே தவிர, காவிரி நீர்ப் பிரச்சினையில் உங்களோடு பேசுகின்றபோது ஒப்புக்கொண்டு வெளியே வந்து கண்டன அறிக்கையை வெளியிட மாட்டோம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டத்தில் கலந்து கொண்டோம். முதலமைச்சர் அவர்கள் டில்லியில் என்ன முடிவு எடுத்திருக்கிறார்களோ அதை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக் கிறோம். வெளியில் போய் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. அந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு கருத்தை இந்த மன்றத்தில் சொல்லிக் கொண்டிருப்பது சரிதானா என்று தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளே ஒப்பந்தத் திற்குச் சம்மதித்துவிட்டு வெளியே போய் எந்த வகையில் பிரச்சாரம் செய்தோம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லையே. ஏன் அவர்கள் எழுந்து பதில் சொல்லவேண்டும்?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று உதாரணத்திற்குச் சொன்னேன். எந்த வகையிலும் எந்த எதிர்க்கட்சியும் எந்த இடத்திலும் அப்படி மாறுப்பட்ட கருத்தைச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் எந்த எதிர்க்கட்சி எந்த இடத்தில் அப்படி மாறுபட்ட கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும் மன்றத்தில் எதையாவது பேசுவது, பத்திரிகையில் வரவேண்டுமென்பதற் காகப் பேசுவது சரியல்ல.



1974 டிசம்பர் 14]

**திரு. கே. எ. வகாப்:** நாங்கள் பேசுவதை எல்லாம் பத்திரி கையில் போடுவதில்லை. நீங்கள் பேசுவதைத்தான் பத்திரிகையில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பேசவேண்டுமென்று நினைப்பது கூட பத்திரிகையில் வந்து கொண்டிருக்கிறது.

யாரோ ஒரு தலைவர் பெங்களூருக்குச் சொந்தக் காரியமாகச் செல்லுகிறார். கபினி வாட்டரை அவர்தான் வாங்கித் தந்து விட்ட பாவனையில் பிரச்சாரம் நடக்கிறது. அதையும் நம்பக் கூடிய அளவுக்குப் பொதுமக்கள் அப்பாவித்தனமாக இருக் கிறார்கள். அரசு எடுத்த முயற்சி என்ன, எதிர்க்கட்சிகள் கொடுத்த ஒத்துழைப்பு என்ன என்பதை எல்லாம் மறைத்துவிட்டு தனிப் பட்ட கட்சியின் தலைவர் சொந்தக் காரியத்திற்காகப் பேசச் சென்ற நேரத்திலே, அவர் காவிரியைப் பற்றிப் பேசி கபினித் தண்ணீரை வாங்கித் தந்தார் என்று அவர்களுடைய ஏடுகளிலே எழுதப்படுகிறது.

அப்படிப்பட்ட நிலைமைகளைத்தான் குறிப்பிட்டுச் சொல் கிறேன். இன்றையதினம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. காலால் மடையைத் தள்ளிவிட்டு பயிர் செய்யும் தஞ்சையில் இன்று பஞ்சம் வந்திருக்கிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் நில நீர் இருக்கிறது. அதை வைத்து. தஞ்சையை மிஞ்சக் கூடியநிலை வரலாம் என்று சொன்னோம். இன்று வட ஆர்க்காடு மாவட்டத்திலும் பஞ்சம் வரக்கூடிய அபாயம் இருக்கிறது. இதைப் போக்குவதற்கு நீங்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். காவிரி நீர் பெற எடுக்கப்படுகிற முயற்சியில் எங்களது முழு ஒத்துழைப்பும் ஆதரவும் உண்டு என்று சொல்லும் முறையில், மத்திய அரசோடு போராடும் தன்மையில் எதிர்க்கட்சிகள் இயங்கவேண்டும். திரு. கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல் தமிழ் நாட்டினுடைய, தமிழ்த், தாயின் எதிர்கால வாழ்வில் ஏற்படக் கூடிய ஆபத்தை எண்ணி கண்ணீர் வடிக்கவேண்டிய நேரத்தில் இதை ஒரு அரசியல் பிரச்னையாக ஆக்கி வேறுவிதத்தில் திசை திருப்பும் முறையில் நடக்கக்கூடாது எதிர்க்கட்சிகள் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1974 டிசம்பர் 14

பொதுவான பிரச்னைகளில், மின்சாரம் அதிகமாக உற்பத்தி
செய்யவேண்டும், வட ஆர்க்காடு போன்ற இடங்களில் நில நீர்
இருக்கிறது, அதை வெளிக் கொண்டுவர மின்சாரம் அதிகமாகத்
தேவை, அதற்காக நெய்வேலியில் அதிகப்படியாக மின்சாரம்
உற்பத்தி செய்ய வழிவகை செய்யவேண்டும், அதற்கு மத்திய
அரசிடமிருந்து உதவி பெறவேண்டும், அதற்கு எங்கள்
ஒத்துழைப்பைத் தரத் தயாராயிருக்கிறோம், காவிரியில் இருந்து
அதிகத் தண்ணீர் பெறவேண்டும் அல்லது கேரளாவில் இருந்து
மின்சாரம் பெறவேண்டும், ஆந்திராவிலிருந்து அரிசி பெற
வேண்டும், அதற்கு ஒத்துழைக்க நாங்கள் தயாராயிருக்கிறோம்,
அதற்காக அரசோடு ஒத்துழைக்க நாங்கள் தயாராயிருக்கிறோம்
என்ற முறையில் இத்தகைய பிரச்னைகளை அணுகவேண்டும்
என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர இவற்றை அரசியல்
பிரச்னைகளாக ஆக்கி துன்பத்திற்கு மேல் துன்பம் அடைந்து
கொண்டிருக்கிற பொதுமக்களுக்கு, பாமர மக்களுக்கு நாம்
அதிகப்படியான துன்பத்தை ஏற்படுத்தாத முறையில் பிரச்னை
களை அணுகவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்
கிறேன்.

இன்றையதினம் கொள்முதல் பிரச்னையை எடுத்துக்
கொண்டால், விவசாயிகள் மிகுந்த அல்லல்களுக்கு ஆளாகியிருக்
கிறார்கள். நேற்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள், உரம் கிடைக்கிறது என்று. சீட்டில்
குறித்து கொடுங்கள், கிடைத்துவிடும் என்று சொன்னார்கள்.
நாங்கள் நேராக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். உரப்
பற்றாக்குறை இருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தில், சென்ற
அபிவிருத்தி கவுன்ஸில் கூட்டத்தில் கூடப் பேசினோம் உரம்
கிடைக்கவில்லை என்று. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும்
அதை ஏற்றுக்கொண்டார்கள். முன்பு கிடைத்ததற்குப் பாதி
யாகக் குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். உரம் வந்தவுடன்
கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ராணிப்பேட்டை, வாலாஜாபாத், வந்தவாசி போன்ற இடங்
களில், கூட்டுறவுத் துறையில் உர விநியோகம் சரியான முறையில்
நடைபெறாததால் அதை அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில்



1974 டிசம்பர் 14] [திரு. கே. எ. வகாப்]

எடுத்துச் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் போதிய
நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். எனவே, உரப்
பற்றாக்குறை நிச்சயமாக இருக்கிறது. யூரியா மூட்டை ரூ. 200-க்கு
வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. அதையெல்லாம் யாரும்
மறுத்துவிடமுடியாது. உண்மையை மறைத்துவிட்டால்,
அறிக்கைகள், தகவல்கள் கொடுத்துவிட்டால் போதாது,
விவசாயிகள் பொதுமக்கள் அதை அனுபவித்துக் கொண்டிருக்
கிறார்கள். விவசாயிகள், பொதுமக்கள் உண்மை நிலையை
உணர்ந்துதான் இருக்கிறார்கள்.

இன்றும் சொல்கிறேன், விவசாயிகளுக்கு எந்த நேரத்தில்
உரம் போடவேண்டுமோ அந்த நேரத்தில் அவர்களுக்கு உரம்
கிடைப்பதில்லை. ஒரு மாதம் கழித்துத்தான் வருகிறது. எனவே,
தலில் விவசாயிகள் வெளி மார்க்கெட்டில் உரத்தை வாங்கிப்
போட்டுவிட்டு அவர்களுக்கு உரம் கிடைக்கும்போது அதிக
விலைக்கு அதை அவர்கள் விற்கக்கூடிய நிலையில் அவர்களைத் தவறு
செய்பவர்களாக்கும் முறையில் அமைப்பு இருக்கிறது. உர
விநியோகம் கூட்டுறவு துறையில் சரியானபடி இயங்கவில்லை
இன்று.

அடுத்து, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்
வதற்கு ஒரு அறிக்கையை அரசு வெளியிட்டிருக்கிறது. முதலில்
ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு அறிக்கை வந்தது, விவசாயிகள்
சிறிது திருப்திப்பட்டிருந்தார்கள். இப்போது வந்துள்ள
அறிக்கை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நேற்றுகூட
அந்த அறிக்கையில் உள்ள சில அம்சங்களைப் படித்துக் காட்டி
னார்கள். அதில் ஒரு ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்கள் 1.5
க்விண்டால் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படிப்
பார்க்கும்போது மூன்று ஏக்கர் வைத்திருப்பவர்கள் பெரிய விவ
சாயிகளாக இருக்க முடியாது. அவர்கள் சாதாரண விவசாயிகள்
தான். அவர்கள் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்றால் ஏக்கருக்கு
ஏழு க்விண்டால் கொடுக்கவேண்டும். ஏழு க்விண்டால் அரிசி
என்றால் மூன்று ஏக்கருக்கு 21 க்விண்டால் சுமார் 75 கிலோ
கொண்ட 30 மூட்டைகள் அரிசி கொடுக்கவேண்டும். கணபதியா
பிள்ளை அறிக்கையில் கூட சராசரி ஆயிரம் கிலோதான் ஏக்கருக்கு
விளையும் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது விளைவதை

விட அதிகமாகக் கொடுக்கவேண்டிய ஒரு சூழ்நிலையில் கொள்முதல்
முறை அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்று ஏக்கர் விவசாயம்
செய்யும் ஒரு விவசாயி 40 க்விண்டால் விளைந்தால் விதைக்கு
வைத்துக்கொள்ள வேண்டும், இரண்டு மூன்று பண்ணையாட்கள்
இருந்தால் அவர்களுக்காக பத்து க்விண்டால் வைத்துக்கொள்ள
வேண்டும்.

அப்படிப் பார்க்கும் நோக்கில் விளைகிற எல்லாவற்றையும்
கொள்முதலுக்காகக் கொடுத்துவிட்டால் உற்பத்தி செய்யக்கூடிய
அவரே கூட அரிசிக்குத் தவிக்கும் நிலை ஏற்படும். எனவே நான்
கேட்டுக்கொள்வது என்னவென்றால் இதிலிருந்து மூன்று ஏக்கர்
வரையில் விதிவிலக்கு கொடுப்பது பொருத்தமாக இருக்கும்.
குறைந்தபட்சம் இரண்டு ஏக்கர் வரையாவது விலக்கு அளித்தால்
நான் எதிர்காலத்திற்காக தங்களுக்கு வேண்டியதை சிறு
விவசாயிகள் வைத்துக்கொள்ள முடியும். கார்த்திகைக்குப் பிறகு
கார் பெய்யவில்லையென்றால் நிச்சயமாக அவர்கள் எதிர்காலத்திற்கு
தங்களுக்கு வேண்டிய நெல்லை வைத்துக்கொள்ள வேண்டியவர்
களாக இருக்கிறார்கள். எனவே இரண்டு எக்கர் வரையாவது
விதிவிலக்கு அளிக்கவேண்டும். ஐந்து ஏக்கர் வைத்திருப்பவர்கள்
65 மூட்டை கொடுக்க வேண்டியிருக்கிறது. கொள்முதலுக்காக,
ஆனால் ஏக்கருக்கு 15 மூட்டை என்றால் 75 மூட்டைகள் தான்
விளையும். விளைவதைப் பூராவையும் கொடுத்துவிட்டால் அவர்களின்
நிலை என்னவது? நுகர்வோரின் நிலையைக் கவனிப்பதுபோல் இந்த
உற்பத்தி செய்கிறவர்களின் நிலையையும் கவனத்தில் கொள்ள
வேண்டும். வரப்பு போட்டு, நாற்று எடுத்து, நடவு நட்டு பயிர்
செய்யும் விவசாயிக்கு உணவுக்கு நெல் இல்லை என்று செய்துவிடக்
கூடாது என்பதற்காக முதல் அமைச்சர் அவர்கள் சிறிது
அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள்
பயிர் செய்வதை உண்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்க
வேண்டும்.

அடுத்து, குடிதண்ணீர்ப் பிரச்னை பயங்கரமாக உருவாகிக்
கொண்டிருக்கிறது. விவசாயத்திற்கு நீர் இல்லை என்றாலும்
குடிக்கக்கூட நீர் இல்லாத நிலை இருக்கிறது. கருணையோடு முதல்
அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், ஐந்து கோடி ரூபாய்
இந்த மாநிலத்திற்கு செலவு செய்யப்படும் என்று. அதில் அதிகப்
பணத்தை குடிநீருக்காக, கிணறுகள் தோண்டவும், கிணறுகளை



ஆழப்படுத்தவும் கொடுக்க வேண்டும். ஐந்து கோடி அல்ல ஐம்பது
கோடி வைத்தாலும்கூட . எதிர்காலத்தில் போதுமானதாக
இருக்காது. அதற்காக, எதிர்க்கட்சி நண்பர்களை நான் மீண்டும்
கேட்டுக்கொள்கிறேன், நீங்களும் மத்திய அரசோடு இதற்காகப்
போராட்டம் நடத்த வேண்டும். தமிழ்நாட்டில் இன்று பஞ்சம்
வந்திருக்கிறது, ஐந்து கோடி ரூபாய் தமிழ் நாடு அரசு செலவு
செய்கிறது, மத்திய அரசினிடத்தில் இருந்து ஐம்பது கோடி
ரூபாய் இதற்காக வாங்குவதற்கு எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பும்
இருக்கவேண்டும். ஊழல்கள், குற்றச்சாட்டுகள் இவற்றை மட்டும்
சொல்லிக்கொண்டிருந்தால் போதாது. இப்படிப்பட்ட பிரச்னை
களில் அரசோடு ஒத்துழைக்க வேண்டும்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைப் பற்றித் தமிழகத்தில்
பரவலான நல்லெண்ணம் இருக்கிறது. ஒரு பிரச்னை வந்தால்
பழைய முதல் அமைச்சர்களை அணுகுகிறார், பெரியவர்
காமராஜரைப் போய்ப் பார்க்கிறார் என்று எண்ணும்போது அவர்
களின் அந்தஸ்து நாட்டு மக்களின் மனதில் எவ்வளவு உயர்ந்திருக்
கிறது என்பதை எண்ணி எதிர்கட்சிகளும் சிறிது பெருந்தன்மை
காட்டி நடக்கிற முறையில் உங்கள் பேச்சுக்கள் அமையவேண்டும்
என்று எதிர்கட்சி நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு திரு. என். கே. பழனிசாமி அவர்கள்
பேசுவதற்கு அழைக்கப்பட்டார்).

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, இன்றைய
தினம் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்சம். . .

(திரு. கே. எ. வகாப் நின்று கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் க. நாகராஜன்):**
திரு. வகாப் அவர்கள் ஒரு நிமிடம் பேசி முடித்துக் கொள்ளட்டும்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** ஆன் எ பாயிய்ண்ட் ஆப் ஆர்டர்.
ஒரு உறுப்பினர் பேசி முடித்து, சபாநாயகர் இருக்கையிலே
இருக்கிற தாங்கள் இன்னொரு உறுப்பினரைப் பேச அழைத்து
விட்டீர்கள். அதற்குப் பிறகு பேசி முடித்த உறுப்பினருக்கு மறு
படியும் நேரம் கொடுத்து பேசுவதற்கு அனுமதிப்பதற்கு
சட்டத்தில் இடமில்லை. இது முறை தானா? இதற்குத் தங்கள்
தீர்ப்பு தேவை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் நாகராஜன்) :** அவர் இன்னும் பேசி முடிக்கவில்லை. அவர் இடையிலே பேசிக் கொண்டிருக்கும்பொழுது நான் மணி அடித்துவிட்டேன். அவர் களும் உட்கார்ந்து விட்டார்கள். அந்த உறுப்பினர் இன்னும் பேசி முடிக்கவில்லை. அதற்காகத் தான் அவர் மேலும் ஒரு நிமிடம் பேசலாம் என்று சொன்னேன். அதில் ஒன்றும் தவறு இல்லை.

THIRU G. R. EDMUND : Sir, I am so sorry that the Chair says that the hon. Member has not concluded his speech. He has already concluded his speech and the next Member's name has been called and he has commenced his speech.

MR. CHAIRMAN (DR. K. NAGARAJAN) : He has not concluded his speech.

**திரு. என். கே. பழனிசாமி :** ஆகவே, ஈரோடு பகுதியிலே காலிங்கராயன் வாய்க்கால், லோயர் பவானி பிரதேசத்தைத் தவிர மற்ற இடங்களில் கடுமையான வறட்சி நிலவுகிறது. எனக்கு முன்பு பேசியவர்கள் இதைப்பற்றி விரிவாக விளக்கியிருக்கிறார்கள். விளைவிக்கவும் முடியவில்லை, விளைவித்ததை எடுக்கவும் முடிய வில்லை. பாசனக் கிணறுகள் மட்டுமல்லாமல், குடி நீர்க் கிணறு களும் பூராவும் வறண்டு கிடக்கின்றன. அந்தப் பிரதேசத்தில் உணவு தான்யமும் கிடைக்கவில்லை. வெளியிலிருந்தும் வரத் தடை. சந்தையிலும் வாங்க முடியவில்லை. சர்க்கார் நகரப் பஞ்சாயத்துகளில் மட்டும் மாதத்திற்கு ஒரு நாம் 2 கிலோ சோளம் கொடுக்கக்கூடிய நிலைமை தான் இருக்கிறது. ஆகவே, அங்கு இருக்கும் ஜனங்களுக்கு உணவுக்கு வழியில்லை. ஒரு கிலோ ரூ. 4.50 வரையிலும் விற்கிறது. அதுவும் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட ஒரு நிலைமை நிலவுகிறது. பஞ்சப் பிரதேசங்களில் உடனடியாக நிவாரண வேலைகள் துவங்கப்பட வேண்டும். ஏற்கனவே "ஃபாமின் கோடு" இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். அதற்காக மத்திய சர்க்கார் ஒரு கமிட்டி அமைத்தது. மாநில சர்க்காரும் அதைத் திருத்தி அமைக்கவேண்டும். நூற்றிஐம்பது வருடங்களுக்கு முன்னால் வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட 'கோடு' அது. அதன்படி 6 அணா அளவுக்கு வெள்ளாண்மை, மகசூல் கிடைக்கும் என்று கணக்குப் பிள்ளை எழுதிவிட்டால், பஞ்சப்பிரதேசமாக இல்லாமல் போய்





விடும். அதை நிலைமைகளுக்குத் தகுந்தமாதிரி மாற்றி அமைக்க வேண்டும். வறண்ட பிரதேசங்களில் கஞ்சித் தொட்டிகள் வைக்க வேண்டும். அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டிக் கொடுக்க வேண்டும். தக்காவிக் கடன் கொடுக்கவேண்டும். மாட்டுத் தீவனத்திற்கு தக்காவிக் கடன் அளித்து உதவவேண்டும். குடி தண்ணீர் கிடைப்பதற்கு கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு யுத்த கால நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. ஏப்ரல், மே மாதங்களில் சென்னை நகரம் உள்பட பல இடங்களில் குடி நீர்ப் பஞ்சம் ஏற்படக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. இந்த நிலைமை எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இதற்கு முக்கியத்துவம் கொடுத்து, உடனே ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சிப் பணி களுக்கு ரூ. 5 கோடி போதாது. குறைந்தது ரூ. 10 கோடியாவது வேண்டும். இந்தப் பணத்தைக் கொண்டு பஞ்ச நிவாரண வேலைகள் நடத்தும்பொழுது, சர்வ கட்சி கமிட்டி ஒன்று நிறுவி, அதன் மூலம் இந்தப் பணம் சரியான முறையில் செலவு செய்யப் படுகிறதா என்பதைக் கண்காணிக்கவேண்டும். சென்ற முறை கூட ரூ. 1½ கோடி கொடுத்து வேலை நடந்திருக்கிறது. மண் போட்டால் மழை பெய்தால் அடித்துக்கொண்டு போய்விடுகிறது. பாக்கி பணத்தை கண்டிராக்டர்கள் அடித்துக்கொண்டு போய் விடு கிறார்கள். ஜனங்களுடைய ஒத்துழைப்போடு இந்த வேலைகளை ஒரு சர்வ கட்சி கமிட்டி கண்காணிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள், 3 லட்சம் டன் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு வருஷமும் இம்மாதிரி விலை ஏறியது கிடையாது. இதற்கு முன்னால் மட்டும் வெளி மாநிலங்களுக்குப் போகவில்லையா? போயிருக்கிறது. ஏன் இந்த வருஷம் மட்டும் இப்படி அதிகப்படியாக விலை ஏறியிருக்கிறது? ஒரு கிலோ ரூ. 4.50. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. சென்னை நகரத்தில் ஒரு படி அரிசி ரூ. 6.40, 6.50 விற்கிறது. இன்றைக்கு ஏன் அந்த விலை? காரணம் என்ன? சர்க்காரிடம் போதுமான ஸ்டாக் இல்லை. சென்டிரல் சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேஷன் இருக்கிறது. ஸ்டேட் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. அதனுடைய வேலை என்ன? 'அஸெஸ்மெண்ட்'

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 14

Co-ordination of activities if the Central Ministry அதேபோலத்
தான் ஸ்டே சிவில் சப்ளேஸ் கார்ப்பரேஷன். 'அஸெஸ்மெண்ட்'
எவ்வளவு தேவை என்று கணக்கிட வேண்டும். இங்கு
இருக்கக்கூடிய சிவில் சப்ளேஸ் கார்ப்பரேஷன் ப்ரொக்யூர்
மெண்ட், விநியோகம் சரியான முறையில் செய்யவில்லை. பெரிய
வியாபாரிகளும், மில்லர்களும் தான் ஏஜண்டுகளாக நியமிக்கப்
பட்டிருக்கிறார்கள். அவர்கள் மக்களை அடித்து குறைந்த விலையில்
வாங்கி கமிஷனுக்கு சிவில் சப்ளேஸ் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்
கிறார்கள். வியாபாரிகள், மில்லர்கள் தான் இடையில் இருக்
கிறார்கள்.

எஸ்டிமேட் கமிட்டி கொடுத்திருக்கக்கூடிய அறிக்கை
இருக்கிறது. அதனுடைய விபரங்களுக்குள் நான் போகவில்லை.
40 பேர்கள் அரெஸ்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கு இருக்கக்
கூடிய தாலுக் சப்ளை ஆபீசர், டிஸ்டிரிக்ட் சப்ளை ஆபீசர்
ஸ்டாக்கை பிஸிகலாக வெரிஃபை பண்ணவில்லை. அந்தப்
பகுதியிலே இருக்கிற அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் ஆபீஸர்
வெரிஃபை பண்ணியிருக்கிறார். கவனக் குறைவாக இருந்த
அதிகாரிகளையும் அரெஸ்டு செய்யவேண்டும். அத்தனை அதிகாரிகள்
பேரிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பற்றாக்குறை,
பதுக்கல், கள்ளக்கடத்தல் பூராவுக்கும் சிவில் சப்ளேஸ்
கார்ப்பரேஷன் உதவியிருக்கிறது. அதன் காரணமாகத் தான்
விலைவாசி ஏறியிருக்கிறது. நம்முடையது உபரி மாநிலம். பற்றாக்
குறை வரக்காரணம் என்ன? அதிகமான விலைக்குக் காரணம்
என்ன? ஏன் ஆந்திராவில் விலை குறைவாக இருக்கிறது. இரண்டு
லட்சம் டன் பற்றாக்குறை மாநிலம் மைசூர். அங்கே படி அரிசி
ரூ. 3 என்று விற்கிறது. இங்கே ரூ. 6.40-க்கு விற்கக் காரணம்
என்ன?

ஆறு லட்சம் டன் ப்ரொக்யூர்மெண்ட் செய்வதாக சென்ற
வருஷம் சர்க்கார் அறிவித்தது. இரண்டு லட்சம் 80 ஆயிரம்
டன்கள் தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில்
சொல்லப்பட்டது. கண்டிப்பாக குறுவையில் 3 லட்சம் டன்
கொள்முதல் செய்யவேண்டும் என்று சொன்னாலும், அதற்கு எல்லா
ஒத்துழைப்பையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று
சொன்னாலும், கணக்கு என்ன சொல்கிறது? ஒரு லட்சம் 30
ஆயிரம் டன் தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. பத்து



1974 டிசம்பர் 14] [திரு. என். கே. பழனிசாமி]

லட்சம் டன் மார்க்கட்டில் சர்ப்ளஸ் இருக்கிறது. அப்படியிருந்தும் சர்க்கார் ஒரு லட்சம் 30 ஆயிரம் டன் தான் கொள்முதல் செய்திருக்கிறது. காரணம் என்ன? அறுவடை முடிந்து விவசாயிகள் தயாராக இருந்தார்கள். பதினைந்து நாட்களுக்கு நாம் வாங்கவே இல்லை. நேரடியாக சிவில் சப்ளேஸ் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்யவில்லை. மில்லர்கள், டீலர்கள் இவர்களை ஏஜண்ட்களாக வைத்து அவர்கள் மூலமாக வாங்குகிறார்கள் சர்க்கார் நேரிடையாகக் கொள்முதல் செய்யவில்லை. கொள்முதல் செய்தாலும் நடக்காது. வியாபாரிகள், தரகர்கள் கொள்முதல் செய்தால் தான் நடக்கும் என்று செய்யப்பட்டது. ஒரு லட்சம் 30 ஆயிரம் டன் தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஈரத்திற்கு 15 சதவிகிதம் மார்ஜின். அதாவது, 60 கிலோ என்றால் 57 கிலோ. ஆனால் 21 சதவிகிதம் ஈரம் என்று சொல்லி 70 கிலோ வாங்கக்கூடிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டதைப் பார்த்தோம். பல மாடர்ன் ரைஸ் மில்கள் இருக்கின்றன. சிவில் சப்ளேஸ் கார்ப்பரேஷனுக்கு 12 மில்கள் இருக்கின்றன. ஒரே ஒரு மில்லைத் தவிர, பொள்ளாச்சியில் இருக்கும் மில்லைத் தவிர, மற்ற மில்களுக்கு என்ன வேலை? சர்க்கார் கொள்முதல் செய்யக் கூடிய நெல்லையெல்லாம் ஏன் அரசாங்க மில்களில் அரைக்கக்கூடாது. மற்ற மில்களில் அவுட்டர்ன் ஒரு மூட்டைக்கு 65 கிலோ என்றால், மாடர்ன் ரைஸ் மில்களில் 75 கிலோ அவுட்டர்ன் கிடைக்கும். நல்ல முறையில் அரிசி கிடைக்கும். இதை யெல்லாம் விட்டுவிட்டு தனிப்பட்ட வியாபாரிகளிடம் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன?

அது மாத்திரமல்ல. 'ஓவர்ஹெட் சார்ஜஸ்' 45 சதவிகிதம். நூறு கிலோ நெல்லுக்கு 'ஓவர்ஹெட் சார்ஜஸ்' 25 சதவிகிதம் என்றால் ஒரு கிலோ ரூ. 1¾-க்கு கொடுக்க முடியும். அக்ரிகல்சரல் கமிஷன் பிக்ஸ் பண்ணுகிறார்கள். ரூபாய் 74 பிக்ஸ் பண்ணுகிறார்கள். 1972-ம் வருஷம் ரூ. 45 என்று உரம் விற்றது. இன்றைக்கு ரூ. 150-க்கு மேல் விற்கிறது. மற்றப் பொருள்களும் விலை ஜாஸ்தி. பெஸ்டி ஸைட்ஸும் விலை அதிகம். 1972-ல் ரூ. 74 பிக்ஸ் பண்ணியிருக் கிறார்கள் என்றால் அது இப்பொழுது சரியல்ல; நூறு ரூபாய் பிக்ஸ் பண்ணவேண்டும். ஒரு கிலோ அரிசி ரூ. 1¾-க்குக் கொடுக்க முடியும்.

[1974 டிசம்பர் 14

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எல்லா மாடர்ன் ரைஸ் மில்களும் 6 மாதங்களாக முழு நேரம் மூன்று ஷிப்டுகள் வேலை செய்துகொண்டிருக்கின்றன. அதனால் தான் உடனடியாக ஓரளவுக்கு மொத்தமாக அரிசி கிடைக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** ஒரு கிலோ அரிசி ரூ. 1¾-க்கு கிடைத்தால் போதும். விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலை தான் இருக்கும். அம்மாதிரியாக இருந்தால் உடனடியாகக் கொடுக்க முடியும். பீகார், வங்காளம், ஒரிசா மாநிலங்களில் விவசாய முறை வேறு. இங்கே உரம், பெஸ்டிசைட்ஸ் எல்லாம் போட்டு ஒரு பேக்கேஜ் ஸ்கீம் போட்டு வொர்க் பண்ணுகிறோம். அங்கேயெல்லாம் பழைய முறை. ஆகவே, ரூ. 74-க்கு இங்கே கட்டுபடியாகாது. ரூ. 90, சூப்பர் ஃபைன் ரூ. 100 என்று ஏற்றியதற்கு நாங்கள் ஆதரிக்கிறோம்.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஒரு குவிண்டாலுக்கு ரூ. 100? சூப்பர் ஃபைன்?

**திரு. என். கே. பழனிசாமி :** ஆம். வேதாரண்யம் பகுதிகளில் பயிர்கள் காய்ந்து விட்டன. குளங்கள் வற்றிப் போய்விட்டன. இன்னும் 2 மாதத்திலே நமக்குப் பற்றுக் குறையாக இருக்கப் போவது 15 லட்சம் டன் என்று கூற விரும்புகிறேன். இதை எப்படி நாம் சீர் செய்யப் போகிறோம். வெளி மாநிலங்களிலிருந்து உணவு தானியத்தை வருவித்தாக வேண்டும்.

கூட்டுறவு மூலமாகக் கொள்முதல் செய்யப் போவதாகக் கூறினார்கள். இதிலே ஊழலுக்கு வழி இருக்கிறது. கொள்முதல் செய்யும்போது 10 ஏக்கருக்கு மேல் உள்ளவர்களிடமிருந்து அவர்கள் தேவைக்கு போக மிச்ச நெல் பூராவையும் கொள்முதல் செய்து விட வேண்டும். தண்ணீர் எல்லாம் வற்றி விட்டது. ரேஷன் கொண்டுவரப் போகிறார்கள். ஆகவே, நெல்லை சரியானபடி வாங்கி, சரியானபடி விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் சரியாக இல்லாததால், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனே செய்ய வேண்டும்.

ஐந்நூறு பேருக்கு ஒரு நியாய விலைக் கடை என்று வைக்க வேண்டும்.



1974 டிசம்பர் 14] [திரு. என். கே. பழனிசாமி]

கரும்புக்கு விலை சற்றுக் கூடுதலாக போட்டுத் தரவேண்டும். ஆலை முதலாளிகள் இந்த அரசுக்கு வேண்டியவர்கள் என்பதால் விலையைக் கூட்டாமல் இந்த அரசு வைத்திருக்கிறது. ஃபிரான்ஸ், இங்கிலாண்ட் போன்ற நாடுகளில் நல்ல லாபத்திற்கு சர்க்கரை போகிறது. இப்படி கோடி கோடியாக வெளிநாட்டிலே லாபம் வருகிறபோது, விவசாயிகளுக்கு ரூ. 150 கொடுக்கக் கூடாதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கரும்பு விலையை நிர்ணயிப்பது மத்திய சர்க்காரா, மாநில சர்க்காரா என்பதை உறுப்பினர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி :** மத்திய அரசு மினிமம் பிரைஸ் நிர்ணயித்தால், அதற்கு மேல் மாநில அரசு அதிக விலை கொடுத்தால் மத்திய அரசு ஆட்சேபிக்கப் போவதில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலை கட்டுப்படி ஆகவில்லை என்று விவசாயிகளின் பிரதிநிதிகள் எங்களிடம் வந்ததால், தமிழக அரசு ஒரு விலையை நிர்ணயம் செய்து அதை அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. என். கே. பழனிசாமி :** மத்திய அரசு அமைச்சர் திரு. ஷிண்டே அவர்கள் இங்கே வந்திருந்தபோது, அவர்களிடம் கரும்பு விலை பற்றிப் பேசப்பட்டபோது, மாநில சர்க்கார் கூடுதல் விலை நிர்ணயம் செய்தால் அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று கூறியிருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதே ஷிண்டேதான், என்னிடத்தில் வந்து நெல்லுக்குக் கொள்முதல் விலையை ஏன் அதிகம் கூட்டினீர்கள்? மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு மேல் நீங்கள் நிர்ணயித்திருப்பது தவறு என்று சொல்லி விட்டுப் போயிருக்கிறார்.

**திரு. என். கே. பழனிசாமி :** கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையை அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 14

அடுத்து, கைத்தறி நெசவாளர் பிரச்னை. மிலைலும், பவர் லூமும் கைத்தறியுடன் போட்டிபோடுகிற நேரத்தில், கைத் தறிக்கு ஆதரவாகக் கொடுத்து வந்த ரிபேட்டை எடுத்து விட்டார்கள். இதனால் கைத்தறித் தொழில் மிகவும் பாதிக்கப் பட்டு விடும்.

கைத்தறியாளர்களிடம் கொள்முதல் செய்யும்போது 10 சத வீதம் குறைத்து வாங்குகிறார்கள். காஸ்ட் பிரைசுக்குத் தான் வாங்க வேண்டும்.

அடுத்து, மாணவர்களின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். நந்தனத்தில், பூந்தமல்லியில் குருடர் பள்ளி மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை வைத்ததற்காக அடித்து உதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கண் தெரியாத மாணவர் களை அரசு உதைத்ததாக ஒரு தவறான தகவலை உறுப்பினர் சொல் கிறார். மாணவர்களுடைய கோரிக்கைகள் ஆறில், ஐந்தை அரசு ஏற்றுக் கொண்டுவிட்டது. ஒரு கோரிக்கை, பிரின்சிபாலை மாற்று என்பது. அது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்று அரசு கூறியும், மாணவர்கள் போராடியதால், பள்ளிக்கு கட்டாய விடுமுறை கொடுக்க வேண்டியதாகி விட்டது. உணவுக்காக ரூ. 25 முன்பு கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அது ரூ. 45 ஆக ஆக்கப்பட்டு விட்டது.

**திரு. என். கே. பழனிசாமி :** அந்த பிரின்சிபால் இன்னும் 6 மாதத்தில் ரிடையர் ஆகப்போகிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இன்னும் 6 மாதத்தில் ரிடையர் ஆகப் போகிறார் என்பதனால்தான் அவரை மாற்ற வேண்டாம் என்று அரசு கருதுகிறது. மற்றபடி மாணவர்கள் கோரிக்கை அனைத்தும் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறது.

**திரு. ப. முத்துசாமி :** தலைவரவர்களே, எதிர்க்கட்சிகளின் சார்பில் கொண்டுவந்திருக்கிற இந்த தீர்மானங்களை எதிர்த்து, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 14] [திரு. ப. முத்துசாமி]

இப்போது இந்த நாட்டின் முன்னால் இருக்கும் ஒரு முக்கிய மான பிரச்சனையாக உணவுப் பிரச்சனையை நாம் வைத்திருக் கிறோம். அதைப்போல வேலையில்லாத் திண்டாட்டமும், விலை வாசி ஏற்றமும் இருக்கின்றன. இந்தப் பிரச்சனை தமிழ் நாட்டில் மட்டுமல்ல; அகில இந்தியாவிலும், உலகத்திலே பல நாடுகளிலும் இருக்கிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் இது வரையில் இல்லாத அளவு இந்த ஆண்டில் அதிக அளவில் இந்தப் பிரச்சனை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நாட்டிலே இருக்கிற பொதுமக்களும், சட்டமன்றத்திலே இருக்கின்ற நாமும், அமைச்சர்களும் நன்றாக உணர்ந்திருக்கிறோம். ஆகையால், இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சனைக்கு எப்படித் தீர்வு காண்பது, இதை எப்படித் தீர்ப்பது என்கின்ற அடிப்படையிலே தான் இன்றைக்கு இருக்கிற அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகளைக் கலந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சந்தித்து, கட்சியிலே இருக்கிற முக்கியஸ்தர்களைக் கலந்து, இதற்கு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை எல்லாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது நம் முடைய அரசு என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

இன்றைக்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானங்களை இந்த அவையிலே கொண்டுவருவதற்கு முன்னால் அதற்கான நடவடிக் கைகளை, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களைப் போக்கு வதற்கான நடவடிக்கைகளை, மக்களின் அல்லல்களைப் போக்கு வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நாட்டிலே இருக்கிற அத்தனை மக்களும் உணர் வார்கள்.

அதுமட்டுமல்ல. இந்த அரசின் கையில் இருக்கிற அதிகாரம், இந்த அரசின் கையில் இருக்கிற நிதி வசதி, இவைகளுக்கேற்ப இன்றைக்கு தற்காலிகமாக நிவாரணப் பணிகளை அரசு அறிவித் திருக்கிறது. முக்கியமாக உணவு உற்பத்தியைப் பெருக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், உழைத்துதான் உண்ணவேண்டும், வேறு வழியில்லை, வேலையில்லாவிட்டால் வெளியூர் செல்லவேண்டும் என்ற நிலையில் இருக்கிற மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற முறையிலே இன்றைக்கு 5 கோடி ரூபாய் நிவாரணப் பணிக்கென்று ஒதுக்

முடைய அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற இந்திரா காங்கிரஸ்காரர்கள் பிரதம அமைச்சரைப் பார்த்து 5 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாம் அறிவித்திருப்பது முதல் தவணையாக உடனடி நிவாரணத்திற்கு 5 கோடி ரூபாய் என்று. பின்னால் எவ்வளவு தேவைப்படும் என்று இறுதிக் கணக்கிடவில்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்கள் 5 கோடி ரூபாய்தான் தேவை என்ற முறையிலே கேட்டிருக்கிறார்கள். கேட்பதே 5 கோடி என்றால் அவர்கள் எவ்வளவு கொடுப்பார்கள் என்று தெரியாது.

1969-ம் ஆண்டில் வறட்சி நிலை ஏற்பட்டபோது கூட அன்றைக்கு அதிகமான தொகையை மத்திய அரசு உதவி நிதியாகக் கொடுத்தது. அதை விட இந்த ஆண்டு கடுமையான பிரச்சினை உருவாகும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் இந்தமாதிரி புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பருவ மழை பொய்த்தது என்று வரலாறு கிடையாது. அதைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது வருகிற மாதங்களில் நிச்சயமாக வறட்சியின் கடுமை அதிகமாகத்தான் இருக்கும். ஆகையால் விவசாய உற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

இப்போது இருக்கிற உணவைப் பங்கீடு செய்வதில் அரசு மாற்றம் செய்திருக்கிறது. தனியாரிடம் இருந்த விநியோக முறையை எடுத்து கூட்டுறவுத் துறையின் மூலமும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமும் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது நம்முடைய அரசு. அதோடு உடனடியாக கிணறுகளை எல்லாம் ஆழப்படுத்த வேண்டும். ஏனென்றால் கிணறுகள் மூலம்தான் மழை பொய்த்தாலும், தண்ணீர் இறைத்து உற்பத்தியைப் பெருக்க முடியும். அதைக் கருத்திற் கொண்டுதான் பவர் கட் இருந்தாலும் 60,000 பம்ப் செட்டுகளுக்கு இந்த ஆண்டில் மின்சார இணைப்புக் கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஆயில் எஞ்சின் ஒன்றுக்கு 1,000 ரூபாய் சப்சிடியாகக் கொடுக்கும் திட்டத்தையும் அரசு அறிவித்திருக்கிறது. இப்போது ஏற்பட்டிருக்கிற



பிரச்னை சாதாரணமானதல்ல. ஆகவே, இந்த உதவிகள் போதாதுதான். விவசாயிகளுக்கு இன்னும் ஏராளமான சங்கடங்கள் இருக்கின்றன; கஷ்டங்கள் இருக்கின்றன.

இன்றைக்கு ஏ.ஆர்.சி. ஸ்கீம் என்று ஒரு திட்டத்தை வகுத்து, எல்.டி. வங்கி மூலம் கடன் கொடுக்கும்போது, ரிசர்வ் வங்கியிலிருந்து சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்கள். அந்தக் கட்டுப்பாடுகளினால் சில கிணறுகளை ஆழப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. 50 அடி 100 அடி இடைவெளியில் இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்த முடியவில்லை என்றால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆகவே, உடனடியாக அதைப் பேசித் தீர்த்து, அவர்களுக்கும் உதவி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய கிணறுகளை ஆழப்படுத்த முடியாது; அரசாங்க உதவியை அவர்கள் பெற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு கிணறு வெட்டும்போது, வறண்டப் பகுதிகளில் 'கார்டைட்'—தோட்டாக்களை பயன்படுத்துகிறார்கள். அந்தத் தோட்டாக்களின் விலை கிணறு வெட்டக் கொடுக்கும் பணத்தில் முக்கால் பகுதியாகிவிடுகிறது. கொடுக்கின்ற பணத்தில் முக்கால் பகுதி தோட்டாக்களுக்கு செலவானால் மீதிப் பணத்தைக் கொண்டு சரியான முறையில் கிணறு வெட்டமுடியாது. ஒரு தோட்டாவின் விலை 5 ரூபாய், 7 ரூபாய் என்று பிளாக் மார்க்கெட்டில் விற்கிறது. ஆனால் அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலை—லைசென்ஸ் பெற்றவர்கள் விற்கின்ற விலை ஒரு ரூபாய், அல்லது ஒன்றேகால் ரூபாய்தான். ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் தோட்டாக்களை வாங்கி, ஒவ்வொரு யூனியன் ஏரியாவிலும் கோடவுனில் வைத்து அரசாங்க நிர்ணய விலைக்கு எல்லோருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்தால் அது விவசாயிகளுக்குச் செய்யும் பெரிய உதவியாக இருக்கும்; அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறண்ட பகுதி எங்கே இருந்தாலும் இன்றைக்கு விவசாயிகளுக்கு வேலை இல்லாத நிலைமை இருக்கிறது. அதனால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள்; அவர்களுடைய குடும்பங்கள் கஷ்டப்படு

[திரு. ப. முத்துசாமி] [1974 டிசம்பர் 14

கின்றன. அந்தக் குடும்பங்கள் வேலை செய்தால் வயிற்றுக் கஞ்சி
குடிக்க முடியும் என்ற நிலை இருப்பதால் அவர்களுக்கெல்லாம்
உடனடியாக வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம்
முன்வரவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பல பகுதிகள்
வறண்ட பகுதிகளாக இருக்கின்றன. இப்போது 3 மாவட்டங்
களை மட்டும் வறட்சிப் பகுதிகளாக அறிவித்திருந்தாலும்
மதுரை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியாகிய வேட
சந்தூர், திண்டுக்கல், பழனி, திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற
பகுதிகள் வறண்ட பகுதிகளாக இருப்பதால் அங்கும் நிவாரணப்
பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

100 அடி கிணற்றில் தண்ணீர் கிடைக்காவிட்டால் ஆழப்
படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை முடிவு செய்
வதற்கு—'ப்ரீ மெஷர்மென்ட்' ஒரு கெசட்டட் ஆபீசர்தான்
எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி
வரும்போது ஒரு யூனியனில் இருக்கக்கூடிய கிணறுகளை எல்லாம்
ப்ரீ மெஷர்மென்ட் எடுக்க ஒரு கெசட்டட் ஆபீசர்தான் என்றி
ருந்தால் மெஷர்மென்ட் முடிவு கிடைத்திட 6 மாதகாலமாகும்.
ஆகையால் அந்த யூனியனுக்குப் பக்கத்தில் இருக்கிற யூனியன்
களிலிருந்து 5, 6 பேர்களை அனுப்பி ப்ரீ மெஷர்மென்ட் எடுக்க
ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் குடிதண்ணீர்
கிடைப்பதற்குக் கூடக் காலதாமதம் ஏற்பட்டுவிடும். ஆகையால்
உடனடியாகக் குடிதண்ணீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்த
ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்
கிறேன்.

அதுமட்டுமல்ல, பல பகுதிகளில் இன்றைக்குக் 'குட்டைத்
திட்டம்' போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டத் திட்டங்களில்
பல 'அன்-எக்னமிக்' என்று சொல்லி, நிறைவேற்றப்படாமல்
இருக்கின்றன. ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சரவர்கள்
அப்படிப்பட்டத் திட்டங்கள் அன்-எக்னமிக்காக இருந்தாலும்
கொஞ்சம் சலுகை காட்ட வேண்டும்; கொஞ்சம் பரந்த
கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டுமென்று பொறியியல் துறை
யினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அன்-எக்ன
மிக்காக இருந்தாலும் அப்படிப்பட்டத் திட்டங்கள் அரசின்



1974 டிசம்பர் 14] [திரு. ப. முத்துசாமி]

பரிசீலனைக்கு வரும்போது அவைகளுக்கு முன்னுரிமை கொடுக்க
வேண்டும். அதன்மூலம் கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைக்கும்.
ஆகவே, வறண்ட பகுதிகளில் அதற்கு முன்னுரிமை கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். வறண்ட
பகுதிகளில் விவசாயிகளுக்கு ஏற்றவகையில் குச்சிக் கிழங்கு
சாகுபடி நல்ல பலன் அளிக்கிறது. அதுமட்டுமல்லாமல் அதிக
லாபமும் கொடுக்கிறது. நஞ்சைப் பயிரைக் காட்டிலும்
அல்லது பணப் பயிரைக் காட்டிலும் அதிகத் தண்ணீர் தேவைப்
படாமல் வறண்ட பகுதிகளில் குச்சிக் கிழங்கு நல்ல லாபத்தைக்
கொடுக்கிறது. ஆகையால் இதன் 'ஹைபீல்டு வெரைட்டி'யை
எந்தெந்த பகுதிகளுக்குத் தேவைப்படுகிறதோ அங்குள்ள
விவசாயிகளுக்கு எல்லாம் தேவைப்படுகின்ற அளவுக்கு வழங்க
ஏற்பாடு செய்தால் நிச்சயமாக விவசாய உற்பத்தியைப் பெருக்க
முடியும்.

இன்றைக்கு அரசாங்கம் செய்திருக்கிற பரிகாரத்தை விட
இன்னும் அதிக அளவுக்கு தேவைப்படுகிறது என்பதை ஆளும்
கட்சியில் இருக்கிற நாங்கள் உணருகிறோம். அதே சமயத்தில்
மத்திய அரசும் கருணை காட்டி இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற
இந்தப் பிரச்சனையை தேசியப் பிரச்சனையாக ஏற்றுக்கொண்டு
அதிக உதவி செய்ய வேண்டும். இந்தத் தீர்மானங்களைக்
கொண்டு வந்திருப்பவர்களும் அதில் முழுக் கவனம் செலுத்த
வேண்டும். ஏதோ பேசினோம், அது தேர்தலுக்குப் பயன்படும்,
பத்திரிகையில் வரும், தன்னுடைய கட்சிக்கு லாபம் என்று
பார்க்காமல் உண்மையிலேயே மனிதாபிமான உணர்வுடன், இது
மக்களுடைய பிரச்சனை என்பதை அத்தனை பேரும் உணர்ந்து,
எடுத்துச் சொல்லி, அதற்கான பரிகாரத்தை முதலமைச்சரிடம்
கூறினால் நிச்சயமாக அதன் மூலம் பரிகாரம் கிடைக்கும். அதற்கு
வழி பிறக்கும். ஆகையால் இந்தத் தீர்மானங்களுக்குத் தேவை
யில்லை என்று சொல்லி, இந்தத் தீர்மானங்களை எதிர்த்து,
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Chairman, Sir, I had
the privilege of congratulating the Government three months back
for distributing rice in the City of Madras fairly and properly.

When the shortage started, they also started well just giving 10 bags to each shop and asking them to distribute it at a fair price. At that time the fair price as Rs. 4.50 to Rs. 5 per measure. But since then the **whole position** has changed. Those who live in the City of Madras think they are happy and villagers are suffering. I can tell the House that the total population of the City is 27 lakhs and out of it 12 lakhs are living in slums and out of that 6 to 7 lakhs of people are having an income of less than Rs. 100 per mensem. I am not capable of speaking about the method of increase in production. But I am definitely capable of speaking about the mismanagement of distribution of rice in Madras City. There is a rationing for people getting less than Rs. 300 per mensem but the ration given does not last even for 8½ days in a month. They have to purchase for the rest of the requirement in the ordinary bazaar at Rs. 6.20 or Rs. 6.30 a measure which many people in Madras are not able to do. Normally what do they do ? One hon. Member said that in Ramanathapuram they eat something, some ' kizhangu '. ஏதோ கிழங்கு சாப்பிடுவதாகச் சொன்னார்கள்.

But in Madras City we do not have such a thing; it is not available. So, what they do is to starve. I am not exaggerating. I am not speaking on behalf of party. You can go to any slum and you find more than 50 per cent of them are domestic servants, employed on casual labour, employed as masons, carpenters and so on. They do not have sufficient work to do because of shortage of cement, shortage of steel, etc. They are suffering. I am not blaming the Government but I am definitely blaming the administration. When these people apply for ration cards, it takes one year for them to get the ration card. Some who applied last year have not got card this year. They are given a chit ' please come back after two months on such and such date; we will investigate and give you the ration card '. When they come to ration office on that date, they are told ' the investigation is not over. ' Come again one month afterwards, on another date '. This is how the poor people are put to suffering. How can they wait without card for so many months ?

Many people have not got the card for six to eight months. I know there is lot of bogus or ghost ration cards. I do not want to go into that aspect now. That does not mean that honest



people should be penalised thus and deprived of their legitimate ration cards. I know still there are 30,000 ration cards to be verified and distributed. My earnest request is this. Let your people go to these places, find out the truth and distribute the ration cards. We know many wrong things take place. But honest people should not be put to suffering.

The increased rice price has a general bearing on the economy. If one is drawing Rs. 500 per mensem, he has to spend Rs. 300 on rice, Rs. 150 on rent (a moderate figure) and he is left with Rs. 50. Can he purchase clothing, can he purchase milk, etc with this meagre sum?

Now, it is said there is huge stock of handloom goods; it is there in mill goods also. What is the result? The B. & C. Mills has announced lay-off because there is huge accumulation of stock. There is the chain reaction Not only this Government but the Central Government also should realise that this causes unemployment and consequently starvation amongst many people. Surplus in mills causes it to close and workers are affected by lay-off. So what I say is, control the rice. What they will lose by this, they can gain by other ways.

I am glad Government is going to bring in ceiling on rice price. If they lost Rs. 50 crores by hois, they can gain Rs. 100 crores by other ways because there would not be unemployment and more people could be employed when factories work to the full capacity, without strikes and lockouts. Sometimes strikes are caused by management. I have been in management and I know it. When there is huge stock, the management calls the labour leader and asks him to launch a strike so that they can close the mill. So, I support the motion moved by my friend Thiru A. Subramaniam (and not the no-confidence motion).

I ask this Government to reduce the price of rice. Don't have this notional rationing which lasts for only 10 days in a month. I know the suffering of poor people, domestic servants. With great difficulty I am paying my servant Rs. 120 per mensem. How can he live with it for more than 10 days in these hard days ? What is the position of 6 lakhs of people in that category (domestic servants) in the City of Madras. People living out

[Thiru K. M. Subramaniam] *[1974 டிசம்பர் 14*

side City think that Madras is a heaven. But it is the greatest hell. This Government is not able to tackle the problem for various reasons.

The other day 5,000 people stood outside M.C.C. grounds for purchase of tickets for test match. What happened? A boy fell down and 150 people were injured. A wall collapsed. Who cared for the injured? Today 25 rupees ticket is being sold for Rs. 100 in the black market. The M.C.C. club authorities have thanked the police for their help. Help for what? For this sale in black market? On the back of the ticket it is said as follows : This Committee is not responsible for any damage to the human being '.

*(பிற்பகல் 12-30)*

This Committee—even if you travel by bus or train, and if there is any accident, they pay compensation—but this Committee does not hold itself responsible. What an wonderful Committee They are having a separate Government by themselves, this M.C.C. That is why Shri Devaraj Urs, the Chief Minister of Karnataka said ' Look here, if you want to conduct the cricket test. we must have the authority to issue the licence and you should adhere to the conditions of licence.' They should have some respect for M.L.As. Not that I am aggrieved because I did not get a ticket. I do not go to cricket match at all. But even for M.L.As. they do not have any respect. There is no separate enclosure for M.L.As. I am saying this because ................. (Interruption).

*உங்களுக்குப், பார்க்க வேண்டாம். வேறு ஏதாவது பார்த்து சந்தோஷப்படுவீர்கள். (குறுக்கீடு) சீனிவாசன் டேஸ்டே வேறு. (குறுக்கீடு) யாரையுமே பார்க்கக்கூடாதா? (குறுக்கீடு) டேஸ்டே இருக்கக்கூடாது என்றால் மறுஜோனாக இருக்கக்கூடாது.*

Sir, I am not speaking in front of the Sankaracharya. I am speaking in the Legislative Assembly which looks after people's good. (Interruption). How can I say? What is wrong with my temptations? I may have a liking for, no, I will not say, it may be offensive in the House.



*1974 டிசம்பர் 14]* [Thiru K. M. Subramaniam]

Sir, this Cricket Stadium is named after whom? Every Cricket Stadium is named after some great man, there is the Patel Stadium in Bombay; in other places, it is named after some leader or other. But here, it is called ' Chidambaram Stadium '. What has he contributed? Has he contributed anything? He has contributed not a pie to the stadium and yet it is ' Chidambaram Stadium '.

Sir, I tell you I have the greatest regard for Sir P. T. Rajan. I tell you I am not jocking when I say I have known for the last 50 years and as a boy I knew him. How? He was a nice gentleman. I do not think I have come across any other gentleman like him. I am a Brahmin and he belonged to the Justice Party and still I knew Sir P. T. Rajan so much. He was a good sportsman, not playing cricket, but in spirit he was the best sportsman. He was a member of the Race Club for years and he was a Steward of the Race Club, but they are abolishing it and I am sorry about it. Why not call it ' Rajan Stadium '? Why not ' Subbarayan Stadium ' or ' Krishnamachari Stadium ' or some other great name? Why Chidambaram Stadium? For that matter, he does not know cricket. That is the whole trouble, leave alone everything else. We call this a socialistic Government ......... (Interruption). Then, you should call it ' Va. Oo. Chidambaram Pillai Stadium '. It is only ' Chidambaram Stadium ', it may mean anybody. My cock is also Chidambaram . . . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** *தலைவரவர்களே, இதிலே சர்க்கார், ஏதோ தலையிட்டுச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். சர்க்காரைப் பொறுத்தவரையில் இந்தக் கிரிக்கெட் ஸ்டேடியத்திற்கு, அதைக் கட்டுவதற்கான செலவில் ஒரு பகுதி தந்திருக்கிறது. அதுதான் அதிக நன்கொடையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன், கிட்டத்தட்ட ரூ. 15 இலட்சம் தந்திருக் கிறது. ஆனால் பெயரிடுவதில், அவர்கள் வைத்திருக்கிற கமிட்டி, அல்லது ஜெனரல் பாடி தீர்மானிக்க வேண்டுமென்று அவர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். அதை மாற்றுவதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தப் பேச்சு பயன்படுமானால் சர்க்கார் நிச்சயமாக அதனைக் கவனிக்கும். அந்த அளவுக்குச் சர்க்கார் செய்யும்.*

THIRU K. M. SUBRAMANIAM : I am very happy to hear this. Then call it 'Rajan Stadium', I will be very happy.

கிரிக்கெட் அசோசியேஷனுக்கு ரூ. 15 இலட்சம் கொடுத்திருக்கிறோம்; ஒரு எம்.எல்.ஏ.வுக்கோ, அவர்கள் ஃபாமிலிக்கோ ஒரு டிக்கட் கூட கொடுக்காமலிருக்கிறார்கள். ரூ. 26 இலட்சத்திற்குக் கட்டப்படுவதில், நாம் ரூ. 15 இலட்சம் கொடுத்தும், நமக்கென்று ஒன்றும் இல்லாமல், அந்த கதிக்கு நாம் வந்துள்ளோம். அவர்கள் இஷ்டம்போல் யார் பெயர் வேண்டுமானாலும் வைக்கலாம் என்று சொல்கிறார்கள். நான் இரண்டு கையாலும் கும்பிடுகிறேன், தயவுசெய்து நீங்கள் பெயரை மாற்றுங்கள். இராஜன் ஸ்டேடியம் என்று வையுங்கள், ஒரு பெரிய மரியாதையாக இருக்கும். அவருடைய பியூடிஃபுல் லைஃப் எனக்குத் தெரியும். இன்றைக்கு ஐயப்பன் சாமி சபரி மலையில் இருக்கிறார் என்றால், காரணம் பி. டி. இராஜன் தான். அவர்தான் ஐயப்பனை அங்கு வைக்க ஊர் ஊராகச் சுற்றினார்; நான் அப்பொழுது ரிசப்ஷன் கமிட்டி சேர்மன். அதனாலே அவரது குணம் நன்றாகத் தெரியும் . . .

Now, I am coming to other important points. Now there is the student problem. Sir, I am not accusing the Government alone. I am accusing everybody. There are students who have to rule the country after this withered useless old politicians are gone, when these old ideologies are gone ............

MR. CHAIRMAN (DR. K. NAGARAJAN) : One minute more. You can take only one minute more. There are other members to speak.

THIRU K. M. SUBRAMANIAM : I will try to finish. No leader has said to the students, 'Look here, students, you have a revolutionary mind; after ten years, you have to rule, you get prepared for such a rule, for a revolutionary rule which you may bring'. That has to be said definitely, concretely by leaders. There is no use trying to escape. You will be creating a gap of administration. This administration is bad, this ideology is bad. We have not been able to give Rs. 27 a month to more than 40 per cent of the population. We have to do many more things. No use of accusing this Government or that Government. Students have to get prepared. Unless leaders sitting on this



side and on the opposite side can definitely tell the students, 'Look here, have a brainwash by all means, but be prepared to administer the country, not only as a Government but as citizen in all walks of life. You have to be prepared for that and unless you prepare, this country's freedom will be lost. I censure this Government for not taking action. For want of time, I could not speak longer.

(Mr. Speaker in the Chair)

I am very happy that today I have an assurance from the Hon. Chief Minister that the Cricket Stadium will be named properly and if it is not done, many students have come to me and told me, there may be further agitation of students and on the cricket day when foreigners come, there should be no exhibition of their Sathyagraha. Now-a-days, Sathyagraha means only stone-throwing, not Sathyagraha of our days. Let us not allow it to happen. Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அருணா, நீங்கள் 1-00 மணிக்கு முடித்துவிட வேண்டும்.

***திரு. ஆலடி அருணா :** பேரவைத் தலைவரவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நண்பர் கோவை செழியன் அவர்கள் கொடுத்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஆளும் கட்சிக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எற்பட்டிருக்கிற அரசியல் போட்டி, பகை, கசப்பு, காழ்ப்பு . . . .

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், நான் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன், நம்பிக்கையில்லாத் தீர்மானம். அதனை நான் முன்மொழிந்து பேசுவதற்கு எனக்கு 10 நிமிடம் அளித்தீர்கள். ஏற்கெனவே, நீங்கள் சாதாரணமாக ஏ.டி.எம்.கே.வுக்கு அனுகூலமாக செய்கிறீர்கள். எனக்கு 10 நிமிஷம் என்று சொன்னால் நண்பர் கோவை செழியன் அவர்களுக்கு 1½ மணி நேரம் கொடுத்தீர்கள். என்னை 10 நிமிடத்திற்கு மேல் பேசக்கூடாது என்றீர்கள், அருணாவை 20 நிமிடம் பேசுங்கள் என்று சொன்னீர்கள், இது முறைகேடு என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுத்த 20 நிமிடம்தான் அவர்களுக்கும் கொடுக்கிறேன். நீங்கள் 10-45-க்குத் தொடங்கி 11-05-க்கு முடித்தீர்கள் . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நீங்கள் கொடுத்தது 10 நிமிடம். இப்பொழுது அவருக்கு நீங்கள் 20 நிமிடம் கொடுத்தீர்கள். This is not fair. We never expect this kind of treatment from you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 10 நிமிடத்தோடு முடித்திருந்தால் அவருக்கும் 10 நிமிடம்தான் கொடுத்திருப்பேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** எனக்குத் தெரியும், நீங்கள் ஏ.டி.எம்.கே.வுக்கு இவ்வளவு தருகிறீர்கள் என்று. I know it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதை வேண்டுமானாலும் காரணம் சொல்லலாம், அதைப்பற்றி எனக்கு ஒன்றும் இல்லை. நீங்கள் 20 நிமிடங்கள் எடுத்துக்கொண்டீர்கள். அதே அளவு நேரத்தை திரு. ஆலடி அருணாவுக்கும் கொடுத்திருக்கிறேன். அவ்வளவுதான்.

**திரு. ஆலடி அருணா:** ஆளுங்கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையே இருக்கிற கசப்பு, காழ்ப்பு காரணமாக நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நாங்கள் முன்மொழியவில்லை. கடந்த காலம் கசப்புகள் நிறைந்ததாகவும் கரும்புள்ளிகள் மிக்கதாகவும் இருந்தது. ஆனால் எதிர்காலம் கசப்புகளும், கரும்புள்ளிகளும் கொண்டதாக இருக்கக்கூடாது, நாட்டுக்கு நன்மை பயக்கத் தக்கதாக இருக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாங்கள் முன்மொழிந்திருக்கிறோம்.

இந்த அரசாங்கத்தில் இன்றைய தினம் எந்தக் கட்டத்திலே எடுத்துக்கொண்டாலும் சரி, எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி லஞ்ச லாவண்யங்கள் அளவுக்கு மீறி விஸ்வரூபம் எடுத்துவிட்டன. அது தொழில் உதவியைப் பெறுவதாக இருந்தாலும், விவசாயக் கடன் பெறுவதாக இருந்தாலும், கல்லூரியில் இடம் பெறுவதாக இருந்தாலும், பம்புசெட்டுகளுக்கு



மின்சாரம் பெறுவதாக இருந்தாலும், மருத்துவ மனையில் ஆள் சேர்ப்பதாக இருந்தாலும் லஞ்சம் கொடுத்தால்தான் தன்னுடைய காரியத்தைச் செய்யமுடியும் என்ற சூழ்நிலைதான் இருக்கிறது. சாக்கடையிலே நெளிகிற புழுக்கள், கிருமிகளைப்போல் இந்த அரசாங்கத்தை லஞ்ச லாவண்யம் நிரந்தர நோயாளியாக ஆக்கி விட்டன.

இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறபோது இந்த மன்றத்திலே லஞ்சம் என்பது இப்பொழுதுதான் இருக்கிறது என்பதல்ல, கடந்த காலத்திலேயும் இருந்து இருக்கிறது, கௌடில்யன் காலத்திலேயும் இருந்திருக்கிறது, அர்த்தசாஸ்திரத்திலேயும் அதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது என்று ஆளுங்கட்சியின் சார்பில் வாதிடக்கூடும்.

வரலாற்று ரீதியாகப் பார்த்தால் பொற்காலம் என்று சொல்லப்படுகிற குப்தர் காலத்திலேயும், அதைவிட நற்காலம் என்று சொல்லப்படுகின்ற அண்ணா அவர்களின் ஆட்சிக்காலத்திலேயும் ஊழல் இருந்து இருக்கிறது—குறைபாடு இருந்திருக்கிறது நான் அதை மறுக்கவில்லை. ஊழல் இருந்திருக்கலாம். ஆனால் ஊழலே நிர்வாகமாக ஆகிவிடக் கூடாது.

இன்றைய தினம் இந்த அரசாங்கம் ஊழல், மோசடி, லஞ்ச லாவண்யம் இவற்றின் மொத்த வடிவாக ஆகிவிட்டது. இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லி நிரூபிக்கிற வகையிலே எங்கள் தரப்பிலேயிருந்து சொல்லப்படுகிற சாட்சியங்களை ஆதாரங்களை காரணகாரியங்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த அரசாங்கத்தைப்பற்றி என்ன சொன்னார்கள், என்ன என்ன கருத்துக்களை வெளியிட்டார்கள், என்ன என்ன குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொல்வதும் என்னுடைய தலையாய கடமை என்று நினைக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் முகவை மாவட்டச் செயலாளர், இன்றைய செயற்குழு உறுப்பினராக உள்ள பெருமதிப்பிற்குரிய தென்னரசு அவர்கள் டிசம்பர் 9 ஆம் தேதி கூடல் மாநகரத்திலே தமிழ் வளர்த்த அந்த மாநகரத்தில் தன்னுடைய கருத்துக்களை ஒரு பொதுக்கூட்டத்திலே தெரிவித்து இருக்கிறார்.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கலெக்டர்
ஆபீசில் மைதா போன்ற பண்டங்களுக்கு பெர்மிட் வாங்க
வேண்டுமென்றால் 500 ரூபாய், 1,000 ரூபாய் கொடுத்து வாங்க
வேண்டிய நிலையில் வாங்கிக்கொண்டு பழியை எங்கள்மீது போடு
கிறார்கள். அரசாங்க ஜீப்புகளுக்கு பெட்ரோல் போடுகிறார்கள்,
முகாம் என்று சொல்லிக்கொண்டு ஜீப்புகளுக்கு பெட்ரோல்
போட்டுக்கொண்டு இரவிலே ட்யூப்ஸ் மூலமாக ஜீப்பிலிருந்து
பெட்ரோலை எடுத்துக்கொண்டு கள்ள மார்க்கட்டிலே விற்கிறார்கள்.
அப்படிச் செய்து ஒரு அதிகாரி லட்சாதிபதியாகிவிட்டார்.
இதைப்பற்றி மேலதிகாரிகளிடம் தெரிவித்தால் அவர்கள்,
அவர்கள் சொன்னதைக் கேட்டு எங்கள் மீது நடவடிக்கை
எடுக்கச் சொல்கிறார்கள். இதை மாண்புமிகு கருணாநிதி அவர்
களின் ஒப்புதலின் மேல்தான் நான் பேசுகிறேன் என்று பொதுக்
கூட்டத்திலே பேசியிருக்கிறார். இந்த அரசாங்கத்தில் எவ்வளவு
ஊழல் இருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் இவை.

இதற்கு மேலாக அண்மையில் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி
அவர்கள் தலைவராக இருந்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை
இருக்கிறது. இந்த நிர்வாகத்தைப்பற்றி ஐயப்பாடாக இருக்
கிறவர்கள் சந்தேகம் இருக்கிறவர்கள் புரிந்துகொள்ளும் வகையில்
இந்த அரசாங்கம் எவ்வளவு ஊழல் நிறைந்த அரசாங்கம் என்று
நிரூபிக்கின்ற வகையிலே இந்த மதிப்பீட்டுக் குழு அறிக்கை
அமைந்து இருக்கிறது.

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் தாண்டவராயன் பிரச்னை
முக்கியமாக எழுப்பப்பட்டிருக்கிறது. அது நீதி மன்றத்திலே
இருக்கிறது. வருகிற 17 ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது
என்பதையும் நான் நன்கு அறிவேன். இருந்தாலும் சில அடிப்
படைப் பிரச்னைகளை, நீதிமன்ற வழக்கிற்கு ஊறு ஏற்படாத
வகையில் பேச நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்லிக்
கொள்வேன், இந்த வழக்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்தி
யாக வேண்டும். அதற்குப் பதில் பொது நீதி விசாரணைக்கு
ஏற்பாடு செய்யவேண்டும். இதிலே குற்றஞ்சாட்டப்
பட்டவர்கள் மட்டும் குற்றவாளிகள் அல்ல. அதையும் மீறி
அமைச்சரவையிலேயும் குற்றவாளிகள் இருக்கிறார்கள் என்பது





என்னுடைய குற்றச்சாட்டு. எந்த அடிப்படையிலே எந்த
ஆதாரத்தின் அடிப்படையிலே நான் இதைச் சொல்கிறேன்
என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவுச் சங்கம் தன்னிடத்திலே
இருக்கிற அரிசியையும் நெல்லையும் அதிக விலைக்கு விற்றுத்தர
வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டிக் கொண்டது.
நம்மிடத்திலே அரிசி, நெல் இருக்கிறது. எந்த ஒரு அரசும் தாமே
தான் விற்குமே தவிர தனிப்பட்ட முதலாளியிடத்திலே
கொடுத்து பிற மாநிலங்களுக்கு விற்கச் சொல்வது அவசியந்
தானா? கேரளத்தினிடத்திலே நாம் மின்சாரம் தா என்று
கேட்கிறோம், கர்நாடக மாநிலத்தில் இருந்து மின்சாரம் தா,
தண்ணீர் தா என்று கேட்கிறோம், மகாராஷ்டிரா மாநிலத்
திலிருந்து மின்சாரத்தைத் தா என்கிறோம், வங்காளத்திலிருந்து
பருப்பைத் தா என்று கேட்கிறோம். இப்படியெல்லாம் கேட்கிற
நாம் நம்முடைய அரிசியை நம்முடைய நெல்லை அவர்களுடைய
மார்க்கெட்டிங் சொஸைடியிடம் கொடுத்து பெற்றுக்கொள்ளுங்கள்
என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் ஒரு தனிப்
பட்ட வியாபாரியிடம் ஏன் கொடுக்க வேண்டும் என்று எண்ணிப்
பார்க்கவேண்டும்.

அப்போது உணவுத் துறை அமைச்சராக ப. உ. சண்முகம்
அவர்கள் இருந்தார்கள். சென்னையிலே அவர்கள் ஒரு கூட்டத்
திலே பேசும்போது—துறைமுகப் பகுதியிலே என்று கருது
கிறேன்—அது புழுத்துப்போன அரிசி, கெட்டுப்போன அரிசி
ஆகவே கொடுத்தோம் என்று பேசியிருக்கிறார்கள். சபாநாயகர்
அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்,
நேற்றைய தினம் கேட்டு, பைலை நாங்கள் பார்ப்பதற்கு அனுமதித்
தீர்கள், அதற்காக நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறோம். அந்த பைலிலே எந்த இடத்திலாவது கெட்டுப்
போன அரிசி என்றோ, புழுத்துப் போன அரிசி என்றோ குறிப்
பிடப்படவில்லை. பாயில்ட் ரைஸ் என்றுதான் சொல்லப்
பட்டிருக்கிறதே தவிர ஸ்பாயில்ட் ரைஸ் என்று சொல்லப்பட
வில்லை. ஒரே ஒரு இடத்திலேதான் ஓல்ட் ஸ்டாக் என்று
சொல்லப்பட்டிருக்கிறது. ஓல்ட் ஸ்டாக் என்றால் கெட்டது
என்று பொருள் அல்ல. எனவே அந்த அமைச்சர் கெட்டுப்

போன அரிசி, புழுத்துப்போன அரிசி என்று சொல்லவேண்டிய அவசியம் என்ன வந்தது? அது என்னுடைய கேள்வியாகும். இன்றைய தினம் அதைப் பெற்றுக்கொண்டவர்கள் யார், யார் அதிலே இருக்கிறார்கள் என்றெல்லாம் பார்த்தால் ப. உ. சண்முகத்திற்கு நெருங்கியவர்கள், வேண்டியவர்தான். ஆகவே அவருக்கும் அமைச்சருக்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று சந்தேகப்படுகிறோம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர் இந்த மன்றத்தின் அமைச்சருக்கோ உறுப்பினருக்கோ வேண்டியவர் என்று சொல்கிறார். இல்லையென்று அரசாங்கத்தின் தரப்பிலிருந்து சொல்லப்பட்டுவிட்டது. அதற்கு வேண்டிய ஆதாரங்கள் என்ன என்று அவர்கள் சொன்னால் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**திரு. ஆலடி அருணா:** அமைச்சர் ஒன்றும் அரிச்சந்திரன் அல்ல . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் உறுப்பினரும் அரிச்சந்திரன் அல்ல என்று சொல்லலாம்.

**திரு. ஆலடி அருணா:** உண்மையான குற்றச்சாட்டு எங்கள் மீது இருந்தால் அதைச் சொல்ல உங்களுக்கு உரிமை இருக்கிறது. அதைப்போலவே உங்கள்மேல் குற்றச்சாட்டுச் சொல்ல எங்களுக்கு உரிமை இருக்கிறது.

தாண்டவராயனுக்கு அரிசி நெல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் அரிசி, அரிசி என்றுதான் சொன்னார்கள். உள்ளே பார்த்தால் நெல்லும இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கெட்டுப்போன அரிசி என்று சொன்னார்கள். கெட்டுப்போனது என்ற பிரச்னையே இதிலே எவில்லை பைலைப் பார்த்தால் தாண்டவராயன் டெண்டர் கேட்கவே இல்லை என்று தெரிகிறது. மதிப்பீட்டுக் குழு அறிக்கை தெளிவாகச் சொல்கிறது.

Thiru R. Thandavarayan did not participate in the tender auction held by the Collector on the 9th March 1971.

என்று அதிலே இருக்கிறது. இப்படி டெண்டரிலே பங்கு





கொள்ளாத தாண்டவராயனுக்கு ஒன்றரைக் கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசி, நெல்லைக் கொடுத்திருக்கிறார்கள். வேதனைமிகுந்த சம்பவம் என்ன என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தத் தாண்டவராயன் யார்? அவன் எப்படிப்பட்டவன்? 1½ கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசியை அரசாங்கம் கொடுக்கக்கூடிய அளவிற்கு நம்பிக்கைக்கு உரியவனா? நம்புகிற அளவிற்குக் கடந்த காலத்தில் நடந்து கொண்டிருக்கிறானா? நான் ஒரு விஷயத்தை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். இந்த தாண்டவராயன் சாதாரண சம்பள ஆள்; அவன் ‘ஏ.எம். அசோசியேட்டட் டிரேடர்ஸ்’-ல் சம்பளத்திற்கு வேலைக்கு இருந்தான். அவனுடைய பெயரிலே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் அரிசி நெல் வாங்க மூன்று கட்டங்களாக டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. ஒரு கட்டத்திலாவது முறைப்படி அவன் டெண்டர் கொடுத்திருக்கிறானா என்றால் இல்லை. பணம் கொடுப்பதில் கூட முதன் முறையாக டெண்டருக்குக் கடைசி நாளான 25—1—1971-ல் தந்தி கொடுக்கிறான். இரண்டாவது டெண்டரிலும் அவன் பின்னால்தான் தருகிறான். மூன்றாவது டெண்டருக்கு அந்தப் பணத்தை அட்ஜஸ்ட் பண்ணிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறான். எவ்வளவு பெரிய சக்தி பாருங்கள், எவ்வளவு பெரிய ஆற்றல் பாருங்கள், சென்னையிலே உட்கார்ந்து கொண்டு தந்தி மூலம் கலெக்டருக்குச் சொல்லி முதலில் கட்டிய பணத்தை அட்ஜஸ்ட் செய்து கொள்ளுங்கள் என்று சொல்கிறான். கடந்த காலத்தில் எந்த டெண்டரிலும் முறைப்படி நியாயப்படி, சட்டப்படி, விதிப்படி கலந்து கொள்ளாத தாண்டவராயன்மீது அரசாங்கத்திற்கு எப்படி நம்பிக்கை வந்தது? எதை வைத்துக் கொண்டு அவனை நம்பினார்கள்? அந்தத் தாண்டவராயன் யார் என்று பார்க்க வேண்டும். ‘ஏ.எம். அசோசியேட்டட் டிரேடர்ஸ்-ல் அமைச்சர் ப. உ. சண்முகத்திற்கு வேண்டியவர்கள், உறவினர்கள் இருக்கிறார்கள். எனவேதான், தாண்டவராயனுக்குக் கொடுக்க . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, அதைப் பற்றி அரசுத்தரப்பிலே அந்த அசோசியேட்டட் டிரேடர்சி-ல்

[திரு. செ. மாதவன்] [1974 டிசம்பர் 14

அமைச்சர் ப. உ. சண்முகத்திற்குச் சொந்தக்காரர்கள், நெருங்கியவர்கள் எவரும் இல்லை என்று மறுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆலடி அருணா:** தலைவரவர்களே, இராஜமாணிக்க முதலியாருடைய மருமகன், மகன் எல்லாம் அமைச்சர் ப. உ. சண்முகத்திற்கு வேண்டியவர்கள், உறவினர்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, உறவினர்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் வேளாள கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள், நான் அகமுடையார் கம்யூனிட்டியைச் சேர்ந்தவன்.

**திரு. ஆலடி அருணா:** தலைவரவர்களே, அதையும் சொல்கிறேன். அவர்கள் ஒரு ஜில்லாவில் முதலியார்கள் என்றும், இன்னொரு ஜில்லாவில் பிள்ளை என்றும், இன்னொரு ஜில்லாவில் அகமுடையார்கள் என்றும் வைத்துக் கொண்டிருப்பார்கள் என்பதும் தெரியும். இவர்களெல்லாம் அவர்களுடைய உறவினர்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அவர்கள் இருந்த காரணத்தாலே தான் இதைக் கொடுக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது. இந்த டெண்டர் விஷயத்தில் முழுக்க முழுக்க முன்னாள் உணவு அமைச்சர் திரு. ப. உ. சண்முகத்திற்குத் தொடர்பு இருக்கிறது. 1971-ஆம் ஆண்டில் இந்த அரிசியை வெளியே விற்க வேண்டிய அவசியமில்லை என்று நான் சொல்கிற நேரத்தில் இதே சட்டமன்றத்தில் அமைச்சரவர்கள் பேசியிருக்கிறார்கள்.

1971-இல் விலைவாசி ஏற ஆரம்பித்து விட்டது. அப்படி ஏற ஆரம்பித்த பிறகு இதை வெளியே ஏன் அனுப்ப வேண்டும்? இதே மன்றத்தில் உணவு அமைச்சரவர்கள் பேசியிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். "1971-மே, ஜூன் மாதங்களுக்குப் பின்னர் நெல், அரிசி விலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஏறுமுகமாயிருந்தன. அறுவடைக்குப் பின்னர் விலை இறங்குவதும், அதனை அடுத்து ஜூலை, செப்டம்பர் திங்களுக்கிடையே தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவைப் பயிர் அறுவடை வரையும், பிற மாவட்டங்களில் முதற் போகம் அறுவடை வரையிலும் விலை ஏறுவதும் ஆண்டுதோறும் நடப்பதொன்றாகும். ஆனால் 1971-ஆம் ஆண்டில் விளைச்சல் இல்லாத காலத்தில் இந்த



1974 டிசம்பர் 14] [திரு. ஆலடி அருணா]

விலை ஏற்றம் 1970-ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் சற்றுக் கூடுதலாகும்" என்று சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள், அமைச்சரவர்கள் பேசியிருக்கிறார்கள்.

எனவே, விலைவாசி ஏறியிருக்கும்பொழுது வெளியே விற்பதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களுக்கும் இந்த ஊழலுக்கும் தொடர்பு உண்டு என்று சொல்வதற்கு இன்னொரு காரணம், இந்த உத்தரவை முதலமைச்சர் போடுவதற்கு முன்னால் அவர் போட்டிருக்கிறார். அது முக்கியமான விஷயம். அதையும் இந்த மன்றத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன். முதன்முதலாக அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் 24—3—71-இல் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவின்படி எடுத்த முடிவை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுபோகவில்லை. அதிகாரிகளுக்கும், வேறு சில இலாக்காக்களுக்கும் சர்க்குலேட் பண்ணவில்லை. 24—3—71-இல் போடப்பட்ட உத்தரவு 8—4—71-இல் வெளியாகி இருக்கிறது. 8—4—71-க்குப் பிறகுதான் அந்த ஃபைல்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. எப்பொழுது தெரியுமா? 26—5—71-இல். ஒரு மாதத்திற்குப் பிறகு அனுப்பப்படுகிறது. எதற்காக இப்படிப்பட்ட அவசியம் ஏன் ஏற்பட்டது? எதற்காக ஏற்பட்டது? எத்தனையோ காரியங்களுக்கு, ஒரு நிலவள வங்கிக்கு நியமிப்பதானாலும்கூட, மருத்துவமனைக்கு ஆலோசகரைப் போடுவதானாலும்கூட மாண்புமிகு முதலமைச்சரவர்களின் ஆலோசனையைக் கேட்கிறார்கள். ஆனால் 1½ கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசி, நெல்லைப் பொறுத்தவரை முதலமைச்சரைக் கலக்காமல் உத்தரவு போட வேண்டிய நிர்ப்பந்தமான நிலை, இக்கட்டான நிலை அமைச்சருக்கு ஏன் ஏற்பட்டது? அதை இந்த மன்றத்திற்கு விளக்க வேண்டும். எனவேதான் அவர்களுக்குச் சலுகை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் திட்டமிட்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே தான் இந்த ஊழலுக்கும் அவர்களுக்கும் தொடர்பு உண்டு என்று சொல்கிறேன்.

நான் இவற்றைச் சொல்வதற்கு ஆதாரம் உண்டு, அதை நிரூபிக்க முடியும். நீதி மன்றத்திற்கு வருகிறாயா, நீ நிரூபிக்க வில்லையென்றால் 3 வருஷம் உள்ளே போ, இல்லையென்றால் நான் 7 வருஷம் உள்ளே போகிறேன் என்று மேடைகளில் பேசுவது சில

* * தங்கள் வாதம் பொய்யாக இருக்குமேயானால், நியாயமில்லாமல் இருக்குமானால் என்னுடைய பேட்டைக்கு வா, உன்னை முடித்துக் கட்டுகிறேன், இல்லையென்றால் நான் சாகிறேன் என்று பேசுகின்ற அடிப்படையில் கொக்கரித்துப் பேசுவதைப்போல * * பேசக்கூடாது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** * * என்று பேசுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. நாங்களெல்லாம் * * என்று சொன்னால் நாங்களும் திருப்பிச் சொல்ல முடியும். எனவே * * என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * என்று பேசுவது முறையல்ல.

**திரு. ஆலடி அருணா :** 'அன்-பார்லிமெண்ட்ரியாக' இருந்தால் எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * என்பது நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஆலடி அருணா :** எனவே இந்த அளவிற்கு ஒவ்வொரு நிலையிலும் அரசாங்கத்தின் ஊழல் தலை விரித்தாடுகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இங்கே மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் விஷயம் பற்றிப் பார்த்தால் எவ்வளவு ஊழல் நடந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஏறக்குறைய அரிசி ஆலை மில் முதலாளிகளிடமிருந்து 2½ கோடி ரூபாய்க்குமேல் அரசாங்கத்திற்கு வர வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் உத்தரவு என்ன தெரியுமா? நூறு மூட்டை நெல் கொடுத்தால் அரிசியாக வந்ததற்குப் பிறகு தான் மறுபடியும் நெல்லைக் கொடுக்கலாம் என்ற இப்படிப்பட்ட உத்தரவு இருந்தும்கூட, இவ்வளவு பாக்கி ஏன் ஏற்பட்டது? இரண்டு கோடிக்கு மேல் ஏன் பாக்கி ஏற்பட்டது? ஆலை அரசர்களுக்கும், மில் முதலாளிகளுக்கும் சலுகை செய்ய வேண்டுமென்று, திட்டமிட்டு செய்யப்பட்ட சலுகைகளாகும். எனவே இந்த அரசாங்கத்தின் ஊழலை பிட்டுபிட்டாக இந்த மன்றத்தின் முன்னால் வைத்தால் இதை அண்ணாவின் தம்பிகள் ஆளவில்லை,

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





அலிபாபா கூட்டம்தான் ஆளுகிறதோ என்று எண்ண வேண்டிய அளவிற்குப் பிரச்னைகள் இருக்கின்றன. அவற்றைச் சொல்லும் நேரத்தில் நடவடிக்கை எடுக்கும்படியான பிரச்னை பற்றி கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் சொன்னேன்.

பெருமதிப்பிற்குரிய திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் அதை வேத நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். அதை வேத வாக்காக நாங்கள் எடுத்துக்கொண்டோம். ஆனால், என்ன நடவடிக்கை எடுத்தார்கள் தெரியுமா? அம்பை வட்டத்தில் மார்க்கெட்டிங் சொசைட்டியில் சுமார் ஒரு இலட்சத்திற்கு கையாடல் செய்யப்பட்ட ஊழல் நடந்திருக்கிறது, சொசைட்டியின் பணத்தை மூன்று பேர் கையாடல் செய்திருக்கிறார்கள், சப்-கலெக்டர் பகிரங்கமாகக் கைப்பற்றியிருக்கிறார். அப்படிக் கையாடல் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அந்தக் கூட்டுறவு நிறுவனம் கொள்முதல் செய்வது என்று அந்த இயக்குநர்கள் எல்லாம் சேர்ந்து தீர்மானம் போட்டு கொள்முதல் செய்திருக்கிறார்கள். அதை கோடவுனில் வைத்திருக்கிறார்கள். ஆனால், கோடவுனுக்கு லைசென்ஸ் வாங்கவில்லை. அதுதான் அவர்கள் செய்த குற்றம். எழுபது ரூபாய், எண்பது ரூபாய் என்று விலை கொடுத்து அதிகமான விலை கொடுத்து கொள்முதல் செய்திருக்கிறார்கள். சர்க்கார் 70 ரூபாய்க்குக் கொள்முதல் செய்திருக்கிறது. எனவே, வாங்கியவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் அளவிற்கு நஷ்டம்தான் ஏற்பட்டிருக்கும். அவர்கள் செய்த ஒரே குற்றம் இந்த இடத்தில் வைத்திருக்கிறோம் என்று லைசென்ஸ் வாங்க வேண்டும், அதை வாங்கவில்லை. கூட்டுறவுத் துறையில் கொள்முதல் செய்கிறோம் என்று லைசென்ஸ் பெறவில்லை என்ற குற்றத்திற்காக சர்க்கார் விலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் அளவில்தான் சர்க்கார் கொள்முதல் செய்திருக்கிறது.

**திரு. ஆலடி அருணா :** அமைச்சர் சொல்வது தவறான தகவல். இந்தக் குற்றச்சாட்டை அவர்கள் நிரூபிக்கத் தயாரா? சப்-கலெக்டரின் அறிக்கையை இந்த மன்றத்தில் வைக்கட்டும். மூன்று பேர்கள் ஆளுக்கு சுமார் 30,000 ரூபாய் அளவில் பணத்தை

எடுத்திருக்கிறார்கள். அதைக்கொண்டு நெல்லை வாங்கி, சம்மன்குளம், கடையம், அம்பாசமுத்திரம் போன்ற இடங்களில் வைத்திருந்திருக்கிறார்கள். சப்-கலெக்டர் ரிப்போர்ட் செய்திருக்கிறார். எந்தத் தீர்மானத்தின்படி யாரிடத்தில் இந்த அளவிற்கு வாங்கப்பட்டது என்ற கணக்கும் கிடையாது. இதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மூன்று பேரும் கொள்முதல் செய்வது என்று தீர்மானம் போட்டுத்தான் வாங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் கொள்முதல் செய்திருக்கிறார்கள். அந்த முறையில்தான் இந்த ஆண்டும் கொள்முதல் செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு சட்டத்திற்குட்பட்டு அதற்கான உத்தரவைப் பெறவில்லை என்பதுதான் அவர்கள் செய்த ஒரே குற்றம். சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 1-00)

**திரு. ஆலடி அருணா:** இது சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். விசாரணை வையுங்கள். சப்-கலெக்டரிடமிருந்து ஃபைலை வரவழையுங்கள். யார் ஊழல் செய்திருக்கிறார்கள் என்ற உண்மை தெரியும். ஊழல் பேர்வழிகளுக்கு, மோசடிப் பேர்வழிகளுக்கு ஆதரவாக வெளியே உள்ளவர்கள் இருக்கலாமே தவிர, நிர்வாகத்திலுள்ள அரசின் நிலை அப்படி இருக்கக்கூடாது. நாட்டிலே கள்ளக்கடத்தல் செய்பவர்கள் காராக்கிருகத்தில் இருப்பதற்குப் பதிலாக அதிகாரத்தில் இருப்பதால் ஊழல் பேர்வழிகள் இங்கே உலவிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் ஊழல் அரசாங்கம், ஊதாரி அரசாங்கம், * * என்ற குற்றச்சாட்டைக் கூறி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** * * என்றால் * * என்று ஆகிவிடும். அது சரியல்ல. அந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும்.

**திரு. சி. ஆறுமுகம்:** உங்கள் பக்கத்தில் * * இல்லையா? இங்கே இருந்துதானே போனாய்? அந்த வார்த்தையை வாபஸ் வாங்கு.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக * * என்று குறிப்பிடும்போது அது இங்கே இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினரையும் குறிப்பதாகக் கூட ஆகும். அந்தப் பதத்தை உறுப்பினர் அவர்கள் வாபஸ் வாங்கிக் கொண்டால் உதவிகரமாக இருக்கும்.

**திரு. ஆலடி அருணா:** அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆலடி அருணா அவர்கள் அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். அந்த வார்த்தைகள் நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது.

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பல்வேறு கருத்துக்கள் வைக்கப்பட்ட போது தஞ்சை மாவட்டத்திலுள்ள டி.சி.எம்.எப். என்ற கூட்டுறவுச் சங்க நிகழ்ச்சி பற்றி இங்கே பரப்பரப்பான செய்திகள் எல்லாம் பரிமாறப்பட்டன. அதனுடைய விளைவாக நிர்வாகத்திலே உள்ள சம்பந்தப்பட்ட ஃபைல்களை எல்லாம் பார்க்க வேண்டுமென்ற கோரிக்கையும் வைக்கப்பட்டு, அது அரசாங்கத்தின் சார்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அரசாங்கத்தின் சார்பில் நான் பேசும்போது இதிலே வேகம் தேவையில்லை, சூடான சொற்கள் தேவையில்லை; இதிலே உள்ள நியாயத்தை வாதாடுவதில் ஆட்சேபணை இல்லை. எந்த விதமான ஆதாரங்களைக் கேட்டாலும் தர ஆட்சேபணை இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். பேரவைத் தலைவர் அவர்கள் முன்னிலையில் அவர்கள் கேட்ட அத்தனை ஃபைல்களும் எடுத்துக் கொடுக்கப்பட்டு எல்லாக் கட்சித் தலைவர்களும் பார்க்கின்ற வாய்ப்பும் கிடைத்தது.

அருமை நண்பர் ஆலடி அருணா அவர்கள் பேச்சை முடிக்கும் போது வேகமாகப் பேசினார்கள். எங்களைப் பொறுத்தவரை, எங்களுடைய தலைவர்களைப் பொறுத்தவரை, எங்களுடைய இயக்கத்தைப் பொறுத்தவரை அவர்கள் அருமையான சொற்க

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

ளால் அன்று பாராட்டிய காட்சிகள்தான் நினைவுக்கு வருகின்றன.
'தன்னிகரில்லாத் தானைத் தலைவன் டாக்டர் கலைஞர் கருணாநிதி'
என்று அவர் வாயாலே பாராட்டியது தெரியும். இன்றக்குக்
கோபம். கோபத்தில் பேசுகிறார் என்று எடுத்துக் கொள்கிறேன்.

பிரச்சினை என்ன என்பதை உங்களுடைய அறையிலே நான்
தெளிவாக எடுத்துச் சொன்னேன். அவர்கள் கேட்ட கேள்வி
களுக்கெல்லாம் பதில் சொன்னேன்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கம், டி.சி.எம்.எப்.
என்ற அந்த நிறுவனம் நெல் வாங்கும்போது அரசாங்கத்திற்கு
லெவிக்காக குறைந்த விலையில் ஓரளவு நெல்லைக் கொடுக்கிறார்கள்.
மீதி இருக்கும் நெல்லை விற்க வேண்டும். இப்படி ஒரு பிரச்சினை
1971-ம் ஆண்டு எழுகிறது.

அந்தப் பிரச்சினை எழுந்தபோது 'அதிக விலைக்கு நாங்கள்
விற்க வேண்டும். லெவிக்காக ஏற்கனவே குறைந்த விலைக்குக்
கொடுத்திருக்கிறோம். எங்களுடைய நட்டத்தை ஈடுகட்ட
வேண்டும். இதற்கு அரசாங்கம் அனுமதி தரவேண்டும். தமிழ்
நாட்டில் விலை குறைவாக இருக்கிறது. வெளி மாநிலங்களுக்கு
அரிசியையும், நெல்லையும் அனுப்ப அனுமதி கொடுத்தால் அதிக
லாபம் கிடைக்கும்' என்று டி.சி.எம்.எப். நிறுவனத்தின் சார்பில்
எடுத்துக் கூறப்பட்டது. அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தம்
இல்லை.

வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் நம்
முடைய அனுமதியைப் பெறவேண்டும். கூட்டுறவுச் சங்கத்
திலிருந்து வெளி மாநிலத்திற்கு விற்கும்போது லாபத்தோடு
விற்க ஒரு முறையைப் பின்பற்ற வேண்டும். இந்த இரண்டு
கருத்துக்களின் அடிப்படையில் அரசுத் தரப்பில் கலெக்டர் மூல
மாக டெண்டர் கேட்டு யார் அதிகமாக டெண்டர் கேட்கிறார்களோ
அவர்களுக்குக் கொடுங்கள் என்று அரசு உத்தரவு போட்டது.
அப்படி முறைப்படி நெல்லை விற்பதற்கு உரிமை கொடுக்கப்பட்ட
ஒருவர் தாண்டவராயன் என்பவர். இது ஒரு பகுதி. இரண்டாவது
பகுதி—தாண்டவராயன் என்ற பெயரில் பர்மிட் வாங்கியவர்
தனக்குச் சட்டபடி கொடுக்கப்பட்ட பர்மிட்டை போகவாகப்
பயன்படுத்தி டி.சி.எம்.எப். நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட
நெல்லைத் தவிர தனியாக வெளியிலே நெல்லை விலைக்கு வாங்கி,
இந்தப் பர்மிட்டைப் பயன்படுத்தி தமிழ் நாட்டு நெல்லை வெளியே



கொண்டு போனார். அப்படி இந்தப் பர்மிட்டைத் தவறாகப்
பயன்படுத்தினார் என்பதுதான் கிரிமினல் கேசாக இருக்கிறது.
வேறு ஒரு நிறுவனத்தின் சார்பிலே ஆறுமுகம் என்ற நபர்
தாண்டவராயன் பெயரை ஃபோர்ஜரி செய்தார் என்ற குற்றச்
சாட்டு கிரிமினல் கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கிறது. இது
வேறு.

முதல் பகுதியைப் பொறுத்தவரை டி.சி.எம்.எப். சார்பாக
தங்களிடத்திலுள்ள அத்தனை நெல்லையும் அரிசியையும் லாட்டாக
—பல்வேறு லாட்டுகள் இருக்கின்றன—விற்கவேண்டுமென்றார்கள்.
எல்லா லாட்டுகளுக்கும் சேர்த்து மூன்று முறை டெண்டர்
கேட்கப்பட்டது. முதல் டெண்டர் ஜனவரி மாதம் கேட்கப்
பட்டது. ஜனவரி மாதம் கேட்கப்பட்ட டெண்டரில் சில பேர்
பங்கு பெறுகிறார்கள். 25—1—1971-ம் தேதி முதல் டெண்டர்
கேட்கப்படுகிறது. இதிலே பல பேர் கேட்கிறார்கள். தாண்டவ
ராயன் என்பவரும் கேட்டிருக்கிறார். சரியாகக் கேட்டாரா,
தவறாகக் கேட்டாரா, டெபாசிட் கொடுத்தாரா என்றெல்லாம்
கேட்டார்கள். இறுதி முடிவு முதல் டெண்டர் அவருக்குக்
கொடுக்கப்படவில்லை. இதுவே அதற்குப் பதில்.

இரண்டாவது டெண்டர் 15—2—1971-ல் கேட்கப்படுகிறது.

**திரு. ஆலடி அருணா:** முதலில் பணம் கட்டினாரா என்ற
பிரச்சினைதான் எழுகிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரண்டாவது டெண்டர்
மாத்திரம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

**திரு. ஆலடி அருணா:** தாண்டவராயன் டெண்டர்தான்
முறைப்படி இல்லையே.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதை நாங்கள் ஏற்றுக்
கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறேன். இரண்டு டெண்
டரிலும் அவர் 'பார்டிசிபேட்' செய்தார். இரண்டிலும் அவருக்குக்
கொடுக்கப்படவில்லை. சலுகை காட்டியிருந்தால் அவருக்குக்
கொடுத்திருக்கலாம். சலுகை காட்ட விரும்பவில்லை.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, தவறான தகவலை
அமைச்சர் அவர்கள் தருகிறார்கள். ஃபைலைத் தாங்களும்
பார்த்தீர்கள். டெண்டர் முறைப்படி இல்லை. இர்ரெகுலராக

இருக்கும்போது எப்படி கன்சிடரேஷனுக்கு எடுத்துக் கொள்ள முடியும்? இது உங்களுக்கே தெரியும். தவறான வாதத்தைப் பேரவை முன் அமைச்சர் அவர்கள் வைக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த நிகழ்ச்சியில் பேரவைத் தலைவரை இழுப்பது சரியல்ல.

Thiru Aladi Aruna: You are the judge. You have to give your ruling here.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் முன்னிலையில் பார்த்தீர்கள். நீங்கள் ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதிலே பேரவைத் தலைவர் தீர்ப்புக் கொடுக்கக்கூடிய நிலைமை எதுவும் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கொடுக்கிற தகவலை சரியான தகவலாக அமைச்சர் அவர்கள் தரவேண்டும்.

(சில உறுப்பினர்கள் எழுந்து குறுக்கே பேசினர்)

**திரு. ஆலடி அருணா :** நீங்கள் சொல்ல உரிமை இல்லையா? தங்களிடம் ஃபைலைக் கொடுத்தார்கள். தாங்கள் நியாயம் சொல்ல உரிமை இல்லையா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஃபைலைப் பார்த்த விஷயமாக இவ்வளவு நேரம் ஆலடி அருணா அவர்கள் பேசும் போது குறுக்கிடாமல் அமைதியாக இருந்து கடைசியாக சட்ட அமைச்சர் விவரங்களைக் கூறுகிறார். அவர் பேசுகின்ற நேரத்தில் அமைதியாக இருந்து கேட்டுவிட்டு பிறகு எழுந்து பேசினால் அது வாதம் என்ற அளவில் அமையும். அப்படி இல்லாமல் குறுக்கே பலர் எழுந்து பேசினால் யார் சொல்லுவதும் யாருக்கும் புரியாமல் போய்விடும். ஆகவே, சட்ட அமைச்சர் பேசுவதைக் கவனமாகக் கேளுங்கள், பிறகு பதில் சொல்லுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தவறான தகவலைத் தருகிறாரே . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அம்மையாருக்குத் தவறாக இருக்கலாம். நான் பிரச்சினையை எடுத்துச் சொல்லுகிறேன்.





இரண்டு டெண்டரிலும் தாண்டவராயன் இருந்தார். தாண்டவராயன் இருந்தார், தாண்டவராயன் இல்லை என்ற வாதம். இரண்டு டெண்டரும் சரியா, தவறு என்ற பிரச்சினை எழவில்லை. இரண்டு டெண்டரும் அவர் கேட்கவில்லை. மூன்றாவது 9—3—1971-ம் தேதி அரசு எடுத்த முடிவின்படி இரண்டாவது டெண்டரில் 15—2—1971-ம் தேதி டெண்டரில் யார் யார் பார்டிசிபேட் பண்ணினார்களோ அப்படி பார்டிசிபேட் பண்ணிய டெண்டர்காரர்களுக்கு மட்டும் லிமிடெட் டெண்டர் என்ற முறையைப் பின்பற்றி மறுபடியும் சர்குலேட்டாயிற்று. மூன்றாவது முறை, பின்பற்றக் கூடிய ஒரு முறை, இந்த மூன்றாவது முறையிலும் தாண்டவராயனுக்கு கொடுக்கப்படவில்லை. தாண்டவராயன் தந்தி மூலமாக பார்டிஸிப்பேட் பண்ணியிருக்கிறார்கள். இந்த மூன்றாவது முறையிலும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** முதல் இரண்டு டெண்டர்கள் கொடுத்தவர்கள் யார் யாரோ அவர்களுடைய விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் தாண்டவராயன் பெயர் சேர்க்கப்படவில்லை என்ற காரணத்தால் தாண்டவராயன் தந்தி கொடுக்கிறார். ஏற்கனவே இரண்டு டெண்டர்களில் முறையாக இருந்தவர்கள், யார் யார் ஏலம் கேட்டார்களோ அவர்கள் விவரங்களைச் சேகரித்திருக்கிறார்கள். தாண்டவராயன் தந்திதான் கொடுத்திருக்கிறார். அவர்கள் டெண்டர் கொடுத்தார் என்ற நிலைமை இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர்களை அனுமதித்திருக்கிறீர்கள், என்னையும் அனுமதியுங்களேன். டெண்டர் போடுகிறவர்கள் டெப்பாஸிட் கட்ட வேண்டும். சில ஒழுங்குமுறைகள் உள்ளன. இரண்டு டெண்டர்களிலும் தாண்டவராயன் எந்த ஒழுங்கு முறையையும் அனுசரிக்கவில்லை. ஒழுங்குமுறைகளை அனுசரிக்கவில்லை என்று வரும்போது அவரை எப்படி லிமிடெட் டெண்டரில் சேர்க்கமுடியும்?

He is a Third person. How can he come in the third tender at all? That itself is irregular.

**திரு. கோவை செழியன் :** மன்னிக்கவும். ஏற்கனவே தாண்டவராயன் பெயரை எஸ். ஆறுமுகம் என்பவர் போட்டு போர்ஜரி செய்திருக்கிறார். தாண்டவராயன் தந்தி அனுப்பியிருக்கிறார்

என்றால், தந்தி மட்டுந்தான் வந்திருக்கிறது. அந்தத் தந்தியை தாண்டவராயன்தான் அனுப்பினார் என்பதற்கு என்ன ஆதாரம்? அவர் ப்ரஸ்க்ரைப்ட் ஃபார்மில் கையெழுத்துப் போடவில்லை. பின்னர் எப்படி தந்தியை ஏற்றுக்கொண்டார்கள்?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த பைலை நாங்கள் பார்த்தோம். உண்மையைச் சொல்கிறேன். எங்களுக்கு அது திருப்தி அளிக்கவில்லை. பல காரணங்களால் திருப்தி அளிக்கவில்லை. அதில் பல ஊழல்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இடையில் ஒரு க்ளாரிபிகேஷன் கேட்கலாமே தவிர பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டு ஒரு பிரசங்கம் செய்யமுடியாது. அமைச்சர் அவர்கள் பேசியதன் பேரில் ஒரு விளக்கம் கேட்கலாமே தவிர தனிப் பிரசங்கம் செய்ய முடியாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தாண்டவராயனைப் பொறுத்தவரையில் 13-வது பேஜில் ரூ. 1,181-11 பைசா, 15-வது பேஜில் ரூ 1,221-30 பைசா, சங்கரன்குட்டி இவ்வளவு என்றிருக்கிறது. தொடர்ந்து தாண்டவராயன் ரூ. 10, ரூ. 20, ரூ. 30 என்று குறைத்துதான் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

He has been continuously giving less tenders. He has been chronically giving less tenders.

கடைசியில் நெகோஷியபிள் டெண்டர் என்ற வகையில் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு எப்படியோ லீக் அவுட்டாகியிருக்கிறது. யார் யார் எவ்வளவு டெண்டர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரிந்திருக்கிறது.

That is where we pin the responsibility on the Hon. Minister லீக் அவுட்டான பிறகு டெண்டரில் தன்னை ஒரு ஆளாக்கிக்கொள்கிறார். தந்தி மூலம் கேட்கிறார்.

That is highly irregular. That is against the tender rules. According to the tender rules, the whole thing should be a secret document. This is jumping out of the tender. This is going beyond the tender and not following the tender rules. So, the





tender rules have not been followed. The Hon. Minister Thiru P. U. Shanmugham has signed it and after the orders were passed, for ratification, it had gone to the Hon. Chief Minister. All these secrets we have found out in the file. This is obvious and this is highly irregular.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** லீக் அவுட் ஆனது என்பது கற்பனை. 9—3—71 நடைபெற்ற லிமிட்டெட் டெண்டரில் 6—3—1971-ம் தேதி ஏற்கனவே உள்ள டெண்டரர்தான் அவர். அவர் தந்தி மூலம் சொல்கிறார். இவ்வளவுக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறார். அந்த டெண்டரிலும் தாண்டவராயனுக்கு கொடுக்கப்படவில்லை. 9—3—71-ம் தேதி டெண்டருக்கு 6—3—1971 அவர் தந்தி மூலம் கேட்டதற்குப் பின்னால் அந்த தாண்டவராயனுக்குக் கொடுக்கப்படவில்லை. கலெக்டரின் அறிக்கையிலும் அதுதான், தந்தி மூலம். கேட்டிருக்கிறார், ப்ரிஸ்க்ரைப்ட் பார்மில் கொடுக்கவில்லை, ஆகவே தாண்டவராயனுக்குக் கொடுக்கவில்லை என்று. மூன்றாவது டெண்டரும் தாண்டவராயனுக்கு கொடுக்கவில்லை. இதைப் புரிந்து கொண்டால் இந்தப் பிரச்னை எழவே எழாது.

நான்காவது கட்டத்தில்தான் அதே தாண்டவராயன் அரசாங்கத்திற்கு, சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். 19—3—71-ம் தேதி அந்தக் கடிதத்தில்தான் முதன்முதலாகச் சொல்கிறார். இந்த மூன்று டெண்டர்களிலும் அவர் எடுக்க முற்பட்டார். மூன்று டெண்டர்களும் யார் யாரோ ஒரு அஷ்ராப், ஒரு குட்டி போன்றவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. யார் யார் அதிகமாகக் கேட்டார்களோ அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அவர்களுக்கு சிவில் சப்ளைஸ் கமிஷனர் கொடுத்திருக்கிறார்கள். தாண்டவராயனுக்குக் கொடுக்கவில்லை. மூன்று முறை நாம் விடுத்த டெண்டர்களிலும் யார் யார் அதிகமாகக் கேட்டார்களோ அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தாண்டவராயனுக்குக் கொடுக்கவில்லை. 19—3—1971-ம் தேதி அவர் ஒரு கடிதம் கொடுக்கிறார் சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கு. அந்தக் கடிதத்தில் நான் எல்லா நெல்லையும், எடுத்துக்கொள்ள ஏற்கனவே மூன்று டெண்டர்களில் யார் யார் கேட்டு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அது போக மிகுதி உள்ள நெல்லை எல்லாம் அவர்கள் கேட்டிருக்கிற விலையை விட—

ஒவ்வொரு லாட்டுக்கும் ஒவ்வொரு விலை—அதிகமாகத்தர தயாராய் இருக்கிறேன் என்கிறார். ரூ. 1,120-க்கு சக்தி கேட்டிருக்கிறார். அதைவிட பத்து ரூபாய் அதிகமாக ரூ. 1,130 தருகிறேன் என்று நான்காவது கட்டமாக கடிதம் கொடுக்கிறார். அந்தக் கடிதத்தை எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களிடத்திலும் காண்பித்தேன். அந்தக் கடிதத்தின் அடிப்படையில்தான் அரசாங்க சிவில் சப்ளைஸ் கமிஷனர் மீதி இருக்கிற நெல் முழுவதையும் அவருக்குக் கொடுக்கலாம் என்ற உத்தரவுதான் நெகோஷியேட்டட் டெண்டர். மூன்று டெண்டர்களில் இரண்டு ஓப்பன் டெண்டர்கள், மூன்றாவது லிமிட்டெட் டெண்டர். இந்த மூன்று டெண்டர்களிலும் தாண்டவராயனுக்கு கொடுக்கவில்லை. யார் யார் அதிகமாகக் கேட்டார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நெகோஷியேட்டட் டெண்டர் என்ற முறையில்தான் எல்லா டெண்டர்களிலும் கேட்டிருக்கிற விலையை விட அதிகமாகக் கொடுக்கிற ஒருவருக்கு கொடுக்கவேண்டுமென்று அரசு முடிவு எடுத்தது. முடிவு எடுத்து, 797 டன் பச்சரிசி கொடுக்கவேண்டும், பாயில்ட் ரைஸ் 4,349 டன், பாடி 7,259 டன் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். உத்தரவு போட்டு அவர்கள் காசு கொடுத்து வாங்கியிருக்கிறார்கள்.

தாண்டவராயன் என்பவர் இன்ஸால்வன்ட் ஆயிற்றே, எப்படி நம்பினீர்கள், அவரிடம் பணம் இருக்கிறதா, அவர் பணம் கொடுப்பாரா என்ற சந்தேகங்களை பல்வேறு தரப்பு உறுப்பினர்கள் கிளப்பினார்கள். அரிசி டி.ஸி.எம்.எப்.-க்கு சொந்தம். யார் வாங்கவேண்டுமென்று சொல்கிறார்களோ காசு கொடுத்தால் அரிசி கொடுப்போம், காசு இல்லை என்றால் அரிசி இல்லை. ஆகவே அப்பிரச்னை எழவில்லை. அவர் காசு கொடுத்து, பெர்மிட்டை காட்டி எடுத்துக்கொண்டு செல்கிறார் அரிசியை. அப்படி எடுத்துச் செல்லும்போதுதான் தவறு நடக்கிறது. நாம் கொடுத்த ஒரு பர்மிட்டை பல பெர்மிட்களாக போகஸ் பெர்மிட்களைப் பயன்படுத்தியிருக்கிறார். இதை நம் காவல் துறை பிடித்தது. 10—7—71 அன்று ராயபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு செய்தி கிடைத்தவுடன் கைப்பற்றினார்கள். அதிலிருந்து கொடுத்த பெர்மிட்டை வைத்துக்கொண்டு போகஸ் பெர்மிட்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. அதற்குப் பின்னால் ஜூலை 16-ம் தேதி இதே மாமன்றத்தில் அன்று உணவு அமைச்சராக



இருந்த திரு. ப. உ. ச. அவர்கள் இப்படிப்பட்ட தவறு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது, க்ரிமினல் வழக்குப் பதிவு, தொடர்ந்து பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். பின்னர் க்ரிமினல் கேஸ். க்ரிமினல் கேஸ் ஆரம்பித்தவுடன்—தாண்டவ ராயன் பெறுமானவரா இல்லையா என்றால்—தாண்டவராயன் கட்டியிருந்த பணத்தை அவர் செக்யூரிட்டி டெப்பாஸிட்டாக கட்டியிருக்கும் பணம் ரூ. 4.91 லட்சம் இருக்கிறது, அதை அப்படியே பிடித்து வைத்திருக்கிறோம். அதேபோல் அவர் நம்மிடத்தில் பணம் கட்டி நெல் எடுக்கிறார். அவர் பணத்தைக் கட்டியும் நெல்லைக் கொடுக்க மாட்டோம் என்று உத்தரவு போடு கிறோம். 128 டன் நெல்லுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் அவர் நம்மிடம் பணம் கட்டியிருக்கிறார். இருந்தாலும் நாம் அந்த நெல்லைக் கொடுக்க மறுத்திருக்கிறோம். அவர்களது பணம் நம் மிடம் இருக்கிறது. பணம் கட்டியும் நெல்லைப் பிடித்து வைத் திருக்கிறோம். போகஸ் பெர்மிட்டுடன் கொண்டு போகப்பட்ட அரிசி, நெல்லை பிடித்து வைத்திருக்கிறோம். இதன் மதிப்பாக சுமார் ரூ. 1,66,000 நம்மிடம் இருக்கிறது. அவர் பெறுமானமுள்ளவரா இல்லையா என்பதற்குப் பதில் இதுதான் அவர் பணம் நம்மிடம் இருக்கிறதே தவிர நம் பணம் அவரிடம் எதுவுமே கிடையாது. அவர் செய்த தவறெல்லாம் நெல்லை வெளியே பொது மக்களிடம் வாங்கிக் கொள்ள நாம் கொடுத்த பெர்மிட்டை தவறுதலாகப் பயன்படுத்தி வெளியே கடத்தினார் என்பதுதான். டி.ஸி.எம்.எப். பொறுத்தவரையில் எந்தவிதமான தவறோ அல்லது அரசாங்கத்தை பொறுத்தவரையில் எந்தவிதமான தவறோ நடை பெறவில்லை. போகஸ் பெர்மிட் என்பதில்தான் தவறு. இதுதான் உண்மை.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல், எங்களுக்கு சாட்டிஸ்பாக்ஷன் இல்லை, நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம், எங்களுக்கு திருப்தி இல்லை என்று சொன்னார்கள். எப்படி திருப்தி ஏற்படும்? நியாய உணர்வோடு, புள்ளிவிவரங்களின் உண்மையை புரிந்துகொண்டால்தான் உண்மை தெரியும். வெளியே தனியாக வேண்டுமானால் ஒத்துக்கொள்வார்கள். ஆனால் அரசியல் ரீதியாக ஒரு கட்சியை மாசுபடுத்த வேண்டும், ஒரு அமைச்சரை மாசு படுத்தவேண்டும், அதற்காகத்தான் நாங்கள் இங்கே வந்திருக் கிறோம் என்ற உணர்வு ஏற்படுமானால் உண்மை புரியாது. ஆகவே,

எங்களது வாதம், சூடு வேண்டாம், சுவையோடு விவாதிப்போம், புள்ளிவிவரங்களை வைத்து விவாதிப்போம், அதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம், நீங்கள் எவ்வளவு கேள்விகள் கேட்டாலும் பதில் சொல்லத் தயாராயிருக்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஒரு கிளாரிபிகேஷன். மூன்று டெண்டர்களிலும் தாண்டவராயன் பணம் கட்டினார் என்று கூறினார்கள். மூன்று டெண்டர்களிலும் தாண்டவராயன் அதற்கான டெபாசிட் கட்டவில்லை. ஆகவே, அவரை, வாலிட் டெண்டராராகக் கருத முடியாது. இரண்டாவது, இந்த நெகோஷியேஷனுக்கு முன்பு நீங்கள் கொடுத்தது 3 டெண்டர்கள். அந்த மூன்று டெண்டர்களிலும் ஒழுங்கான டெண்டர்கள் கொடுத்தார்கள். அவர்களை நீங்கள் அழைக்கவில்லை. அதாவது அஷ்ராஃப், அபு, குட்டி இந்த மூன்று பேர்களும் டெண்டர் டெபாசிட் கொடுத்து ஒழுங்கான முறையில் டெண்டர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் தகவல் கொடுக்காமல் நெகோஷியேஷனில் தாண்டவராயனுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அது முதல் குற்றச்சாட்டு. இந்த மூன்று டெண்டர்களிலும் ஒழுங்கான டெண்டர் கேட்டவர்களுக்கு நீங்கள் கொடுத்திருக்கிற குவாண்டிட்டி மிகவும் குறைவு. ஆனால் நெகோஷியேஷனில் நீங்கள் தாண்டவராயனுக்கு—முறைகேடாக நடந்து கொண்டவருக்கு, பெர்மிட்டை ஃபோர்ஜ் செய்தவருக்கு, மோசடி செய்தவருக்கு, நீங்கள் கொடுத்திருப்பது 1½ கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி, நெல் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவேதான் முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதை நாங்கள் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, அவர்கள் கேட்டதற்கு நான் ஏற்கனவே பதில் சொன்னேன். நாம் மூன்று டெண்டர்கள் கேட்டபொழுது நம்மிடத்திலுள்ள அத்தனை குவாண்டிட்டி ஆஃப் பாடி, அரிசி எல்லாவற்றிற்கும் சேர்த்துக் கேட்டோம். எல்லாவற்றிற்கும் ஒருவரும் மனு போடவில்லை. ஒவ்வொரு லாட்டுக்கும்தான் அவர்கள் டெண்டர்கள் கொடுத்தார்கள். அந்த மூன்று டெண்டர்களில் ஒருவரும் கேட்கவில்லை. அதற்குப் பின்னாலே வந்து கேட்டார்கள். கேட்டவருக்குக் கொடுத்தோம். அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். மூன்று டெண்டர்கள் அதாவது 25—1—1971, 15—2—1971, 9—3—1971 ஆகிய தேதிகளில் உள்ள டெண்டர்களைப் பற்றி

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. அருணை அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். எங்கள் சார்பில் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். நேற்றும் சொன்னேன். நெகோஷியேடட் டெண்டர் எப்போதும் எல்லோரும் பின்பற்றுவதுதான் தொடர்ந்து இந்த வார்த்தை உபயோகத்தில் இருக்கிறது. 1967-க்கு முன்பும் இருக்கிறது. இதற்கும் அந்த மூன்று டெண்டர்களுக்கும் தொடர்பே கிடையாது. மூன்று டெண்டர்களிலும் யார் அதிகமாக கேட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு கொடுத்து விட்டோம். அந்த மூன்று டெண்டர்களிலும் அதிகமாகக் கேட்டவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அந்த டெண்டர்களுக்கும் அப்பாற்பட்டு நமக்கு லாபகரமாக இருக்கும் வகையில் மூன்று டெண்டர்களிலும் கேட்காத தொகை கிடைக்கும்போது, அதிகமான தொகை கிடைக்கும்பொழுது, அதை ஒப்புக் கொள்வதுதான் நெகோஷியேடட் டெண்டர். அது சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய முறை. அதுதான் ஒப்புக்கொள்ளக்கூடிய முறை. பின்னாலும், எப்பொழுதும் ஒப்புக்கொள்ளத்தக்க முறை.

**திரு. ஆலடி அருணா :** அது 'லிமிடெட் டெண்டர்'

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஸீல்டு டெண்டர்கள் அரசாங்கத்தினால் அழைக்கப்படும்பொழுது, அதற்குச் சில வரைமுறைகள் இருக்கின்றன. அதற்கான வரைமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. டெபாசிட் கட்டவேண்டும். டெண்டாருக்கு என்ன அருகதை இருக்கவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விதிகள் ஏற்படுத்தியிருக்கிறோம். பேச்சுவார்த்தை மூலம் நிச்சயிக்கக் கூடிய டெண்டர் என்றால் அது அதிகார துஷ்பிரயோகம்தான். காரணம் ஸீல்டு டெண்டரில் எவ்வளவு ஹையஸ்டாக கேட்கிறார்களோ அதை ஒத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் இருக்கிறது. தன்னுடைய ஆளை வைத்து இன்னொரு ரூ. 10 மேலே வைத்து கேள் என்று சொல்லி, அவருக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு பேச்சுவார்த்தை டெண்டரில் இருக்கிறது. நெகோஷியேடட் டெண்டர் என்று சொல்வது சாதாரணமாக ஒரு எக்ஸ்ட்ரா ஆர்டினரி கேஸில், சரியான முறையில் ஆள் கிடைக்காத சூழ்நிலையில்தான் ஏற்படும். சாதாரணமான கேஸ்களில் இந்த நெகோஷியேடட் டெண்டர் முறையை அனுசரிப்பது அதிகார துஷ்பிரயோகம்தான்.

தாண்டவராயன் என்பவர் மூன்று டெண்டர்களிலும் டெபாசிட் கட்டக்கூட லாயக்கு அற்றவர். அவரோடு ரூ. 1½ கோடி



பெறுமான உணவு பொருள்கள் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தி டெண்டர் கொடுப்பது என்பது அதிகார துஷ்பிரயோகம். பணம் அப்பேர்ப்பட்ட ஒரு ஆளுடன் என்ன பேச்சுவார்த்தை? சொல் கொடுத்து நெல் எடுத்தார் என்று வெகு சாமர்த்தியமாக ஆள் கிறார் அமைச்சர் அவர்கள். எதற்கும் அருகதையில்லாத 10 கோடி இங்கே 1½ கோடி ரூபாய் பணத்தை கொடுத்துவிட்டு சென்று ரூபாய் மதிப்புள்ள நெல்லை கேரளாவிற்கு கடத்திச் பேமில் விட்டார். அவர் யார், எப்படிப்பட்டவர்? ஃபால்ஸ் ரூபாய் ஃபோர்ஜ் பண்ணி சட்டத்தை மீறி கேரளாவுக்கு 10 கோடி மதிப்புள்ள நெல்லை கடத்திச் சென்றிருக்கிறார். அந்த அளவுக்கு தமிழகத்தின் நெல் கேரளாவுக்கும், வெளி மாநிலங்களுக்கும் போயிருக்கிறது. பல கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. யாருக்கு லாபம்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதிலே அதிகார துஷ்பிர யோகம் ஒன்றும் கிடையாது. யாரையும் ஏமாற்றுவது என்பதும் கிடையாது. நாம் கொடுத்த நெல்லை கடத்திப் போகவில்லை. பணம் கொடுத்து வாங்கி பிறகு சட்ட விரோதமாக கொண்டு சென்றிருக் கிறார்கள். நமக்கு ஒரு காசு கூட நஷ்டம் கிடையாது. நம்மு டைய அரிசி கடத்திச் செல்லப்பட்டுவிட்டது என்ற தவறான அபிப் பிராயம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் விவரம் சொல்கிறேன். நம்மைப் பொறுத்த அளவுக்கு, அவர் பணம் கொடுத்ததற்குப் பின்னாலே நாம் கொடுத்திருக்கிறோம். நெகோஷி யேடட் டெண்டர் என்பது ஒரு அருமையான கருத்து, எங்க ளுக்கு தொல்லை தருகிற கருத்து. டெண்டர் கொடுத்ததற்குப் பின்னாலே, டெண்டரை நாங்கள் ஃபைனலாக முடிவு செய்ததற்குப் பின்னாலே, 9—3—1971-ல் கடைசியாக லிமிடெட் டெண்டர் பேரில் கலெக்டர் ஆர்டர் போட்டதற்குப் பின்னாலே, அந்த டெண்டர் கொடுத்ததற்குப் பின்னாலே, யார் அதிகமாக கேட்டாரோ அவருக்குக் கொடுத்ததற்குப் பின்னாலே; தானாகவே முன்வந்து 'நான் ரூ. 10 கூட தருகிறேன்' என்று ஒருவர் நெகோஷியேடட் டெண்டரில் கேட்டால், நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மறுக்க முடியாது. ஆகவேதான் ஏற்றுக்கொண்டோம். இல்லா விட்டால் அரசாங்கம் மாட்டிக்கொள்ளும், அரசாங்க அதிகாரிகள் மாட்டிக்கொள்வார்கள். க்ரரணம் ஆடிட் அப்ஜெக்‌ஷன் எழுப்பப் படும். யார் அதிகமாகக் கேட்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். அதை மறுக்க முடியாது. அதுதான் நிலை.

**திரு. பெ. சீனிவாசன் :** நெகோஷியேட்டட் டெண்டர் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த நிலைமையில் ஒரு டெண்டர் நெகோஷியேஷனுக்கு வரும் என்பது நமக்குத் தெரியும். பஞ்சாயத்து யூனியன்களிலேகூட நெகோஷியேட்டட் டெண்டர் வரும். அந்த வேலையை யாரும் செய்ய முன்வரவில்லை என்றால் நெகோஷியேட்டட் டெண்டர் வரும். அத்தனை பேர்களும் சரியான ஆட்கள் இல்லை என்று சந்தேகம் வந்தால், அப்பொழுது வரும். தாண்டவராயன் தந்தி கொடுத்திருப்பதாகச் சொல்லப்பட்டது. தாண்டவராயனின் பாக்கிரவுண்ட் என்ன? அவர் யார்? அவர் ஒரு கம்பெனி ஊழியர். அவர் ஏ. எம். டிரேடர்ஸில் வேலை செய்பவர் என்று அருணா அவர்கள் குறிப்பிட்டார். அவருடைய பாக்கிரவுண்ட் தெரியாமல் ரூ. 1½ கோடிக்கு அதிகாரிகள் டெண்டர் கொடுத்திருக்க முடியாது. அதிகாரிகளுக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. தெரிந்திருந்தும், வேண்டுமென்றே தாண்டவராயன் என்ற ஒரு பினாமி பேர்வழிக்கு நெகோஷியேட்டட் டெண்டர் கொடுத்திருக்கிறார்கள். அதோடுகூட இன்னுமொரு முக்கியமான செய்தி. நான் ஒரு முக்கியமான விவகாரத்தை கிளப்பியிருக்கிறேன். அதை சட்ட அமைச்சர் அவர்கள் ரொம்பவும் சாமர்த்தியமாக 'சைட் டிராக்' பண்ணி விட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது சம்பந்தப்பட்டதா? இந்த டெண்டர் சம்பந்தப்பட்டதா?

**திரு. பெ. சீனிவாசன் :** இந்த ஃபைலைப்பற்றிய மேட்டர்தான். தாண்டவராயன் ஃபைலை எஸ்டிமேட் கமிட்டி கேட்டது. கொடுக்கவில்லை. அது இன்றைக்கு உங்கள் அலுவலகத்தில் இருக்கிறது. யார் வேண்டுமானாலும் பார்க்கலாம். அந்த ஃபைலை எதிர்க்கட்சித் தலைவர்கள் பார்த்திருக்கிறார்கள். சட்ட அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக விவாதிக்கிறார். அது ஓப்பன் ஃபைல். சாதாரணமான ஃபைல். அப்படியிருக்கும்பொழுது எஸ்டிமேட் கமிட்டி அந்த ஃபைலைக் கேட்டபொழுது ஏன் அமைச்சர் கொடுக்க மறுத்தார்?

(பிற்பகல் 1-30)

அப்போது அப்படி மறுத்தவர்கள், இப்போது சர்வ சாதாரணமாக அந்த ஃபைலை யாரும் பார்க்கலாம் என்று கூற வேண்டிய காரணம் என்ன? இப்போது ரிப்பேர் ஆகிவிட்டதா? அந்த ஃபைல்கள் உண்மையான ஃபைல்கள் அல்ல.





It is a forged file. It is made-up file. It is not the original file.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, அது ஒரிஜினல் பைல்தான்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நெகோஷியேட்டட் டெண்டர் என்று ஒரு தனி முறை இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டது பற்றி மகிழ்ச்சி. ஃபைலை யாரும் தர முடியாது என்று சொல்லவில்லை. ஃபைல் கிடைப்பதற்குள் அறிக்கை தயாராகிவிட்டது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார். "file was not made available" என்றுதான் அந்த அறிக்கையில், இருக்கிறது. எல்லா எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஃபைலை பார்த்ததை அதில் உள்ளதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அருமை நண்பர் மட்டும் மறுக்கிறார். அவருக்கு திரு. ஆலடி அருணா அவர்கள்தான் ஆலோசனை கூறவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் பேரவையின் இன்றைய அலுவல்கள் முடிவுற்று, 16—12—1974 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

100. Notification issued with G.O. Ms. No. 2961, Revenue, dated the 17th July 1974 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 3987 (b), dated the 7th September 1974. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

101. Notification issued with R. Dis. No. 20498/73/E-4, dated the 2nd August 1974 in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 relating to Building Regulations to Nattrampalli and Palacode Town Panchayats in North Arcot and Dharmapuri districts respectively.

[Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

102. Notification issued with G.O. Ms. No. 1375, Rural Development and Local Administration, dated the 30th May 1974 in regard to declaration of certain Regional Planning areas. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

103. Notification issued with G.O. Ms. No. 2921, Public (Elections-IV), dated the 7th September 1974 in regard to an amendment to the Tamil Nadu Ministers' Travelling Allowance Rules, 1951. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

104. Notification issued with G.O. Ms. No. 666, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Panruti Local Planning Area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

105. The Annual Accounts of the Tamil Nadu State Housing Board for the year 1967–68. [Laid on the table of the House under section 125 (*a*) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

106. The Audit Report of the [Tamil Nadu State Housing Board for the year 1967–68. [Laid on the table of the House under section 125 (*a*) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

*B. Reports, Notifications and Other Papers.*

'Nil'



## இணைப்பு

[297-ம் பக்கத்தில் 35 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**விடை.**—(ஆ) & (இ) : ஆம்.

(உ) தஞ்சாவூர் மாவட்டத்தின் இயற்கை வளங்கள், இன்றியமையா அடிப்படை வசதிகள், அங்காடி நிலைமைகள் ஆகியவற்றை ஆய்ந்தறிந்து பின்னர், ஃபெர்டிலைசர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ், திருவாங்கூர் லிமிடெட்-ஐச் சேர்ந்த நிறுவனத்தின் (FACT) பொறியியல்—வடிவமைப்புப் பிரிவு, தஞ்சாவூர் மாவட்டத்தின் தொழில் நுட்ப-பொருளாதார ஆய்வு பற்றிய அறிக்கை ஒன்றை அளித்தது. அவ்வறிக்கையில், கீழ்க்கண்ட தொழிற்சாலைகளை அமைத்து மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது :—

1. சர்க்கரை ஆலை.
2. வடிசாலை திட்டம்.
3. பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை.
4. படகு கட்டும் தளம்.
5. கால்நடைத் தீவனத் தயாரிப்பு நிலையம்.
6. மீன்தூள் எண்ணெய் ஆலை.
7. அட்டைப் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை.
8. புளிய இலைகளிலிருந்து டாடாரிக் அமிலம் தயாரிக்கும் ஆலை
9. மின் முலாம் பூசும் பிரிவு.
10. இரண்டு ஹைட்ரோ பாற்பண்ணைத் திட்டம்.
11. பயன்படுத்தப்பட்ட பசை மின்கலங்களிலிருந்து மாங்கனீசு-டை-ஆக்ஸைடு துத்தநாகம், கரிம மின்வாய், ஆகியவற்றைப் பிரித்தெடுத்தல்.
12. மாலதியான் தயாரிப்புத் தொழிற்சாலை.
13. நெல் உமியிலிருந்து கார்போனிக்கா தயாரித்தல்.
14. வெண் சாம்பலிலிருந்து சலவைப் பொருள்கள் தயாரிக்கும் பிரிவு.
15. மருந்து மூலிகைகள் பயிரிடுதல்.
16. வைக்கோல் அட்டை தயாரிப்பு.
17. ரப்பர் கயிறு தொழிற்சாலை.
18. வடிப்பாலைத் திட்டம்.
19. நெல் உமியிலிருந்து செயலூக்கக் கரி தயாரித்தல்.

20. வேளாண்மைக் கழிவுப் பொருட்களிலிருந்து விரைப்பான அட்டைப் பலகைகளும், துண்டு அட்டைகளும் தயாரித்தல்.
21. வேளாண்மைக் கருவிகள்.
22. கடல் பாசி பயிரிடுதல்.

(*a*) and (*b*) Yes, Sir.

(c) After evaluating the natural resources, the infrastructure facilities and market conditions of the Thanjavur district, the FACT Engineering and Design Organisation of the Fertilisers and Chemicals, Travancore Limited, has given a report on the Techno-economic survey of the Thanjavur district. The report indicates the possibilities of setting up and developing the undermentioned industries—

(1) Sugar industry.
(2) Distillery project.
(3) Insecticide Formulation plant.
(4) Boat Building Yard.
(5) Cattle Feed Plant.
(6) Fish Meal and Oil Plant.
(7) Paper Carton Making Plant.
(8) Tartaric Acid from Tamarind Leaves.
(9) Electroplating Unit.
(10) Two hectare Dairy Farm Project.
(11) Recovery of Zinc, Carbon Electrode and Manganese Dioxide from used dry cells.
(12) Malathion Plant.
(13) Karbonica from Rice Hull.
(14) Detergents from White Ash.
(15) Cultivation of Medicinal Plant
(16) Straw-board Manufacture.
(17) Rubberished Coir Making Plant.
(18) Brewery Project.
(19) Active Carbon from Rice Husk.
(20) Hard Board and Particle Board from agricultural wastes.
(21) Agricultural Implements.
(22) Sea Weed Cultivation.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

## திங்கட்கிழமை, 1974 டிசம்பர் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### புதுப்பேட்டையில் காவல் நிலையம்

* 51 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம். திருப்பத்தூர் வட்டம், புதுப்பேட்டையில் காவல் நிலையம் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Finger Print Bureau*

* 52 Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open Finger Print Bureau Centres in each district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) எல்லா மாவட்டங்களிலும் ஒற்றை விரல் ரேகைப் பதிவுப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

[1974 டிசம்பர் 16

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, இதனுடைய 'ரிசல்ட்' வருவதற்கு மிகவும் தாமதம் ஏற்படுவதால், உடனடியாக—அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாக—ரிசல்ட் வரக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதனுடைய பணிகள் விரைவாக நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான்—ஏற்கனவே ஆறு இடங்களில் மாத்திரம் இந்த நிலையங்கள் இருந்தன—இந்த ஆறு, ஏழு ஆண்டுகளில் மேலும் 13 இடங்களில் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. போலிஸ் கமிஷன் சிபார்சுகளை யொட்டி, எல்லா மாவட்டங்களிலுமே இந்த நிலையங்கள் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுப் பணியாற்றி வருகின்றன. மேலும், இதனுடைய முடிவுகள் விரைவாகக் காவல் துறைக்குக் கிடைக்கும் வகையில், நேற்றையதினம் கூட, இதற்கான கம்ப்யூட்டர் லிஸ்டத்தை அவர்கள் பெறுவதற்கு ஏற்பாடுகள் தொடங்கப்பெறும் என்ற அறிவிப்பு அரசாங்கத்தின் சார்பில் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, கைரேகைப் பதிவு முறையில் குற்றவாளிகளை அதிகமாகக் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்பு அதிகரித்திருக்கிறதா? அந்த வகையில் துப்பு துலக்கப்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அரசுக்கு உதவிகரமாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த கைரேகைப் பதிவுகளின் மூலமாகத் துப்பு துலக்கப்படுவதற்கும், குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கும் மிகவும் உதவிகரமாக இருக்கிறது என்ற காரணத்தினாலேதான், இவைகள் மேலும் விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கைரேகைப் பதிவுக்காக இப்பொழுது அமர்த்தப்பட்டிருக்கிற ஊழியர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்றும், அதிலும் நவீன முறையில் பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கருத்து இருந்து வருகிறது. அதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கையினை மேற்கொள்ளப் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காவல் துறையைப் பொறுத்தவரை, அறிமுகப்படுத்தப்படும் நவீன முறைகள் அனைத்தையும் நம்முடைய தமிழகத்தில் பயன்படுத்துவது என்பதை ஏற்றுக்கொண்டு, அதனை நடைமுறைப்படுத்துவதிலும் நாம் முன்நிற்கிறோம். இதை மற்ற மாநில காவல் துறையினரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விரல் ரேகைப் பதிவு நிலையங்களில் இருக்கும் அலுவலர்கள் குறைவு என்ற கருத்தை மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் குறிப்பிட்டார். அப்படிக் குறைவாக இருக்குமானால் அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்து வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்போதே எல்லா நிலையங்களிலும் 160 பேர்கள் அலுவல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு நிலையத்தில் ஏறத்தாழ ஐந்து பேர் வேலை பார்க்கிறார்கள். மேலும் அதிகமாக ஆக்க வேண்டுமென்ற ஆலோசனை அதிகாரிகளிடமிருந்து வருமானால், அதை ஆய்ந்து ஆவன செய்யப்படும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இந்நிலையங்களில் பணியாற்றக் கூடிய அலுவலர்களின் எண்ணிக்கையைத் தேவையான அளவுக்கு உயர்த்த வேண்டியதைப் போலவே, பயிற்சி பெறக் கூடியவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும். வட மாநிலங்களில் உள்ள கைரேகை நிபுணர்களெல்லாம் கூட நம் மாநிலத்தில் இத்துறையில் உள்ள முன்னேற்றங்களை அறிந்துகொள்ள வருகிறார்கள். நம்முடைய நாட்டில் படித்து வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஏதுவாக இத்துறையில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால், அவர்கள் பயிற்சி பெற்று மற்ற மாநிலங்களில் வேலைவாய்ப்புப் பெற முடியும். ஆகவே, பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் நம்முடைய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுவும் யோசிக்கப் படும்.

[1974 டிசம்பர் 16

**திரு. சி. ஆறுமுகம் :** கைரேகை எடுக்கின்ற காவல் துறையினர் கைரேகைகள் எடுக்கிறார்கள் என்றாலும், வயது முதிர்ந்தவர்களாக இருப்பார்களானால் காலத்தால் கைரேகை மாறி வருகிறது என்ற ஒரு எண்ணம் நாட்டில் பரவி வருகிறது. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படி அவைகளில் மாறுதல் ஏற்படுமானால், எதிலிருந்து எப்படி மாறின என்பதையும் அந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்கின்ற அந்தத் திறமையையும் பெற்றிருப்பார்கள் என்றே கருதுகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கைரேகை நிபுணர்கள் நம்முடைய நாட்டில் அதிகம் பேர் இருக்கிறார்களா ? அல்லது மற்ற மாநிலங்களில் அதிகமானவர்கள் இருக்கிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கைரேகை நிபுணர்கள் என்னும்போது, மாத்தடியில் இருப்பவர்கள் நம்முடைய நாட்டில் அதிகம் பேர் இருக்கிறார்கள். (சிரிப்பு) இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காக இருக்கிற நிபுணர்களைப் பொறுத்தவரையில் நாம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு இந்தப் புள்ளிவிவரங்களைத் தர இயலாதவனாக இருக்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** முதலமைச்சர் அவர்கள் கம்ப்யூட்டர் புகுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் எந்த எந்தப் பிரிவில் கம்ப்யூட்டர் புகுத்தப் பட்டிருக்கிறது என்று தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதற்கான விவரங்கள் இல்லை. கம்ப்யூட்டர் மூலமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் செயல் மேலும் விரைவுபடுத்தப்படும் என்றுதான் சொன்னேன்.

## மதிய உணவுத் திட்டம்

*53 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதிய உணவுத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவித் தொகை அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ளதா ?



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆம். பள்ளி மதிய உணவுத் திட்டத்துக்கான அரசு மானியம் மாணவனுக்கு ஒரு நாளைக்கு ஆறு காசிலிருந்து பத்து காசாகவும், ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் தருவது ஐந்து காசாகவும் 1—10—1974 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** பள்ளியில் அளிக்கப்படுகிற மதிய உணவுக்காக அரசு வழங்குகிற மானியம் போதிய அளவுக்கு இல்லை என்ற நிலைமை பல ஆண்டுக் காலமாகவே இருந்து வருகிறது. அதை நிறைவு செய்வதற்காக பள்ளியாசிரியர்கள் கூட சில நேரங்களில் பயன்படுத்தப்படுவதாகக் குற்றச்சாட்டு தமிழ்நாட்டிலே இருந்து வருவதாகத் தெரிகிறது. அவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு காணும் வகையில், அரசாங்கமே இந்த மதிய உணவு வழங்குவதில் முழுப் பொறுப்பையும் ஏற்று, ஆவன செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தத் திட்டத்தின் அடிப்படையின் கீழ் பத்து காசு ஒரு மாணவனுக்காகச் செலவழிக்க வேண்டும் என்று இருந்தது. ஆறு காசு அரசு தர வேண்டுமென்றும், இரண்டு காசு ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் தர வேண்டும் என்றும், இரண்டு காசு நன்கொடை மூலம் வசூலிக்க வேண்டும் என்றும் ஒரு முறை இருந்து வந்தது. ஆறு காசு அரசு கொடுக்கும்போது கூட, நான்கு காசுகளை எப்படியேனும் பெற வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் என்ற ஆலோசனையின் அடிப்படையில் ஆறு காசு அரசு வழங்கி வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று பல்வேறு சங்கடங்கள் இருப்பதாக பல்வேறு மன்றங்களில் உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததன் காரணமாகவும், ஆசிரியர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததன் காரணமாகவும், 1—10—1974-லிருந்து புதிய உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அதன்படி அரசு ஆறு காசுகள் தருவதற்குப் பதிலாக பத்து காசுகள் தரும். இனிமேல் ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் ஐந்து காசு தரும். பொது மக்களிடமிருந்து இனி நிதி வசூலிக்க வேண்டிய அவசியம் இல்லை. பொது மக்கள் தாங்களாக விரும்பிய நன்கொடை மற்றவைகள் தருவார்களானால் ஊராட்சி அல்லது ஊராட்சி அதைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒன்றியம் ஐந்து காசுகள் தருவதாக பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டிருப்பதால், இனிமேல் ஆசிரியர்கள் பொது மக்களிடமிருந்து இரண்டு காசுகள் வசூலித்து கணக்கு காட்ட வேண்டும் என்று அவசியத்திலிருந்து அவர்கள் இப்பொழுது விடுபட்டிருக்கிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்காக ஊராட்சி மன்றங்கள் அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு பகுதியும், அரசு ஒரு பகுதியும் செலவை ஏற்றுக்கொண்டு மதிய உணவு வழங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம் கொடுக்க வேண்டிய பகுதியைக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்று உறுதி பெறுவதற்கு அரசு முன்வருமா? இல்லையென்றால், பொதுவான ஓரிடத்தில் எல்லாப் பள்ளிகளுக்குமாக மதிய உணவு தயார் செய்யும் முறை ஒன்று அமலாக்கப்பட்டதே, அது வேறு எல்லா இடங்களுக்கும் கொண்டு வரப்படுவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக கட்டாயம் ஐந்து காசுகள் தர வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கல்வி நிதியிலிருந்து தர வேண்டும் அல்லது பொது நிதியிலிருந்தும் செலவழிக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அரசு பத்து காசு தருவது; ஊராட்சி மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றியம் ஐந்து காசு தருவது என்று வைத்திருக்கிறோம். மைய சமையற்கூடங்களைப் பொறுத்த வரையில், 'கேர்' நிறுவனத்தின் ஆதரவோடு இப்பொழுது செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் 96 மையங்கள் ஏற்பட்டிருக்கின்றன. படிப்படியாக ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் உதவி வருகிறார்கள். அடுத்து அடுத்து பல்வேறு மாவட்டங்களிலும் கொண்டுவரத் திட்டம் இருந்து வருகிறது. 'கேர்' நிறுவனம் எத்தனை மையங்களை நிறுவுவதற்கு உதவி அளிக்கிறதோ அந்த அளவுக்குத்தான் நாம் விரிவுபடுத்திக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது.



அடுத்து, தஞ்சை—இப்படி வரிசையாக எல்லா ஒன்றியங்
களிலும் செய்வது என்ற முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
'கேர்' நிறுவனம் தொடர்ந்து உதவி செய்யுமா என்று இடையில்
சந்தேகம் இருந்தது. இப்பொழுது அந்த சந்தேகம் போக்கப்
பட்டு தொடர்ந்து 'கேர்' நிறுவனத்தின் ஆதரவு வரும் என்று
கூறப்படுகிறது. 'கேர்' நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு ஆறு கோடி
ரூபாய் பெறுமானமுள்ள உணவு வகைகளைத் தந்து வருகிறார்கள்.

**திரு. ஆலடி அருணா :** தலைவரவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு ஆசிரியர்களைப் பயன்படுத்துவதால் கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டது. எனவே, கல்வியின் தரம் பாதிக்காத வகையில் நண்பகல் உணவுத் திட்டத்திற்கு ஆசிரியர்களைப் பயன்படுத்தாமல் அதற்கு தனி அலுவலர்கள் நியமித்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது ஆசிரியர்களை இந்த நண்பகல் உணவு நிதி வசூலுக்காகப் பயன்படுத்த வேண்டாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சமையலுக்கென்று தனி ஆள் வைத்துக்கொள்ள உத்தரவிடப் பட்டிருக்கிறது. ஆனால் அது சம்பந்தப்பட்ட கணக்குகளை வைத்துக்கொள்ளுதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை அந்தந்தப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, மேற்பார்வை பணிகளை மட்டுமே இப்போது தலைமை ஆசிரியர்கள் செய்கிறார்கள்.

### பாரதியாரின் கையெழுத்துப் பிரதிகள்

* 54 வினா—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார் பிறந்த இல்லத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பாரதியின் கையெழுத்துப் பிரதிகள் சென்னை மியூசியத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) அவற்றைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நவீன விஞ்ஞான சாதனங்கள் எட்டயபுரத்தில் இல்லாததால், அவை பழுதடையக் கூடும். மேலும் அவை சென்னை அருங்காட்சியகத்தில் இருந்தால் அருங்காட்சியகத்தில் உள்ள நவீன சாதனங்களால் அவற்றை நன்முறையில் காப்பாக வைக்கலாம். ஆராய்ச்சியாளர்களும் மற்றவர்களும் அவற்றை சுலபமாக பார்க்க இயலும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, மகா கவி பாரதியாருடைய இல்லத்தை அரசு எடுத்து, பொது மக்கள் பார்வைக்காக வைத்திருக்கிறது. அங்கே பாரதியாருடைய நூல்களை எல்லாம் பார்வைக்காக வைத்திருந்தார்கள்; இப்போது இல்லை. அவருடைய கையெழுத்துப் பிரதிகளும் அங்கே இல்லை. அங்கே வெளிநாட்டுக்காரர்கள் எல்லாம் கூட வந்து, அந்த இல்லத்தையும், பாரதியாருடைய நூல்களையும், கையெழுத்துப் பிரதிகளையும் பார்வையிட்டுச் செல்ல முன்பிருந்த வசதிகளைப்போல் மீண்டும் சகல வசதிகளையும் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே பாரதியாருடைய நினைவு கூடத்தில் கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. அவை 12 தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வெயில், மழைக்கு இடம் கொடுப்பதாக இருந்ததால் அந்த கையெழுத்துப் பிரதிகளில் இங்க் மறைந்துவிடும் நிலைமை ஏற்படாமலிருக்க அவைகளை அருங்காட்சியகத்துக்குக் கொண்டு வந்து, நவீன விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக அவை வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த கையெழுத்துப் பிரதிகளின் 'ஃபோட்டோ காப்பி' எடுத்து அவைகளை பாரதியார் நினைவு கூடத்தில் வைக்கும் ஏற்பாடு இருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, தேசிய கவி பாரதி எழுதிய பல கவிதைகள் இன்னும் காணப்படாமல் இருக்கின்றன. அவற்றை எல்லாம் கண்டுபிடிக்க அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எங்கே இருக்கிறது என்று சொன்னால் தேடிக் கண்டுபிடிக்கலாம், காணப்படாமல் இருப்பவைகளை எப்படிக் கண்டுபிடிப்பது ?



யாரிடமாவது இதுவரையில் வெளியிடப்படாமல் இருந்தால் அதை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. அரசின் வெளியீட்டுக் கழகத்தின் மூலமாகக் கூட அதை வெளியிடலாம்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** தலைவரவர்களே, பாரதியார் இல்லத்திற்குப் போகக் கூடிய வழி, மழைக் காலத்தில் சரியாக இல்லை. அந்த நகராட்சியால் அந்த பாதையை செப்பனிட தேவையான நிதி வசதி இல்லை. ஆகவே, அதற்கு தனி முயற்சி செய்து, அந்தப் பாதையை செப்பனிட அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய தகவல் இல்லை. அதுபற்றிய முழு நிலைமைகளையும் பார்த்த பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படும். அதன் பிறகுதான் ஊராட்சி மன்றம் செப்பனிடுவதா, பெருவழித் துறை செப்பனிடுவதா அல்லது தொல்பொருள் ஆராய்ச்சித் துறை செப்பனிடுவதா என்பது பற்றி கவனிக்கப்படும். பொதுவாக எட்டயபுரத்தில் மழை அவ்வளவாக இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, மகா கவி பாரதியாருடைய ஒருசில நூல்கள் பாண்டிச்சேரி அரசிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக பாண்டிச்சேரி அரசுடன் தொடர்பு கொண்டு, அந்த நூல்களைப் பெற்று, வெளியிட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய தகவல் இல்லை. அவர்களிடம் இருப்பதாகத் தெரிந்தால் அதைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். பலரும் பாரதியாருடைய கவிதைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் தொகுத்து வைக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. வெளியிடப்படாத நூல்கள் யாரிடம் இருந்தாலும் அவைகளை வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:** தலைவரவர்களே, காலஞ் சென்ற மகாகவி பாரதியாருடைய குடும்பத்தினருக்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது நிதி உதவி அளிக்கப்பட்டதா அல்லது அளிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. ஆனால் அவர் பிறந்த வீட்டை அரசாங்கம் எடுத்து, அதை நினைவு கூடமாக ஆக்கியிருக்கிறது.

### எண்ணூரை சுற்றுலா மையமாக மேம்படுத்தல்

*55 வினு—**திரு. மா. வெ. நாராயணசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூர் கத்திவாக்கம் முகத்துவாரம் பகுதியை சுற்றுலா வளர்ச்சிக்கேற்ற இடமாகக் கருதி அதை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** எண்ணூரை சுற்றுலா மகிழ்விடமாக மேம்பாடு செய்வதற்கான செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் காரணங்களுக்காகக் கைவிடப்பட்டது.

(1) அந்தப்பகுதியில் மீனளம் சார்ந்த தொழில்களை வளர்ச்சியுறச் செய்வதற்கான செயற்குறிப்புகள் உள்ளன.

(2) இந்தப்பகுதியில் நாளுக்கு நாள் தொழிற்சாலைகள் பெருமளவில் தோன்றி வளர்ந்து வருகின்றன. அங்கு சுற்றுலா வளர்ச்சிக்கு வாய்ப்பு ஏதுமில்லை.

### *Neo-Natal Unit in Kasturba Gandhi Hospital.*

*56 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether any Neo-Natal Unit has been opened recently at the Madras Kasturba Gandhi Hospital; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.





(இ) சென்னையிலுள்ள அரசினர் கஸ்தூரிபா காந்தி மகளிர்-சிறார் மருத்துவமனையில் புதிய குழந்தை பராமரிப்புப் பிரிவு கட்டிடமொன்று (Neo Natal Unit Block) ரூ. 2 லட்சம் செலவில் கட்டப்பட்டது. இப்பிரிவிற்குத் தேவையான பணியாளர்களுக்கும் சாதனங்களுக்கும் ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. இப்பிரிவில் 50 குறைமாத பிரசவமான குழந்தைகளுக்கும், புதிய குழந்தைகளுக்கும் இடமிருக்கும்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, இப்பிரிவின் அவசியத்தை உணர்ந்து, மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் இதுபோன்ற பிரிவுகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, மாவட்ட மருத்துவ மனைகளிலும், வட்ட மருத்துவ மனைகளிலும் பேறுகால பகுதி கட்டுவது ஒவ்வொரு வகையில் நடைமுறைப் படுத்தப்படுகிறது. ஆனால் இது மிகச் சிறப்பாக குறை மாத குழந்தைகள் பராமரிப்புக்கு தனி வசதி வேண்டுமென்ற அடிப்படையில் தோன்றியதாகும்.

### சேலத்தில் மலேரியா ஒழிப்புத் திட்டம்

*57 வினு—**திரு. கி. செயராமன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் இவ்வாண்டில் சேலம் நகரத்தில் சம்பந்தப்பட்ட துறை மேற்கொண்டிருக்கும் திட்ட முறை என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** 14—11—1972 ஆம் நாள் முதல், சேலம் நகரில் நகர்ப்புற முறைக்காய்ச்சல் நோய் ஒழிப்புத் திட்டம் நகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. செலவுத் தொகைக்கு இது மைய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும்.

[1974 டிசம்பர் 16

**மருத்துவக் கல்லூரியில் சேர விண்ணப்பித்துக்கொண்டவர்கள்**

* 58 **வினா—திரு. ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரிக்கு 1973-74 ஆம் ஆண்டிற்கு விண்ணப்பம் செய்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(உ) பெண்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே,

(அ) மருத்துவக் கல்லூரிக்கு 1973-74-ம் ஆண்டிற்கு விண்ணப்பம் செய்தவர்கள் 6,599 பேர்கள்.

(இ) அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 605 பேர்கள்.

(உ) அவர்களில் பெண்கள் 2,214 பேர்கள்.

**பேறுகால உதவியாளர்கள் நியமனம்**

* 59 **வினா—திரு. டி. கணபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நம்முடைய மாநிலத்தில் பேறுகால உதவியாளர்கள் (Midwives) பற்றாக்குறை உள்ளதா?

(இ) ஆம் எனில், அவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**தூத்துக்குடியில் தேங்கி நிற்கும் உப்பு**

* 60 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் தற்போது உப்பு பெரும் அளவில் தேங்கிக் கிடப்பதாக சொல்லப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு உரிய காரணம் என்ன?



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) (இ) ஏப்ரல், மே திங்களில் ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்தாலும், கப்பல் போக்குவரத்து நிலைமையில் சற்று தாமதம் ஏற்பட்டதாலும் தூத்துக்குடியில் உப்பு சற்று தேங்கிக் கிடந்தது. ஆனால் தற்சமயம் நிலைமை திருப்திகரமாய் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தூத்துக்குடியில் உற்பத்தியாகும் உப்பு தற்போது எந்தெந்த மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தூத்துக்குடியில் தயாராகும் உப்பு உர உப்பாக மாறுதல் அடைந்து வெளிவராமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உப்புக்கும், உரத்திற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது என்று நினைக்கிறேன்.

**திருவண்ணாமலைப் பகுதியில் மென்னிரும்பு தொழிற்சாலை**

* 61 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை பகுதியில் "ஸ்பாஞ்ஜ் இரும்பு" தொழிற்சாலை ஒன்று துவக்க தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு விருப்பம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு மென்னிரும்பு தொழிற்சாலை அமைக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் ஒரு இசைவு கடிதத்தைப் பெற்றுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தத் தொழிற்சாலை எப்போது துவங்கப்படும்? தனியார் துறையிலா? பொதுத் துறையிலா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பொதுத்துறையில் துவங்க அனுமதி பெற்றிருக்கிறோம். ஆனால் இது சம்பந்தமாக தொழில் நுட்ப அறிவுபெறுவது பற்றிய பேச்சுவார்த்தை இருக்கிறது.

## Rubber Factory in Kanyakumari district

* 62 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are proposals under the consideration of the Government to start a rubber factory in Kanyakumari district?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், சைக்கிள் டயர் உற்பத்தி செய்யும் ஓர் ஆலையை நிறுவும் கருத்து அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** இந்த சைக்கிள் டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை தனியார் நடத்தப் போகிறார்களா? அல்லது அரசாங்கமே ஏற்று நடத்த இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலை நிறுவனம்.

**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை:** கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்த தனியார்களிடம் இருந்து விண்ணப்பம் வந்துள்ளதா? ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலை எந்தப் பகுதியில் இயங்கும், எவ்வளவு உற்பத்தித் திறன் இருக்கும் என்ற விவரங்கள் இருந்தால் அமைச்சர் தெரிவிப்பார்களா? அதை விரைவில் உருவாக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கன்னியாகுமரி மாவட்டம் என்றுதான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 26 லட்சம் ரூபாய் முதலீடு செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆண்டொன்றுக்கு 3 லட்சம் டயர் உற்பத்தி செய்ய முயற்சிக்கப் படுகிறது.





**திரு. வ. ஆர். மாரிமுத்து:** இதில் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சுமார் 68 பேர்களுக்கு.

**திரு. என். டென்னிஸ்:** அந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த நிறுவனத்திற்குப் பண வசதி கிடைத்தவுடன்.

## Evening classes for industrial workers.

* 63 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that evening classes are conducted for Industrial workers; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) கீழே குறிப்பிடப்பெற்றுள்ள தொழிற்பயிற்சிப் பள்ளி களில், தொழிலாளர்களுக்கு மாலைநேர வகுப்புகள் நடத்தப்படு கின்றன—

(1) வட சென்னையில் உள்ள தொழிற்பயிற்சிப் பள்ளி.

(2) தொழிற்பயிற்சிப் பள்ளி, கிண்டி.

(3) தொழிற்பயிற்சிப் பள்ளி, அம்பத்தூர்.

(4) தொழிற்பயிற்சிப் பள்ளி, கோயம்புத்தூர்.

(5) தொழிற்பயிற்சிப் பள்ளி, மதுரை.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த வகுப்புகளை நடத்த மத்திய சர்க்கார் எவ்வளவு உதவித்தொகை அளிக்கிறது? தொழிற்சாலை களில் வேலை செய்கிற எல்லோருக்குமே இந்த பயிற்சியை ஆங்காங்கு அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அங்கங்குள்ள வசதிகளைப் பொறுத்து கொடுக்கப்படுகிறது.

திரு. கோவை செழியன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இண்டஸ்ட்ரிஸ் மினிஸ்டராகவும் இருக்கிறார்; சட்ட அமைச்சராகவும் இருக்கிறார். பட்டக் கல்லூரிகளிலும் மாலைநேர வகுப்புகள் இருக்கின்றன. இவர்கள் வகுப்புக்குப் போகாமலேயே பரிட்சை எழுத ரூல்ஸை ரிலாக்ஸ் செய்வார்களா?

(பதில் இல்லை)

திரு. ப. சுப்பிரமணியம்: நமது மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு அவர்களுடைய ஸ்கில்லை அதிகப்படுத்தும் முறையில் வொகேஷனல் ட்ரெயினிங் கொடுக்கப் படுவதில்லை. அதுபோல கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது வொகேஷனல் ட்ரெயினிங் பற்றியது அல்ல. ஐ.டி.ஐ.-யில் தொழிற்பயிற்சி கொடுத்து, அவர்களுடைய க்வாலிபிகேஷனை அதிகப்படுத்திக் கொள்ள வசதி செய்வதுதான்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: தொழிற்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்கள் அவர்கள் எந்தெந்த வேலைகளைச் செய்கிறார்களோ அதிலே அவர்களுடைய ஸ்கில்லை அதிகப்படுத்தும் முறையில் பயிற்சி கொடுப்பதற்கு இங்கு ஏற்பாடு இல்லையா? இது அவர்கள் என்ன வேலையைத் தொழிற்சாலையில் செய்தாலும், இங்கே பொதுக் கல்வி என்ற முறையில் டிரேட் கல்வியில் பயிற்சி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது ஐ.டி.ஐ. யில் கொடுக்கப்படுகிற தொழில் கல்விதான். அவர்கள் என்ன டிரேட் செய்து வருகிறார்களோ அதில் அவர்கள் வேண்டுமானால் சேர்ந்து பயிற்சி பெறலாம்.

## தர்மபுரி மாவட்டத்தில் காடு வளர்ப்புத் திட்டம்

* 64 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் காடு வளர்ப்பதற்காக மத்திய அரசின் உதவியுடன் திட்டம் ஏதேனும் நிறைவேற்றப்பட்டு வருகிறதா?



(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) நான்காவது திட்ட காலத்தில், 1970-71 முதல் 1973-74 வரை மத்திய அரசு பொறுப்பேற்ற, வறட்சியால் பீடிக்கப்பட்ட பகுதிகளுக்கான திட்டத்தின்கீழ் காடுகள் வளர்ப்பதற்கான திட்டம் ஒன்று தர்மபுரி மாவட்டத்தில் செயல்பட்டது. இத் திட்டத்தில் 1,640 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. 1970-71 முதல் 1973-74 முடிய ரூ. 14.24 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து ஐந்தாவது திட்ட காலத்தில் தர்மபுரி மாவட்டத்தில் மத்திய அரசு பொறுப்பேற்று செயல்படுத்துவதற்கென தயாரிக்கப்பட்டு வரும் வறட்சியால் பீடிக்கப்பட்ட பகுதிகளுக்கான சிறப்பு வரைவுத் திட்டத்தில் காடுகள் வளர்ப்பதற்கான திட்டம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த காடு வளர்ப்புப் பணி தர்மபுரி மாவட்டத்தில் எந்த ஊரில் துவக்கப்பட்டிருக்கிறது? மத்திய அரசு எந்தெந்த வகையில் உதவி செய்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசு நிதி உதவி தருகிறது. எந்தெந்தப் பகுதி என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: வறண்ட பகுதிகளில் காடு வளர்ப்பது பற்றி இந்த ஸ்கீம் போடப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. என்ன மரம் வளர்க்கப்படுகிறது? என்ன வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கிராம நலக் காடுகள், விறகு மரக்காடுகள், காடுபடு சிறுபொருள், விரைவில் வரும் செம்மரம் ஆகியவை பயிரிடப்படுவதற்கான குறிப்பு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: காட்டுமரங்கள் அதிகமாக வெட்டப்படுவதன் காரணமாகத்தான் பருவமழையே பொய்த்து வருகிறது. வறட்சி அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதிக அளவில் காடுகளை வளர்ப்பதன் காரணமாக ஓரளவு வறட்சியைப் போக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நல்ல யோசனை. இருக்கிற நிலைமை காட்டுப் பகுதிகளைக் கூட பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்கிற கோரிக்கைதான். மாண்புமிகு உறுப்பினர் யோசனைக்கு எல்லாத் தரப்பு ஒத்துழைப்பும் கிடைத்தால் காடுகளை நல்லமுறையில் வளர்க்கலாம்.

**திரு. ஏ. ஆர் மாரிமுத்து :** காடு வளர்க்கும் திட்டத்தின் கீழ் தென்னை பயிரிடவும் யோசிக்கப்படுமா? காட்டுக்குக் காடாகவும், நல்ல வருவாய் தரக்கூடிய ஒன்றாகவும் இது இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபற்றி அரசு யோசிக்கும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** காடு வளர்க்கும் திட்டத்தின் கீழ் சந்தன மரம் வளர்க்கவும் ஏதாவது திட்டம் இருக்கிறதா? மத்திய அரசாங்கம் அதற்கு ஏதாவது மானியம் கொடுக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சந்தன மரங்கள் வளர்க்க நிதி உதவி கொடுக்கப்படுகிறது. அதுபற்றி வன இலாக்காவிடம் கேட்கவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** காடுகள் அழிக்கப்படுகிறபோது அந்த அளவுக்கு காடுகளை விருத்தி செய்கின்ற ஏற்பாடுகள் பல நாடுகளில் இருக்கிறதே. அதுபோல, எந்த அளவுக்கு பட்டா வழங்கப்பட்டதோ அந்த அளவுக்கு வேறு இடத்தில் காடுகளை வளர்க்க திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அது வன இலாக்கா அமைச்சரிடத்தில் போடவேண்டும். காடுகளை பட்டா கொடுத்து விட்டால் திரும்ப காடுகள் வளர்க்க இடம் வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 9-30)

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இந்தக் காடு வளர்க்கிற பகுதியைப் பொறுத்தவரையில், ஏதோ, அதற்காக அரசாங்கம் செலவழித்து, காடு வளர்க்கப்படுகிறது என்ற பொருள் தானே தவிர, அது சரியாகப் பராமரிப்பு, கண்காணிப்பு இல்லாத காரணத்தாலே, வளர்க்கப்பட்ட காடுகள் அழிந்து விடுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, காட்டு நிலங்கள் சரியாகத்தான் பராமரிக்கப்படுகின்றன. ஆனால், காட்டு நிலங்களைப் பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற நிலைதான் அதிகமாக இருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, தரைக் காடுகள் என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காடு வட ஆற்காடு மாவட்டத்திலிருக்கிறது. அந்தப் பகுதிகளையெல்லாம் விவசாயிகளுக்கு 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று பிரித்துக் கொடுத்து, காடுகளாகவே அவைகளை வளர்க்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, அவைகளைப் பிரித்துக் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** காட்டு நிலங்களை அரசாங்கம் கொடுக்காது.

### *Cess on cinema tickets*

* 65 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) whether the State Government have received any communication from the Centre during 1974 regarding imposition of cess on Cinema tickets in this State ; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், மத்திய சர்க்கார் செஸ் போட்டு தனியாகப் பணம் எடுப்பதாக இருந்தது. சென்ற பட்ஜெட்டின்போது, நமது அரசு கள்ளப் பணத்தை வெளியே எடுக்கிறேன் என்று ஷோ டாக்ஸை இன்கிரீஸ் பண்ணி, பிறகு அவர்களுக்கே சலுகை கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஷோ டாக்ஸை இன்கிரீஸ் பண்ணி, ஏற்கனவே தியேட்டர்கள், ஸ்டுடியோக்கள் இருப்பதால், தரமான படங்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, மூலக் கேள்வி மத்திய அரசு செஸ் விதிக்கவிருப்பதைப்பற்றி மாநில அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா என்பதைப் பற்றி. அப்படி விதித்திருப்பதாக மாநில அரசுக்குத் தகவல் இல்லை. ஆனால், சௌத் இந்தியன் பிலிம் சேம்பரில், அப்படி ஒரு திட்டம் போட்டால் ரூ. 10 கோடி கிடைக்கலாம் என்று மத்திய அமைச்சர் சொல்லியிருக்கிறார். மற்ற விவரங்கள் இந்த அரசிடம் இல்லை.

### *Winter allowance for Union staff in Hosur area*

* 56. Q.—THIRU B VENKATASWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to sanction winter allowance to the Panchayat Union Staff including teachers and clerks at Hosur and Denkanikottah taluks; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) மற்றும் (இ) அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டது போல, ஓசூர், தென்கனிக் கோட்டை வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் பேரூராட்சி ஊழியர்களுக்கு (ஆசிரியர்கள் உட்பட) குளிர்காலப் படி தருமாறு அரசு ஆணை எண் (பல்வகை) 2276/ஊ.வ.உ.ஆ. துறை, நாள் 22—10—1974-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

### ஆவரங்குப்பம்-திம்மாபேட்டை சாலையில் பாலம்

* 67 வினா—**திரு. ஜி. ராயசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆவரங்குப்பத்திலிருந்து திம்மாபேட்டைக்கு செல்லும் சாலையில் பாலாற்றின் குறுக்கே போம் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



### வராக நதியின் குறுக்கே பாலம்

* 68 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பெரியகுளம் ஒன்றியத்தைச் சேர்ந்த குள்ளப்புரத்தில் வராக நதியின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** உறுப்பினர் குறிப்பிடும் பால வேலை குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டாததினால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மேலும், தேனி, ஆண்டிப்பட்டி இப்படிப்பட்ட இடங்களிலிருந்து வண்டிகள் செல்லவேண்டியிருந் தாலும்கூட, 20 மைல் குறைவாகச் செல்ல முடியும் இந்தப் பாலம் இருந்தால். ஆகவே, இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டி முடிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கனம் உறுப்பினர் அவர்களே, இதே கேள்வியை வினா எண் 2053-ன்கீழ் முன்பு எழுப்பியுள்ளார். அவ்வினாவிற்கு ஏற்கனவே விடையளிக்கப்பட்டு விட்டது. இந்த வேலைத் திட்டத்திற்குச் சுமார் ரூ. 5 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பால வேலைகள், இதர சாலைகள் என்ற வேலையின்கீழ்தான் செயல்படுத்தப் பட வேண்டும். ஆனால் இந்தத் திட்டம் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், அமைச்சரவர்களுக்கே தெரியும், பெரியகுளம் தாலுகாவிலே, வராக நதியிலே பாலம் கட்டினால் போக்குவரத்துக்கு எவ்வளவு வசதி ஏற்படும் என்று. ஆகவே, அப்படிப்பட்ட வசதியான நிலையை உண்டாக்கக்கூடிய பாலத்திற்கு முதலிடம் கொடுத்து இந்த ஆண்டிலாவது ஆரம்பித்து, அடுத்த ஆண்டு முடிக்கக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தற்பொழுது அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு ரூ. 5 இலட்சம் செலவாகும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த ஆண்டு சேர்க்கப்படவில்லையென்று சொன்னார்கள். ஆனால், இந்த மாதிரி பல பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. தேவையில்லாத இடங்களிலெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன, செல்வாக்குள்ள அமைச்சர்களது பகுதிகளிலெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. அமைச்சரவர்கள் காட்டவேண்டுமென்று சொன்னால் நான் காட்டுகிறேன், தேவையில்லாத இடங்களிலிருப்பதை. இந்தப் பாலத்தை, அந்த வட்டாரத்து மக்கள் பல்லாண்டுகாலமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டாவது இந்தப் பாலம் நடைமுறைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நிதி நிலையைப் பொறுத்து அடுத்த ஆண்டு கவனிக்கலாம்.

## *Weights used by vegetable vendors*

* 69 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken by the Government to see that false weights are not used by the vegetable vendors?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** எடைகள்-அளவைகள் ஆய்வாளர்கள், காய்கறி வியாபாரிகள் வியாபாரம் செய்யுமிடத்தைப் பார்வையிட்டு, 1958-ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம், அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றை ஒட்டி காய்கறி வியாபாரிகள் தங்களது எடைகளையும், அளவைகளையும் எடைபோடும் கருவிகளையும்; அளக்கும் கருவிகளையும் 12 திங்கள்கட்கு ஒருமுறை அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை சரிபார்க்கிறார்களா அல்லது மீண்டும் சரி பார்க்கிறார்களா என்பதை உறுதி செய்து கொள்கிறார்கள். குறைவாக எடைபோடுதல்/அளவிடுதல், மோசடியான எடைக் கருவிகளையும், அளவைக் கருவிகளையும் பயன்படுத்தல் போன்ற முறைகேடுகளைத் தவிர்க்கும் பொருட்டு, தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்களும், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களும்





திடீர் ஆய்வுகளையும் மேற்கொள்கின்றனர். மேலும், எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் கட்டளைக்கிணங்க, ஆய்வாளர்கள் கூட்டாகத் திடீர்ச் சோதனைகளையும் நடத்துகிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்த எடை-அளவு தராசுகளை ஆண்டிற்கொருமுறை புதுப்பிக்கவேண்டு மென்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால், ஆண்டிற்கொரு முறை புதுப்பிக்காமல், ஒரு மாதம், 2 மாதம் கழித்து புதுப்பிக்கப் போனால், புதிய தராசுதான் வாங்கவேண்டும், பழைய தராசுக்கு நாங்கள் சம்மதிக்க மாட்டோம், சென்னையிலிருக்கிற அதிகாரிகளிடத்தில்தான் செல்லவேண்டுமென்று சொல்கிறார்கள். கால தாமதம் ஆவதாலே, தராசிலே கோளாறு வந்துவிடாது. ஆனால், புதிதாக வாங்கி வைத்தால், சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறார்களே, அது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பழைய தராசுகள் சரியாக இருந்தால், அங்கேயே வைக்கிற நிலைமை கஞக்குத்தான் ஆணையிடப்பட்டிருக்கிறது. சரியாக இல்லாத தராசுகளை நீக்கத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, இந்த அளவு முறைகள், சாமான்கள் ஆய்வாளர்கள் பெரிய நகரங்களில் மாத்திரமே இருக்கிறார்கள். ஆகவே, சிறிய காய்கறி வியாபாரிகளைப் போன்றவர்கள், ஆண்டுக் கணக்குப் பிரகாரம் அவர்களிடம் சென்று, அதற்குரிய புதிய முத்திரைகளைப் போடமுடியவில்லை. திடீரென்று சர்ப்ரைஸ் செக் பண்ணி, கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பேரூராட்சி மன்றங்கள் போன்ற இடங்களிலே, ஒரு குறிப்பிட்ட தேதியிலே, ஒரு குறிப்பிட்ட இடத்திலே அதிகாரிகள் வருவார்கள் என்று முன்னறிவிப்பு செய்து, மக்களுக்குத் தெரியப்படுத்தி, அந்தப் புதிய முத்திரை போட்டுத் தரக்கூடிய ஒரு திட்டத்தை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அநேகமாக, நியாயமாக நடக்கிற வியாபாரிகளுக்கு இந்த அதிகாரிகள் யாரும் தொல்லை தருவதாக இதுவரையிலே புகார் எதுவும் எனக்கு

வரவில்லை. ஆனால், சென்னையிலேயும், மற்ற இடங்களிலேயும் பாமர மக்களை ஏமாற்றுகிற தன்மையில் இருக்கிறவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. முன்னாலேயே அறிவித்துவிட்டு, அங்கே போனால், வியாபாரமே நடக்காது. ஆகவே, தவறுகளைத் தவிர்ப்பதற்கென இம்மாதிரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, எடைகள் அளவைகள் அதிகாரிகள் ஆய்வு செய்த பின்னாலே—லிட்டர் படியாக இருந்தால் புளியை அடியிலே வைத்து அடைத்துக்கொள்வதும், அல்லது தராசாக இருந்தால் முள்ளை சாய்த்து வைத்துக்கொள்வது போன்றவைகளும் இன்றையதினம் வியாபாரிகள் மத்தியில் நடக்கிறது. அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** முடிந்த அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொழிலாளர் சத்துணவுத் திட்டம்.

* 70 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம் எத்தனை தொழிற்சாலைகளில் செயல்படுத்தப்படுகின்றது ?

(இ) இன்னும் இத் திட்டம் செயல்படுத்தப்படாத தொழிற் சாலைகளில் இதை அமுல்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) 108 தொழில் நிறுவனங்களில், தொழிலாளர் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் 31,035 பேர் பயனடைகின்றனர்.



(இ) இத் திட்டத்தின்கீழ் பயன் அடைபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் தற்போது இத் திட்டம் பொருந்தாத ஏனைய தொழில் நிறுவனங்களுக்கு இத் திட்டத்தை விரிவுபடுத்தவும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன :—

(1) இத் திட்டத்தின்கீழ் பயன் அடையத் தகுதியுடைய அனைவருக்கும் இத் திட்டத்தின் பயனை அளிக்கும் வகையில், பயன் அடைபவர்களின் எண்ணிக்கையை உயர்த்த, தற்போது இதில் பங்கு கொள்ளும் நிறுவனங்கள் அனைத்தும் கேட்டுக்கொள்ளப் பட்டன.

(2) இத்திட்டத்தைக் கைவிட்டுள்ள தொழிற்சாலைகள் சில, இத் திட்டத்தை மீண்டும் தொடங்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

(3) தனியார் துறைகளில் உள்ள மேலும் பல தொழிற் சாலைகளும், மலைத்தோட்டங்களும் இத் திட்டத்தின்கீழ் வருமாறு பார்த்துக்கொள்வதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இத் துறையிலுள்ள ஆய்வாளர்களுக்குக் கட்டளை யிடப்பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே 108
தமிழ்நாட்டிலேதான் இந்தச் சீரிய திட்டம் துவங்கப்பட்டு
தொழிற்சாலைகளிலே அமுல்படுத்தப்படுகிறது. இப்பொழுது
அமெரிக்க நாட்டுடன் மறுபடியும் சுமுகமான நல்லுறவு ஏற்பட்
டிருக்கிற இந்த நேரத்தில், 'கேர்' உதவியுடன் மேலும் எஞ்சியுள்ள
எல்லா தொழிற்சாலைகளுக்கும் இதை அமுல்படுத்த அரசு தீவிர
நடவடிக்கை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, 'கேர்'
உதவி அதிகமாகக் கிடைக்குமானால் அதிகமான தொழிற்சாலை
களிலே நடைமுறைப்படுத்துவதற்கு அரசுக்கு எந்தவிதமான
ஆட்சேபனையும் இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்
கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு
இந்த சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவருகிற அதே நேரத்தில்
வறுமையின் கடைக் கோடியில் இருக்கின்ற விவசாயிகளுக்கும்
இந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா? அவர்
களால்தான் எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்படுகின்றன,

[1974 டிசம்பர் 16

எல்லாத் திட்டங்களையும் அவர்கள்தான் நிறைவேற்றக்கூடியவர்களாக இருக்கிறார்கள், குறிப்பாக அரிசன மக்கள் அதிகமாக அந்தத் தொழிலிலே ஈடுபடுகிறார்கள், ஆகவே அவர்களுக்கும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, கேர் நிறுவனத்தின் உதவியுடன் செய்யப்படுகிற இந்தத் திட்டத்திற்கான செலவுகளையெல்லாம் அரசு மேற்கொள்கிறது. இந்தத் திட்டம் அகில இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் நல்லமுறையிலே நடக்கிறது என்று அவர்களே சொல்கிறார்கள். ஆங்காங்கு இருக்கின்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும் கர்ப்பம் அடைந்துள்ள பெண்களுக்கும் இந்தத் திட்டம் பயனுள்ளதாக இருக்கிறது. இதை விரிவாக்குவது அமெரிக்க நாட்டின் உதவியைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** இந்தத் தொழிலாளர்களுக்கு சத்துணவு கொடுக்கிற திட்டம் நல்ல திட்டம்தான் இருந்தாலும் கூட சத்துணவு போன்று குறைந்த பட்ச உணவை உறுதிப்படுத்துகின்ற வகையிலே தொழிலாளர்களுக்கு உணவுகொடுக்க ஏதாவது வகை செய்து தனிப்பட்ட தொழிற்சாலையாக இருந்தாலும்சரி, அரசாங்கத் தொழிற்சாலையாக இருந்தாலும்சரி அதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் தனிப்பட்ட தொழிற்சாலைகளும் இந்தத் திட்டத்தைக் கைவிட்ட தொழிற்சாலைகளும் இந்த உதவியை மறுபடியும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் உதவிசெய்ய ஆக்கப்பூர்வமான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்த கேர் நிறுவனத்தார் தற்போது நடுப்பகல் உணவைக்கூட நிறுத்திவிடப்போவதாகக் கேள்விப்படுகிறோம். இந்த நிலையில் மேலும் அவர்கள் உதவுவார்கள் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும். தொழிற்சாலைகள் லாபத்திலே ஒரு பகுதியை இதற்காக ஒதுக்கி அந்தந்த முதலாளிகளே பொறுப்பேற்றுக்கொண்டு இந்தத் திட்டத்தை நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பெரிய தொழிற்சாலைகளில் இந்தத் திட்டம் இருந்துகொண்டிருக்கிறது. சிறிய தொழிற்சாலைகளுக்கு இந்தத் திட்டம் மிக உதவியாக இருக்கிறது. இந்தத் திட்டம் ஓரளவிற்குப் பயனுள்ளதாகவும் இருக்கிறது. பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு உதவிசெய்யக்கூடியதாகவும் இருக்கிறது. இதை நிறுத்தத் தேவையில்லை. இன்றைய பத்திரிகையிலேகூட அமெரிக்க அரசு கோதுமையைத் தரப்போவதாக செய்தி வந்திருக்கிறது. ஆகவே, நாம் எடுத்த இந்தக் காரியங்கள் செய்யப் படமுடியும் என்று எதிர்பார்க்கலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள் இவர்களில் போஷாக்குக் குறைவாக உள்ள தொழிலாளர்கள், வறிய நிலையிலே உள்ள தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மீண்டும், நான் ஏற்கெனவே சொன்னதைத்தான் சொல்லவேண்டும். கேர் நிறுவனத்தின் உதவியைப் பொறுத்துத்தான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அரசு மற்றச் செலவுகளை ஏற்றுக்கொண்டு செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே கேர் நிறுவனத்தின் உதவியைப் பொறுத்துத்தான் விஸ்தரிப்பதோ குறைப்பதோ இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி :** சார், பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லம் என்று வைத்திருக்கிறோம். அங்கே பெற்றுயுள்ளவர்களுக்கும் இந்த கேர் நிறுவனத்தின் உதவியைப் இந்தத் திட்டத்தின்மூலம் சத்துணவு வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் இருக்கிறவர்கள், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்திலே வருகிறவர்கள் ஆகியவர்களுக்கு எல்லாம் மாநில அரசே அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு ஏற்கனவே சத்துணவு வழங்கப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல் :** நான் ஏற்கனவே கேட்ட கேள்விக்கு அமைச்சரிடமிருந்து சரியான பதில் இல்லை. உழவுத் தொழிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தைக்

கொண்டுவரப்போகிறார்களா இல்லையா? அவர்களையும் தொழிலாளர்களாக இந்த அரசு கருதுகிறதா இல்லையா? அவர்கள் என்ன முதலாளிகளா? ஆண்டு ஒன்றுக்கு 150 நாள்தான் வேலை கிடைக்கிறது. மற்ற நாட்களில் வேலைகிடைக்கவில்லை. ஆகவே அவர்களுக்கும் இந்த சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா? இல்லையா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** விவசாயத் தொழிலாளர்களையும் இந்த அரசாங்கம் தொழிலாளர்கள் என்றுதான் கருது கிறது. அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் போக்கவும் அரசாங்கம் உதவிசெய்யவேண்டுமென்றுதான் கருதுகிறது. அதிலே சந்தேகம் இல்லை, ஆனால் சட்டியிலேதான் இல்லை, வேறு ஒன்றும் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், அமைச்சர் அவர்கள் பெரிய தொழிற்சாலைகளில் சத்துணவு கொடுக்கப்படுவதுபற்றிச் சொன்னார்கள், வடசென்னையிலேகூட கொடுக்கிறார்கள். அதேமாதிரி மற்றத் தொழிற்சாலைகளிலும் கொடுக்கும்படி அரசு ஏற்பாடு செய்யுமா? பெரியபெரிய நிலச்சுவான்தார்களிடம் பணியாற்றும் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நான் மீண்டும் மீண்டும் அதைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அங்கேயிருந்து வரக் கூடியதைப் பொறுத்துதான் விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. விஸ்தரிப்பதற்கு கேர் நிறுவனத்துடன் பேசித்தான் முடிவு எடுக்க முடியும்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, இன்னொருவர் கொடுக்கக் கூடிய உதவியை வைத்துக்கொண்டே இருக்கக்கூடிய திட்டமாக இது தொடர்ந்து இல்லாமல் நீண்ட காலத் திட்டமாக ஒரு திட்டத்தைப்போட்டு நாமே பிற்காலத்திலே அவர்களுக்குச் சத்துணவுக் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நல்ல யோசனை, அரசு ஆலோசிக்கலாம்.





## *Integrated Scheme for Child Welfare*

* 71 *Q.*—THIRU N. DENNIS: } Will the Hon
THIRU N. K. PALANISAMY: }

the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to introduce any integrated scheme for Child Welfare in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (அ) & (இ) ஆம். பள்ளி செல்லும் வயதடையாத பாலர்களுக்கான பணிகளை விரிவுபடுத்தும் ஒரு திட்டத்தின்கீழ் ஐந்தாவது திட்டக் காலத்தில், நாடு முழுவதிலும் கிராம, நகர, மலைப்பகுதிகளில் குழந்தை வளர்ப்பு ஒருங்கிணைப்புப் பணித்திட்டங்கள் 1,000 தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஒன்று உள்ளது. குழந்தை வளர்ப்பு ஒருங்கிணைப்புப் பணித்திட்டம் ஒவ்வொன்றிலும் குழந்தை காப்புக் நிலையங்கள் 100 அடங்கி இருக்கும். இந்தத் திட்டங்கள், 6 மாத குழந்தைகள் முதல் 5 வயதுக் குழந்தைகள் வரை அக்குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், சத்துணவு ஆகிய தேவைகளையும் சூலுற்ற பெண்டிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் சத்துணவு, சுகாதாரத் தேவைகளையும் நிறைவு செய்கின்றன. ஐந்தாவது திட்டக்காலத்தின் முதல் ஆண்டில், அதுபோன்ற 20 திட்டங்களை இம்மாநிலத்தில் தொடங்குவதற்கு தமிழ்நாடு அரசு, இந்திய அரசுக்குச் செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளது. இந்த 20 திட்டங்களுள், ஒரு திட்டத்தை மலைப்பகுதியிலும், 2 திட்டங்களை நகர்ப்பகுதிகளிலும் (மாநகர்) எஞ்சியுள்ள 17 திட்டங்களைக் கிராமப்பகுதிகளிலும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் முழுவதும் தற்போது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, எப்போது அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும்? எந்த எந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும் என்று அறியலாமா?

[1974 டிசம்பர் 16

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய அரசாங்கம் பொதுவாக இந்தியா பூராவுக்கும் 1,000 மையங்களைக் கொண்டே திட்டமாக விரிவுபடுத்த வேண்டுமென்று திட்டமிட்டு தமிழகத்தில் 10 மையங்களை கொண்ட திட்டங்களுக்கு ஒரு முன் திட்ட மதிப்பீட்டை அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டது. ஆனால் நம்முடைய மாநில அரசு, நம்முடைய மாநிலத்தின் மக்களின் நலன் கருதி அந்தத் துறையின் மூலம் 20 மையங்கள் அமைக்கப்படவேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவித்தது. மத்திய அரசாங்கம் அதை ஆய்வு செய்து தற்போது இருக்கிற பொருளாதாரச் சூழ்நிலையில் உடனடியாக நிறைவேற்றமுடியாது என்றும், முடிந்தால் 3, 4 மையங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கலாம் என்றும் துறையில் செயலாளர் மூலமாகத் தெரிவித்திருக்கிறது. பொதுவாக பள்ளி செல்லும் வயதடையாத பாலர்களுக்கான பணிகளை விரிவுபடுத்தும் ஒரு திட்டத்தின் கீழ் ஐந்தாவது திட்டக் காலத்தில் நாடு முழுவதிலும் நகர, கிராம, மலைப் பகுதிகளில் குழந்தை வளர்ப்பு ஒருங்கிணைப்புப் பணித்திட்டங்கள் 1,000 தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது. குழந்தை வளர்ப்பு ஒருங்கிணைப்பு பணித் திட்டம் ஒவ்வொன்றிலும் குழந்தை காப்பு நிலையங்கள் 100 அடங்கியிருக்கும். இந்தத் திட்டங்கள் 6 மாதக் குழந்தைகள் முதல் 5 வயதுக் குழந்தைகள் வரை அக்குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், சத்துணவு ஆகிய தேவைகளையும், சூலுற்ற பெண்கள் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் சத்துணவு சுகாதாரத் தேவைகளையும் நிறைவு செய்கின்றன. இருந்தாலும் இது ஆய்வில் மட்டும்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Loans from Dairy Development Department*

* 72 Q.—THIRU K. A. WAHAB : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) the quantum of loans issued by the Dairy Development Department in North Arcot district; and

(b) the number among them, that have become overdue?



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) 1970-71 முதல் 1973-74 வரை உள்ள கால அளவில் 182 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தம் ரூ. 19, 11, 175 கடன் வழங்கப்பட்டது. அந்தக் கால அளவில் தனிப்பட்டவர்கள் 159 பேருக்கு மொத்தம் ரூ. 5,07,000 கடன் வழங்கப்பட்டது.

(இ) ரூ. 4,10,686.11 மதிப்புள்ள 219 கடன்கள் காலம் கடந்த நிலுவையாகவுள்ளன.

* 73 Q.—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether the scheme for the grant of loans to Co-operative Milk Supply Societies for the purchase of milch animals is still being continued; and

(b) if so, the amount sanctioned therefor?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) துணைப்பதிவாளர்கள் (பால் பண்ணை) தத்தம் அதிகார வரம்புப் பகுதியில் உள்ள பல்வேறு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தொகைகளை அவை செயல்பட்ட நிலையையொட்டி முடிவு செய்வார்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்தக் காலம் கடந்த கடன்களை கூட்டுறவுச் சங்கங்களில் அதிகமாக வைத்திருக்கின்றனவா அல்லது தனியாரிடத்தில் அதிகமாக இருக்கிறதா? இவற்றையெல்லாம் உடனடியாக வசூல் செய்வதற்கு ஏதாவது தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, காலம் கடந்த கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களில்தான் அதிகமாக நிலுவையாக இருக்கிறது. 31—3—74 ஆம் தேதிப்படி சுமார் 11,64,438 ரூபாய் 31 காசு. 270 கடன்கள் நிலுவையாக இருக்கிறது. அவைகளை உடனடியாக வசூலிக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டதற்குப் பிறகு துணைப்பதிவாளர், வேலூர், நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, தற்பொழுது கறவை மாடுகளின் விலை அதிகமாக ஆகிவிட்டது. ஆகவே இந்தக் கடன் தொகையை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் அந்த யோசனை உள்ளது.

THIRU B. VEKATASWAMY : May I know from the Hon. Minister whether there is any comprehensie scheme to introduce Dairy Development Scheme in Dharmapuri district, particularly in Hosur taluk where there are great potentialities?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் சார்பில் தர்மபுரி மாவட்டம் ஏற்கனவே சேர்த்துக்கொள்ளப்பட்டு, தர்மபுரி மாவட்டத்தின் ஒரு பகுதியில் அதற்கான வேலைகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. தர்மபுரி மாவட்டம் பூராவிற்கும் விஸ்தரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இந்த கறவை மாடுகளுக்குக் கடன் வழங்குவதில் காலதாமதம் நிறைய ஆகிறது. ஆனால் அதே நேரத்தில் ரொம்பப் பிற்படுத்தப்பட்டவர்கள், ஆங்கப் பால் விற்பனையையே தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கிறவர்கள் பல விண்ணப்பங்களை போட்டும் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இப்படிப்பட்ட காலதாமதத்தை நீக்குவதற்கு அமைச்சரவர்கள் முயற்சியெடுத்துக் கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, மாடுகள் வாங்க கடன் விண்ணப்பம் செய்கின்றவர்கள் அத்தனை பேருக்கும் ஒரே சமயத்தில் கடன் கொடுக்க அரசாங்கத்தால் இயலாது. அங்கேயிருக்கும் கூட்டுறவு மத்திய வங்கிகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அவர்களுக்கு உடனடியாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம். அரசாங்கத்திலேயிருந்து ஒதுக்கும் நிதியை நல்ல முறையிலே நடைபெற்றுவரும் சங்கங்கள் அல்லது புதிதாகத் துவக்கப்படும் சங்கங்களுக்கு முதலாவதாக உதவுகிறோம். மற்ற உதவிகளையெல்லாம் அங்கிருக்கும் வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்கிறோம். எங்கே காலதாமதம் என்று தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.





**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கால்நடை வளர்ச்சிக்கேற்ற மண் என்னுடைய காங்கேயம் தொகுதியிலேதான் அதிகமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடனைப்பற்றிக் கேளுங்கள்.

**திரு. கோவை செழியன் :** கடனுக்குத்தான் சொல்கிறேன். இதைச்சொன்னால்தானே தெரியும், ஸ்ட்ரெஸ் பண்ணிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சென்னை நகரத்திற்கே என்னுடைய தொகுதியிலிருந்துதான் பாலும், வெண்ணெயும் வருகிறது. ஆகவே, காங்கேயம் தொகுதியில் கூட்டுறவு செக்டார் மூலம் உழவுநோக்கு தனிப்பட்ட விவசாயிகளுக்கும் லோன்களை நிறையத் திறந்து கொடுத்தால் இந்த வளர்ச்சி நிச்சயமாக நல்ல பலனைத் தரும். இதிலே பெரிய குறை என்னவென்றால் இப்பொழுது 'சீலிங் லெவல்' இல்லாமல் போய்விட்டது. ஆகவே, குறைந்தது 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் சீலிங் லெவலாவது என்று அரசாங்கம் ஒரு சட்டம் இயற்றினால் நல்ல பலன் கிடைக்கும். இதை அரசு கவனிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டப்படி பெரிய நிலச்சுவான்தார்களுக்கு ஆதாரமாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நிலச் சட்டத்தை மாற்றியிருக்கிறோம். மீண்டும் சலுகைகள் வேண்டுமென்று கேட்பது அவ்வளவு நல்லதாக இல்லை.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, என்னுடைய தொகுதியாகிய சீர்காழி தொகுதியில் அரிசன விவசாயத் தொழிலாளிகள் பணம் சேர்த்து கூட்டுறவு பால்பண்ணை வைத்து வருவதும், ஒன்றுதிரட்டி பாங்கில் பணம் கட்டி உடனடியாக அதை ஆராய்ந்து அந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதில் இந்த பால் பண்ணை வளர்ச்சித் துறைக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. உடனடியாக நாங்கள் பதிவு செய்து கொடுத்து விடுகிறோம். ஆனால் அரிசன நலத் துறை அதற்கு மானியம் வழங்குவதற்குப் போதுமான நிதி வசதியில்லாமல் அவ்வப்போது குறிப்பிட்ட சங்கங்களுக்கு, குறிப்பிட்ட அளவில் வழங்குகிறார்கள். ஆகவே, கால தாமதம் ஆகிறது.

[1974 டிசம்பர் 16

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, சிறந்த முறையிலே, இலாபகரமாக நடக்கும் கூட்டுறவு பால் வழங்கு சங்கங்களுக்கு அரசாங்கம் ஏதாவது தனி உதவி செய்யும் உத்தேசம் உள்ளதா ? அல்லது ஊக்கப்படுத்துவதற்கு ஏதாவது அதிக நிதி உதவி தர அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, நல்ல முறையிலே செயல்பட்டு வரும் சங்கங்களுக்கு பசு மாடுகளை அங்கே கொண்டு வந்த பால் கறப்பதற்கும் அலுவலகக் கட்ட ட்ங்கள் ஏற்படுத்தவும் இப்படிப்பட்ட வசதிகளுக்கெல்லாம் நல்ல முறையிலே நடைபெறும் சங்கங்களுக்கு நாம் கடன் கொடுப்ப தற்கு ஏற்பாடு செய்கிறோம். அப்படிப்பட்ட சில சலுகைகளை நாம் ஏற்கனவே செய்து வருகிறோம்.

**திரு. வி. பழனிவேல் :** தலைவரவர்களே, கறவை மாடுகளுக்குப் போடும் தீவனம் மிக மிக அதிகமாக விலையேறிவிட்டது. ஆகவே கறவை மாடுகள் வைத்திருப்பவர்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். எனவே பால் விலையைக் கூட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, அது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் உள்ளது.

### அரிசனக் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டிகள்

*** 74 வினா.—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சுத்தமாக வைத்திருக்கும் அரிசனக் குடியிருப்புகளுக்கு வானொலிப்பெட்டி ஏதேனும் நல இலாகா மூலம் வழங்கப்படு கிறதா ?

(இ) ஆம் எனில், தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை அரிசனக் குடியிருப்புகளுக்கு வானொலிப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** (அ) ஆம்.

(இ) 1,120



1974 டிசம்பர் 16]

* 75 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the grant towards the purchase of Radio-sets for the neatly maintained Harijan Colonies in the State has been enhanced; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** (அ) ஆம்.

(இ) தற்போது ஒவ்வொரு வட்டத்திலும் துப்புரவாகப் பராமரிக்கப்பட்டு வரும் அரிசனக் குடியிருப்புக்கு ரூ. 400 விலையுள்ள வானொலிப்பெட்டி ஒன்று வழங்கப்படுகிறது. இந்தத் தொகை ரூ. 400-ல் ரூ. 300 அரிசன சேம நிதியிலிருந்து உதவித் தொகையாகவும், எஞ்சிய ரூ. 100 சம்பந்தப்பட்ட அரிசனக் காலனி எந்த உள்ளாட்சி மன்றத்தின் அதிகார வரம்புக்குள் அமைந் துள்ளதோ அந்த மன்றத்தின் நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, நமது அரசு சுத்த மாக வைத்திருக்கும் அரிசனக் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்குகிறது. ஆனால் அந்த வானொலிப் பெட்டி அந்த அரிசனக் குடியிருப்புகளில் பயன்படுத்தப்படாமல் அங்கே யிருக்கும் சில பஞ்சாயத்துத் தலைவரவர்கள் வீட்டில் பயன்படுத்து வதாகச் சொல்லப்படுகிறதே, அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** பேரவைத் தலைவரவர் களே, இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். அரசாங்கம் அந்த வானொலிப் பெட்டிக்குள்ள தொகையான 400 ரூபாயில் 300 ரூபாய் கொடுக்கிறது. 100 ரூபாயை அந்தந்தப் பஞ்சாயத்தே ஏற்றுக் கொள்கிறது. அவரவர்கள் அவ்வப்பொழுது பழுதுபடும் நேரத்தில் பஞ்சாயத்து பொறுப்பேற்று அதைச் சரி செய்து கொடுக்கிறார்கள். ஏதோ ஓரிரு நாட்கள் அவர்கள் வீட்டில் இருக் கலாம். மேலும் இருக்க வேண்டிய இடம் சரியில்லாத நேரங் களில் அவர்கள் வீட்டில்தான் இருக்க வேண்டி வரும்.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட அரிசனக் குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் வானொலி பெட்டிகள் எந்த முறையிலே வழங்கப்படுகின்றன ? அதற்கு ஏதாவது குழு வைத்துத் தேர்ந்தெடுக்கிறார்களா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, குழுக்கள் அலுவலர்களால் இவை தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தக் குழுக்கள் எப்படி இருக்கின்றன என்றால் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ளவர்கள் அங்குள்ள காலனிகளைப் பார்வையிட்டு தெருக்கள் சுத்தமாக இருக்கிறதா, பள்ளிக்கூடம் சுத்தமாக இருக்கிறதா, பிள்ளைகள் சுத்தமாக இருக்கிறார்களா என்று எல்லாவற்றையும் சுத்தங்களையும் பார்த்து, சுத்தத்திற்குரிய இடம் என்று சில இடங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதிலே அதிகப்படியான தகுதிகளைக் கொண்ட சுத்தம் கொண்டதாக இருக்கின்றவற்றிற்கு முதலிடம் கொடுத்துக் கொடுக்கிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அரிசனக் குடியிருப்புக் காலனிகளுக்கு வழங்கப்படும் வானொலியைப் பராமரிக்கின்ற பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப் படுகிறது. அப்படி ஒப்படைக்கப்படுவதில் சில பல நேரங்களில் பழுதுபார்க்கப்படாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே பராமரிக்கும் பொறுப்பை அரிசன நலத் துறையே எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்துக் கொள்ளலாம், ஒன்றும் சிரமமில்லை. ஆனால் வானொலிப்பெட்டி எங்கே இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஊராட்சியிலே, எல்லைப் பகுதியிலே இருக்கிறது. அதை அரசாங்கத்திற்கு எழுதி, வெல்ஃபேர் ஆபீசருக்குச் சொல்லி, அரசாங்கத்திற்கு வந்து, பிறகு ரிப்பேர் செய்வதற்குள் பெட்டியின் உருவமே போய்விடும். ஆகவேதான் இந்த ஏற்பாட்டைச் செய்கிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, நம்முடைய அரசு அரிசன வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தி அரிசனங்களுக்குக் குடியிருப்புகள் அமைத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நல்ல சுத்தமான குடியிருப்புகளாக இருப்பதால் அந்தக் குடியிருப்புகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது புதிதாகக் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளுக்கு அதைக் கொடுக்கலாம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் சட்ட முன்வடிவு.

**தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காம் திருத்த சட்ட முன்வடிவு.**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காம் திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறி முகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## 3. 1974-75-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இரண்டாம் துணை மதிப்பீடுகள்—அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1974-75-ம் ஆண்டுக்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 13.43 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின்

ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 11.11 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளிலும் சேரும்.

2. இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப் பணிகள், வேலைத் திட்டங்கள் குறித்துச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

3. குடும்பப் பாதுகாப்பு நிதிக்காக அரசு அலுவலாளர்கள் திங்கள்தோறும் இதுவரை செலுத்தி வந்த 10 ரூபாய் பங்குத் தொகை, மறு அறிவிப்பு செய்யப்படும் வரை, விலைவாசி உயர்வை முன்னிட்டு, 1974 அக்டோபர் 1-ந்தேதி முதல் அரசால் நேரடியாகக் கொடுக்கப்படுமென அரசு அறிவித்துள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 4.08 கோடி ரூபாய் செலவாகும். முதற்கண் செலவு செய்வதற்காக, முன்பணமாக 68 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது 11 ஆவது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே, உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும், மானியம் பெறும் கல்விக் கூடங்களிலும் உள்ள ஆசிரியப் பணியாளர்களும் பிற பணியாளர் களும் திங்கள்தோறும் செலுத்தத்தக்க 10 ரூபாய் பங்குத் தொகையை அரசே ஈடு செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆண்டு முழுவதற்குமான செலவுத் தொகையான 1.18 கோடி ரூபாய், 17 ஆவது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகளுக்கும் பணியாளர் களுக்கும் வழங்கி வரும் மதிப்பூதியத்தை 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ந்தேதி முதல், திங்களுக்கு 10 ரூபாய் உயர்த்திக் கொடுக்கவும் 11 ஆவது மானியக் கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஆண்டுதோறும் 40 இலட்சம் ரூபாய் செலவாகும்.

4. சமூக நலத் திட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்திடும் நற்பணியில் தமிழக அரசு என்றுமே முன்னணியில் இருந்து வருகிறது. இப்போது 1974 ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இவ்வரசு செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. தமிழ்நாட்டுப் பொதுமக்களின் நன்மைக்காக, குறிப்பாகக் குறைந்த வருமானமுள்ளோரின், சொந்தத் தொழில்





நடத்துவோரின் நன்மைக்காகவே இத்திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. ஒருவர் வேலை செய்து சம்பாதிக்கும் காலத்தில் சிறு தொகை ஒன்றை திங்கள்தோறும் செலுத்தி வந்தால், அதன்பின் கணிசமான தொகை ஓய்வூதியமாக அவருக்கு 30 ஆண்டுக் காலம் மாதாமாதம் கிடைக்கும். அந்த 30 ஆண்டுகளுக்குப் பின், மொத்தத் தொகை ஒன்றும் அவருக்குக் கூடுதலாகக் கிடைக்கும். இத்திட்டத்துக்குப் பரவலான வரவேற்பு கிடைத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் அறிவர். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆகும் பணியாளர் செலவுக்கும், பிற செலவுகளுக்கும் இரண்டாவது துணை மதிப்பீட்டில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை 9 ஆவது மானியக் கோரிக்கையில் சேர்க்கப் பட்டுள்ளது.

5. உடல் ஊனமுற்றவர்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களும் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன : சக்கர நாற்காலிகள், மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்குதல் ; தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் அலுவலகவியல் பயிற்சி வகுப்புத் தொடங்குதல்; அரசுத் துறைகள், கழகங்களில் பயிற்சி அளித்தல் ; தையல் தொழிலில் பயிற்சி அளித்தல் ; உடல் ஊனமுற்று, கைவிடப்பட்டு 55 வயதும் அதற்கு மேற்பட்ட வயது அடைந்த முதியோர்களுக்கு, முதியோர் உதவித் தொகை வழங்குதல் ஆகியன. இவற்றுக்காக இந்த ஆண்டு மொத்தச் செலவு 46.48 இலட்சம் ரூபாய் ஆகும். 9 ஆவது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தொகை, உடல் ஊனமுற்றவர்களுக்கான முதலமைச்சர் நிதியிலிருந்து திருப்பிக் கொடுக்கப்படும்.

6. அரிசன வீட்டு வசதிக் கழகம் மாநிலம் முழுவதிலும் அரிசனங்களுக்கு 10,000 வீடுகள் கட்டித் தருதல் என்னும் முதலாவது கட்டத்தை விரைவில் முடித்துவிடும். அரசு இத்தக் கழகத்திற்கு 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 1 கோடி ரூபாய் பங்குத் தொகை வழங்கியது. 1974–75 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் 1 கோடி ரூபாய் பங்குத் தொகை ஒதுக்கப்பட்டது. இவற்றுக்குக் கூடுதலாக 1 கோடி ரூபாய் மானியம் வழங்க 30 ஆவது மானியக் கோரிக்கையில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 16

தொகை சேர்க்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்கான அரசினர் மாணவர் இல்லங்களில் தங்கியிருக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதமொன்றுக்குக் கூடுதலாக ஐந்து ரூபாய் வழங்க அரசு அனுமதித்துள்ளது என்பதை அறிய இம்மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி கொள்வர். இந்த உயர்வினால் இந்த ஆண்டு ஆகும் செலவு 27.65 இலட்சம் ரூபாய் ஆகும். மேலும் அரிசன மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக மாணவரது பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பை 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். அவ்வாறே பிற்படுத்தப்பட்டோர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவரது பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமான வரம்பை 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தியுள்ளோம். இதற்காக ஏற்பட்டுள்ள செலவுக்கு வேண்டிய தொகையும் இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்காகும் மொத்தச் செலவு இந்த ஆண்டில் 36.57 இலட்சம் ரூபாய் ஆகும்.

7. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், தொடக்கச் சங்களும், கைத்தறித் துணிகள் விற்பனையில் வழங்கிய தள்ளுபடித் தொகைகளை ஈடு கட்டும் பொருட்டு, அரசு, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்கெனவே ஒதுக்கியிருந்த 1.3 கோடி ரூபாயை 2 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது. கூடுதல் செலவான 70 இலட்சம் ரூபாய்க்கு 26 ஆவது மானியக் கோரிக்கையில் இம்மன்றத்தின் ஒப்பளிப்பு வேண்டப்படுகிறது.

8. நடப்பு ஆண்டில் 26 தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்துவதென முடிவு செய்துள்ளோம். ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையங்களும் இவற்றில் அடங்கும். இத்திட்டத்தின் முதல் கட்டச் செலவிற்காக, முதலாவது துணை மதிப்பீட்டில் 7.22 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் பொருட்டு மேற்கொண்டும் செலவு செய்வதற்காக 16 ஆவது மானியக் கோரிக்கையின் கீழ் 26.63 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.



1974 டிசம்பர் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

9. நண்பகல் உணவுத் திட்டத்திற்கு அரசின் உதவித் தொகை, மாணவர் ஒருவர்க்கு ஒரு வேளை உணவுக்கு 6 காசு என வரையறுக்கப்பட்டிருந்தது. விலைவாசிகள் உயர்ந்துள்ளதை யொட்டி, 1974 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல், அரசின் உதவித் தொகையை மாணவர் ஒருவர்க்கு ஒரு வேளை உணவுக்கு 10 காசு என உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதன் மூலம் 18 இலட்சம் மாணவர் பயன் பெறுவர். நடப்பாண்டில் இதற்கு 59 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும். ஓராண்டில் இதற்கு 1.17 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இதற்கு 17 ஆவது மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு வேண்டப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் காணலாம்.

10. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள, 100 எக்கருக்குக் குறைவான ஆயக்கட்டுடன் கூடிய சிறு பாசன வாயில்களையும் 100 ஏக்கருக்கு மேற்பட்ட ஆயக்கட்டை உடைய பொதுப் பணித் துறைப் பாசன ஏரிகளையும் மேம்படுத்துவதற்காக மொத்தம் 3 கோடி ரூபாய் செலவில், சிறு பாசன முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த, அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 35 ஆவது மானியக் கோரிக்கையின் கீழ், இந்த ஆண்டு 1.75 கோடி ரூபாய் இதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. காளிங்கராயன் கால்வாயை நடுத்தரப் பாசனத் திட்டமாகக் கருதி அதனை சீரமைப்பதற்கான 60 இலட்சம் ரூபாய் திட்டத்திற்கு 50 ஆவது மானியக் கோரிக்கையின் கீழ் ஏற்பளிப்பைப் பெற அரசு விழைகிறது.

11. கோடை காலத்தில் நீர் இருப்பு குறைந்துபோனதை ஒட்டி சென்னை மாநகரில் கிணறுகளையும் குழாய்க் கிணறுகளையும் அமைத்த செலவுக்காக சென்னை மாநகராட்சிக்குக் கொடுப்பதற்கான 10 இலட்சம் ரூபாயும், துணை மதிப்பீட்டில் அடங்கும்.

12. முதல் துணை மதிப்பீட்டை முன் வைத்துப் பேசுங்கால் நான் குறிப்பிட்டதைப் போல், 1,500-க்குக் குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு 11.94 கோடி ரூபாய் மொத்தச் செலவில் இணைப்புச் சாலைகளைப் போடுவதற்கான திட்டம் ஒன்றை

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 16

அரசு வகுத்துள்ளது. தற்போதைய துணை மதிப்பீட்டின் 38 ஆவது மானியக் கோரிக்கையில் நடப்பு ஆண்டு நிதி ஒதுக்கமான 1 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

13. 1.19 கோடி ரூபாய் செலவிலான சாலைப் பணிகள் குறித்த நிதி ஒதுக்கமும் இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தச் செலவுத் தொகை, இறுதியாக, மத்தியச் சாலை நிதியிலிருந்து பெறப்படும்.

14. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அதன் திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியதற்கு மேலாக மானியம் வழங்க சட்ட மன்றத்தின் ஏற்பளிப்பைப் பெறுவதற்காக 42 ஆவது மானியக் கோரிக்கையில் 1.79 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

15. காவல் துறையைப் நவீனப்படுத்துவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு காவல் துறை வானொலி அமைப்பில் நுண் அலை முறையைக் கொண்டு வருவதற்காக 1 கோடி ரூபாய் செலவிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டத்திற்காகும் செலவு, சில ஆண்டுகளில் மத்திய அரசால் திருப்பித் தரப்படும். நடப்பாண்டுச் செலவு, வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்திலிருந்து செய்யப்படும். 15 ஆவது மானியக் கோரிக்கையில் அடையாள நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம் சட்ட மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

16. மீன்பிடி படகுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 48 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், விசைப் படகுகள் கட்டும் செலவில், 15 சதவீதத் தொகையாக தமிழ்நாடு மீனள வளர்ச்சி நிறுவனத்திற்கு 34.37 இலட்சம் ரூபாய் அரசு வழங்குகிறது. படகுகள் கட்டுவதற்கு வேண்டிய எஞ்சிய தொகை வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படும். இந்தத் தொகைகள் முறையே 21 ஆவது மானியக் கோரிக்கையிலும், 56 ஆவது மானியக் கோரிக்கையிலும் சேர்க்கப்பட்டுள்ளன.



1974 டிசம்பர் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

17. வேலூர், திருப்பத்தூர், கோயம்புத்தூர் சர்க்கரை ஆலைகளின் பங்கு முதலீடு செய்வதற்காக 1.75 கோடி ரூபாய் செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 55 ஆவது மானியக் கோரிக்கையின் கீழ் இதற்காக சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் கோரப்படுகிறது.

18. அரசின் பல்வேறு நிறுவனங்களுக்குப் பங்கு மூலதனம், கடன், உதவித் தொகை என்னும் வடிவில் வழங்கப்பட்டுள்ள விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

தமிழ்நாடு கோழியின வளர்ச்சி நிறுவனம்—15 இலட்சம் ரூபாய்.

தமிழ்நாடு கரும்புப் பண்ணை நிறுவனம்—25 இலட்சம் ரூபாய்.

தமிழ்நாடு வனத்தோட்ட நிறுவனம்—30 இலட்சம் ரூபாய்.

19. போக்குவரத்துக் கழகங்களுக்கு 1.69 கோடி ரூபாய் வழங்கியது, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு 50 இலட்சம் ரூபாய் வழங்கியது உட்பட, பல்வேறு நிறுவனங்களுக்கு 2.74 கோடி ரூபாய் அளவுக்கு வழிவகை முன்பணம் வழங்கப்பட்டது. இத்தொகைகளும் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

20. துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கியக் கூறுகள் பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் முன் வைக்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகள் இவை குறித்தும் ஏனைய இனங்கள் குறித்தும் மேற்கொண்டு விவரங்களை அளிக்கும். 1974-75-க்கான துணை மானியக் கோரிக்கைகளை இந்த அவை ஏற்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன். [ஆரவாரம்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் பேரவைத் தலைவரின் அறையில் 11 மணிக்கு நடைபெறும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(4) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்**—தொடர்ச்சி.

**திரு. பெ. சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டு வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையொட்டி என்னுடைய கருத்துக்களை நான் இங்கு எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இங்கு பேசிய எதிர்கட்சியைச் சார்ந்த நண்பர்கள் இந்தக் கட்சியின் போக்கு சாமான்ய மக்களை விட்டு சீமான்களின் பக்கம் எப்போதோ போய்விட்டது என்பதைப் பல்வேறு ஆதாரங்கள் மூலம் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

இன்று ஆட்சியில் இருக்கிற மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இங்கிருக்கிற தன்னுடைய மெஜாரிட்டியை 1971 இல் இன்று ஆளும் கட்சியாக இருக்கிற நிராகரிக்க முடியும். ஆனால் இந்த ஆட்சியை, இங்கிருக்கிற மெஜாரிட்டியை, 1971 இல் இன்று ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் செல்வாக்கை உருவாக்கித் தந்து சென்றவர் காலஞ் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களாவார்கள் என்பதை நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் மறுக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அண்ணா அவர்கள் இந்த நாட்டில் ஒரு புதிய எழுச்சியை ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கினார்கள் என்ற காரணத்தினால்தான் 1967 இல் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை ஆண்டு எந்த சக்கரவர்த்திகள் போன்றிருந்த காங்கிரஸ் தலைவர்களை மக்கள் தோற்கடித்து அண்ணா அவர்களின் கரங்களில் இந்த நாட்டை ஒப்படைத்தார்கள். அண்ணா அவர்களது மறைவுக்குப் பின்னர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால் எந்த நோக்கத்தை அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்களோ, எந்தப் பாதையில் அண்ணா அவர்கள் ஆட்சியை நடத்திச் சென்றார்களோ அந்தப் பாதையின் நோக்கம், பயணம் மாறியது என்பதை நான் மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அறிஞர் அண்ணா





அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் அடிப்படைப் பிரச்னை உணவுப் பிரச்னை, பெரும்பான்மை மக்கள் விவசாய மக்கள், பெரும்பான்மையான மக்கள் விவசாயம் செய்யக் கூடிய இந்த நாட்டில் அரிசி கிடைக்கவில்லை என்ற அவல நிலையை மாற்ற வேண்டும் என்றுதான் அடையாளத் திட்டமாக படி அரிசித் திட்டத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அண்ணா அவர்கள் இருந்த வரையில், ஆட்சியின் எந்தத் திட்டத்தை எடுத்தாலும் அந்தத் திட்டம் தொடங்குகிற இடம் கிராமப்புறமாக, விவசாயிகளின் வீடாக இருந்தது. ஆனால் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர் ஆளும் கட்சியின் போக்கும் தலைவர்களுடைய நடவடிக்கைகளும் அந்தத் தலைவர்களைப் பின்பற்றி நடக்கும் தளபதிகளுடைய நடவடிக்கைகளும் சாமானிய மக்களை விட்டுவிட்டு பணக்காரர்களின் பக்கம், தொழில் அதிபர்களின் பக்கம் மெத்தப் பாசத்தோடு போயிருப்பதை நாம் பரவலாகத் தொடர்ந்து பார்த்துக் கொண்டு வருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் ஏழை மக்களை விட்டு அந்தக் கட்சி வெகு தூரத்தில் சென்று விட்டது என்பதுதான். இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் அதை ஒத்துக்கொள்ளாவிட்டாலும் காங்கிரஸ் ஆட்சிக்கு ஏற்பட்ட முடிவுக்கு எது காரணமோ அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவிற்கும் காரணம் என்பதை சரித்திரம் நிச்சயமாக எழுதி வைக்கும்.

இப்போது கூட சென்னை நகரில் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் வந்த க்ளியோபாட்ரா படம் திரும்ப வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக வந்திருக்கிறது என்று கூட நான் சந்தேகப் படுகிறேன். எகிப்தை நான் வெற்றி கொண்டு வருகிறேன் என்று போன ஜூலியஸ் ஸீஸர் க்ளியோபாட்ராவின் பாதத்தில் சரண் அடைந்து தான் வந்த நோக்கத்தை மறந்தான். ஜூலியஸ் ஸீஸருக்குப் பின்னால், அவரது மறைவுக்குப் பின்னால், எகிப்து

நாட்டை வென்று வருகிறேன் என்று சென்ற ஆன்டனியும் ஸீஸரின் பாதையில் க்ளியோபாட்ராவின் காலடியில் தன்னை இழந்தான். இந்த இரண்டு பேர்களும் இரண்டு தலைமுறைகளின் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள். ரோமாபுரியின் பெருமையைக் காப்பாற்றச் சென்றவர்கள் தங்கள் பெருமையை அங்கு இழந்து விட்டு வந்தார்கள்.

காங்கிரஸ் கட்சி ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவித்து இந்த நாட்டில் புதிய ஒரு ஆட்சியை உருவாக்கியவர்கள் சீமான்கள் கால்களின் விழுந்ததால் தங்களை இழந்தார்கள். காங்கிரஸ்காரர்களை விட நாங்கள் வல்லவர்கள், நாங்கள் அவர்களை விடத் திறமை மிக்கவர்கள் என்று சொல்பவர்கள் ஆந்னி க்ளியோபாட்ராவின் காலில் வீழ்ந்ததைப் போல் அதே முறையில் வீழ்ந்திருக்கிறார்கள்.

நான் இதை ஏதோ கதைக்காகச் சொல்லவில்லை. கலைஞர் அவர்களை குற்றஞ்சாட்டச் சொல்கிறேன் என்று யாரும் தயவுசெய்து கருத வேண்டாம். உதாரணத்திற்காகச் சொல்கிறேன். ஒரு காலத்தில் காமராஜ் அவர்கள் எங்கள் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்தால், குறிப்பாக தன் சொந்த வட்டாரத்திற்கு வந்தால், சாத்தூர் வட்டாரத்திற்கு வந்தால் அங்கிருக்கிற வாக்காளர் பட்டியலில் உள்ள அத்தனை பேர்களின் பெயர்களும் காமராஜ் அவர்களுக்கு ஒரு காலத்தில் பரிச்சயமாக இருந்தது. அவர்களை எல்லாம் பெயர்களைச் சொல்லிக் கூப்பிடக், கூடிய அளவில் அவருக்கு அவர்களை எல்லாம் அறிமுகம் இருந்தது. ஆனால் அரசியலில் அவர்கள் உயர்வு கண்டவுடன் கீழே இருக்கிறவர்களின் பரிச்சயம் அவர்களுக்குப் போயிற்று. குறிப்பிட்ட சில முதலாளிகள் காமராஜ் அவர்களுக்கு நண்பர்கள் ஆனார்கள். அதனால்தான் 1967 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட காமராஜ் அவர்கள். . . .

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பாயின்ட் ஆப் ஆர்டர். இப்போது நாம் இங்கே விவாதிப்பது காமராஜர் தலைமையிலுள்ள மந்திரி சபையைப் பற்றியா அல்லது மாண்புமிகு கருணாநிதி அவர்கள் தலைமையிலுள்ள மந்திரி சபையைப் பற்றியா என்பதை நண்பர் அவர்கள் விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்



**திரு. பெ. சீனிவாசன் :** காமராஜ் அவர்களுடைய சமீப கால ஆசீர்வாதத்தோடு இருக்கிற கலைஞர் அவர்களின் மந்திரி சபையைப் பற்றி நான் பேசுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தமாதிரியான வீணை வாதங்களைக் கூறாமல், காமராஜ் அவர்களின் பேரில் சேற்றை வாரி வீசாமல் இருப்பது பொருத்தமாக இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். ஒருவேளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற முன் வரிசைத் தலைவர்களுக்கு வேறு விதமான கருத்துக்களும் கொள்கைகளும் இருக்கலாம். அவர்கள் இவர்களை நன்றாகப் புரிந்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** என்னைக் காமராஜருடைய அரசியல் வாரிசு என்று நண்பர் குறிப்பிட்டார். காமராஜரைப் போன்ற தியாகிகளின் வாரிசாக இருப்பது ஒன்றும் தவறான காரியம் அல்ல என்பதை (ஆரவாரம்.) மாத்திரம் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

**திரு. ஆலடி அருணா :**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆலடி அருணா அவர்கள் கூறியது நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** காமராஜ் அவர்களைப் போன்ற தியாகிகளின் வாரிசாக இருப்பது ஒன்றும் தவறான காரியம் அல்ல என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது அவர்களுக்கு இந்த ஞானோதயம் எப்போது பிறந்தது, தொடர்ந்து இருக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படிப்பட்ட ஞானோதயம் மாறுவது என்பது அம்மையார் அவர்களுக்குப் பழக்கம், எனக்கு அப்படி அல்ல.

**திரு. பெ. சீனிவாசன் :** காமராஜர் பாதையில் செல்கிறார் என்று க்ளியோபாட்ராவின் காலடியில் ஜூலியஸ் ஸீஸர் விழுந்ததைப் பற்றிச் சொல்லும்போது குறிப்பிட்டேனே தவிர,

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. பெ. சீனிவாசன்] [1974 டிசம்பர் 16

அதே முறையில் இந்த ஆட்சி போய்க் கொண்டிருக்கிறது என்றுதான் சொல்கிறேன். இன்று இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இந்த அரசாங்கத்திற்கும், ஆளும் கட்சிக்கும், அந்தக் கட்சியின் ஆட்சியில் உள்ள முக்கியமான அமைச்சர்களுக்கும் யார் நண்பர்கள் என்று பார்க்க வேண்டும். அதை வரிசையாக நீங்கள் பார்ப்பீர்களானால் இராஜபாளையத்தில் ஒரு ராஜா, விருதுநகரில் ஒரு எம்.எஸ்.பி. ராஜா, சிவகங்கையில் ஒரு இளைய ராஜா, காரைக்குடியில் ஒரு செட்டி நாடு ராஜா, ராமநாதபுரத்தில் சேதுபதி என்று திடீரென்று ராஜ வம்சத்தில் தொடர்பு கொண்டு இருக்கும் அளவிற்கு, ராஜாக்களோடும் மன்னர்களோடும் தொடர்பு அதிகமாகி இருக்கிறது. அவர்களுடன் சம்பந்தி உண்ணுகிற அளவிற்கு. ஸ்ரீரங்க ராஜா அவர்களுக்கும் எங்களுக்கும் நெடுநாளையப் பழக்கம் உண்டு என்று சொல்லி பொது மக்கள் எள்ளிநகையாடக் கூடிய அளவிற்கு அவர்களுடைய அந்தரங்கமான அறிமுகங்களை யெல்லாம் வெளியே சொல்லக்கூடிய அளவிற்கு சாதாரண மக்களிடமிருந்து வெகு தூரத்திற்குச் சென்று விட்டார்கள் என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ராமநாதபுரம் மாவட்டத்திற்கு தொழில் அமைச்சர் அவர்கள் விமான நிலையத்திற்கு வந்தார்கள். ஒரு காலத்தில் காமராஜ் அவர்கள் வந்திருந்தபோது நான் பார்த்திருக்கிறேன். அத்தனை முதலாளிகள் வந்ததில்லை. முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் வந்ததைப் பார்த்திருக்கிறேன். அவ்வளவு முதலாளிகள் அங்கு கூடியது இல்லை. புதிய ஒரு முதலாளித்துவ சகாப்தத்தை உருவாக்க நீங்கள் முயற்சிப்பதன் காரணமாக, முதலாளிகளோடு நீங்கள் காரில் அமர்ந்து செல்லும்போது உங்களுக்கு உயர்வளித்த ஏழைகளின் ஈனக் குரல் உங்களுக்குக் கேட்பதில்லை. அந்த அளவிற்கு சாமான்ய மக்களைப் புறக்கணித்து விட்டதுதான் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவல நிலைக்குக் காரணம் திண்டுக்கல்லில் ஏற்பட்ட தோல்விக்கும், கோவையில் ஏற்பட்ட தோல்விக்கும் பிறகு நாட்டு மக்கள் வெளியே உங்களை நம்பாமல் போய் விடுவார்களோ என்று காவேரி மணியம் சொன்னார்கள். மக்கள் உங்களை நம்பவில்லை என்று ஒரு தடவை



1974 டிசம்பர் 16] [திரு. பெ. சீனிவாசன்]

அல்ல இரண்டு தடவை தங்கள் முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். அதன் காரணமாக மலையாள மாந்திரீகம், டெல்லி உறவு என்றெல்லாம் கற்பனையாக நீங்கள் சொன்னாலும், இன்றைக்கு மக்களுடைய உரிமைக் குரலைப் புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் எதிரொலிக்கிறார் என்ற காரணத்தினால் அவர்களுக்கு ஆதரவு இருக்கிறதே தவிர, அவர் பெற்றிருக்கிற ஆதரவில் அன்பில் எந்தவிதமான சூழ்ச்சியும் இல்லை. உங்களுடைய சுயநலம் தான் காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற முதல் அமைச்சர் கட்சியிலே ஒரு காலத்தில் மிகத் தீவிரத் தொண்டராக இருந்தார். எங்களைப் போன்ற தொண்டர்களுக்கு வழிகாட்டினார். கடுமையான தண்டனைகளையெல்லாம் அனுபவித்திருக்கிறார். காங்கிரஸ் ஆட்சியைப் பற்றி அவர் விமர்சிக்கின்ற நேரத்தில் சுதந்திர ஆட்சியில் எதிர்க் கட்சிக்காரர்கள்மீது வெள்ளைக்காரர் காலத்தில் தங்கள் மேல் என்னென்ன ஆயுதங்களை வீசினார்களோ அதே ஆயுதங்களை வீசுகிறார்கள் என்று கனல் கக்கப் பேசினார். அப்படி யெல்லாம் பேசி எங்களுக்கு உற்சாக மூட்டியவர் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் காங்கிரஸ் கட்சியினர் ஆட்சிக் காலத்தில் என்னென்ன ஆயுதங்களை வீசினார்களோ அதே ஆயுதங்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சியினர் பேரில் வீசுகிறார்.

மானாமதுரையில் கட்டிகுளம் என்ற ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் ஒரு கொலை நடந்திருக்கிறது. கொலை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறையில் கைது செய்யலாம். முதலமைச்சரின் கவனத்திற்கு வர முடியாத அளவுக்கு இன்றைக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு தனி ராஜ்யமே நடக்கிறது. தயவுசெய்து முதல் அமைச்சர் அவர்கள் இதை விசாரிக்க வேண்டும். அங்கு இருக்கிற ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இந்த அரசாங்க அதிகாரிகளை வைத்துக் கொண்டே பட்டப்பகலில் விவசாயப் பெருங்குடி மக்கள் வீட்டிலிருந்து 4, 5 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நெல், மற்றைய பொருள்களை பகிரங்கமாக கொள்ளையடித்திருக்கிறார். துணிகரமாகக் கொள்ளை நடந்திருக்

கிறது. அந்த ஊரில் ஒரு காங்கிரஸ்காரர் சங்கரலிங்கம் பிள்ளை என்பவர். அவருக்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் பரம்பரை பகை. காங்கிரஸ்காரர் அப்பொழுது ஊரிலே இல்லை, அப்படி அந்த சமயத்தில் ஊரிலே இல்லாத ஒருவரை, அவர் ஊரில் இல்லை என்று தெரிந்திருந்தும் அவரைக் கைது செய்து, அவர் பேரில் வழக்கு போடப்பட்டிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வாசகம் என்பவரைக் கையை பின்னாலே கட்டி, உண்மையைச் சொல், குற்றத்தை ஒப்புக்கொள் என்று ஓடையிலே உள்ள தண்ணீரில் போட்டு போட்டு முக்கி எடுத்திருக்கிறார்கள். பொய்யை உண்மை என்று ஒப்புக்கொள்ளச் சொல்லி பகிரங்கமாக சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார். அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினர் நேற்று வரையில் உங்கள் கூட இருந்த தோழர்கள். அப்படிப்பட்ட தோழர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து சித்திரவதைக்கு உள்ளாக்குகிற கொடுமை நடக்கிறது.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக ஒன்று கேட்கிறேன். கொலை நடந்ததற்கு சந்தேகத்தின் பேரில் கைது செய்வதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது என்றாலும், அதே மாதிரி ஒரு கொலை சேலத்தில் நடந்திருக்கிறது. சுகுமாரன் என்பவர் கொல்லப்பட்டிருக்கிறார். பகிரங்கமாக ஒரு கொள்ளைக் கூட்டம், தி.மு.க-வைச் சேர்ந்தவர்கள், அண்ணா தி.மு.க-வைச் சேர்ந்த சுகுமாரையும், அவருடைய தந்தையையும் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். கொலை நடைபெற்ற அன்று பகலில் நீதிமன்றத்தில் கொலையுண்ட சுகுமாருக்கும் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-விற்கும் இடையிலான வழக்கு விசாரணை காரசாரமாக நடந்திருக்கிறது. அன்று இரவு சுகுமாரனும் அவருடைய தந்தையும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒரு சந்தேகத்திற்காகக் கூட ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. விசாரிக்கப்பட வில்லை. சட்டம் அவருடைய வீட்டு வாசல் வரை கூடப் போகவில்லை.

பஸ் தொழிலாளர்கள் போராட்டம் நடக்கிறது. தொழிலாளர்கள் போராட்டம் நடக்கிறது. மாணவர்கள் பஸ் தொழிலாளர்கள் மோதிக்கொள்ளக்கூடிய காலத்தில் இரவு பகல்



தூங்காமல் விழித்திருந்து அவர்களை அழைத்துப் பேசி சமாதானம் செய்த பெருமையை அண்ணாவிடம் நாம் பார்த்தோம். இப்பொழுது என்ன நடக்கிறது? இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு விவசாயப் போராட்டம் நடைபெற்றது. வன்முறையை நாம் கண்டிக்க வேண்டியதுதான். பின்னால் அவர்கள் கோரிக்கைகளில் என்ன நியாயம் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். விவசாயப் போராட்டம் நடந்த பிறகுதான் கிராமங்களில் தி.மு.க.வினருக்கு வோட்டு விழாமல் இருக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 99 சதவிகிதம் விவசாயப் போராட்டம் தான் காரணம். இதிலே சில தி.மு.க. தோழர்கள், விவசாய மக்களுடைய வண்டி மாடுகளைக் கூட ஓட்டிக்கொண்டு தீயிட்டுப் பொசுக்கி விட்டார்கள். இந்தத் தீரச் செயலைச் செய்த ஒரு எம்.எல்.ஏ. படத்தைத் தி.மு.க. பத்திரிகையில் அட்டையில் அஞ்சாநெஞ்சன் என்ற அடைமொழியோடு போட்டார்கள்.

அண்ணா திராவிட கழகத்தினர் பேரில் எங்கள் மாவட்டத்தில் 5,000 வழக்குகளுக்கு மேல் போடப்பட்டிருக்கின்றன. அதிலே பாதி வழக்குகள் பொய் வழக்குகள் என்று நிரூபணமாகி, நிரபராதிகள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள். சட்ட அமைச்சர் அவர்களின் மாவட்டத்தில் பொய் வழக்குகள் போடுகிறார்கள். காரணம் என்னவென்றால் அண்ணா தி.மு.க.வினர் தங்களிடம் இருக்கும் பணத்தை எல்லாம் செலவழித்துவிட்டு தி.மு.க.வின் காலில் வந்து சரணாகதி அடையட்டும் என்ற எண்ணம்தான். இதிலே என்ன நியாயம் இருக்கிறது?

ஊழலைப்பற்றிச் சொன்னார்கள். தி.மு.க. என்றால் ஊழல் என்று டிரேட் மார்க் வாங்கக் கூடிய அளவுக்கு இன்றைக்குப் பரவலாகப் பொது மக்களிடையே பேசப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்ட முன்னாள் செயலாளர் பேசுகிறார். அவரே 2 இலட்ச ரூபாய்க்குப் பங்களா கட்டிவிட்டுப் பேசுகிறார். அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று. அருணா அவர்கள் குறிப்பிட்டார்கள். மந்திரிகள் மாதத்தில் பெரும்பாலும் சர்கூட்

[திரு. பெ. சீனிவாசன்] [1974 டிசம்பர் 16

ஹவுஸில் தங்குகிறார்கள். விமான நிலையத்திலும், ரயில் நிலையத்திலும் எந்த நேரத்தில் போனாலும் இரண்டு மந்திரிகளை யாவது பார்க்கலாம். கூட்டித் தலைநகராகிய மதுரையில் ஊழல் பகிரங்கமாக நடக்கிறது என்று குற்றச்சாட்டு பேசப்படுகிறது. யார் நம்மைக் கேட்க முடியும் என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆட்சியில் இருப்பவர்கள் அநியாயத்தைத் தட்டிக் கேட்கக் கூடிய நிலையில் இருந்தால், அதிகாரிகள் நிச்சயம் பயப்படுவார்கள். அண்ணா காலத்தில் அதிகாரிகள் எவ்வாறு பயப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும் இப்பொழுது அவர்களுக்குப் பயம் இல்லை. ஏனென்றால் அதிகாரிகளுக்கு ஆளுபவர்களிடத்தில் நம்பிக்கை இல்லை, மரியாதை இல்லை. கல்வி மந்திரி அவர்கள் நீதி மன்றத்தில் மான நஷ்ட வழக்கு போட்டிருக்கிறார்கள். நீதி மன்றத்தில் வழக்கு நடந்து தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொது மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. பொது மக்களுக்குச் சந்தேகம் எழக்கூடிய அளவுக்குத்தான் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆட்சி ராஜிநாமா செய்ய வேண்டும் என்று மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

வன்முறையில் எங்களுக்கு நிச்சயமாக நம்பிக்கையில்லை. வன்முறையில் நம்பிக்கையில்லாத காரணத்தினால் பீஹாரில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைக் கண்டிக்கிறோம். ஆனால் வன்முறையில் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. வன்முறையில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அன்றைய திமு.கவின் செல்வாக்கு தேவையில்லை. சாதாரண ஒரு சிறிய கட்சி நினைத்தால் கூட வன்முறையில் ஆட்சியைக் கவிழ்க்க முடியும்.

இன்னும் 10 மாதங்களுக்குத் தங்களை யாரும் அசைக்க முடியாது என்று நினைத்துக் கொண்டிருக்கலாம் தி.மு.க. வினர். 10 மாதங்களுக்குப் பிறகு நாட்டில் எங்கும் அசைய முடியாத அளவுக்கு நிலைமை ஏற்படும் என்பதைத் தயவு செய்து ஆட்சியாளர்கள் மறந்துவிட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து, முடிக்கிறேன். வணக்கம்.



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 12 உறுப்பினர்கள் இன்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். மூன்று மணி நேரம்தான் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 15 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

(முற்பகல் 10-30)

**திரு. வை. பாலசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்து எதிர்க்கின்ற வகையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்பாக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது என்றால் நாட்டு மக்கள் மத்தியில் ஒரு பரபரப்பு இருக்கும். நாட்டு மக்கள் பேசிக்கொள்வார்கள். ஆனால் இன்றைக்கு ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை சட்ட மன்றம் கூடுகிற போது எதிர்க் கட்சியின் வேடிக்கை விளையாட்டு நடைபெறுகிறது என்று பொது மக்கள் சொல்லிக் கொண்டு. . . .

**திரு. கோவை செழியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத்தில் இருக்கிற அத்தனை பேர்களும் பொறுப்பு உள்ளவர்கள். இந்தச் சட்ட மன்றத்தில் நடப்பவை பொறுப்பு உள்ளவை. அதுவும் தங்களுடைய தலைமையில் நடைபெறுகிறது. தங்களிடத்தில் தீர்மானம் கொடுக்கப்பட்டு தங்கள் அனுமதியோடு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருகிறது. இதை விளையாட்டு, வேடிக்கை என்றெல்லாம் சொல்லுவது நியாயம் தானா என்று தாங்கள் கூற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் தீர்மானத்தை அவர்கள் கருத்தோடு, விமர்சிக்கிறார்கள். அதற்கு யாரும் ஒன்றும் பண்ண முடியாது. அவரவர்களுக்கு விமர்சிக்க உரிமை உண்டு.

**திரு. வை. பாலசுந்தரம் :** சமீப காலமாக இந்த மாமன்றத்தில் பல பிரச்னைகள் நம் கவனத்திற்கு வந்திருக்கின்றன. ஆறு மாதத்திற்கு முன்னால் இந்த மாமன்றத்தில் ஒரு மாதிரியாக ஒலித்த குரல்கள் எல்லாம் இன்றைக்கு மாறி மாறி ஒலித்துக் கொண்டு இருக்கின்ற அதிசயத்தைக் கண்டு வருகிறோம்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 டிசம்பர் 16

நம்முடைய மதிப்பு மிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் இங்கே பேசுகின்ற போது சாமானியர்களை விட்டு சீமான்கள் மத்தியில் நம் முதலமைச்சர் போய் விட்டார் என்ற முறையில் குறிப்பிட்டார். இந்த நாட்டின் முதல்வராக இருக்கின்ற கலைஞர் அவர்கள் சாமானியர்களிடமிருந்து விலகி விட்டாரா என்று சிந்தித்துப் பார்த்தேன். அவர் சிந்தித்து பார்த்து முதல்வர் அவர்கள் சாமானியர்களிடமிருந்து விலகி விட்டாரா என்று தன் மனசாட்சியை கேட்டு பதில் சொல்லட்டும். நேற்று முன் தினம் தஞ்சையில் பத்தாயிரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடியிருப்பு இல்லங்களைத் திறந்து விட்டு வந்திருக்கிறார். அது மட்டும் அல்ல. ஓராண்டு நிறைவிற்குள் ஒரு லட்சம் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக குடியிருப்பு இல்லங்கள் தரப்படும் என்று உறுதி கூறியிருக்கிறார். திரு. சீனிவாசன் அவர்கள் கூற்றுப்படி இவர்கள்தான் சீமான்கள் என்றால் இந்தச் சீமான்களுக்காக முதல்வர் அவர்கள் பணி தொடர வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்பதை உங்கள் மூலமாக முதல்வருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு நாட்டில் இருக்கின்ற சாமானியர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் குருடர்களாக இருந்தால் கண்ணொளியைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிக் கண்ணொளி பெற்றவர்கள் கருணாமூர்த்தி கருணாநிதி என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே, அது உங்கள் காதுகளில் கேட்கவில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

ஊனமுற்றவர்கள் தங்கள் ஊனத்திற்கு உதவுகின்ற கருவிகளை எல்லாம் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அந்த சௌகரியங்களை பெற்றவர்கள் அந்தக் கருவிகளைப் பெற்றுக்கொண்டு கருணாநிதி வாழ்க என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே அது உங்கள் காதுகளில் கேட்கவில்லையா என்பது தான் கேள்வி.

நிலப் பட்டா, மனைப் பட்டா இவை எல்லாம் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று பல தடவை அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்றத்தில்



1974 டிசம்பர் 16] [திரு. வை. பாலசுந்தரம்]

பேசுகிறோம் என்ற காரணத்தால் எப்படியும் பேசலாம் என்று பேசிவிடக் கூடாது. பொறுப்புள்ள அங்கத்தினர்கள் பொறுமையோடு பேச வேண்டும் என்று சிரம் தாழ்த்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். பல லட்சக்கணக்கான மனைப் பட்டா, நிலப் பட்டா இன்றைக்கு நாட்டில் உள்ள ஏழை மக்கள் எல்லாம் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். ஒரு கவளம் சோற்றுக்கு வாடிக் கொண்டு இருக்கிற ஏழை உழவர்கள் எல்லாம் இன்றைக்கு ஒரு ஏக்கர் நிலத்திற்கு சொந்தக்காரனாகிவிட்டான். மூன்று சென்டுக்கு குடியிருப்பு மனை பெற்றுச் சொந்த வீட்டில் வாழுகிறேன் என்று இந்த அரசை வாழ்த்திக் கொண்டு இருப்பது அந்தக் காதுகளில் கர்ண கடூரமாகக் கேட்கவில்லையா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன்.

பலவிதமான குற்றச்சாட்டுகளை இந்த அரசின் மீது சுமத்தினார்கள். அரிசி விலை ஏறிவிட்டது, என்று சொன்னார்கள். இல்லை என்று சொல்லவில்லை. துணிவிலை உயர்ந்து விட்டது என்று சொன்னார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இருக்கின்ற நிலைமைகளை ஏன் சிந்தித்துப் பார்க்க மறுக்கிறீர்கள், தயங்குகிறீர்கள் என்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அரிசி விலை உயர்ந்து விட்டது என்று சொல்லுகின்ற நேரத்தில் தமிழ் நாட்டில் உயர்ந்து இருக்கிறது உண்மைதான். துணிவிலை உயர்ந்து இருக்கிறதே அதற்குப் பல முறை இந்த மாமன்றத்தில் பன்னிப்பன்னி சொல்லியிருக்கிறோம், துணிவிலை உயர்வு, விலைவாசி உயர்வு என்பது ஒரு தேசியப் பிரச்னை. அகில இந்திய ரீதியில் அலசி ஆராய வேண்டிய பிரச்னை. அது மத்திய சர்க்காரிடம் கேட்க வேண்டிய பிரச்னை என்று கூறுகிறோம். அது முன்னேற்றக் கழகம் சொல்லுகிறது என்ற காரணத்தால் கேட்க மறுக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு என்றைக்கும் இல்லாத அளவு அரிசி பஞ்சம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் பருவ மழை தவறியதால் அப்படிப்பட்ட அல்லல் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றோம். மழை இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட சங்கடங்களை

அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம். மழை இல்லாததற்குக் கூட இந்த நாட்டின் முதல்வர் கலைஞர் தான் காரணம் என்று சொல்லும் வாதத்தை இந்த நாடு எப்படி ஏற்றுக்கொள்ளும் என்று இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், சமாளிக்க வேண்டிய பொறுப்பில் உள்ள இந்த நேரத்தில் நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு இதே நேரத்தில் அரிசியை உபரியாக்கி மற்ற மாநிலங்களுக்கு வழங்கிக் கொண்டு இருந்தோம். இன்றைக்கு பருவ மழை பொய்த்து இருக்கிற காரணத்தால் நாட்டில் சூழ்நிலைகள் நன்றாக இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு இந்த அரசு சும்மா இருக்கிறதா என்றால் இல்லை.

முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிக்கு செலவிடப்படும் என்று முதல்வர் அறிவிப்பு தந்து இருக்கிறார். அதற்கு மேலாக இங்கே இருக்கிற மேல்மட்ட அதிகாரிகள் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டு எந்த எந்த இடங்களில் வறட்சி பாதிப்பு இருக்கிறது என்ற புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கி 60 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு தரப்பட வேண்டும் என்று திட்டமிடப் பட்டு இருக்கிறது. டீசல் பம்பு செட்டுகளுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதற்கு மேலாக, ஏரி குளங்கள் தூர் எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிவாரணப் பணியை இன்றைக்கு முதலமைச்சர் செய்து கொண்டு வருகிறார். பலர் இங்கே சொன்னார்கள் காய்ந்து கொட்டுகிற இந்த நாடு தேய்ந்து போய்க் கொண்டு இருக்கிறது, பயிர்கள் எல்லாம் போய்க் கொண்டிருக்கிறது, ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கணக்கைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கணக்கை தீர்த்துக்கொள்ள வேண்டுமோ இல்லையோ, மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய எரிச்சலை தங்களுடைய





பேச்சின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று தான் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நாட்டின் நாலரைக் கோடி மக்களை வழி நடத்திச் செல்லும் பொறுப்பு இன்றைக்கு முதலமைச்சர் கையில் இருக்கிற காரணத்தால் அவர் பொறுப்புடன் காரியங்களை ஆற்றிக் கொண்டு வருகிறார்.

இன்றைக்கு நாட்டின் நிலைமை என்ன? அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அருமை உறுப்பினர்கள் பேசுகிறார்கள். பஞ்ச நிலை ஏற்பட்டு விட்டது. பற்றாக்குறையால் நாடு தவித்துக்கொண்டு இருக்கிறது. பட்டினி சாவு ஏற்படுமோ என்று அச்சப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. பரிகாரம் வேண்டும் என்று கேள்வி கேட்கிறார்கள். இப்படி பட்டினிச் சாவைப் பற்றி அதற்கான பரிகாரத்தை பற்றி அலசிக் கொண்டிருக்கிற இந்த நெருக்கடியான நேரத்தில் உங்களுடைய தலைவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் இந்த நேரத்தில் கூட இந்த சட்ட மன்றத்தில் வராத யோக்கியதை பெற்றிருக்கிறார் என்பதை என் அவர்கள் சிந்தித்துப் பார்க்க மறுக்கிறார்கள். இந்த நேரத்தில் கூட வர நீங்கள் சொல்லக் கூடாதா? இந்த நேரத்தில் படம் எடுத்துக் மறுத்தால் சத்தியா ஸ்டூடியோவில் படம் எடுத்துக் கொண்டிருந்தால் மக்கள் நீங்கள் சொல்வதை எல்லாம் நம்பி விடுவார்கள் என்று கருதுகிறீர்கள்?

நிச்சயமாகத் தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் இல்லை என்பதைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன். மக்களை ஏமாளிகளாகக் கருதினால் எதிர்காலம் உங்களுக்கு நல்ல பாடத்தைப் புகட்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலைகளை அனுசரித்துப் பார்த்து இந்த அரசு செயலாற்றிக் கொண்டு வருகிறது. எங்கே பேசினாலும் அங்கே தான் வருகிறார்கள். ஊழல், ஊழல் என்று ஓயாமல் பேசினார்கள். மதிப்பிற்குரிய திரு. சீனிவாசன் பேசுகின்ற நேரத்திலும், திரு. ஆலடி அருணா பேசுகின்ற நேரத்திலும் சரி நான் சிந்தித்துப் பார்த்தேன்.

எங்கே ஊழல் எங்கே ஊழல் என்று தேடித் தேடிப் பார்த்த நேரத்தில் அவர்கள் சொன்னதில் தவிற கிடையாது. உண்மை தான் சொன்னார்கள். . . . உண்மையைத் தான் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? அவர்கள் பிரதான எதிர்க்கட்சி. அவர்களுடைய கட்சிக்கு தலைமை தாங்குகிற எம்.ஜி. ஆர். மீது ஊழல் இருக்கிறது என்பதைத்தான் சொல்கிறார்களா என்று நினைத்துப் பார்த்தேன். அவர் மீது என்ன ஊழல்? பல லட்சம் ரூபாய்க்கான வருமான வரி ஏய்ப்பு ஊழல். ஆக, அங்கேதான் ஊழல் இருக்கிறதே தவிர இந்த ஆட்சி மீது இல்லை.

வருமான வரியில் மட்டும் அல்ல ஊழல். அந்நியச் செலாவணியிலும் ஊழல் இருப்பதாகப் பேசப்படுகிறது. அப்படிப் பட்டவருடைய கட்சியைச் சேர்ந்த உத்தமர்கள்தான் பேசுகிறார்கள் மற்றவர்களைப் பார்த்து ஊழல் ஊழல் என்று. அவர்கள் மீது ஊழலே இல்லை என்று சொல்பவர்கள் இன்றைக்கு சத்தியா ஸ்டுடியோவைச் சுற்றியிருக்கிற சர்க்கார் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது தெரியாதா?

**திரு. கோவை செழியன் :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் இந்த மன்றத்திலே ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளைச் சொல்லக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். குற்றச்சாட்டு நியாயமானதாக இருந்தால் ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் ஆதாரம் இல்லாமல் சொல்கிறார்கள்.

வருமான வரி பாக்கி இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. பாக்கி இருக்கிறது. அதைத் தவணை முறையில் கட்டுகிறேன் என்று எங்கள் தலைவர் சொல்லி, அதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதை எப்படி குற்றச்சாட்டு என்று சொல்ல முடியும்?

அந்நியச் செலாவணியில் ஊழல் என்று சொல்கிறார்கள். அதில் தவறு நடந்திருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? ஆதாரம் இருந்தால் காட்ட வேண்டும். இப்படி





ஆதாரம் இல்லாமல் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது. மத்திய அரசு அந்நியச் செலாவணியில் தவறு நடந்திருக்கிறது என்று கடிதம் எழுதியிருக்கிறதா? அல்லது கேஸ் போட்டிருக்கிறதா? அதன் விபரத்தைச் சொல்ல வேண்டும். அத்தாட்சியான தகவல் எதுவும் இல்லாமல் ஏதோ பேச வேண்டுமென்பதற்காகப் பேசக்கூடாது. அதற்குத் தங்களுடைய தீர்ப்பை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, இந்தக் குற்றச்சாட்டு நாடெங்கிலும் பேசப்படுகிற உண்மை. அதைத் தான் நான். . . .

**திரு. பெ. சீனிவாசன் :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நாடெங்கிலும் பேசப்படுகிறது என்று சொல்கிறார்கள். நாடெங்கிலும் பேசப்படுகிறது என்று சொல்லி, அதை இங்கே வந்து பேசலாமா? அப்படிச் சொல்வதாக இருந்தாலும் நாங்களும் ஏதேதோ சொல்ல வேண்டி வரும். நாட்டிலே எது வேண்டுமானாலும் பேசுவார்கள். ஆனால் அதையெல்லாம் இங்கே பேசலாமா?

வருமான வரியைப் பற்றிச்சொன்னார்கள். எங்கள் தலைவரும் வருமான வரி கட்டுகிறார். முதலமைச்சரும் வருமான வரி கட்டுகிறார். மற்றும் பலரும் வருமான வரி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். யாரும் இல்லை என்று சொல்லவில்லை. வருமான வரியில் ஊழல் இருக்குமா? கட்டுவதில் தாமதம் ஏற்படலாம். அது எப்படி ஊழலாகும்?

சத்தியா ஸ்டுடியோவில் ஊழல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஸ்டுடியோவுக்கு நிலம் கொடுத்ததில் ஊழல் இருக்கிறது என்றால் அதற்கு யார் பொறுப்பு?

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, நான் இந்த விவாதங்களுக்குள் போவதானால் இந்த மன்றத்தில் பல சூடான விவாதங்கள் நடைபெற வேண்டிவரும்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 டிசம்பர் 16

இன்றைக்கு இருக்கின்ற பிரச்சனையில் நாம் விஞ்ஞான வாதங்களில் நேரத்தை விரயமாக்கினால் இருக்கின்ற பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது. இன்றைக்கு இருக்கின்ற நெருக்கடியைச் சமாளிப்பது எப்படி, அதற்குத் தீர்வு காண்பது எப்படி என்பதில்தான் இப்போது நம்முடைய கவனம் இருக்க வேண்டும். ஆளும் கட்சி மட்டும் தனியாக இருந்து இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டுமென்பதை மறந்துவிட வேண்டும். எதிர்க்கட்சிகளிலே இருப்பவர்கள் எல்லாம் இதற்கு ஒத்துழைப்புத் தந்து, பஞ்சத்தைப் போக்கி, பட்டினிச் சாவைப் போக்கி, ஒரு சுபிட்சமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இன்றைக்கு எல்லோருமே 76, 76 என்றே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு முன்னால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற சிக்கலுக்கு தீர்வு காண்பது எப்படி என்பதை யாரும் சிந்திக்கவில்லை; 76-ஐப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது ஏற்பட்டிருக்கிற வறட்சிக்கு முதல் கட்டமாக 5 கோடி ரூபாயை நம்முடைய முதலமைச்சரவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். 1969-லே நம் நாட்டிலே பஞ்சம் ஏற்பட்ட போது, வறட்சி ஏற்பட்டபோது மத்திய அரசு 17 கோடி ரூபாய் தந்தது. அப்படிப்பட்ட நன்றி உணர்வை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பஞ்சம் அதைவிடக் கடுமையானது. 100 ஆண்டு கால வரலாற்றில் எப்போதுமே காண முடியாத அளவுக்கு இப்போது பஞ்சமும் வறட்சியும் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த இக்கட்டான நிலையைப் போக்குவதற்கு நாம் மத்திய அரசின் உதவியை நாடிக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகளை அனுப்பி, பஞ்சம் எப்படி இருக்கிறது, எந்தெந்த மாவட்டத்தில் என்னென்ன நிலைமை இருக்கிறது என்று சுற்றிப் பார்த்து வர அதிகாரிகளை அனுப்பி இருக்கிறோம். அப்படி அனுப்பி இருக்கும்போது டில்லியிலே இருக்கிற மத்திய அரசிடம் போய், இந்திரா காந்தி



1974 டிசம்பர் 16] [திரு. வை. பாலசுந்தரம்]

அம்மையாரிடம் போய், இங்கே இருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் 5 கோடி ரூபாய் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நாட்டு மக்களின் துயரைத் துடைக்கின்ற வகையில் இந்த அரசு முதற்கட்டமாக 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. 1969 இல் ஏற்பட்ட சாதாரண வறட்சியின்போதே 17 கோடி ரூபாய் மத்திய அரசிடம் பெற வேண்டியிருந்தது என்றால் இப்போது 50 கோடிக்கு மேல் தேவைப்படும். என்பதற்கான திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குள்ளாக அங்கே போய் 5 கோடி ரூபாய் போதும் என்று சொல்லும் நிலைமை ஏற்பட்டால் அது இந்த ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்துவதாகாதா? இந்த ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, இந்தப் பிரச்சனையை தீர சிந்தித்து, இந்த இக்கட்டான நிலைமையைப் போக்க இந்த மன்றத்தில் விவாதிக்கும்போது கருத்துக்களைச் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும் எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டு மக்களை இந்த இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்றிவிட்டால் பிறகு நாம் மற்றப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளும் வழி பிறக்கும் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. நா. வெ. குருசாமி:** தலைவரவர்களே, ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் இன்று அரிசி பற்றாக்குறையும், மற்றும் பல அத்தியாவசியப் பண்டங்கள், பற்றாக்குறையும் இருக்கிறது. குறிப்பாக குடிதண்ணீர் கூட கிராம மக்களுக்குக் கிடைக்க முடியாத அவல நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு சரிவர சிந்தித்துச் செயல்படாத காரணத்தால், இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருப்பதால், இந்த அரசின் மீது கண்டனப் பிரேரணையையும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கொண்டுவந்து விவாதிக்கிறோம்.

[திரு. நா. வெ. குருசாமி] [1974 டிசம்பர் 16

அரிசிப் பிரச்சனை அல்லது குடிதண்ணீர் பிரச்சனை எதுவானாலும் அதை நிவர்த்தி செய்வதற்கு வழிவகை செய்யாமல், அமைச்சர்கள் இங்கே உட்கார்ந்துகொண்டு அறிக்கைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர பிரச்சனைகளைச் சமாளிப்பதில் உரிய கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அதனால் இன்றைக்கு கிராம மக்கள் குடிதண்ணீருக்குக் கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, நமது விவசாயத் துறை அமைச்சரவர்கள் கூட சொன்னார்கள். உரம் எல்லா இடங்களிலும் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அங்கே விவசாயிகள் உரம் கிடைக்காமல் படுகின்ற கஷ்டங்கள் சொல்லி முடியாதவைகளாக இருக்கின்றன. குறிப்பாக, மதுரை மாவட்டத்தில் உரம் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மூட்டை யூரியா 200 ரூபாய், 250 ரூபாய் என்று விற்கிறது. ஆனால் அமைச்சரவர்கள் எங்கு பார்த்தாலும் அதிகமான ஸ்டாக் இருக்கிறது என்று புள்ளிவிவரங்களைத் தெரிவிக்கிறார்கள். இங்கே அறிக்கை கொடுக்கிறார்கள். அங்கே உரம் கிடைக்கவில்லை. முக்கியமாக சிறு விவசாயிகள் இதனால் அதிகமாகப் பாதிக்கப் படுகிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எந்த கிரடிட் சொசைட்டியில் உரம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. எந்த இடத்தில் இல்லை என்று சொல்லுங்கள். அதைப் பகிரங்கமாகக் கூடச் சொல்ல வேண்டியதில்லை. எழுதி அனுப்பினால் கூடப் போதும். இங்கே 2, 3 பேர்கள் பேசும்போது தேவைக்கு மேல் சில கிரடிட் சொசைட்டிகளில் இருப்பதாகச் சொன்னார்கள்; மேலும் தேவையில்லை என்று சொன்னார்கள். இப்போது தேவையான அளவுக்கு கூட்டுறவு கிரடிட் சொசைட்டிகள் மூலம் உரம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த சொசைட்டியில் இல்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படும்.



1974 டிசம்பர் 16]

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். விவசாயிகள் உரம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்கிறோம். அமைச்சரவர்கள் தாராளமாக கொடுத்துக் கொண்டிருக்கிறோம்; எங்காவது இல்லை என்று சொன்னால் உடனடியாக அனுப்பி வைப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி தவறான ஒரு தகவலை அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். உதாரணமாக, மல்லி கிரடிட் சொசைட்டி இருக்கிறது. அங்கு யூரியா உரம் கிடைக்கவில்லை. அந்த ஊர் தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. இதேபோல் ஏராளமான இடங்கள் இருக்கின்றன. ஏதோ உடனடியாக அனுப்பி வைக்கிறேன் என்று தினத்தந்தியிலும், மாலை முரசிலும் செய்தி வருவதற்காக வேண்டுமானால் நீங்கள் இப்படிச் சொல்லலாம். ஆனால் மக்களின் கஷ்டத்தைப் போக்காது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தந்தியிலும், மாலை முரசிலும் இதுபற்றிய செய்தி கிடையாது. கிரடிட் சொசைட்டிகள் மூலமாக அரசு உரம் விநியோகம் செய்கிறது. டீலர்கள் மூலமாக விநியோகிப்பதைப் பற்றி நான் சொல்லவில்லை. அவர்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள். ஆகவே, எந்த கிரடிட் சொசைட்டியில் உரம் இல்லை என்று சொன்னாலும், உடனடியாக அங்கு உரம் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: எங்கள் ஊரில் உரம் கிடைக்கவில்லை. வேண்டுமானால் கலெக்டருடன் தொடர்பு கொண்டு கேட்டுப் பாருங்கள். அல்லது இங்குள்ள ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களை நீங்கள் கேட்டுப் பாருங்கள். அவர்கள் சரியான பதில் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எல்லா கிரடிட் சொசைட்டிகளிலும் உரம் ஸ்டாக் இருக்கிறது. எந்த சொசைட்டியிலாவது இல்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக அனுப்பி வைக்கப்படும். அதல்லாமல் எல்லா சொசைட்டிகளிலுமே இல்லை என்று சொல்வது சரியல்ல.

**திரு. நா. வெ. குருசாமி :** எங்களுடைய மாவட்டத்தில் முழுமையாக உரம் இல்லை என்று நான் சொல்கிறேன்.

THIRU P. SEENIVASAN : The Hon. Minister is misleading the House. There is scarcity of urea and people are not able to buy it. But the Hon. Minister is promising here that he could send urea to any society, which is in need.

ஏதாவது ஒன்றிரண்டு இடங்களில் கிடைக்கவில்லை என்றால் குறிப்பிட்டுச் சொல்லலாம். எல்லா இடங்களிலுமே கிடைக்கவில்லை என்றால் எல்லா இடங்களிலும் உரம் இல்லை என்று தான் சொல்ல முடியும். எல்லா சொசைட்டிகளிலும் போதிய ஸ்டாக் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் முழுமையாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அப்படியானால் அங்கே உரம் இருக்கிறதா இல்லையா என்பதை அமைச்சரவர்கள் பார்க்க வேண்டுமேயல்லாமல் குறிப்பிட்டுச் சொல் என்றால் எப்படி ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எங்கெங்கு உரம் கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** எங்குமே உரம் இல்லை என்று சொல்கிறோம். யூரியா கிடைப்பது தங்கம், வைரம் கிடைப்பது மாதிரி இருக்கிறது. ஆனால் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இப்படி உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லி இந்த மன்றத்தை 'மிஸ்லீட்' செய்கிறார்கள். எந்த சொசைட்டியிலாவது இல்லை என்றால் எழுத்து மூலம் தெரிவியுங்கள் ; உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்கிறார்கள். அதற்கு உத்தரவாதம் கொடுக்க முடியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரம் இல்லை என்று தெரிவித்தால் உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் தெரிவித்த பிறகும் கொடுக்கவில்லை என்றால்தான் 'மிஸ்லீடிங்' செய்கிறார் என்று சொல்ல முடியும். அதுவரையில் அப்படிச் சொல்ல முடியாது.



**திரு. முனு ஆதி :** எந்த ஊரிலுமே உரம் இல்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை என்றால் எழுதி அனுப்பி வையுங்கள். அதற்குப் பின்னாலும் கிடைக்கவில்லை என்றால் சொல்லுங்கள்.

**திரு. முனு ஆதி :** அமைச்சர் மிஸ் லீடிங்காகச் சொல்கிறார். நீங்கள் எங்களை அடக்கி விடலாம். யூரியா முக்கியமான பிரச்சினை இல்லையா ?

(திரு. கே. என். குமாரசாமி, திரு. பெ. சீனிவாசன் எழுந்திருந்தார்கள்.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் சந்தேகத்தை வெளியிட்டாலோ, குற்றஞ் சாட்டினாலோ குறிப்பிட்ட அமைச்சர் பதில் சொல்லவும், விளக்கம் தரவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த முறை இங்கே கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. பேசிக் கொண்டிருந்த உறுப்பினர் அதை மறுத்துப் பேசலாம். அமைச்சர் குறிப்பிட்டதில் தவறு இருந்தால் மற்ற உறுப்பினர்கள் தாம் பேசும்போது எடுத்துக் குறிப்பிடலாம். அல்லது அமைச்சர் தவறான தகவலை இந்த அவைக்குத் தந்திருந்தார் என்றால் நாளைய தினம் அதைப் பற்றிய பிரச்சினையை இந்த அவையில் எழுப்பலாம். அதை விடுத்து இதுபற்றி எல்லோரும் குறுக்கிடுவது அவை முன்னுள்ள விஷயத்திற்கான நேரத்தைக் குறைத்துவிடும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு இன்னும் எவ்வளவு நேரம் ஒதுக்கப்படுவது என்பது குறித்து முடிவு செய்ய அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டுவதாக இருக்கிறது. ஆகவே இதுபோல குறுக்கிடுவது நல்லது அல்ல.

**திரு. முனு ஆதி :** நல்லது இல்லை என்று கருதலாம். யூரியா முக்கியம் இல்லையா ? அதைப்பற்றி கவலையில்லையா ?

(திரு. ஏ. சுப்பிரமணியம் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுபற்றி இனி பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. குருசாமி பேசுவார்.

[1974 டிசம்பர் 16

**திரு. பெ. சீனிவாசன் :** அமைச்சர் அவர்கள் இந்த அவையை மிஸ்லீட் பண்ணலாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரம் பற்றிய பிரச்சினை முக்கியமானது இல்லையென்று நான் சொல்லவில்லை. அதைப் பற்றி விவாதிக்க வேறு முறைகள் இருக்கின்றன. அந்த முறைகளில் அதைப் பற்றிக் கேட்க வேண்டுமே தவிர இதுபோல உறுப்பினர்கள் கேள்வி கேட்பது என்பது முறையல்ல.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்த அவையின் நேரத்தை வீணடிக்கக் கூடாது என்று. அதை ஒட்டித்தான் சொல்கிறேன், ஒரு ஏக்கருக்கு எவ்வளவு உரம் கொடுக்கப்படுகிறது என்று கேட்கப் பட்ட கேள்விக்கு அமைச்சர் இரண்டு வார்த்தையில் பதில் சொல்லியிருந்தால் அவையின் நேரமே வீணாகியிருக்காது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த அவையின் விவாதங்கள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு—எந்தெந்தக் குற்றச்சாட்டுகள் வருகின்றனவோ அவற்றையொட்டி அந்தந்த அமைச்சர்கள் பேச அனுமதி அளிக்கலாம். குறிப்பாக ரைஸ் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டபோது—எங்களுடைய வாதத்தைச் சொன்னேன். அரசாங்க வாதத்தை சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உறுப்பினரது குற்றச்சாட்டுக்கு அமைச்சர் அவர்கள் சொன்னது திருப்தி இல்லாமல் இருக்கலாம். அதுபற்றி மேலும் பல விளக்கங்கள் கேட்கலாம். சட்ட அமைச்சருக்கு பேச அனுமதி அளித்தது மாதிரி விவசாய அமைச்சருக்கும் அதுபற்றி விளக்கச் சந்தர்ப்பம் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்து. முக்கியமான பிரச்சினைகள் வருகிறபோது நாம் அந்த முறையைப் பின்பற்றலாம்.

**திரு. முனு ஆதி :** யூரியா முக்கியமான பிரச்சினை இல்லையா? உரம் கிடைக்காமல் நாட்டிலுள்ள விவசாயிகள் எல்லாம் கஷ்டப் படுகிறார்கள்.



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முக்கியமான பிரச்சினை இல்லையென்று சொல்லவில்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** தயவு செய்து ஓரேயொரு வேண்டுகோள், யூரியாவை அரசாங்கமே சப்ளை செய்யும் என்கிற ஒரு உத்தரவாதத்தை இன்று அளிக்கட்டும். கிடங்குகளில் கிடக்கிற யூரியா மூட்டைகள் எல்லாம் வெளிவரும். இன்றைக்கு 250 ரூபாய்க்குக் கூட ஒரு மூட்டை கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அப்படி உர மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவசாய அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா? சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் ஏற்கனவே அரசின் கையில் எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது என்கிற புள்ளி விவரம் கொடுத்திருக்கிறேன். அரசாங்க உரம் கோவாப்பரேடிவ் க்ரெடிட் சொஸைட்டிகள் மூலமாகத்தான் விநியோகிக்கப் படுகிறது. நேற்று எங்கெங்கு இல்லையென்று குறிப்பிடப்பட்டதோ அங்கெல்லாம் உரம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது. நப்பியோ, தவறியோ ஏதாவது ஒரு க்ரெடிட் சொஸைட்டியில் உரம் இல்லையென்றால் அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் உடனே அந்தக் குறையை நிவர்த்திக்க நான் தயாராய் இருக்கிறேன். அமோனியம் சல்பேட்டோ, யூரியாவோ, நைட்ரஜன் உரமோ எங்காவது இல்லையென்று குறிப்பிட்டுக் குற்றச்சாட்டாகச் சொன்னால் உடனே அதுபற்றி நான் கவனிக்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** அமைச்சர் அவர்கள் இப்படி ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பிரமணியம்—உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் இப்படித்தான் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இல்லை.

(திரு. பெ. சீனிவாசன், திரு. கே. என். குமாரசாமி, திரு. முனு ஆதி ஆகியோர் எழுந்திருந்து ஒரே நேரத்தில் பேசினார்கள். கூச்சல்—குழப்பம்)

**திரு. பெ. சீனிவாசன் :** எழுதிக் கொடுங்கள் என்கிறாரே, நான் தி.மு.க. எம்.எல்.ஏ. ஆக இருந்தபோதே அவரிடம் சென்றது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் என்கிற முறையில் அவரிடம் யாரும் போய் சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பேரவை அலுவல் முறையில் தாங்கள் சொல்வதைப் போல் சில பல முறைகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு உறுப்பினர் பேசும்போது ஏதாவது ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டால், அதுபற்றி உடன் அமைச்சர் தன்னிடம் இருக்கும் விவரத்தைக் கொண்டு விளக்கம் தருகிறார். அதுபற்றி மேலும் பல விவரங்கள் தேவைப்பட்டால் குறுகிய காலக் கேள்வி போடலாம். அல்லது அதுபற்றி ஒரு மணி நேரம் விவாதம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கோரலாம். அமைச்சர் இந்த அவைக்கு தவறான தகவலை தந்தார் என்றால் அதுபற்றி தனியாகவே ஒரு தீர்மானம் கொடுக்கலாம். இப்படிப்பட்ட முறைகளில் எதையும் பின்பற்றலாம். குறுக்கிடுவது—அவையில் பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினரைப் பேசவிடாது இடைமறிப்பது போலத்தான் ஆகிறது. ஆகவே இப்போது மாண்புமிகு உறுப்பினர் குருசாமி அவர்களைப் பேசவிடுவது தான் இந்த அவை ஒப்புக் கொண்டிருக்கிற முறைக்கு ஏற்றது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

**திரு. பெ. சீனிவாசன் :** நீங்கள் ஷார்ட் நோட்டீஸ் குவெஸ்டியனைக் கொண்டு வருவதற்குள்ளே, மூட்டை, மூட்டையாகப் பதுக்கி வைத்துக் கொள்ளப்படும். அமைச்சரவர்கள், கள்ள மார்க்கெட்காரர்களை உற்சாகப் படுத்துகிற மாதிரி சொல்கிறார். . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் இந்த மன்றத்திற்கு ஒரு வாக்குறுதி அளிக்க முடியும். இந்தக் கண்டனத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகியவற்றிற்கு என்னுடைய பதிலை



அளிக்கும்போது இதுபற்றிய விவரங்களை அறிந்து, உண்மையான நிலவரம் என்ன என்கின்ற விவரத்தைச் சொல்கிறேன். அந்த உறுதியை நான் அளிக்கிறேன்.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, இம்மாதிரி அமைச்சரவர்கள். . . .

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்கள், வேண்டிய உண்மையான விவரங்களையெல்லாம் பதிலளிக்கும் போது தருகிறேன் என்று சொன்னார்கள். அப்படியானால், விவசாய அமைச்சர் கொடுப்பது உண்மைக்குப் புறம்பான பதிலா ? அப்படி உண்மைக்குப் புறம்பான பதிலைக் கொடுக்கும் அமைச்சரை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறார் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர் சொன்னது தவறு, நான் சொல்லப் போவதுதான் சரியானது என்ற வகையிலே நான் சொல்லவில்லை. நாங்கள் சொன்னவைகளை நீங்கள் அறிவீர்கள். நண்பர் குருசாமி அவர்கள் பேசும்போது, சில சொசைட்டிகளுக்குக் கிடைக்கவில்லையென்று சொன்னார். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இந்த சொசைட்டிக்குக் கிடைக்கவில்லையென்று சொல்லுங்கள், அதுபற்றி கவனிக்கப்படும் என்று சொன்னார். அதைத் தொடர்ந்து, இப்பொழுது எல்லோருக்கும் உரம் அளிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். உர விநியோகம் மாநில அரசிடம் மாத்திரம் இல்லை. அந்த விவரங்களையெல்லாம் அறிந்துதான் நான் விவரங்கள் தருகிறேன் என்றேன். ((கூச்சல்—குழப்பம்).

**திரு. பெ. சீனிவாசன் :** ஒரு அமைச்சர் எழுந்து என்னிடம் சீட்டு அனுப்புங்கள், மூட்டை அனுப்புகிறேன் என்று சொல்கின்ற முறை. . . . (கூச்சல்—குழப்பம்) விவரங்களையறிந்து தருகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருகிறார்கள். அதற்காக, நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு ஒரு சின்ன சீட்டு அனுப்புங்கள்.

உடனே மூட்டை வரும் என்று சொன்னால், அதிலே பல்வேறு அர்த்தம் இருக்கிறது. கள்ள மார்க்கெட்காரர்கள் நன்றாகப் புரிந்துகொள்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், யாரும் பிளாக் மார்க்கெட்டிலே வாங்க வேண்டியதில்லை, எல்லோருக்கும் கிடைக்கும் என்று சொன்னால், பதுக்கி இருக்கிற மூட்டைகள் அத்தனையும் வெளியே வரும்.

**திரு. கு. காமாட்சி:** சார், சீட்டு கொடுங்கள் என்பது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே தவிர, கள்ள மார்க்கெட்காரர்களுக்கு அல்ல.

THIRU R. PONNAPPA NADAR: Sir, arising out of the answer of the Hon. Minister for Agriculture, I have got here a telegram asking for suphate and urea which is urgently required for 5000 acres. And this telegram is from the Farmers' Association, Tiruchi. இந்தத் தந்தியை அமைச்சரவர்களுக்குக் கொடுக்கின்றேன். அதிலே குறிப்பிட்டுள்ளபடி, எங்காவது குறைபாடு இருந்தால், உடனடியாக அனுப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெறும் துண்டுச் சீட்டு கேட்டார்கள், நான் தந்தியே கொடுக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் மீண்டும் இந்த மாதிரி பொதுப்படையான குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார். 'ஃபார்மர்ஸ் அசோசியேஷன்' என்றால் என்ன என்று எனக்குத் தெரியும், யார் வேண்டுமானாலும் பெயர் வைத்துக் கொள்ளலாம். இன்ன ஊரிலே உள்ள கிரெடிட் சொசைட்டியிடம் கையிருப்பு இல்லையென்று பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்வார்களா? இந்த ஊரிலே உரம் இல்லையென்று சொல்வார்களா? 'ஃபார்மர்ஸ் அசோசியேஷன்' என்று வந்த ஏதோ ஒரு 'டெலிகிராமை' வைத்துக் கொண்டு சொல்லாதீர்கள் (குறுக்கீடு) நான் திரும்பவும் சொல்கிறேன், உர விநியோகம் இரண்டு வகையாக நடக்கிறது. ஒன்று மாநில அரசு மூலமாக, கிரெடிட் சொசைட்டி மூலமாக இருக்கிறது. இன்னொன்று டீலர் மூலமாக





இருக்கிறது. நீங்கள் இன்ன கிரெடிட் சொசைட்டியிலே உரம் இல்லை, அல்லது உரம் விநியோகிக்கவில்லையென்று சொன்னால் எனக்கு உதவியாக இருக்கும்.

(திரு. பெ. சீனிவாசன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பேசியான விஷயம், இதற்காக நேரத்தை வீணாக்காதீர்கள். . . .

**திரு. பெ. சீனிவாசன்:** தயவு செய்து நேரத்தை வீணாக்குவதாகச் சொல்லாதீர்கள். . . .

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** முதலமைச்சர் பதில் சொன்ன பிறகு நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டாயிற்று. அதற்குப் பிறகு, விவசாயத் துறை அமைச்சர் இப்படி பதில் சொல்லலாமா?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** சார், நேற்று நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள், உரம் இல்லாதவர்கள் சின்ன துண்டு, தாள்—கார்ட் என்று கூடச் சொல்லவில்லை—கொடுங்கள் என்றார். அவர் அடிக்கடி வேடிக்கையாகப் பேசுவார், நம்முடைய அமைச்சரைப் பற்றி தெரியாதா? கார்ட் கூடத் தேவையில்லை, சாதா தாள் போதும் என்றார். இன்றைக்குத் தந்தியே வந்திருக்கிறது. ஸ்தாபனக் காங்கிரஸ் தலைவர் சொல்லியிருக்கிறார், அதைப்பற்றி. அதற்கு, இப்படி ஒரு அசோசியேஷன் இருக்கிறதா என்று அமைச்சர் கேட்கிறார். இப்படி சொல்கிற அமைச்சர், நாளைக்கு ஒரு விவசாயி தாள் கொடுத்தால், நீ விவசாயியே இல்லையென்று சொன்னாலும் சொல்வார். காரணம், முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பதிலே நம்முடைய அமைச்சர் கெட்டிக்காரர் என்று எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டே இருந்தால் எப்படி? பொன்னப்ப நாடார் அவர்கள் இப்பொழுது வேண்டுமானால் சொல்லட்டுமே. எந்த ஊரிலே, எந்த சொசைட்டியிலே இல்லை? எனக்குக் குறிப்பாகச் சொன்னால் நான் கவனிக்க முடியும். (கூச்சல்—குழப்பம்)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நமது அமைச்சரவர்களுக்கு எல்லா விஷயங்களையும் விசாரிப்பதற்குப் போதிய வாய்ப்பு இருக்கிறது, காரியதரிசிகள் இருக்கிறார்கள், மாவட்ட கலெக்டர்கள் இருக்கிறார்கள், இன்னும் மற்றவர்கள் இருக்கிறார்கள். நான் கொடுத்த இடத்தில் குறைபாடு (தட்டுப்பாடு) இருக்குமானால், உடனடியாக அனுப்பிக் கொடுக்க வேண்டும். தனிப்பட்ட முறையிலே உரம் கேட்கவில்லை; விவசாயிகளுக்காக, விவசாயிகள் அனுப்பிய தந்தியைத் தான் முறையாகத் தந்திருக்கிறோம். இதிலே எந்தவிதமான அரசியலையும் புகுத்த விரும்பவில்லை. . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் அளித்த வாக்குறுதியே, என்னுடைய பதில் உரையில், இந்தத் தந்தி உள்ளிட்ட எல்லா விவரங்களையும் விசாரித்து என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது என்று தெரிவிக்கிறேன் என்பதுதான். மறுபடியும், பொன்னப்ப நாடார் அவர்கள் தந்தியைக் கொடுத்ததால், மறுபடியும் இந்தப் பிரச்னை உயிர் பெற்றுவிட்டது. நான் தந்த வாக்குறுதியை அப்படியே நம்பி, நாளையோ நாளை மறுதினமோ விவரங்களைத் தருகிறேன் என்ற முறையில், இதனை அப்படியே விட்டுவிட்டு, நண்பர் குருசாமி அவர்களைப் பேச வாய்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார். அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, எதாவது ஒரு சொஸைட்டியைக் குறிப்பிட்டுச் சொல்லச் சொன்னார்கள். ரூரல் மார்க்கெட்டிங் சொஸைட்டியிலே யூரியா 4, 5 மாதங்களாகக் கிடையாது, இன்று வரையில் கிடையாது. இவர்கள் மார்க்கெட்டிங் சொஸைட்டிக்கு அனுப்பி வைப்பார்களா? விவசாயிகள் அதனைக் கேட்கிற காலம் அக்டோபர் மாதம். இப்பொழுது அறுவடைக் காலத்திலே உரம் ஸ்டாக் இருக்கிறது. அமைச்சர் சொல்வதிலே உண்மை இருக்கிறது. தேவையில்லாதபொழுது ஸ்டாக் இருக்கிறது. அக்டோபரிலும், பிப்ரவரியிலும் யூரியாவும் இல்லை, காம்ப்ளெக்ஸ்ஸும் இல்லை. அப்படி இருக்கும்போது நாம் தேவையானதைக் கேட்கும்போது அனுப்பிக்கொண்டிருந்தால் சரி;



கார்ட் அனுப்பினால் இப்பொழுது உரம் இருக்கலாம், ஆனால் இப்பொழுது தேவைப்படவில்லை. தேவையில்லாத நேரத்திலே பிரயோசனம் இல்லை. உங்கள் உரம் இருப்பதைப்பற்றி பேசிப் பிரயோசனம் இல்லை. அக்டோபர் மார்க்கெட்டிங் சொஸைட்டியிலே யூரியா இல்லை. அக்டோபர் மாதத்திலே தேவைப்படும்போது அறுவடைக் காலத்திலே தருவோம் என்று சொல்லி தப்பித்துக்கொள்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனியாக நீங்களே ஸ்பீச் கொடுத்துக் கொண்டிருப்பது சரியல்ல. உங்கள் வாய்ப்பு வரும்போது சொல்லுங்கள், பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவரவர்களே, இந்தப் பிரச்னை முடிந்து விட்டதாக பேரவைத் தலைவர் தீர்ப்புத் தந்தீர்கள். ஆனால் அந்தத் தீர்ப்பை அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளாமல் குறுக்கீடு செய்ததால்தான் என் ஒழுங்கு பிரச்சனையை கிளப்புகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அவர் சொல்வதிலே பிரச்னை இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவரவர்கள் தங்கள் நேரம் வரும்பொழுது எடுத்துச் சொல்லட்டும். மாண்புமிகு உறுப்பினர் குருசாமி அவர்கள் பேசுகின்ற நேரம், அவரைப் பேச விடுவதுதான் முறை.

**Dr. H. V. HANDE:** Mr. Deputy Speaker, Sir, I would like to raise a point of order.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குருசாமி அவர்களைத் தாங்கள் பேச அழைத்தீர்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் கையை ஆட்டி உட்கார், உட்கார் என்று சொல்லி அவரை உட்கார வைக்கிறார். அப்படி உட்காரவைப்பது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு வேளாண்மைத் துறை

[திரு. எஸ். ஆறுமுகம்] **[1974 டிசம்பர் 16**

அமைச்சர் அவர்கள் எந்தக் கிராம கூட்டுறவு நாணய சங்கத்திலாவது உரம் இல்லை என்று சொன்னால் நான் அனுப்பி **வைக்க** ஏற்பாடு செய்கிறேன் என்ற விளக்கத்தைச் சொன்னார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது முடிந்துபோன விஷயம், அதைக் கிளப்ப வேண்டாம். உறுப்பினர் திரு. சீனிவாசன் இன்னொரு உறுப்பினரைப் பார்த்து உட்கார் என்று சொல்வது, கையை ஆட்டுவது, காலை ஆட்டுவது, உட்கார் என்று சொல்வது முறையல்ல.

THIRU P. SEENIVASAN: Sir, a point of order. I don't think the Deputy Speaker has got the right to cast any insinuation upon an hon. Member......

MR. DEPUTY SPEAKER: The Deputy Speaker is not casting any insinuation; but no hon. Member here has got any right to dictate terms to any other hon. Member here. That is not permitted......

THIRU P. SEENIVASAN: The Deputy Speaker has powers. But it should not be misused......

MR. DEPUTY SPEAKER: No. no......

THIRU P. SEENIVASAN: Please don't misuse your powers; the Deputy Speaker cannot misuse his powers or rights......

(Some hon. Members stood up in their seats, and were speaking in loud voice).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீனிவாசன், தாங்கள் துணைத் தலைவராக இருந்திருக்கிறீர்கள், நானும் துணைத் தலைவர். இரண்டு பேர்களும் வழக்கறிஞர்கள். நான் தலைவர் என்ற நிலையிலிருந்து பேசுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் . . .



1974 டிசம்பர் 16]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் தயவு செய்து உட்காருங்கள், அவரவர் இருக்கையிலே அமருங்கள். டாக்டர் ஹாண்டே அவருடைய பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லட்டும்.

No member can dictate terms to any other member. The Chair has got to guide the proceedings. All Hon. Members should resume their seats.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்—கூச்சல், குழப்பம்)

**திரு. பெ. சீனிவாசன்:** தாங்கள் கையை ஆட்டுவது, காலை ஆட்டுவது என்று பேசியது சரியல்ல. ஒரு உறுப்பினரைப் பற்றி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பார்த்து கையை ஆட்டுவது, காலை ஆட்டுவது முறையல்ல என்றுதான் சொன்னேன். அடுத்த உறுப்பினரை மிரட்டுகிற மாதிரிப் பேசுவது சரியல்ல என்றுதான் சொன்னேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** மரியாதை கொடுத்தால்தான் மரியாதை கிடைக்கும். மரியாதை கொடுக்காவிட்டால் எவ்வளவு பெரிய கொம்பனாக இருந்தாலும் ஒன்றும் செய்யமுடியாது.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** சீனிவாசன் பேசுவது முறையல்ல. தயவுசெய்து எல்லோரும் அவரவர் இருக்கையிலே அமருங்கள்.

**திரு. பெ. சீனிவாசன்:** தாங்கள் சொன்னது முறையல்ல, அதை எக்ஸ்பஞ்ச் பண்ணுங்கள். . .

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** நீங்கள் இப்படிச் செய்து கொண்டிருந்தால் எக்ஸ்பஞ்ச் அல்ல, எக்ஸ்பெல் பண்ண வேண்டியிருக்கும்.

(கூச்சல், குழப்பம்)

MR. DEPUTY SPEAKER: As the hon. Member, Thiru Seenivasan is obstructing the proceedings of the House, I direct that he should withdraw from the House.

THIRU P. SEENIVASAN: Thank you, Sir,

(Thiru P. Seenivasan then withdrew from the House.)

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த கூச்சலை ஆரம்பித்ததே திரு. ஆறுமுகம் அவர்கள்தான்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I suggest that the House may now be adjourned for five minutes......

MR. DEPUTY SPEAKER: No necessity to adjourn the House. The hon. Member, Guruswami may continue now......

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், குருசாமி அவர்கள் பேசட்டும். திரு. எட்மண்ட் எழுப்புவது என்ன பாயின்ட் ஆப் ஆர்டரா?

**திரு. முனு ஆதி:** உறுப்பினரை அனுப்பினீர்களே அதைப் பற்றிக் கேட்க விரும்புகிறார். அதற்கு இடம் இல்லை என்றால் கோபத்தில் எல்லோரையும் அனுப்பிவிடுங்கள், போய்விடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோபம் ஒன்றும் இல்லை. திரு. எட்மண்ட். . .

**திரு. க. உரொ. எட்மண்ட்:** துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். அதைப்பற்றித் தாங்கள் கூறியபோது கையை ஆட்டுவது காலை ஆட்டுவது முறையல்ல என்று தாங்கள் சொன்னதாக சொல்கிறார்கள், என்னுடைய காதில் விழவில்லை. தாங்கள் அப்படிச் சொல்லி இருந்தால் சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிற தங்கள் வாயிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வரக்கூடாது; அந்த நாற்காலியிலிருந்து வரக் கூடாது. உறுப்பினர்களை மதித்தால்தான் அவர்களும் மதிப்புக் கொடுப்பார்கள், தாங்கள் பயன்படுத்தியிருந்தால் அந்த



வார்த்தைகளைப் பெருந்தன்மையோடு திரும்பப் பெறுவதுதான் முறை. ஆகவே, திரும்பப் பெறவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னுடைய விளக்கத்தை நான் சொல்லிவிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் எழுந்து உறுப்பினர் திரு. குருசாமி அவர்கள் பேச எழும்போது உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் அவரைக் கையை ஆட்டி உட்காரவைக்கிறார், அது முறைதானா சரிதானா என்று கேட்டார். எந்த உறுப்பினராக இருந்தாலும் அடுத்த உறுப்பினரைப் பார்த்து எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்வதற்கு அவைத் தலைவருக்குத்தான் உரிமை உண்டே தவிர, வேறு யாருக்கும் உரிமையில்லை என்று நான் அதற்கு ரூலிங் கொடுத்தேன். அப்படிக் கொடுத்தவுடன் பல்வேறு செயல்களிலும் சொற்களிலும் ஈடுபட்டதால்தான் வருந்தத்தக்க இந்த முடிவிற்கு வர நேர்ந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. குருசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

THIRU G. R. EDMUND: I want to know definitely from the Chair whether he is going to withdraw those words.

MR. DEPUTY SPEAKER: I have given my explanation.

THIRU G. R. EDMUND: Then, we are withdrawing from the House.

(The A.D.M.K. Members then withdrew from the House).

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த வருந்தத்தக்க நிகழ்ச்சி ஏற்பட்டு எல்லோருடைய மனதையும் புண்படுத்தியிருக்கிறது. ஆளுங்கட்சியில் ஒரு சிலரும், எதிர்க்கட்சியில் ஒரு சிலரும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட நேர்ந்த நிலையில் திரு. சீனிவாசன் அவர்களை தாங்கள் நேம் செய்ததை புனர்பரிசீலனை செய்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருந்தாலும் தாங்கள் அதை புனர்பரிசீலனை செய்து திரும்பவும் இந்த மன்றத்திலே அவர்களை அழைக்க வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். எல்லா எதிர்க்கட்சிகளின் உணர்வையும் மதிக்கக்கூடிய வகையிலே புனர்பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் இந்த அவையிலே ஒளிமிகுந்த விவாதங்களை நடத்துவதுதான் நல்லது. அந்த மரபைத்தான் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் எல்லாக் கட்சிகளும் பின்பற்ற வேண்டும். இன்று அவையிலே நடந்தவைகள் உண்மையிலேயே மிகவும் நமக்கு வேதனையை அளிக்கின்ற சம்பவங்களாகும். பிரச்னை முடிந்து, திரு. குருசாமி அவர்கள் பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில் ஒரு விளக்கம் தர அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் எழுந்து, பெரிய அளவிற்கு வளர்ந்து, நான் இதுபற்றிய விவரங்களை என்னுடைய பதிலில் தருகிறேன் என்பதோடு முடித்திருக்க வேண்டும். பிறகு ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுந்து, நண்பர் ஆறுமுகம் அவர்கள் கேட்க, அதற்குத் தாங்கள் தந்த ரூலிங், அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களிடத்தில் அதிருப்தியை உருவாக்கி மீண்டும் ஒரு அமளி ஏற்பட்டு, அதற்குப் பிறகு நண்பர் சீனிவாசன் அவர்கள் மீது ஒரு நடவடிக்கை எடுக்கும்படியான தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலைக்கு ஆளாகியிருந்தாலும், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியபடி அனைவரும் இருந்து, விவாதத்திலே ஈடுபடுவதுதான் நல்லது என்ற முறையிலே அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்ற வேண்டுகோளை நானும் தங்கள் முன்னால் வைக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்று நடந்த விவாதத்திலே நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினரை வித்ட்ரா செய்ய வேண்டுமென்று சொன்னீர்கள். ஆனால் இந்தச் சபையைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அவர் மீது மட்டும் தவறு இல்லை, இரண்டு புறமும் தவறுகள் இருந்தன என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அங்கே எத்தனை பேர் சப்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு என்ன நியாயம் வழங்கினீர்கள்? அவர்களுக்கு ஒரு நியாயம், இவர்களுக்கு ஒரு



நியாயம் என்றால் எதிர்க்கட்சிகளால் எப்படி சரியாக வேலை செய்ய முடியும்? சேரிலே இருப்பவர்கள் இரண்டு கட்சிகளுக்கும் வேறுபாடு இல்லாத அளவில் தீர்ப்பு கூறுகிறார்கள் என்றால் எதிர்க்கட்சிக்காரர்கள் தைரியமாக வேலை செய்ய முடியும். இந்த வம்பை ஆரம்பித்தவரே அந்தப் பக்கத்தில் இருப்பவர்தான். அவருக்கு ஒத்தாசையாக எத்தனைபேர் சப்தம் போட்டார்கள். கையை ஆட்டுவது, காலை ஆட்டுவது என்று சபையிலே பேசுவது, அதிலும் நாற்காலியிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வரக்கூடாது. அப்படிப்பட்ட வார்த்தைகளை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டும். இதில் நியாயம் வழங்குவதற்கு முன்வந்தால்தான் எங்களைப் போன்ற எதிர்க்கட்சிகளால் முறையாக வேலை செய்ய முடியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், நான் குறிப்பிட்ட எந்த உறுப்பினரையும் குறைத்துச் சொல்ல வேண்டுமென்று விருப்பப்பட்டதே கிடையாது. ஏற்கனவே முதலமைச்சர் சொல்லி, பிறகு பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதன்பேரில் அந்தப் பிரச்னை முடிந்து விட்டது. அப்படி முடிந்ததற்குப் பிறகு ஒரு உறுப்பினர் ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்பினார். சூடு அமைந்திருக்கிறபொழுது உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரைக் கிளப்பினார்கள். இம்மாதிரியான பிரச்னைகள் கிளம்பும் நேரத்தில் இப்படிப்பட்ட முடிவுகள் கொடுக்கப்பட்டால் அது பிரச்னையாகிவிடும். இப்படிப்பட்ட சில காரியங்களைச் செய்யும்பொழுது கஷ்டம்தான். ஆகவே, யார் தகராறு செய்கிறார்கள் என்பதைவிட ஓரளவிற்கு அமைந்து போகிற நேரத்தில் மீண்டும் தூண்டுகின்ற முறையிலே அவர்களுடைய நிலை இருந்தது என்பது என் கருத்து.

அதற்குப்பிறகு நடந்த சம்பவங்கள் முதலமைச்சர் சொன்னது மாதிரி வருத்தப்படக்கூடிய சம்பவங்கள். தாங்கள் அப்படி யாரையாவது வித்ட்ரா செய்ய வேண்டுமென்றால் இன்னும் 5 பேர்களையும் அப்படிச் செய்ய வேண்டும். பலரும் எழுந்து நின்று காதால் கேட்க முடியாத வார்த்தைகளையெல்லாம் சொன்னார்கள். யார் என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. சட்டமன்ற முறைக்கு மீறி எழுந்து சவால் விடுவதும், எதிர் சவால் விடுவதுமாகச் செய்தார்கள். அப்படிச் சவால் விட்டவர்களையெல்லாம் வெளியேற்றியிருந்தால் அது பொருத்தமாக இருக்கும். இல்லை

*[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 16*

யென்றால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்களை மட்டும், இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கலாம். நாளைக்கு எங்கள் கட்சியாக இருக்கலாம், எதிர்க்கட்சியில் இருப்பவர்களை மட்டும் அந்த ஆசனத்தில் இருக்கின்ற தங்களைப் போன்றவர்கள் வெளியேறச் சொல்வார்கள் என்ற நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், இதைப் புனர் பரிசீலனை செய்வது மட்டுமல்லாமல், தாங்கள் இந்தச் சம்பவங்களின்மீது உங்கள் கருத்தையும் அந்த சேரிலேயிருந்து சொன்னால் எங்களுக்கு கைடன்ஸாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் சொன்னதை கவனமாகக் கேட்டேன். இங்கே பல்வேறு உறுப்பினர்கள், சற்றுச் சூடேறி ஒருவரையொருவர் பார்த்து சவால் விடும் நிலைக்கு வந்தது. அவைகளைப் பற்றியெல்லாம் விட்டுவிட்டு, உறுப்பினர் திரு. சீனிவாசன் மட்டுமே இந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கின்ற பேரவைத் துணைத் தலைவரை அல்லது தலைவரைப் பார்த்து, எவ்வளவு பெரிய கொம்பனாக இருந்தாலும் நான் கவலைப்படவில்லை என்று சொன்னதால், எந்த ஒரு உறுப்பினர் வந்தாலும் நாற்காலியில் உட்கார்ந்திருப்பவருக்குரிய அந்தஸ்தை அளித்து சபையின் ஒழுங்குமுறைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தின் காரணமாக அவரை வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இங்கேயுள்ள உறுப்பினர்கள் அனைவரும் நாற்காலியிலே உட்கார்ந்திருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களோடு ஒத்துழைத்து சபை நடவடிக்கைகளைச் சிறப்பான முறையில் நடத்தினால் நாட்டுமக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்வதற்கு நல்ல முறையில் அமையும் என்று சொல்லி, அந்தச் சூடான நேரத்தில் உறுப்பினர் அவர்களை வெளியேற்றியதை மறுபரிசீலனை செய்து வெளியேற்றிய அந்த உத்தரவை ரத்து செய்து, திரும்ப உறுப்பினர்கள் அவையில் கலந்து கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்த உறுப்பினராக இருந்தாலும், நாற்காலியில் இருப்பவர்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவரைப்பற்றிச் சொல்வதை விட்டுவிட்டு கருத்துக்களைப் பேசும்படி எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து திரு. குருசாமி அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.



*1974 டிசம்பர் 16]*

**திருமதி சத்தியவாணிமுத்து :** துணைத் தலைவரவர்களே, இங்கே ஒரு அமளி ஏற்பட்டு, நீங்கள் தீர்ப்பும் கூறிவிட்டீர்கள். அந்தத் தீர்ப்பு வரைக்கும் நான் கூட ஒத்துக் கொள்கிறேன். அந்த அமளிக்கு எது ஆரம்பம் என்பதையும், அதற்கான தீர்ப்பையும் நீங்கள் கூறவில்லை. அதற்குக் காரணமாக இருந்தவர் மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள்தான். அமைச்சர்கள் உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லும்பொழுது சரியான தகவல்களைக் கொடுக்க வேண்டும், அப்படியில்லாமல் கேலியும் கிண்டலுமாகப் பேசுவது எதிர்க்கட்சியிலே இருப்பவர்களுக்கு வருத்தத்தையும், ஆத்திரத்தையும் உண்டாக்குகிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூட அவராகவே முன்வந்து நான் விளக்கம் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள், இந்த மன்றத்தில் இல்லையென்றாலும் தனியாகவாவது அந்த அமைச்சர்களை அழைத்து, எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் பதில் சொல்லும்பொழுது இப்படிப்பட்ட பதில்களைச் சொல்லாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால் நன்றாக இருக்கும்.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, உரப்பிரச்னையில் முதலமைச்சரவர்கள் சொன்னதன்பேரில் இந்தப் பிரச்னையை நான் விட்டுவிட்டு மற்றபடி விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு உரம் கொடுக்கப்படும், அது எந்தெந்த நிலங்களுக்குக் கொடுக்கப்படும் என்பதையும் முதலமைச்சரவர்கள் நாளைக்கோ, நாளை மறுதினமோ அவர்களுடைய பதில் அறிக்கையில் சேர்த்துக் கொடுத்தால் இந்த நாட்டு விவசாயிகள் நல்லதொரு ஏற்பாட்டைச் செய்து கொள்வார்கள்.

அடுத்து, உணவுப் பிரச்னையை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு அறிக்கை வருகிறது, சென்னையில் படியரிசி 3 ரூபாய், தஞ்சாவூரிலே 3 ரூபாய் என்று சட்டமன்றத்தில் உட்கார்ந்து கொண்டு அமைச்சர்கள் கூறுகிறார்களே தவிர அங்கே கிராமப்புறங்களிலோ அல்லது மற்ற சிறு நகர்ப்புறங்களிலோ 7 ரூபாய், 8 ரூபாய், 10 ரூபாய் என்று விற்கின்ற அவல நிலை இந்த ஆட்சியில் இருக்கிறது. வறட்சி சரியான நிர்வாகம் செய்யாததன் காரணமாக இருக்கிறது. வறட்சி ஒரு பக்கம் இருந்தாலும்கூட பதுக்கி வைக்கப்பட்ட நெல், அரிசி

[திரு. நா. வெ. குருசாமி] [1974 டிசம்பர் 16

போன்றவைகள் இந்த அரசிடம் சரியான திட்டங்கள் இல்லாத காரணத்தினாலே இம்மாதிரி விலைவாசி உயர்விற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக எல்லாக் கிராம மக்களுக்கும் சரியான முறையில் விநியோகம் செய்ய உணவு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இப்பொழுது மழை பொய்த்து விட்டதால் பாசன வசதி கிடைக்கவில்லை. கிணறுகளில் இருக்கின்ற கொஞ்சநஞ்ச தண்ணீரை இறைப்பதற்குக்கூட பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கேட்டால் கம்பி இல்லை, சோக் இல்லை என்று இந்த முறைகளில் பதில் சொல்லும் நிலைமையிருக்கிறது. ஆகவே, மின்சாரத் துறை அமைச்சரவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன், எங்களுடைய மாவட்டத்திற்கு, அங்கே வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கிற அந்த ஏழை விவசாயிகளுக்கு, கிணறுகளுக்குத் தேவைப்படும் பம்பு செட்டுகளுக்கு உடனடியாக மின்விசை அளிப் பதற்கு அதிகப்படியான ஒயர்களைக் கொடுத்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி என்னுடைய பகுதியான ஆண்டிப்பட்டி பகுதியில் குடி-நீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரையில் கடந்த நான்காண்டுக் காலமாக, ஆண்டிபட்டி பேரூராட்சி மன்றத்திற்கு வைகையிலே யிருந்து 27 இலட்சம் ரூபாயிலே மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக் கிறது. அதற்குப் பரிசோதனை செலவு தொகை 20,000 ரூபாய் என்று சர்க்காரிலே வாங்கியிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சி யைச் சேர்ந்த உறுப்பினர் என்ற ஒரேயொரு காரணத்திற்காக நீங்கள் அந்தத் திட்டத்தை உடனடியாக செய்யாமல் ஏனோதானோ என்று இருக்கிறீர்கள். இம்மாதிரி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒன்றும், ஆளுங்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் இருக்கும் தொகுதிக்கு ஒன்றுமாகச் செய்யக்கூடாது, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் தொகுதியில் நீங்கள் சரியாகக் கவனம் செலுத்துவதில்லை. ஆகவே, இம்மாதிரி நீங்கள் கட்சிக் கண்ணோட்டத்துடன் உங்களுடைய ஆட்சியை நடத்தாமல் நல்ல முறையிலே சீரான முறையில் நடத்திச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.



1974 டிசம்பர் 16] [திரு. நா. வெ. குருசாமி]

(முற்பகல் 11-30)

பல ஊழல் புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. நானே கடந்த சட்டமன்றக் கூட்டத்தில், ஊராட்சி ஒன்றியங்களில் சிமென்ட் மூட்டை, மற்ற சில பொருள்கள் அதிகமான விலைக்கு விற்கப் படுகிறது என்று குறிப்பிட்டுக் கூறியிருக்கிறேன். இங்கே பேசும் போது ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கப்படுகிறது. இன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்லியும்கூட இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நாங்கள் யார் மேல் புகார் சொல்லி குற்றச் சாட்டு கூறுகிறோமே அவர்கள் 'சட்டமன்றத்திலே சொல்லி விட்டால் எங்களை என்ன செய்ய முடியும்?' என்று இறுமாப்புடன் இருக்கக்கூடிய அவல நிலைமை இருக்கிறது. நீங்கள் நிர்வாகத்தில் இருக்கப் போகிற கொஞ்ச காலத்திற்காவது சட்ட மன்ற உறுப் பினர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டுகளைக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது வறட்சி நிவாரண வேலைகளை மேற்கொள்ளுவதாக முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த வேலைகளை மேற்கொள்ளும்போது கட்சிக் கண்ணோட்டத்துடன் பார்க்காமல், மந்திரிகளின் தொகுதி, ஆளும் கட்சி உறுப்பினர்களின் தொகுதி என்று திட்டங்களைத் தீட்டாமல், உண்மையிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கும் பகுதிகளிலே கட்சி வேறு பாடின்றி நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி நல்லாட்சியல்ல என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியக் கூட்டம் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக நடைபெறவில்லை. முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் ஒன்றியத் தலைவராக இருக்கிறார். அந்த ஒன்றியத்தை ஏன் இதுவரை கலைக்காமல் இருக் கிறார்கள். உங்களுக்கு ஒரு சட்டம், மற்றவர்களுக்கு வேறு சட்டமா? இதிலே ஏன் கட்சிக் கண்ணோட்டம் பார்க்க வேண்டும்?

எங்களுடைய பகுதி மக்கள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். உசிலம்பட்டி தொகுதி உறுப்பினர் நண்பர் கந்தசாமி அவர்கள் கூறியது போல் எங்கள் பகுதி மக்கள் எல்லாம்

வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து வறட்சி நிவாரண வேலைகளை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. முனியாண்டி :** இப்போது பேசிய உறுப்பினர் அவர்கள் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்தின் கூட்டம் நடைபெறவே இல்லை என்ற தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். சென்ற மாதம் ஊராட்சி மன்றக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. கோபால் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுகிறேன் என்று கூறியவர்கள் இன்று ஒரு கிலோ அரிசிகூட மூன்று ரூபாய்க்குக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அதற்காக மூச்சந்தியில் வைத்துச் சவுக்கால் அடிப்பது அரசியல் நாகரிகம் ஆகாது என்ற காரணத்தால் என்னுடைய கண்டனத்தை இந்தப் பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல மாவட்டங்களில் பயங்கரமான வறட்சி நிலைமை நிலவுகிறது என்று 12–11–1974-ல் இந்தப் பேரவையில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். ரோட்டரி கிளப் முதல்வர் அவர்கள் முன்னிலையிலேயே குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கு இரண்டு படி அரிசி நன்கொடையாக அளிக்கும் அளவுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது, பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது.

நான் இந்த நேரத்தில் ஒன்றைக்கூற விரும்புகிறேன். கடந்த செப்டம்பர் 14-ம் தேதி டில்லியில் உணவுப் பிரச்சனை பற்றி விவாதிக்க மாநில முதல்வர்கள் கூடினார்கள். நம்முடைய துரதிருஷ்டம் நம்முடைய முதல்வர் அவர்கள் அதிலே கலந்து கொள்ளவில்லை. அன்று முதல்வர் அவர்கள் மதுரையிலே தங்கப் பதக்கம் பரிசளிப்பு விழாவிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்த விழாவிலே



அவை முன்னவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டிருக்கலாம். அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் முன்பு அமெரிக்கா சென்றிருந்தபோது காவல் துறை அவை முன்னவர் பொறுப்பில் இருந்திருக்கிறது. அந்தத் தகுதி அவருக்கு இருக்கிறது. எல்லா மாநில முதல்வர்களும் உணவுப் பிரச்சனை பற்றி விவாதிக்கப்பட்ட அந்த கூட்டத்திலே கலந்து கொண்டிருக்க வேண்டிய நம்முடைய முதல்வர் அவர்கள் அதிலே கலந்துகொள்ள தவறி விட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பீட்டுக் குழுவின் 24-வது அறிக்கையில் அதிகாரிகளைப் பற்றிப் பல கடுமையான சொற்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

'Miserably negligent collusion, conspiracy, shielding'

என்று கடுமையான சொற்களால் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே இந்தப் பேரவையில் நானும் தோழர் கே. டி. கே. அவர்களும் இதுபோன்று அதிகாரிகள் கள்ளக் கடத்தல்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று எடுத்துக் கூறியிருக்கிறோம். அதே முறையில்தான் இந்த அறிக்கையும் இருக்கிறது.

இந்த அறிக்கையைப் பற்றிக் கூறும்போது மூன்று குற்றச் சாட்டுக்களைக்கூற விரும்புகிறேன். உணவுத் துறையினரின் கவனக் குறைவால் அரசாங்கத்திற்கு வரக்கூடிய பாக்கி நிச்சயமாக 3½ கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று குற்றம் சாட்டுகிறேன். இரண்டாவது அப்துல் சலாம் என்பவருக்கும் முன்னாள் உணவு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களுக்கும் தொடர்பு இருக்கிறது என்று குற்றம் சாட்டுகிறேன். மூன்றாவது, நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மீது இந்த அறிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்படுகின்றவர்கள் சேர்ந்து பல நோட்டீஸ்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த அறிக்கையிலே பெரும் நிலுவையுள்ள ஒருசில குறிப்பிட்ட விவகாரங்களைத்தான் நாங்கள் பரிசீலித்தோம் என்று குறிப்பிட்டிருக்கிற பத்து நபர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வரவேண்டிய

தொகை சுமார் 43,62,742 ரூபாய். ஆகவே, மற்றக் கணக்கையும் பார்த்தால் நிலுவை 3½ கோடி ரூபாய்க்கு மேல் நிச்சயமாக இருக்கும்.

கம்பம் கூடலூர் பகுதியில் உத்தமபாளையம் தொகுதியில் லெவி முறையில் செலுத்தாதவர்கள் கள்ளக்கடத்தலில் பறிமுதல் செய்த அரிசியை அரசாங்கத்திற்கு கொடுக்காமலே இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து லட்சக்கணக்கான ரூபாய் வரவேண்டியிருக்கிறது.

இரண்டாவது குற்றச்சாட்டாக அமைச்சர் ப. உ. சண்முகத்திற்கும் அப்துல் சலாம் என்பவருக்கும் தொடர்பு இருக்கிறது என்ற குற்றத்தைச் சாட்டினேன். அப்துல் சலாம் அன்று நெல் அறவை ஏஜண்டாக இருந்தார். அமைச்சர் அவர்கள் பி.டபிள்யூ.டி. இலாகாவுக்கு மாறியவுடன் அவரும் பி.டபிள்யூ.டி. காண்டிராக்டராக மாறிவிட்டார்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அவைக்கு முற்றிலும் தவறான தகவலைத் தருகிறார். நான் உணவமைச்சராக இருக்கும் போதே அவர் காண்டிராக்டராக இருந்திருக்கிறார். முஸ்லீம் தோழர் எனக்கு உறவு என்று சொல்லுகிறார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. கோபால்:** நான் அவருக்கு உறவு என்று சொல்லவில்லை. 'தொடர்பு' என்றுதான் கூறினேன். நான் அதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தவறு இருந்தால் திருத்திக் கொள்கிறேன். அந்த அறிக்கையில்—

"The committee does not understand how Thiru Abdul Salam was entrusted with the Government contract involving several lakhs later on."

என்று இருக்கிறது. அதுமட்டுமல்ல

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அது அறிக்கையில் இருக்கிற வாசகமாக இருக்கலாம். எப்போது அவர்கள் காண்ட்ராக்டராக பதிவு செய்து கொண்டார்கள் என்று கேள்வி போடுங்கள் நான் பதில் சொல்கிறேன். அப்போது உங்களுக்கும் விளக்கம் இருக்கும், உலகத்திற்கும் நன்மையாக இருக்கும்.



**திரு. கே. பி. கோபால்:** அடுத்து, அப்துல் சலாமும் அவரது சகோதரரும் செலுத்த வேண்டிய பாக்கி ரூ. 1,13,741 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டாவது பட்டியலில் கொடுத்த கணக்கு ரூ. 4,34,000. ஆகவேதான், நான் இந்தச் குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன். ஒரு பத்திரிகை அவர்களது நிருபரை அனுப்பி, அந்த அப்துல் சலாம் என்பவர் திருவண்ணாமலையில் ஒரு கல்லூரி விடுதி கட்டுவதாக செய்தியை வெளியிட்டிருந்தது. அது தவறாக இருந்திருக்குமானால் அமைச்சர் அவர்கள் அதற்கு மறுப்பு விட்டிருக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** முழுக்க, முழுக்க உண்மையான செய்தி, பி. இ. படித்தவர், என்ஜினியர், அவர் திருவண்ணாமலையில் ஒரு ஹாஸ்டல் கட்டியிருக்கலாம். வேண்டுமென்றால் அவர்களின் தகவலுக்கு நான் மேற்கொண்டும் சுவையான செய்தியைத் தருகிறேன். நான் பொதுப்பணித் துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்டவுடன் உணவுத் துறை செயலாளருக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன், அப்துல் சலாமிற்கு சிவில் சப்ளைஸ் காண்டிராக்டில் பாக்கி இருக்கிறது, டெப்பாஸிட்டை பறிமுதல் செய்யுங்கள், பணம் கொடுக்காதீர்கள் என்று. அதனால் பணம் கொடுக்கமுடியாது என்று உத்தரவு போயிற்று. அதன் பேரில் அவர் கோர்ட்டுக்குப் போனார். அதன் பேரில் ஸ்டே ஆர்டர் வாங்கினார். எனவே, பத்திரிகைகளில் மாலையில் வரவேண்டும் என்று பேச வேண்டாம். எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசுங்கள், எனக்கு அதைப் பற்றி கவலை கிடையாது.

**திரு. ஆலடி அருணா:** அப்துல் சலாம்-க்கு ஏறத்தாழ 4 லட்சம் ரூபாய் அளவிற்கு சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் பாக்கி இருந்தது. அப்போது அவர் சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் காண்ட்ராக்ட் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பொதுப் பணித் துறைக்கு வந்த பிறகு அவருக்கு எப்படி பொதுப் பணித் துறையில் காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது? அப்படி கொடுக்கப்பட்டிருக்கக்கூடாது என்பது மதிப்பீட்டுக் குழுவின் கணிப்பு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வழக்கம் போல் ஆலடி அருணா அவர்கள் தவறான தகவல்களைத் தருகிறார்கள். பத்திரிகைகளும் அவசரப்பட்டு அதைப்பற்றி தலையங்கம் எழுதுவது என்று

வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் பொதுப்பணித் துறை அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு—எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றி கவலை யில்லை—அப்துல் ஸலாம்-க்கு நான் காண்ட்ராக்ட் கொடுத்தேன் என்று அருணா அவர்கள் சொல்கிறார்களா? நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் இருப்பதைப் படிக்க வேண்டாம். எனக்குத் தேவை இல்லை அது. கேள்வி போடுங்கள், நான் பதில் தருகிறேன். காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டதா இல்லையா என்று கேள்வி போடுங்கள், பதில் தருகிறேன். விவரம் தெரியாமல் பேசவேண்டாம். அமைதியோடு பேசுங்கள், நான் பொதுப்பணித் துறை அமைச்சராக வந்த பிறகு அவருக்கு அந்த காண்ட்ராக்ட் கொடுக்கப்படவில்லை.

**திரு. கே. பி. கோபால்:** எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி கவலையில்லை. நான் பொதுப்பணித் துறை அமைச்சராக வந்த பிறகு அப்துல் ஸலாமுக்கு காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது என்று சொல்வது, என்ற குற்றச்சாட்டு முழுக்கமுழுக்க ஆதாரமற்றது, உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகிரங்கமாக மறுக்கிறார்களா? அந்த ரிப்போர்ட்டில்,

"The committee does not understand how Thiru Abdul Salam was entrusted with the Government contract involving several lakhs of rupees later"

என்றிருக்கிறது.

ஆரம்பத்தில் சிவில் சப்ளைஸ் காண்ட்ராக்டராக இருந்தார்கள். ப. உ. ச. அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக வந்த பிறகு அவர் இந்த இலாகாவிற்கு வருகிறார். ஏற்கனவே அவர் திருவண்ணாமலையில் தி.மு.க. செயலாளராக இருந்தவர். அந்த தொடர்பை வைத்துக்கொண்டு அமைச்சர் ப. உ. ச. அவர்கள்



போகிற இலாகாக்களுக்கு எல்லாம் போகிறார். ஏற்கனவே சிவில் சப்ளைஸ் இலாகாவிற்கு பாக்கி ரூ. நாலரை இலட்சம் இருக்கிறது. அப்படியிருக்க பொதுப்பணித் துறையில் காண்ட்ராக்ட் கொடுக்க கூடாது என்று அவர்கள் எதிர்க்கவில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எத்தனை முறை நான் மறுத்தாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். நான் நான் சொல்வது எதனாலோ அவர்களுக்குப் புரியவில்லை. நான் ஒருவேளை சொல்கிற சொல்கிற தமிழ் புரியவில்லையோ அல்லது புரியவில்லை—நான் சக்தி எனக்குபோய் விட்டதோ என்னவோ புரியவில்லை மீண்டும் சொல்கிறேன். நான் பொதுப்பணித் துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு அப்துல் சலாமுக்கு காண்ட்ராக்ட் கொடுக்கப் பட்டது என்று சொல்வது தவறு. திருவண்ணாமலை கல்லூரி விடுதி சம்பந்தமாக காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது என்பது தவறு. நான் விளக்கமாகச் சொல்கிறேன். அப்துல் சலாம் என்பவர் பொதுப்பணித்துறையில் காண்ட்ராக்டராக இருக்கிறார் என்று தெரிந்து செய்தி அனுப்பினேன். சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கு இவ்வளவு பாக்கி இருக்கிறது, பொதுப்பணித் துறையில் அவர் வேலை செய்கிறார், அவருக்கு பணம் கொடுக்காதீர்கள் என்று நான் தெரிவித்தேன். பணம் கொடுக்கமுடியாது என்று சொல்லப் பட்டது. உடன் அவர் நோட்டீஸ் கொடுத்தார். அதன் பேரில் கோர்ட்டுக்குப்போய் ஸ்டே வாங்கினார். இவ்வளவும், ஹைகோர்ட் உண்மைகளை எல்லாம் சொல்கிறேன். இவ்வளவு விளக்கமாக நான் சொல்லியும்கூட அதை ஒப்புக்கொள்ளவிட்டால் என்ன செய்வது?

**திரு. ஆலடி அருணா:** இவ்வளவும் தெரிந்த பிறகு அந்த அப்துல் ஸலாமுக்கு என் பொதுப்பணித் துறையில் காண்ட்ராக்ட் கொடுக்கவேண்டும், என் அவருக்கு அத்துறையில் காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது? அவர் நீதிமன்றத்திற்கு சென்றிருக்கிறார். அவருக்கு ஏன் காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது? அமைச்சர் அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை எதிர்க்கிறார்களா? அது தவறான தக்வல் என்று சொல்கிறார்களா? அந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருப்பது உண்மைக்குப் புறம்பான தகவல் என்று சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : நான் சொல்வதைச் சொல்லியாகி விட்டது. இனிமேல் ஒன்றும் சொல்வதற்கில்லை ஏற்கனவே தெளிவுபடுத்திவிட்டேன். எப்போது கொடுக்கப்பட்டது, ஏன் கொடுக்கப்பட்டது, என்பதைப் பைலைப் பார்க்காமல் சொல்ல முடியாது. நான் பொதுப்பணித் துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரி ஹாஸ்டலுக்கு அவருக்கு காண்ட்ராக்ட் கொடுக்கவில்லை. இதைத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். இதற்கு மேல் என்ன உரிமைப் பிரச்சினை வேண்டுமென்றாலும், அல்லது கேள்விகள் போட்டாலும் பதில் சொல்ல தயாராயிருக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு அவர்களுக்கு காண்ட்ராக்ட் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். திருக்கோவிலூர் ஊராட்சி மன்ற பேருந்து நிலையத்திற்கு காண்ட்ராக்ட் எப்போது கொடுக்கப்பட்டது? செங்கம் விவசாயப் பண்ணைக்கு, அதைக் கட்ட காண்ட்ராக்ட் எப்போது கொடுக்கப்பட்டது? வெள்ளம் வந்தவுடன் திருக்கோவிலூரில் அணை கட்ட காண்ட்ராக்ட் எப்போது கொடுக்கப்பட்டது? முகையூரில் மருத்துவமனை கட்ட காண்ட்ராக்ட் எப்போது கொடுக்கப்பட்டது? இப்படி பல காண்ட்ராக்ட்களின் விவரம் என்னிடம் இருக்கின்றன. இந்தக் காண்ட்ராக்ட்கள் எல்லாம் எப்போது கொடுக்கப்பட்டன? இவையெல்லாம் கொடுக்கப்பட்டது ப. உ. சண்முகம் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக வருவதற்கு முன்னரா? அப்படி முன்பே கொடுத்தது தவறு என்றால் அவருக்கு முன்பு பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த சாதிக் பாட்சா அவர்கள் தவறு செய்திருக்கிறார் என்று இவர் மறைமுகமாகச் சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : சாதிக் பாட்சா அவர்கள் கொடுத்தார்கள் என்று சொல்லி நான் தப்பித்துக் கொள்ள விரும்பவில்லை. செங்கம் விதைப் பண்ணைக்கு யார் கொடுத்தது? செங்கம் விதைப் பண்ணை மத்திய சர்க்காருடையது. அது கூடவா தெரியாது? இப்படி தெரியாமல் பேசுவது சரியல்ல.





**டாக்டர் எச். வி. ஹாண்டே** : அந்த பி. டபிள்யூ. டி. காண்ட்ராக்டர் யார்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : எனக்குத் தெரியாது, அந்த விவரம் எனக்குத் தெரியாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : விவரங்கள் தெரியாமல் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : திருவண்ணாமலையில் உள்ள ஹாஸ்டல் பற்றி கேள்வி. அதற்கு பதில் சொல்கிறேன். 'லேட்டர்' என்று எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். திருவண்ணாமலை ஹாஸ்டல் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி கேள்வி போடுங்கள், பதில் சொல்கிறேன். தமிழ்நாட்டில் எவ்வளவோ காண்ட்ராக்ட்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் பற்றி எனக்கு எப்படித் தெரியும்? கேள்வி போடுங்கள், பதில் சொல்கிறேன். ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட காண்ட்ராக்டாக இருந்தால் அரசுக்கு வரவேண்டும் என்றிருக்கிறது. என் கவனத்திற்கு வரவில்லை என்று நினைக்கிறேன். கேள்வி போடுங்கள். பதில் சொல்கிறேன். யாருக்கு கொடுக்கப்பட்டது என்று. மறைக்கவேண்டிய அவசியமில்லை.

அப்துல் சலாம் காண்ட்ராக்ட் எடுக்கக்கூடாத மகாபாவி அல்ல. அவர் பி.ஈ. படித்தவர். பி.ஈ. படித்தவர்கள் காண்ட்ராக்ட் கேட்கலாம் என்று விதி போட்டிருக்கிறோம். அதில் தவறு இல்லை. இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றிருக்கக்கூடாது. அருணா அவர்கள் நேற்று கூட ஒன்று சொன்னார்கள், மறுக்கலாம் என்றிருந்தேன். யாரோ ஒருவரைச் சொல்லி, உனக்கு உறவு, மாவட்டத்திற்கு மாவட்டம் மாநிலமே மாற்றிக்கொள்கிறாய் என்று கடுமையாகக் கூடச் சொன்னார். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று அண்ணா அவர்கள் சொல்வார்கள். அவர்களுக்கு தலை வணங்குவோம். இப்போது அவர்கள் என்ன சொல்லப் போகிறார்களோ, தெரியவில்லை.

**திரு. ஆலடி அருணா** : அப்துல் ஸலாமுக்கு கொடுக்கக்கூடாது என்பது குற்றச்சாட்டல்ல. சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்டுக்கு இவ்வளவு பாக்கி இருக்கிறது. தவறு செய்திருக்கிறார். மோசடி.

ஊழல் செய்திருக்கிற அப்துல் ஸலாமுக்கு மறுமுறையும் காண்ட்ராக்ட் கொடுக்கக் கூடாது என்பதுதான். ஏற்கனவே அவர் ஊழல் செய்யாமலிருந்தால், ஏற்கனவே அவர் தவறு செய்யாமலிருந்தால், ஏற்கனவே அவர் அரசை மோசடி செய்யாமல் இருந்தால் எந்த காண்ட்ராக்டும் கொடுக்கலாம். கல்வி ரீதியில் அவருக்கு தகுதி இருக்கலாம். ஆனால் தவறு இழைத்தவரை, சிவில் சப்ளைஸ் இலாகாவிற்கு பாக்கியிருக்கிறது, பொதுப்பணித் துறையில் காண்ட்ராக்டராக ஏற்கக் கூடாது என்றுதான் சொல்கிறேன். அப்படி கொடுக்கப்பட்டிருப்பது தவறு என்பதுதான் என் குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏற்கனவே அந்த காண்ட்ராக்டருக்கு உள்ள பேமென்டை கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். அது அரசிடம் இருக்கிறது. உரிமைப் பிரச்சினையாக உரிமையாக வைக்கலாம். அல்லது, கேள்வி போடுங்கள், பதில் சொல்கிறோம். மாலைப் பத்திரிகைகளில் வரவேண்டுமென்று ஏதாவது சொன்னால் அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.

**திரு. கே. பி. கோபால்:** மதிப்பீட்டுக் கமிட்டி ரிபோர்ட்டில் கூறப்பட்டுள்ள தவறுகளுக்கு அன்றைய உணவு அமைச்சர் அவர்கள் முழுப் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிவாரணப் பணிகளைப் பற்றி நமது முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். முன்பு கடுமையான வறட்சி நிலவியபொழுது, அவர்கள் அறிவித்த நிவாரணப் பணிகள் எந்த அளவுக்கு உடனடியாக மக்களுக்குப் போய்ச் சேர்ந்து இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ளவேண்டும். இது போன்ற வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்பொழுது, தார் அடிக்கிறோம் என்று சொல்லும்பொழுது, மக்களுக்கு அந்தப் பலன் போய்ச்சேரவில்லை. அதிகாரிகளும், கண்டிராக்டர்களும், கட்சியினர்களும் தான் பயன் அடைகிறார்கள். போலி ஆஜர் பட்டியல் தயார் செய்து பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. இதை அவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். ஆகவே, இம்மாதிரி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொண்டு பணத்தை விரயமாக்காமல் கஞ்சித்





தொட்டிகளை உடனடியாகத் திறக்கவேண்டும். அதுவும் மாண்பு மிகு உறுப்பினர் திரு. காளிமுத்து அவர்கள் சொன்னது போல சர்வ கட்சி குழுவின் மேற்பார்வையில் கஞ்சித் தொட்டிகள் திறக்க வேண்டும்.

1971-ம் ஆண்டு தேர்தல் முடிந்தபிறகு இந்தப் பேரவையில் முதல் அமைச்சர் அவர்கள் இது மக்கள் தீர்ப்பு மட்டுமல்ல, மகேசன் தீர்ப்பும் என்று கூறினார்கள். மக்கள் தீர்ப்பை நாம் மதிக்க வேண்டும் என்று கூறினார்கள். மக்கள் தீர்ப்பு கொடுக்கிறார்கள், மக்கள் தீர்ப்பை மதிக்கத் தயாராக இருப்பவர்கள் பிப்ரவரியில் நகரச் சபைத் தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்தத் தேர்வில் மக்கள் என்ன தீர்ப்பு கொடுத்தாலும், அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு இந்த அமைச்சர் அவை ராஜிநாமா செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மகேசன் தீர்ப்பு என்று கூறினார்கள். தெய்வ நம்பிக்கை உடையவர்களைத் தான் அறங்காவலர்களாக நியமிக்கவேண்டும். இதை தி. மு. க. வினர் மதிக்கவில்லை. அந்த முறையில் கோவில்களில் தெய்வ நம்பிக்கை உடையவர்களையே அறங்காவலராக நியமித்து, தமிழ் நாட்டில் வறட்சி நிலை ஏற்படாத வண்ணம் பாது காத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து, நிவாரணப் பணிகள் என்ற முறையில் 60,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். 60,000 பம்பு செட்களுக்கு எப்படி மின் இணைப்பு கொடுக்கப்போகிறார்கள்? தொழிற் சாலைகளுக்கு விநியோகத்தை குறைத்துக்கொண்டு மின் இணைப்பு கொடுக்கப் போகிறார்கள். எங்கள் பகுதியிலே உத்தமபாளையம் தாலூக்கா, பெருங்குளம் தாலூக்கா ஆகிய இடங்களில் தொழிற் சாலைகள் அதிகம் இல்லை. அந்தப் பகுதிகளில் இது எப்படி சாத்தியமாகும் என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால், அந்த அதிகாரிகள் கூறுவது என்னவென்றால், மின் இணைப்பு கொடுப்பதற்கு எங்கள் இலாகாவில் போதிய கண்டக்டர்கள் இல்லை, போதிய டிரான்ஸ்பார் மர்கள் இல்லை, எனவே தான் பம்பு செட்களுக்கு மின் இணைப்பு

கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது என்று கூறினார்கள். அப்படியிருக்கும் பொழுது 60,000 பம்பு செட்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று பத்திரிகையில் செய்தி வந்தாலும், மக்கள் திருப்தி அடையவில்லை. அது சாத்தியப்படக்கூடிய ஒரு திட்டம் அல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் நெல்லைக் கொள்முதல் செய்யப்போவதாக தெரிவித்தார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்வது நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்றால், நியமன முறை மாற்றப்படவேண்டும். உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். நியமன முறை வந்ததற்குப் பிறகுதான் கூட்டுறவுத் துறையில் பல தவறுகள் ஏற்படுகின்றன. விவசாயிகள் உறுப்பினர்களாக ஆகிறார்கள். அவர்களே ஜனநாயக முறையில் அவர்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டுமே தவிர, அரசாங்கத்தின் மூலம் நியமனம் கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு உதாரணம், தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற மத்திய வங்கித் தலைவர் அன்றைய தினம் பொதுக்குழு உறுப்பினராக இருந்த மாணிக்கவாசகம் அவர்கள் சுமார் ஒரு லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் வரையில் கையாடல் செய்து அவர் பேரில் அதற்காக வழக்குத் தொடரப்பட்டு, அவர் தண்டனை பெற்றிருக்கிறார்கள். ஒரு ஆட்சி நல்ல முறையில் நடைபெறவேண்டுமென்றால் அதனுடைய கட்சி ஒரு கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும்.

THIRU K. PERIASAMY: The remarks are pertaining to Thiru Manickavasagam. How can the member make personal remarks against him? He is not here to defend himself. Such remarks should not be made திரு. மாணிக்கவாசகம் அவர்களைப் பற்றி சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. கோபால்:** கட்சிக் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று சொன்னேன். இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்பொழுது அவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பணம் தி.மு.க. மகாநாட்டில் 1972-ம் வருஷம் மே மாதத்தில் நடந்த மகாநாட்டில் வசூல். . .





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்த ரெகார்டைப் பார்த்துப் படிக்கிறீர்கள்?

**திரு. கே. பி. கோபால்:** பத்திரிகையில் வந்த செய்தி.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, சமீபத்தில் ஒரு வழக்கு நடைபெற்று முடிந்து, குற்றவாளி தண்டிக்கப்பட்டு விட்டார், எவிடன்ஸில் இருந்ததையெல்லாம் எடுத்து 'பில்டப்' பண்ணி இப்பொழுது இங்கே பேசுகிறார்கள். அது ஜட்ஜ்மெண்டை 'அனலைஸ்' பண்ணுவது போல் ஆகும். ஜட்ஜ்மெண்ட் கொடுத்தது தவறு என்று சொல்லி, அதை புனர் பரிசீலனை செய்வது போலாகும். அதைத் தவிர்க்கும்படி தாங்கள் உறுப்பினர் அவர்களுக்கு ஆலோசனை கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைவிட்டு விடுங்கள். ஏற்கனவே நீதிமன்றத்தில் குற்றவாளி எடுத்துவைத்த அந்த வாதங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாமல், தவறானது என்று சொல்லி, தள்ளிவிட்டுத் தான் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். திருப்பி தாங்கள் அந்த வாதங்களை சட்டமன்றத்தில் சொல்வது சரியாக ஆகாது. ஆகவே, வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. கு. பெரியசாமி:** உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது மாணிக்கவாசகத்தைப் பற்றிய சமாசாரங்களை குறிப்பிட்டதை எக்ஸ்பஞ்ச் பண்ணுவது நல்லது என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசியாக அதைப் பற்றி யோசனை பண்ணலாம்.

**திரு. கே. பி. கோபால்:** பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இரண்டு கப்பல்கள் வாங்கப்படுகின்றன. வ.உ. சிதம்பரம் பிள்ளை செக்கு இழுத்த செம்மல், கப்பல் ஓட்டிய தமிழன் என்று முதல்வர் அவர்கள் பெருமையோடு சொல்லிக் கொண்டு அவர்கள் இழுத்த செக்கை சென்னையில் மக்கள் பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். இரண்டு கப்பல்கள் வாங்கி

யிருக்கும்பொழுது ஒரு கப்பலுக்காவது வ.உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரை வைத்திருக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து கல்லூரிப் பேரவைத் தலைவர்கள் தேர்தலில் கூட மாணவர்களுக்குப் போதிய பாதுகாப்புத் தர இந்த அரசு தவறி விட்டது. அந்த நிலைமையில் பிப்ரவரி மாதம் நடைபெற இருக்கின்ற நகரசபைத் தேர்தலின்பொழுது இந்த அரசு எப்படி போதிய பாதுகாப்பு அளிக்கப்போகிறது என்ற ஒரு அச்சம் இருக்கிறது என்று கூறி, இந்தப் பேரவையில் கொண்டு வந்திருக்கக் கூடிய இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்து, அமர்கிறேன், வணக்கம்.

**திரு. துரை முருகன்:** அங்கத்தினர் கோபால் அவர்கள் பேசும்பொழுது அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்கள் தெய்வ பக்தியுடையவர்களாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். ஒருவரை அறங்காவலராக நியமிக்கும்பொழுது, அவர் தெய்வ பக்தி உடையவரா, தெய்வ பக்தி அற்றவரா என்று எப்படி கண்டு பிடிப்பது என்பதற்கு ஏதாவது அளவு கோல் இருக்கிறதா என்பதை அங்கத்தினர் அவர்கள் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'நோ கிளாரிபிகேஷன்'.

**திரு. துரை முருகன்:** செஞ்சிக் கோட்டை ஏறியவனெல்லாம் தேசிங்கு ராஜா அல்ல. சந்தனப் பொட்டு வைப்பவர்களெல்லாம் பக்திமான் அல்ல. எப்படி தெரிந்துகொள்வது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பட்டை போட்டுக் கொள்வது, கொட்டை கட்டிக் கொள்வது!... (சிரிப்பு)

**திரு. கு. காமாட்சி:** இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலும், கண்டனத் தீர்மானத்திலும் நடந்த விவாதத்தில் வலிவுள்ள கருத்துக்கள் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.





இங்கே பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினால் புஞ்சை தானியங்கள் எல்லாம் அயல் மாநிலங்களுக்கு அனுப்பவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதன் காரணத்தினால் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதனை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக இந்த மாமன்றத்தில் அறிக்கை மூலம் சமர்ப்பித்து, அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறோம் என்பதனையும் வருமுன் சொல்வது போல வெகு தெளிவாகச் சொல்லியிருந்தும் கூட, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் கூறுகின்ற காரணமெல்லாம் இதுதான். காவேரித் தண்ணீர் பிரச்னையில் கர்நாடக முதல் அமைச்சரை நம்முடைய முதல் அமைச்சர் சந்திக்கவில்லை என்ற குற்றச்சாட்டை சாட்டியிருக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

தமிழ்நாடும் கர்நாடகமும் தனித்தனியான நாடல்ல. கர்நாடகமும் ஒரு மாநிலம். தமிழ்நாடு ஒரு மாநிலம். இரண்டு மாநிலங்களுக்கும் இருக்கிற பிரச்னைகளை மத்திய அரசின் துணை கொண்டு தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமே தவிர ஏதோ [illegible] எடுத்தேன், கவிழ்த்தேன் என்று சொல்லுவதைப் போல நம் முதலமைச்சர் கர்நாடகத்திற்கு சென்று கர்நாடகத்து முதலமைச்சரைப் பார்த்து தண்ணீர் தருகிறீர்களா இல்லையா என்று கேட்டு அதிலே இருந்து சில விவாதங்கள் கிளம்பி அதனால் ஏற்படுகின்ற பலாபலன்கள் இந்த நாட்டில் இருக்கின்ற நாலரைக் கோடி மக்களை பாதிக்கின்ற பிரச்னை என்பதை மட்டும் நாம் மிகவும் தெளிவாக உணர்ந்து ஆக வேண்டும். நம் முதலமைச்சர் அவர்கள் மிக பொறுப்புணர்ச்சியோடு உணர்ந்த காரணத்தால் தான் காவேரி பிரச்னையில் சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து ஆலோசித்து அவர்கள் ஆலோசனையை பெற்று, அது மட்டும் அல்லாமல் வெளியே இருக்கின்ற இந்த மாமன்றத்தில் முதலமைச்சர்களாக இருந்த காமராசர் அவர்களையும் மதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்களையும் அவர் வீட்டுக்கு ஓடோடிச் சென்று பார்த்து அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்று

அதற்கு பிறகு மத்திய அரசினையும் கர்நாடக முதலமைச்சரையும் சந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வந்துள்ளார்கள். இதைக் குற்றச் சாட்டாக கருதுவார்களேயானால் இது எப்படி பொருந்தும் என்பது எனக்கு புரியவே இல்லை.

இந்த நாட்டில் நாம் உற்பத்தி செய்வதில் ஏதாவது பின்வாங்கி இருக்கிறோமா என்று பார்த்தால் நாம் 55 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். 18 லட்சம் டன் புஞ்சை தானியம் உற்பத்தி செய்திருக்கிறோம். அப்போது மழை இருந்தது, வசதிகள் இருந்தன. இந்த அரசு செய்ய வேண்டிய அத்தனை காரியங்களையும் செய்தது. இந்த நாட்டில் உணவு உற்பத்தி பெருகியது. உணவு உற்பத்தியை பெருக்கியது மட்டும் அல்ல அண்டை அயல் மாநிலங்களுக்கு தேவைப்பட்ட உணவு தானியத்தை மனிதாபிமானத்தன்மையோடு உதவி செய்தது. புஞ்சை தானியங்கள் வெளி மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று மத்திய அரசு சொன்ன நேரத்தில் முடியாது, நாங்கள் அனுப்ப மாட்டோம் என்று இந்த அரசு சொல்லியிருக்கலாம். இருந்தாலும் குஜராத்து பஞ்ச நிலைமையையும், மகாராஷ்டிராவின் பஞ்ச நிலைமையையும் மனதில் கொண்டு அங்கே இருக்கின்ற மக்களின் உணவுப் பிரச்னையை உள்ளத்தில் வைத்து, மனிதாபிமானத்தோடு சரி அனுப்பலாம் என்று உத்தரவிட்டதே தவிர வேறல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இங்கே இருக்கிற தானியங்கள் வெளியே கள்ளக்கடத்தல்காரர்களால், எடுத்துச் செல்லப்படுகிறது. இல்லை என்று மறுக்க முடியாது. மறுக்கவும் நாங்கள் விரும்பவில்லை. கள்ளக்கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படியும் குறை சொல்லுகிறார்கள். எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் திரு. சுப்பிரமணியம் கூட சொன்னார்கள். குவைத், துபே போன்ற நாடுகளில் அங்கே மக்கள் தஞ்சாவூர் அரிசி சாப்பிடுவதாக அங்கே இருந்து வந்தவர்கள் தகவல் சொன்னார்கள் என்று. அது எல்லாம் நமக்கு புரியாது. அது ஆளும் காங்கிரஸ் கட்சிக்குத்தான் தெளிவாக புரியும். அயல் நாட்டு விவகாரங்களை கவனிக்கின்ற அவர்களுக்கு தெளிவான கருத்து இருக்க முடியும், அது பற்றி அவர்களுக்கு நிச்சயமாக தகவல்கள்





தெரியும். அந்த மாதிரியான கள்ளக் கடத்தல்காரர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். அவர்களை பிடிக்க வேண்டிய நேரத்தில் எப்படி பிடிக்க வேண்டுமோ அதை எல்லாம் பிடித்து இன்றைக்கு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். இங்கே கண்டனத் தீர்மானத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற நேரத்தில் எதைஎதையோ பேசவேண்டியவர்கள் எதைஎதையோ பேசினார்கள். நண்பர் திரு. சீனிவாசன் மிகத் தெளிவாக பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்கள், அவர்கள் தலைவரைப் பற்றி. ஜூலியஸ் சீசர் கதையைச் சொன்னார்கள். நான் சொல்லுகிறேன். ஜூலியஸ் சீசராக இருந்தவர் எங்களுடைய தலைவர் அல்ல. எந்த அண்ணாவின் பேரைச் சொல்லி கட்சியை நடத்துகிறார்களோ அந்த அண்ணாவின் அடிப்படைக் கொள்கையான மாநில சுயாட்சியை இந்திரா அம்மையார் காலடியில் வைத்துவிட்டு நீங்கள் சொல்லுகின்ற எதற்கும் கட்டுப்படுவோம் என்று சொன்னார்களே, அவர் இந்த நேரத்தில் அதையும் ஒப்புக் கொண்டதற்காக அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். எங்களுடைய ஜூலியஸ் சீசர் அப்படி அல்ல. எங்களுடைய ஜூலியஸ் சீசரிடத்தில் இப்போது ப்ரூட்டஸ் இல்லை. கேஸ்கஸ், கேஸியஸ் இல்லை.

இன்றைக்கு பேசினார்கள், மந்திரியைச் சுற்றிச்சுற்றி வருகிறார்கள் என்று. மந்திரியைச் சுற்றி வருவதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. பணக்காரனைச் சுற்றி வரக் கூடாது. ஆனால் வரக் கூடாது, பயித்தியக்காரனைச் சுற்றி வரக் கூடாது. அமைச்சரை சுற்றி இருப்பதில் என்ன தவறு என்றே புரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் சுற்றி இருந்தவர்கள் எல்லாம் சென்று விட்டார்கள். இப்போது இருப்பது சூழ்ந்து கொண்டு இருக்கிறவர்கள் தான். சுற்றி இருப்பதற்கும் சூழ்ந்து இருப்பதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது என்பதை நண்பர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அதேபோல இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். ஏதோ ரத்தக் கிளறி ஏற்படும் அமைச்சர்கள் எல்லாம் வெளியே தலை காட்ட முடியாது, அவரவர்கள் என்னென்ன செய்வார்களோ

என்றெல்லாம் அச்சுறுத்தல் போல இங்கே சொல்லப்பட்டது. இதை எல்லாம் இப்படி இந்த மாமன்றத்தில் பேசுவது முறைதானா என்பதை மதிப்பு மிக்க எதிர்க்கட்சி நண்பர்கள் உணர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு எங்களுடைய சுயமரியாதையை தயவுசெய்து இந்த மன்றத்தில் சோதிக்காதீர்கள். எங்கள் நரம்புகளுக்கு இந்த மன்றத்தில் முறுக்கேற்றி விட்டு வேடிக்கை பார்க்காதீர்கள் என்று எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நான் சொல்லிக்கொண்டு இந்த நேரத்தில் வறட்சியைத் தவிர்ப்பதற்கு அருமை நண்பர்களே, நாம் அத்தனை பேரும் நல்ல முடிவுகளை காண்போம் வாரீர் வாரீர் என்று உங்களையும் அழைத்து இந்தக் கண்டனத் தீர்மானமும், இந்த நம்பிக்கை இல்லாத தீர்மானமும் வலிவற்றது என்று சொல்லி, தயவுசெய்து இதை திரும்பப் பெறுங்கள் என்று கேட்டு அமருகிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இன்று எதிர் கட்சிகளால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத தீர்மானத்திற்கும் கண்டனத் தீர்மானத்திற்கும் ஆதரவு தருகின்ற வகையில் என் கருத்துக்களை இந்த அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் மக்கள் பஞ்சம், பட்டினி, லஞ்சம் ஊழல் போன்ற கொடுமைகளுக்கு ஆளாகி எங்கேயிருந்து இதற்கு எல்லாம் தீர்வு காண்போம் என்று தெரியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று இந்த அரசுக்கு சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு எதிர்கட்சிகளுக்கு இருப்பதால் தான் இப்படி ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் ஒரு கண்டனத் தீர்மானத்தையும் கொண்டு வர வேண்டிய சூழ்நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டு இருக்கிறோம் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சியை சேர்ந்த நண்பர் நாங்கள் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் வலிவு இல்லை, திண்மை இல்லை என்று சொன்னார்கள். எனக்கு உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது. ஒரு படி அரிசி 7 ரூபாய், 8 ரூபாய் என்று விற்கின்ற இந்த நேரத்தில் மக்கள் அலாய்ப்பறந்து கொண்டு ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள். உங்களுக்கு அரிசி போடுவதற்குக் கூட அருகதை இல்லையே,



பட்டினிப் பட்டாளம் பெருகிக் கொண்டு போகிறதே இதை விட உங்கள் ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதற்கு என்ன ஆதாரம் தேவை என்று எனக்கு புரியவில்லை. இன்றைக்கு ஆளுகிற நீங்கள் தமிழகத்தை இந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டீர்கள்.

அன்றைக்கு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் படிப்படியாக அளப்போம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள். இன்றைக்கு அவுன்ஸ் அவுன்சாக போடுவோம் என்று சொல்லுவதற்கு கூட அருகதை இல்லை. இப்படிச் சொல்லி ஆட்சிக்கு வந்த நீங்கள் இவ்வாறு பேசுவதற்கு உங்கள் மனசாட்சி முதலில் இடம் கொடுக்கிறதா என்று கேட்கிறேன். அப்புறம் எங்கள் நம்பிக்கை இல்லாத தீர்மானம் வலிவற்றது என்பதைப் பற்றி பேசலாம். அன்றைக்கு இரண்டரை ரூபாய் படி அரிசி விற்றபோது எங்களுக்கு ஆட்சி நடத்த அருகதை கிடையாது, நீதி கிடையாது என்று இந்தப் புறத்தில் இருந்து பேசினீர்கள். அது மட்டுமா பேசினீர்கள். அப்போது நான் அந்தப்புறத்தில் இருந்து கொண்டு சொன்னேன். எங்கள் ஆட்சி போய் உங்கள் ஆட்சி வந்தால் கஞ்சிக்கு கூட வழி இருக்காது, கழுநீர் தண்ணீர் தான் கிடைக்கும் என்று சொன்னேன். இன்றைக்கு அந்த நிலைக்குத் தான் மக்கள் வந்து விட்டார்கள். இன்றைக்கு கஞ்சி ஊற்றக் கூட உங்களால் முடியவில்லை என்பதோடு அல்ல, கழுநீர் தண்ணீராவது கிடைக்குமா என்றால் அதற்கும் வழி இல்லை என்ற அவல நிலைக்குத்தான் தமிழகம் இன்றைக்கு வந்துவிட்டது. மக்கள் பசி, பட்டினி என்று வாடுகின்ற இந்த நிலையிலும் நீங்கள் பேசுவதைப் பார்த்தால் இதை விட ஒரு சூழ்நிலையை, உங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று காட்டுவதற்கு, எப்படி முடியும் என்று எனக்கு புரியவில்லை.

நீங்கள் தொன்று தொட்டு கடைப் பிடிக்கிற, கடைப்பிடித்து வந்த உணவுக் கொள்கை தவறாக இருந்திருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கு அழகாகச் சொன்னார்கள். 55 லட்சம் டன் அரிசி விளைந்தது; மத்திய அரசு கேட்டார்கள் 50,000 டன் கொடுத்து விட்டோம்; மற்ற பல மாநிலங்கள் கேட்டார்கள் 50,000 டன்

கொடுத்துவிட்டோம் என்று அழகாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமை என்ன? இது எங்கே போய் முடியும்?

36 லட்சம் டன் விளைந்தபோது 6 அவுன்ஸ் கொடுத்தோம். இன்றைக்கு 55 லட்சம் டன் விளைந்த பிறகும் வாரத்திற்கு 3 கிலோ சரியாகக் கொடுக்க வழியில்லையே. 3 கிலோ கொடுக்கிறோம் என்று சொன்னதையாவது ஒழுங்காகக் கொடுக்கிறீர்களா? இல்லையே. வெளிச் சந்தையிலே அரிசி கிடைக்கவில்லை. கிடைப்பது 7 ரூபாய், 8 ரூபாய் ஆகிறது படியரிசி. இந்த நிலையில் எப்படி குடும்பம் நடத்த முடியும்?

3 கிலோ அரிசி வாங்குவதற்கு 3 நாள் கியூ நிற்க வேண்டியிருக்கிறது. 3000 கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்று திறந்து, அங்கே 3 கிலோ அரிசிக்கு 3 நாள் நிற்கவேண்டியிருக்கிறது.

அன்றைக்கு சுவரொட்டி போட்டீர்களே. அதை நினைத்துப் பார்த்தீர்களா? 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் கையில் கொடுத்திருப்பது அட்டை என்று சொன்னீர்களே. இன்றைக்கு அதே அட்டையைக் கொடுத்து மக்களைத் திண்டாட விட்டிருக்கிறீர்களே. யோசித்துப் பார்த்தீர்களா? இதற்கு என்ன காரணம்? இன்றைக்கு நீங்கள் கொடுத்திருக்கிற அட்டையை கையில் வைத்துக்கொண்டு, குடும்பம் குடும்பமாக பிளாட்பாரத்தில் காத்துக் கிடக்கிறார்கள் மக்கள். மந்திரிகள் வேண்டுமானால் காரிலே தெருத் தெருவாக பவனி வாருங்கள். இந்த அவல நிலை, இந்த அலங்கோலம் உங்களுக்கு நல்ல காட்சியாக இருக்கும். அப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.

சிவில் சப்ளைஸ் கடைகளிலும், மற்ற நியாயவிலைக் கடைகளிலும் மக்கள் நாள் கணக்கில் கியூ நின்று கொண்டிருக்கிறார்கள். கையிலே பையை வைத்துக்கொண்டு ஆண்களும் பெண்களும் கியூவிலே நின்று கொண்டிருப்பதைப் பார்த்தால் இங்கே நீங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்க மாட்டீர்கள். பறந்துபோய் அரிசி கிடைக்க ஏற்பாடு செய்வீர்கள். இன்றைக்கு அரிசி பற்றாக்குறை மட்டுமல்ல. . . .



திரு. கு. பெரியசாமி: இந்த நிலைமை அவர்கள் ஆட்சியில் இருக்கும்போதே வந்ததா அல்லது இப்போது புதிதாக வந்ததா? அவர்கள் ஆட்சியிலிருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

*　　*　　*　　*

THIRUMATHY T. N. ANANDANAYAKI: I think the Hon. Member has understood what I have spoken? எங்கள் ஆட்சியிலே கியூ நின்றது அரிசிக்கு என்ற காரணத்தால்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது? அரிசிக்கு மைல் கணக்கில் கியூ நிற்கிறது. நீங்கள் என்ன சொல்லி ஓட்டு கேட்டீர்கள்? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவோம் என்று சொன்னீர்கள். அரிசிக்கு கியூவிலே நின்ற மக்கள் உங்களுடைய வார்த்தைகளை நம்பி ஓட்டுப் போட்டார்கள். இன்றைக்கு 3 கிலோ போடுகிறீர்கள். அதை வாங்குவதற்கு கையிலே பையை வைத்துக் கொண்டு, ஆண்களும் பெண்களும் மைல் கணக்கில் நாள் கணக்கில் கியூ நிற்கிறார்கள். இதெல்லாம் உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது? அதைப் பார்க்க உங்களுக்கு நேரம் இல்லை. நிலைமையை இங்கே எடுத்துச் சொன்னால் கிண்டல் வேறா? சொல்கிற எங்களை கிண்டலா செய்கிறீர்கள்?

வீட்டிலே இருக்கிற பெண்கள் எப்படி கஷ்டப்படுகிறார்கள் என்பதை நீங்கள் பார்த்தீர்களா? அதைப் பார்த்திருந்தால் நீங்கள் இப்படிப் பேச மாட்டீர்கள். கொடுக்கின்ற 3 கிலோவை யாவது ஒழுங்காகக் கொடுக்கிறீர்களா? இல்லையே. கடத்தல் நடக்கிறது, பதுக்கல் நடக்கிறது, கள்ளச் சந்தை நடக்கிறது. திறமையற்ற அரசாங்கம் தான் அதற்கெல்லாம் காரணம்.

அரசியல் சூதாடிகளும், லஞ்சம் வாங்கும் அதிகாரிகளும் இன்றைக்குத் தமிழ்நாட்டை சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறார்கள். முதலிலே இது ஒரு பஞ்சப் பிரதேசம் அல்ல. 55 லட்சம் டன் அரிசி உற்பத்திச் செய்கிறோம். ஓரளவு உபரியாக இருக்கக்கூடிய மாநிலம் இது. அப்படி இருந்தும் இன்றைக்கு நிலைமை என்ன?

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 டிசம்பர் 14

பக்கத்திலே இருக்கிற ஆந்திரப் பிரதேசத்தைப் பாருங்கள். அங்கே படியரிசி 3 ரூபாய், 3½ ரூபாய்க்கு விற்கிறது. கர்நாடகத்திலே 3½ ரூபாய்க்கு விற்கிறது. ஆனால் இங்கே 7 ரூபாய்க்குமேல் விற்கிறது. அதுவும் மட்டமான அரிசி; சாப்பிட முடியாத அரிசி 7 ரூபாய்க்கு விற்கிறது. கர்நாடகமும் ஓரளவு நம்மைப்போல் 'மார்ஜினல் சர்பிளஸ்' ஏரியா'தான். அங்கே 3½ ரூபாய்க்கு விற்கிறபோது இங்கே இந்த நிலை ஏன் வந்தது? தமிழ் நாட்டில் ஏன் இந்தப் பஞ்சநிலை? தொன்றுதொட்டே உங்களுடைய கொள்கைதான் அதற்குக் காரணம்.

அரிசி கொள்முதலை அக்கறையோடு செய்திருந்தால் இப்படி பஞ்சம் வரும்போது கொடுத்திருக்க முடியும். கொள்முதலை ஒழுங்காக நீங்கள் செய்யவில்லை. அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய இந்த மூன்று மாதங்களில் ஒழுங்காகக் கொள்முதல் செய்தால், கிட்டத்தட்ட 10 லட்சம் டன் அரிசி கையில் இருந்தால், இப்படி 7, 8 ரூபாய் என்று ஏறும்போது நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கியிருக்கலாமே. இன்றைக்கு நீங்கள் ஒரு லட்சம் டன்னுக்கு மேல் கொள்முதல் செய்யவில்லையே. அதற்குக் காரணம் நீங்கள் வியாபாரிகளை நம்பிக் கொண்டிருக்கிறீர்கள். அதுவும் உங்களுக்கு வேண்டியவர்கள். உங்களுக்கு வேண்டிய வியாபாரிகள்தான் அரைவை ஏஜண்டுகள். உங்களுக்கு வேண்டியவர்களாயிற்றே. அவர்கள் எப்படி ஒழுங்காக நடந்து கொள்வார்கள்? உங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி எஸ்டிமேட் கமிட்டி தலைவராக இருந்து கொடுத்த ரிப்போர்ட்டிலே என்ன சொல்லியிருக்கிறார்? அரைவை மில்லே இல்லாத ஹல்லிங் ஏஜெண்டுக்கு நெல் கொள்முதல் கொடுத்திருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அரைவை மில் இருப்பவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் ஒழுங்காகக் கொடுத்திருப்பார்கள். அரைவை மில் இல்லாதவர்களுக்குக் கொடுத்ததால் அவர்கள் மில் இருக்கக்கூடிய அடுத்தவர்களைப் பிடித்துத்தான் அரைத்துக் கொடுக்க முடியும். இடையிலே என்னென்ன நடக்குமோ தெரியாது. அதுமட்டுமல்ல. சொத்து பத்து இல்லாதவர்களை எல்லாம் கொள்முதல் ஏஜெண்டுகளாக நியமித்திருக்கிறார்கள். ஒரு கிராம முன்சீப் வேலை கொடுக்கும்



1974 டிசம்பர் 16] [திருமதி த. ந. அனந்தநாயகி]

போதே அவருக்குச் சொத்து பத்து இருக்கிறதா என்று பார்த்துதான் அந்த வேலையைக் கொடுக்கிறோம். அப்படி இருக்கும்போது லட்சக்கணக்கான ரூபாய்க்கு நெல் கொள்முதல் செய்யும் வியாபாரிகளை, பார்த்துக் கொடுக்க வேண்டாமா? சொத்து பத்து இல்லாதவர்களுக்கு, மஞ்சள் கடுதாசி கொடுத்தவர்களுக்கெல்லாம் கொள்முதல் செய்ய அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். இந்த ஆட்சி செய்த தவறுக்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா?

ஒன்றுமே இல்லாத முருகேச முதலியாரை ஒரு ஹல்லிங் ஏஜென்டாக நியமித்து, தாங்கமுடியாத அளவுக்கு 'பிடி, பிடி' என்று அரசாங்க நெல்லைக் கொடுத்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட காரணங்களால் தான் இன்றைக்கு எந்தெந்த மாநிலத்தில் அரிசி கொடுப்பார்கள் என்று பிச்சைப் பாத்திரம் ஏந்தவேண்டியிருக்கிறது.

ஒன்பது மாதங்களுக்கு முன்னால்தான் இந்த மன்றத்தில் எவ்வளவு அகங்காரமாக முதலமைச்சர் பேசினார் என்பது நமக்கு தெரியும். 'பக்கத்திலே இருக்கிற கேரளம் கேட்டது, கொட்டிக் கொடுத்தோம்; வங்கம் கேட்டது, வாரி வழங்கினோம்; மராட்டியம் மண்டியிட்டது, அள்ளிக் கொடுத்தோம்' என்று பேசினார்கள். சொல்லி 9 மாதங்கள் ஆகவில்லை. இன்றைக்கு ஆந்திராவிலே பிச்சைப் பாத்திரம் ஏந்துகிறார்கள்; கர்நாடகத்திலே பிச்சைப் பாத்திரம் ஏந்துகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அவல நிலைக்குக் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் என்றால் இதற்கு முழுக்க முழுக்க உங்களுடைய தவறான கொள்கைதான் காரணம்.

அரசாங்கத்திலே 12 மாடர்ன் ரைஸ் மில்களை வைத்துக்கொண்டு, தனிப்பட்டவர்களை ஏன் ஹல்லிங் ஏஜெண்டுகளாக வைக்க வேண்டும்? தனிப்பட்டவர்களிடம் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தானே அதை ஏற்படுத்திக் கொடுத்தோம். அந்த ஆலைகளுக்கு அரைவைக்குச் சரியாக நெல் கொடுக்கவில்லை; ஆனால் தனியார்களுக்குக் கொடுக்கப்பட்டது. தஞ்சாவூர் மாடர்ன் ரைஸ் மில்லில் அரைவைக்கு நெல் கிடைக்காமல் அது மூடப்பட்டது. கேட்டுப் பாருங்கள், அந்த மாவட்ட கலெக்டரை. அவர் சொல்வார் அதன் கதையை. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை ஏன்

அரசாங்க ரைஸ் மில்களுக்குக் கொடுக்காமல் தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்தீர்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதற்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

பட்டுக்கோட்டையிலே இருந்த மாடர்ன் ரைஸ் மில் கூட மூடப்பட்டுக் கிடந்தது. கேள்விமேல் கேள்வியாகப் பல கேள்விகள் கேட்ட பிறகு இப்போது அதை ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நன்றாக ஆராய்ந்து பார்த்தால் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வீர்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அவர்கள் தவறான செய்தியைச் சொன்னார்கள். நெல் அரைவைகளை மாடர்ன் ரைஸ் மில்களுக்குக் கொடுக்காமல் வேறு மில்களுக்குக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். நாங்கள் கொள்முதல் செய்வதை அரசாங்க மில்லில் தான் கொடுக்கிறோம். அதற்குப் போக மீதம் இருப்பதை ஹல்லிங் ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கிறோம். ஒருவேளை அவர்கள் ஆட்சியில் அப்படி நடந்ததோ என்னவோ எங்களுக்குத் தெரியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உங்களுடைய ஆட்சியில்தான் பட்டுக்கோட்டை ரைஸ் மில் பல மாதம் மூடிக் கிடந்தது. ஏன் அப்படி மூடிக் கிடந்தது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** பட்டுக்கோட்டையில் இருந்த ரைஸ் மில் டி. சி. எம். எஸ். வினுடைய பிராஞ்ச். நாங்கள் வந்த பின்னால் 7 மில்களைக் கட்டினோம். எல்லாவற்றையும் ஒழுங்காக நடத்த வேண்டுமென்பதற்காக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் எடுத்துக் கொண்டோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீங்கள் அவற்றை எப்போது எடுத்துக் கொண்டீர்கள்? ஒருசில மாதங்களுக்கு முன்னால்தானே எடுத்துக்கொண்டீர்கள். அதற்கு முன்னால் அரைப்பதற்குக் கூட அரிசி இல்லாமல் அவைகள் எல்லாம் நஷ்டத்தில்தானே முடங்கிக் கிடந்தன.

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி:** அப்போது நாங்களே கொள்முதல் செய்யவில்லை. நாங்களே அரைக்கவில்லை.





**திருமதி த. ந. அனந்தநாயகி:** எத்தனையோ கோடி ரூபாய் செலவில் மத்திய அரசாங்கம் அமைத்துக் கொடுத்த நவீன அரிசி மில்களை ஏன் பயன்படுத்திக் கொள்ளும் முறையில் நீங்கள் கொள்முதல் செய்யவில்லை. உங்களுக்கு வேண்டியவர்களைப் ப்ரொக்யூர்மெண்டு ஏஜெண்டாகப் போட்டு, உங்களுக்கு வேண்டியவர்களை ஹலிங் ஏஜெண்டுகளாகப் போட்டு அவர்களை எல்லாம் கொள்ளை அடிக்கவிட்டீர்கள்.

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி:** அப்போது அரசாங்கம் கொள்முதல் செய்ததே 1 லட்சம் டன்தான். நாம் கொள்முதல் செய்த நெல்லை இந்த நவீன அரிசி மில்களில்தான் அரைத்தோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் பத்து லட்சம் டன்கள் கொள்முதல் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாது இந்த மில்கள் எல்லாம் நட்டத்தில் முடங்கிக் கிடக்கவிட்டுவிட்டு, இன்றைக்குத்தானே சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் அவற்றை எடுத்துக் கொண்டீர்கள். அன்றைக்கு கூட்டுறவுத் துறையில்தானே அவை நட்டத்தில் இருந்து வந்தன. தொன்றுதொட்டு நீங்கள் பின்பற்றிக் கொண்டிருந்தது. வந்திருக்கிற கொள்கைதான் இன்றைக்குத் தமிழகத்தில் உணவுப் பஞ்சம் உண்டாயிருப்பதற்குக் காரணம் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. உங்களுக்கு வேண்டியவர்களுக்கு எல்லாம் பர்மிட் கொடுத்து எத்தனை லட்சம் டன்கள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி:** அப்போது எல்லாம் மாடர்ன் ரைஸ் மில்களே வரவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தயவு செய்து அமைச்சர் அவர்கள் இது போன்று குறிக்கிட்டு தவறான செய்திகளைத் தர வேண்டாம். இதோ இருக்கிறது ரிப்போர்ட். இது 1971-லே கொடுக்கப்பட்டது. அப்போது மாடர்ன் ரைஸ் மில்கள் எல்லாம் வந்துவிட்டன. அப்துல்சலாம் ராவுத்தர், முருகேச முதலியார் போன்றவர்களுக்கு எல்லாம் பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிணையாகப் பல பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதை எல்லாம் உணர்ந்தும் அமைச்சர் அவர்கள் தவறான வாதத்தை சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரிசி ஆலைகளே இல்லாதவர்களுக்கு அரவைக்கு அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட நெல்லுக்கே பாக்கிப் பணம் வரவில்லை. அப்துல் ரசாக் ராவுத்தரிடம் இருந்து வர வேண்டியதே 7 லட்சம் இருக்கிறது. இப்படி கள்ளமார்க்கெட்காரர்களுக்கும், பதுக்கல்காரர்களுக்கும் நீங்கள் துணை நின்றதன் காரணமாகத்தான் பல லட்சம் டன்கள் போலியான பர்மிட்டுகளைக் கொண்டே இந்த மாநிலத்தில் இருந்து கடத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் அரிசிப் பிரச்சினை இவ்வளவு கடுமையான நிலைக்கு வந்த பிறகும் கூட அரிசிக்கு உச்ச விலை நிர்ணயிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்து இரண்டு மூன்று நாளைக்கும் மேலாகிறது. ஏன் விலை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை? அரிசிக்கு அரசாங்கம் உச்ச விலை நிர்ணயிக்கப் போகிறதாம் என்று தெரிந்து வர்த்தகச் சூதாடிகள் இந்த இடைப்பட்ட காலத்தில் கொள்ளை அடித்துக் கொள்ளத்தான் நீங்கள் துணை நிற்கிறீர்கள். வர்த்தகச் சூதாடிகளின் புத்திசாலித்தனத்திற்கு நீங்கள் எல்லாம் ஈடுபோட முடியாது. கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லிவிட்டு ஏன் கொண்டுவராமல் இருக்கிறீர்கள்? இதற்கு நல்ல நாள் பார்க்க வேண்டுமா? உங்கள் நடவடிக்கையில் உண்மை கிடையாது. இன்னமும் நீங்கள் பதுக்கல்காரர்களுக்கே பக்கத்துணையாக இருக்கிறீர்கள்.

நம்முடைய மாநிலம் ஒரு மார்ஜினல் சர்ப்ளஸ் உள்ளதுதான். அப்படி இருக்கிறபோது நீங்கள் எப்படி 71-இல் தாண்டவராயன்களைப் போன்றவர்கள் இங்கே கோதாண்டவம் ஆட அனுமதித்திருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்த பர்மிட் அளவைப் போன்று பத்து மடங்கு பதினைந்து மடங்கு அவர்கள் இங்கிருந்து அரிசிக் கடத்தல் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். சரியான விவரம் தெரிந்து சொன்னால் நல்லது. இரண்டாயிரம் டன்னுக்கு பர்மிட் கொடுத்தால் அதைப்



போல பத்து மடங்கு, பதினைந்து மடங்கெல்லாம் கள்ளத்தனமாக அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பல தவறான செய்திகள் கூட பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அந்த ரிப்போர்ட்டை சரியாகப் படித்துவிட்டு உறுப்பினர்கள் சொன்னால் நல்லது. (திரு. என். வடிவேல் குறுக்கிட்டார்.) கொஞ்சம் பொறுமையாக இருங்களேன். எதற்காக திரு. வடிவேல் போன்றவர்கள் கூட அவசரப்பட வேண்டும்? நேற்றெல்லாம் இதுபற்றி பல செய்திகள் சொன்னதை நான் கேட்டுக் கொண்டிருக்கவில்லையா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பர்மிட்டுக்கு மாறாக பல மடங்கு நெல், அரிசி கடத்தப்பட்டிருக்கிறது என்று அந்த அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அந்த அறிக்கையில் அப்படி இல்லை. பத்திரிகையிலும் பல தவறான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நான் இங்கே ஒரு உண்மையான செய்தியைச் சொல்கிறேன். (குறுக்கீடு) இது தப்பிதமாக இருந்தால் என்பேரில் உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம். நான் சொல்வதைக் கேட்கக் கூடாதா? எக்சசாக தாண்டவராயன் பேரில் அனுப்பப்பட்டிருப்பது நெல் 473 டன்கள் தான். அரிசி 2,842 டன்கள் தான். சங்கர்குட்டி என்பவர் பேரில் 1,210 டன் அரிசி. எம். கே. அபு என்பவர் பேரில் 554 டன் அரிசி. தாண்டவராயன் பற்றி எல்லாம் சொன்னார்கள். அவருக்கு எலத்தில் எடுத்ததில் கொடுத்தது போக பாக்கி அவருக்குக் கொடுக்க வேண்டிய அரிசி 5,090 டன் அரிசி—752 டன் நெல் அதை நிறுத்திவிட்டோம். ஆக மொத்தம் அனுப்பப்பட்டிருப்பதே—சார்ஜ்ஷீட் படி நெல் 473 டன்தான். அரிசி 4,636 டன்தான். இதில் தவறு இருந்தால் என்பேரில் உரிமைப் பிரச்சினை கொடுங்கள். வரவேற்கிறேன். உண்மை இன்னது என்று தெரிந்து பேசுவது நல்லது.

DR. H. V. HANDE: Sir, on a point of order. The normal practice is that the Hon. Minister should give the correct information. But actually he has given wrong information. In paragraph 28 of the Report of the Estimates Committee, on page 7 it is stated—

'Wagon loads of paddy and rice were started moving from Thanjavur district and from Madras Goods sheds to other States......'

It is clearly stated that wagon loads were moved.

It is also stated therein—

'During May and June 1971, there was unusual movement of paddy and rice which caused artificial scarcity of rice in and around Madras City......'

My submission is that any statement of the Hon. Minister should be so carefully worded that he will not give incentive to the parties which are already defrauding the State. Let him not try even unconsciously to protect the concerned persons.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டேக்கு இருக்கிற பொறுப்பை நான் உணர்கிறேன். பல வாகன் லோடுகள் போயின என்பது வேறு விஷயம். கள்ளத்தனமாக பர்மிட்டுக்கு மேல் போயிருப்பது எவ்வளவு என்கிற விவரத்தைதான் நான் கொடுத்தேன். தாக்கல் செய்யப்பட்டிருக்கிற சார்ஜ்ஷீட்டின் நகலை விவரத்தைத் தந்திருக்கிறேன். குற்றவாளிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று இல்லை. மேற்கொண்டு போய் இருக்கிறது என்பதற்கு ஆதாரம் சொன்னால் ஏற்றுக் கொள்கிறேன். நான் உணவு இலாக்கா பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தபோதுதான் இந்த விஷயத்தையே கண்டு பிடித்துச் சொன்னேன். என்னமோ பேசுகின்றார்கள். ப. உ. சண்முகத்தைப்பற்றிப் பேச வேண்டும். மாலைப் பத்திரிகைகளில் எல்லாம் வர வேண்டும் என்ற ஆசையோடு பேசினால் பேசிக் கொள்ளலாம். எவ்வளவு காலத்திற்கு இருக்கும்? ஒரு காலத்தில் உண்மை வரும்.



(பிற்பகல் 12.30)

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், அமைச்சரோ அல்லது உறுப்பினர்களோ இன்சினுவேட்டிங் ரிமார்க்ஸ்-ஆகச் சொல்வது சரியா? நீங்கள், ஏன் கேட்கிறீர்கள் என்றால், நாளைக்குப் பத்திப் பத்தியாகப் பத்திரிகையில் வரும் என்பதற்காக, என்று அமைச்சர் சொல்வது முறைதானா?

**திரு. எம். சுரேந்திரன்:** சார், அமைச்சர் சொன்னதிலிருந்து, நான் உணவு அமைச்சராக வந்ததற்குப் பின்னால் இதைக் கண்டு பிடித்தேன் என்றால், அவருக்கு முன்னால் இருந்த உணவு அமைச்சர் அந்தக் காரியம் பண்ணினார் என்ற மாதிரி வருகிறது இது சரிதானா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, எங்களுக்குள் சண்டை மூட்டிவிடுகிற மாதிரிப் பேச வேண்டாம். என்னுடைய காலத்தில், நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அவர்கள் ரிப்போர்ட்டிலே பாராகிராஃப் 35-ல் (பக்கம் 9) இருப்பதை நான் படிக்கிறேன். அதில்

On scrutiny of railway records at Salt Cotaurs and at St. Thomas Mount, export permit No. 103 of 1971, dated 13th April 1971 issued to tenderer Thiru S. Chidambara Natarajan, was found to have been misused and more than 865 tonnes were found to have been exported as against permitted quantity of 60 tonnes.......

12 முறை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். நான் 10 தான் சொன்னேன், கணக்குப் போட்டுப் பார்த்தால் நிலைமை தெரிகிறது. 865 டன் எங்கே, 60 டன் எங்கே? கடைசி பாராகிராஃபில்

The Committee further observes that the purchase of forged bills with railway receipt by the partners of A. M. Associated Traders and the utilisation of Bank discount facilities by the partners of A. M. Associated Traders had led to the export of 700 wagon loads unauthorisedly.

என்றிருக்கிறது. இதைவிட நீங்கள் என்ன சொல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் வழக்கறிஞர், திறமையோடு வாதாடுகின்ற திறமை பெற்றவர். நான் தமிழில்தான் சொல்கிறேன், நான் தமிழில் சொல்வதை ஏனோ புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். கோபத்தில் காதையும் அடைத்துக் கொள்ளக் கூடாது, மனதைத் தான் அடைத்துக் கொள்கிறார்கள். காதை ஏன் அடைக்க வேண்டும். இவ்வளவு எக்ஸஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்று போலீசார் கணக்குத் தந்திருப்பதை நான் சொன்னேன். இதற்குமேல் இலட்சக்கணக்கான டன் என்று சொன்னார்கள். 60 டன்னுக்கு 400 டன் என்று சொல்கிறார்கள். இதுதான். . .

DR. H. V. HANDE: You are indirectly accusing Mr. Krishnamoorthy Committee's report as false. It is a serious matter of privilege. Who is wrong, yourself or Mr. Krishnamoorthi?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இவ்வளவு எக்சஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்பது நீதிமன்றத்தில் போடப்பட்டிருக்கிற சார்ஜ் ஷீட்டில் இருக்கிறது. புள்ளி விவரத்தோடு தருகிறேன். இதில் ஆட்சேபனை இருந்தால் என்மீது உரிமை பிரச்சினை கொண்டு வாருங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவரை ஏன் இழுக்கிறீர்கள்? நான் சொல்வது தவறு என்று பட்டால் நீங்கள் என்மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Discrepancy in figures.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** அறிக்கையைப் பற்றி பேசுகின்ற சமயத்தில் நானும், என்னுடைய குழுவைச் சேர்ந்த 20 அங்கத்தினர்களும் சேர்ந்து கொடுத்த ரிப்போர்ட் இது. நான் தனியாகக் கொடுத்தது அல்ல. இரண்டாவது, நான் கற்பனையிலிருந்து கொடுத்ததும் அல்ல. நாங்கள், இது சம்பந்தமாக சில தகவல்களைக் கேட்டோம். உணவு இலாகாவிலிருந்து, டிஐஜி—சிஐடி தயாரித்து அனுப்பிய அந்தத் தகவல்களை, டீபுட் செக்காட்டரி எங்கள் குழுவின் முன்னால் வைத்தார்கள். நாங்கள் அப்படியே தாக்கல் செய்தோம். நாங்கள் வெட்டவும் இல்லை, ஒட்டவும் இல்லை. அப்படித் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையிலே அவர்கள் சொன்ன ஸ்டேட்மெண்டிலே





In almost all the 700 railway receipts, 700 forwarding notes and connected corresponding records maintained in railway goods sheds bear the signatures mostly forged by known and unknown persons.

என்றிருக்கிறது. ஆகவே தாண்டவராயனைப் போல், பல
தாண்டவராயன்கள் அந்த 700 வாகன்களிலே புகுந்து கொண்டிருக்
கிறார்கள். ஆகவே, நாங்கள் இதைத் தவறாகச் செய்துவிட்டோம்
என்று நீங்கள் யாரும் சந்தேகப்பட வேண்டாம். எதிர்க் கட்சியிலே
இருப்பவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், இந்த விவரங்களை
நான் சொல்லவில்லை, நாங்கள் சொல்லவில்லை. டி.ஐ.ஜி.—சி.ஐ.டி.—
அனுப்பிய நோட்டிங்கிலே இவற்றையெல்லாம் சொல்லியிருக்
கிறார்கள்.

DR. H. V. HANDE: I am raising a point of order. It
is a serious matter of privilege also. From what Mr. Krishna-
moorthi says and from what the Hon. Minister is saying, there
is a lot of difference. Mr. Krishnamoorthi corroborates with all
facts. He is talking of wagons and the Hon. Minister is talking
of tonnes. The Hon. Minister is sidetracking the merits of what
Mr. Krishnamoorthi has said and this involves a serious matter
of privileges. So I raise a serious matter of privilege against
the Hon. Minister Thiru P. U. Shanmugam.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான்
மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அறிக்கை தவறு என்று
சொல்லவும் இல்லை, நீங்கள் வெற்றி பெற்று விட்டதாகவும் நினைக்க
வேண்டாம். அவர்கள் விளக்கினார்கள், 700 வாகன் என்று
சொன்னார்கள். நான் குவான்டிடி என்று சொன்னேன்.
இப்பொழுதும் சொல்கிறேன் (குறுக்கீடு), வாகனுக்கு எவ்வளவு
டன் என்பது எனக்குத் தெரியாது. (குறுக்கீடு) அது என்னுடைய
வேலையல்ல.

**திரு. எம். சுரேந்திரன்:** அதைத் தெரிந்திருக்க வேண்டியது உங்கள் வேலைதான்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கிடையாது, அது என்னுடைய வேலையல்ல.

**திரு. எம். சுரேந்திரன் :** உங்களுக்கு வேறு என்ன வேலை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 1 வாகனுக்கு எவ்வளவு லோடு என்று கணக்கு எடுக்கிற வேலையா எனக்கு? ஒரு ரயில்வே வேகனுக்கு எவ்வளவு மூட்டை ஏற்றுவார்கள் என்று சொல்கிற வேலையா எனக்கு?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** வேண்டுமென்றே திசை திருப்புவதற்காக அவர் வாகன் என்று சொல்கிறார், நீங்கள் டன் என்று சொல்கிறீர்கள். . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் தந்திருக்கிற புள்ளி விவரப்படி நெல் 430 டன், அரிசி 4,636 டன், இந்த 3, 4 கணக்குகளையும் சேர்த்து. இதில், நான் சொல்வதில் தவறு இருந்தால் என்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம். அதைப்பற்றி கொஞ்சங்கூட தயக்கம் கொள்ள வேண்டியதில்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன், நான் இவ்வளவு நாள் கடுமையான வார்த்தைகளை வாங்கிக் கொண்டு, இவ்வளவு பொறுமையோடு இப்பொழுது பேசும்பொழுது, புள்ளிவிவரங்கள் சொல்லும்போது தவறாகச் சொல்வேனா? அதுவும் இப்பொழுது? பொறுப்பும் எச்சரிக்கையோடு சொல்வேன் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடாதா? டாக்டர் ஹாண்டே அவர்கள் என்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம். நான் விளக்குகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,

About 4,000 tonnes of rice were illegally from open market and exported to the States mentioned in paragraph

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையினாலே 430 டன்களுக்கான கணக்குகளைச் சொல்லிவிட்டு, ஓப்பன் மார்க்கெட்டிலே 4,000 டன்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி, சிதம்பரம், தாண்டவராயன்கள் எத்தனை பேர் தாண்டவமாடி இருக்கிறார்களோ? அதனுடைய விளைவு என்ன? இன்றைக்குத் தமிழகமே, முழுத் தமிழகமே பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த





வேண்டிய கோளாறு இருக்கிறது. என்னதான் வடபாதி மங்கலம் தியாகராஜன் கடிதம் எழுதிவிட்டாலும், அவர் டி.சி.எம்.எப். தலைவர் என்ற காரணத்தால், மற்றவர்களைப் புறக்கணித்து விட்டு, தாண்டவராயனுக்கு லாயக்கு இருக்கிறதா, இல்லையா, சொத்து பத்து இருக்கிறதா, இல்லையா—அவனுடைய டெண்டர் ஒழுங்கானதா, இல்லையா என்று பார்க்காமல், ஒழுங்காக அதிக விலை கொடுத்த வ்யாபாரிகள்—அவர் ரூ. 1,157 கொடுத்திருக்கிறார். இவர் ரூ. 1,117 தான் கொடுத்திருக்கிறார்—'ரா ரைஸுக்கு'—அவர்களை யெல்லாம் நீங்கள் கூப்பிட்டிருக்க வேண்டாமா? அவர்களைக் கூப்பிட்டு, நீங்கள் 100 டன்னுக்குத்தான் போட்டிருக்கிறீர்கள். இன்றைக்கு 700 வாகன் போட்டிருக்கிறது என்றால், என்ன காரணம்? நியாயமான முறையில், டெண்டர் போட்டு, டெபாசிட் கட்டி, காஷன் மணி கட்டி நியாயமான முறையிலே இருப்பவருக்குக் கொடுக்காமல், நீங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறீர்கள். வெளி மாநிலத்தில்தான் விற்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கேயிருந்து ஒரு கடிதம் வந்து விட்டது என்றவுடனே, தாண்டவராயனைக் கூப்பிட்டு, மொத்தமாக எடுத்துக் கொள்ள உனக்குச் சக்தி இருக்கிறதா, இல்லையா, நீ ஸ்திரமானவனா இல்லையா, அதைப் பற்றிக் கவலை இல்லை; நாங்கள் கண்ணை மூடிக் கொள்கிறோம். இது 1971-ம் ஆண்டுதான். 1974-ம் வருஷத்திலே எஸ்டிமேட்ஸ் கமிட்டி ஒரு ரிப்போர்ட் கொடுக்கும். அதற்குப் பிறகுதான் எதிர்க் கட்சிகளுக்குத் தெரியும், கண் திறக்கலாம், அப்பொழுது நாங்கள் பதில் சொல்லிக் கொள்வோம் என்ற அளவுக்குக் கொண்டு சென்றுள்ள உங்கள் மீது எப்படி மக்கள் நம்பிக்கை கொள்வார்கள்? உங்களை எப்படி நம்புவார்கள்?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்கும் அதே தவறைச் செய்கிறீர்கள். இன்றைக்குப் பஞ்சாபிலேயிருந்து கோதுமை கேட்டீர்கள்? நீங்கள் ஏன் தனி நபருக்குக் கொள்முதல் செய்ய, என்.ஓ.சி. கொடுத்தீர்கள்? இங்கே ஒரு தனி நபர் கோதுமை விற்பது. . .

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** மத்திய சர்க்கார் பஞ்சாபிலே தனி நபரிடம் இதனை விடுவதாக இல்லை. நம்முடைய சர்க்கார்தான் இன்னொரு சர்க்காரிடம் வாங்குவதற்கான ஏற்பாடு

செய்திருக்கிறது. நாங்கள் தனியாரிடம் வாங்குவதற்கு அப்பொழுது சம்மதம் கிடையாது. நாங்கள் என்.ஓ.சி. கொடுத்தது அந்தச் சர்க்காரிடம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : இவ்வளவு தவறுகத் தகவல் கொடுக்கிறார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்** : முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொல்கிற போது தனியார் என்று சொன்னார்கள், இன்றைக்கு அமைச்சர் அவர்கள் வேறு மாதிரியாகச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி** : பஞ்சாப் சர்க்கார்தான் தனியாருக்குக் கொடுப்பேன் என்றார்கள். நாங்கள் கட்டிய ஒன்றே கால் கோடி ரூபாய் பணத்திற்குக் கொடுக்க மாட்டேன் என்று தந்தி கொடுத்துவிட்டார்கள். முதலிலே அவர்கள் தருகிறோம் என்று சொன்னார்கள், நாம் உடனே ஒன்றே கால் கோடி ரூபாய் பணம் கட்டினோம், ஆனால் அதற்குப் பிறகு நான்கு நாட்கள் கழித்து ஏஜன்டை அனுப்பாதீர்கள், தனியாரிடம் கொடுப்போம் என்று கொடுத்து விட்டார்கள். ஆகவே தனியாருக்கு பெர்மிட் கொடுத்து அனுப்பியது பஞ்சாப் சர்க்கார்தான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : அப்படியானால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் சீக்கிரம் முடித்துவிடுங்கள். ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : நிறைய இன்பர்மேஷன்ஸ் இருந்தன. நான் ஐந்து நிமிடங்களில் முடிக்க முடியாது, நிறைய நேரம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் பேசியதற்குப் பிறகு ஆறு பேர்கள் பேச வேண்டும், ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : ஐந்து நிமிடத்தில் முடிக்க முடியாது, வேண்டுமானால் பேசாமல் இருந்து விடுகிறோம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேசாவிட்டாலும் பரவாயில்லை, மற்றவர்கள் பேச வேண்டும், நீங்கள் முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : பஞ்சாப் அரசாங்கம் கொடுக்கவில்லை, ஆகவே தனியாருக்குக் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். பஞ்சாப் அரசாங்கம் மறுத்து விட்டாலும் ஏன் தனியாரை விட்டீர்கள், ஏன் இந்த அரசே வாங்கக் கூடாது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : பஞ்சாப் சர்க்கார் செய்ததை வேண்டுமானால் ஒரு கமிட்டி போட்டு என்குயர் பண்ணிக் கொள்ளுங்கள் தெரியும். தருகிறோம் என்றார்கள், உடனே ஒன்றேகால் கோடி ரூபாய் பணம் அனுப்பினோம். உடனே தகவல் அனுப்புகிறார்கள், ஏஜன்டை அனுப்பாதீர்கள் என்று சொல்லி, பிறகு மதன்லால் என்பவருக்குப் பெர்மிஷன் கொடுத்தார்கள். இண்டிவிஜுவலிடம் கொடுத்திருக்கிறீர்களா என்று நாங்கள் தொலைபேசியில் கேட்டோம், அவர்களும் அவருக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள், அவர்களுடைய கட்டுதிட்டத்தை மீறி நாங்கள் தனியாரிடம் போய் வாங்கினோம் என்று எப்படிச் சொல்கிறார்களோ தெரியவில்லை. ஆகவே பஞ்சாப் சர்க்கார்தான் தனியாருக்குக் கொடுத்தது.

**திரு. ஆலடி அருணா** : இது பாலிசி மேட்டர், ஆகவே ஒரு கிளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் உட்காருங்கள், அவர்கள் பேசட்டும். சீக்கிரம் முடித்துவிடுங்கள். திருமதி அனந்தநாயகி.

**திரு. ஆலடி அருணா** : இது பாலிசி மேட்டர். ஆகவே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் உங்களை பேசச் சொல்கிறேன், நீங்கள் ஏன் உட்கார்ந்து கொண்டே இருக்கிறீர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : கிளாரிபிகேஷன் என்று சொன்னார்கள். பஞ்சாப் அரசாங்கத்திலே உள்ளவர்கள் உங்கள் நண்பர் என்று சொல்லிக்கொள்கிறீர்களே, குர்னம் சிங் இங்கே வந்தார், நீங்கள் அங்கே போனீர்கள், ஏன் நீங்களே வாங்கியிருக்கக் கூடாது? அதுதான் போகட்டும். மத்திய அரசாங்கம் கொடுத்த

கோதுமையையாவது நியாயமாக விநியோகம் செய்தீர்களா? அவர்கள் 25 ஆயிரம் டன் கோதுமையைக் கொடுத்தார்கள். நீங்கள் அதைச் சரியாக விநியோகம் செய்யாமல் 10 ஆயிரம் டன்னை விற்க முடியவில்லை என்று சொல்லி தனி நபருக்கு விற்று விட்டீர்கள். 15 ஆயிரம் வரையில் நஷ்டக் கணக்குக் காட்டியிருக்கிறீர்கள். இன்றைக்கு 9 ஆயிரம் டன் வருகிறது என்றால் அதிலே குறைந்தது மூன்றில் இரண்டு பங்காவது மக்களுக்குக் கிடைக்க வேண்டுமல்லவா? நியாய விலைக் கடைகள் மூலம் சரியாக வழங்கப்படுவதில்லை. எனக்கே பல சமயங்களிலே ரவா, கோதுமை கிடைத்ததே இல்லை. இந்த நிலையில் நீங்கள் சொல்கிறீர்கள், கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாக நெல் புரக்யூர் செய்யப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். ஏற்கனவே கூட்டுறவுத் துறையிலே 1972-73-இல் 823 கையாடல்கள், 1973-லே மட்டும் 374 கையாடல்கள் என்றெல்லாம் கையாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் சர்ப்ளஸ் நெல்லை அதன்மூலம் புரக்யூர் செய்வோம் என்றால் உங்கள் எண்ணத்திலே என்ன சுத்தம் இருக்கிறது? . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கூட்டுறவுத் துறையில் கையாடல் என்றால் எந்தத் துறையில் என்று குறிப்பிட்டுச் சொன்னால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஏற்கனவே கூட்டுறவுத் துறையில் பல கையாடல்கள் நடந்திருக்கின்றன. இதையும் ஏன் அவர்களிடம் விட வேண்டும்? அவர்களுக்கு மேலும் ஒத்தாசை செய்யப் போகிறீர்களா?

**திரு. பெ. சீனிவாசன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், திருமதி அனந்தநாயகி பேசுகிறார், அவர்கள் பேசி முடிக்கும் முன்பே அமைச்சர் எழுகிறார், எழுந்தவுடனே மைக்கை இவருக்கு ஆப் செய்கிறார்கள், இது முறையல்ல, பேசி முடித்த பிறகுதான் மைக் ஆப் செய்யப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 10, 15 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு நிமிடத்தில் முடித்துவிடவும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சேமியா தொழிற்சாலைக்கு ரொட்டிக்கு என்று சொல்லிக் கொடுக்கிறீர்கள் அது கள்ளமார்க்கெட்டுக்குப் போகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் 24 மணி நேரத்தில் மூன்று உத்தரவுகள் போட்டீர்கள், ஏன் போட்டீர்கள்? என்ன ஆயிற்று? இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? 28-ஆம் தேதி செங்கற்பட்டிலிருந்து சென்னைக்குக் கொண்டு வரலாம் என்று உத்தரவு, 30-ம் தேதி கூடாது என்று உத்தரவு. இப்படித்தான் போடுகிறீர்களே?

அதற்கு என்ன காரணம் என்று மக்களுக்கு ஏதாவது பதில் சொல்கிறீர்களா? நீங்கள் இப்படி நாளுக்கொன்று செய்ததன் காரணத்தினால் தமிழகமே இன்றைக்குப் பாலைவனமாக இருக் நம்பிக்கை இல்லை என்று கிறது. ஆகவே, உங்களிடத்திலே நம்பிக்கை இல்லை என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தலைவர் அழைத்துப் பேசுகின்ற உறுப்பினர்கள் பேசுவதுதான் அவைக்குறிப்பிலே இடம் பெறும். உட்கார்ந்து கொண்டே பேசுகின்ற பேச்சுக்கள் அவைக் குறிப்பிலே ஏறாது. பத்திரிகையிலும் வரக் கூடாது என்பதைத் திரு. பெரியசாமி அவர்கள் குறிப்பிட்ட சில கருத்துக்கள் சபைக் குறிப்பிலே ஏறாது. பத்திரிகையிலும் வரக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, பேரவைத் தலைவர் அனுமதித்து பேசுகிற பேச்சுக்கள்தான் அவைக் குறிப்பிலே ஏறும், பத்திரிகைகளிலேயும் அவைதான் வரவேண்டும். உட் கார்ந்து கொண்டே பேசுவது எல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது. அந்தச் செய்திகள் பத்திரிகைகளிலும் வரக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடந்த நிலைமையைப்பற்றி எல்லாக் கட்சியினரும் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லிப் பரிகாரங்களைக் கூறினார்கள். நான் சார்ந்துள்ள முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக நடுநிலை நின்று ஒரு சில கருத்துக்களைச் சொல்வது நாட்டின்

நிலைமைக்குப் பரிகாரமாக அமையும் என்று கருதுகிறேன். இன்றைய உணவு நிலைமையை உற்று நோக்கும்போது உண்மையிலேயே மகிழ்ச்சி தருவதாக இல்லை. அதற்கு மாறாகத் தமிழகத்திலே வாழக்கூடிய மக்கள் இதுவரை அனுபவித்திரா சங்கடமான சூழ்நிலையிலே சிக்கிக் கொண்டிருப்பதைக் காணுகிறோம். எங்கே பார்த்தாலும் அரிசிப் பஞ்சம், உணவுப் பஞ்சம், அதனுடைய விநியோகத்திலே திருப்தியில்லாத நிலைமையைத்தான் காணுகிறோம். பேரூராட்சிகளிலே நியாயவிலைக் கடைகளின் மூலம் மக்களுக்கு உணவு விநியோகிக்கப்படுகிறது. கிராமங்களிலே உள்ள நிலைமை என்ன என்று பார்த்தால் என்னுடைய தொகுதி போன்ற வறட்சி வாட்டுகிற பகுதியிலே கிராம மக்களுக்கு நியாயவிலைக் கடைகளிலே உணவு வழங்கப்படுவதில்லை, அவர்களுடைய நிலங்களிலும் விளைச்சல் இல்லை, உணவு தானியமும் கைவசம் இல்லை. மக்கள் உணவில்லாமல் மிகப் பயங்கரமான சூழ்நிலையில் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நியாயவிலைக் கடைகள் விநியோகத்திற்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. 300 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் உணவு கொடுக்கப்படக் கூடாது என்று இருக்கிறது. நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படும் உணவு தான்யங்கள் கொடுக்கப்படக் கூடாது, சர்க்கரை மட்டும்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவு. நான் கேட்க ஆசைப்படுகிறேன், இன்றையதினம் விலைவாசி உள்ள சூழ்நிலையில் 5 பேர் உள்ள குடும்பத்தைச் சார்ந்தவன் ரூ. 300 சம்பளம் வாங்கினால் அவன் பெரிய வசதி படைத்தவனா? அவன் இப்படிப்பட்ட நியாய விலைக்கடைகளில் உணவு தான்யங்களைப் பெற முடியாது என்று சொன்னால் அவன் எப்படி வாழ்க்கையை நடத்த முடியும்? எத்தனை ரூபாய் அவன் உணவு தானியங்களுக்காகச் செலவழிக்க முடியும்? ஆகவே, இதில் உள்ள குறையைப் போக்குவதற்கு அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆங்காங்கு சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தச் சோதனைச் சாவடிகள் பற்றி நான் ஒரு தோழமைக் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையிலே தாழ்மையான வேண்டுகோள் ஒன்றினை விடுக்க விரும்புகிறேன். இந்தச் சோதனைச் சாவடிகள் இருப்பதுதான் மக்களுக்கு ஒரு, சோதனை





யாக இருக்கிறது. உண்மையிலேயே அரிசி, மற்றும் உணவு தானியங்களின் விலை ஏறுகிறது என்று சொன்னால் இப்படிப்பட்ட சோதனைச் சாவடிகளில் நடக்கும் சில காரியங்கள்தான் இதற்குக் காரணமாக இருக்கிறது என்பதை நான் மறைமுகமாகச் சொல்ல விரும்புகிறேன். வெளி மாநிலங்களுக்கு உணவு தான்யங்களைக் கடத்துவதன் மூலமாக ஒரு லாரிக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் அதிகம் கிரயமாகிறது என்று என்னிடத்திலேகூடச் சொன்னார்கள். இது எந்த அளவிற்கு உண்மை என்பது அரசாங்கத்திற்குத்தான் தெரியும். சோதனைச் சாவடிகளை அடிக்கடி சோதனையிட்டுப் பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். திடீரென்று மேலதிகாரிகள் சென்று சோதனை செய்ய வேண்டும். அங்குள்ளவர்களின் பாக்கெட் முதற்கொண்டு சோதனை செய்யப்பட வேண்டும். இப்படிச் செய்தால்தான் நியாயம் பிறக்கும்.

அடுத்தபடியாக, கைத்தறி சம்பந்தமாக ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று தமிழ்நாட்டிலே ஏராளமான கைத்தறி ஆடைகள் தேங்கிக் கிடக்கின்றன. கூட்டுறவுச் சாலைகளிடத்திலோ அல்லது தனிப்பட்ட மாஸ்டர் வீவர்களிடத்திலோ தேங்கிக் கிடக்கின்றன. அத்தகைய ஒரு அசாதாரணமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றிக் கேட்கப் போனால் உலகத்திலேயே விலைவாசி அப்படியிருக்கிறது, பொருளாதார மந்த நிலை இருக்கிறது என்று கூறப்படுகிறது. ஆனால் தமிழகத்திலே என்ன பார்க்கிறோம் என்றால், பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இந்த நெசவாளர்களாக இருக்கிறார்கள், நெசவுத் தொழிலிலே ஈடுபட்டவர்களாக இருக்கிறார்கள். நெசவுத் தொழிலிலே ஏற்பட்டிருக்கின்ற மந்த நிலையின் காரணமாக சரக்குகள் தேங்கிக் கிடப்பதால் பல நெசவாளர்கள் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. ஆகவே, இதற்கு ஏதேனும் ஒரு பரிகாரத்தைக் காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசப்பட்டது, என்னுடைய நண்பர்கள் சொன்னார்கள், அதை நான் ஒப்புக் கொள்ள மறுக்கிறேன். அதாவது, ஏழை எளியவர்களுடைய நன்மையைக் கருதும் நிலைமையிலிருந்து மாறி இந்த அரசு பணம் படைத்தவர்களுடைய ஆட்சியாக, அவர்களுடைய நண்பர்களாக மாறி

விட்டது என்ற பொதுப்படையான குற்றச்சாட்டைக் கூறினார்கள். உண்மையிலேயே நான் சொல்ல ஆசைப்படுகிறேன், என்னுடைய கட்சியின் சார்பாகச் சொல்ல ஆசைப்படுகிறேன், இந்த ஆட்சி அறிந்தோ அறியாமலோ ஒரு சில தவறுகள் செய்திருக்கிறது என்பதை நான் பகிரங்கமாக ஒப்புக் கொள்கிறேன். ஆனால் எந்த ஒரு நிலையிலும் பணம் படைத்தவர்களின், வசதி படைத்தவர்களின் கையாளாக இந்த அரசு இருந்ததும் இல்லை. இருந்து கொண்டிருக்கவும் இல்லை; இருக்கவும் இருக்காது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ஆட்சி செய்கின்ற ஒவ்வொரு சட்டமும் உண்மையிலேயே எங்களைப் போன்ற நடுத்தர மக்கள்கூட, இவ்வளவு தீவிரமாக ஒரு கம்யூனிச தத்துவத்தைப் புகுத்த வேண்டியதில்லை, சற்று நிதானம் காட்டியிருக்கலாம் என்று குறிப்பிடும் அளவிற்கு இருக்கிறதே தவிர, இந்த அரசு வசதி படைத்தவர்களுக்கு நன்மைகள் செய்யக்கூடிய எந்தவொரு சட்டத்தையும் கொண்டு வரவில்லை. ஆகவே, எந்த ஒரு செயலையும் வசதி படைத்தவர்களுக்காகச் செய்தார்கள், அதன் மூலம் வசதி படைத்தவர்கள் அதிக வசதிகளைப் பெற்றார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் தனிப்பட்ட முறையில், மனிதனுக்கு மனிதன் என்ற முறையில் யாரேனும் வசதி படைத்தவர்களோடு நட்புறவு கொண்டிருக்கலாம். இதைக்கூட குறை என்று சொன்னால் நிச்சயமாக அதை ஏற்க முடியாது. ஏதோ வசதி படைத்தவர்கள் என்பதனாலேயே அவர்கள் பாவிகள் அல்ல, இந்த நாட்டிலே கழுவில் ஏற்றப்படக் கூடியவர்கள் அல்ல, அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான்.

எனவே, ஒரு பிரஜை என்ற முறையில் அவர்களோடு பழகுவது தவறு அல்ல. ஆனால் அரசாங்கம் செய்யும் காரியங்களிலே ஏதேனும் இப்படிப்பட்ட வசதி படைத்தவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா? அவர்கள் மேலும் பணக்காரர்களாவதற்குத் திட்டங்கள் செய்யப்பட்டிருக்கிறதா என்று காட்டினால் அதை நான் ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன். இந்த அரசு செய்துள்ள குடிசை மாற்று வாரியத் திட்டம், பிச்சைக்காரர் மறு வாழ்வுத் திட்டம், நிலமற்றோர்களுக்குக் குடியிருப்பு வழங்கும் திட்டம், நில உச்சவரம்புச் சட்டம் போன்ற சட்டங்கள் பணக்காரர்களுக்கு நன்மை செய்யக்கூடிய சட்டங்களா என்பதை நான் அந்த நண்பர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன்.





நிலமற்றோர்களுக்கு நிலத்தைக் குடியிருப்பு செய்ய இரண்டு சட்டங்களைக் கொண்டு வந்து அதற்குண்டான திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறது.

குடிசை மாற்று வாரியத்தை எடுத்துக் கொண்டால், கனவிலேயும் காண முடியாத அளவிற்கு ஏழை மக்கள் இன்றையதினம் மாடி வீடுகளில் குடியிருக்கிறார்கள்.

நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நிலமற்ற பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு விவசாயப் பட்டாக்கள், குடிமனைப் பட்டாக்கள் கொடுத்திருக்கும் காட்சியை நாம் காண்கிறோம்.

இவைகளெல்லாம் வசதி படைத்தவர்களுக்கும், பணக்காரர்களுக்கும் செய்யப்பட்டதா? ஆகவே, ஒட்டுமொத்தமாக இப்படிப்பட்ட குறைகளைச் சொல்லி, பணக்காரர்களுக்கு நண்பர்களாகி விட்டார்கள் என்று சொல்வது முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, எல்லோருடைய கவனத்திலேயும், எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களின் கவனத்திலேயும், எல்லோருடைய பேச்சிலேயும் அடிபட்ட ஒரு பிரச்னையைப்பற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே தனிப்பட்ட முறையிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதுதான் தாண்டவராயன் விவகாரம். இந்த தாண்டவராயன் விவகாரத்தைப்பற்றி நான் என்ன சொல்ல ஆசைப்படுகிறேன் என்றால் உண்மையிலேயே ஒரு சர்பளத்திற்கு இருக்கும் நபருக்கு, ஏற்கனவே வாணிகத்தில் தானாக சுயப்பொறுப்பில் ஈடுபட்டு இல்லாத நபருக்கு, மூன்று முறை டெண்டர் கொடுத்து ஒப்புக் கொள்ளாத ஒரு நபருக்கு, தனிப்பட்ட நெகோஷியேட்டட் டெண்டர் என்ற முறையிலே பெரிய ஆர்டரை அல்லது டெண்டரை ஒப்படைத்ததை உண்மையிலேயே எங்களுடைய மனச்சாட்சிக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. ஏதாவது தவறு நிகழ்ந்திருக்கலாமோ என்ற அச்சத்தை மக்களோடு சேர்ந்து நானும் கொள்கிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 டிசம்பர் 16

அது மட்டுமல்ல, அந்தத் தாண்டவராயன் என்னும் ஆள் ஜம்புலிங்க முதலியார் என்பவருடைய ஆள், ஜம்புலிங்க முதலியார் யார்? வேலூரைச் சேர்ந்தவர், இந்தத் தாண்டவராயன் வேலூரைச் சேர்ந்தவர். இன்றைக்கு கோயம்புத்தூர் தாண்டவராயனாகிய காரணம் என்ன? அது விளங்கவில்லை. ஆகவே, இதில் நாட்டு மக்களிடத்திலே சந்தேகம் வந்துவிட்டது. சரியோ, தவறோ இந்தச் சந்தேகம் வந்துவிட்டது. எப்படி சீதாப் பிராட்டியார் உண்மையிலேயே தூய்மையானவர், இராவணன் கடத்திச் சென்ற பிறகு இராமபிரான் போராடி மீட்டுக் கொண்டு வந்துவிட்டார். உண்மையில் கடவுளின் மறு அவதாரமாகிய இராமருக்கு தன் மனைவி தூய்மையானவள் என்பதில் சந்தேகம் ஏற்படவில்லை, சந்தேகம் இருந்ததும் இல்லை. ஆனால் உலகத்தில் வதந்தி பேசுகிறார்கள் என்ற காரணத்திற்காக அக்கினிப் பிரவேசக் கட்டம் ஏற்பட்டது. இது இந்த நாட்டிலே ஒப்புக்கொள்ளப்பட்ட நிலை. ஆகவே, தாண்டவராயன் விஷயத்தில், நானும் பிரச்னைக்குரிய அறிக்கையாக இருக்கின்ற இந்த அறிக்கை சம்பந்தப்பட்ட எஸ்டிமேட் கமிட்டியில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். (குறுக்கீடு) துரதிருஷ்டவசமாக அல்ல, அதிருஷ்டவசமாகத்தான், அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இம்மாதிரி விருப்பு வெறுப்பு இன்றி, வேண்டியவர் வேண்டாதவர் என்று இல்லாமல் தனக்குக் கிடைத்த தகவலைக் கொண்டு அறிக்கை சமர்ப்பித்த நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களை, மனச்சாட்சி உள்ளவரைப் பாராட்டுகிறேன்.

ஆகவே, சித்தார்த்த சங்கர ரே அவர்கள் மேற்கு வங்க முதல்வர், தன்னுடைய அமைச்சரவையில் உள்ள ஒருவர் மீது ஒரு குற்றச்சாட்டு சாட்டப்பட்டவுடனே என்ன செய்தார்? உடனே நீதிபதியை நியமித்து அது உண்மையா, இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்தார். ஆகவே, இங்கே பரவலாக நாட்டு மக்கள் இப்படிப்பட்ட ஒரு குற்றம் நடந்திருக்குமோ, ஏதேனும் இதில் தவறுகள் நடந்திருக்குமோ என்று சந்தேகிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை மறைக்க முடியாது. இல்லையென்று சொல்லிவிடுவதால் மட்டும் மக்களை நம்ப வைக்க முடியாது. இதற்கு நாங்கள் வழக்குமன்றத்தில் கேஸ் தாக்கல் செய்துவிட்டோம் என்று சொல்வதால் மட்டும் இது நிரூபிக்கப்பட்டு விட முடியாது. ஆகவே, நான் சொல்வது என்னவென்றால்,



1974 டிசம்பர் 16] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

இப்பொழுது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கை சிறிது காலத் திற்கு வாபஸ் பெறுங்கள். நான் சொல்லும் பிரகாரம் இப்பொழுது சிறிது காலத்திற்கு வாபஸ் வாங்கிவிட்டு, ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை நியமித்து இது சம்பந்தமான முழு விசாரணைக்கு அனுமதித்து, அரசாங்க தஸ்தாவேஜுகளைப் பரிசீலனை செய்து, இதில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள குற்றவாளிகளைத் தவிர வேறு எவ ரேனும் இந்தக் குற்றத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதையும் கண்டறிந்து, முழுக் குற்றவாளிகளையும் வெளி உலகத்திற்குக் கொண்டுவந்து, அந்தக் கமிஷனின் அறிக்கையின் அடிப்படையிலே அதற்குப் பிறகு மீண்டும் அவர்கள் மீது குற்றம் தாக்கல் செய்யப் பட வேண்டும், விசாரணை நடத்தி குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பதற்காக வழிமுறைகளை, முதலமைச்சரவர்கள் தற்பொழுது இங்கு இல்லாவிட்டாலும்கூட, இந்தச் சபையிலே இல்லாவிட்டாலும் கூட, என்னுடைய குரல் அவர்களுடைய காதிலே ஒலிக்கும் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 1.00)

நீதியின் பெயரால், நியாயத்தின் பெயரால், தோழமையாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் மாசு இல்லாதது, மரு இல்லாதது, தூய்மையானது என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டு வதற்காக,—நான் உள்ளத்தால் மனப்பூர்வமாக யார் மீதும் குற்றம் சாட்ட வேண்டும்; சேற்றை வாரி வீச வேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லவில்லை—தூய்மையானவர்கள் என்று உலகத் திற்குக் காட்டுவதற்காக, நிரூபிப்பதற்காக நியாயபூர்வமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதை நான் என்னுடைய சார்பாக இந்த மன்றத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். (எதிர்க்கட்சி வரிசையில் ஆரவாரம்).

இப்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் நாடு தொடர்ந்து இருக்கு மானால் நாட்டில் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு விடும். உணவுப் பிரச்னை தீர்க்கப்பட்டாக வேண்டும். பருவ மழை தவறியது நம் முடைய குற்றமல்ல. மத்திய அரசோடு போராடி வேண்டிய அளவு உணவு தானியத்தைப் பெற்று சீரான விநியோகத்தை நடத்த வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து நான் அமர்கிறேன்.

## 5. அறிவிப்பு.

### பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்தபடி நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விவரம்:—

| | |
|---|---|
| 17—12—1974 (செவ்வாய்) | கேள்வி நேரம் இல்லை. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீதும் மேலும் விவாதம். |
| 18—12—1974 (புதன்) | மேற்படி விவாதம்—கடைசி நாள். |
| 19—12—1974 (வியாழன்) | தனியார் அலுவல்கள். |
| 20—12—1974 (வெள்ளி) | அரசினர் சட்ட முன்வடிவுகள், தீர்மானங்கள். |
| 21—12—1974 (சனி) | 1974–75 ம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகள்—விவாதமும் வாக்கெடுப்பும். நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். |
| 22—12—1974 (ஞாயிறு) | விடுமுறை. |
| 23—12—1974 (திங்கள்) | நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். அரசினர் சட்ட முன்வடிவுகள், தீர்மானங்கள். |

[பேரவைத் தலைவர்]



**திரு. கு. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மன்றத்தில் அரசு மீது கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் ஆகிய இரண்டு தீர்மானங்களையும் வன்மையாகக் கண்டித்து என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலையில் பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் இந்த அரசு சாதாரண மக்களின் கையிலிருந்து தவறி சீமான்களின் கையில் போய்ச் சேர்ந்துவிட்டது என்று மனச்சாட்சிக்கு விரோதமான கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு அப்படிப் போயிருக்கிறதா அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் சீமானின் பக்கம் போயிருக்கிறாரா என்று அவர் மனச்சாட்சியோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த அரசு ஏழை எளியவர்கள் அரசு; வாழ்க்கையில் தாழ்த்தப்பட்ட அரிசனப் பாட்டாளி மக்களின் அரசு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் இந்த மன்றத்தில் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் இருக்கின்ற இடம் காரணமாக மனத்திற்கு விரோதமாகச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது என்று கருதுகிறேன்.

உணவு நெருக்கடி மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியான நேரத்தில் ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சிகள் நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் பல்வேறு குழப்பங்களைத்தான் ஏற்படுத்தினார்களே தவிர, நல்ல ஆலோசனைகளைச் சொல்லவில்லை.

அந்தக் கட்சியின் தலைவர் இந்த நெருக்கடியான நேரத்தில் அவைக்கு வந்து தன்னுடைய கருத்துக்களைச் சொல்லவில்லை. அந்தத் தலைவர் அவைக்கு வந்து இந்த நெருக்கடியான நேரத்தில் இந்த இந்த நடவடிக்கைகளை எடுத்தால் நெருக்கடியைப் போக்கிக் கொள்ளலாம், உணவுப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று சொல்லலாம்.

[திரு. கு. இராசமாணிக்கம்] [1974 டிசம்பர் 16

பற்றுக்குறை காரணமாக அரிசிப் பிரச்சினையை வைத்து இந்த ஆட்சியை அகற்றலாம்; மழை இல்லாததை வைத்து மடக்கலாம் என்று யாரும் எண்ண வேண்டாம். இன்றையதினம் ராணுவ நடவடிக்கையாக நம்முடைய முதல்வர் அவர்கள் உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். எப்படியும் இந்தப் பிரச்சினையைச் சமாளித்துத் தீரவேண்டுமென்ற முறையில் நேற்றைய முன்தினம் மேலவையில் விவாதிக்கின்ற நேரத்தில் கூறியிருக்கிறார்கள். 'தஞ்சை மாவட்டத்தில் முப்போக சாகுபடி செய்ய வேண்டும்; அதற்கான திட்டங்கள் அத்தனையையும் பின்னால் அறிவிக்கிறேன்' என்று கூறியிருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் ஒழுங்காக மழை பெய்தது; தண்ணீர் வந்தது. உணவு இருப்பு இருந்த நேரத்திலும்கூட ஆறு அவுன்ஸ்தான் கொடுத்தார்கள். அதற்கே மக்கள் நீண்ட க்யூவில் நின்று வாடினர். கடலையையும், பொரிகடலையையும் வாங்கித் தின்றனர். அப்படிப்பட்ட நிலைமை இன்றையதினம் இல்லை. கிலோக் கணக்கில் கொடுக்கிற அளவுக்கு பங்கீட்டுக் கடைகளை ஆங்காங்கு வைத்திருப்பதோடு அதன் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட நேரம் கடையில் காத்திருக்க வேண்டியதில்லை. வீட்டிலிருந்தபடியே பெற்றுக் கொள்வது போல் பெற்றுக் கொள்ளலாம். இப்படித் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

இந்த ஆட்சியில்தான் மழை இல்லை என்ற நிலை இல்லை. பழைய காலத்திலும் மழை இல்லாத நிலைமைகள் இருந்திருக்கின்றன. அரிச்சந்திரன் காலத்தில்கூட மழை இல்லாமல் பஞ்சம் ஏற்பட்டு பல பேர் கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். நல்லதங்காள் என்று சொல்லுவார்கள்—அரச பாரம்பரையிலே வந்தவர்கள் சாப்பாட்டிற்கு இல்லாமல் குழந்தைகளையும் கொன்று தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றையதினம் முதல்வர் அவர்கள் எந்தெந்தத் திட்டங்களை எப்படிச் செயல்படுத்த வேண்டுமென்று திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரப் பற்றுக்குறை இருந்தாலும் விவசாயத்திற்கு முதலிடம் தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். மாநகராட்சி தனி அதிகாரிகூட இரண்டு விளக்குகள் இருக்கும்



1974 டிசம்பர் 16] [திரு. கு. இராசமாணிக்கம்]

இடத்தில் ஒரு விளக்கு போதும் என்று தெரிவித்திருக்கிறார். ஆயில் எஞ்சின் விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய் குறைத்து விவசாயிகளுக்குச் சலுகை விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் வட ஆற்காடு செங்கற்பட்டு மாதிரி தண்ணீர் நிற்காது. டெல்டா பிரதேசமானதால் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தால்தான் தண்ணீர் நிற்கும். அப்படிப்பட்ட இடங்களில் கூட மூன்று போகம் சாகுபடி செய்வதற்கு பம்ப் செட்டுகளுக்கு இணைப்புத் தர வேண்டும். இப்படிப்பட்ட அறிவிப்புகளை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய அரசு ஒரு மாடலாக, முன்னோடியாக இருக்கிறது. தமிழ் மாநிலத்திலேதான் சிறந்த ஆட்சி இருக்கிறது என்று வடக்கே இருந்து வருகிறவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களும் பாராட்டுகிறார்கள். பத்திரிகையில் எழுதுகிறார்கள்.

வடக்கே ரயிலில் ரிசர்வ் செய்ய டோக்கன் வாங்குவது போல் ஓட்டல்களில் சாப்பிடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே டோக்கன் வாங்கிச் சாப்பிடும் நிலைமை இருக்கிறது. இங்கு அப்படிப்பட்ட நிலைமை இல்லை. இப்போதும் ஒழுங்காகச் சாப்பிடுகிறோம். பஞ்சம் வந்து விடாது சமாளிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம். எப்படி கோழி ஆகாயத்தில் பறக்கிற பருந்தைப் பார்த்து தன்னுடைய குஞ்சுகளை அலகால் அணைத்துக் கொள்ளுகிறதோ அதேபோல் பஞ்சம் வந்து விடுவதற்கு முன் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப் பட்டு வருகின்றன என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. அப்படி முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற திட்டங்களை மறைக்க வேண்டுமென்பதற்காக வேறு எதை எதையோ சொல்லுகிறார்கள். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆட்சிக்கு எதிராகப் பொதுமக்கள் பொங்கி எழுவார்கள் என்று எதிர் பார்த்தார்கள். அவர்களால் புரட்சி செய்ய முடியவில்லை.

அரசாங்க நிகழ்ச்சிகளை தமிழ்த்தாய் வாழ்த்தில் தொடங்கி நாட்டு வாழ்த்தில் முடிப்பார்கள்.

ஆகவே ஒரு கூட்டம் ஆரம்பிக்க தமிழ்த்தாய் வாழ்த்து, கூட்டத்தை முடிக்கிற நேரத்தில் நாட்டு வாழ்த்து என்று வைத்திருக்கிறார்கள். அதேபோல் எதிர்க் கட்சியினர் ஒரு கூட்டத் தொடர்

வந்தால் கண்டனத் தீர்மானம் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று ஒரு மரபாகக் கொண்டு வருகிறார்களே தவிர இது அவசியமா, தேவைதானா என்று பார்ப்பதில்லை. ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் என்று சொல்லி காலத்தை நேரத்தை வீணாக்கிக் கொள்வதை விட்டுவிட்டு—எல்லோரும் எல்லாம் தெரிந்தவர்கள்—எல்லோரும் நல்ல ஆலோசனைகளை, நாட்டு மக்களுக்கு உணவு கிடைக்க வேண்டும், இந்த ஆட்சி செம்மையாக நடைபெற வேண்டும் என்பதற்காக, வழங்க வேண்டும்.

பொதுமக்களைச் சந்திப்பது என்பதற்கு பொது மக்களைச் சந்திக்க இன்னும் 14 மாதங்கள் உள்ளன. அப்போது சந்திப்போம். அங்கே உங்களுக்குள்ள ஆதரவையும், எங்களுக்குள்ள ஆதரவையும் பார்த்துக்கொள்வோம். அதை அங்கே வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர இந்த மன்றத்தில் அதை முடிவு செய்து கொள்வது என்பது இயலாத காரியம்.

நல்ல கருத்துக்களை அல்லது ஆலோசனைகளை சொல்லாவிட்டாலும், நல்ல காரியங்களைச் செய்யும் இந்த அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். நம்மை நோக்கியிருக்கும் பிரச்னைகளை சொந்தப் பிரச்னைகளாகச் சிலர் கருதுகிறார்களே தவிர அரசியல் கட்சியின் பிரச்னையாகக் கருதவில்லை. இந்த ஆட்சி தொடர்ந்து 76 வரை அல்ல, 86 வரையிலாவது இந்த நாட்டு மக்கள் இந்த ஆட்சியைத்தான் கொண்டுவருவார்கள். இந்த ஆட்சியில் நான் என்றைக்கும் நம்பிக்கை தெரிவித்து கொண்டிருப்பேன், பொதுமக்களும் நம்பிக்கை தெரிவித்துக் கொண்டிருப்பார்கள் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயின்ட் ஆப் ஆர்டர். விஷக் கிழங்குகளைச் சாப்பிட்டு மக்கள் செத்து மடிகிறார்கள் என்ற செய்தி வரும்போது பஞ்சம் இல்லை என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார்கள் என்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டரா?

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் நான் ஆதரித்து என் கட்சி சார்பாக ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.



இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு நியாயமான தீர்மானம். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் காரணமாக இந்த சர்க்கார் தானாகவே ராஜிநாமா செய்து விடுமா அல்லது ராஜினாமா செய்வார்களா என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், குறிப்பாக ரொம்ப நாட்களுக்கு முன்பே இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்ற நிலைமை நாட்டு மக்களிடையே வந்து விட்டது. இன்று ஆட்சியில் இருப்பவர்கள் தங்களுக்கு இருக்கிற மெஜாரிட்டி சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு 76 வரையில் ஓட்டினாலும்கூட நாட்டு மக்கள் என்ன நம்புகிறார்கள் என்றால் இந்த ஆட்சி சரியில்லை என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். பின்னே வருகிற ஆட்சி எந்த ஆட்சி என்பதுதான் இன்று கேள்விக் குறியாக இருக்கிறது. அதைப்பற்றித்தான் நாட்டு மக்கள் பஸ் களிலும், ரெயிலிலும், ரோட்டிலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை பொய் என்று மறுத்துப் பேசலாம் அல்லது ராஜமாணிக்கம் அவர்கள் சொன்னதுமாதிரி 76 வரையில் ஓட்டி விடலாம்.

1952-ல் எதைச் சொன்னாலும் காதில் கேட்காது, காங்கிரஸ் கட்சி 375 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்த காலத்தில் ஆட்சிக் கட்டிலில் இருந்தது. அப்போது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வர்கள் 152 பேர்களும், காங்கிரசை எதிர்த்து நின்றவர்கள் 223 உறுப்பினர்கள் என்ற நிலையில் பல சாகஸங்களைச் செய்து அரசுக் கட்டிலில் அமர்ந்திருந்த நிலை நமக்குத் தெரியும். அன்றும் நான் சட்டமன்ற உறுப்பினர்.

அதேபோல் 1976-ம் ஆண்டு தேர்தலில் ஒரு பயங்கரமான சூழ்நிலை, ஒரு குமுறல், ஒரு கொந்தளிப்பு ஏற்பட இருக்கிறது. அந்தக் கொந்தளிப்பை, குமுறலை உணர்ந்து இந்த அரசு தானாகவே ராஜிநாமா செய்வதுதான் சாலச் சிறந்த வழியாகும் என்பதை நான் மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1967-ல், இந்த கட்சி ஆட்சிக் கட்டிலில் அமர்கிற காலத்தில் 33 லட்சம் டன் அரிசி விளைந்தது. 33 லட்சம் டன் விளைந்த காலத்தில் 10 ரூபாய்க்கு ஒரு படி அரிசி, எட்டு ரூபாய்க்கு ஒரு படி அரிசி, ஏழு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று விற்கவில்லை. இன்றுள்ள இந்த நிலை, என்றைக்குமே தமிழகத்தின் வரலாற்றில் கண்டிராத அளவில் விலை ஏறியிருக்கிறது. அப்படி விலைவாசி ஏற பஞ்சம்,

வரட்சி ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் நிர்வாகத்தில் இன்று கோளாறு இருக்கிறதா? இல்லையா? ஒப்புக்கொள்ள மாட்டார்கள், இருக்கிறது என்று. ஏன் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள்? நீங்கள் உண்மை நிலையை, உண்மையை மூடி மறைக்கிறீர்கள். நிர்வாகக் கோளாறு இன்று இருக்கிறதா, இல்லையா, சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படிப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஸ்பீக்கரைப் பார்த்துக் கொண்டு தான் பேசவேண்டுமென்று எந்த விதியும் கிடையாது.

He must address the Speaker but he can face anybody. உங்களைப் பார்த்துக் கொண்டே பேசவேண்டுமென்றால் ரொம்ப சிரமம்.

**திரு. எஸ். வடிவேல் :** இன்று நிர்வாகக் கோளாறு இருக்கிறது. உணவுக் கொள்கையில் அரசாங்கம் கடைப்பிடிக்கிற கொள்கை சரியா என்பதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். சமீபத்தில் குறுவை அறுவடை நடைபெற்றது தஞ்சை மாவட்டத்தில். 58 கிலோ மூட்டை பிடிக்க வேண்டுமென்று உத்தரவு. 68 கிலோ கொடுத்தாலும் வாங்க மறுத்தார்கள். மழையால் நனைந்துவிடவில்லை. வர்த்தகச் சூதாடிகள் நிலைமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். விலை ஏறியிருக்கிறது என்றால் உழுபவனுக்கு விலை உயரவில்லை, வாங்கி உண்பவனுக்கும் வழி இல்லை. இன்று கைத்தறி நெசவுத் தொழிலாளர்களும் கஷ்டப்படுகிறார்கள். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்று கவிச்சக்கரவர்த்தி பாரதி சொல்லியிருக்கிறார். இன்று உழவையும் தொழிலையும் நிந்தனை செய்வோம், உண்டு களித்திருப்போரை வந்தனை செய்வோம் என்று வந்தனை பாடும் அரசாக இந்த அரசு மாறி இருக்கிறது என்பதுதான் என் குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தமிழ்நாட்டுக்கு மட்டும் பாடினாரா அல்லது கேரளாவிற்கும் சேர்த்துப் பாடினாரா?



**திரு. எஸ். வடிவேல் :** எல்லோருக்கும் சேர்ந்துதான் பாடினார். அங்கு நாலரை ரூபாய்க்கு விற்கிறது அரிசி, இங்கு பத்து ரூபாய்க்கு அரிசி விற்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கையை ஆட்டிக் கொண்டு பேசாதீர்கள்.

**திரு. எஸ். வடிவேல் :** கைநீட்டாவிட்டால் எனக்குப் பேச வராது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** திரு. வடிவேல் அவர்கள் கொஞ்சம் கையை நீட்டாமல் பேசினால் நன்றாகயிருக்கும். எல்லோருக்கும் பழக்கம்தான், அந்தத் தொழில் எங்களுக்கும் தெரியும். 15 ரூபாய்க்கு அங்கே விற்கிறார்கள், இங்கே ரூ. 1.97-க்குப் போடுகிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல் :** ஆட்சிக்கு நீங்கள் வந்தபோது 55 லட்சம் டன் அரிசி விளைந்தது. அப்போது அரிசி விலை குறையுமா, கூடுமா? அரிசி உற்பத்தி அதிகமாக ஆக விலை குறையுமா, கூடுமா? தஞ்சையில் ஒரு மூட்டை நெல் ரூ. 52, ஈரோட்டில் ரூ. 155. இது ஒரே மாநிலத்தில். கேரள மாநிலம் அல்ல, கர்நாடக மாநிலம் அல்ல, பஞ்சாப் மாநிலம் அல்ல. ஒரு மாநிலத்தில் சீரான முறையில் கொள்முதல் செய்து, சீரான முறையில் விநியோகம் செய்தால் உண்பவனுக்கும் வழி உண்டு, உற்பத்தி செய்கிற உழுபவனுக்கும் வழி உண்டு. நான் எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் அதன் பின்னராக இருந்தேன், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி தலைவராக இருந்தார்கள். அப்போது உணவுத் துறை காரியதரிசி சொல்கிறார், நூறு கோடி ரூபாய் அளவிற்கு விநியோகம் செய்கிற இடத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் இருந்தவர்கள் கமிட்டியில் நடந்ததைப் பற்றி இந்த மன்றத்தில் பேசுவது முறை அல்ல. அப்நார்மல் கண்டிஷனில், இந்த நேரத்தில் ஒரு சூழ்நிலை காரணமாக அதுபற்றி குறிப்பிட வேண்டிய நிலைமை வந்ததால் அதைப் பற்றிக் குறிப்பிட்டு பேசுகிறார்கள். அங்கு என்ன நடந்தது என்பதையெல்லாம் இங்கு பேசுவது முறை அல்ல.

**திரு. ஆலடி அருணா:** பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கு இரண்டு மூன்று சந்தர்ப்பங்கள் கொடுத்தீர்கள்.

The Mike Operator is Controlling the Honse. I want to know whether the operator can control the House.
நீங்கள் பேசுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது மைக் ஏன் வொர்க் செய்யவில்லை? மதிப்பிற்குரிய கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு அரசுக்கு ஆதரவாக கருத்து தெரிவிக்க இரண்டு மூன்று சந்தர்ப்பங்கள் கொடுத்திருக்கிறீர்கள். திரு. வடிவேலுக்கு மட்டும் ஏன் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மறுக்கவில்லை. ஒரு சூழ்நிலை காரணமாக குறிப்பிடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அவரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் கமிட்டியில் என்னென்ன நடைபெற்றது, யார் யார் என்ன என்ன சொன்னார்கள் என்பதைப்பற்றி இங்கு இந்த மன்றத்தில் சொல்வது முறையல்ல என்றுதான் சொல்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** நான் அதை யெல்லாம் சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட விஷயம். சென்ற வருஷத்தில் 5 லட்சம் கொடுத்ததற்குக் கணக்கு கொடுக்கவில்லை. அப்படிப்பட்டவருக்கு மறுவருஷம் ஏன் மூன்று லட்சத்துக்குக் கொடுக்க வேண்டும். யாருடைய சிபார்சின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது? மந்திரிகளின் சிபார்சுதானே? சிபார்சின் பேரில்தானே கொடுக்கப்பட்டிருக்கிறது? இது தப்புதானே? பொது மக்கள் பணம்தானே விரயம் ஆகிறது? நான் அதைப்பற்றிப் பூரணமாகச் சொல்லவில்லை. நடந்தது எல்லாவற்றையும் சொன்னால் வேடிக்கையாக இருக்கும், விந்தையாக இருக்கும். அந்தக் கதையை பூராவும் நான் சொல்ல வரவில்லை. அதற்குள்ளே நான் போகவில்லை. நிர்வாகத்தினுடைய கோளாறு தானே இதற்கெல்லாம் காரணம்?

தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலம். அங்கு ஏன் இந்த தரித்திரம் வரவேண்டும்? பற்றாக்குறையா, பதுக்கலா காரணம்? இதைப்பற்றி சிந்திக்க வேண்டும், சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.





எங்களுடைய லட்சிய திட்டம் 3 படி, உடனடி திட்டம் ஒரு படி; இப்பொழுது ஒரு படி ரூ. 10; என்ன அழகான வாசகங்கள்! வாசகங்கள் அழகாகத்தான் இருக்கின்றன. அரிசியிலே செத்துப் போகப் போகிறாங்க, சகாப்தம் முடிந்துவிடப் போகிறது. இப்பொழுது இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லை என்று சொல்லி ஆட்சியை கவிழ்த்துவிடப் போவதில்லை. மெஜாரிட்டி வோட்டுப் பெற்றுவிடக்கூடிய நிலைமை இருப்பதால் சர்க்கார் உடனே கவிழ்ந்துவிடாது. ஆனால், மக்களுடைய உள்ளக் குமுறலை சொல்லித்தானே அழ வேண்டும். வெளியில் இருக்கக்கூடிய நிலைமையை இங்கே சொல்லித்தானே ஆகவேண்டும். நிலைமை என்ன? நிர்வாகக் கோளாறுதான்.

திருத்துறைப்பூண்டியில் அரிசனங்கள் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். வேலூரில் சுரப்பூர் என்ற கிராமத்தில் வீட்டைக் கொளுத்தியிருக்கிறார்கள். அரிசன நல அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துவிட்டார்கள்? பாபநாசம் ஓலப்பாடியில் 6 பேர்களை வெட்டிக் குளத்தில் தூக்கிப் போட்டு விட்டார்கள், ஒருவர் செத்துவிட்டார். ஐ.ஜி.-க்கு தந்தி கொடுத்தேன். டெலிபோன் பேசினேன். முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

**மாண்புமிகு திரு. என். ராஜாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கொடுத்த புகார் மீது நேரடியாக நான் சென்று ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் நுழைந்து நடந்த விவரங்களை யெல்லாம் தெரிந்து கொண்டுவந்தேன். முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும், கட்சிக்கு அப்பாற்பட்டு வேறு வகையில் ஏற்பட்ட சச்சரவாகும். வேறு வகையில் அந்த சம்பவங்கள் நடந்திருக்கின்றன. எப்படியோ அரிசனங்களுக்கு புனர் வாழ்வு அளிக்க வேண்டும் என்று வீடுகள் கட்டுவதற்கு என்று ஒரு கமிட்டி நிறுவி, நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. திடீரென்று 150 வீடுகளைக் கட்டிக் கொடுத்து விட முடியாது. அதற்கு அரசாங்கம் பணம் ஒதுக்க வேண்டும். வீடுகள் கட்டித் தருவோம். நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எந்தப் புகாருக்கும் இடமில்லை.

**திரு. எஸ். வடிவேல்:** 150 வீடுகள் சேதமாயின ஒரே ஊரில். சுதந்திரம் பெற்று 28 ஆண்டுகள் ஆகியும் அரிசனங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இந்தச் சபையில் உங்களுடைய தலைமையில் சொல்லாமல் வேறு எங்கே சொல்வது? நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று மந்திரி அவர்கள் சொன்னதற்கு நன்றி.

வேலூரில், சுரப்பூரில் ஒரு சர்கிள் இன்ஸ்பெக்டர் வீடு புகுந்து அடிக்கிறார். ஓலப்பாடியில் 6 பேர்களை வெட்டிக் குளத்தில் தூக்கிப் போட்டு விட்டார்கள். ஒருவன் செத்துவிட்டான். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு? அமைச்சர் நடவடிக்கையைப் பாராட்டுகிறேன். அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

முதலமைச்சர் அவர்களுடைய வாக்குறுதி நடைமுறையில் சாத்தியப்படுமா? ஐந்து, ஆறு மாதமாகும். என்ஜின் ஆயில் கொடுத்து, பணம் கொடுத்து, லெவி கொள்முதல் செய்து எல்லாம் ஆகவேண்டும். பத்திரிகையில் வருவதற்கு அழகாக இருக்கும், பேசுவதற்கு அழகாக இருக்கும். ஆனால் நடைமுறைக்கு வர வேண்டுமே?

தஞ்சாவூரிலிருந்து திருச்சி மாவட்டத்திற்கு அரிசி கொண்டு போகக் கூடாது என்று சொல்கிறார்கள். இங்கே 6 மரக்கால் அரிசி வாங்கி, அதில் தண்ணீர் ஊற்றி, பொங்கி, சோறு செய்து, மிளகாய் வைத்து அங்கே எடுத்துச் சென்றால், சோறு கொண்டு போகக் கூடாது என்கிறார்கள். அரிசிதான் கொண்டு போகக் கூடாது என்று சொல்கிறார்கள். சோறு கூடவா கொண்டு போகக் கூடாது? தன்நிறைவு பெற்றது தமிழ் நாடு. ஆனால் நாட்டினுடைய நிர்வாகத்தில் கோளாறு இருக்கிறது. ஒரே சிராக என் கொள்முதல் செய்யக் கூடாது?

தஞ்சாவூர் மாவட்டத்தில் வயலில் பிள்ளைகளைப் புதைக்கக்கூடிய அளவுக்கு வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது. நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கிறது.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சாப்பாட்டுக் கஞ்சி நாகர்கோவிலிலிருந்து கோளாவுக்குப் போய்விட்டது போன மாதம் . . .

**திரு. எஸ். வடிவேல்:** அந்தக் கிராமத்து * * பற்றி நான் சொன்னால் நீங்கள் இந்தக் கிராமத்து * * பற்றிச் சொல்கிறீர்கள். கேரளம் பற்றாக்குறை மாநிலம். ஆந்திரா பற்றாக்குறை மாநிலம் அல்ல. கர்நாடகம் பற்றாக்குறை மாநிலம் அல்ல . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** * * போன்ற வார்த்தைகளெல்லாம் வேண்டாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நாங்கள் அமைச்சரிடம் உத்தரவு பெற விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில நேரங்களில் அவையில் சில விரும்பத் தகாத சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அப்பொழுது அதைச் சுட்டிக்காட்டுவதற்கு அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறது. வழக்கத்திலுள்ள சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள். விரும்பத்தகாத சொற்களை உபயோகிப்பது முறையல்ல.

**திரு. பெ. சீனிவாசன்:** இது அருமையான தமிழ்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எது அருமையான சொல் என்று முடிவு பண்ணுவது பேரவைத் தலைவருடைய பொறுப்பு. உறுப்பினர் அவர்கள் சொல்லிய வழக்கத்தில் இல்லாத அந்த சொற்களை அவர் வாபஸ் பெற்றுக்கொள்வது நல்லது. அது அவை குறிப்பிலே ஏறாமல் இருப்பது நல்லது.

**திரு. எஸ். வடிவேல்:** அது அன்பார்லிமெண்டரி வொர்டு அல்ல. சமுதாயத்தில் வழக்கில் இருந்து வருகிற வார்த்தை தான். நான் யார் மனதையும் புண்படுத்த விரும்பவில்லை. அரை ஏக்கரில் இவ்வளவு குவிண்டால், ஒரு ஏக்கருக்கு இவ்வளவு குவிண்டால் லெவி, அதற்கு மேல் எவ்வளவு குவிண்டால் என்றெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். நெல்லே விளையாத

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

போது எங்கேயிருந்து குனிண்டால் கொடுக்கப் போகிறார்கள்? குனிண்டாலாவது, குண்டாலாவது, நெல்லே விளையவில்லையே! ஒரு பழமொழி உண்டு. தாய் தட்டுப்பிச்சை எடுக்கும்பொழுது பிள்ளை கும்பகோணத்திலே கோதானம் எப்படி கொடுப்பான்? கடன் திருப்பிக் கொடுக்க மாட்டான். வாரக்காரன் குத்தகை அளக்கமாட்டான். பின்பு எப்படி குனிண்டால் கொடுப்பான்? மானம் பொய்த்துவிட்டது, மழை பெய்யவில்லை, விளைச்சல் இல்லை. பெண் பிள்ளைகளுக்கு எப்படிக் கலியாணம் செய்வான்? கடன் எப்படி அடைப்பான்? வயிற்றுச் சோத்துக்கே சந்தியில் நிற்கப் போகிறான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் கொடுக்காமல் எப்படி சோறு போடுவது?

**திரு. எஸ். வடிவேல் :** சோறு போடுவதற்கு வழிவகைகளை அரசாங்கம் செய்ய வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் அள்ளி வழங்கிய வள்ளல் நம்முடைய அரசு, அந்த அரசு தான் பொறுப்பு ஏற்க வேண்டும். நாங்களெல்லாம் பிள்ளைகள். நாங்கள் தூதுவர்கள் என்ற முறையில் சொல்கிறோம். இந்த மாநிலத்தில் பஞ்சத்தின் காரணமாக வாரக்காரன் குத்தகை அளக்க மாட்டான். அந்த நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் பஞ்சப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட வேண்டும். அங்கெல்லாம், நில வரி, நீர் வரி, செஸ் வரி இவைகளெல்லாம் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். கிராமப்புறங்களில் நியாயமான விலைக்கு அத்தியாவசிய பண்டங்கள் கிடைக்கும் அளவுக்கு நியாயவிலைக் கடைகளைத் திறந்து அத்தியாவசியமான பொருள்களை விநியோகம் செய்ய வேண்டும். விவசாயிகள் அரசாங்கத்தினிடம் வாங்கியுள்ள கடன், கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள கடன் ஆகியவற்றை வசூல் செய்வதை ஒத்திவைக்க வேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் முன்பு அவ்வாறு அறிவித்தார்கள். அவ்வளவு நெருக்கடியான சூழ்நிலை இப்பொழுது



ஏற்பட்டிருப்பதன் காரணமாகக் கடன்கள் வசூலை ஒத்தி வைத்தாக வேண்டும். கோர்ட்டுத் தீர்ப்புகளை ஒத்தி வைக்க வேண்டும். பல லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவன் சாவதா, பிழைப்பதா என்ற நிலை இருக்கிறது. அவனால் உண்மையிலேயே நெல் அளக்க முடியாது. அவன் மனச்சாட்சிப்படி பார்த்தால் நெல் அளக்க முடியாது. ஐந்து, ஆறு நாட்களில் ஏதாவது மழை பெய்தால், ஏதாவது கொஞ்சம் சமாளித்து, பிள்ளை குட்டிகளைப் பிழைக்க வைக்கலாம். ஏதோ பாதி சோற்றுக்காவது வழி ஏற்படலாம். ஏதோ கொஞ்சமாவது விளைந்தால் பிள்ளை குட்டிகளுக்கு அரை வயிற்றுச் சோறாவது போடலாம், கடன்களுக்கு நாமத்தைப் போட்டு விடலாம் என்றுதான் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு பயங்கரமான நிலை மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

கோர்ட்டுத் தீர்ப்புகளை ஒத்திவைக்க வேண்டும். இந்த அரசு அதற்கு வேண்டிய சட்டத்தை உடனடியாக இயற்ற வேண்டும். கிராமத்திலுள்ள விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். கண்டிராக்டர்கள் லட்சக்கணக்கான ரூபாய்களை அடித்துக் கொண்டு போகிறார்கள். கிராமப்புறத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு வழிவகைகள் செய்ய வேண்டும். ராமநாதபுரத்தில் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ரூ. 6 கூலி என்றால், அந்தத் தொழிலாளிகளிடம் ரூ. 3-க்கு வேலை வாங்குகிறார்கள். லட்சக்கணக்கான அரிசன மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சரியானபடி நிர்வாகம் நடக்கவில்லை. நிர்வாகத்தில் கோளாறு இருக்கிறது. பலவகைகளில் ஏழை, எளிய மக்களுக்கு கொதிப்பு ஏற்பட்டு போர்க் கோலம் பூணவேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது.

(பிற்பகல் 1-30)

ஆகவே இந்தச் சர்க்கார்மீது கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை என் கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று பேரவை நாளைக் காலை 9 மணியளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

107. Notification issued with G.O. Ms. No. 1859, Rural Development and Local Administration, dated the 17th August 1974 in regard to certain amendments to the conduct of Election of Municipal Councillors Rules, 1962. [(Laid on the table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)]

108. Notification issued with G.O. Ms. No. 1249, Rural Development and Local Administration, dated the 16th May 1974 in regard to declaration of the areas forming the Krishnagiri local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

109. Notification issued with G.O. Ms. No. 689, Rural Development and Local Administration, dated the 18th March 1974, in regard to declaration of the areas forming the Padinanabhapuram local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

110. Notification issued with G.O. Ms. No. 374, Rural Development and Local Administration, dated the 19th February 1974, in regard to division of wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Shencottah Municipal Council. [Laid on the table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].





## 60. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

111. Notification issued with G.O. Ms. No. 1604, Rural Development and Local Administration, dated the 4th July 1974, in regard to division of wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Manapparai Municipal Council. [Laid on the table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

### B. *Reports, Notifications and Other Papers*

56. Erratum issued with Memo. No. 26565/ME/74-2, Rural Development and Local Administration, dated the 15th July 1974 to Notification relating to division of wards in Ranipet Municipality published in page No. 81 in Part II—Section 2 of *Tamil Nadu Government Gazette*, dated the 6th February 1974.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1974 டிசம்பர் 17

**சென்னை** செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள **சட்டப்** பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் **தலைமையில்** பேரவை கூடியது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்ப தைக் குறிக்கும்.]

## 1. அரசினர் தீர்மானம்

### வினா நேரத்தைத் தள்ளிவைத்தல்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை விதி 22-இன்கீழ் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ளதை எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று முன்மொழிகின்றேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, "அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதம் நடைபெறும். திரு. இ. எஸ். தியாகராசன் அவர்கள் பேசலாம்.

## 2. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்.

***திரு. இ. எஸ். தியாகராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையின்மீது கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் எதிர்த்து, தமிழக அரசு செய் திருக்கும் சாதனைகள் சிலவற்றைச் சொல்ல நான் விழைகிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1974 டிசம்பர் 17

தமிழகத்தில் 1967-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு இருந்த உணவு நிலைமையைப்பற்றி நாம் எண்ணிப் பார்ப்போமானால், இன்றுள்ள உணவு நெருக்கடி அதைவிட அதிகமானது என்று சொல்வதற்கில்லை என்றே நான் கருதுகிறேன்.

நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு தமிழகத்தில் பசுமைப் புரட்சியை உண்டாக்கி, தமிழ்நாடெங்கிலும் உணவு உற்பத்தியை அதிகமாக்கி, ஒன்றியங்கள்தோறும் நிலவள வங்கிகளைத் துவக்கி, அங்கிருக்கின்ற ஏழை விவசாயிகள் பொருளாதாரத்தில் உயர்வதற்கு வழிவகுத்துத் தந்து, அவர்கள் மற்றத் துறைகளிலும் நல்ல வளர்ச்சியுறுவதற்கு ஆவன செய்திருக்கிறார்கள். அதன் விளைவாக, 1967-ம் ஆண்டு இருந்த ஒரு பெரும் நெருக்கடி தவிர்க்கப்பட்டு, கடந்த ஆண்டு வரை கேட்போர்க்கெல்லாம் வாரி வழங்கும் சூழ்நிலையில் உணவு நிலைமையைப் பொறுத்து தமிழகம் இருந்துவந்தது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிலையை யாரும் மறுத்துக் கூறுவதற்கில்லை.

கடந்த ஆண்டுவரை எந்த மாநிலத்தில் உணவு நெருக்கடி நிலை ஏற்பட்டாலும், அதற்கு வேண்டிய உணவு தானியங்களைத் தமிழக அரசு வாரி வழங்கி வந்தது என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். இப்பொழுது தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதிலுமே பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, எல்லா மாநிலங்களிலும் உணவு நெருக்கடி இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடியை நம்முடைய அரசு மிகத் திறமையாகச் சமாளிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடி, எதிர்பாராமல், இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டிருப்பதாகும். நம்முடைய அரசு மத்திய அரசை கேட்டு, நம் மாநிலத்திற்கு வேண்டிய உணவு தானியங்களை வாங்கி, தமிழகத்தில் இருக்கும் உணவு நெருக்கடியை மிக விரைவில் நிவர்த்தி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் 

1974 டிசம்பர் 17] [திரு. இ. எஸ். தியாகராசன்]

நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இதுவரை தமிழக அரசியல் வானில், யாருமே, எந்த அரசுமே செய்திராத பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர்கள் பிரச்சினையைப்பொறுத்தவரையில், மத்திய அரசு தருகிற 40 இலட்சம் ரூபாய் நிதியை வைத்துக்கொண்டு, இன்றையதினம் நம்முடைய அரசு இரண்டு கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கி, நெசவாளர்களுக்கான நல்ல பல திட்டங்களைத் தயார் செய்து, நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம்.

கடந்த 27 ஆண்டுகளாக, நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்துங்கூட, உடல் ஊனமுற்றோர்களின் நிலை குறித்து யாருமே சிந்திக்காதிருந்த நேரத்தில், அவர்களுக்கான சிறப்புத் திட்டங்களை நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் தீட்டி, இன்றையதினம் தமிழகத்தில் இருக்கும் இலட்சக்கணக்கான உடல் ஊனமுற்றோர்களுக்கு வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, கண்ணொளி வழங்கும் திட்டம். நாட்டில் எத்தனையோ பேர் கண்பார்வை இல்லாமல், நாட்டில் நடப்பதைப் பார்க்க முடியுமா என்று ஏங்கிக்கொண்டிருந்த நேரத்தில், கண்ணிழந்தவர்களுக்குக் கண்ணொளி வழங்கும் நல்லதொரு பணியினை இந்த அரசு செய்துவருகிறது என்பதையும் இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுவும் பாராட்டுதலுக்குரிய திட்டமாகும். ஏழை எளிய விவசாய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களும், நிலப்பட்டாக்களும் அளிக்கப்பட்டு, இலட்சக்கணக்கான உழவர் பெருமக்கள் தமிழ்நாட்டில் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநில அரசும் செய்யாத ஒரு நல்ல பெரும் காரியம் பூம்புகார் கப்பல் கழகம் தமிழகத்தில் அமைக்கப்பட்டிருப்பதுதான். இதுவும் நம்முடைய

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1974 டிசம்பர் 17

டாக்டர் கலைஞர் அமைச்சரவைதான் செய்திருக்கிறது. இந்த மாபெரும் காரியத்தை வேறு எந்த மாநில அரசும் செய்யவில்லை என்பதைப் பார்க்கும்போது, கப்பல் ஓட்டிய தமிழருக்கு நினைவுச் சின்னமாக அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக்கூறுவதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் பிற்பட்டோர் நலத்தைக் கவனிப்பதற்காகத் தனி அமைச்சர் ஒருவரை அமைச்சரவையில் இடம் பெறச் செய்து, பிற்பட்ட சமுதாயத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளெல்லாம் எடுத்து, அவர்களுக்கு வாழ்வு அளித்துக்கொண்டு வருகிறது இந்த அரசு என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

கடந்த வாரத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு இலட்சம் வீடுகள் தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கட்டும் திட்டத்தின்கீழ் முதல் தவணையாக தஞ்சை மாவட்டத்தில் பத்தாயிரம் வீடுகள் கட்டித் திறந்து வைத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒரு கழகத்தைத் துவக்கி அந்தக் கழகத்தின் மூலம் ஒரு லட்சம் வீடுகள் தமிழ்நாட்டில் இருக்கும் ஏழை தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கட்டித் தருவதற்கு நம்முடைய அரசு முன்வந்திருக்கிறது. இதுபோன்ற நல்ல திட்டத்தை இதுவரையில் வேறு யாரும் செய்ய முன்வந்ததில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட பல நல்ல அருமையான திட்டங்களைத் தீட்டி, தமிழக மக்களின் நலனில் அக்கறைகொண்டு நிறைவேற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழக அரசு நீடித்திருக்கவேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு நேரம் வேண்டும்?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** 45 நிமிடங்கள் கொடுத்தால், அதற்குள் என்னுடைய உரையை முடித்துவிட முயற்சிக்கிறேன்.



1974 டிசம்பர் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 45 நிமிடங்கள் கொடுத்து விடுகிறேன். குறுக்கீடுகள் இருந்தாலும், அதற்குள் முடித்து விடுங்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த அவையிலே இந்த அரசின்மீது கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கையின்மைத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன்.

இந்தச் சபையிலே எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் அரசாங்கம் செய்த தவறுகளையும், செய்யத் தவறியவைகளையும் எடுத்துக்காட்டினார்கள். அதே சந்தர்ப்பத்தில் ஆளும் தரப்பில் இருந்து ஆட்சி மிக நல்ல முறையில் நடப்பதாகவும், வேண்டுமென்றே எதிர் தரப்பிலே இருக்கின்றவர்கள் அரசாங்கத்தின்மீது இல்லாத குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்குத் தேவையில்லாத ஒன்றை கொண்டுவந்து விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதாகவும் இங்கே குறிப்பிட்டார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையில் ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மக்களுடைய ஆதரவை இழந்துவிட்ட நிலையிலே இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்பது வள்ளுவர் வாக்கு. செய்யத் தகாதவைகளைச் செய்தாலும் குற்றம். செய்யக்கூடியவைகளைச் செய்யாமல் விட்டாலும் குற்றம். ஆக, இந்த இரண்டு குற்றச்சாட்டுகளிலிருந்தும் இந்த அரசு தப்புவதற்கு இயலாது. ஏனென்றால் செய்ய வேண்டியவைகளை இந்த அரசு செய்யவில்லை. ஆனால் செய்யக் கூடாதவைகளைச் செய்திருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருக்க முடியுமே தவிர, தவறாக இருக்க முடியாது. கடந்த 5, 6 ஆண்டுக் கால கட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருந்த ஸ்திரமான சூழ்நிலை, சாதகமான சூழ்நிலை

இனிமேல் வரக்கூடியவர்களுக்கு இருக்குமா என்று சொல்ல முடியாது. அப்படி ஒரு சௌகரியமான சூழ்நிலை இருந்தும்கூட மக்களுடைய நன்மதிப்பைப் பெற முடியாமல், இழக்கக்கூடிய நிலை ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றி இந்த அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நான் இதைச் சரியான சூழ்நிலை என்று எந்தக் காரணத்தாலே சொல்கிறேன் என்றால் சட்டப் பேரவையிலே மிகப் பெரும்பான்மை பலத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஆதலால் ஒரு ஸ்திரமான அரசாக இந்த அரசு இருக்கிறது. சட்டப்பேரவையிலே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்றால் இதை நிறைவேற்றி, உடனே அரசைப் பதவியிலிருந்து இறக்க முடியாத அளவுக்கு ஒரு ஸ்திரமான நிலையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இது உண்மையிலேயே ஒரு பெரிய பலம் நீங்கள் எடுக்கின்ற எந்த முடிவையும் துணிச்சலாகச் செயல் படுத்தக்கூடிய பலத்தைச் சட்டப் பேரவையிலே பெற்றிருக்கிறீர்கள்.

அடுத்தபடியாக, மதுரை மாநாட்டிலே நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் பேசிய பேச்சை நான் பார்த்தேன். அவர்கள் தன்னுடைய கட்சிப் பலத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். அது உண்மை. கட்சியின் ஸ்தாபன பலம் நன்றாக இருக்கிறது. உங்களுக்குப் பலமாக ஸ்தாபன பலம் இருக்கிறது. கிராம அடிப்படையில் இருந்து, வட்டார அடிப்படையிலிருந்து, மாவட்ட அடிப்படையிலிருந்து மாநில மட்டம் வரை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஸ்திரமான ஸ்தாபன அமைப்பு இருக்கிறது என்று பெருமகிழ்ச்சியோடு கூறி இருக்கிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். அம்மாதிரி நாடு தழுவிய ஒரு ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டு, அதே சந்தர்ப்பத்திலே சட்டப் பேரவையில் இவ்வளவு பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு, மக்களுடைய நன்மதிப்பை இழந்திருக்கிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன என்று நீங்கள் சிந்திக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் என்ன காரணம் என்று கருதிப் பார்க்கும்போது நீங்கள் ஆட்சியிலே ஒரு ஸ்திரமான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. அப்போதைக்கப்போது ஒரு முடிவை எடுக்கிறீர்கள்; உடனடியாக எடுத்த முடிவை மாற்றுகிறீர்கள். இப்படி ஒரு ஸ்திரமான கொள்கையைக்





கடைப்பிடிக்காததன் காரணமாக மக்களுடைய நன்மதிப்பைத் தொடர்ந்து பெற வழியில்லாமல் இன்றைக்கு மக்கள் மதிப்பை இழந்து கொண்டிருக்கிறீர்கள். இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும். இதையெல்லாம் வைத்துத்தானோ என்னவோ வள்ளுவர் பெருந்தகை,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்று சொல்லியிருக்கிறார்.

ஒரு முடிவை எடுத்து, அதை அவ்வப்போது மாற்றிக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டால் இழுக்குத்தான் வரும். ஆக, மக்களுக்கு என்னென்ன காரியங்களைச் செய்கிறோம், என்ன செய்யவேண்டுமென்று நினைக்கிறோம் என்பதைத் திட்டமிட்டு ஒழுங்காகச் செய்ய வேண்டும். இல்லை என்றால் மக்களுக்குப் பலன் இல்லை. செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்குபடுத்தி, செம்மையாகச் செய்யாததால் இன்றைக்கு நீங்கள், மக்கள் நம்மை மறந்துவிட்டார்களோ என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. மக்கள் நன்றிகெட்டவர்கள் என்றுகூட உங்களுக்குச் சொல்லத் தோன்றுகிறது. இல்லை. மக்கள் நன்றிகெட்டவர்கள் அல்ல. மக்கள் எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் தெளிந்த மனதுடையவர்கள், சீர்தூக்கிப் பார்க்கும் எண்ணம் கொண்டவர்கள். ஆகவே, தமிழ்நாட்டு மக்கள் நல்லதைச் செய்யத் தயங்கமாட்டார்கள். உங்களின் தவறால்தான் இன்றைக்கு மக்களுடைய மதிப்பை நீங்கள் இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடிக்கடி உங்களுடைய முடிவை மாற்றிக்கொள்கிறீர்கள் என்பதற்கு உதாரணமாக மதுவிலக்கல் எடுத்துக்கொள்ளலாம். இது கடந்துபோன சமாச்சாரம் என்றாலும் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். அண்ணா அவர்கள் இருந்தபோது மதுவிலக்கைக் கைவிடப் போவது இல்லை என்று சொன்னார்கள். அப்புறம் வந்த நீங்கள் 'சுத்தி நெருப்பு, மத்தியிலே சூடம்' இருக்க முடியாது என்று சொன்னீர்கள். இன்றைக்கு இருக்கிற முதலமைச்சரவர்கள் மதுவிலக்கை எல்லா இடங்களிலும் கொண்டுவந்தால்தான் இங்கும் அமலாக்க முடியும் என்று சொல்லி, மதுவிலக்கைக் கைவிட்டுவிட்டார்கள்.

ஓராண்டுக் காலம் கழித்து திரும்பவும் மதுவிலக்கைக் கொண்டு வந்தார்கள். ஆகவே, மதுவிலக்குக் கொள்கையிலே உங்களுக்கு ஒரு ஸ்திரமான கொள்கை இல்லை. அப்போதைக்கப்போது இருக்கின்ற நிலைமைக்குத் தகுந்தமாதிரி முடிவை மாற்றிக் கொள்கிறீர்கள். மதுவிலக்கை மீண்டும் கொண்டு வந்ததில் எங்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி. அது வேறு விஷயம். ஆனால் என்ன போஸ்டர் போட்டார்கள் தெரியுமா? 'மதுவிலக்கைக் கொண்டுவந்து ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்றிய கலைஞரே வாழ்க, வாழ்க' என்று சுவரொட்டி போடுகிறார்கள். இம்மாதிரிப் பிரச்சாரங்கள் செய்வதன்மூலம் மக்களுடைய மதிப்பை இழக்காமல் இருக்க முடியுமா? மதுவிலக்கு புதிதாகக் கொண்டு வரப்பட்டதா? ஏற்கனவே இருந்ததை மீண்டும் கொண்டு வந்தீர்கள். அவ்வளவுதான். ஆகவே, இப்படிப்பட்ட தவறான பிரச்சாரங்களைச் செய்வதன் மூலம் மக்களிடம் உங்களுக்குப் புகழ் ஏற்படாது; பெருமை ஏற்படாது என்பதைத் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, தஞ்சாவூரில் நெல் சம்பந்தமாக எடுத்த முடிவு. இதுவும் முன்னால் பேசப்பட்டதுதான் என்றாலும் குறிப்பாகச் சொல்கிறேன். முதலில் திறந்துவிட்டார்கள். இரண்டு நாள் கழித்து திரும்பவும் மூடிவிட்டார்கள். ஒரு முடிவை எடுத்தால் அதை அமலாக்க முயற்சி செய்ய வேண்டும்.

உணவுக் கொள்கையில் ஒரு திட்டவட்டமான கொள்கை இன்றுவரையில் எடுக்க முடியவில்லையே. கடந்த 6 மாதங்களாக இவ்வளவு விவகாரங்கள் ஏற்பட்ட பிறகும் உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஒரு திட்டவட்டமான முடிவை நீங்கள் எடுக்கவில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிலக்கடலை, எண்ணெய் விலை ஏறிவிட்டது; மக்களுக்குக் கட்டுப்படியாகவில்லை, ஆகவே, தடை போடுகிறோம் என்று சொன்னீர்கள். அதையாவது ஸ்திரமாக அமலாக்கினீர்களா? இல்லையே. இப்போது வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போகலாம் என்று நீங்கள் சொல்லி விட்டீர்கள், இருந்த தடையை எடுத்துவிட்டீர்கள். ஆக, இதிலும் ஸ்திரமான முடிவு இல்லை.



பத்து நாட்களுக்கு முன்னால் புஞ்சைத் தானியங்களுக்கு லெவி விதிக்கப்படும்; இன்னின்ன வகையில் லெவி விதிக்கப்படும் என்று அறிவித்தீர்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் புஞ்சைத் தானியங்களுக்கு லெவி வாங்கப் போவதில்லை என்று சொன்னீர்கள். இது சரியா, தப்பா என்று அந்த விவகாரத்திற்குள் போக நான் விரும்பவில்லை. முதலிலே லெவி என்றீர்கள்; அப்புறம் லெவி இல்லை என்றீர்கள்.

அது மட்டுமல்ல. புஞ்சைத் தானியங்களை மத்திய அரசு வெளி மாநிலங்களுக்குப் போக அனுமதி அளித்திருப்பதால் இங்கே விலை ஏறிவிட்டது என்று சொன்னீர்கள். மத்திய அரசு மீது பழிபோட்டீர்கள். இப்போது அந்தப் பழியை நீங்கள் சொல்ல மாட்டீர்கள். அந்த நிலைமையை நான் ரொம்ப விரிவாகச் சொல்லவேண்டியதில்லை. மத்திய அரசு புஞ்சைத் தானியங்களுக்குக் கட்டுப்பாட்டை எடுத்தது தவறு என்று இப்போது சொல்ல மாட்டீர்கள். அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியது நல்லது; அது தேவை. ஆகவே, நான் இதைச் சொல்கிறேன் என்றால் எந்தக் காரியத்தைச் செய்தாலும்...

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஒரே ஒரு விளக்கம் அங்கத்தினர் தருவார் என்று நம்புகிறேன். தமிழக அரசு போடுகிறது எடுக்கிறது, போடுகிறது எடுக்கிறது என்று சொல்கிறார். மத்திய அரசு சில கட்டுப்பாட்டை வைத்திருந்தார்கள். பிறகு எடுத்தார்கள். நாமும் அதையொட்டித்தானே செயல்பட வேண்டியுள்ளது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** சில சந்தர்ப்பங்களுக்காக மாற்றம் பண்ணியிருக்கலாம். ஆனால் இன்றைக்கு நமக்கு வெளி மாநிலங்களில் இருந்துதான் புஞ்சைத் தானியங்கள் வந்தாக வேண்டும். இதனால் இன்றைக்கு நாம் மத்திய அரசாங்கத்தைக் குறை சொல்ல முடியாத சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, எசென்ஷியல் கமாடிட்டீஸ் என்பதாக மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, கோதுமை கிடைக்கவில்லை, சர்க்கரை கிடைக்கவில்லை என்றால், உடனே அவற்றைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகம் செய்கிறோம் என்கிறீர்கள். கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் விநியோகம் செய்வதை நான் எதிர்க்கவில்லை. வரவேற்கிறேன். ஆனால், கூட்டுறவுச் சங்கம் சரியான முறையில்

எங்காவது செயல்படவில்லையென்றால், அதைச் சரியான முறையில் செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளாது உடனே அங்கெல்லாம் தனியார்கள் மூலமாக விநியோகம் செய்ய உத்தரவு இடுகிறீர்கள். இப்படி ஒரு பக்கம் தனியார், ஒரு பக்கம் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற அவல நிலை இருக்கிறது.

அடுத்து, தஞ்சை மாவட்டத்திற்கு என்று ஒரு லெவி அறிவித்திருக்கிறீர்கள். அது தெளிவாகச் சிந்தித்து அறிவித்த முடிவா என்றால் இல்லை. இதையும் மாற்றத்தான் போகிறீர்கள், மாற்றியாகத்தான் வேண்டும். இப்படி எதை எடுத்தாலும் ஊசலாட்டமான கொள்கைதான். இதனால் உங்கள் கட்சிக்குக் கெட்ட பெயர் வராதா என்கிற பிரச்சினைக்குள் நான் போகவில்லை, உங்கள் ஆட்சிக்கோ, உங்கள் கட்சிக்கோ ஏற்படுகிற கெட்ட பெயர் ஒரு பக்கம் இருக்கட்டும். இதனால் நாட்டுமக்களுக்குப் பெருந் தீங்கு ஏற்படுகிறது. நாட்டு மக்களுக்குப் பெரும் சங்கடத்தை உண்டாக்குகிறது. அவர்கள் பலவிதமான துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள், இதைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாரத்திற்கு 3 கிலோ அரிசி தருவதாகச் சொன்னீர்கள். நாங்கள் குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கை பேரில் கொடுக்க வேண்டும் என்றோம். அது முடியாது என்றாலும் ஒரு குடும்பத்திற்கு 3 கிலோ அரிசி தருவதாகச் சொன்னீர்களே, இதையாவது கொடுப்பதற்கு— மொத்தத் தேவை என்ன, கையிருப்பு எவ்வளவு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு இதனை அறிவித்தீர்களா என்றால் இல்லை. இதற்கான ஒரு அமைப்பை ஏற்படுத்தினீர்களா என்றால் இல்லை. வெறும் பேச்சளவுக்கு வாய் அளவுக்கு அறிவிப்புகளை இங்கே செய்துகொண்டிருக்கிறீர்களே தவிர, பேசப்படுவதை அமல்படுத்துவதற்கான எந்த முயற்சிகளையும் நீங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. அதைப்பற்றிச் சிந்திப்பதில்லை.

இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் இருந்து அரிசி நெல் வெளியே போகக் கூடாது என்ற கட்டுப்பாட்டை வைத்திருக்கிறீர்கள். இது அவசியம். அதில் எனக்குக் கருத்து மாறுபாடு கிடையாது. ஆனால் நாம் ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்கிறபோது இன்றைய சமூக அமைப்பு என்ன, அதனுடைய



குறைநியாயங்கள் என்ன, மக்களுடைய குறைநியாயங்கள் என்ன என்பதைத் எல்லாம் பார்த்து அதற்கேற்றவாறு ஒரு திட்டத்தை வகுக்க வேண்டாமா? இன்றைக்கு நீங்கள் மூட்டைக்கு 51 ரூபாய் கொடுக்கிறீர்கள் என்றால் வெளியில் 130 ரூபாய்க்கு மூட்டை வாங்கப்படுகிறது என்றால் யாராவது உங்களிடம் கொடுப்பார்களா? இன்றைக்கு தப்போ, தவறோ லாப நோக்குள்ள சமூக அமைப்புதானே இருக்கிறது. இதை வைத்துக்கொண்டுதானே நாம் செயல்படவேண்டியிருக்கிறது. நாட்டு மக்களுக்கு நலம் செய்ய வேண்டுமென்றோ, மரியாதைக்குப் பயந்தோ சிலர் வேண்டுமானால் நீங்கள் அறிவித்த விலைக்கு விளைந்த நெல்லைக் கொடுத்து விடுவார்கள், எல்லோரும் கொடுத்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

தஞ்சை மாவட்டத்தின் சர்க்கார் புள்ளிவிவரப்படி 4 லட்சம் எக்கரா குறுவை சாகுபடி என்று கணக்குச் சொன்னீர்கள். அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அந்தப் புள்ளிவிவரம் தப்பு. காலதாமதமாக காவிரியில் தண்ணீர் வந்த காரணத்தினால் அறுப்பு மழையில் அகப்பட்டுக்கொள்ளும் எனப் பயந்து குறுவை 2½ லட்சம் எக்கராவுக்குமேல் சாகுபடி செய்யப்படவில்லை. ஒருபோக குறுவைபோக, இன்னொரு குறுகியகாலப் பயிர் எல்லாவற்றையும் சேர்த்து 4 லட்சம் என்றே சொல்லுங்கள். அந்த நான்கு லட்சம் எக்கராவுக்கு உங்களால் இதுவரை கொள்முதல் செய்ய முடிந்திருப்பது ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் டன்கள் தானே. இந்த மாதத்தில் இன்னும் சில ஆயிரம் வேண்டுமானால் செய்திருக்கலாம். 2½ லட்சம் ஏக்கரா குறுவை சாகுபடி என்று வைத்துக்கொண்டாலும் 2½ லட்சம் டன்னாவது கொள்முதல் செய்யப்பட்டிருக்கவேண்டும். இதை உன்னிப்பாகக் கவனித்தீர்களா? அங்கேயுள்ள குறைபாடு என்ன?

தஞ்சை மாவட்டத்தை விடுங்கள். மற்ற மாவட்டங்களை எல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நீங்கள் விதித்த கொள்முதல் இலக்கு எவ்வளவு? அதை உங்களால் செய்ய முடிந்ததா? ஏன் உங்களால் மற்ற மாவட்டங்களில் குறித்த அளவுக்குக்கூடக் கொள்முதல் செய்ய முடியவில்லை? அங்கங்கே நெல் பதுக்கப்பட்டுவிட்டது என்றால்

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

உங்கள் கொள்முதல் அளவுக்கான தானியத்தையாவது ஏன் உங்களால் வெளிக்கொணர முடியவில்லை? அதற்கு நீங்கள் என்ன முயற்சியை எடுத்துக்கொண்டீர்கள்?

மாவட்டத்திற்கு மாவட்டம் நெல் விலையில் அதிக அளவுக்கு வித்தியாசம் இருக்கிறபோது நீங்கள் குறிப்பிட்டுள்ள கட்டுபடியாகாத குறைந்த விலைக்கு உங்களிடம் கொண்டுவந்து எல்லோரும் நெல்லைக் கொடுத்துவிடுவார்கள் என்று நீங்கள் எப்படி எதிர் பார்க்கிறீர்கள்? பொதுத் தேர்தல் வருவதற்குள்ளாக, நீங்கள் ஆட்சிப் பீடத்தைவிட்டு இறங்குவதற்குள்ளாக நாட்டு மக்களின் உயிரை இன்றையதினம் காப்பாற்றியாக வேண்டும். சாதாரண மக்களின் உயிரைக் காப்பாற்றியாக வேண்டும். நான் மேல் நிலையில் உள்ளவர்களைப்பற்றிக்கூடச் சொல்லவில்லை. அவர்கள் பாலும், பழமும் சாப்பிட்டேகூட உயிர் வாழலாம். எனவே அவர்களைப் பற்றிக் கவலையில்லை. உங்களது ஆட்சியின் கடைசிக் காலத்தில் சாதாரண மக்கள் எல்லாம் செத்துவிடக்கூடிய நிலைக்குத்தான் நிலைமைகளைக் கொண்டுவந்து விட்டிருக்கிறீர்கள். ஒரு நிலையான கொள்கை இல்லாத காரணத்தினால். இனியாவது இதுபற்றிச் சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டாமா? தயவுசெய்து உங்கள் ஆட்சியில் கடைசிக் காலக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் துன்பப்படக்கூடிய கெட்ட பெயரை சரித்திரத்தில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம்.

இன்றைக்கு வியாபாரிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய நியாயமான விலையை நீங்கள் நிர்ணயித்திருப்பதால் விவசாயிகள் உங்களிடமே நெல்லைக் கொடுப்பார்கள். ஆனால், தங்களுக்கு நியாயமான விலை கொடுக்கப்படவில்லை என்று அவர்கள் கருது கிறார்கள். வெளியில் அதிகவிலை கிடைக்கிற காரணத்தினால் இன்றும் அதிகம் ஏறக்கூடும் என்று அவர்களுக்கு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அது சகஜம். நீங்கள் அவர்களுக்கு ஊக்குவிக்க என்ன செய்தீர்கள்?

மத்திய சர்க்கார் பல்வேறு பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து உணவுப் பொருள்களின் விலையை ஒரு கட்டுப்பாடான நிலையில் வைத்திருந்தால்தான் நாட்டின் பொருளாதார நிலையை ஒரு கட்டுப்பாடான நிலையில் வைத்திருக்க முடியும் என்று கருதி சிலபல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கி



1974 டிசம்பர் 17] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

றார்கள். சமுதாயத்தின் ஒரு பகுதியினர் தியாகம் செய்வதன் காரணமாக சமுதாயம் முழுமையும் காப்பாற்றப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம் என்று கருதி ரிசர்வ் பாங்கி, அக்ரிகல்சுரல் கமிஷன், ப்ளானிங் கமிஷன் ஆகியவை எல்லாம் கலந்து 74–75-க்கு உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் நிர்ணயித்த விலைக்கு மேல் கொடுக்கக்கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் அந்த உத்தரவை, அரசாங்கத்திற்குத் தேவையான அளவுக்கு வாங்கப்படுகிற தானியங்களைப் பொறுத்துக்கூட நிர்ணயித்திருக்க லாம். சர்க்கரையை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு கண்ட்ரோல் விலை இருக்கிறது. அது லெவி சர்க்கரைக்குத்தான். பாக்கி ஓப்பன் மார்க்கெட் சர்க்கரைக்கு ஒரு விலைதான் இருக்கிறது.

(முற்பகல் 9-30.)

இதர மாவட்டங்களிலே இதனை அமல்படுத்தியிருக்கிறோம். லெவியை வாங்கிக்கொண்டு பாக்கியை வெளியிலே விற்க அனுமதி கொடுத்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே எல்லாமே சர்க்கார் வாங்கிக் கொள்ளவேண்டும், வெளியே போகக் கூடாது என்ற நிலைமை இருப்பதன் மூலம் அரசாங்கம் நிர்ணயிக்கிற விலைக்குத்தான் அவர்கள் விற்கவேண்டியிருக்கிறதே தவிர, வேறு விலைக்கு விற்க வழியே கிடையாது. இதை நான் கேட்பதன் மூலம், வெளியே விற்க அனுமதிக்கலாமா என்று கேட்டால், அதனை நான் ஒத்துக்கொள்ளவில்லை. மக்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. அதற்கு விரோதமான கருத்தை நான் சொல்லத் தயாராயில்லை.

ஆனால், சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலை தஞ்சை மாவட் டத்திலே உள்ள விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாது. நான் ஒரு விவசாயி என்ற முறையிலே கூறுகிறேன்; ஒரு குவிண்டால் நெல்லுக்கு உற்பத்தி செலவு ரூ. 75 ஆகும். இது மிகத் தவறிய மாகப் போட்ட கணக்காகும். நாம் ரூ. 75-க்குக் கொள்முதல் செய்தால், அவர்கள் மனக் கஷ்டம், மனச் சங்கடம்தான் கொள் வார்கள். அவர்கள் அதிக வருவாய் பெற என்ன செய்ய வேண்டு மென்று நீங்கள் சிந்தித்து, அதற்கு முயற்சிப்பீர்களானால், அவர்கள் அரசுக்கு நெல்லைக் கொடுக்க ஊக்கமாக இருப்பார்கள்.

லெவி போக, பாக்கியைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். சில பேர், கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இல்லை, அவை ஒழுங்காகச் செயல்படவில்லை, அவை கொள்முதல் செய்யவேண்டுமா என்ற கருத்தை வெளியிட்டார்கள். அதிலே பல சிரமங்கள் இருந்தாலும், லெவிக்கு மேலே இருக்கிற நெல்லை அந்த மாதிரிக் கூட்டுறவுச் சங்கங்களால்தான் கொள்முதல் செய்யமுடியும், அரசின் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனால் கொள்முதல் செய்ய முடியாது, அதில் இருக்கிற சங்கடங்களை நான் உணர்கிறேன். ஆகவே, அரசு கொள்முதல் செய்தால் அதிக விலையிலிருக்கவேண்டும். (குறுக்கீடு) தஞ்சை மாவட்டச் சார்பில் கூட ஒரு குவிண்டாலுக்கு ரூ. 120 என்று தீர்மானம் போட்டுள்ளோம். என்னைக் கேட்டால் இப்பொழுது ரூ. 50 கொடுக்கிறீர்கள், இன்னும் ரூ. 15 போட்டு, ரூ. 65 கொடுங்கள். ஒரு மூட்டைக்கு ரூ. 15 ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மூட்டைக்கு எத்தனை கிலோ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** 57 கிலோ ஒரு மூட்டைக்கு. இப்பொழுது ரூ. 50 விலை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் ரூ. 15-ஐச் சேர்த்து, ரூ. 65-க்குக் கொடுங்கள். தஞ்சை மாவட்டத்தை விட்டு நெல் வெளியே போகக் கூடாது. கட்டுப்பாடு அவசியம். தஞ்சை மாவட்டம்தான் நெல் களஞ்சியம். அங்கே இருப்பதை வெளியே விட்டால், பின்னால் மக்களுக்கு எடுத்துக் கொடுக்கச் சங்கடம் ஏற்படும். ஆகவே, என்னைப் பொறுத்தவரையிலே, தடையை எடுத்துவிடுவதை நான் ஏற்கவில்லை.

அடுத்து, இந்த லெவியை எப்படிப் போட்டிருக்கிறார்கள்? தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் சொல்கிறேன், 5 ஏக்கருக்கு மேல் 7½ ஏக்கர் வரையிலும் வைத்திருப்பவர்களிடம் 9½ குவிண்டால் கொள்முதல்; 7½ ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களிடம் 10 குவிண்டால் அல்லது 1 டன் கொள்முதல்; இந்தக் கணக்கு எப்படிச் சரியாக இருக்கும்? ஒரு டன் என்றால், 57 கிலோ கொண்ட மூட்டையில் 18 மூட்டைகள். ஒரு ஏக்கருக்கு 18 மூட்டை விளையாதபோது அவன் எப்படிக் கொடுப்பான்? ஐந்து ஏக்கருக்கு மேல் ஒவ்வொரு ஏக்கருக்கும் 18 மூட்டை கொடுக்க



வேண்டும். 18 மூட்டைதான் அதிகபட்ச விளைச்சல். விளைச்சல் அதைவிடக் குறைவாக இருக்குமே தவிர, கூடுதலாக இருக்காது. (குறுக்கீடு) நான் 'ஆவரேஜ்' ஆகச் சொல்கிறேன். சில பேர் பண்பட்ட நிலத்தில், பண்பட்ட முறையிலே சாகுபடி செய்தால், கூடக்கிடைக்கும். ஆகவே, ஒரு ஏக்கருக்கு 1 டன் என்ற லெவி முறையை மாற்ற வேண்டும். அதை ½ டன்னுக்கவேண்டும். குறைந்த நிலம் உள்ளவர்களிடம் அவர்கள் சொந்த தேவைக்கு வைத்துக்கொண்டு அது போக, மீதம் இருப்பதைக் கொஞ்சம் அதிக விலைக்கு உங்களிடத்திலே விற்பதற்கான நிலையை அவர்களுக்கு ஏற்படுத்துவது அவசியம் என நான் நினைக்கிறேன்.

ஆக, ஒன்றை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். சமுதாயத்திலே கஷ்டங்கள், சங்கடங்கள் அடிக்கடி மாறிமாறி ஏற்படுவது சகஜம். ஆனால், கஷ்டங்கள், சங்கடங்கள் ஏற்படுகின்ற போது, அந்தச் சங்கடங்களின் விளைவாக வருபவற்றை நல்லதாக, பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கான முயற்சியை நாம் செய்ய வேண்டும். அந்தக் கண்ணோட்டத்தோடு இந்த அரசு நடக்கின்றதா, அந்தக் கண்ணோட்டத்தோடு காரியங்களை இந்த அரசு பார்க்கின்றதா என்றால், இல்லை.

நீண்ட நெடுநாட்களாக விநியோக முறை இருக்கிறது. சமுதாய நலனைக் கருத்திலே கொண்டு பார்க்கும்போது, இப் பிரச்னையை 3 நோக்கிலே நாம் அணுகவேண்டும். ஒன்று உற்பத்திப் பெருக்கம். அடுத்தது, கொள்முதல். மூன்றாவது விநியோகம். இந்த மூன்று அமைப்புகளும் சரியான முறையிலே செயல்பட்டாலொழிய மக்களுடைய நலனைப் பாதுகாக்க முடியாது. உற்பத்திப் பிரச்னைக்குப் பின்னாலே வருகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்ன முறையிலே நடக்கிறது, என்ன கொள்முதல் ஆகிறது, என்று இப்பொழுது சொன்னேன்.

தற்பொழுது விநியோகம் எப்படி இருக்கிறது, விநியோகத் திற்கு அமைப்பு எப்படி இருக்கிறது என்று பார்த்தால், சரியான அமைப்பு கிடையாது. இது பல்லாண்டுகாலமாக நமக்குத் தெரியும். அந்த அமைப்பு எங்கேயும் சரியாக இல்லை. விநியோக முறையிலே தவறு நடக்கிறது, அதனைப் பிடித்தால், மற்றொரு தவறு. வேறொரு தவறு நடக்கிறது. இம்மாதிரி விநியோக முறையை இந்த அரசு பல்லாண்டுகாலமாகச் செய்துவருகிறது.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

அதுபற்றி இந்தச் சட்ட சபையிலே அடிக்கடி எடுத்துக் கூறப்பட்டு வந்தது. இதுவரையிலே அதற்கு ஒரு நிரந்தர அமைப்பு கிடையாது. மக்களுக்குத் தேவையான, பரிபூரண மான முறையில், எல்லா மக்களுக்கும், நாடு தழுவிய முறையில் தமிழகம் பூராவுமே, எல்லோருக்கும் உணவுப்பொருள்கள் கிடைக்கக்கூடிய ஒரு நிரந்தர அமைப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிகப் பொருள் கிடைத்தாலும்சரி குறைந்த பொருள் கிடைத்தாலும்சரி, இருக்கிற பொருளைச் சரியான முறையிலே கொடுக்க வேண்டிய அமைப்பை அரசு ஏற்படுத்தி யிருக்கவேண்டும். இதைவிட என்ன சொல்வான் எதிர்த் தரப்பிலே இருக்கிறவன்? பிடித்துக் கொண்டு வந்தா கொடுப் பான்? கோளாறுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வில்லை அல்லது உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையென்றால், இந்தச் சங்கடங்கள், கஷ்டங்கள் ஏற்படுகிறதென்றால், அதனைப்பற்றி சிந்தனை இல்லை யென்றால், சமுதாயத்திலே என்ன முன்னேற்றம் நடைபெறும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இந்தச், சிரமங்கள், கஷ்டங்கள், உங்கள் காதுகளிலே சதா ஒலித்துக் கொண்டிருக்கும்போது பழைய அமைப்பு தெளிவாக இல்லை, சரியாக இல்லை, ஆகவே புதிய அமைப்பு தேவைப் படுகிறது என்பதைப்பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா? நீங்கள் சிந்திக்கவே இல்லை. சிந்தனை வந்தால் அல்லவா செயல்பட முடியும். நீங்கள் சிந்திக்கவேயில்லை. வருங்காலத்தில் நன்மை ஏற்படுகிற முறையிலே உங்கள் ஆட்சி சிந்தனை செய்யவில்லை. ஆகவே, இதன்மூலம் ஆட்சிக்குத் தாங்கள் இலாயக்கில்லாதவர்கள் என்பதை நீங்களே ஒவ்வொரு காரியத்திலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

புதிய தேவைகளுடைய நிர்ப்பந்தம்தான் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கமுடியும். இன்றைக்குப் பஞ்சம் வந்தது, எங்கே பார்த்தாலும் மழை இல்லை மக்களுடைய நலனைப் பாதுகாக்கவேண்டுமென்ற மிகச் சங்கடமான நிலைமை வந்திருக்கும்போது, இதுவரையிலே நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? அதைத்தான் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.



1974 டிசம்பர் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

நமது மதிப்பிற்குரிய பிரதம அமைச்சருக்கு இருக்கிற பெருமை எல்லாம் கஷ்டங்கள் வரும்போது, அவர்கள் மிகத் தீவிரமாகச் சிந்தனையிலும், செயலிலும் ஈடுபடுவார்கள், அதை எதிர்நோக்குவார்கள் என்று கூறுவார்கள். அது அவர் களுக்குள்ள தனிக் குணம்சம். அதுமாதிரி இங்கே சங்கடங்கள், கஷ்டங்கள் இருக்கின்றன. வருங்காலத்திலே, இம்மாதிரி வராமல் இருப்பதற்கான முயற்சிகளை நாம் இன்றையதினம் செய்ய வேண்டாமா?

நாம் கணக்குப் போட்டுப் பார்க்கவேண்டும். இந்த அவையிலே நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் உணவு நிலைமையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏன் இவ்வளவு சங்கடங்கள் ஏற்பட்டன உணவுத்துறையிலே என்று சொல்லும் போது, தேவை 57 இலட்சம் டன், விளைவு 55 இலட்சம் டன், 2 இலட்சம் டன் குறைவு ஏற்பட்டது என்றார். 2 இலட்சம் டன் குறைவு ஏற்பட்டதன் காரணமாக, நமக்கு இவ்வளவு சங்கடம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள், இருக்கட்டும். 57 இலட்சம் டன் தேவை. 55 இலட்சம் டன் விளைந்திருக்கிறது—குறைவு 2 இலட்சம் டன். அதாவது, 4 சதவிகிதம் தான் குறைவு. இந்த 4 சதவிகிதம் குறைவு படி அரிசி ரூ. 6, ரூ. 7 ஆக ஆக்கியிருக் கிறது. இது சென்ற ஆண்டு சரித்திரம், இதுவரையிலே இருக்கிற சரித்திரம். இந்தச் சரித்திரம். எப்படி மாறும் என்பதை நினைத்துப் பார்த்தீர்களா? என்ன நிலைமை என்று சிந்தித்துப் பார்த்தீர்களா? இன்றைக்கு இருக்கிற விளைச்சல் நிலைமையை நான் ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தேன். இந்தக் கணக்கில் மொத்தம் தமிழகத்திலே நஞ்சை சாகுபடி 27,42,000 ஹெக்டேர், கிட்டத்தட்ட 57 லட்சம் ஏக்கரில் ஆகியிருக்கிறது. மொத்த விளைச்சல் 55 லட்சம் டன், சென்ற ஆண்டு. அதிலே தஞ்சை மாவட்டத்திலே மட்டும் விளைந்தது 13½ லட்சம் டன், இதர மாவட்டங்களிலே விளைந்தது கிட்டத்தட்ட 41 லட்சம் டன் இருக்கும், ஆக மொத்தம் 55 லட்சம் டன் சென்ற ஆண்டு தமிழகத்திலே விளைந்திருக்கிறது. சரி. இந்த தஞ்சை மாவட்டத்திலே 14 லட்சம் டன் விளைச்சலுக்கு ஏதாவது உறுதி இருக்கிறதா இந்த ஆண்டு? அவ்வளவு விளைச்சலையும் அங்கே இந்த ஆண்டு எதிர்பார்க்கிறீர்களா? மேட்டூர் அணையி முடியாது. மழையின்மை ஒரு காரணம்.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

லிருந்து தண்ணீர் வராத காரணம், காலத்தோடு விடாமல் ஒரு மாதம் பிந்தி விட்டதன் காரணம், காலத்தோடு உரம் கொடுக்காது காலம் தாழ்த்தி கொடுத்தக் காரணம்.

இம்மாதிரி பல சங்கடங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல நான்கு சங்கடங்கள் ஏற்பட்டதன் விளைவாகத்தான் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. மேட்டூரில் இருந்த தண்ணீர் வருவது குறைந்ததால் பல இடங்களிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்கள் பட்டுப்போய்விட்டது. கதிர் வரக்கூடிய நேரத்திலே தண்ணீர் வராததால் கதிர் வெளியே வருமா வராதா என்ற நிலைமை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே 5 லட்சம் அல்லது 6 லட்சம் டன் குறைவாகத்தான் இந்த ஆண்டு விளையும். 40 லட்சம் டன் அளவில் இதர மாவட்டங்களில் விளைந்தது இந்த ஆண்டு மிகவும் குறையும்.

மற்ற மாவட்டங்களில் நிலைமை என்ன? இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் போய்விட்டது. அங்கேயிருந்து மக்கள் தஞ்சை மாவட்டத்திற்குப் படையெடுத்து வந்துவிட்டார்கள். இயற்கைக் கோளாறு ஏற்பட்டுவிட்டது என்று நிலைமையில் கன்சர்வேடிவ் ஆகப் பார்த்தால் கூட இந்த ஆண்டு 20 அல்லது 25 லட்சம் டன் பற்றுக்குறை ஏற்படும். 14 லட்சம் டன் புஞ்சை தானியம் விளைந்தது. இந்த ஆண்டு அதுகூட எதிர்பார்க்க முடியாத நிலை இருக்கிறது. இப்படி இரண்டு லட்சம் டன் அதாவது 4 சதவீதம் பற்றுக்குறை இருக்கின்றபோதே படி அரிசி 6 ரூபாய்க்கு விற்கிறது என்றால் 20 லட்சம் டன் பற்றுக்குறை ஏற்படுகிறபோது படி அரிசி என்ன விலை விற்கும் என்பதைப் பார்க்கவேண்டும். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் ?

கிராம விவசாயத் தொழிலாளிகள் சம்பளம் இருக்க இருக்க குறைந்துகொண்டே போகிறது. அரிசி விலை ஏறிக் கொண்டே போகிறது. வேலையோ கிடைக்கவில்லை. வேலை கிடைத்தாலும் சம்பளம் நான்கு ரூபாய்தான் கிடைக்கிறது, இதை வைத்துக் கொண்டு 7 ரூபாய், 8 ரூபாய்க்கு அரிசி வாங்க முடியுமா ? கிழங்கு, புல்லரிசி இவற்றை மக்கள் அதிகமாகச் சாப்பிடக்கூடிய நிலைமை வரும். நம்முடைய மாநிலத்தின் சக்திக்கு உட்பட்டு நம்முடைய மாநிலத்தின் பொருளாதாரத்தின் நிலைமைக்கு ஏற்ப என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள் ?



1974 டிசம்பர் 17] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

நான்கு தினங்களுக்கு முன்புதான் ரெவின்யூ போர்டு மெம்பர்களை வெளியிலே சென்று கணக்கு எடுத்துவரச் சொல்லி இருக்கிறீர்கள், இதை நான்கு மாதங்களுக்கு முன்னால் செய்திருக்கக்கூடாதா ? செய்திருந்தால் முன்னாலேயே நடவ டிக்கை எடுத்திருக்கலாமே ? நான் சென்ற கூட்டத் தொடரிலோ அதற்கு முந்தைய கூட்டத் தொடரிலே சொன்னேன். தஞ்சை மாவட்டத்திலே பூமிக்கடியிலே தண்ணீர் இருக்கிறது. இதைப் பயன்படுத்தி கொள்ளகூடிய வகையிலே 5 லட்சம் ஏக்கர் அதன் மூலம் சாகுபடிக்குக் கொண்டுவரமுடியும். இன்றைக்கு கூட செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. நம்முடைய சக்தியைப் பூராவும் அதற்குத் திருப்புங்கள், பாக்கிக் காரியங்களை பிறகு பார்க்கலாம்.

வளர்ச்சி துறை அல்லாத காரியம் எது எதற்கு செலவழிக் கிறோமோ அதையெல்லாம் நிறுத்துங்கள். யுத்த காலத்திலே ஏற்படுகின்ற நிலைமை என்று எடுத்துக்கொண்டு முழு முயற்சி யோடு இறங்குங்கள். அப்படிச் செய்தால் மக்களுடைய தவிப்பை முழுதுமல்ல, ஓரளவிற்குக் குறைக்கக்கூடிய முயற்சி யைச் செய்தவர்கள் ஆவீர்கள்.

நமக்கு இன்னும் எட்டு மாதத்திற்கு உணவு வேண்டியிருக் கிறது. ஒரு ஐந்து லட்சம் ஏக்கரை டார்ஜட்டாக வைத்து மாசி மாதத்திலே நடவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுத்துங்கள். சர்க்கார் வேண்டுமானால் நிலங்களை லீஸ் என்ற முறையில் அதை எடுத்துக்கொண்டு செய்யுங்கள். அதற்கு 10 கோடி ரூபாய் தேவைப் படும் என்று நினைக்கிறேன். இருக்கிற அதிகாரம், பணம் எல்லாம் அங்கே விவசாயத்தில் முடக்குங்கள். பக்கத்திலே இருக்கிற தென் ஆற்காடு மாவட்டம் போன்ற இடங்களில் உள்ள நீரூற்றுக்களை எல்லாம் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுங்கள். மத்திய அரசு தாராளமாக உதவிசெய்ய முன்வரும்.

பத்திரிகையிலே நான் ஒரு செய்திபார்த்தேன். மரவள்ளிக் கிழங்கு 5 லட்சம் ஏக்கரில் சாகுபடிசெய்ய மத்திய அரசு 20 கோடி ரூபாய் உதவிசெய்யும் என்று. அந்தத் திட்டம் வந்தால் தமிழகத்திலே உள்ள உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்குப் பயன்படும். இது வர ஒரு வருஷம் ஆகும். ஆகவே,

இன்றைக்கு உடனடியாகச் செய்யவேண்டியது இதற்காக 25 கோடி ரூபாய் என்று மொத்தமாக ஒதுக்கி அதிலே தஞ்சை மாவட்டத்திற்கு என்று 5 கோடி ரூபாய் ஒதுக்கி இந்தத் திட்டத்தைப் போடவேண்டும்.

உணவு நிலைமையிலே இன்று ஏற்பட்டகோளாறினால் மற்ற நிலைமைகள் என்ன என்ன ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். ஐந்து கோடி ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு தேக்கம், கைத்தறித் துணி தேக்கம், இம்மாதிரியான பல்வேறு தேக்கங்கள் ஏற்பட்டதன் காரணமாக பல சங்கடங்களை இன்றைக்கு நாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம்.

ஆகவே, இதைத் தடுக்க முன்கூட்டியே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட விரும்புகிறேன்.

கல்லூரி மூடப்பட்டிருப்பது நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஒன்றாக இருந்தாலும்கூட தமிழகத்திலே பல கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு உள்ள கல்லூரிகளிலே உள்ள குறைபாடுகள்தான் காரணம் என்று தெரிகிறது. ஆகவே அந்தக் குறைபாடுகளைப் போக்கி கல்லூரிகளைத் திறந்து வைக்க ஏற்பாடுகளைச் செய்ய முடியவில்லை உங்களால். நாட்டினுடைய பொருளாதார நிலைமை சீர்கெட்டதோடு மட்டுமல்லாமல், மக்களுடைய நிலைமை சீர்கெட்டதோடு மட்டுமல்லாமல் பிற்காலத்திலே ஒரு மோசமான சூழ்நிலை உருவாகக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டீர்கள். ஆகவே, நீங்கள் ஆட்சியில் இருப்பதற்கான தகுதியை நீங்களே இழந்துவிட்டீர்கள் என்று கருத்தைச் சொல்வதோடு பத்திரிகையிலே வந்த செய்தியைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு என்னுடைய உரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். தமிழ்நாடு ஆர்கைவ்ஸ்-இல் 86 ஆயிரம் ஹிஸ்டாரிக்கல் ரிக்கார்ட்ஸ் அழிக்கப்பட்டுவிட்டன என்று ராஜ்ய சபாவில் கேள்விநேரத்தின்போது சொல்லப்பட்டிருக்கிறது, அவையெல்லாம் 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டு ரிக்கார்ட்கள். முக்கியமானவை அவைகளை அழிக்க ஏன் உத்தரவிடவேண்டும்? அமைச்சரவைக்கு அது தெரியுமோ தெரியாதோ தெரியவில்லை எனக்கு. இன்னும் இருப்பதையாவது பாதுகாக்கவேண்டும் என்று கூறி இந்த





அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே. . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எவ்வளவு நேரம் வேண்டும் உங்களுக்கு?

**திருமதி சத்தியவாணிமுத்து :** முக்கால் மணி நேரம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரை மணி நேரத்தில் முடித்து விடுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** முக்கால் மணி நேரம் வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எனது கட்சியின் சார்பில் நானும் ஆதரிக்கிறேன் என்று கூறி அதற்கான ஆதாரங்களை முன்வைக்க விரும்புகிறேன். . .

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டியதன் அவசியமே நாட்டில் ஏற்பட்டு இருக்கிற உணவுப் பற்றாக்குறை, விலைவாசி யேற்றம் மக்களால் வாங்க முடியாத அளவிற்கு மக்கள் படுகின்ற துன்பம் இவைகளையெல்லாம் நினைத்துதான். மழையின்மை, விளைச்சல் இல்லாத காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தால் எதிர்க்கட்சிக்காரர்கள் இவ்வளவு பெரிதுபடுத்தியிருக்க மாட்டார்கள். ஆனால், இது அரசாங்கத்தின் கவனக் குறைவாலும், நிர்வாகத்தில் இருக்கிற அதிகாரிகளின் தவறுகளாலும் இந்த ஆட்சியை நடத்துகின்ற அமைச்சர்களாலும் இந்த ஆட்சிக்குப் பொறுப்பாக இருக்கிற முதலமைச்சரின் சரியான நிர்வாகத் திறமையின்மையினாலும் ஏற்பட்ட கோளாறினால்தான் இந்த விலைவாசியேற்றம், உணவுத் தட்டுப்பாடு என்பதை அனைவரும் ஒத்துக்கொள்ளக் கூடிய வகையிலே அதற்கான முறையிலே பயங்கரமான குறைகள் இந்த குற்றச்சாட்டுகள், மிகப் பயங்கரமான காரணத்தினால் ஆட்சியினர் மீது சுமத்தி மதிப்பீட்டுக் குழுவினால் கொடுக்கப் பட்ட அறிக்கை அதற்கு ஆதாரவாக இருக்கிற

எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் துணிந்து அதையே ஆதாரமாக வைத்து அதிலே வருகின்ற பல்வேறு குறைகளையும் தவறுகளையும் ஆதாரமாக வைத்துக் கொண்டு ஆளுங்கட்சியினரால் நியமிக்கப் பட்ட மதிப்பீட்டுக் குழுவே இந்த முடிவிற்கு வந்திருக்கிறது என்றால் இன்னும் அவர்கள் நடத்தியிருக்கிற பல்வேறு குறைபாடுகளையும் இன்னும் இருக்கிற கோப்புகளையெல்லாம் பார்க்கிறபோது அவைகளிலே எல்லாம் எத்தனை எத்தனை ஊழல்கள் இருக்குமோ என்ற நம்பிக்கையிலேதான் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காகத்தான் இப்படிப்பட்ட நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இப்படிப்பட்ட அரசு இருக்க லாயக்கற்றது என்ற முடிவிற்கு வந்து, இது இருக்கக் கூடாது, இதைப் பதவியிலிருந்து இறக்கம் செய்ய வேண்டுமென்று கருதித்தான் நான் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

மதிப்பீட்டுக் குழுத் - தலைவர் கொடுத்த அறிக்கையைப் பற்றிப் பலபேர் இங்கே விவாதித்தார்கள். அந்த பைலைக் காட்ட வேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்டோம். சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அந்த பைலை எங்களுக்குக் காட்டினார்கள். அந்த பைலில் ஏறத்தாழ 32 டெண்டர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். 1971 ஆம் ஆண்டிலே யிருந்து அதற்கான கடிதப் போக்குவரத்து நடை பெற்றிருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இருக்கின்ற சந்தேகம் நீக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்த பைலைக் காட்ட வேண்டுமென்று சொன்னால் அந்த முழு பைலையும் எதிர்க் கட்சிக்காரர்கள் பார்த்தால்தான் அதிலே எங்கெங்கே தவறுகள் இருக்கின்றன என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் நல்ல முறையில் கண்டுபிடிக்க முடியும். நிறைய அதில் இருக்கின்ற குறைகளைச் சொல்ல முடியும்.

ஆனால், அன்றைக்கு சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அந்த முழு பைலையும் கொண்டு வந்து எங்களுக்குக் காட்டவில்லை. பைல் என்றால், இவ்வளவு டீலிங்க்ஸ் நடந்திருக்கிறது, பைல் குறைந்தது 5 கிலோவாவது இருக்க வேண்டும், அவ்வளவு தடித்த பைலாக இருக்க வேண்டும். ஆனால் சட்ட அமைச்சர் கொண்டு வந்து காட்டியது, நான்கு தாள்





இணைக்கப்பட்டு ஒரு பிரவுன் பேப்பரில் சுற்றப்பட்டது ஒன்று, அதற்குப் பிறகு இன்னொரு 4 தாள் இணைக்கப்பட்டு பிரவுன் பேப்பரில் சுற்றப்பட்டது ஒன்று, அதற்குப் பிறகு 5 தாள் இணைக்கப்பட்டு பிரவுன் பேப்பரில் சுற்றப்பட்டது ஒன்று என்று இப்படி இருந்தன. எப்படி நான் பைலைக் காட்ட வேண்டுமென்று சொன்ன நேரத்தில் முன்னேயும் விட்டுவிட்டு, பின்னேயும் விட்டுவிட்டு இடையிலே ஒரு 4 தாள்களைக் காட்டினார்களோ அதைப்போல இதிலேயும் முன்னேயும் விட்டுவிட்டு, பின்னேயும் விட்டுவிட்டு இடையிலே நான்கு தாள்களை வைத்து, அதைக் கையிலே வைத்துக் கொண்டு இதோ முதலாவது டெண்டர் பாருங்கள் என்று சொன்னார்கள், பிறகு இரண்டாவது டெண்டரைப் பாருங்கள் என்று சொன்னார்கள், பிறகு மூன்றாவது டெண்டர், இதைப் பாருங்கள் என்று சொன்னார்கள். முன்னதற்கும் இரண்டாவதுக்கும், இரண்டாவதுக்கும் மூன்றாவதுக்கும் இடையிலே ஏற்பட்ட கரெஸ்பான்டென்ஸ் இருக்கிறதே அது காட்டப்பட்டதா என்றால், இல்லை. ஆனாலும் பார்த்தோம், அதுவே எங்களுக்குப் போதுமானதாக இருந்த காரணத்தினாலே அதை அப்பொழுதுகூட வற்புறுத்தவில்லை. அதிலும் பல தவறுகள், பைலைக் காட்ட வேண்டுமென்று கேட்டதற்கே காரணம் அதிலே தவறுகள் இருக்கின்றன, ஊழல்கள் இருக்கின்றன என்பதை நிரூபிக்கத்தான் அந்த பைலைக் கேட்டோம். அதில் நிறைய ஊழல்கள் நடைபெற்றிருக் கின்றன. நிறைய தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் அரசாங்கத்தின், அமைச்சர்களின் ஈடுபாட்டால் வேண்டுமென்றே தவறுகள் நடைபெற்றிருக்கின்றது. அதைக் கண்டும் காணாத அளவிலே இன்றைக்கு முதலமைச்சரவர்கள்கூட இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இன்றைக்குச் சாட்டுகிறேன், அதை நிரூபிக்கவும் செய்கிறேன்.

மூன்று முறைகள் டெண்டர்கள் கூப்பிடப்பட்டிருக்கின்றன. 25—1—1971 இல் முதல் டெண்டரும், 15—2—71 இல் இரண்டாவது டெண்டரும், 9—3—71 ஆம் தேதி மூன்றாவது டெண்டரும் கூப்பிடப்பட்டிருக்கிறது. முதல் டெண்டருக்கு 100 லாட், ஒரு லாட்டிற்கு 500 ரூபாய் என்றால் 50,000 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டும். முதல் டெண்டருக்கு 50,000 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டும். எந்த டெண்டராக இருந்தாலும் டெபாசிட்

கொடுத்துவிட்டுத் தான் கேட்க முடியும், அப்பொழுதுதான் அதை 'போனஃபைட் டெண்டராக' ஏற்றுக்கொள்ள முடியும். டெபாசிட் கட்டவில்லையென்றால் அது 'போனஃபைட் டெண்டர்' இல்லை.

இங்கே, தாண்டவராயன் முதல் டெண்டரில் டெபாசிட் கட்டவில்லை, இரண்டாவது டெண்டரைப் பொறுத்தவரையில், 100 லாட்டிலே 500 ரூபாய் விதம் அப்பொழுதாவது 50,000 ரூபாய் கட்டினாரா என்றால் இரண்டாவது டெண்டரின் கடைசி நாளான 25 ஆம் தேதியன்றுதான் 17,000 ரூபாயைக் கட்டுகிறார்கள், அதாவது 34 டெண்டருக்கு. 100 டெண்டருக்குப் பதிலாக 34 டெண்டருக்கு 17,000 ரூபாயைக் கட்டுகிறார்கள். டெபாசிட் தொகை கூடக் கட்ட முடியாத அளவில், முதல் டெண்டருக்குக் கட்டவேயில்லை, இரண்டாவது டெண்டருக்கும் பூரணமாகக் கட்டவில்லை, இரண்டு முறையும் டெண்டர் அப்ளிகேஷன் ரிஜெக்ட் செய்யப்படுகிறது, கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் அவரால் தொகை கட்ட முடியவில்லை, அவருக்கு அரிசியையும், நெல்லையும் கொடுக்க முடியாது என்ற நல்லெண்ணத்தினால் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், அப்படிப்பட்ட ஒருவருக்கு மூன்றாவது முறை டெண்டரே கூப்பிடாமல் ஏற்கனவே டெண்டர்கள் போட்டு அந்த டெண்டர்களை விநியோகித்து ஏற்றுக்கொண்டவர்களைக் கூட அழைக்காமல் அவர்கள் இதிலே முன்வரவில்லை என்ற காரணத்தைக் காட்டி தாண்டவராயனுக்கு மாத்திரம் அதிகப் படியான அளவில், 7,000 டன், 5,000 டன் என்ற அளவிற்கு அரிசியையும், நெல்லையும் கொடுக்க வேண்டிய காரணம் என்ன, இரகசியம் என்ன? அதைத்தான் இந்த மாமன்றத்திற்கு, மற்றவர்கள் சிந்திக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே டெண்டர் என்ற முறையில் அபு என்பவர் சக்ரஸ்ஃபுல் டெண்டரர் என்று மதிப்பீட்டுக் குழுவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவருக்கு 100 டன், 200 டன் என்று மட்டும் கொடுக்கிறார்கள். டெண்டரில் ஈடுபட முடியாத ஒருவருக்கு, லாயக்கற்றவருக்கு, டெபாசிட் கட்ட முடியாமல்



இருப்பவருக்கு நெகோஷியேட் பண்ணினோம் என்று சொல்கிறீர்கள். நெகோஷியேஷன் எதற்கு? எப்பொழுது ஏற்படும் என்றால், நான் கூட விவசாயத் துறையிலே ஸ்ப்ரேயிங்கிற்கு நெகோஷியேட் செய்திருக்கிறேன். அதைப் போல ஃபிஷரீஸில் இருக்கும்பொழுதும் நெகோஷியேட் செய்திருக்கிறேன். டெண்டர் போனஃபைட் டெண்டராக வந்த பிறகு வேலைகளை அவர்கள் சரியாக ஒத்துக்கொள்ளவில்லையென்றால், படகு கட்டக் கூடிய வாய்ப்பு இல்லை என்றால், ஸ்ப்ரே பண்ணக்கூடிய வாய்ப்பு இல்லையென்றால், இவைகளையும் செய்து கொடுக்கக் கூடிய தகுதி இல்லை, திறமை இல்லை, முடியாது என்று வரும்பொழுது அவர்களை உட்கார வைத்துக்கொண்டு, உங்களால் எந்த அளவிற்கு எடுத்துக்கொள்ளுங்கள், இந்த விலை தான் நியாயமான விலை, இந்த நியாயமான விலையை ஒத்துக் கொள்ளுங்கள் என்று அவரவர்களின் தகுதிக்கேற்ற அளவில் இடத்தை ஒத்துக்கொள்வார்கள் என்ற அளவிலே தான் நெகோஷியேட் டெண்டர்கள் கருதப்படுகின்றன. அப்படித் தான் நான் இருந்தபொழுது செய்து கொண்டு வந்தேன்.

ஆனால், இந்த டெண்டரில் ஏற்கனவே டெண்டருக்குப் பணம் கட்டுவதற்குக் கூட முடியாமல், டெபாசிட் பணம் கட்டுவதற்குக் கூட முடியாமலிருந்த தாண்டவராயனை மூன்றாவது முறையாக, டெண்டரில் கலந்து கொண்ட யாரையும் கூப்பிடாமல் அவருக்கு மட்டும் தகவல் கொடுத்து, அவரும் தொலைபேசி மூலமாக நான் எடுத்துக்கொள்கிறேன். ஆனால், Arranging 5.1 deposit என்று தந்தி கொடுக்கிறார். அப்பொழுது கூட பூரா டெபாசிட் கட்டுகிறேன் என்று சொல்லவில்லை. 5 பர்செண்ட் டெபாசிட் கட்டுகிறேன் என்று சொல்கிறார். 5 பர்செண்ட் கட்டுகிறேன் என்று நேரிலே கூடச் சொல்லவில்லை. தந்தியிலே கூறுகிறார். மூன்றாவது டெண்டரில் இன்னும் அதிகப்படியான நெல்லும், அரிசியும் இருக்கிறது, ஏற்கனவே கொடுத்தது போக, இப்பொழுது நிறைய இருக்கிறது, ஆக அதிகப்படியான அரிசியையும் நெல்லையும் எடுக்க தாண்டவராயனுக்கு மட்டும் தகவல் கொடுத்து அவருடைய ஒப்புதலைத் தந்தி மூலமாகப் பெற்றது எந்த அதிகாரியின் செயல்? ஏன் அப்படிப் பெற வேண்டும்? இதற்கு நமது சட்ட அமைச்சரவர்கள் கூறுகிறார்கள், யாரும் எடுக்க முன்வரவில்லை, அவர்தான் எடுக்க

முன்வந்தார் என்று. யாரும் எடுக்க முன்வரவில்லை என்றால், ஏற்கனவே எடுத்த டெண்டர்தாரர்களையெல்லாம் நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்களா என்று கேட்டு கடிதம் எழுதப் பட்டதா ? அரசாங்கத்திலேயிருந்தோ, கலெக்டரிடத்திலே யிருந்தோ அப்படி இருக்கிறதா என்றால் அதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அப்படியில்லை என்றால், கடிதம் எழுதப் பட்டு, அந்த டெண்டர்களெல்லாம் நாங்கள் எடுக்க முடியாது என்று மறுத்தார்களா என்றால் சட்ட அமைச்சரவர்கள் காட்டிய பைலில் அதைக் காட்டவில்லை. தந்தியின் மூலமாகத் தாண்டவராயன் அளித்த பதிலைத்தான் காட்டுகிறார்கள். 'மேக்சிமம்' நான் எடுத்துக்கொள்கிறேன். எனவே, 5 பர்செண்ட் டெபாசிட் அரேஞ்ச் பண்ணுகிறேன், மாக்சிமம் எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு எப்படி நீங்கள் மற்ற டெண்டரர்களையெல்லாம் கூப்பிடாமல், அவர்களையும் கூப்பிட்டு நெகோஷியேட் பண்ணாமல் அவருக்கு மாத்திரம் தந்தியின் மூலமாகத் தகவல் கொடுத்து தந்தியின் மூலமாக ஒப்புதலைப் பெறுவதற்கான காரணம் என்ன ? அதைத்தான் இன்றைக்கு நான் சட்ட அமைச்சரவர்களைக் கேட்க விரும்புகிறேன். அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன் மூன்றாவது முறை டெண்டர் கூப்பிடாமல் இருந்ததற்குக் காரணம் என்ன ? டெண்டர் கூப்பிட்டால் மற்றவர்களும் வருவார்கள், கேட்பார்கள், முறையாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்ற அந்த காரணத்தைக் கொண்டுதான். தாண்டவராயனுக்குக் கொடுத்தாக வேண்டும் என்பதற்காகத்தான் தாண்டவராயனுக்குக் கொடுப்பதற்கு நீங்களாகவே துணிகிறீர்கள்.

(முற்பகல் 10.00)

ஐந்து பர்சன்ட் டெபாசிட் என்றாலும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள், வேறு டெண்டர்தாரர்கள் யாரும் முன்வரவில்லை. இவர்தான் அனைத்தும் எடுத்துக் கொள்ளு கிறேன் என முன்வந்தார். ஆகவே. அவருக்குக் கொடுத்தோம் என்று அன்றைக்குச் சொல்லுகிறார். அவர் போனஃபைட் டெண்டரர் அல்ல. மற்ற டெண்டரர்கள் பெற்றுக் கொள்ள மாட் டோம் என்று மறுத்ததற்கு ஆதாரம் இல்லை. எனவே தாண்டவ ராயனுக்குக் கொடுத்திருக்கக் கூடாது.



ஆனால் வேறு ஆதாரங்கள் இருக்கின்றன. தாண்டவராயன் கொடுத்த தந்தியில் சக்தி டிரேடிங் கம்பெனி கேட்டதை விட பத்து ரூபாய் அதிகம் தருகிறேன் என்று சொல்லுகிறார். சக்தி டிரே டிங்கை விட 10 ரூபாய் அதிகமாகக் கேட்கிறேன் என்று சொன்ன தந்தியை வைத்து சட்ட அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டதாகச் சொன்னார்கள். சக்தி டிரேடிங் கம்பெனி இடையில் வந்திருக்கிறது. அவர்களைப் புறக்கணித்துவிட்டு தாண்டவராய னுக்குக் கொடுத்திருக்கிறார்கள். சக்தி டிரேடிங் கம்பெனி என்ன கேட்டார்கள்; டன்னுக்கு அவர்கள் கொடுப்பதாகச் சொன்ன விலை என்ன என்பதற்கு ஃபைலில் ஆதாரம் இல்லை. யாரும் கேட்க முன் வரவில்லை என்று சட்ட அமைச்சர் சொல்லுகிறார். ஆனால் எஸ்டி மேட் கமிட்டி ரிப்போர்ட்டில் 9—3—1971 டெண்டரில் என். கே. அபு என்பவருக்கு 100 டன் கொடுத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. மூன்றாவது முறை டெண்டர் கேட்டபோது நெகோஷியேட் பண்ண யாரும் முன்வரவில்லை, தாண்டவராயன்தான் முன்வந்தார், அவ ருக்கே கொடுத்தோம் என்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆனால் எப்படி அபு என்பவருக்கு 100 டன் கொடுத் தார்கள் ? வராமலா கொடுத்தார்கள் ? அபுவும் விண்ணப்பித் திருக்கிறார். சக்தி டிரேடிங் கம்பெனியும் விண்ணப்பித்திருக்க வேண்டும். சக்தி டிரேடிங் கம்பெனியை விட அதிகமாகக் கேட்ட தாண்டவராயனுக்குக் கொடுத்ததாக அமைச்சர் அவகர்ள் சொல்லு கிறார்கள். அவர் பணத்தையாவது கட்டினாரா என்றால், இல்லை. பணம் கையில் இல்லாத ஒருவர் தொலைபேசி மூலமாக சென்னையி லிருந்து தஞ்சை கலெக்டருக்கு I am offering என்று சொல்லி 5 பர்சன்ட் டெப்பாசிட் மட்டுமே கட்டுகிறேன் என்று சொன்ன வருக்கு இந்த அளவுக்கு அதிகப்படியான நெல்லும் அரிசியும் கொடுக்கவேண்டிய காரணம் என்ன என்பதைச் சிந்திக்கும்போது இதிலே தவறு இருக்கிறது, ஊழல் இருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

தாண்டவராயனுக்கு மிகக் குறைவான அளவுதான் கொடுத் தோம் என்று மாண்புமிகு அமைச்சர் ப.உ.ச. அவர்கள் குறுக்கிட்டு சொன்னார்கள். எல்லாம் சேர்த்து 5,000 டன்தான் கொடுத்தோம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியிலிருந்து 'நீங்கள் 5,000 டன் என்று சொல்லுகிறீர்கள். அது எப்படி 700 வாகன் லோடு வரும் ? என்று கேட்டார்கள். அது எனக்குத் தெரியாது என்று அவர் சொன்னார்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 டிசம்பர் 17

எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டில் 700 வாகன் லோடு என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். நான் இதற்காக ரயில்வே அதிகாரிகளிடத்தில் ஒரு வாகன் லோடில் எத்தனை டன்கள் எடுத்துக்கொண்டு போக முடியும் என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள்—மீட்டர் கேஜில் நான்கு சக்கர வாகன்களாக இருந்தால் வாகன் ஒன்றுக்கு 18 டன்னும், எட்டு சக்கர வாகன்களாக இருந்தால் 35 டன்னும் எடுத்துக்கொண்டு போக முடியும்; அதுவே, பிராட்கேஜில் 4 சக்கர வாகன்களாக இருந்தால் வாகன் ஒன்றுக்கு 22 டன்னும் 8 சக்கர வாகன்களாக இருந்தால் 52 டன்னும் எடுத்துக்கொண்டு போக முடியும் என்று சொன்னார்கள்.

அரிசி கடத்தப்பட்டிருக்கிறது; மீட்டர்கேஜில் அல்ல. கோவா, வாடிபந்தர், பம்பாய், வெஸ்ட் பெங்கால் ஆகிய மூன்று இடங்களுக்கும் மீட்டர்கேஜில் போக முடியாது, பிராட்கேஜில்தான் போக முடியும். எட்டு சக்கரம் கொண்ட வாகனில் 52 டன் எடுத்துக்கொண்டு போக முடியும். அந்த வகையில் கணக்குப் பார்க்கும்போது 36,400 டன் அரிசியோ நெல்லோ ஏற்றிச் செல்லப் பட்டிருக்கிறது. 700 வாகன்கள் என்று மதிப்பிட்டுக் குழுத் தலைவர் சொல்லுகிறார். 700 வாகன்களில் 36,400 டன் அரிசியோ நெல்லோ மூன்று இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதை எப்படி அனுப்பினார்கள்? மாண்புமிகு ப. உ. ச. அவர்களுக்கு இந்தக் கணக்கைப்பற்றிக் கவலை இல்லை. எதைப் பற்றியும் அவருக்கு அக்கறை இல்லை. விவரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறை இல்லாமல் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார். அவருக்குத் தெரியாமல் எந்தக் காரியமும் நடை பெறவில்லை. வேண்டுமென்றே தகுதியில்லாத தாண்டவராய னுக்குக் கொடுத்திருக்கிறார்.

இதற்கெல்லாம் அடிப்படை ஆதாரம் எங்கே இருந்து வருகிறது. ஏன் இவ்வளவு அக்கறையை இவர்கள் காட்டுகிறார்கள்? இந்த அளவுக்கு ஊழல் ஏற்பட்டுவிட்ட பிறகு சம்பந்தப்பட்ட வர்கள்மீது நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் அவர்கள் ஏன் தயங்குகிறார்கள் என்று சற்று யோசித்துப் பார்த்தால் அதற்குச் சில ஆதாரங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. அதிலே அசோ ஷியேடெட் டிரேடர்ஸ் பற்றி எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டிலே கொடுத்திருக்கிறார்கள். மொத்தத்தில் 19 பங்குதாரர்களில் 1 முதல் 6 வரை அசோகா டிரேடர்ஸ்; 7 முதல் 11 வரை மிஸ்ஸர்ஸ்

ஒருவருக்கு,



1974 டிசம்பர் 17] [திருமதி சத்தியவாணிமுத்து]

கன்னியப்ப முதலியார் கம்பெனி; 12 முதல் 16 வரை ஷா ஏஜென்சிஸ்; 17-ம் நபர் டி. ஆர். மணி; 18-வது நபர் ஆர். வெங்கடேச செட்டி; 19-வது நபர் எஸ். ராஜாமணி முதலியார். டி. ஆர். மணியும் ராஜாமணி முதலியாரும் சொந்தக்காரர்கள். ஏற்கனவே அசோகா டிரேடர்ஸ் ராஜாமணி முதலியார் மீது ரயில்வே கேஸ். 1020/72 என்ற எண்ணில் கடத்தலுக்காக ஒரு வழக்கு இருக்கிறது. டி. ஆர். மணி ராஜாமணி முதலியாருடைய சொந்தப் பிள்ளை. எஸ். ராஜாமணி முதலியார் ராஜாமாணிக்க முதலியாருக்கு பிரதர்-இன்-லா—மைத்துனர். ராஜாமணி ஏற்கனவே அசோகா டிரேடர்சில் இருப்பவர். அவருக்குச் சொந்தப் பிள்ளை டி. ஆர். மணி, எஸ். ராஜாமணி முதலியார், டி. ஆர். மணி இந்த ஒப்பந்தத்தில் வருகிறார்கள். இந்த மூன்று பேருக்கும் வேறு ஒரு தொடர்பும் இருக்கிறது.

ஏற்கனவே பாண்டியன் கிறைன்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தில் ராஜாமணியும் இருக்கிறார். அதிலே கண்ணன் என்பவரும் இருக்கிறார். இந்தக் கண்ணன் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்களுடைய மருமகன். அப்துல் சலாம், கம்ருதீன் என்பவர்கள் இருக்கிறார்கள். ஏற்கனவே அரகண்டநல்லூரில் 4,000 மூட்டைகளை வெள்ளம் அடித்துக்கொண்டு போனதாகக் கூறி ராவுத்தருக்குக் கொடுத்துவிட்ட குற்றச்சாட்டு இருக்கிறது. அப்துல் சலாம், கம்ருதீன், ராஜமாணிக்கம் முதலியார் அவர்களுடைய சொந்தக்காரர்கள் எல்லாம் சேர்ந்து பாண்டியன் கிறைன்ஸ் கார்ப்பரேஷனில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அப்துல் சலாம் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர். கம்ருதீனும் ஒருவர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து பாண்டியன் கிறைன்ஸ் கார்ப்பரேஷனில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு அமைச்சர் ப. உ. சண்முகத்தின் மருமகன் கண்ணன் இருக்கிறார். இந்தக் கண்ணனோ அல்லது வேறு எந்தக் கண்ணனோ என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. இந்தக் கண்ணனுக்குக் கொடுத்திருக்கும் டெலிபோன் நம்பர் அமைச்சர் ப. உ. சண்முகத்தின் திருவண்ணாமலை வீட்டுச் சொந்த டெலிபோன் நம்பர். ஆகவே, வேறு கண்ணன் என்று சொல்வதற்கில்லை.

ப. உ. சண்முகத்தின் சொந்த மருமகரான இந்தக் கண்ணன், ராஜாமணி, ராஜமாணிக்கம், டி. ஆர். மணி, அப்துல் சலாம், கம்ருதீன் ஆகிய இவ்வளவு பேரும் சேர்ந்த வேறு ஒரு நிறுவனத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இந்தக் கண்ணன்

மறைமுகமாக இருந்திருக்கிறார். போனஸ்பைடியாக இல்லாமல் பினாமியாக இருந்திருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட பெரிய ஊழல்களுக்கு ப. உ. ச. அவர்கள்தான் காரணமாக இருக்கக்கூடும் என்ற குற்றச்சாட்டை உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தின் மீது திணிக்கிறேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பாண்டியன் பிறன்ஷியல் கார்ப்பரேஷனின் சேர்மன் சந்திர சேகரன் என்பவர். ஆறு எக்கர் நிலம் ஆற்றுப் படுகையில் ப. உ. ச. ரெவின்யூ அமைச்சராக இருந்த நேரத்தில் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆற்றுப் படுகையை யாருக்கும் பட்டா செய்து கொடுப்பது கிடையாது. ஆனால் பாண்டியன் பிறுன்ஸ் கார்ப்பரேஷன் சேர்மன் சந்திரசேகரனுடைய மகனுக்கு ஆறு ஏக்கர் நிலம் ஆற்றுப் படுகையில் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

ரெவின்யூ அமைச்சராக இருந்தபோது அவர்களுக்கு ஆறு ஏக்கர் ஆற்றுப்படுகையில் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். நேற்று கூடச் சொன்னார்கள். அப்துல் சலாம் ப. உ. சண்முகம் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தபோது ஹல்லிங் ஏஜெண்ட், பின்னர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக ஆனபோது காண்ட்ராக்டர். காண்ட்ராக்டராக ஏன் இருக்கக்கூடாது என்று கேட்டார்கள். சூட்சமம் இதுதான். அவர்களுக்கு இதில் தொடர்பு இருக்கிறது. அவர்கள் எப்படி மாறி மாறி வருகிறார் களோ அதேமாதிரி உணவுத் துறைச் செயலாளரும் மாறி வருகிறார். அன்று யார் இருந்தது? ராமச்சந்திரன் இருந்தார். இன்று பி. டபிள்யூ. டி. செயலாளர் யார்? அதே ராமச்சந்திரன் தான். அதைத்தான் நான் சொல்கிறேன். நான் அமைச்சராக இருந்தபோது சென்னையில் உள்ள வியாபாரிகள் வந்து என்னிடம் குறைபட்டுக்கொள்வார்கள்.

* * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிர்வாகம் பற்றி குற்றம் சொல்வதில் தவறு இல்லை. ஆனால் அதிகாரிகளை தனிப்பட்ட முறையில் விமர்சிப்பது முறை அல்ல. அம்மையார் அவர்கள் செயலாளரைப் பற்றிக் கூறிய அந்த வாக்கியங்களை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





**திருமதி சத்தியவாணிமுத்து :** புகார் வந்ததைச் சொன்னேன். அதில் என்ன தவறு இருக்கிறது? நான் என்ன செயலாளரின் அறைக்கா போனேன். புகார்கள் வருவதைச் சொல்கிறேன். அப்துல் சலாமைத் தெரியுமா, மணியைத் தெரியுமா அல்லது கண்ணனைத் தெரியுமா, யாரைத் தெரியும்? என்னிடம் வந்து குற்றம் குறைகள் சொல்கிறார்கள், அதை எடுத்துச் சொல்கிறேன். அவை சரியா இல்லையா என்பதை நீங்கள்தான் பரிசீலனை செய்ய வேண்டும். சொல்லவே கூடாது என்றால் என்ன பொருள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தனிப்பட்ட முறையில் அதிகாரிகளை விமர்சிப்பது கூடாது என்றுதான் சொல்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** சொன்னார்கள், அதைச் சொன் னேன். 700 வாகன்கள் என்று சொல்வது 36,400 டன் அரிசியும் நெல்லும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, நாட்டில் இந்தப் பற்றுக்குறை. எனவே நாட்டில் இந்தப் பஞ்சம். எனவே இன்று படி அரிசி ஏழு ரூபாய். இதற்கு மூல காரணம் அதிகாரிகளும் அமைச்சர்களும்தான்.

அமைச்சர்கள் போடுகிற உத்தரவுகளுக்கு முதல் அமைச்சர் அவர்கள் முத்தாய்ப்பு வைத்து முத்திரை குத்துகிறார், கையெழுத்து போட்டு. ஊழல் என்றால் அவர்களும் இதில் சேர்ந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கு அழுத்தந்திருத்தமாக கூறு கிறேன். இல்லையென்றால், இவ்வளவு பெரிய குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டு ஊரில் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் பேசிக் கொண்டு வரும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஜப்பான் செல்வார்களா? சிகிச்சைக்காகச் செல்கிறேன் என்றார். அவர்கள் செல்கிறபோது எல்லாச் செலவுகளையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. ஜப்பானில் ஆகிற செலவு 300 சொச்சம் ரூபாய் என் கிறார்கள். அவர் நோய்க்காக சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை. ஜப்பானுக்குப் போனதற்கு ஒரு செக் அப் செய்து கொள்ளலாம் என்று போய் இருக்கிறார்களே தவிர அவருக்கு நோயும் கிடையாது, சிகிச்சையும் கிடையாது. ரூ. 300 சொச்சத்திற்கு ஜப்பானில் சிகிச்சை பெற ரூ. 32,000 செலவு செய்து, சர்க்கார் பணத்தைச் செலவு செய்துகொண்டு, அவர் போகலாமா? போகத் தான் வேண்டுமா என்று கேட்கிறேன். நேற்று கூடச் சொன் னார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திற்கு வர

வில்லையே என்று. இவ்வளவு பெரிய எதிர்ப்பு ஆளுகிற கட்சிக்கு இருக்கிறது. ஊரில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது கட்சியிலேயே குற்றம் சொல்லி, கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குற்றஞ்சாட்டி, இவ்வளவுக்கும் காரணம் அவர்கள்தான் என்று பகிரங்கமாகப் பேசி வருகிற நேரத்தில் சர்க்கார் வரிப் பணத்தில் சொந்தத்திற்கு மருத்துவம் பெற்றுக்கொள்ள ஒரு அமைச்சர் போகிறார் என்றால் முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு உடந்தையாக இருக்க வேண்டிய காரணம் என்ன? எனவே கூட்டுச் சேர்ந்துகொண்டு கொள்ளை அடித்த காரணத்தால்தான் அவர்கள் மீது முதல் அமைச்சர் நடவடிக்கை எடுக்காமல் வாளாவிருக்கிறார்; மெல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை.

எனவே, அவர் எதுவும் செய்ய முடியாமல் இன்று ஐயா அவர்களையும் கைவிட்டு விட்டார்கள், பேரறிஞர் அண்ணா அவர்களையும் மறந்துவிட்டார்கள். அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை இங்கே வைத்துக்கொண்டு நேற்று துணிச்சலோடு சொல்கிறார், நான் காமராஜுக்கு வாரிசு என்று. அதுகுறித்து நான் மெத்த வருத்தப்படுகிறேன். ஐயாவின் வாரிசு, அண்ணா அவர்களின் வாரிசு என்று சொன்னவர் இன்று ஐயாவையும் அண்ணாவையும் மறந்துவிட்டு நான் காமராஜரின் வாரிசு என்று சொல்கிறார். எந்த நேரத்தில் என்று கேட்கிறேன். காமராஜர் இந்த அரசின் மீது ஊழல் குற்றம் சுமத்தும்போது. ஊரெல்லாம் சொல்லிக்கொண்டு, ஊழலோ ஊழல் என்று பேசிக்கொண்டு வந்தார்கள். அதை எடுத்துச் சொல்லிய எம்.ஜி.ஆர். பழிவாங்கப்பட்டு அனுப்பப் பட்டார். அந்தக் காமராஜரைத்தான் இப்போது நமது முதல் அமைச்சர் கருணாநிதி அவர்கள், அவருடைய வாரிசு நான் என்று சொல்கிறார். நீங்கள் வாரிசு என்றால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். நான் போய் ஒவ்வொரு வீட்டிலும் நான்தான் வாரிசு வாரிசு என்று சொல்ல முடியாது. இவர்தான் என் வாரிசு என்பதை அந்த வீட்டுச் சொந்தக்காரர் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஐயாவின் அல்லது அண்ணாவின் வாரிசாக வரவேண்டியவர் இன்று காமராஜுடைய வாரிசாக வருகிறேன் என்கிறார், நான் வேதனைப் படுகிறேன். அண்ணாவை காராக்ரஹத்தில் தள்ளியவர், பெரியாருக்கு பல கொடுமைகளைச் செய்தவர், அண்ணாவிற்கு பல துன்பங்களைத் தந்தவர், இந்தக் கட்சிக்கு பல கெடுதல்களைச் செய்தவர், பல பேர்களுக்கு பல துன்பங்களைச் செய்தவர், தங்களுடைய கொள்கைகளுக்குப் புறம்பாக இருப்பவர், காலம் பூராவும் கழகத்தை எதிர்ப்பவர், உங்கள் கட்சியைச் சார்ந்த அமைச்சர்கள் பற்றி ....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியே இருப்பவர்களைப் பற்றி அப்பேர்ப்பட்ட விமர்சனம் தேவையில்லை.

THIRU R. PONNAPPA NADAR: Sir, the hon. Member is slinging mud on Thiru Kamaraj. To sling mud on Kamaraj is her ulterior motive. We know about each individual. Every Tamilian knows who is Kamaraj and who is the person Kamaraj. Everybody knows about his honesty. We don't want anybody to cast aspersion on an honest person Thiru Kamaraj. It is a No-Confidence Motion against the Ministry. If the hon. Member has anything to talk ill of the Ministry, let her talk and let her not talk ill of Thiru Kamaraj who is not in the House. Of course, she may have difference of opinion on political ideologies and she may have so many things. All these personal animosities and insinuations need not be hurled on Thiru Kamaraj. I once again appeal to the hon. Member, through you, Mr. Speaker, not to sling mud on Thiru Kamaraj whose political life is a clean record.

**திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, நான் பெரு மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களைப்பற்றி குற்றம் சொல்லவில்லை. அவர்களை நான் குறை கூறவில்லை. அவர்களது வாரிசு என்று தன்னைச் சொல்லிக்கொள்கிற முதல் அமைச்சர் அவர்களைத்தான் நான் கேட்கிறேன். நீங்கள் ஐயாவின் அல்லது அண்ணாவின் வாரிசாக ...

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதை விளக்கிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். நேற்று உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் பேசும்போது காமராஜரின் வாரிசு கருணாநிதி என்று குறிப்பிட்டார். காமராஜரின் வாரிசாக கலைஞரின் ஆட்சி நடைபெறுகிறது என்ற வார்த்தையை அவர் சொன்னார். அப்போது நான் சொன்னேன், தியாகிகளின் வாரிசாக இருப்பதில் தவறு இல்லை என்றும் நல்லதொரு அரசியல் தியாகியான காமராஜின் வாரிசாக இருப்பதில்

தவறு இல்லை என்றுதான் சொன்னேன். அதனால் காமராஜ் அவர்களின் கொள்கைகள், அவர்களது ஆட்சியில் நடைபெற்ற குறைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம் இல்லை. ராஜாஜி அவர்களோடு நாங்கள் என்னதான் கொள்கை மாறுபட்டிருந்த போதிலும் ராஜாஜியை மதிப்பவர்கள், அன்றும் சரி இன்றும் மதித்துக்கொண்டிருக்கிறோம். காமராஜரின் வாரிசு கருணாநிதி என்று சொன்னதால் அதைச் சொன்னேன். அரசியல் தியாகி ஒருவரின் வாரிசாக இருப்பதில் தவறு இல்லை என்று சொன்னேனே தவிர பெரியாரின் வாரிசு அல்ல, அண்ணாவின் வாரிசு அல்ல, காமராஜின் வாரிசு என்று கூறிக்கொள்ளவில்லை. காமராஜரைப்பற்றி குணாளனே, குலக்கொழுந்தே என்றெல்லாம் பாராட்டி எழுதியவர் தான் பேரறிஞர் அண்ணா. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்கின்ற அந்த அரிய போதனையைப் போதித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்களின் வாரிசாக இருக்க விரும்பிய காரணத்தால்தான், காமராஜ் போன்ற அரசியல் தியாகிகளின் வாரிசாக இருப்பதில் பெருமைப்படுகிறேன் என்று சொன்னேன். இதிலிருந்தே நான் அண்ணாவின் வாரிசு என்பது நன்கு விளங்கும்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** ஏற்றுக்கொள்கிறேன். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அந்த மல்லிகையின் மணத்தைத்தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர அந்த மாற்றான் தோட்டத்தையே நம் தோட்டம் என்று ஏற்று அந்தத் தோட்டத்தில் போய் குடியிருந்து விடக்கூடாது. மல்லிகையின் மணம்தான் அனைவருக்கும் சொந்தமே தவிர அந்தத் தோட்டமே அனைவருக்கும் சொந்தம் அல்ல. அண்ணாவை மதிக்காமல் ...

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தோட்டத்தில் போய் குடியிருக்கக் கூடாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். (பலத்த ஆரவாரம்)

**திருமதி சத்தியவாணிமுத்து :** அவர் காமராஜ் தோட்டத்திற்கு விரைவில் போகிறார் என்பதை இது நிரூபிக்கிறது.





THIRU K. T. K. TANGAMANI : When we approve of certain thing, we do not clap our hands. We generally thump on the Table. It should not become a furore. You must also give us some protection. Thumping on the Table is all right. But thumping has also got a limit.

**திருமதி சத்தியவாணிமுத்து :** இன்னும் ஒன்று, கடந்த முறை கூடச் சொன்னார்கள். நான் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தாலும் சேருவேனே தவிர வேறு எந்தக் கட்சியிலும் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசியல் விமர்சனம் வேண்டாம். நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீதுதான் பேச வேண்டும்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** மதிப்பீட்டு கமிட்டியில் அறவைப் பணத்திற்கு ஆன பணத்தைக் கொடுக்கவில்லை என்று கணக்கு காட்டி இருக்கிறார்கள். இன்னும் பல பேர் அறவைப் பணத்திற் கான பணத்தைக் கொடுக்கவில்லை. 68-வது ஆண்டில் திருவள் ளூரைச் சேர்ந்த ஒரு இடத்தில் பெருமாள் என்பவர் அறவைப் பணத்திற்கான டெபாசிட் பணம் 10 ஆயிரத்தை கட்டவில்லை. அந்தக் கட்டணத்தை வாங்காமல் 84 ஆயிரம் ரூபாய் நெல்லை அறவைக்கு கொடுத்து இருக்கிறார்கள். அதைப்போல அருணாசலம் என்பவருக்கு 46 ஆயிரம் ரூபாய்க்கு அறவை கொடுத்து இருக்கி றார்கள். இதற்கும் டெபாசிட் பணம் கட்டவில்லை. சபாஸ்டின் என்பவருக்கு 94 ஆயிரம் ரூபாய் நெல் கொடுத்திருக்கிறார்கள். இவரும் பணம் கட்டவில்லை. ஆறுமுகம் என்பவர் கொசமப்பாளை யத்தைச் சேர்ந்தவர், 37 ஆயிரம் ரூபாய் நெல் கொடுக்கப்பட்டிருக் கிறது. பணம் கட்டவில்லை. மொத்தம் 2 லட்சம் ரூபாய் ஆகிறது. இது என் மதிப்பீட்டுக் கமிட்டியில் வரவில்லை. நிறையப் பேர் பணம் கட்டவில்லை, வழக்கு மன்றம் சென்று இருக்கிறார்கள் என்று தகவல் கொடுத்து இருக்கிறார்கள்.

மதிப்பீட்டுக் குழுவில் ஏறத்தாழ இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேலாக நாலு பேருக்கு மேலாக கொடுத்து அறவை பணத்தைக் கொடுக்கவில்லை. அதற்கு வழக்கு மன்றத்திற்கு போயிருக்கிறது. இவை ஏன் எஸ்டிமேட் கமிட்டிக்கு வரவில்லை. அவர்களுக்கு ஏன் டெபாசிட் பணம் 10 ஆயிரம் வாங்காமல் அறவைக்கு கொடுக்க வேண்டும். அந்த அதிகாரி யார் ? எடுத்த நடவடிக்கை என்ன?

வேறு யார் யார் மீதோ நடவடிக்கை எடுத்ததாகச் சொல்லுகிறார்களே, இவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? எனக்கு வந்த தகவலே இவ்வளவு என்றால் எனக்கும் வராமல் எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்கும் வராமல் போன கேஸ்கள் எத்தனை இருக்கும்? தெரியாமல் போனது எத்தனை லட்சமோ, எத்தனை கோடியோ. வராமல் போனது எத்தனை லட்சமோ எத்தனை கோடியோ என்று நினைக்கும்போதுதான் நிர்வாகம் எத்தனை மோசமாகச் செயல்படுகிறது என்று தெரிகிறது.

எனவே, நீங்கள் ஆள லாயக்கு அற்றவர்கள். உங்களால்தான் இந்த விலைவாசி ஏறி இருக்கிறது. இவைகளை எல்லாம் மறைத்துவிட்டு ஏழை மக்கள் பக்தியில் போய் நாங்கள் இதைச் செய்கிறோம் அதைச் செய்கிறோம் என்று சொல்லி வருகிறார்கள். இதை நான் கண்டிக்க விரும்புகிறேன.

ஹரிஜன வீட்டு வசதிக் கழகத்தைப்பற்றி முதலமைச்சர் சொன்னார்கள். திருவெள்ளூரில் கிடங்கில் சிமெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது ஹரிஜன வீட்டு வசதிக்காக காலனி வீடுகள் கட்டுவதற்கு. அங்கு 24 பேர் சேர்ந்துகொண்டு இரவோடு இரவாக சாம்பலையும் மண்ணையும் கலந்து இருக்கிறார்கள். கையும் களவுமாக பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். போலீசார்கள் பிடித்தார்கள் 24 பேரை. போலீசார் பிடித்தார்களே தவிர மறுபடியும் விட்டு இருக்கிறார்கள். வழக்கு போடவில்லை. இப்படி எத்தனை நடக்கிறது? ஏன் அவர்களை விட்டார்கள்? ஏன் வழக்கு போடவில்லை? நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். கவுந்தம்பாடியில் அன்று அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் திறந்து வைத்த ஹரிஜன இல்லங்கள் எல்லாம் இடிந்து விழுந்து ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்வது போல இருந்தது என்று அன்றைக்கு குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட வீடுகளை கட்டவா வீட்டு வசதிக் கழகத்தை கொண்டுவர நாங்கள் பாடுபட்டோம்.

இன்றைக்கு சிமெண்டில் சாம்பலைக் கலக்கிறார்கள். 24 பேரை கையுங்களவுமாக பிடிக்கிறார்கள். சப் கலெக்டர் விசாரிக்கிறார்கள். நிறுத்து நிறுத்துப் பார்க்கிறார்கள். எதிலும் 50 கிலோ இல்லை. 28, 30, 40 ஆகத்தான் இருக்கிறது, எதிலும் 50 கிலோ சிமெண்ட் இல்லை. வழக்குகூட போடவில்லை என்றால், எந்த மாவட்டச் செயலாளர், வட்டச் செயலாளர் குறுக்கே வந்து வழக்கு போடாமல்



செய்திருக்கிறார்? பிறகு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டுகிறேன் என்றால் அதற்கு பிறகு மக்கள் ஏன் கட்டவில்லை என்று கேட்டால் என்னைப் போன்றவர்கள் பொறுப்பு உள்ளவர்கள் காரணத்தை விளக்குகின்ற நேரத்தில் பல விஷயங்களைச் சொல்ல நேரிடுகிறது. அதைச் சொன்னதற்காகத்தான் நான் வெளியே வர வேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட தவறுகளை நடக்க விடாமல் பார்ப்பதற்கு, கண்டிப்பதற்கு இனியாவது அரசு முன்வர வேண்டும்.

மாலை நேரக் கல்லூரிகளில் உபகாரச் சம்பளத்தை நிறுத்திவிட்டு இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசாங்கம் உபகாரச் சம்பளம் என்று சொல்லப்படுகிறது. எனவே, இந்தச் சம்பளத்தை நிறுத்திவிட்ட மாணவர்கள் அல்லல் படுகிறார்கள். ஏறத்தாழ இந்த வரிசையில் 200 மாணவர்கள் இருப்பார்கள். இவர்கள் படிக்க நுழைந்துவிட்டார்கள். இடையில் உபகாரச் சம்பளம் இல்லை என்றால் எப்படிப் படிக்க முடியும்? ஆகவே மாநில அரசு தன் நிதியிலிருந்து உபகாரச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாணவர்கள்மீது இந்த அரசு நிறையக் கொலைக் குற்றங்கள், அட்டெம்ட் டு மர்டர் என்று, பல செக்ஷன்களைப் போட்டு....

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாலை நேரக் கல்லூரி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது பற்றி நேற்று முன் தினம் சில மாணவர்கள் வந்தார்கள். அதை நான் விசாரித்தேன். அதை இதுவரை மத்திய அரசாங்கம்தான் கொடுத்து வந்தது. மாநில அரசாங்கம் கொடுக்கவில்லை. மத்திய அரசாங்கம் தான் கொடுத்து வந்தது. மாநில அரசாங்கம் புதிதாகச் செய்ய வேண்டும் என்று இருக்கிற காரணத்தால் 18 ஆம் தேதி அதிகாரிகளைக் கேட்டு இப்போது நிதி வசதி உள்ளதா, உபகாரச் சம்பளம் வழங்க இயலுமா என்று பரிசீலிக்க ஆலோசித்து இருக்கிறோம். மாணவர்களுக்கு எந்தக் கஷ்டம் வந்தாலும் அதைக் கவனிக்கத் தயாராக இருக்கிறோம்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** இந்த ஸ்டான்லி மெடிக்கல் காலேஜில் எட்டு மாணவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஒரு பகுதி மாணவர்களுக்கும் மற்றொரு பகுதி மாண

வர்களுக்கும் ஜாதி அடிப்படையில் சண்டை ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டார்கள். இடையில் வந்த மெஸ் வார்டன் மீது அவர் உயர் ஜாதிக்காரர் என்பதற்காக அவரையும் அடித்த தாக வழக்கு போடப்பட்டு இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மாண வர்கள் 8 பேர் மீது அட்டெம்ட் டு மர்டர் என்ற செக்ஷனைப் போட்டு வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொல்லியும்கூட அந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட வில்லை. அதுபோலவே மதுரையில் இருக்கிறது. புதுக்கோட்டையில் மாணவர்களை சஸ்பெண்ட் செய்து இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டுவது என்பது அவர் களுக்குச் செய்த நன்மை என்று சொல்ல முடியுமா. நாங்கு நேரியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர், திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு, போலீஸ்காரர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். எங்கள் கட்சியைச் சேர்ந்த ஸ்டீபன் என்பவர் காவல் நிலையத்திற்குப் போகிறார். திரு. பொன்னப்ப நாடார் கூட இதைப்பற்றி எடுத்துப் பேசினார். ஊர்வலம் நடத் தினார்கள். அந்த ஸ்டீபன் என்பவர் ஒரு பி.ஏ., எல்.எல்.பி. படித்தவர். அவர் அந்த வழக்கிற்காகச் சென்றபோது * * வெளியே போடா என்று போலீஸ்காரர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அம்மையார் அவர்கள் இப் போது சொன்ன அந்த வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** இந்த மன்றத்தில் அதைச் சொல்லும்போது எவ்வளவு வேதனைப்படுகிறீர்கள்? ஆனால் ஊரில் அப்படிப்பட்ட நிலைக்குத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆளாக்கப்படுகிறார்கள். அன்றாடம் இந்த மக்கள் மீது சொல்லப் படுகிற வார்த்தைதான் இது. இந்த மன்ற குறிப்பிலிருந்து நீக்க லாம். கேட்டு, அபச்சாரம் என்று காதில் பஞ்சு வைத்துக்கொள்ள லாம். ஆனால் இப்படி நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் நான் குறிப்பிட்டேன்.

காஞ்சீபுரத்தில் தாழ்த்தப்பட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

23/4/82 52 4/82 (3/8)

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே. எண் :

ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 8/7/94 | 12/7 | | |
| 24/3/55 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A–1,00,000—30-1-84.